உலக இந்து
மகாநாடு

1982

ஆத்ம ஜோதி

சிறப்பு மலர்

நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.

For

QUALITY SILK SAREES

- TIRUCHERAI
- BANARAS
- ARNI
- DHARMAVARAM
- KANCHEEPURAM

and other silk Sarees

HANDLOOM COTTON SAREES

- COIMBATORE
- KANCHEEPURAM
- MADURAI
- CHINNALAPATTI
- ANDHRA
- ORISSA
- ASSAM
- BENGAL

and other Sarees

MILL SAREES

- MULL MULL
- ORGANDIE
- POLYESTER TERENE
- WOOLY WOOLY
- CHIFFONS
- PRINTED & PLAIN NYLEX
- PRINTED AMERICAN GEORGETTE etc.

FURNISHING MATERIALS & HANDICRAFTS NOVELTIES

RADHA SILK EMPORIUM

(THE COMPLETE TEXTILE SHOWROOM WHERE YOU CAN BUY TEXTILE FOR YOUR ENTIRE FAMILY)

"RASI HOUSE"

1, SANNADHI STREET - MYLAPORE - MADRAS - 600 004
TAMIL NADU - INDIA.

JOIN OUR INCENTIVE SCHEME

உ

சிவமயம்

உலக இந்து மகாநாடு

ஆத்மஜோதி

சிறப்பு மலர்

1982

ஆசிரியர்:

நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
இலங்கை.

அச்சுப்பதிவு:
ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.

ஆசியுரை



இந்து சமய வளர்ச்சிக்காக அகிலத்தில் பெரிதும் உழைத்துக் கொண்டிருக்கும் நாவலப்பிட்டி ஆத்ம ஜோதி நிலையத்தினரை நாம் மிகவும் போற்றுகிறோம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் பாரதத்தில் இந்து சமயத்தையும், ஞானத்தையும் நிலைநாட்டினர். அவர்கள் அறிவுரைப் படி, காணபத்யம், சைவம், சாக்தம், வைஷ்ணவம், ஸ்காந்தம் என்ற ஆறு மதங்களையும் வளரச் செய்து அதன் வழியாக ஆத்மஜோதியை அடைவதற்கான உபாயங்களும் கூறியிருக்கிறார். ஆத்மஜோதி தான் நமது கடைசிக் குறி. அப்பேற்பட்ட ஆத்மஜோதி நன்கு வெளி வந்து இந்துக்களுக்கு நற்பயன் அளிக்குமாறு நாம் ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரரை வேண்டுகிறோம்.

நாராயணஸ்மிருதி:

—காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீலஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
காஞ்சிபுரம் - 631502



மாண்புமிகு செ. இராசதுரை அவர்கள்

(பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, இந்து கலாச்சார, தமிழ் அலுவல்கள் அமைச்சர்.)

இந்துசமயம் தோன்றி, செழித்து வளர்ந்த புண்ணிய பூமிகளில் ஒன்று இலங்கை மணித் திருநாடு. சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இந்து சமயம் இந்த நாட்டில் வேரூன்றி வளர்ந்திருக்கின்றது. பன்னிரு திருமுறைகள் பாடிய பெரியோர்கள் இந்த மண்ணில் பெருமை யோடு இன்றும் தலைநிமிர்ந்து நிற்கிற புண்ணிய ஸ்தலங்களில் பாடி இருக்கிறார்கள். யோகிகளும், சித்தர்களும், சமயப்பெரியார்களும் காலத்திற்குக் காலம் இந்நாட்டில் திருஅவதாரம் செய்து இந்துசமயத்தை வளர்த்திருக்கிறார்கள். இந்துசமயத்திற்குப் பெருமை தேடிக்கொடுத்திருக்கிறார்கள். நாட்டின் எத்திசையை நோக்கினாலும் இந்துசமயம் ஒருகாலத்தில் நாடடங்கிலும் பரந்து சமய உணர்வையும், சகோதர உறவையும் நிலைநாட்டியதற்கான சான்றுகள் நிரம்பவும் உண்டு. பௌத்த சமயமும், இந்துசமயமும் பிரிக்க முடியாத பெரும் தொடர்புகளை உள்ளடக்கியுள்ளன. இரு சமயங்களும் பாரத புண்ணிய பூமியிலேயே தோன்றின; இரு சமயங்களையும் தனதாக்கிக் கொண்டது ஈழ மணித்திருநாடு.

அதி உத்தம ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்கள் இந்நாட்டில் இந்து சமயத்திற்கென ஒரு தனி அமைச்சினை நிறுவியது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகிவிட்டது. உலகம் முழுவதிலும் வாழும் 62 கோடி இந்து மக்களுக்கும் பெருமையளிக்கும் இனிக்கும் செய்தியாக இந்த அமைச்சின் ஆரம்பம் ஆகிவிட்டது. 1982 சித்திரை மாதம் 21ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை நடைபெறவிருக்கும் அகில உலக இந்து மகாநாட்டில் அகில உலகிலுமிருந்து ரிஷிகள், சாதுக்கள், இந்துசமய ஸ்தாபனங்களின் பெருமைக்குரியவர்கள், ஆதீனங்கள், குருமடாதிபதிகள், இந்துசமயத்தின் சிறப்பியல்புகளை ஆராய்ந்த பிறசமயத்தின் பேராசிரியர்கள் போன்றோர் கலந்துகொள்ள இருக்கிறார்கள். இம்மகாநாட்டினையொட்டி இலங்கையில் வெளிவரும் 'ஆத்மஜோதி' இதழ் ஒருமலர் வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 'ஆத்மஜோதி' இதழ் இந்த நாட்டில் தொல்லைகள், சிரமங்கள், கஷ்டங்கள் மத்தியில் சமயப்பணி ஆற்றி வருகிறது. அதன் ஆசிரியர் நா. முத்தையா அவர்களை பன்நெடுங்காலமாக நானறிவேன். அவர் தனக்கென வாழாதவர். பிறருக்காக வாழ்பவர்; சமய உண்மைகளைப் பரப்புவதிலும், சமய வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

அவர் ஆற்றுகின்ற பணி காலம் கடந்தும் நீற்கும் தகைமையுடையது. இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும், கடல்கடந்த நாடுகளிலும் சமயப் பணியினை மேற்கொண்டு வரும் அவருக்கு நீடித்த ஆயுளையும் நிறைசுகத்தையும் வழங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இம்மகாநாட்டுக்காக மலர் தயாரிப்பதில் அவரும், அவரது அருமை சகோதரர் நா. அருமைநாயகம் அவர்களும் ஈடுபட்டிருப்பதற்கு எனது நன்றி.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,

செ. இராசதுரை,
பிரதேச அபிவிருத்தி, இந்துசமய,
இந்துகலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சர்



மாண்புமிகு செள. தொண்டமான் அவர்கள்

(தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர்)

இலங்கையில் சமீபத்தில் நடைபெறவிருக்கும் அகில உலக இந்து மகாநாட்டை ஒட்டி நாவலப்பிட்டி ஸ்ரீ ஆத்மஜோதி நிலையம் ஒரு நினைப்புமலர் வெளியிட முன் வந்திருப்பது அறிந்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

அறிகாலம் தொட்டு உலக வளர்ச்சியோடு ஒட்டி உயர்ந்து வளர்ந்துள்ள ஒரே மதம் இந்து மதம் என்றால் மிகையாகாது; அதை யாரும் ஆரம்பித்துவைக்கவில்லை. தானாகத் தழைத்துப் படர்ந்து தத்துவஞானிகளின் அபூர்வ சேர்க்கையாக, எல்லா மதக் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் தன்னகத்தே ஜீரணித்துக்கொண்டு தனித்துவம் பெற்றதாகத் திகழும் மதம் அது. சுருக்கமாகக் கூறப்போனால் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம் யாதெனில், அண்ட பிண்ட சராசரங்களையெல்லாம் படைத்தளித்துத் துடைக்குமோர் எல்லையற்ற பரம் பொருள் ஒன்று உண்டென்பதும், மனிதன் தன்னைக் கீழ்நோக்கி இழுக்கும் பந்தபாசங்களை உதறி விட்டு மேலே உயர்ந்து அப்பரம் பொருளோடு இரண்டறக்கலந்துவிட வேண்டுமென்பதுமேயாகும்;

இம்மதத்தின் உயர்ந்த தத்துவங்களை பாமரர்க்கும் எளியோருக்கும் குறிப்பாக மலையகத்துப் பாட்டாளி மக்களுக்கு தங்களாலியன்ற முறையில் எடுத்துப் புகட்டி ஆன்மீக வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் ஸ்ரீ ஆத்மஜோதி நிலையம் இந்த அகில உலக இந்து மகாநாடு பற்றி ஆர்வமும் அக்கறையும் கொள்வது இயல்பையே;

அவர்கள் வெளியிடும் இந்த மலர் இந்த நாட்டில் நடக்கவிருக்கும் முதலாவது அகில உலக இந்து மகாநாட்டின் ஓர் அரிய செய்பேடாக என்றும் நின்று நிலவுமென நம்புகிறேன்.

ஸ்ரீ ஆத்மஜோதி நிலையத்தின் ஆத்மீகப்பணி என்றும் நிறைந்தோங்க மனமுவந்து வாழ்த்துகிறேன்.

சௌ. தொண்டமான்.
அமைச்சர்

தோட்ட தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு - 3

ஆன்மநேய ஒருமைப்பாட்டு நல்லுணர்ச்சியையும், ஆத்மீக ஞானத்தையும் இறை வழிபாட்டின் மேன்மையையும், தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழ்க்கலாச்சார வளர்ச்சி, தமிழர் நாகரிகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள அநேக அறிஞர்கள், கலைஞர்கள், ஆராய்ச்சித் துறையில் புகழ்பெற்ற வித்தகர்கள், மற்றும் சான்றோர் பெருமக்கள், பத்திரிகையாளர்கள் போன்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் வகையில் அண்மையில் 1982-ம் ஆண்டு சித்திரைத் திங்களில் இலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க முறையில் கோலாகலமாக நடைபெறவிருக்கும் ''அகில உலக இந்து மகாநாடு'' நடைபெறுகின்ற காலை, இறை வழிபாடு இயற்றுகின்றவர்களுக்கு பக்குவமிலை உறுதியடையவும் அரிய இம் மனித்தப்பிறவி எடுத்ததின் நற்பயனைப்பெறவும், தன்னுள்ளேயே சூட்சுமமாக இயங்கி நம்மை இயக்கிவரும் ஆத்மசக்தியை அறியவும், எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவாக விளங்கும் ''ஆன்மீகஞான''த்தைத் தூண்டி வளர்க்கும் அரும்பெரும் நற்பணியில் ஈடுபட்டுள்ள ''ஆத்மஜோதி'' தெய்வீக மாத சஞ்சிகை இலங்கை-நாவலப்பிட்டியாவினிருந்து ஒளிவிசித் துலங்கி வளர்ந்துவருகின்றது!

33 ஆண்டுகளாக புகழோடு விளங்கி-தற்காலம் தவத்திரு. நா. முத்தையா அவர்களை ஆசிரியராகக் கொண்டு திகழும் ''ஆத்மஜோதி'' இலங்கையில் ''அகில உலக இந்து மகாநாடு'' நடைபெறும் போது உலகம் முழுதும் பரந்து வாழும் இந்து மக்கள் சமுதாயத்தினருக்கு தனது பங்காகிய காணிக்கையாக அரியபெரிய தத்துவக் கருவூலமாகிய ''சிறப்பு மலர்'' ஒன்று வெளியிட முன்வந்துள்ளது பற்றி அறிந்து எமது ''இறைபணி மன்றம்'' பெருமிதமுற்று மகிழ்ச்சி கொள்ளுகின்றது.

''ஆத்மஜோதி''யின்-''அகில உலக இந்து மகாநாட்டின் சிறப்புமலர்'' தமிழின் பெருமை, தமிழ் மக்களின் கலாச்சார, பண்பாடு, நாகரீக, ஆன்மிக, தெய்வீகம் போன்ற பலதுறைகளில் வளர்ச்சி நற்பணிகளில் ஈடுபட்டு, பாடுபட்டுவரும் அறிவிலும், அனுபவத்திலும், ஆற்றலிலும் நிறம்பெற்ற மேதைகளின் சொல்மலரால் தொடுக்கப்பட்ட நன்மலர்மாலையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!

''ஆத்மஜோதி''யின் அரும்பெரும் நற்பணிகளின் சிகரமாகத்திகழும் வகையில் வெளியிடவிருக்கும் இவ்வரலாற்றுப் பெரும்புகழ்மிக்க ''சிறப்புமலரி'' தமிழன்னைக்குச் சூட்டும் கிரீடமாகவும், உலக இந்துக்களின் நல்வாழ்வுக்கோர் புகழாரமாகவும் விளங்க வேண்டும் என்ற கொள்கையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இரவுபகல் பாராமல் எத்துணையோ இடையூறுகளுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் இடையே அயராது ஊர்வத்துடன் தொண்டாற்றிவரும் ''ஆத்மஜோதி'' ஆசிரியர் தவத்திரு. நா. முத்தையா அவர்களுக்கும், இராமனுக்கு இலக்குவன் வாய்த்தது போல முத்தையா அவர்களின் இளவல் திரு. நா. அருமைநாயகம் அவர்கள் வாய்த்துள்ள பேறு மகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரிய ஒன்றாகும்!

''இறைபணி மன்றம்'' இவர்கள் மேற்கொண்டுள்ள அரும்பெரும் முயற்சியாகிய ''சிறப்பு மலர்'' சிறப்புற்று விளங்க-தனது நல்வாழ்த்துக்களையும், இதயபூர்வமான பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள விழைகிறது!

வாழ்க தமிழ்! வளர்க ''ஆத்மஜோதி''!

சூழ்க - நல்லறம்! துலங்குக - உலகமெல்லாம்!

த. ஏகாம்பரம்
தலைவர்-'இறைபணி மன்றம்'
தாம்பரம் (சென்னை-600 059)

''நவீன் இல்லம்''
சென்னை.

இந்து மதம் மிகவும் பழமையானது. போற்றுதலுக்குரியது.
அதன் சிறப்பு அம்சங்களை, தெளிவாக்க பல பக்கங்கள் எழுதலாம்.

உலகில் உள்ள இதர மதங்கள் தோன்றிய வரலாறு, தோற்றுவித்த பெரியோர்கள், எல்லாம் நாம் நன்கு அறியமுடிகிறது. இந்து மதம் தோற்றம் பற்றி, ஆராய்ச்சியாளர்கள், இன்றும் இறுதியான முடிவு ஒன்றும் வெளியிடவில்லை.

உலகில் உள்ள அனைத்து நாடுகளில் 'இந்து நாடு' என்பது 'நேபாளம்' மட்டும் தான். அதே போல. இந்து சமயத்திற்கு என, தனி அமைச்சர் இருப்பதும், அதன் வளர்ச்சிக்கு திட்டங்கள் தீட்டுவதும், 'ஸ்ரீ லங்கா' ஒரே நாட்டில் தான்.

ஸ்ரீலங்காவில் உள்ள இந்து திருக்கோயில்கள், பெருமை வாய்ந்தவை. சரித்திரப் பிரசித்தி பெற்றவை. அதன் பராமரிப்பு முறை மிகச்சிறந்தவை. 'ஸ்ரீலங்கா' நாட்டில் உள்ள திருக்கோயில்களை எல்லாம், ஒரு மாதகாலம், சுற்றிப் பார்த்த முறையில், இது எனது அபிப்பிராயமாகும். சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள்வரை, தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம் முதலியவற்றை கற்றும், கல்விக் கூடங்களில் கட்டாய பாடமாக போதிக்கப்பட்டும் வரும்நிலை 'ஸ்ரீலங்கா' வில் உள்ளது. இது ஒவ்வொரு இந்துவும் பெருமைப்படக் கூடிய விஷயமாகும்.

இவைகளை எல்லாம் ஒரு முகப்படுத்தி, நல்ல திட்டங்கள் தீட்டி, நாட்டில், சமய, சமூக, சமுதாயப்பணிகளில் ஈடுபட்டு இருப்பது 'ஸ்ரீலங்காவில்' உள்ள 'ஆத்மஜோதி நிலையம்.'

மாஸ்டர் அண்ணு முத்தையா அவர்களும், அவரது சகோதரர் அருமைநாயகம் அவர்களும், சமயத்திற்கு செய்யும் தொண்டு. இந்த தலைமுறையினரும், வருங்கால சந்ததியாரும் மறக்கமுடியாதவை. பொன் ஏடுகளில் பொறிக்கப்பட வேண்டியவை. உலக இந்து மகாநாடு கொழும்பில் நடைபெறும் வேளையில், அவர்கள் வெளியிடும் இந்த 'ஆத்மஜோதி' சிறப்பு மலருக்கு, அடியேனின், நல் வாழ்த்துக்கள்.

இறைவன் அவர்களுக்கு பூரண அருள் பாலிப்பானாக.

வாழ்க! வளர்க!

குடவாசல் கே. எஸ். ராமசாமி
(ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (L.I.C.) பணியாற்றுவோர் சங்கத்தலைவர்)

ஸ்ரீலங்காவின் தலை நகரம் கொழும்பு மாநகரில், அகில உலக இந்து மகாநாடு நடைபெறுவதைக் கேட்டு மிக ஆனந்தம் அடைகின்றோம். பல கோணங்களிலும் ஈர்க்கப்பட்டுள்ள இந்துக்கள் ஒருமுகப்பட்டு, ஒருவழி நின்று உயர்வடைய இந்த மகாநாடு வழிகாட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறோம். காலத்தால் மூத்தியது மாத்திரம் அன்று, மனிதன் நடமாடிய இடமெல்லாம் நடமாடிய பெருமை நமது சமயம் ஒன்றிற்கே உண்டு என்று துணிந்து கூறலாம்.

பழமையைப் போற்றுவதோடு புதுமையையும் வரவேற்கும் பண்புடையது நமது சமயம்.

''முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே''

என்று கூறுகிறார் மணிவாசகப் பெருமானார்.

உலகமெல்லாம் பரந்து வாழும் இந்து மக்கள் எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டும் ஒளிவிளக்காய் இம் மாநாடு அமையவேண்டும் என்று மனப்பூர்வமாக வாழ்த்துக் கூறுகின்றோம்;

திரு. மோ. மு ஸ்ரீராமுலு
வடசுமாத்ரா பரிசாடா இந்துதர்ம இயக்க உபதலைவர்-சமயப்பகுதி.

எல்லாம்வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லாநலங்களும் எய்துக:

12ஆம் நாள் மடல் கிடைத்துத் திருக்கண் பார்வையிட்டோம்.

உலகம் தழுவிய சமயம் நமது இந்து சமயம். இந்தியாவிலும் இலங்கையிலும் காலூன்றி மேலைட்டினருக்குத் தனது கம்பீர்ய பார்வையை பாய்ச்சி அற்றைக் காலத்திலிருந்து இற்றைக் காலம் வரையிலும் தனிப் பெருமை பொங்க நிற்கிறது.

அமெரிக்க நாட்டினர் சைவ சமயிகளாக மாறிவரக் காரணமான தவத்திரு மாஸ்டர் சுப்பிரமணிய சுவாமிகள் இலங்கையிலே யோக சுவாமி என்னும் சித்தரால் ஆட்கொள்ளப்பட்டவர். இது வரலாற்று உண்மை. உலக மதமாக இந்து மதம் கூடரொளி பரப்பி வருவதற்கு இலங்கையும் பெரும் பங்கு வகித்திட்ட உண்மை அது. சீர்மிகு இலங்கை ஸ்ரீலங்கா எனத் தெய்வப் பொலிவுடன் விளங்கிட மேலும் ஒரு காரணமாக ''ஆத்மஜோதி'' பல ஆண்டுகளாக விளங்கி வருகிறது. புலமைமிக்க ஆசிரியர் குழாம் ''ஆத்மஜோதியின் பெயரையும் புகழையும் பெருக்கி வருகிறார்கள் என்பதையும் யாரும் மறுக்க முடியாது. அதன் சமயப்பணிகளே தமிழர் சமுதாயத்தை நல்ல பாதையில் இட்டுச் செல்கிறது எனலாம். அகில உலக இந்து மகாநாட்டினையொட்டி வெளிவர இருக்கும் கருத்தரங்குக் கட்டுரைகள், ஆய்வுரைகள், அறச் செய்திகள் யாவையும் தாங்கி வரும் பணியை ''ஆத்மஜோதி'' சிறப்புமலர் மேற்கொண்டிருப்பதை அறிய மகிழ்ச்சி உண்டாகிறது. அதன் பங்கைச் செம்மையாக நிறைவு செய்ய திரு. நா. முத்தையா மாநாட்டினையொட்டி மிக்கத் திறமையுடன் செயலாற்றுவார் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு.

''ஆத்மஜோதி'' சிறப்பு மலருக்கு ஏராளமான சமயச் செய்திகள், உரைகள் தரும் அன்பர்கள், அறிஞர்கள் பல இடங்களிலிருந்து வருகிறவர்கள். இந்து சமயப் பெருமைகளை அளக்க இருக்கும் அவர்களது தனித் திறமைகள் மலரிலே தனி இடம்பெற வேண்டும் என்பது நமது விருப்பமாகும். இவ்வாறு இந்து சமய மாநாட்டினை நல்ல பல வகைகளில் சிறக்கச் செய்திட ''ஆத்மஜோதி'' பத்திரிகைக்குத் திருவருள் துணை செய்து நிற்குமாக என எல்லாம்வல்ல ஸ்ரீமீனாட்சி சுந்தரேசரையும் நமது குருமுதல்வர் ஞானசம்பந்தப் பெருமானையும் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்
(மதுரை ஆதீனம்)

''தென்னுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி''

என பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நமது சமயப் பெரியவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். அதனை மெய்ப்பிக்கும் வகையில் இலங்கையில் உள்ள இந்துசமய திணைக்களம் அகில உலக இந்து மகாநாடு கொழும்பில் ஏற்பாடு செய்து நடைபெற இருக்கும் இத்தருணத்தில் பல அரிய சமயப்பணி ஆற்றி தன் வாழ்நாள் பூராவும் ''பணி'' ஒன்றையே தனது இலட்சியமாகக் கொண்டு விளங்கி வரும் ஆத்மஜோதி நிலையத்தாரால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு மதுரை திருப்புகழ் சபையார் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, ஆத்மஜோதி நிலையம் முருகப்பெருமான் கிருபையால் பல ஆண்டு காலம் ஆலமரம் போல் தழைத்து ஓங்கி சமயப்பணி மென்மேலும் ஆற்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ திருப்புகழ் சபை
தெற்காடி வீதி
மீனாக்ஷி திருக்கோயில்–மதுரை.

'எல்லாம் வல்லவன் இறைவன்' என்று நம்பிக்கை கொண்ட மக்களுடைய சமுதாயம் வாழட்டும். உலகம் தோன்றிய காலத்தில் மதம் என்றே, இனம் என்றே, சமுதாயம் என்றே எப்படி அழைத்தாலும் ஏதோ ஒன்றுதான் இருந்திருக்க வேண்டும். நாளடைவில் இந்த ஒரே சமுதாயத்தை ஒட்டி பல மகனியர்கள் தோன்ற அவரவர்களைப் பின்பற்றியவர்களால் பல சமயங்கள் தோன்றியிருக்கின்றன.

இப்புவியிலே இப்பொழுது நாம் காணும் சமயங்களுக்கெல்லாம் ஆதிமுதலில் நிச்சயமாக ஒரு சமயந்தான் இருந்திருக்க வேண்டும். உலகம் தோன்றிய காலத்தை நன்கு ஆராய்ந்தவர்கள் முதன் முதல் சமயம் தோன்றிய காலத்தை வேதகாலம் என்றுரைக்கின், அந்த வேதகாலத்திலே வேதங்களைப் பின்பற்றிய சமயம் ஒன்றிருந்திருக்கிறது. ஆதியில் அதற்குப் பிராகிருத மதம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதை வேதமதம் என்றும் அழைத்தார்கள். அதையே சனாதனதர்மம் என்றும் அழைத்தார்கள். நாளடைவில் மேலைநாட்டார் நம் சமயத்தை இந்து மதம் என்று அழைத்தார்கள். பலபல கதைகளையும் கற்பனை செய்தார்கள், அவர்களே ஆரியர் என்றும் திராவிடர் என்றும் பிரிவினை செய்தார்கள். வீட்டிலே தயார் செய்த அல்வாவை விட, ஹோட்டலிலே கிடைக்கும் போண்டா நல்லது என்று கருதும் பலர் மேலைநாட்டுக் கருத்துக்கு அடிமையானார்கள்.

இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து ஏதோ ஒரு மதந்தான் இருந்திருக்க வேண்டும். அதுதான் சனாதன தர்மம் என்று அழைக்கப்படும் இந்துமதம். நமது மதம் அசையாத, திடமான 'பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் ஏன் மனிதவர்க்கத்திற்குமே' இடங்கொடுத்து நிற்கும் ஆலமரத்திற்கு ஒப்பானது. இந்த ஆலமரம் அனைவருக்கும் சொந்தமானது.

கிளிகள் கூடுகட்டி வாழ்கின்றன; புழுக்களும் வாழ்கின்றன; பாம்புபோன்றவைகளும் அம்மரத்துப் பொந்துகளிலே வாழுகின்றன. ஏனைய ஜீவராசிகளும் அதன் நிழலிலே தங்குகின்றன. ஏன்? மனிதனும் அதன் நிழலில் ஆறுதல்பெறுகின்றான். இம்மாபெரும் இந்து சமயம் ஆலமரத்திற்கு ஒப்பானது. இம்மரத்தை அண்டிவாழும் அனைத்துமே இம்மரத்தின் பெருமையை அறியாவிட்டாலும். ஆலமரம் தானே தன் பெருமையைக் கூறிக்கொள்வதில்லை. அண்டினோருக்கு ஆதரவு தருகிறது.

படைப்பிற்கு மூலகாரணம் பரமாத்மா. அதை உணர்வது ஜீவாத்மா. இந்த இரண்டையும் பற்றி அறைகூவுவதுதான் இந்து சமயம். உருவமில்லாது, ஆனால் உருவம் கொண்டு, பேரும் இல்லாது, ஆனால் பலபேர்கள் தாங்கி எல்லாமாய் அல்லதுமாய் விளங்கக்கூடிய உண்மையான பேரறிவே பிரமலட்சணம் என்று கூறுகின்ற ஒரே சமயம் நமது இந்துசமயம். உயர்வு தாழ்வு என்ற இன ஜாதி வேறுபாடுகள் எல்லாம் இந்த இந்துசமயத்தில் கிடையாது. ஆனால் பிற சமயத்தார் புகுந்து ஏற்படுத்திய குழப்பங்கள் தான் சாதி என்ற பெயரில் நாளடைவில் தோன்றின. இதனை ஒரு சாக்காக வைத்துத் தம் சமயங்களில் படைதிரட்டுவது போல மக்களை ஏமாற்றினார்கள்.

பிறசமயங்கள் தோன்றுவதற்குக் காரணமான மூல புருஷர்களும் பேதங்களைக் கற்பிக்கவில்லை; அம்மூலபுருஷர்களைப் பின்பற்றியவர்கள் ஏற்படுத்திய குழப்பங்கள் தான் ஒருசில பாகுபாடுகளை இந்துசமயத்தில் உண்டாக்கி உள்ளன. தாய் தந்தை இல்லாமல் இவ்வுலகத்தில் யாரும் பிறக்க முடியாது. அந்ததத் தாய் தந்தையர் பிறப்பதற்கும் தாய் தந்தையர் தேவை. இப்படியே கணக்கெடுத்துக்கொண்டு சென்றால் எல்லாருக்கும் மூலமாக ஒருவர் இருக்க வேண்டும். அந்த மூதாதையர்களிலிருந்து தோன்றியதுதான் இந்துசமயம். இன்று பல சமயத்தவர்கள் இருப்பினும் அனைவருமே இந்துசமயத்தைச் சார்ந்தவர்கள்தான். அதில் கடுகளவும் ஐயம் இல்லை.

தமிழைத் தாய் மொழியாகப் பேசும் வீட்டிலே பிறந்த ஒரு குழந்தையை ஆங்கிலம் பேசும் வீட்டிலே வளர்த்தால் அவன் ஆங்கிலமே பேசுவான். ஆனால் தமிழ் தெரியாது. அது போல என்றோ எப்பொழுதோ நம்முடைய சமயத்தில் தோன்றியவர்கள் இடம்மாறி வளர்க்கப்பட்ட மையால், வளர்க்கப்பட்ட இடத்திலுள்ள பழக்கத்தினால் மாறுபட்ட சமயத்தவர்களாகத் தோன்றினாலும் அனைவருமே இந்துசமயத்தைச் சார்ந்தவர்தான்.

இன்று உலகத்திலே காணப்படும் பிற சமயங்கள் எல்லாம் நவநாகரிகமான முறையிலே மக்கள் மனதைக் கவர முயற்சி செய்து தங்கள் தங்கள் மதங்களிலே ஆட்களைச் சேர்க்கின்றார்கள். ஆனால் பழம் பெருமை வாய்ந்த நமது இந்து சமயமோ ஆட்சேர்க்கும் பணியில் ஈடுபடவில்லை. ஆனால் ஏற்கெனவே முன்கூறிய காரணங்களினால் அனைத்து மக்களும் இந்துசமயத்தையே சேர்ந்தவர்களானபடியினால் ஆள் சேர்க்கவேண்டிய அவசியமே இல்லை.

இன்று பிறசமயங்களை நாடி ஓடுகின்றார்கள். ஓடட்டுமே! ஓடினவர்கள் பெயரை மாற்றிக் கொள்ளலாம். சமயத்தை மாற்றிக் கொள்ளலாம். வழிபாட்டை மாற்றிக் கொள்ளலாம். பழக்கவழக்கங்களையும் மாற்றிக்கொள்ளலாம். உடலின் ஊடே ஓடும் இரத்தத்தை மாற்ற முடியுமா? இந்த இரத்தம் ஆதிநாளில் முதன் முதலில் தோன்றிய சனாதனமதமான இந்துமதத்தவரின் இரத்தம்.

இவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு தீர்க்க ஆலோசனை செய்கின்றவன் எவனோ, அவனே தன்னுள்ளே தானாக நிற்கும் ஆத்மாவை உணர்கிறான். அந்நிலையில் ஆத்மஜோதியாகக் காணப்படுகிறது. இதுவே ஆத்மவிசாரத்தின் முடிவில் காணக்கிடக்கும் பெரும்பயனான ஆத்ம ஜோதியாகத் திகழ்கிறது. இந்த ஆத்மஜோதியை உலகத்திலே தோன்றிய இந்து மக்கள் அனைவரும் உணரவேண்டும் என்று பக்தியும் பண்பும் சமயத்தில் பாசமும் அறநெறியில் ஊக்கமும் கொண்டுள்ள ஆத்மீக தெய்வீகம் அதிகமாகக் காணப்படும் ஈழத்திலே, நம்முடைய இந்து சமயத்தை நாமும் புரிந்துகொண்டு அதன் பெருமைகளை பிறருக்கும் விளங்க வைக்கும் ஆத்ம ஜோதியை உணர்த்தவேண்டி நடைபெறும் அகில உலக இந்து மகாநாட்டிற்கு அழகியதோர் ஆபரணமாகும் இந்தச் சிறப்புமலர். இது எப்பொழுதுமே வாடாத அழியாத மலர். இந்தப் புனிதமான மலர் நமது இந்து சமயத்திற்காகவே பெருந்தொண்டு செய்துவரும் ஈழத்தின் மாணிக்கமாகத் தோன்றும் ஆத்மஜோதி நிலையத்தின் அற்புதமான படைப்பு.

எல்லாம் வல்ல சற்குருநாதன் திருவருளால் இவர்கள் எடுத்துக் கொண்ட இந்த நற்பணி ஓங்கி வளரட்டும் என்று பல்லாண்டு, பலகோடி நூறுயிரம் வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

—ஸ்ரீமத் ஹரிதாஸ்கிரி சுவாமிகள்

ஆத்ம தியானம், விரதங்கள், வழிபாடுகள், விழாக்கள் முதலியவை மனிதர்களைத் தவிர மற்ற உயிரினங்களுக்குக் கிடையாது. ஆத்மதியானத்தின் மூலம் இன்பத்தை அடைய முயற்சி செய்வது மனிதப் பிறவிக்கே உரியது.

பகுத்தறிவுபெற்ற மனிதன் தான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சிந்தித்தே செயல் படுகிறான்.

தீய ஆசைகள் உள்ளத்தில் இருந்து அழிந்து அனைவரும் நல்வாழ்வு பெற்று அறிவு வெளிச்சமாக ''ஆத்மஜோதி'' பிரகாசிக்கும்.

ஒளிமயமான இந்த உலக இந்து மகாநாடு "ஆத்மஜோதி'' சிறப்புமலர் லட்சக் கணக்கான மக்களை ஆனந்த வெள்ளத்தில் நீந்தும்படி செய்யும்.

அனைவருக்கும் மங்களம் உண்டாக ஈசுவரனைப் பிரார்த்திப்போமாக.

மயானயோகியார்

ஆத்மஜோதி சூழ்கவே!



எல்லையற்ற இந்துசமயம் வாழ்கவே
எங்கும் ஆத்மஜோதி சக்தி சூழ்கவே
அல்லல் அற்ற ஆன்மநேயம் வளர்கவே
அமராத்ம ஞானம் பூத்துப் பொலிகவே! (எல்லை)

சரியை கிரியை யோக ஞான சாதனம்
சத்திய சுத்தானந் தாத்ம போதனம்
அரிய பெரிய துரிய ஜோதி தரிசனம்
அருளும் எங்கள் அன்புச்சமயம் வாழ்கவே! (எல்லை)

துன்பமில்லை அச்சமில்லை உலகிலே
தொல்லைசெய்யும் மனமயக்கம் இல்லையே!
இன்பமே எக்காலும் இன்னல் இல்லையே
இதயகுகையில் இலகும் ஒன்றைப் புல்லுவோம் (எல்லை)

ஒன்று வானம் ஒன்று பூமி ஒன்று கதிரவன்
ஒன்றுளே நடமிடுவ தென்றும் உள்ளதே
வென்று மனதை உள்ளடங்கி நின்று காணுவீர்
வீறுபெற்ற சாதனத்தால் வெற்றி பூணுவீர் (எல்லை)

ஏன் இனிப் பிரிவினை இகல் உலகிலே
ஏனினி வகுப்புவாதமான கலகமே
தேனும் திதிப்பும் போல ஊனில் மோன முதல்வனே
நானும் நீயும் அவனும் அவளும் அதுவும் சிவமயம் (எல்லை)

எல்லாரும் வாருங்கள் எல்லாரும் சேருங்கள்
எல்லாரும் ஒன்றுக இன்புற வாழுங்கள்
ஓம் சாந்தி ஓம் சுத்த சத்தி ஓம்
ஓம் சிவம் சிவோஹம் சிவமயம் (எல்லை)

—கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்



பதினாயிரம் திருப்புகழைப்பாடிய அருணகிரி நாதருக்கு இன்னும் பாடவேண்டும் என்றொரு ஆசை. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருவதற் காக இராமர் கட்டிய அணையில் தனது தொண்டும் சேரவேண்டும் என்று அணில் பிள்ளைக்கு ஆசை. பாற் கடலைக் கண்ணுற்ற பூனைக்கு முழுப்பாலையும் நக்கிக் குடித்து முடித்து விடவேண்டும் என்று ஆசை. சர்க் கரை மலை மீது உலாவும் எறும்புக்கு முழுச்சர்க்கரை யையும் தனது புற்றுக்குள் கொண்டு சென்று சேர்த்து விடவேண்டும் என்று ஆசை, விஞ்ஞானத் தில் ஓரளவு ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிக்கு கட வுளைப்பற்றி ஆராய்ச்சிசெய்து முடிவு கட்டி விட வேண்டும் என்று ஆசை.

எனக்கும் ஒரு ஆசை. அது என்னைப் பொறுத்த அளவில் மிகப்பெரிய ஆசை. இலங்கையில் நடை பெறப்போகும் அகில உலக இந்து மகாநாட்டில் ஆத்மஜோதிச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட வேண் டும் என்பதுதான் அந்த ஆசை. கடுதாசி விற்கிற விலையில் இந்த ஆசை உண்டாகலாமா? சினிமாக் காட்சிகளுக்கும் யதார்த்தமான சிற்றின்பக் கதை களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இந்தக் காலத் தில் இப்படி ஒரு ஆசை உண்டாகலாமா? ஆசை ஒருபோதும் தன்னைக் குறைவாக எடை போடுவ தில்லை.

பல தடைகளுக்கு மத்தியில் சிறப்பு மலர் வெளி யிடுவதென்ற எண்ணம் திருவருளால் வலுப்பெற்று விட்டது. ஆசிகள் வந்துகுவிந்தன; கட்டுரைகள்வந்து குவிந்தன; கவிகள் வந்து குவிந்தன. ஒரு கட்டுரை யைக் கொண்டே ஒரு மலர் வெளியிடும் அளவிலான கட்டுரைகளும் வந்து சேர்ந்தன. போதியளவு கட் டுரைகள் வந்து சேருமா என்றிருந்த எமக்கு, எத னைப்போடுவது? எதனைத் தவிர்ப்பது? எதனைச்சுருக் குவது? என்ற எண்ணங்கள் அலை மோதின.

இவ்வளவு கட்டுரைகளையும் கணிசமான அளவு சுருக்கிப்போடுவதென்றாலும் கணிசமான விளம்பரங் கள் கிடைத்தால் தான் மலர் வெளியிட முடியும் என்பதனைக் கடுதாசி விலைகள் எடுத்துக்கூறின். ஆத்மஜோதியின் மீது கடந்த 34 ஆண்டுகளாக அபிமானம் வைத்திருக்கும் அன்பர்கள் விளம்பரம் உதவ தாமாகவே முன்வந்தனர். ஆத்மஜோதி செல்லும் இடங்களில் இருந்தெல்லாம் விளம்பரங் கள் பறந்து வந்தன. இதுவும் திருவருட்செயலே.

இவ்வளவு வசதிகள் ஏற்பட்ட பின்பும் மனதில் ஒரு தயக்கம். அடியேனுடைய ஆசையை பிரதேச அபிவிருத்தி, இந்துசமய இந்து கலாச்சார, தமிழ் அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு செ. இராச துரை அவர்களிடம் கூறினேன். அவர்கள் உடனேயே அதற்கென ஒரு ஆசி உரையை அகமும் முகமும் மலர அளித்ததோடு ஆக்கமும் ஊக்கமும் காட்டினர் கள். கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச் சர் மாண்புமிகு செள. தொண்டமான் அவர்களும் ஆசியுரை வழங்கியதோடு ஆக்கமும் ஊக்கமும் காட் டினர்கள்.

இத்தனை பேருடைய நல்லெண்ணங்களும் ஆசி களுமே இச்சிறப்பு மலர் நல்ல முறையில் வெளி வரக் காரணமாயிருந்தாலும், ஸ்ரீ ஆத்மஜோதி அச்ச கத் தொழிலாளர்கள் இரவு பகலாக வேலை செய்து உரிய காலத்தில் வெளிவரச் செய்த சேவையினை என்றும் மறக்கமுடியாது.

இதனோடு சம்பந்தமான அத்தனை பேருக்கும் தனித்தனியோ ஒன்று சேர்த்தோ நன்றி கூறியபின் இம்மலரை யாருக்குச்சமர்ப்பித்தால் பொருத்தமாக இருக்கும் என்று ஆலோசித்தோம். ஆத்மஜோதி யின் ஸ்தாபகரும் அமரருமான உயர்திரு க. இரா மச்சந்திரா அவர்களுக்கே, இச்சிறப்புமலரை அர்ப் பணம் செய்வதில் அகம்மிக மகிழுகின்றோம்.

சுபம்.

உள்ளே...

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்	...	1
நன்மார்க்க நெறிசென்றே நன்மையுற வாழி!	...	2
திருமுறைகளின் பெருமை	...	3
கந்தப் பெருமான் கருணை வெள்ளம்	...	8
பேரூராதீனத்தின் இந்து சமயப் பணிகள்	...	9
ஸ்ரீ காசித் திருமடம் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணிகள்	...	13
மதுரை ஆதீனத்தின் வரலாற்றுக் குறிப்பு	...	17
நமது மதம்	...	18
மதங்களும்-மக்கள் சமுதாயமும்	...	19
தமிழில் தத்துவ மணிகள்	...	21
இந்து	...	24
சிரவையாதீனத்தின் வரலாறு	...	28
நூரளை ஸ்ரீ லங்காதீஸ்வரர்	...	30
பாரதியின் வழிபாட்டுக் கொள்கை	...	32
இலங்கையில் இந்துசமய வளர்ச்சிக்கு இராமக்கிருஷ்ண மடங்களின் சேவை	...	34
இந்தோனேசியாவிற்கு இந்து சமய வருகை	...	37
பீஜித் தீவுகளில் இந்துமத வளர்ச்சி	...	41
மேற்கு மலேசியாவில் இந்து சமயம்	...	42
நான்கு மனிதர்கள்	...	45
ராமதாஸ் சுவாமிகள்	...	47
இருண்ட ஆபிரிக்காவில் இந்து சமய வளர்ச்சி	...	51
பழைய கீழைத் தேசம் நவீன மேலைத் தேசத்தைச் சந்திக்கின்றது	...	53
ஹிந்து சமயமும் ஸித்தாச்ரமப் பணிகளும்	...	55
ஸ்ரீ அரவிந்தர் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணி	...	58
யோகாசன ஆலயம் இந்து சமய வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டுகள்	...	62
திருப்புகழின் தாள நுட்பங்கள்	...	65
வாழ்க்கையின் அடியும் முடியும்	...	66
தியானத்தின் அங்காதி பாத சாஸ்திரம்	...	68
பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரீய விஷ்வ வித்தியாலயம்	...	73
சமயப் பணியில் சைவ பரிபாலன சபையின் பங்கு	...	75
பொங்கும் அருள் விளங்கும் மங்களத் திருவிளக்கு	...	78
யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள்	...	80
பசுவும்-பசுபதியும்	...	84
யோகத்தின் அவசியம்	...	85
சகல சமயங்களிலும் சமரசம் காணும் உத்தம ஞானிகளே ஸுபியாக்கள்	...	86
"திருமேவு மொருமாவை யருமான்ம நாயகன்"	...	87
மகாதேவ ஆசிரமமும் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளும்	...	92

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ... 95
செல்வச் சந்நிதி திருத்தலமும் ஆனந்தா ஆச்சிரம திருமடமும் ... 97
திருமுறை பேசும் தெய்வத் திருக்கோலங்கள் ... 99
இந்து சமயத்தின் சிறப்பு ... 101
குருகுலம்-கிளிநொச்சி ... 103
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் வரலாறு ... 105
இமய ஜோதியின் திவ்விய ஜீவன சங்கம் ... 106
மேன்மை அடைவோம் ... 108
தபோவனம் மக்களிடையில் பரப்பும் இந்து மதம் ... 109
கோப்பாய் இருபாலைச் சித்தர்கள் ... 110
ஆதி-நடு-முடிவு ... 111
முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவ சமயம் ... 115
நகுலேஸ்வரத்தின் பெருமை ... 119
திருக்கோணமலையில் சைவ வளர்ச்சி ... 121
மெய்ஞானியும் கலைஞானியும் உண்மை ஞானிகளே ... 123
கி.பி. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தென்கிழக்காசியாவில் இந்துசமய..... ... 125
சைவ வரலாற்றில் இணுவிலின் பங்கு ... 128
நல்லை நகரில் வளர்ந்த சமயம் ... 130
இந்துசமய வளர்ச்சிக்கு நயினாதீவு அளித்த பங்கு ... 134
தனிச் சிறப்புவாய்ந்த் தம்பலகமம் கோணேஸ்வரம் ... 137
மட்டக்களப்பு பிரதேசத்தில் சைவ சமயப் பணி ... 139
முன்னேஸ்வர வரலாறு ... 141
அறுபத்துமூவர் ... 143
வல்லிபுரக் கோயில் ... 147
வளர்ந்துவரும் கேதீச்சரம் ... 149
கரம்பனில் சைவ வளர்ச்சி ... 151
இந்துக் கோயில்கள் நிறைந்த மாத்தளையின் வரலாறு ... 153
சைவம் வளர்த்த கன்னகம் ... 155
காரைநகரில் சமய வளர்ச்சி ... 159
வேலணையில் சைவம் வளர்ந்த வரலாறு ... 161
ஏழாலைக் கிராமத்தின் சைவத்தமிழ்க் கலாச்சார மகிமை ... 164
காவி மாநகரில் இரு கோயில்கள் ... 167
இந்துசமய வளர்ச்சியில் புங்குடுதீவு ... 168

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

கல்லானின் புடையமர்ந்து நான்மறை யாறங்க முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனே யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

—திருவிளையாடற் புராணம்

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற் றுளெம் உயிர்த்துணையே.

—அருணைக் கலம்பகம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

—கந்த புராணம்

அம்மை யப்பன், அருட்பெருஞ் சோதியான்
எம்மை யாளும் இறைவன் குருபரன்
தம்மைத் தந்தவர் தாபந் தணிப்பவன்
செம்ம லரடி யைத்தினஞ் சேவிப்பாம்.

—பாரதசக்தி மகாகாவியம்

அருள்விளக்கே, அருட்சுடரே, அருட்சோதி சிவமே,
அருளமுதே அருள்நிறைவே, அருள்வடிவப் பொருளே,
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்னறிவே என்னுயிரே, எனக்கினிய உறவே
மருள்கடிந்த மாமணியே, மாற்றறியாப் பொன்னே,
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள்அளித்த திருவாளா, ஞானவுரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற் றருளே.

—அருட்பா

நன்மார்க்க நெறிசென்றே நன்மையுற வாழி!

புலவர்
விசூர் மாணிக்கம்

உலகமெலாம் போற்றுபுகழ் இந்துமகா நாடு
ஒங்குபுகழ் இலங்கையிலே நடைபெறும் இந்நாளில்
நலமுறவே வாழ்த்துகிறேன்; நானிலத்து மக்கள்
நன்மார்க்க நெறிசென்றே நன்மையுற வாழி!
புலிகொலையும் பொல்லாங்கும் ஏதுமின்றி மாந்தர்
புதுவாழ்வு தொடங்கட்டும் இனியேனும் என்றே
அலைகடலும் ஓங்கார நாதமிட்டே போற்றும்
ஆன்றதிருச் செந்தூரன் அடிபரவி னேனே!

கல்தோன்றி மண்தோன்றுக் காலத்துக்கும் முன்னே
கடவுளாலே தோற்றுவிக்கப் பட்டதொரு மதமாம்
பல்விதமாம் சாத்திரங்கள் மறைநான்கி னோடும்
பார்போற்றும் இதிகாசப் பண்புணர்த்தும் கதைகள்
நல்விதமாம் பதினெண்பு ராணங்கள் மற்றும்
நாலாயிரத் திவ்வியநற் பிரபந்த மறைகள்
பல்புகழும் மிக்கநால்வர் தந்ததிரு முறைகள்
பாங்கான இவையனைத்தும் தந்ததிந்து மதமே.

செய்வினையும் செய்வானும் அதன்பயனும் அதனைச்
செய்வார்க்கே கொடுப்பானும் எனநான்காம் விதிகள்
சைவநெறிக் கன்றிபிற சமயநெறிக் கில்லை
என்பதனை நன்முறையில் எல்லோர்க்கும் சொல்லி
உய்யும்நெறி காட்டியேநம் ''ஆத்மஜோதி'' தன்னை
ஒவ்வொருவ ரும்உணர்ந்தே வீடுபேற்றை எய்தி
ஐயனவன் சிவபெருமான் அடிக்கமலம் சேர்ந்தே
ஆனந்தத் தேனருந்தச் செய்வதிந்து மதமே!

எம்மதமும் சம்மதமே என்றவழி யோங்கும்
எழிலார்ந்த இலங்கையிலே இந்துமகா நாடு
செம்மையுற நடக்கிறது; சிந்தைமகிழ் வெய்த
சேவைசெய்யும் இவ்வரசு வாழியவே! மற்றும்
நம்முடைய மாநாடு நனிசிறக்க வேண்டி
நன்முயற்சி யோடுழைக்கும் நல்லமைச்சர் நம்மின்
செம்மலான இராசதுரை எனும்தெய்வப் பெரியார்
சேவற்கொடி யோனருளால் சீருறவே வாழி!

திருநீறு குங்குமத்தில் சிந்தையெலாம் குளிர
தெய்வீகம் காட்டுவதில் சிறந்ததிந்து மதமே!
திருவைந்தெ ழுத்தாம்சி வாயநம வென்றே
சிந்தித்துப் பிணியகற்றத் தெரிந்ததிந்து மதமே!
ஒருஉயிர்க்கும் தீங்கெண்ணு உத்தமரின் மனமே
உலகாளும் ஆண்டவனுர் உறையுமிட மென்றே
அருமையான தத்துவத்தை ஆய்ந்திங்கே சொன்ன
அருளார்ந்த இந்துமதம் வாழி! வாழி! வாழி!

திருமுறைகளின் பெருமை

—பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்—மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம்—

தமிழ் மக்களது தவப்பயனாகத் தமிழகத்திலே தோன்றிய திருமூலர் காரைக்காலம்மையார் முதலிய திருவருட்சான்றோர்கள் எல்லாம் வல்ல சிவபெருமானது திருவருளின் பத்துள் திளைத்து மகிழும் நிலையில் தாம் துய்த்துணர்ந்த பெருநலங்களையெல்லாம் உலகமக்கள் அனைவரும் பெற்றின்புறும்படி தெளிவும் இனிமையும் பொருந்திய செந்தமிழ்ப்பாடல்களால் விரித்தருளிச் செய்துள்ளார்கள். அருளாசிரியர்களாகிய இப்பெருமக்கள் திருவாய்மலர்ந்தருளிய தெய்வத் தமிழ்ப்பாடல்களே திருநெறித் தமிழ் எனவும் திருமுறையெனவும் போற்றிப் பயிலப் பெறுகின்றன. முறைப்பட இயற்றப்பெற்றமையின் முறையென்பது நூலுக்குப் பெயராயிற்று.

மக்கள் அறியவேண்டிய பொருள்களை அறிவுறுத்தி மனக்கோணலைத் தீர்த்துத் தீமையினை விலக்கி நன்றின்பால் செலுத்தும் மாண்புடைய சொற்களால் முறைப்பட இயற்றப்பெற்றனவே நூல் எனச் சிறப்பித்துப்போற்றப்பெறும் தகுதியுடையனவாகும். மக்களை விலங்குணர்வினின்றும் வேறுபிரித்து, நன்றுந் தீதும் பகுத்துணரும் மனவுணர்வுடையராக்கி, ஒழுக்கத்தால் மேன்மேல் உயரச் செய்வன, அறிவுவிளக்கந்தரும் நூல்களாதலின், அந்நூல்களை இலங்குநூல் எனச்சிறப்பித்தார் திருவள்ளுவர். நூல்களை உலகநூல் அறிவனூல் என இருதிறமாகப் பகுத்துரைப்பர் பேராசிரியர். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உலகப்பொருள்களின் இயல்பினை உள்ளவாறுணர்ந்து அவற்றுற் பயன் கொள்ளுதற்கேற்ற மனவுணர்வுபெற்ற மக்கட் குலத்தார் பிறவுயிர்க்குத் தீங்கின்றி இவ்வுலக நலங்களை நுகர்ந்து இன்புறும்வாழ்க்கை முறையினை விளங்கக் கூறுவன உலகநூல்களாகும். இவை உடம்பையும் கருவிகரணங்களையும் நன்முறையிற் பயிற்றி இம்மை வாழ்விற்குப் பெரிதும் துணைசெய்வனவாகும்.

காலம் இடம் முதலிய சூழ்நிலைகளாற் கட்டுண்டு கிடக்கும் மக்களது அறிவு, ஐம்பொறியளவிற்பட்ட ஒரொருபொருளையே ஒரு காலத்து உய்த்துணர்ந்து அறியுந்தன்மையது. இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் ஒருங்கேயுள்ளவாறறியும் ஆற்றல் அதற்கு இல்லை. நாம்வாழும் இவ்வண்டப் பகுதியினையும் இதற்கு அப்பாற்பட்ட பேரண்டங்களையும் இவையெல்லாவற்றிற்கும் ஆதாரமாய் எங்கும் நீக்கமற நிறைந்து உயிர்க்குயிராய் இயங்கிநிற்கும் முழுமுதற்பொருளாகிய இறைவனையும் மக்கள் தமது அறிவொன்றையே துணையாகக்கொண்டு அறிதலென்பது இயலாத செயலாம்.

இவ்வுலகத்தியல்பினையும் எவ்வுயிர்க்கும் உயிராக எங்கும் நீக்கமற விளங்கும் இறைநிலையையும் உள்ளவாறுணர்த்தும் பேரறிவு, உலகுயிர்கள் தோறும் கலந்து விளங்கும் முழுமுதற் பொருளுக்கே யுரியதாகும். முற்றறிவுடைய பரம்பொருள், அருளே திருமேனியாகக் கொண்டு தோன்றி, அன்புடைய அடியார்களுக்கு அருளிச் செய்தனவும், தனது திருவருட்டுணையால் ஐம்புலன்களை வென்று மூன்றப்பின்றித் தன்னை வழிபாடு செய்யும் செம்புலச் செல்வர்களாகிய பெரியோர்களின் உள்ளத்தின் கண்ணே எழுந்தருளியிருந்து அவர்கள் வாயிலாக வெளிப்படுத்தியருளினவும் ஆகிய மெய்ந்நூல்களே அறிவனூல்களாம். உடலுக்கு உறுதிதரும் உலக நூல்களைக் காட்டிலும் உயிர்க்கு உறுதிதரும் இம்மெய்நூல்கள் மிகவும் சிறந்தனவாகும். சைவசமயத்தவராற் போற்றிப்பயிலப்பெறும் பன்னிரு திருமுறைகளும் மேற்குறித்தவாறு இறைவன் திருவருளால் வெளிப்படுத்தப் பெற்ற சிறப்புடைய அருள்நூல்களாதலின், இவற்றை அறிவனூல் எனக்கொண்டு போற்றுதல் பொருத்தமுடையதாகும்.

"உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதி, உயிர் ஆவணஞ் செய்திட்டு உன் கைத் தந்தால் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி" என்ற வண்ணம் இறைவனை இடைவிடாது நினைந்து அப்பெருமானது பேரறிவே தம்பால் விளங்கப் பெற்றுத் தம்முணர்வென்பது சிறிதுமின்றி இறைவனது பேரறிவினுள் அடங்கிநின்ற சிவஞானிகளாக விளங்கியவர்களே திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்

முதலிய அருளாசிரியராவர். இவர்கள் வாயிலாகச் சிவபெருமானே வெளிப்படுத்தியருளிய சிறப்புடையன சைவத்திருமுறைகளாகும். இச் செய்தி, ''எனதுரை தனதுரையாக'' எனத்திருஞான சம்பந்தப் பிள்ளையாரும், ''பன்னிய செந்தமிழ் மாலை பாடுவித்தென் சிந்தைமயக் கறுத்திருவருளினனே'' எனத்திருநாவுக்கரசடிகளாரும் அருளிய வாய்மொழிகளாலும், சிவபெருமானே நம்பியாரூரர்க்குப் 'பித்தா' எனவும் 'தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' எனவும் அடியெடுத்துக் கொடுத்தும், சேக்கிழார் நாயனாருக்கு 'உலகெல்லாம்' என அடியெடுத்துக் கொடுத்தும் அருள் புரிந்த சிறப்புடைய நிகழ்ச்சிகளாலும் நன்குணரப்படும்.

பதினொராந் திருமுறையிலுள்ள திருமுகப் பாசுரம், மதுரைத் திருவாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளிய் பெருமானடிகளாகிய இறைவராலேயே திருவாய் மலர்ந்தருளப் பெற்ற சிறப்புடையது. தெய்வத் தமிழ்ப்பனுவல்களாகிய இத்திருமுறைகளை வேத சிவாகமங்களைப் போன்று இறைவன் அருளிய திருமறைகளாகவே கொண்டு போற்றிப்பயிலுதல் வேண்டுமென்பது முன்னோர் துணிபாகும். இறைவனால் அருளிச் செய்யப்பெற்ற வேதங்களை 'எழுதாக்கிளவி' எனவும் இறைவனது திருவருள் பெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார் முதலிய திருவருட்செல்வர்கள் இனிய தமிழால் பாடியருளிய இத்திருமுறைகளை 'எழுதுமறை' எனவும் வழங்குதல் மரபு. ''வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்'' எனச்சேக்கிழாரடிகளும், ''எழுதுமறை மொழிந்த கழுமல முனிவன்'' என இரட்டைப் புலவரும் ஆளுடையபிள்ளையாரைப் போற்றுமுகமாக அவர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களை 'எழுதுமறை' எனச் சிறப்பித்தல் காணலாம்.

வேதங்கள் ஐயாவென ஓங்கியாழ்ந்த கன்ற நுண்ணியனாகிய முழுமுதற் கடவுளைப் 'பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே' எனத் தம்முடைய தந்தையார்க்குக் கையாற் சுட்டிக்காட்டிய எளிமையும் இனிமையும் உடைமையானும், அடியார்கள் இறைவன்பால் வேண்டிய வேண்டியாங்குப் பெறுதற்குத் துணைபுரிந்தும், உலக மக்களுடைய தீராத நோய்களைத் தீர்க்கும் மந்திரங்களாகியும், காண்டற்கரிய கடவுளை உலக மக்கள் கண்காணக் காட்டியும் இறைவனது திருவருளை உலகத்தார்க்குத் தெளிவாக விளக்குவன ஆதலானும் வேத நூல்களினும் மேம்பட்டு விளங்குவன இத்தெய்வத்திருமுறைகள் என்பர் பெரியோர். திருவருட்செல்வமாகிய இத் திருமுறைகளைத் தன்பாற் கொண்ட சிறப்புடைமைகருதி ''ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'' எனச்சேக்கிழார் பெருமானாற் போற்றப்பெறும் பெருஞ் சிறப்பினை நமது தமிழ்மொழி பெற்றுத் திகழ்கின்றது.

திருமுறை என்னும் இப்பெயர் வழக்கினைத் 'திருமுறை எழுதுவோர் வாசிப்போர்' எனக் கணநாத நாயனார் புராணத்தில் சேக்கிழாரடிகள் குறிப்பிட்டுள்ளார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய தேவார ஆசிரியர் மூவரும் பாடியுள்ள திருப்பாடல்கள் கல்வெட்டுக்களில் திருப்பதியம் எனவே குறிக்கப்பெற்றுள்ளன. ''தெள்ளுமோசைத் திருப்பதிகங்கள் பைங்கிள்ளைப் பாடுவ, கேட்டன பூவைகள்'' என்பது பெரியபுராணம். எல்லாம்வல்ல இறைவனை இயலிசைத் தமிழ்ப்பாடல்களால் உளமுருகிப் போற்றும் வாயிலாக அம்முதல்வனை அடைந்து இன்புறுதற்குரிய எளிய வழியினை உலகிற்கு அறிவுறுத்திய பெரியோர் தேவார ஆசிரியர்களே யாவர். ''ஆற்றேறுஞ் சடையான் அருள்மேவ அவனியர்க்கு வீறதேறுந் தமிழால் வழிகண்டவன்'' எனத் திருஞானசம்பந்தப்பிள்ளையாரைப் பாராட்டிப் போற்றிய நம்பியாண்டார் நம்பிகள், ஆளுடைய பிள்ளையார் தம் திருப்பதிகவாயிலாக உலகத்தார்க்கு அறிவுறுத்தியசிவநெறியினைப் 'பதிகப் பெருவழி' எனக் குறித்துள்ளார். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது பொருள்சேர் புகழ்த்திறமும் அம் முதல்வன் தன்னடியார்க்கு அருள்வழங்கும் சிறப்பும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகையாக நிகழும் திருத்தொண்டுகளின் இயல்பும், எல்லாவுயிர்களையும் உய்வித்தல் வேண்டி உடல்கருவிஉலகு நுகர்பொருள் என்பவற்றின் உருவாக இறைவனாற் படைத்தளிக்கப்பெறும் இவ்வுலகியற்பொருள்களின் எழில்நலங்களும் ஆகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துரைப்பன இத் திருப்பாடல்களாதலின், இவை பதிகம் எனப் பெறுவனவாயின.

தெய்வப்புலவர் திருவள்ளுவர், தாம் சொல்லக்கருதிய ஒவ்வொரு பொருளையும் பத்துப் பத்துப் பாக்களால் விளக்கினாற் போன்று தேவார ஆசிரியர் மூவரும் பத்துப் பாடல்களைக் கொண்டது ஒரு திருப்பதிக

மாக அருளிச் செய்துள்ளமை இங்குக் குறிக்கத்தகுவதாகும். திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களின் இறுதியிலுள்ள பதிஞ்ராம் பாடல் திருப்பதிகப் பயன் கூறுதலின் திருக்கடைக்காப்பென வழங்கப் பெறும். தேவாரத்திருப்பதிகங்களைப் பண்முறைப்படி ஏட்டில் எழுதித் தொகுத்து முறைப்படுத்திய பின்புதான் அவற்றுக்குத் திருமுறையென்ற பெயர் வழங்கியிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய திருப்பதிகங்கள் ஒன்று, இரண்டு, மூன்றும் திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறுந் திருமுறைகளாகவும், நம்பியாரூரர் திருப்பதிகங்கள் ஏழாந் திருமுறையாகவும் முறைப்படுத்தப் பெற்றன. திருஞானசம்பந்தர் பதினாயிரம் திருப்பாடல்களும் (1600 பதிகங்களும்) திருநாவுக்கரசர் நாப்பத்தொன்பதினாயிரம் திருப்பாடல்களும் (4900 பதிகங்களும்) நம்பியாரூரர் முப்பத்தெண்ணாயிரம் திருப்பாடல்களும் (3800 பதிகங்களும்) பாடியருளினார்கள் எனவும் இத்திருப்பதிகங்களிற் செல்லரித்துச் சிதைந்தன போக எஞ்சிய திருப்பதிகங்களையே நம்பியாண்டார் நம்பிகள் சோழமன்னனது ஆதரவுகொண்டு தேடிமுன்போல் முறைப்படுத்தி ஏழு திருமுறைகளாகத் தொகுத்துதவினர் எனவும் மூவர் அருளிய திருப்பதிகங்களில் செல்லரித்து மறைந்தன போகத் திருஞான சம்பந்தர் திருப்பதிகங்கள் 384-உம் திருநாவுக்கரசர் பதிகங்கள் 310-உம், நம்பியாரூரர் பதிகங்கள் 100-உம் நம்பியாண்டார் நம்பிகளால் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுத் திருவெருக்கத்தம் புலியூரில் திருநீலக்கண்ட யாழ்ப்பாணர் மரபில் தோன்றிய அம்மையார் ஒருவராற் பண்வகுக்கப்பெற்றன எனவும் திருமுறைகண்ட புராணத்தால் அறிகின்றோம்.

மந்திரங்கள் எழுகோடியாதலின் தேவாரத் திருப்பதிகங்களை ஏழு திருமுறைகளாக வகுத்தனர் எனவும், அம் மந்திரங்கள் பஞ்சப் பிரமமென்றும் சடங்கமென்றும் சொல்லப்பட்டுப் பதினென்றுகவும் வருதலால், முன்னோர்க் கூறிய தேவாரத்திருமுறைகள் ஏழினோடு திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம், திருமுருகப்பாசுரம், முதலிய நாற்பத்தொன்பது நூல்களை ஆகிய இவற்றை முறையே எட்டு, ஒன்பது, பத்து, பதினொராந் திருமுறைகளாகத் தொகுத்தமைத்தார்கள் எனவும் திருமுறைகண்ட புராணம் கூறும்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய சேக்கிழார் நாயனார் அநபாயசோழமன்னன் வேண்டுகோளின்படி தில்லையையடைந்து அம்பலவாணரை வணங்கி, 'உலகெலாம்' என, அம்பலவாணரே அடியெடுத்துக்கொடுக்கப்பாடிய சிறப்புடையது, திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணமாகும். அருண்மொழித்தேவராகிய சேக்கிழாரடிகள் இவ்வருள்நூலைத் தில்லையம்பலவன் முன்னிலையிற்கூடிய சிவனடியார் பேரவையில் விரித்துரைக்கும்பொழுது முற்கூறிய பதினொருதிருமுறைகளும் உறுப்பாகத் தாம் இயற்றிய செய்யுள் உடலாக அதற்குப் பொருள் விரித்துரைத்தார் என்பது வரலாறு.

"முதலோரோது திருமுறைகள் ஏழு, திருவாதவூரர் முறையொன்று, இசைப்
பாலரைந்த முறையொன்று, மூலர் முறையொன்று,
பாசுரமே தாநியாக்
கோவை செய்தமுறையொன்று, சேவையர்குலாதி நீதி
முறையொன்றுடன்
பாவை பாகர் திருவருள் சிறந்தமுறை பன்னிரண்டென
வைத்தபின்"

என உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணத்துக் கூறுதலால், சைவத்திருமுறைகள் பன்னிரண்டென வழங்கும் வழக்கம் அவ்வாசிரியர்க்கு நெடுங்காலத்திற்குமுன்பே தமிழகத்தில் நிலைபெற்றிருந்ததென்பது நன்கு தெளியப்படும்.

பன்னிரு திருமுறையாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவர்கள் பத்தாந் திருமுறையாகிய திருமந்திரமாலையை அருளிச்செய்த திருமூலநாயனரும் பதினோராந்திருமுறையிற் காணப்படும் சில பிரபந்தங்களைப் பாடியருளிய காரைக்காலம்மையாரும் ஆவர். இவ்விருபெருமக்களும் தமிழகத்தில் நிலவிய காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாதல் வேண்டும் என ஆராய்ச்சியாளர் கருதுவர். பன்னிருதிருமுறையாசிரியர்களுள்காலத்தாற் பிற்பட்டவர் திருத்தொண்டர்புராண ஆசிரியராகிய சேக்கிழாராவர். அவர் வாழ்ந்த காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டென்பது பலரும் அறிந்ததே. எனவே கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையமைந்த காலப்பகுதியே சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் தோன்றி வளர்ந்த காலமெனக்கொள்ளுதல் பொருந்தும்.

இத்திருமுறைகள் பன்னிரண்டினையும் அருளிச்செய்த ஆசிரியப் பெருமக்கள் திருமூலர் முதல் சேக்கிழார் ஈறுகவுள்ள இருபத்தெழுவராவர். இவ்வருளாசிரியர்களாற் பாடப்பெற்றனவாக இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பன்னிருதிருமுறைகளிலும் பதினெண்ணுயிரம் திருப்பாடல் காணப்படுகின்றன.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் அவற்றை அருளிச் செய்த ஆசிரியப் பெருமக்களது சிவஞான நிறைவின் வெளிப்பாடுகளேயாகும். திருக்கோயிலுள் அமர்ந்துள்ள திருமேனிகளிலும் அடியார் திருவேடங்களிலும் குருவடிவிலும் இறைவன் வெளிப்பட்டு அருள்புரிவானுதலின் மேற்குறித்த இடங்களில் சிவனைக் கண்டு வழிபடுக எனச் சைவநூல்கள் விதிக்கின்றன. அம்முறையில் தற்போதமிழந்து இறைவன் அருள்வழி யொழுகும் செம்புலச் செல்வராகிய பெருமக்கள் திருவாய் மலர்ந்தருளிய செழும் பாடல்களிலும் இறைவனது திருவருள் வெளிப்பட்டுத் தோன்றுதல் இயல்பாதலின், அவ்வருள்நூல்களையும் இறைவனது வாய்மொழியாகத் தெளிந்து வழிபட்டு ஓதிப் பயன் பெறுதல் வேண்டும் என்பது ஆன்றோர் துணிபாகும்.

இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், தமக்கு முன்னே தோன்றிச் சிவத்தொண்டு புரிந்த நல்லிசை ஞானசம்பந்தரும் நாவினுக்கரையரும் பாடியருளிய நற்றமிழ்மாலையாகிய திருப்பதிகங்களை ஆர்வமுடன் பாடிப் போற்றிச் சிவபெருமானது திருவருளின்பத்துள் திளைத்து மகிழ்ந்த செய்தி அவர் பாடியருளிய திருப்பதிகங்களால் நன்கு புலனுகின்றது. சுந்தரர்க்குத் தோழனுகிய சேரமான்பெருமாள் நாயனுர் திருவஞ்சைக்களப்பெருமானை வழிபடும் நிலையில் தமக்குக் காலத்தால் முற்பட்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய பெருமக்கள்பாடியருளியதிருப்பாட்டுக்களை உளங்கசிந்து ஓதுதலை மரபாகக் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. இராசராச சோழன், கங்கை கொண்ட சோழன் முதலிய பெருவேந்தர்கள் தேவாரம் திருவிசைப்பா முதலிய திருமுறைகளைத் தமது சிவபூசைக்குரிய சாதனங்களாகக் கொண்டு சிவனருளில் திளைத்துள்ளார்கள். சீர்காழி, திருவீழிமிழலை முதலிய திருக்கோயில்களில் திருமுறை ஏடுகளை எழுந்தருளுவித்து இவ்வருள்நூல்களை இறைவனுகவே கருதி வழிபாடு செய்தற்குரிய திருக்கைக்கோட்டி மண்டபம் அமைக்கப்பெற்றிருந்த செய்தி கல்வெட்டுக்களாற் புலனுகின்றது.

தில்லையில் திருத்தொண்டர்புராணம் எழுதிய திருமுறையேட்டினைத் தில்லைவாழந்தணர்கள் சிவமூலமந்திரத்தால் அருச்சனைசெய்து வழிபட்டார்கள் எனச் சேக்கிழார் புராணம் கூறும். இங்கெடுத்துக்காட்டிய குறிப்புகள்யாவும் சைவத்திருமுறைகள் பன்னிரண்டினையும் சிவத்துவம் வெளிப்பட்டுத்திகழும் திருவருள் நூல்களாகக்கொண்டு நம்முன்னேர் வழிபட்ட திறத்தினை இனிது விளக்குதல் காணலாம். எனவே இத்திருமுறைவழிபாடு சிவபூசையின் ஒரு சிறந்த அங்கமாகவே திருக்கோயில்களிலும் ஆன்மார்த்த பூசையிலும் முன்னுள்ள பெருமக்களால் மேற்கொள்ளப் பெற்று வந்துள்ளமை நன்கு விளங்கும்.

சிவபூசை, அடியார்பூசை, குருபூசை ஆகிய வழிபாடுகளுக்கு எவ்வளவு பயனுண்டோ அவ்வளவு பயன்களும் இத்திருமுறை வழிபாட்டிற்கும் பாராயணத்திற்கும் உண்டு என்பர் பெரியோர். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பலபடிகளாக வகுத்துச் செய்யப்பெறும் சிவவழிபாட்டினையன்றி உயிர்கள் உய்திபெறுவதற்கு வேறுசாதனமில்லையென்பதுசைவநூல்களின் துணிபாகும். இறைவனது திருவருளாகிய சிவஞானம் ஒன்றினுல்தான் இறைவனை உள்ளவாறுணர்ந்து வழிபடுதல் கூடும். இறைவனருளிய திருவருள் ஞானத்தால் அம்முதல்வனை வழிபடும் திருப்பதிகப் பெருவழியினை அமைத்துத்தந்த திருவருட் செல்வர்கள் காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், திருவாதவூரடிகள் முதலிய திருமுறையாசிரியர்களாவர். சிவஞானிகளாகிய அப்பெருமக்களனைவரும் பொறிவாயில் ஐந்தவித்தானுகிய இறைவன் அறிவுறுத்தருளிய பொய்தீரொழுக்க நெறியில் நிலைபெற்ற செம்புலச் செல்வர்களாதலின், அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகள் யாவும் உயர்ந்த ஞானநூல்களாகத்திகழ்கின்றன.

இத்தகைய சைவத்திருமுறைகள் பன்னிரண்டினையும் முறைப்படி காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுதலும், பிறரை ஓதும்படி செய்தலும், பிறர் ஓதத் தாம் கேட்டலும், பிறரைக்கேட்கும்படி தூண்டுதலும், ஞானநூல்களாய இவற்றின் பொருள் நலங்களை இடைவிடாது சிந்தித்தலும் என ஐவகையாலும் நினைந்து வழிபடுதல் வேண்டும் என்பர் பெரியோர்.

"ஞானத்தால் தொழுவார் சிவஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனே நானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தாயுனே நானுந் தொழுவனே"

என அப்பரடிகள் அருளிய வண்ணம் சிவ ஞானம் பெற்ற பெரியோர்கள் அருளிச்செய்த இத்திருமுறைகளைக் கடவுள் வழிபாட்டிற் குரிய சாதனமாகக்கொண்டு எல்லாம் வல்ல இறைவனை வழிபட்டுப் போற்றும் முறை ஞானபூசை என நூல்களாற் பாராட்டப் பெறுகின்றது.

'ஞானநூல் தனையோதல்; ஓதுவித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்று
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை"

என அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் கூறும் பொருளுரை இவ்வுண்மையை வலியுறுத்தல் காணலாம்.

"ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்"

எனவரும் திருத்தாண்டகத் தொடர் இங்கு ஒப்பு நோக்கியுணரத்தகுவதாகும்.

நிறை மொழி மாந்தராகிய அருளாசிரியர்களால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற இத் திருமுறைகள், உலக வாழ்க்கையில் நன்மை பெருகவுந் தீமை நீங்கவும் வேண்டிய மறை மொழிகளாகிய தமிழ் மந்திரங்கள் என்பது திருமுறையாசிரியர்கள் நிகழ்த்தியருளிய அற்புத நிகழ்ச்சிகளால் நன்கு விளங்கும். மந்திரம் என்பது தன்னைப் பயில்வாரைப் போற்றிக் காப்பது என்னும் பொருளுடையதென்பர். செந்தமிழ் மந்திரங்களாகிய இத் திருமுறைகளை அன்பினால் ஓதியுணரும் இயல்புடையோர், இவ்வுலக வாழ்க்கையில் நேரும் எல்லாத்தீங்கினையும் நீங்கி எல்லா நலங்களையும் பெற்று இன்புறுவர். நன்மை பெருகு அருள் நெறியில் ஒழுகிப் பொன்னும் மெய்ப் பொருளும் போகமும் ஆகிய இருமைப்பயன்களையும் ஒருங்கு பெற்று மகிழ்வார்கள் என்பது திண்ணம்.

ஆசையறுப் பாசம் விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்-சி சி
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே யுனக்கென்ன வாய்?

எனத் தருமையாதீனக் குரு முதல்வர் அருளிய திருப்பாடல், பிறவிப் பிணிக்குக் காரணமாகிய ஆசையினை அறுத்தற்கும் பாசப் பிணிப்பினை அகற்றுதற்கும் சிவபூசையினைச் செம்மையுற நிகழ்த்துதற்கும் சிவபூசைக்கு அங்கமாகிய திருவைந்தெழுத்தினை இடைவிடாது எண்ணுதற்கும் எல்லாக் குற்றங்களினும் மிக்கதாகிய சினத்தைத் தவிர்த்தற்கும் உறுதுணை புரிவன சைவத்திருமுறைகளே யென்னும் உண்மையினை நன்கு வற்புறுத்தல் காணலாம்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

கந்தப் பெருமான் கருணை வெள்ளம்

[தவத்திரு சுந்தர சுவாமிகள்]

சிவபெருமானுக்குப் பத்துக் கைகள், ஐந்து திருமுகங்கள். சிவபெருமான் மேல் நோக்கிய முகமாகிய ஈசானம், கிழக்கு முகமாகிய தற்புருஷம், தெற்கு முகமாகிய அகோரம், வடக்கு நோக்கிய முகமாகிய வாமதேவம், மேற்கு நோக்கிய சத்யோ சாதம் என்னும் ஐந்து முகங்களால் கருணை செய் கிறார். கந்தப்பெருமான் சிவபெருமானுக்குள்ள ஐந்து முகத்தோடு கீழ் நோக்கிய அதோ முகமும் சேர்ந்து ஆறு முகத்திலும் கருணைபொழிகிறார். கந்த புராண ஆசிரியர் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் ''அறிஞர் ஆனேர் சிந்திக்கும் தமது தொல்லைத் திரு முருகம் ஆறும் கொண்டான்'' என்பர். ''திகழ்தசக் கரச் செம்முகம் ஐந்துளான்'' என்று தொடக்கப் பாடலில் கூறி முருகன் திருஉருக் கொண்டமை கூறும் இடத்து ''கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய'' என்பார். குமரகுருபர சுவாமிகள் ''கருணைத் திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்-குருபரன் என்று ஓர் திருப்பேர் கொண்டு'' என்று குறிப்பிடுகின்றார்.

சிவபெருமானிடம் தேவர்கள் முறையிடக் கருணையினால் சிவபெருமான் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றியவர் கந்தப்பெருமான். சிவப்பரஞ்சுடரின் ஆறு நெற்றிக்கண்ணிலே இருந்து தோன்றிய ஆறு நெருப்புப் பொறிகளும் ஆகாயம் எங்கும் பரக்கத் தேவர்கள் அஞ்சினர். அந்நெருப்புப் பொறிகளை காற்றுக் கடவுளிடம் தந்தனர். காற்றும் ஆற்றொ ணாது நெருப்புக் கடவுளிடம் கொடுக்க நெருப்புக் கடவுள் தண்ணீராகிய கங்கையிடம் தர கங்கை தாங்கமாட்டாமல் சரவணக்காட்டிலே வைக்க அங்கு ஆறு குழந்தைகளாகத் திருவுருக்கொண்டு சரவணத்தடாகத்திலே தாமரைத் தவசில் கார்த்தி கைப் பெண்கள் பாலூட்டித் தாலாட்டிவளர்த்தனர்.

சிவபெருமான் உமாதேவியாரோடு சரவணத்தடாகத் திற்குச் செல்ல உமாதேவியார் ஆறு குழந்தையையும் ஒன்றுக ஆர்வத்தால் எடுக்க ஆறுமுகமும் பன்னி ரண்டு தோளும் இரண்டு திருவடியுமாக விளங்கினர் முருகப்பெருமான். ஒன்றுகச் சேர்ந்த அந்த முருகக் குழந்தைக்கு 'கந்தன்' என்று பெயர்சூட்டினர் உமா தேவியார். எந்த உலகத்தும் தாயார் பெற்றெடுத்த குழந்தைக்கு தந்தை பெயர் வைப்பது வழக்கம்; முருகக்குழந்தையைச் சிவபெருமான் நெற்றிக்கண் ணிலே இருந்து தந்தார். தாயாராகிய பார்வதிதேவி யார் கந்தன் என்று பெயர் வைத்தார்கள். அந்தக் கந்தன் பெயரே முருகனுடைய பல்லாயிரம் நாமங் களில் உமாதேவியார் வைத்த நாமம் ஆகையால் முருகன் லீலாதிறு நூலுக்கு ஆசிரியர் 'கந்தபுரா ணம்' என்றே வைத்தார்; முருகன் அடியார்களில் சிறந்தவராகிய அருணகிரிநாதரும் கந்தர் அலங்கா ரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி என்றே அமைத்தார்; குமரகுருபர சுவாமிகளும் 'கந்தர் கலிவெண்பா' என்றே பாடியருளினர். கருணைகூர் முகங்கள் ஆறும் கொண்ட கந்தப்பெருமானைக் கருணைக் கடல் என்று கந்தர் அலங்காரம் முதல்பாட லில் அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார்; அன்பர்களு டைய மல மாசாகிய பிரபஞ்சச் சேற்றைக் கழுவச் சிவபெருமான் கங்கை ஆற்றைச் சூடியுள்ளார்; அவருடைய திருக்குமாரராகிய கந்தப்பெருமான் கருணைக் கடலாக விளங்குகிறார்.

''பேற்றைத்தவம் சற்றும் இல்லாத என்னைப் பிரபஞ்சம் என்னும் — சேற்றை கழிய வழிவிட்டவா செஞ்சடாடவிமேல்-ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்-கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே-கிருபாகரன் என்றால் கருணைக் கடல் என்று பொருள்; கந்தப்பெருமான் தாரகன், சிங்கமுகன், சூரபதுமன் ஆகிய மூவரையும் சம்மாரம் செய்தது கருணையினால்தான்; சூரபதுமனுடன் ஆறு நாள் கந்தப்பெருமான் போர் தொடுத்தார். சூரபது மனுக்கு தன்னுடைய திருப்பெரு வடிவமாகிய விசுவ ரூபத்தைக் காட்டினார். சூரபதுமன் அவ்வடிவைக் கண்டு வியந்தான். 'அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும் எண்ணிலா ஊழிகாலம் எத்திறம் நோக்கினாலும் கண்ணினால் அடங்காது உன்னில் கருத்தினால் அடங்காது' என்று உருகினான். கந்தப்பெருமான் திருவடி அழகைப் பார்த்து 'ஆயிரங் கோடிகாமர் அழகெலாம் திரண்டு ஒன்றுகிமேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில் தூயநல் எழிலுக்காற்றாது' என்று நினைந்தான். நான் தேவர்களைச் சிறைவைத்தது தவறு என்று பலரும் கூறினர். அதனாலன்றோ முருகப்பெருமானைக் காணும் பேறு பெற்றேன்; நான் செய்த தவப்பயன் 1008 அண்டங்களை ஆட்சி செய்வது அல்ல, முருகனைக்காண் டல்தான் என்று எண்ணினான். 'ஏதமில் அமரர் தம்மையான் சிறை செய்தது எல்லாம் திதென உரைத்தார் பல்லோர் அன்னதன் இயற்கையாலே வேதமும் அயலும் ஏனை விண்ணவர் பலரும் காண நாதனிங்கணையப் பெற்றேன் நற்றவப்பயன் ஈதன்றே' என்றான்; கால்கள் கந்தப்பெருமானைச் சூழுதல் வேண்டும், கைகள் தொழுதிடல் வேண்டும், சென்னி வணங்குதல் வேண்டும்; நான் இவற்றுக் ஆளாகி வாழுதல் வேண்டும்; ஆனால் சூரன் தன் மனம்விட்டு எதிரியை வணங்கினான் என்றால் தன் பெருமை என்ன வது. 'தடுத்தது மானம் ஒன்றே' என்று நின்றான்.

வாழ்த்துகிறோம்!



விஹார் டிராவல்ஸ்

சுற்றுலா அமைப்பாளர்கள்
அகில இந்தியா பர்மிட் சுற்றுலா பஸ் உரிமையாளர்கள்.

நெ. 9, இரண்டாவது நாராயணன் தெரு,
தங்கசாலை (P. O.)
சென்னை - 600 001.

VEEHAR TRAVELS

(Tour Organisers and All India Permit Coach Operators)
Tours (India and Foreign) Tourist Coaches, Cars
Passport and Visa Assistance.

No. 9, Second Narayanan Street - Mint Post,
MADRAS - 600 001.

Branch Office: N. H. 5, Ramapuram, (via) Tada, Nellore Dist. A. P. 524401

Phone: 555522
Grams: 'VEEHAR'

நல் வாழ்த்துக்கள்!



SRIKRISHNA JEWELLERY HALL

A. K. Chidambaram Chettiar

SHROFF MERCHANT.

29 & 203, Bazaar Street,

Chidambaram - 608 001.

Tamilnadu.

Phone: Shop: 217
Resi : 310

ஓ

சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற வாழ்த்துகிறோம்!

மகேஸ்வரி ஹார்டுவேர் ஸ்டோர்ஸ்

இரும்பு - வர்ண - வியாபாரம்
15, மைலம் சந்தை
திருச்சி - 620008
தமிழ்நாடு

போன்: 27140

M/s. MAHESWARY HARDWARE STORES

Paint, Hardware & Cement Merchants
15, Mylam Chandai,
TIRUCHIRAPALLI - 8
Tamilnadu.

Phone: 27140

அகில உலக இந்து மாநாடு சிறப்புற வாழ்த்துகிறேம்!



ரவீந்திரா ஸ்டோர்ஸ்
245, பெரிய கடை வீதி
திருச்சி - 8

சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேம்!



சரவணு ஹார்டுவெயார் ஸ்டோர்ஸ்

இரும்பு, வர்ண வியாபாரம்
234, 235, மைலம் சந்தை
திருச்சி - 620008
தமிழ்நாடு.

M/s. SARAVANA HARDWARE STORES

HARDWARE MERCHANTS
234, 235, Mailam Chandai,
TIRUCHIRAPPALLI - 8.
Tamilnadu **Phone: 27275**



வாழ்த்துகிறேம்!



எங்கள்

- குளிர்பானங்கள்
- ஐஸ்கிறீம் வகைகள்

சுவையானது
தரமானது
சுத்தமானது

சம்மர் ஹவுஸ்
(ஐஸ் கிறீம்ஸ்)
28, N. S. B. ரோட்
திருச்சி - 620 002
தமிழ்நாடு

SUMMER HOUSE
(ICE-CREAMS)
No. 28, N. S. B. Road,
TIRUCHIRAPALLI 620 002
Tamilnadu

Phone: 28346

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்!

மீனும்பிகா பஸ் சர்வீஸ்
26, வெள்ளப்பிறந்தான் முதலியார் தெரு,
சிதம்பரம்.

பாபாஜி டிரான்ஸ்போர்ட்
6 A, S. P. கோவில் தெரு,
சிதம்பரம்.

தமிழ்நாடு.

With the Best Compliments from

S. MARUTHAI



VISIT FOR HOUSE HOLD

Aluminium and Stainless Steel Utensils
Available in Wholesale and Retail and
Dealers in Non-Ferrous Metals.

THE INDIA METEL WORKS

257, Mint Street - Park Town,
MADRAS - 600 003.

(Very close to Central Railway Station and General Hospital)

PHONE:

Office: 30626 *Residence: 33917*

FACTORY

Rose and S M. Brand Aluminium
and Stainless Steel House Hold Utensils.

SUN BEAM METAL COMPANY

62, Apparswamy Koil Street - Thiruvottiyur,
MADRAS - 600 019.

Phone: 551861

WITH BEST COMPLIMENTS OF:



SANTHI NURSING HOME

DR. B. A. AUDISESHAN Mh. M.s.
Regd. Medi. Practitioner (No. 1901)

62, Judge Chellappa Naicker Street
Poonamallee
MADRAS - 56.

WITH BEST COMPLIMENTS FROM:

O. HARIHARIAH

Custom House Agent
Licence No. R 142

496, Mint Street
MADRAS - 1.

BRANCH:
37-6-40 Tilak Street
KAKINADA - 533001.

Phone : 32843
Grams: ORUGANTI



எமது நல்வாழ்த்துக்கள்!

புரூட் மிக்ஸி

(எவர்சில்வர் ஜாடி)

ஒரேமோட்டரில் மினிப்ளவர்மில்
ரைஸ்கிரைண்டர், தயிர்மத்து
தேங்காய் துருவி
இத்தனையும் இணைந்த
"காயின் ரைஸ் கிரைண்டர்"
(கியர் பொக்ஸ் மொடல்)

தயாரிப்பாளர் & விற்பனையாளர்:

கோயம்புத்தூர்
எண்டர்பிரைசஸ்

310, மேலமாசி வீதி
மதுரை - 1

T'phone: 31164
34933

Grams: COIN

WITH BEST COMPLIMENTS FRCM

H.O. மதுரை-1. போன்:31684 • ஸ்தாபிதம்:1955 • B.O. நெல்லை-6. போன்:1243.



ராமா தையல் மிஷின்கள்

மாத தவணையிலும் தருகிறோம்!

சதர்ன் சூயிங்ஸ்

59-C, மேலாவணி மூலவீதி, மதுரை-1
கிளை: 183/2, மேலரதவீதி, திருநெல்வேலி-6
40, முடங்கியார் ரோடு, இராஜபாளையம்.

சதர்ன் சூயிங்ஸ்

தையல் மிஷின்கள் வாடகைக்கு விடுபவர்கள்
59 C, மேலாவணி மூல வீதி
மதுரை - 1.

கிளை:
183/2, மேலரத வீதி, திருநெல்வேலி - 6
40, முடங்கியார் ரோடு, ராஜபாளையம்.

SOUTHERN SEVINGS

59 C, West Avanimoola Street,
MADURAI - 625 001

Branch:
Tirunelveli - 6. Phone: 1243
40, Mudankiyar Road, Rajapalayam

உலக இந்து மகாநாடு சிறப்புற
எமது நல்வாழ்த்துக்கள்!



எவரெஸ்ட் ஜுவல்லரி மார்ட்

K. கஸ்தூரி ரெங்கன் செட்டியார் & கோ.

57, பெரிய செட்டித் தெரு
திருச்சிராப்பள்ளி - 8.
தமிழ்நாடு.



கல்பனா ஜுவல்லர்ஸ்

பார்ட்னர்: R. ராமகிருஷ்ணன்

24, ஜாவர்சா தெரு,
திருச்சிராப்பள்ளி - 8.
தமிழ்நாடு.

நல் வாழ்த்துக்கள்!



Mrs. & Mr. Ramesh
258, III Main Road,
Chamraj Pet,
Bangalore - 560 018

With Best Compliments of



LADIES CENTRE

2×2 Cotton Sarees - Blouses Specially Imported from India,
Petty Coat, Saree Folds, Imitation Jewelleries, Cassettes,
Ladies hand bags and Novelties etc. etc.

40, Buffalo Road, Singapore - 0821.

Phone: 3383516

லேடிஸ் சென்டர்

40, பப்பலோ ரோடு
சிங்கப்பூர் - 0821.
போன்: *3283516*

WITH BEST COMPLIMENTS OF



BIOCHEM

YOU NAME ANY ANALYTICAL INSTRUMENT

"BIOCHEM" OFFERS THE BEST

- COLORIMETER, pH METERS
- FLAME PHOTOMETER OXYGEN ANALYSER
- WATER ANALYSIS KIT
- ELECTROPHORESIS POWER PACK
- CONDUCTIVITY METER
- HOT AIR OVEN, INCUBATOR
- HUMIDITY CHAMBER
- WATER BATH, WATER BATH SHAKER
- PHOTOWARBURG APPARATUS.

Manufacturers:

UNIVERSAL BIOCHEMICALS

Sathya Sayee Nagar,
MADURAI - 625 003.

Demonstration and Service Centres at:

C/o. P. ORR & Sons P. Ltd, 200, Mount Road, Madras - 600 002
1033/1 IV 'M' Block, Rajaji Nagar, Bangalore - 560 010
XL/1679, Kasim Street, Lisie Hospital, Ernakulam - 682 017
10-2-289/112, Shantinagar, Masab Tank, Hyderabad - 500 028.

WITH BEST COMPLIMENTS FROM:



HOTEL MARIS

9, Cathedral Road

MADRAS - 600 086

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேம்.



All rooms attached with
Bath Room Phone and Channel Music
Restaurant attached
very near to Airport, Railway Station
Central Bus Stand and Indian Air Lines
and Air Lanka Office.



HOTEL ANAND

No. 1, Racquet Court Lane
Cantonment
TRICHY - 620001

Phone: 26545

பேரூராதீனத்தின் இந்து சமயப் பணிகள்

–தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்–பேரூராதீனம், கோயமுத்தூர்-641010, தமிழ்நாடு–

''இன்பமாய தருதிடை ஒங்கவும்
துன்பமாயது தூரத்துள் நீங்கவும்
முன்பராபரன் மொய் குழலோடணைந்து
அன்பின் ஈன்ற ஓர் ஆனையப் போற்றுவாம்''

உலக சமயங்கள் பல வற்றுள்ளும் நம் நாட்டின் பழம் பெருஞ் சமயமான இந்து சமயம் போற்றத்தக்கதாக விளங்குகிறது. பாரத நாட்டின் சிறந்த சமயச் செந்நெறியே இந்து சமயம். ஆன்றோர்களது ஆய்வின்படி ''தொன்மைச் சிவநெறியே'' இந்து சமயமாகும்.

'சிவ வழிபாடு' உலக வரலாற்றில் மிகப் பழைமையானது என்பதற்குரிய சான்றுகளை உலகம் முழுதும் காண முடிகிறது. பல நாடுகளிலும் கண்டங்களிலும் சிவலிங்க உருவங்கள் அமைந்திருப்பதன் மூலம் சிவ வழி பாட்டினை முன்னோர்கள் மிகப்பழங் காலத்தில் செம்மையாகப் போற்றி வந்தனர். என்பதை அறியலாம். மொகஞ் சதாரோ ஹாரப்பா போன்ற இடங்களில் அகழ் வாய்வின் மூலம் சிவலிங்கங்கள் அதிகம் கிடைத்தன என்ற அறிஞர்கள் கூற்றின் படி ஆன்மார்த்த வழி பாட்டிற்கு உரியதாகிய சிறிய சிவலிங்கங்கள் பழமைச் சிவ நெறியை நமக்கு விளக்குகின்றன. இச் சிவ நெறியே பிற உலக சமயங்கட்கும் ஆதாரமாகும். பிற நாடுகளிலும் இக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வழி பட்டு வருகின்றனர்.

இந்து சமயம் என்பது அறுவகைச் சமயங்களையும் அதனோடு தொடர்பு உடைய பிற சமயங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. இச் சிவ நெறி கடல் கோட்கட்கும் முற்பட்ட ஒன்று. இமயம் முதல் ஈழம்வரையுள்ள நாடுகளில் பரந்த சிவ நெறியைக் காண்கிறோம். அன்னையின் வழிபாட்டைக் குமரியிலும் அப்பனது வழிபாட்டை இமயத்திலும் காட்டிப் பரந்த சிவ நெறியின் சிறப்புக்குப் பல இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இமயத்திற்கும் குமரிக்கும் இடைப்பட்ட இந்தியாவின் பழம்பெருஞ் சமயம் சைவசமயமாகும். இதனால் சமய நிறுவனங்கள் பல தோன்றின. அருளாளர்கள் மக்களிடையே சமய நெறியை சிறப்பாக வளர்த்து அதன் மூலம் வாழ் வாங்கு வாழ வழிவகை செய்கின்றனர். இதனால் ஏற்பட்டவையே 'ஆதீனங்கள்'. ஆதீனங்களின் பணி சமய உணர்வுக்குத் துணை செய்கின்றது. இடையிடையே அப்பணிகள் காலச் சூழல் காரணமாகத் தடைப்பட்டன. சென்ற நூற்றாண்டில் பணி செய்த ஆதீனங்கள் திருமடங்கள் பற்பல. 16,17, ஆம் நூற்றாண்டில் பேரூரில் சாந்தலிங்க அடிகளார் திருமடம் என்ற பெயரோடு விளங்கிச் சிறப்பான பல பணிகளைச் செய்து கொண்டுள்ளது.

இதனைத் தோற்றுவித்தவர் வீரசைவச் சித்தாந்தச் செந்நெறியில் நன்னெறி ஈதென்று உலகுக்கு உணர்த்திய சான்றோரான 'சாந்தலிங்க அடிகளார்' ஆவார். அடிகளார் தமிழகத்தின் பல இடங்களில் சென்று வழிபட்டு அருளாளர் தொடர்பு கொண்டு பல அருட் பணிகளை ஆற்றியுள்ளார். இவர் தம் ஞானசிரியராக விளங்கியவர் திருவாவடுதுறை ஆதிகுருவாகவிளங்கியநமச்சிவாயதேசிகரது மாணவர், துறையூர் சிவப்பிரகாசம் ஆவார். அவர் சிவநெறிக்கு ஆற்றிய தொண்டு மிகப்பெரிது. சிறந்த சமயப்பணிகள் பலவற்றைச் செய்தவர். 'திருப்பருப்பதம்' என்று சொல்கின்ற ஸ்ரீசைலம் வரை சென்று பல மடங்களை நிறுவி பல தொண்டர்களை உருவாக்கிச் சமயச் செந்நெறியை வளர்த்திருக்கிறார். அவருடைய முதல் மாணவராக ஞானப் புதல்வராக விளங்கியவர் சாந்தலிங்க அடிகளார். இவர் சமயப் பொறையும் செந்தமிழ் நெறிப்பண்பும் உடையவர். இந்நிலையில் மக்களின் மனதைத் தெளிவுபடுத்தத் தவக்கோலம் பூண்டார்.

''தேறு நிமித்தம் திரு தொண்டு செய்வபராய்
கூறு மடியார் குழாம் பலவும் கொண்டார்''
''சாலக் கருணை தழைத்த குருதாள் பணிந்து
கூலப் பொலிவாருங் கொங்குவள நாட்டினிடை''
''மேலைச் சிதம்பராம் மிக்க புகழ்ப் பேரூரில்
சீலத்தவர் போற்றத்திருமடம் ஒன்று அமைத்தார்''

என்று தவத்திரு தண்டபாணி சுவாமிகள் போற்றுகின்றார். இத்தகைய பெருமை படைத்தவரால் உருவாக்கப்பட்ட பேரூராதீனம் சிறந்த மாணவர்களை உருவாக்கி, அடியார் திருக்கூட்டங்களைப் பெருக்கியது. போரூர்,

திருமுது குன்றம், பேரூர் என்ற மூன்று இடங்களில் இவற்றின் பணிகள் சிறப்புப் பெற்றன. சிறந்த மனப்பக்குவம் அமைத்து உலகிற்கு உதவ வாழ்ந்த சாந்தலிங்கப் பெருமானைக் கன்னட நாட்டு மன்னனை குமாரதேவர் தமக்குரிய ஞானசிரியராகக் கொண்டு வாழ்ந்தார். குமாரதேவராகிய மன்னர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் திருவாயிலை தூய்மைப்படுத்தல், அலகிட்டு மெழுகல் போன்ற பணிகளைச் செய்தார். இவரது மனப்பக்குவ நெறி உணர்ந்து சாந்தலிங்கப்பெருமான் அருள் மொழியுணர்த்திப் பலதலங்களை வழி படுமாறு ஆணை வழங்கினர்.

இவர் மகாராஜத்துறவு, சுத்த சாதகம் போன்ற நூல்களை அருளிக் குமாரத்தேவர் என்ற திருப் பெயரோடு பழமலை என்னும் திருமுதுகுன்றத்தில் பெரியநாயகியம்மையாரின் திருவருள் பெற்றுத் திருமடம் அமைத்தார். இவரது மாணாக்கர் போரூர் சிதம்பர சுவாமிகள் முருகன் அருள் பெற்றவர். குமாரதேவரிடம் அவரது பக்குவம் கண்டு சாந்தலிங்க அடிகளார் திருமுன்பிற்கு அழைத்து வந்தார் அடிகளார். எனக்கு நீ ஒருவன் போதும் நீ அவனை ஆட் கொள் என்று கூறினர் சிதம்பர சுவாமிகள். இத்தகைய குருமுதல்வரை பெருந்தவப்பயனல் சாந்தலிங்கப் பெருமான் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலைமறுத்தல், அவிரோத உந்தியார் போன்ற நூல்களுக்கு உரை எழுதினர். இவருடைய உரைகள் அறிஞர் பலரால் பாராட்டிப் போற்றப்படுகின்றன. முருகன் திருவாசகம் என போற்றப்பெறும் திருப்போரூர் சன்னிதிமுறையைப் பாடினர். போரூர் முருகன் திருக்கோயிலை சிறப்பாக எடுப்பித்து அங்கு திருமடம் அமைத்து வாழ்ந்தார்.
பேரூராதீனம் தம் மாணவர்களை உருவாக்கி பல அருள் நூல்களையும் பரப்பியது. இத்தகைய அருள் நூல்கள் இந்து சமயத்திற்குப் பெரிதும் துணைபுரிவன. மற்ற சமயங்களைப் புறக்கணிக்காமல் ஏற்றுக் கொண்ட ஒருமைப் பாட்டை இந்து சமயத்தில் காணலாம். அவ்வாறு காட்டிய அருளாளர்களும் உள்ளனர். இவ்வகையில் சாந்தலிங்கப் பெருமானுடைய நூல்கள் சமயச் செந்நெறியால் பிணைக்குக் கொள்ளாமல் உண்மை உணர அமைந்தது ஆகும். சாந்தலிங்க பெருமான் சமயக் கொள்கைகளை உள்ளவாறு உணர்ந்தவர்.

நாம் மாநாடு பல கூட்டி நமது சமுதாயத்திற்குரிய பல கருத்துக்களைக் கூறிவருகிறோம். ஆனால் அன்றே அத்தகைய பேரவை கூட்டிச் சமயத்தை பரப்பும் பாங்கினை அருளியவர் எமது ஆதி குருமுதல்வர் சிறந்த புலமையும் அறிவாற்றலும் மக்களை ஈர்க்கும் பண்பும் உலகவாழ்வின் தன்மையை உள்ளவாறே உணர்த்தும் திறனும் கொண்ட வாய்மைச் சீலர். உலக வாழ்வு பற்றிக் கேட்போருக்கு விளக்கம் கூறி பிறர் கருத்துக்களை மறுத்து தன் கருத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் நிலைநாட்டினர் என்பதை அவருடைய பாடல்களின் மூலம் அறியலாம்.

அவருடைய 'கொலை மறுத்தல்' என்ற நூல் அன்பின் பெருமை பற்றிக் கூறுவது. அதாவது 'அன்பின் வழியது உயிர்நிலை', 'அன்பே சிவம்', 'அன்பும் சிவமும் இரண்டன்று', 'அன்பின் வடிவம் சிவம்', 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை', என்னும் அடிப்படையில் 'உயிர்கட்கு அருளல்', 'உயிர்கட்கு இரங்கல்' போன்றவழிகளைக்கூறுகிறது. பல்வேறு சமயத்தவர் கருத்துக்களை மறுத்து எடுத்துக்காட்டும் இடங்களில் இந்து சமயக் கொள்கையை நிலைநாட்டியுள்ளார்.

"எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு"

என்று உலகினரைப் பற்றி வள்ளுவம் பேசுகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அறிவுடையவர்களை வாழ்வியல் உண்மைகளை உணர்ந்து கொள்பவரை, ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களை உலகோர் என்று பேசுகிறது வள்ளுவம். இத்தகையோர்சேர்ந்துள்ள அவையால் உயர்ந்த சமயமாகச் சாந்தலிங்கர் சிவ நெறியைக் கூறுகிறார்.

குளிர்ந்த தண்ணிய நிலவு போன்று இந்து சமயக் கோட்பாடுடைய சைவர் வழி காட்டுபவராக விளங்குபவர் தன்னைப் பக்குவப் படுத்திக் கொள்ள நினைக்கும் ஒருவருக்குக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

"எடுத்துள எச்சமயிகளு முலகருஞ்சார்
ஒரவை யினிடை யிற் றேன்றும்
உடுத்தனைச் சூழ் தர விளங்கும் மதியின் உயர்
சைவரை வந்து ஒருவன் தாழ்ந்தீண்டு
அடுத்த பல உயிர்த் தோற்றத்து உயர்வுதாழ்வு
அருளுக என அவனைத் தோற்றித்
தடுத்த புறச் சமயிகளுக்கு உத்தரம் உறுத்தி
நிறுத்துகின்றார் தம்பாலாற்றம்"

(கொலைமறுத்தல்)

சமயத் தலைவர்களிடத்திலே பெற்ற விளக்கங்களைவிடச் சாந்தலிங்க அடிகளார் தன் கருத்து சிறந்த கருத்து எனவும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்து என்றும் விளக்கம் செய்கிறார். எனவே பிறர் கூறும் தடைகளை நீக்கி விடைகூறி இதுவே முடிவு என விளக்குகிறார்.

'வைராக்கிய சதகம்' என்ற நூல் மனம் நிலைபெறப் பல காரணங்களைக் கூறுகிறது. வள்ளுவம்

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என்று பேசியதோ அதுபோல இறைவன் திருவடிவணங்கி அருளாளர்களது பாடல்களை பாடிவழிபட்டால் வழிபட்டாற்கிரங்கி இறைவன் அருள் புரிவான் என்று காட்டுகிறது:

''வாழி நெஞ்சமே சென்றிடேல்
நின்றி தோர் வார்த்தையுரை செய்வாய்'' என்று

நெஞ்சத்தை ஒருமுகப் படுத்தும் நிலை பேசப் படுகிறது. பெரியோர்களது, அருளாளர்களது பாடல்களை ஓதுவதால் சிறந்தபயன் கிட்டும் என்றும் அப்பாடல்களை ஓதி, ஓதி நெக்கு நெக்கு உருகினால் சிவ பெருமான் அருள் புரிவார் என்பதை இறைவன் குரு வாய்வந்து அருள் செய்தான் என்பதை

''விளம்பற்கரும் சோதியென்கோ விடையோன் என்கோ
என்னுளம் புக்க சிவப்பிரகாசன் என்கோ என்
அங்கைத்
தளம் பெற்ற சாந்தன் என்கோ நின்றனது நாமம்
வளம் பெற்ற திருக்கையாய சொல்வாய் நினக்கே''

எனக் கூறும் அருட்பாக்களால் விளக்கியுள்ளார்.

'வைராக்கிய தீபம்' என்ற நூலில் சிறிய அளவில் உள்ள மருந்து உடலுள் சென்றவுடன் நோயை அகற்றுவது போல, ஞானசிரியரது அருள் நிறைந்த ஒரு சொல் நமக்கு உறுதியைத் தந்து பிறவாப் பிணிகளைப் போக்கி சிறந்த உள்ளுணர்வைப் பெற்றுக் கொண்டு வளர்கின்ற வளர்ச்சிக்குரியதாக அமைகிறது என்பதை,

அருந்திய காலத் தற்பமாய்பின்பேர் அவுடதம், உடம்பி
னின்றுடலே
வருத்திய பிணியெலாம் அகற்றுதல்போல் வஞ்சனேன்
நெஞ்சில் மாற்றரிதாய்
இருந்த எப்பற்றும் பிற்றை நாள்களில் விட்டேக அன்றே
டைக்கணித்தல் புரிந்த தம் குரவன்.

அருளிருந்தமை எப்பொழுதும் உள் நிலைந்து வாழ்ந்திடுவோம் என்று பேசுகிறது. உலக வாழ்க்கை அழிவுடையது. மறைகளின் கருத்து அதுதான். திருவள்ளுவர் தமிழால் நமக்கு அருளப்பட்ட வேதம் திருக்குறள் என்று கூறுகிறது. அருளாளர்களின் சொல்லை ஏற்று நடக்க வேண்டும். நிலையான வாழ்வை அடைய முயல வேண்டும் என்றும், மேலான நெறிகளைப் பின்பற்றல் வேண்டும் என்றும் காட்டுகிறது இந்நூல்.

அவிரோத உந்தியாரில் விரோத மனப் பான்மையைவிட்டு ஒற்றுமை மனப்பான்மை யோடு வாழ்தல் உயர்வுடையது என்ற இந்து சமயக் கோட்பாட்டைக் கூறும் வீடுபேறு அடைதற்குரிய வழிகளையும் கூறுகின்றார். தத்துவக் கோட்பாடுகளையும் விளக்குகிறது இந்நூல்.

''எல்லாம் உடையான் குருவாகி ஈங்கெமது
அல்லல் அறுத்தான் என்று உந்திபற
அவன் தான் தொழுவோம் என்றுந்திபற''

என்று தொடங்கும் அருமையான இந்நூல்

''எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்
சம்மதமே யெமக்குந்திபற
தற்போத மாய்க்கு மேல் உந்திபற''

என பொதுநிலை கூறி நீ வீட்டு நெறி அடைய உலகியல் நன்னெறிகளை உள்ளவாறு உணர்ந்து செல்வதுதான் சிறந்த நெறி என்று காட்டுகிறது.

தவிரா விரோத சமயநூல் என்றுள்
அவிரா அவிரோத உந்தி என்றுந்திபற
ஆமிந் நூல் நாமம் என்றுந்திபற;

என்று கூறுகிறார். எனவே இத்தகைய சிறந்த அருள் நூல்கள் மூலம் சமய உண்மையை விளக்கிய சாந்தலிங்கப் பெருமானால் தோற்றுவித்த இப் பேரூராதீனம் இந்து சமயக் கோட்பாடுகளைப் பல நூற்றாண்டுகளாக விளக்கி வரும் சிறந்த நிறுவனமாக விளங்குகிறது. அருளாளர்கள் கொங்கு நாட்டின் பல பகுதிகட்கும் சென்று பாரத நாட்டின் சிவ நெறியும் சமயப்பண்பும் மக்களிடையே வளர்க்கத் தலையிட்டனர். அவற்றை அறிந்து கொள்ளவும் வாய்ப்புகளை பெருக்கியுள்ளனர். சாந்த லிங்க அடிகளார் காட்டும் அருள் வழியில் இலங்கும் இவ் வாதீனம் 1916-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சத்வித்யா சன்மார்க்க சங்கம் தொடங்கி

பல சமய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும் சிறந்த கருத்தரங்குகளை நடத்தியும் வருகின்றது. சாந்தலிங்க அடிகளாரின் குரு பூசை ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வமயம் அறிஞர்களை ஈடுபடச் செய்து தத் துவக் கோட்பாடுகளை வளர்க்க அரிய சொற் பொழிவாற்றல்போன்ற நிகழ்ச்சிகள்நடத்திக் கொண்டு வருகின்றன.

நாடு முழுவதும் சென்று மக்களோடு அணுகி சமய நெறியால் வாழ்வதற்கு உரிய வழிகளை அறநெறிகளைஉணர்த்தி நல்லுணர்வு ஊட்டுகின்றனர். தமிழ் நெறியில் திருமுறை களின் துணை கொண்டு திருக்கோவில் வழி பாடு நடைபெற சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறந்த தமிழறிவும் சமய உணர்வும் ஏற்படும் வகையில் கோயில் புதுப்பித்தல் திரு முழுக்கு நீராட்டு இவற்றிற் குத் தலைவர்களும் தொண்டர்களும் தாமே முன் நின்று செய்து மக்களுக்குப் பக்தி உணர்வு பண்புகள் ஆகிய வளர்க்கின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட திருக்குட நீராட்டு நிகழ்ச்சிகள் தெய்வத் தமிழ்நெறியால் நிகழ்ந் துள்ளன.

சிறுவர் உள்ளத்தில் உயர் கல்வி புகட் டல், சிறந்த இலக்கண இலக்கியங்களை மக்க ளுக்குப் பரப்பல், சொல்லோர் உழவர்களை உரு வாக்கல், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை சமய வழியில் உருவாக்குதல் இவ்வாதீனத் தின் பணியாகும். ஆதீனத்தின் சார்பில் பல நிறுவனங்கள் சமய ஒழுகலாறுகளை விளக்கக் கூறியும் குங்குமம் திருநீறு போன்ற இறைவ னின் பிரசாதங்களை வழங்கியும் மன அமைதி பெறப் பணி புரிகிறது.

இவ்வாதீனம் மேலும் ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' என்ற வகையில் எல்லோ ருக்கும் அருள் நெறியை உணர்த்தி வழி காட் டுகிறது: 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நிலையில் தமிழகத்திலுள்ள அனைத்துச் சமய நிறுவனத்தோடும் தொடர்பு கொண்டு அவர்களது கருத்துக்களின் ஏற்பன ஏற்றுப் பணி புரிகிறது. பல சமய அறிஞர்களைக் கொண்டு ஆய்வுரைகளையும் கருத்தரங்குகளை யும் வழங்கி சமயக் கருத்துக்கள் பரப்பப்படு கின்றன.

பழுதற்ற கோவில்கள் வரலாற்று சிறப்பு மிக்க தலங்கள் ஆகிய செப்பனிடல் கோடை கால வகுப்புகளை நடத்தி தமிழுணர்வும் சமய அறிவும் வழங்குதல் ஆகிய பல வகைகளில் ஈடுபாடு கொண்டுள்ளது. வேறுபாடு காட் டாத திருமுறை நெறியில் சிவனை வழிபடுப வர் அனைவரும் நம் உறவுக்கு உடையவர் என்ற நிலையினை மேற்கொண்டு திருமூலர் நெறியில் நின்று சமய ஒழுகலாறுகளைப் பின் பற்றச் செய்கிறது இவ்வாதீனம்.

தொண்டுக்கும் தூய அன்புக்கும் முதலி டம் தந்து விழா நடத்தி, அன்பர் கூட்டமா கிய மக்கட் செல்வத்தை அதிகம் பெற்று இந்திய சமயக் கோட்பாடுகளின் தூயதாகிய சிவநெறியைக் கடைப்பிடித்து வீரசைவ நெறியை உலகறியச் செய்யும் நடைமுறை யைக் கொண்டது இவ்வாதீனம். தற்போது சமயதத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றைத் தொடங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகம நெறியை உள்ளவாறு அறிந்து கொள்ளும் வகையில் ஆய்வுகள் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அரிய இலக்கி யங்கள் ஓலைச்சுவடிகள் தொல்பொருள்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

என்கடன் பணி செய்து கிடப்பதே
தன்கடன் அடியாரையும் தாங்குதல்''

என்றும்

தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்''

என்றும் பாடிய அப்பர் அடிகளின் உயரிய குறிக்கோளுக்கேற்ப நடைபெற்று வருகிறது. இவ் வாதீனம் திரு மூலரும் மணிவாசகரும் அருளும் மெய்ப்பொருளியலை மேற் கொண்டு அங்கலிங்க வழி பாட்டை நடை முறைப் படுத்தும் வீரசைவத் தொன்னெறியில் செய லாற்றுகிறது.

வளர்க சிவ நெறி!
வாழ்க வையகம்!

ஸ்ரீ காசித் திருமடம் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணிகள்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாட்டில் பொன்னிநதி (காவிரி) பாய்ந்து வளங்கொழிக்கும் தஞ்சைத் தரணியில் கும்பகோணத்திற்கு வடகிழக்கில் 18 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருப் பனந்தாளில் ஸ்ரீ காசித் திருமடம் அமைந்துள் ளது.

தொகுத்தவர்:
புலவர் முருகு. சுவாமிநாதன், பி. லிட். (எம்.ஏ.)
ஸ்ரீ காசிமடம். திருப்பனந்தாள்-612 504.

தோற்றமும் வரலாறும்:

மூவேந்தர்கள் வலிமை குன்றி, 14-ஆம் நூற்றாண்டில் முகமதியர்கள் படையெடுப் பால் இந்து சமயமும், கொள்கைகளும், முத் தமிழும், அரிய கலைகளும், பண்பாடுகளும் கீழ்ப்படுத்தப் பெற்று வளர்ச்சி குன்றிய கால எல்லையின் இறுதியில் - அதாவது 17-ஆவது நூற்றாண்டில் — திருநெல்வேலி மாவட்டம் கைலாசபுரத்தில் ''ஸ்ரீ குமரகுருபரர்'' வண் டமிழும், சைவநீதியும் தழைக்க அவதரித் தார். மூன்றாண்டு வரை ஊமையாய் இருந்து திருச்செந்தூர்க் கந்தனருளால் பேசும் திறனு டன் கவிபாடும் வல்லமையும் பெற்றார். ஊமை நீங்கிய உடன் தெய்வீகக் கவிஞராய் செந்தூர் மேவும் கந்தன் அருளை நினைந்து கந் தர்கலிவெண்பாப் பாடியருளினார்; சிவத் தலங்களுக்கு யாத்திரை செல்லத் தொடங்கி னார். தென் ஆலவாயில் மேவும் ஸ்ரீ மீனாட்சி யம்மையின் அருள்வேட்டு 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' எனும் அரிய பிரபந்தத்தைத் திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றி னார். கிள்ளை மீனாட்சி பிள்ளைத்தமிழ் கேட்டு ஒள்ளிய முத்தின் மாலையை உவந்து கவிஞ ருக்கு ஈந்தாள்; திருமலை மன்னனும் தெய் வீகக் கவிஞருக்குச் சிறப்புகள் செய்தான். பின் திருஆரூர் அமர்ந்த எம்மானின் திருவ ருட் சிறப்பினைத் 'திருவாரூர் நான்மணிமாலை' எனும் நூலாக யாத்தளித்தார்.

சிவஞான உபதேசம் பெற தருமை ஆதீ னம் 4ம் பட்டம் ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை அணுகினார். அவரிடம் துறவுநிலை வேண்ட ஆச்சாரியர் கவிஞரை ஸ்தல யாத்திரை முடித்துவரப் பணித்தார். குருமொழியைத் தலைமேற்கொண்டு தல யாத்திரை தொடங்கி வைத்தீஸ்வரன் கோயில் சென்றார். ஆண்டு 'முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்' எனும் பெயரில் அரியதொரு சிற்றிலக்கிய மாலையை முருகப்பெருமானுக்குக் கோத்து அணிவித்து மகிழ்ந்தார். பின் தில்லையையடைந்து கவிஞர் பெருமான் பொன்னம்பலவாணர் 'கழல் பணிந்து 'சிதம்பர மும்மணிக்கோவை' எனும் நூலைப் படைத்தளித்தார். தமிழ் யாப்பிலக் கணநூலான 'யாப்பருங்கலக்காரிகை' நூலின் அனைத்து இலக்கணங்களும்பொருந்திய இலக் கியம் அடங்கிய-சிறந்த பக்திநெறியை விளக் கும் 'சிதம்பர செய்யுட்கோவை'யை இன்கவி களால் இயற்றினார். தில்லையில் வழிபாடாற் றிக்கொண்டிருக்கும் காலத்திலேயே உலகப் பொதுமறையாம் திருக்குறளின் பிழிவாக 'நீதிநெறி விளக்கம்' எனும் நீதிநூலைச் செய் தார். பின் ஞானதேசிகரை அணுகிக் காஷா யம் பெற்று குருவருளை நயந்து 'பண்டார மும்மணிக் கோவை' எனும் அரிய சாத்திரக் கருத்துக்களடங்கிய இலக்கியக்கருவூலத்தைப் படைத்தார். பின் காசி சென்று தன் கல்வி யறிவினாலும். வெள்ளைக் கமலத்தில் வீற்றி ருக்கும்வாணியின் அருளைவேண்டி 'சகலகலா வல்லிமாலை' எனும் நூலைப் பாடி அதனால் பெற்ற இந்துஸ்தானி மொழி பேசும் வன்மை யினாலும், டில்லி பாதுஷாவிடம் அன்புடன் பழகி அவனிடம் நிலம்பெற்று காசியில் கேதார கட்டத்தில் திருமடம் ஸ்தாபித் தார். அத்திருமடத்திற்குக் 'குமாரசாமி மடம்' என்று பெயர். ஸ்ரீ குமரகுருபரர் சுவா மிகள் பின்னர் 'காசிக் கலம்பகம்' எனும் நூலைப் படைத்து மற்றும் அரிய தமிழ்ச் சமயப் பணிகளை ஆற்றி வந்தார். அவருக்கு பின் வந்த ஐந்து தலைவர்கள் சிறந்த தமிழ்ச் சமயப் பணியை ஆற்றினர். ஆறுமுகவரான ஸ்ரீ தில்லைநாயக சுவாமிகள் ஏறக்குறைய 1720ல் திருப்பனந்தாளில் ஸ்ரீ காசிமடத்தை நிறுவினர்கள். அதன்பின் வந்த தலைவர்கள் தமிழ்மொழியும், சைவ நன்னெறியும், இந்து தர்ம கோட்பாடுகளும் செழிக்கப் பல்லாற்றா னும் பாடுபட்டனர். தற்போது ஸ்ரீ காசி மடத்தின் தலைமைப்பீடத்தை அலங்கரிப் பவர்கள் 'ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்' அவர்கள் ஆவார்கள்.

திருக்கோயிற் பணிகள்:

எம்பெருமான் உறையும் திருக்கோயில் களுள் நித்திய பூசையும் சிறப்பு வழிபாடுக ளும் நிகழப் பல்லாயிரக் கணக்கில் நிதி வரு கின்றது. திருக்கோயில்களைப் புதிதாக எழுப் புவோருக்கும், முன்னுள்ள ஆலயங்களைப் புதுக்குவோருக்கும் உரிய முறையில் அறிவு ரைகளும் பொருளுதவிகளும் வளங்கி வரு கின்றது. குடமுழுக்கு விழாவிற்கு தேவை யான 'அஷ்டபந்தன மருந்' தைத் தயாரித்து (அறக்கட்டளை நிதியின்வருமானத்திற்கேற்ப) இலவசமாக வழங்கி வருவது அரியதொரு நற்பணியாகும். மற்றும் திருக்கோயில்களில் அத்திருத்தலத்தினிறைவரை தேவார மூவ ரும் நயந்து பாடிய அரிய பதிகங்களும் மற் றும் திருவாசகம் முழுமையும், சிவஞான போதச் சூத்திரங்களும் கல்லில் பொறிக்கப் பட வகை செய்ததும் குறிப்பிடத் தக்கனவா கும்.

கல்விப் பணி:

மக்களின் அறியாமையைப் போக்கி அறி வொளி பரப்பும் முயற்சியில் பல அளவற்ற பணிகளைச் செய்கின்றது. பாலர் பள்ளி, தொடக்க, நடுநிலை, மேனிலைப் பள்ளிகளை யும், செந்தமிழ், கலைக் கல்லூரிகளையும் நிர் வகித்துப் புரந்து வருகின்றது. பள்ளிப் பாடங் களுள் தமிழைச் சிறப்பாகப் பயின்று கூடு தலான மதிப்பெண்கள் பெறுவார்க்கு உத வித் தொகைகளும், பரிசுகளும் வழங்கி வரு கின்றது. நீதிநெறி விளக்கம், கந்தர்கலி வெண்பா முதலான சமய தோத்திர நூல் களைப் படித்து ஒப்புவிக்கும் பள்ளி மாணவர் கட்குச் சிறந்தபரிசுகளைவழங்க அறக்கொடை வழங்கி வருகின்றது.

தமிழ்க் கல்லூரிகளில் பயின்று இறுதி நிலைத் தேர்வில் முதல் மதிப்பெண் (Presidency-First) பெறுவார்க்குப் பரிசு வழங்க 'ஐந்தாம் ஜார்ஜ் நினைவு ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப் பரிசு' (வட்டி வீத அதிகரிப்பினால் தற்போது ஏறத் தாழ ரூ.2000/- பரிசாக வழங்கப்படுகின்றது) **எனும் பெயரில் அறக்கட்டளை நிறுவியுள்ளது.** சில குறிப்பிட்ட பள்ளி, கல்லூரிகளில் மாண வர்களின் அறிவைப் பெருக்கும் நூல்கள் அமைந்த நூலகங்கள் அமைத்துத் தந்தது. சிவபுராணம், சகலகலாவல்லி மாலை, திரு வெம்பாவை, கந்தர்கலி வெண்பா, கந்தர் சஷ்டி கவசம், விநாயகர் கவசம், விநாயகர் அகவல் முதலான தோத்திர நூல்களை அச் சிட்டு இலவசமாக வழங்கிவருகிறது.

நூல் வெளியீட்டுப் பணி:

இத்திருமடத்தின் வழியே பல்லாண்டு காலமாக சைவத்திருமுறைகள் பன்னிரண்டு, திருக்குறள் முப்பால் (உரைத்தொகுப்புடன்) ஸ்ரீ குமரகுருபர பிரபந்தம், பன்னிரு திரு முறைகளின் வரலாறு, அன்றாடம் பாராய ணம் செய்யப்பயன்படும் தோத்திர நூல்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள் ஆகியவை பதிப் பிக்கப்பட்டன. தக்க தமிழ் அறிஞர்களைக் கொண்டு குற்றம் களைந்து திருந்திய தமிழ்ப் பதிப்புகளை வெளியிட்டு அடக்க விலையில் விற்க ஏற்பாடு செய்தது. மற்றும் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தின் வழிநூல்களைப் பதி ப்புசெய்யவும், அதன் அடக்கவிலையில் $\frac{1}{4}$, $\frac{1}{8}$ பங்கு அளவில் விற்கவும் அறக்கொடை வழங்கியுள் ளது. ஸ்ரீ காசித்திருமடத்தின் திருக்குறள் பன்னிரு திருமுறை, சாத்திரநூற் பதிப்புக் களுக்குத் தமிழன்பர்களிடையில் மிகுந்த செல் வாக்குண்டு.

'ஸ்ரீ குமரகுருபரர்' சமய இலக்கியத் திங்களிதழ்:

'ஸ்ரீ குமரகுருபரர்' என்ற திருநாமந்தாங் கிய சமய இலக்கியத் திங்களிதழ் ஒன்று இத் திருமடத்தின் வெளியீடாக வருகின்றது. இத னுள் தமிழ் இலக்கிய, சமய, கலை, பண்பாட் டுக் களஞ்சியங்களாய் அரிய தமிழறிஞர் களால் படைக்கப்பட்ட படைப்புகள் இடம் பெறும். மற்றும் மொழி பெயர்ப்பு, விடை யரங்கம், புதிய நூல் வரிசை, புராணத்தொ டர்கள் ஆகியவையும் அணி செய்யும்.

பசிப்பிணி மருத்துவம்:

திருப்பனந்தாளைத் தலைமையிடமாகக் கொண்ட இத் திருமடத்துக்கு காசி, இரா மேஸ்வரம், சிதம்பரம், ஆச்சிராமம் ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்கள் உள்ளன. ஆங்காங்கு தமிழும், சைவமும் மேன்மையுற உரிய நெறியில் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன. அன்றாடம் குறிப்பிட்ட அளவி லும், விழாநாட்களில் அளவின்றியும் அந்த ணர், அருந்தவர், ஏழை, யாத்திரிகர்கட்கு அன்னம் அளித்துவரும் செய்கை சீரியதாகும். தேசாந்திரிகள் தங்குவதற்கும் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

உடற்பிணி மருத்துவம்:

அற்றூர் அழிபசி தீர்க்கும் திருமடம் நோய் களையும் இடமான மருத்துவமனைகள் செழிக்கவும், செயலாற்றவும் நிதி உதவிகள் அளித்து வருகின்றது. தஞ்சாவூர் மாவட்டம் செங்கிம்பட்டியிலுள்ள காசநோய் மருத்துவ மனைக்கும் ஆண்டுதோறும் பொருள் வழங்கி வருகின்றது. மானிடர்க்கேயன்றி விலங்குக ளுக்குச் சிகிச்சை புரியும் மருத்துவமனைக்கும் (திருப்பனந்தாள்) அறக்கொடை வழங்குகின் றது.

கோ சம்ரக்ஷணம்:

கோமாதாவாகத் தொழப்பெறும் பசுக் களைத் திருக்கோயில்களில் வளர்க்கவும், பாது காக்கவும் உரிய வகையில் 'கோசம்வர்த்தன நிதி' எனும் பெயரில் நிதி அளிக்கின்றமை மறக்க முடியாதது.

பண் - ஆராய்ச்சி, வளர்ச்சிப் பணி:

சைவ அருளாளர்களால் இயற்றப்பெற்ற பண்சுமந்த பாடல்களைப் பாடும் திருமுறை வாணர்களை ஆதரித்தும், புரந்தும், 18 தலங் களில் அன்னூடம் திருமுறை இசைக்கவும் ஆடிச் சுவாதி, ஆவணி மூலம், திருக்கார்த் திகை, மார்கழி திருவாதிரை முதலாக ஆண்டு முழுவதும் மாதங்களின் சிறப்பு நாட் களில் அகண்ட பாராயணம், திருமுறை கோஷ்டிகள் நிகழ்த்தவும் பல்லாயிரக் கணக் கான ரூபாய்களைச் செலவிடுகின்றது.

சைவ சித்தாந்த நெறி போற்றும் பணி:

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பற்றிய விரிவுரை நிகழ்த்தவும் மற்றும் விரிவுரையா ளரை நியமிக்கவும் பல அறக்கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சிவஞான சித்தியார் உபந்நியாசம் செய்ய ரூ. 15,000/- அறக்கொடை நல்கப் பட்டுள்ளது. ஸ்ரீ காசியில் பனரஸ் இந்து பல் கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் போதகா சிரியர் நியமிக்கவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தம் பயில்பவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கவும், சென்னை விவேகானந்தர் கல்லூரியில் சைவ சித்தாந்த நத்துவப் பயிற்சியுள்ள மாணவர் இருவருக் குப் பரிசு வழங்க இராஜாஜி சைவ சித்தாந் தக் கட்டளை எனும் பெயரிலும், காசிப் பல் கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த நெறியில் சிறப்புத் தகுதி பெறும் மாணவருக்கு சர். எஸ். இராதாகிருஷ்ணன் அறக்கட்டளையின் படி உபகாரச்சம்பளம் வழங்கவும், பண்டித மதன்மோகன் மாளவியா நினைவில் அவர் பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபந்நியாசம் நிகழ்த்தவும் அறக்கொடைகள் நல்கியது. ரூ. 1,56,000 அளவில் 7 அறக்கட்டளைகளின் வழி சைவ சித்தாந்தம் பரப்ப அரிய பணிகளை ஆற்றி வருகின்றது.

கலைப்பெரும் பணி:

தன்னுடைய மேற்பார்வையிலுள்ள இடங் களிலுள்ள தமிழறிஞர்களையும், மற்றமாவட் டங்களிலுள்ள அருந்தமிழ்ப் புலவர்களையும் அழைத்து சிறப்பு செய்கின்றது; மிருதங்கம், முதலான இசைக் கருவிகளில் தேர்ச்சியுற்று ரைப் புரந்து வருகின்றது.

செவிச் செல்வம் வளர்ப்புப் பணி:

தமிழ்மொழி இலக்கியத் தோய்வுடைய பெரும் சான்றோர்களை அழைத்து சமய, இலக் கியச் சொற்பொழிவுகளை அமைத்து அதன் வழி 'செவிச் செல்வம்' பெற தமிழன்பர்க ளுக்கு வசதி செய்கின்றது.

ஆத்திக வளர்ச்சிப் பணி:

ஈசனுறை கோயில்கள் மேன்மையுறவும், அத்திருக்கோயில்களில் அபிஷேகம், பூசனை சிறப்புறவும், பண்ணேடிசைபாட வல்ல திரு முறைவாணர்கள் வளம்பெறவும், ஆத்திக வளர்ச்சிப் பணி' எனும் வகையில் 'ஆலய பூஜை படிக்காசு' நிதி என்னும் அமைப்பை ஸ்ரீ காசிமடம் ஏற்படுத்தியுள்ளது. பூசையும், விழாவும் இழந்துமேன்மை மழைறந்த கோயில் கள் இத்திட்டத்தால் பொலிவுறும். சிறப் பொடு பூசனைகள் செல்லும். திருமுறைவா ணர்கள் கவலை மறந்து தமிழோடிசை பாடல் பாடுவர்.

இவ்வாற்றான் கடந்த மூன்று நூற்றாண்டு காலமாக ஸ்ரீ காசிமடம் தமிழகத்தின் தலை சிறந்த சமய நிறுவனங்களுள் ஒன்றாக இயங்கி வருகின்றது.

மதுரை ஆதீனத்தின் வரலாற்றுக் குறிப்பு

—ஆதீனத் தொண்டர்—

தோற்றம்:

பக்தித் தேன் பெருகும் ஊற்றுக்கள் ஆதீனங்கள் என்று பெரியோர்கள் சொல்வர். சுமார் 1400 ஆண்டுகட்கு முன்னர் மதுரை மாநகரில் ஒரு பக்தித் தேக்கம் எழுப்பப்பெற்றது. அதுவே இன்று பிரபலமாகவுள்ள மதுரை ஆதீனமாகும். கி.பி. 7-ம் நூற்றாண்டில் இது திருஞானசம்பந்தப் பெருமானால் தொடங்கப்பெற்றது. இந்தியாவிலேயே மூத்த ஆதீனம் மதுரை ஆதீனம்தான். அக்காலத்தில் மதுரையை ஆட்சிசெய்த சமண மன்னனாகிய கூன் பாண்டியன் மன்னனை நின்ற சீர் நெடுமாறனாக மாற்றிச் சமண அரசாங்கத்தைச் சைவ அரசாங்கமாக ஆக்கினார் சம்பந்தர். அப்பெருமானுக்குத் துணையாக நின்ற சீர் நெடுமாறன் மனைவி மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையும் இருந்து சைவ சமயத்தைப் பரப்பினார்கள். திருநீற்றின் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொன்ன பெருமை ஞானசம்பந்தப் பெருமானையே சாரும்.

ஞானசம்பந்தப் பெருமான் இத்திருத்தலத்தில் தங்கிச் சமணர்களை வென்றார் என்பதால் சைவத்திற்காக அரும்பாடுபட்ட அருட்செல்வர் ஞானசம்பந்தரது திருநாமத்தாலேயே மதுரை ஆதீனம் "திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்" ஆக இருந்து வருகிறது.

மூத்ததும் முதலானதும்:

துறைசை, தருமை, திருப்பனந்தாள், குன்றக்குடி—திருவண்ணாமலை முதலான ஆதீனங்களுக்கும் மூத்த ஆதீனமாக இவ்வாதீனம் உள்ளது. இதன் அருளாட்சி பீடத்தை 292 குருமகாசந்நிதானங்கள் ஏற்றருளியுள்ளார்கள். காலத்தால் மூத்த திருமடாலயத்திற்கு ஞானசம்பந்தப் பெருமான் குருமுதல்வராக எழுந்தருளினார். ஆகவே திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் என்றழைக்கப்படும் மதுரை ஆதீனமே மூத்த ஆதீனமாகவும், உலகத்திற்கு ஞானவழி காட்டும் முதல் ஆதீனமாகவும் திகழுகிறது என்று சொல்லிவிடலாம்.

இத்திருமடாலயத்திற்கு ஏராளமாக மாநியங்களை அவ்வக்காலத்து அரசர்கள் அளித்துச் சென்றிருக்கின்றனர். அருள்மிகு ராமநாதசுவாமி ஆலயமும், அருள்மிகு மீனாட்சிசுந்தரேசர் ஆலயமும் இதன் அருளாட்சிக்கு உட்பட்டு இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. ஆதீனகர்த்தர்கள் இப்பீடத்தில் எழுந்தருளி மடாலயத்திற்குச் சொந்தமான ஆலயங்களுக்குப் பரம்பரை அறங்காவலர்களாக நிர்வாகம் செய்தனர். இப்போது எழுந்தருளியிருக்கும் 292-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருப்புறம்பயம் அருள்மிகு சாட்சிநாதர் ஆலயம், கஞ்சனூர் அருள்மிகு அக்னீசுவர சுவாமி ஆலயம், கச்சனம் அருள்மிகு கைச்சின்னேசுவரர் ஆலயம் பன்னதெரு அருள்மிகு பன்னகாபரமேஸ்வர ஆலயம் ஆகிய நான்கு தேவஸ்தானங்களுக்கும் பரம்பரை அறங்காவலராக உள்ளார்.

அருளாட்சி:

சைவசமய வரலாற்றில் இடம்பெற்றவர்களுள் பலர் இத்திருமடாலயத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாக ஆதீன வரலாறு கூறுகின்றது. சைவசமயத்தைப் பரப்பிப் பெரும்பெயர் பெற்ற திருஞானசம்பந்தரைப் போல அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளும் இரு நூற்றாண்டுகட்கு முன்னர் சைவப் பயிர் தழைக்கவும் பக்தி நீர் பாய்ச்சினார்.

வள்ளலார் சுவாமிகளுக்கும் மதுரை ஆதீனத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. அது போல அகில உலகமெங்கும் சைவத்தை நிலைநாட்டிவர அவதரித்தமகான் போல 292-வதுகுருமகாசந்நிதானம்அவர்கள் 20-ம் நூற்றாண்டிலே எழுந்தருளியுள்ளார்கள். இவர் காலத்தில் சைவப் பேரரசு இன்னும் பெருமளவுக்கு விரிந்து பரவ வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில் திருஞானசம்பந்தரைப் போலவும், இந்து மதத்தை வெளிநாட்டிற்கு எடுத்துச் சென்ற விவேகாநந்தரைப்

With best compliments from

Prakash *Enterprises*

A UNIT OF

SUDARSAN CARBON & ALLIED INDUSTRIES

29, Subramaniya Puram - Sri Rangam,
TRICHIRAPALLI - 620 006.
Tamilnadu

MANUFACTURERS OF

ELECTRICAL & AUTOMOBILE CARBON BRUSHES.

OVER AGENTS IN SRI LANKA

M/s. Jamaldeen & Co.

38, Akbar's Lane,
COLOMBO - 12.
Sri Lanka.

உ

அகில உலக
இந்து மகாநாட்டுக்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்!



* உங்கள் கட்டிட வேலைகட்கு உரிய கட்டிட பொருட்களுக்கும்
* மின்சார உபகரணங்கள்
* SLON பைப்புகள்
* C I C பெயின்ட் வகைகளுக்கும்

திருக்கோணமலையில் நம்பிக்கையான இடம்

நியூ கோபால் கம்பெனி

28, கடற் காட்சி வீதி,
திருக்கோணமலை.

NEW GOPAL COMPANY

28, Sea View Road - Trincomalee.

Phone: 619

உலக இந்து மகாநாடு சிறப்புற
எமது நல்வாழ்த்துக்கள்!

ஸ்டூடியோ விஜயா

55, பிரதான வீதி — — திருக்கோணமலை.

நல் வாழ்த்துக்கள்!

கெங்கா ஸ்டோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்.

68, பிரதான வீதி — — திருக்கோணமலை.

ஸ்ரீ லங்காவில்
விழாக் கோலம் பூண்டிருக்கும்
அகில உலக இந்து மகாநாட்டின்
இந்நன்னாளில்
சிறப்பு மலர் வெளியிட்டிருக்கும்
ஆத்மஜோதி நிலையத்தினருக்கு
எமது உளங் கனிந்த

நல் வாழ்த்துக்கள்!



SRI NATARAJA VILAS JEWELLERY HALL

S. RATHINASWAMY CHETTIAR SONS

GOLD AND SILVER ORNAMENTS AND SILVER WARES
WHOLESALE AND RETAIL DEALER.

Chidambaram.

TAMILNADU

222
622

WITH BEST COMPLIMENTS FROM

VEERA BALAN COMPANY

DEALERS IN:

- ELECTRICAL GOODS
- PAINTS
- HARDWARE
- MACHINERY SPARE PARTS

DISTRIBUTORS OF SLONE P V C PIPES
AGENTS OF CEYESTA MATRESS

AUTHORIZED AGENTS FOR:

- BUILDING MATERIALS CORPORATION

192, Main Street – Trincomalee.

Phone: 580



எல்லாம் வல்ல இறைவன் அருளால்
உலக இந்து மகாநாடு இனிதே நடைபெற
எங்கள் வாழ்த்துக்கள்!



சர்மிலாஸ்



SHARMILAS
166 J, Third Cross Street
COLOMBO - 11

எமது நல் வாழ்த்துக்கள்

டொலர் ஏஜென்சி

பலசரக்குச் சாமான்கள்
சில்லறை - மொத்த விற்பனையாளர்.
129, 131, 137, மத்திய வீதி,
திருக்கோணமலை.

DOLLAR AGENCIES

WHOLESALE AND RETAIL MERCHANTS.
DISTRIBUTORS OF DOLLAR SOAP AND DOLLAR BAR SOAP.
129, 131 & 137, Central Road,
Trincomalee.

Phone: 336 253

With Best Compliments of



ஆதவன் டெக்ஸ்

ATHAVAN TEX

WHOLESALE AND RETAIL TEXTILES DEALERS.

115/3, Central Road

Trincomalee.



With Best Compliments of

A. Sridhar Rao B. Com.

MADRAS.

உ

அகில உலக இந்து மாநாடு சிறப்புற வாழ்த்துகிறேம்!

அருணை & கம்பெனி

எங்களிடம்

சாலிடர், கிரவுன், டெலிராமா, வெஸ்டன், பாரத்
முதலிய டிவிகள்,
மற்றும்
பாலாஜி வெட்கிரைண்டர்
மொத்தமாகவும் – தவணை முறையிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

அருணை & கம்பெனி
340 - T. H. ரோட்
சென்னை - 21
Phone: 552728, 553644, 844251, 552528

WITH BEST COMPLIMENTS FROM:



SRI MEENAKSHI TIMBER DEPOT

Timber Merchants.

No. 23, E & F, 118, West Perumal Maistry Street,
MADURAI - 625 001.

Phone: 26144

அகில உலகிலும் ஆத்மஜோதியின்
அரிய சமயசேவைக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

Rajeswari Jewel Paradise

QUALITY JEWELLERS.
22/119, North South Road,
2nd Floor - K. K. Block,
COIMBATORE-641 001.
Tamilnadu.

உ

சைவ சமயம் வளரவும்

அகில உலக இந்து மகாநாடு

சிறப்புற நடைபெறவும் வாழ்த்துகின்றேம்.

ஓம் நமசிவாய



ஸ்ரீ முருகன் ஜுவலரி

உரிமையாளர்: M. ராமலிங்கம் செட்டியார்

நிர். 34, கடைத்தெரு - சிதம்பரம்.

தமிழ்நாடு.

WITH BEST COMPLIMENTS FROM:

ARUNA SUGARS LIMITED

REGD. OFFICE:

'ARUNA CENTRE', 145, STERLING ROAD, MADRAS - 600 034

Telephone:
811841 (4 lines)

Telegram: 'ANUSHAM'
Telex: 041 - 650

FACTORY:

ARUNAPURAM, PENNADAM, R. S. 606 111, SOUTH ARCOT DISTRICT, TAMILNADU.

MANUFACTURERS OF WHITE CRYSTAL SUGAR OF I. S. S. D-30 AND E-30 GRADES

Aruna Sugars
in the service of the people.

ARUNA SUGARS at pennadam is one of India's foremost sugar factories to-day. As a 1250 tonne crushing capacity plant that went into commercial production in 1965, it can to-day crush 4000 tonnes of cane per day to produce about 360 tonnes of Crystal Sugar a day - absorbs the produce of over 12, 000 canegrowers - has a cane planting capacity of 30, 000 acres - emplayees nearly 1, 000 workers, skilled and unskilled - has generously contributed to the modernisation of the existing Government Hospital, while a new well - equipped hospital is coming up - has set up a well staffed English and Tamil Medium School - has developed veterinary hospital poultry and dairy farming - advances loans and provides credit facilities for transport, irrigation, fertilisers – has constructed better roads, a unique wireless system – helped develop subsidiary industries, workshops and cottege industries by educating agriculturists in the programme and scientific methods of cane farming - has actively encouraged cultural activities for the villagers.

And is thus totally involved with the progress of the people.

With best compliments of



S. SANTHOSA NADAR SON (FIRM)

No. 88, Nyniappa Naicken Street,
MADRAS - 600 003.

Phone: 37050



Mfrs. of SSN Brand Pure Aluminiumwares and Utensils.
Dealers in SSNF, Crown, Sun Brand Hindalium and Aluminium Anodized Utensils
and
Hawkins, Prestiege, Jewel Pressure Cookers, Tea Urns,
Elite Stoves and Water Filters.

Suppliers to:
Railways, Central and State Governments Defence Departments,
Hospitals, Hotels and Hostels.

YOUR VISIT IS EARNESTLY SOLICITED.

WITH THE BEST COMPLIMENTS OF



NEW COLLEGE HOUSE

No. 2, Town Hall Road,
MADURAI - 626 001.

Grams: "COLLEGE HOUSE"

Phone: 24311 - 5 Lines
Office: 27145

போலவும் இவர் சைவ சமயத்தை உலகில் நான்கு திசைகளிலும்பரப்ப வல்லவராவார்.

உற்சவ மூர்த்தி:

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் உலக ஞானம் நிரம்பப் பெற்று அருளாட்சி ஏற்ற ருளியது குறித்து 'உற்சவ மூர்த்தி' என்னும் பெருமை கிடைத்தது. பூர்வாசிரமத்தில் பத் திரிகைத் துறையில் பழுத்த அனுபவத்தால் இயல்பாகவே அமைந்திருந்த சொல்லாற்ற லும், எழுத்தாற்றலும் மென்மேலும் செழித்து வந்தன. முதுகலைப் பட்டமும் பெற் றார். புத்தருக்குப் பின் தோன்றிய புனித வாழ்வே என்று அதிசயிக்கும் வண்ணம் மடா லயங்களின் நற்றவப் பேற்றின் காரணமாக போக வாழ்வை நீத்து யோக வாழ்வை மேற் கொண்டார். தருமையில் விளைந்த ஞானத்தை அறுவடை செய்து, அருள் மேகம் மழை பொழிய வந்ததுபோல மதுரையில் திருஞான சம்பந்த சுவாமிகளது அருட்பீடத் திற்கு இளவரசாக 291-வது குருமகாசந்நிதா னம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் 1975ல் இறைவனது திருநோக்கம் நிறை வேற்றி வைக்கப் பெற்றது. தாமும் சிறந்த சைவ சித்தாந்தியாகத் திகழ்ந்து தமக்குப் பின்னர் அருளாட்சி புரிய இருக்கும் இளவரசு சுவாமிகளையும் சைவசமய சாத்திரங்களில் தேர்ச்சியும் தெளிவும் பெற வைத்ததை இப் போதும் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம் பந்ததேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் அருட்சொற்பொழிவுகளின் மூலம் நன்கு உணரலாம். ஆங்கிலத்தில் மிக்க புலமையு டைய சுவாமிகட்கு அமெரிக்க நாட்டுச் சந் நியாசிகளும் பக்தியைக் காட்டி வருகிறார்கள். நிகரற்ற முறையில் இந்துசமயம் மேன்மைய டைய வாய்ப்பை இவரது அருளாட்சி நல்கி டும் எனத் தமிழுலகமும் அறியும்.

ஆதீனத்தின் அருட் பணிகள்:

ஞாயிறுதோறும் மதமாற்றம் செய்து வருகிற ஓர ஆதீனம் இந்த ஆதீனந்தான். 15000 பேர்களுக்கு மேற்பட்ட பிற மதத்த வர்கள் இந்துக்களாக மாற்றப்பட்டுள்ளார் கள். இந்து மதத்திற்கு ஆபத்து வருகிற சூழ் நிலையிலும் மிக்கத் தீரமுடன் செயலாற்றி வரும் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் நமது சைவ சமயப் பெருமைகளை நிலைநிறுத்தி வெளி உலகிற்கும் எடுத்துச் செல்ல இருப்பது தமிழகத்தின் பேறு மட்டுமின்றி இந்திய மண் ணிற்கும் ஒரு தனிப் பெருமையாகும். கூட்டு வழிபாடு, அருட்சொற்பொழிவு, அடியவர் அரவணைப்பு முதலான சீரிய அருட்பணிகளை இடையீடின்றி செய்து வருகின்றது. இது போன்று சிறப்புமிக்க பின்னணியைக் கொண்டு இப்போதைய ஆதீனகர்த்தர் அவர் களால் ஒரு புதிய சகாப்தத்தையே சைவப் பெருமக்களும், ஏனைய அன்பர்களும் உரு வாக்க இருக்கிறார்கள் என்றால் அது மிகையா காது. ஆதீனத்தின் நலன்கருதும் அனைவரை யும் தமது குருவருளுக்கு ஆளாக்கிக் கொண்டு வருகிற ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்க ளைத் தமிழ்கூறும் நல்லுலகம் நாளும் துதி பாடிவரக் கடமைப் பட்டுள்ளது என்றே சொல்லலாம்.



'என்னை நிம்மதியாக இருக்க விடுங்களேன்' என்று ஒவ்வொரு குடும்பஸ் தனும் சத்தம் போட்டிருக்கிறான்.

நிம்மதி; அது தெய்வத்தின் சந்நிதி. துன்பம்; அது சைத்தானின் சந் நிதி. சைத்தானின் சந்நிதியில் இருந்து நீங்கள் தெய்வத்தின் சந்நிதிக்குப் போக விரும்புகிறீர்களல்லவா?

வாருங்கள்! உலகத்தின் மூலத்தைக் காண்பதற்கு முன்னால், துயரத் தின் மூலத்தைக் காணலாம். துன்பம் மொத்தத்தில் இரண்டு வகையாக வரு வது.

ஒன்று, மனிதன் தானாகவே கைகாலை மாட்டி இழுத்துக் கொள்வது; மற்றொன்று அவனுக்குச் சம்பந்தமில்லாமலேயே விதி விளையாடுவது.

— அர்த்தமுள்ள இந்துமதம்

நமது மதம்!

—சுவாமி விமலானந்தர்—
(தலைவர், சிவானந்த தபோவனம்-மதுரை)

உலகத்தில் தோன்றியுள்ள எல்லா மதங்களுக்கும் ஆதி மதமாகத் தோன்றியுள்ளது இந்து மதம். எப்பொழுது தோன்றியது என்பதை வரையறுத்துக் கூற முடியாது. சுமார் 40,000 வருடங்களாக நமது இந்து கலாச்சாரம் இவ்வுலகில் நிலவி வருவதாகச் சில ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்து மதம் எண்ணற்ற ரிஷிமுனிவர்களின் ஆத்மீக அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது, என்பதையும் சுமார் 48,000 ரிஷிமுனிவர்கள் இருந்தனர் என்பதையும் சரித்திர நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்துமதத்தின் ஆதி நூல்களான நான்கு வேதங்களும் இவ்வரிய ஆத்மீக அனுபவங்களின் தொகுப்பேயாகும். இவற்றை தொகுத்தருளியவர் ஆசாரியார் ஸ்ரீ வேதவியாசர். வேதங்களின் முக்கிய பகுதியாக அமையும் உபநிடதங்களே இந்து மதத்தின் தத்துவங்களை விளக்குகின்றன. இவ்வுயரிய தத்துவங்களே உலகில் தோன்றிய அத்தனை அறிஞர்களையும் பாரத நாட்டின்பால் ஈர்த்துள்ளன.

மூன்று வகையான மக்கட் பகுதியினரையும் இறை நிலைக்கு இட்டுச் செல்லும் பல்வேறுவழிகளைத் தெரிவிக்கும் நமது முன்னோர்கள் எண்ணற்ற நூல்களை இயற்றி அருளியிருக்கிறார்கள் எந்த ஒரு நூலைப் படித்தாலும் அது ஒருவனை உயர் நிலைக்கெய்த வழி காட்டும்.

ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அனைவரும் இறை நிலையை அடைய முடியும் என்று கூறுகிறது இந்துமதம். இந்து மதத்தில் ஜாதி வேற்றுமைகள் சமீபகாலத்தில் தோன்றியவைகளே என்பது ஆராய்ந்தால் புலனாகும். நமது ரிஷிமுனிவர்கள் எப்படியெல்லாம் தோன்றியுள்ளனர் என்பதைத் தெரிந்தவர்கள் இந்த ஜாதி வேற்றுமைப் பேச்சில் சற்றேனும் ஈடுபடமாட்டார்கள்.

மனிதனது நிலை அவனது மனத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை வலியுறுத்துகிறது இந்து மதம். ''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு என்கிறது தமிழ் மறை. ''மன ஏவ மனுஷ்யாணம் காரணம் பந்த மோக்ஷயோ'' என்கிறது சம்ஸ்கிருத வாக்யம்'

இந்த மன நிலையை உயர்த்துவதையே குறிக்கோளாகக் கொண்ட இந்து மதம் நான்கு பாதைகளை நமக்குத் தெரிவிக்கின்றன. கர்மம், பக்தி, ஞானம், யோகம் எனும் நான்கினுள் எதை ஏற்றுக் கொண்டாலும் ஒருவன் உயர் நிலையை அடையலாம் என்கின்றனர் சான்றோர்.

அனைத்து வேதங்களுடையவும் சாரமாக அமையும் ஸ்ரீமத் பகவத் கீதை இந்த நான்கு யோகங்களையும் மிகத்தெளிவாகத் தெரிவிக்கின்றன. இந்து மதத்தின் ஒப்பற்ற நூலாகவும், சாக்ஷாத் எம்பெருமானே ஸ்ரீ கிருஷ்ணனாகத் தோன்றி அருளிய நூலாகவும் கருதப்படும் ஸ்ரீமத் பகவத் கீதையை நன்கு கற்றுத் தெரிந்து கொண்டவர்கள் இந்து மதத்தின் ஒப்பற்ற பெருமையை நன்கு உணர்ந்து கொள்வார்கள். எண்ணற்ற உரைகளை, எத்தனையோ மொழிகளில், எண்ணற்ற மகான்களால், ஆக்கப்பெற்றுத் திகழும் ஸ்ரீமத் பகவத்கீதை மகாத்மா காந்திஜி, வினோபா பாவேஜி, மற்றும் பல் வேறு நாட்டின் தலைவர்கள் அனைவராலும் பூஜிக்கப்பட்டு வந்துள்ளதை நாம் அறிவோம்.

'All About Hinduism' என்ற தமது நூலில் குருதேவர் சிவானந்த சரஸ்வதி அவர்கள் நமது இந்து மதத்தின் பெருமையை மிக அருமையான முறையில் தெரிவித்திருக்கிறார்கள் "Hinduism provides Spiritual food and yoga is eminently practical In no religon will you find such a Variety of yoga practised, and such sublime unique philosophy expourded", என்கிறார் குருதேவர் சிவானந்தர்.

சைவம், வைணவம், சாக்தம், கௌரம், கௌமாரம், காணபத்யம் போன்ற பல் வேறு வழி பாட்டு முறைகளைக் கொண்டுள்ள இந்து மதம் இவ்வனைத்தினுடையவும் அடிப்படையாக அமையும் உயரிய வேதாந்ததத்தைத் தனது சாரமாகக் கொண்டுள்ளது. அருவமாக இருக்கும் இறைவன் உருவமாகவும் வர முடியும் என்பதை நமது மதம் போதிக்கிறது ஆனால் இந்துக்களின் லட்சியம் அனைத்திற்கும் அப்பாற்பட்ட சத்-சிதானந்த நிலை என்பதைத் தெளிவாக அறியலாம்.

இந்துமத வேதாந்த நூல்கள் அனந்தம். மனிதன் எண்ணனம் இறைவனாகவே ஆகிவிட முடியும் என்பதை வேதாந்தம் தெரிவிக்கிறது. தத்துவம் அஸி என்ற மஹா வாக்கியங்கள் மூலம் அனைவரையும் இறை நிலைக்கு இட்டுச் செல்லும் இணையிடற்ற மதம் இந்து மதம்.

மதங்களும்-மக்கள் சமுதாயமும்

— ரா. சு. கோமதிநாயகம், ''அசோகன்'' 146, பாரதி சாலை, சென்னை-600014. —

மனக் கவலையை மறப்பதற்கு மனிதர்களுக்கு உதவுபவை மதமும், தெய்வ நம்பிக்கையுமே என்பது பெரும்பாலோரால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்க்கல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது''

என்றார் திருவள்ளுவர்.

''அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்'' என்று இக்குறளுக்குத் தெளிவுரை எழுதியுள்ளார் டாக்டர் மு. வரதராசனார்.

''மதம் மனிதர்களுக்கு அபின்'', ''மதம் மனிதர்களைச் சோம்பேறிகளாக ஆக்கிவிடுகிறது'' என்று கூறுபவர்களும் உளர். பிரார்த்தனை ஒருவனைத் தன்னலவாதியாக ஆக்கிவிடுகிறது. தனது நலத்திற்காகச் சதா பிரார்த்தனை செய்யும் ஒருவனைப் பிறர் நலம் பற்றிச் சிந்திக்கவொட்டாமல் செய்கிறது மதம். மதச் சிந்தனைகளிலும், இறைவனை நினைப்பதிலும் செலவிடும் காலத்தை மக்கள் நலனுக்காகச் செய்யும் சேவைகளுக்குச் செலவிடலாம் என்று வாதம் புரிவார்கள் அவர்கள்.

இவை தவறான கொள்கைகள் ஆகும். மத அடிப்படையில் கட்டுப்பாடாக வாழ்பவன், தான் தனது என்ற அகந்தையை அகற்றிவிடுகிறான். மதமும் அது காட்டும் தன்னடக்கமும்தான் பிறவிப்பிணி அகற்றும் மருந்து. இன்பமும், துன்பமும் தான்பெற வருமே என்பது உண்மை. இதை உணர்ந்த ஞானி சமூகசேவையில் ஈடுபடாவிட்டாலும், சமுதாயத்திற்குப் பெரிய நன்மையைச் செய்கிறான். அப்படிப்பட்ட ஒரு ஞானியைப் பார்த்தாலே மனச்சாந்தி ஏற்படுகிறது. நல்லாரைக் காண்பதுவும் நன்று. அத்தகைய ஞானி ஆத்மநலனுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறான்.

எல்லாவற்றையும் பகவானிடம் ஒப்படைத்துவிட்டேன் நான் எதையும் செய்யப் போவதில்லை எனச் சொல்லி சோம்பி இருப்பவன் தன்னைத்தானே முட்டாளாக்கிக் கொள்கிறான். தனக்கு உதவுபவனுக்குத்தான் கடவுள் உதவுகிறார். ஒரு மதவாதி கடவுளுக்குப் பயந்து தன் கடமையைச் செய்கிறான். தீமை செய்யத் தயங்குகிறான்.

எல்லா மதங்களும் செயலையும் சேவையையும் வலியுறுத்துகின்றன. ''அன்பர் பணி செய்ய ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே!'' என்றார் தாயுமானவர்.

மனித வாழ்வு கடவுள் அளித்துள்ள ஒரு ஒப்பற்ற பரிசு. அது மனித உடல் செய்யும் புனித யாத்திரை என்கிறது கீதை. பற்றற்ற நிலையில் பணி ஆற்றுவோன் பகவானை நெருங்க முடிகிறது; சிரத்தையுடன் தன்னலம் கருதாது ஒரு பணியில் ஈடுபடுபவன் சிறந்தவனாகின்றான். ஏனெனில் அந்தப் பணி மூலம் அவன் பகவானை எல்லாவற்றையும் இயக்கி, எல்லாவற்றிலும் நிறைந்துள்ள இறைவனை வழிபடுகிறவன் ஆகிறான் என்கிறது அது.

சுவாமி விவேகானந்தர், 'கர்மயோகம்' என்ற தனது நூலில், ''ஒருவன் வேதநூல் எதையும் கல்லாதவனாக இருக்கலாம். கடவுளை நம்பாதவனாக இருக்கலாம். அவன் வாழ்நாள் முழுவதிலும், ஒரு முறைகூட இறைவனைப் பிரார்த்திக்காதவனாக இருக்கலாம். இருந்தாலும், அவன் நன்மைகள் செய்பவனாக இருந்தால், பிறருக்காகத் தன் உயிரையும் தியாகம் செய்யத் தயாரானவனாக இருந்தால், அவன் ஒரு மதவாதி தனது பிரார்த்தனை மூலமும் தத்துவம் மூலமும் அடையும் நிலையை அடைபவனாகிறான் என்று எழுதியிருக்கிறார்.

எல்லா வேலைகளையும், அத்தகைய வேலைகளில் ஈடுபட்டிருப்போரையும் மூன்று பிரிவுகளாக அதாவது சாத்வீகம், ராஜசம் மற்றும் தாமசம் என்று பிரிக்கலாம் என்கிறது கீதை.

''ஒரு ஆணை அல்லது பெண்ணை மிகுந்த பக்தி சிரத்தையுடன் என்னை வழிபட்டுத்

தன்னலம் கருதாமல் அவர்களது பணியில் ஈடுபட்டால் அவர்கள் சாத்வீக குணம் உடையவர்கள் ஆவர். பொன் வேண்டும், பொருள் வேண்டும் அவற்றை நீ எனக்கு அருள வேண்டும் என்று என்னைப் பிரார்த்திப்பவர்கள் ராஜசகுணம் உடையவர்கள் ஆவர். மற்றவர்களுக்குத் தீங்கு நேர வேண்டும் என்று என்னிடம் பிரார்த்திப்பவர்கள் தாமச குணம் உடையவர்களாவர் என்று கிருஷ்ணன் சொல்வதாக பாகவதம் கூறுகிறது.

நியாயத்தையும், சமதர்மத்தையும் தான் கிறித்துவ மதமும் வலியுறுத்துகிறது. அதை விளக்கும் கதை இது.

''பணக்கார இளைஞன் ஒருவன் கிறிஸ்துவிடம் வந்தான். 'பிரபுவே, நான் மோட்ச சாம்ராஜ்யத்தை அடைய விரும்புகிறேன். அதை நான் எப்படி அடைவது? அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான்.

'உனக்கு எனது பத்துக் கட்டளைகள் தெரியுமல்லவா? அவற்றைப் பின்பற்றி நட. திருடாதே! கொலை செய்யாதே! என்றார் இயேசு.

'எனக்குப் பத்துக்கட்டளைகள் தெரியும். நான் அவற்றைப் பின்பற்றுகிறேன். மனதறிந்து எந்தப்பாவமும் செய்ததில்லை நான். இருந்தாலும் எனது ஆத்ம தாகம் அடங்கவில்லை'' என்றான் இளைஞன்.

இயேசு சொன்னார் 'நீ பெரும் பணக்காரன். உன்னிடம் பல சொத்துக்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் விற்று விடு. அப்படி விற்பதால் வரும் பணத்தை ஏழைகளுக்குக் கொடு. அதன் பின் என்னை வந்து பார்.'

பெரும் பணக்காரனை அந்த இளைஞனுக்கு அவனதுசொத்துக்களின்மீது அளவற்ற ஆசை. எனவே அவன் அவற்றை விற்க விரும்பவில்லை.

எனவே இயேசு சொன்னார், ''ஒரு ஒட்டகம் ஊசிக்காதில் நுழைந்தாலும் நுழையலாம். ஒரு பணக்காரன் மோட்சத்தில் நுழையமுடியாது.''

மக்கள் நன்மைக்காக சேவை புரிவது மகத்தானது. மக்கள் சேவையே மகேசன் சேவையாகும். எல்லா மதங்களும் தன்னலமற்ற புனிதமான சேவையையே வலியுறுத்துகின்றன.

''எங்கள் மதம் பெரியது, உங்கள் மதம் சிறியது என்பது போன்ற குறுகிய கொள்கைகள் கைவிடப்பட வேண்டும். உலகில் நிலவுகின்ற எல்லா நல்லவையும் பெரியவையுமான கொள்கைகளையும், வருங்காலத்தில் மேலும் விரிவடையத்தக்க சிந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தைச் சார்ந்த நல்லவைகள் அனைத்தும் பாதுகாக்கப்படவேண்டும். இருக்கின்றவற்றோடு, இனி வருகின்றவற்றையும் சேர்த்துக் கொள்ள கதவுகளைத் திறந்துவைத்திருக்க வேண்டும். மதங்கள் (இவற்றில் விஞ்ஞானமும் சேர்த்திதான்) புதியனவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒன்றை மற்றொன்று வெறுப்போடு பார்க்கக்கூடாது. ஒவ்வொரு மதத்தினுடைய கடவுள் கொள்கையும் ஒவ்வொரு மாதிரியானதாக இருக்கலாம். என்னுடைய வாழ்க்கையில் அநேக உன்னத ஞானிகளையும், உண்மையானவர்களையும் சந்தித்திருக்கிறேன். அவர்கள் கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள், அதாவது நாம் நம்புகிற விதத்தில் கடவுளை நம்பாதவர்கள். ஆனால் நாம் கடவுளைப் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தைவிட அதிகமாகக் கடவுளை அறிந்தவர்கள். கடவுளைப் பற்றிய தனிப்பட்ட கொள்கை, ஒழுக்கவிதிகள், லட்சிய மனிதன் பற்றிய சிந்தனை எல்லாம் மதம் என்ற பெயரில் உருவாகியுள்ளன'' என்கிறார் விவேகானந்தர்.

''கடவுள் எங்கும் எதிலும் உளன். உலகம் முழுவதிலும் அவனது சொரூபம். தனக்கெனச் சேமித்து வைப்பது இன்பம் அல்ல. அடுத்தவருக்கு உதவுவதே இன்பம். நிலையற்றதும், அழியக்கூடியதுமான பொருள்களின் மீது பற்றுவைப்பதுதான் துன்பத்திற்கெல்லாம் வித்து. பற்றற்ற நிலையே பரமானந்தம் நல்குவது'' என உபநிஷத வார்த்தைகளைப் பின் பற்றி வாழ்வதே உண்மையான மகிழ்வூட்டும் மதம் ஆகும். மக்கள் சமுதாயத்துக்கு உதவுவது ஆகும்.

தமிழில் தத்துவ மணிகள்

— டாக்டர். ஏ. என். பெருமாள் —
(பேராசிரியர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்-சென்னை)

இறையன்பு:

இறையருளை அறிவுநிலையில் ஆய்ந்து உலகவியல்புக்குத் தக்கவாறு உணர்த்திக் காட்டும் உன்னத சமயமாக இந்துமதம் விளங்குகிறது. அறிவுக்கு அப்பாற்பட்ட அரிய தத்துவங்களை இயன்ற அளவு எளிய முறையில் இந்து சமயம் விளக்கிக் காட்ட முயல்கிறது. இறைவனுக்கு உவமை சொல்லமுடியாது என்பது ஆன்றோருடைய கருத்து. நிகரில்லாத் தன்மையும், அளப்பரிய சிறப்பும், ஓதுதற்கரிய உயர்வும், உணர்வதற்கியலா ஆற்றலும் ஒப்பற்ற பெருமையும் உடைய இறைவனுக்கு உவமை கூறுவது இயலாத காரியமாகவே உள்ளது. தத்துவஞானம் மிக்க அன்பர் ஒருவர் ஆண்டவனை ஓர் உவமை வாயிலாக விளக்க விரும்புகிறார்.

உண்மையான அன்பு ஊறிவழியும் உலகியல் ஆற்றல் எதுவென காணின் அதுவே இறைவனுக்குப் பொருந்தும் உவமை என்பது அவருடையகருத்து. இறைவனேமாசற்ற அன்பின் நிலைக்களம் என்ற உறுதியுடன் உவமை காணத் துடிக்கிறார். அவர் நினைத்த அளவு அன்பு நிறைந்த பொருளை இந்த உலகில் காண இயலவில்லை. ஆகையினால் கூடியவரையிலும் மிகுதியான அன்பை உண்மையாகக் காட்டும் ஒன்றைத் தன் அனுபவத்தின் மூலம் தெரிந்தெடுத்து, அதைவிடவும் சிறந்த அன்புடையவன் ஆண்டவன் என்று கூறிவிடுகிறார்.

இறைவன் ''பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து'' அருள் செய்யக் கூடியவன் என்பது அந்தப் பெரியாரின் கருத்து. தாயன்பு மிகச் சிறந்தது. அதிலும் அவள் தனது குழந்தையை மடியில் தாங்கி அதனுடைய நோயற்ற நல்ல வளர்ச்சியை மனதில் நினைத்து அன்புடன் பாலூட்டும் நிலையே சாலச் சிறந்தது. அத்தகைய அரிய நிலையுடைய தாயன்பை விடவும் மிகவுயர்ந்த அருள் தன்மையுடையவன் ஆண்டவன் என்பது அதில் அடங்கியுள்ள ஆழமான பொருளாகும்.

இத்தகைய உயரிய கருத்தை உலகுக்கு வழங்கிய உத்தமனைப் பற்றிச் சிந்திப்பது நன்று. தீமையைப் போக்கி நன்மையை நிலை நாட்டத் துணிந்த பெரியார்கள் பலர் தோன்றியுள்ளனர். அவர்களில் ஒருவரான புத்தர் அரச பதவியைத் துறந்து அரசமரத் தடிக்கு வந்துவிடுகிறார். அங்கு அவருக்கு ஞானஒளி கிடைத்தது. அதே போன்று தென் பாண்டிய நாட்டில் அமைச்சர் பதவியிலிருந்த ஒருவர் ஆலமரத்தடியில் ஞான குருவைக் கண்டு அவரிடம் அறிவுரையும் ஆன்மீகவுரையும் கேட்டு ஞானநிலை பெற்றார்.

அதன் பயனாக உலகத்தின் உண்மைகளை உணர்ந்தார். மெய்ஞ்ஞான வுணர்வில் இறைவனைக் கண்டறிய முற்பட்டார். அவர்தான் திருவாசகம் தந்த மணிவாசகப்பெருமான். அவரே, இறைவன் அன்புருவானவன் என்று உணர்ந்து அதை மேற்கூறிய உவமை வாயிலாக விளக்க முயன்ற இந்து சமயக் குரவர். அவர் தந்த உவமையின் வாயிலாக 'அன்பே சிவம்' என்ற இந்து சமயக் கொள்கை மிகச் சிறப்பாக விளக்கப்படுவதைக் கண்டு மகிழலாம்.

அருளலும் அழித்தலும்:

நன்மையைக் காத்தல், தீமையைக் கடிதல் என இரு வேறுபட்ட தன்மைகள் உண்டு. அருளல், அழித்தல் எனவும் இவற்றைக் கூறலாம். இத்தகைய இருவகையான ஆற்றல்கள் இறைவனுக்கு இருப்பதை இந்து சமயம் விளக்கிக் காட்டும். உலகம் நிலைத்திருக்க வேண்டுமானால் இத்தகைய எதிர் ஆற்றல்கள் இயக்க நிலையில் இருத்தல் வேண்டும். சங்கப் புலவரில் ஒருவரான கபிலர் ஒரு குறிஞ்சிக் கலிப்பாடலில் இந்தக் கருத்தைக் குறிப்பாகக் கூறுவதைக் காணலாம்.

கயிலாய மலையிலிருக்கும் இறைவனை 'இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்' என்று அவர் விளக்குகிறார். இறைவன் இமயமலையை வில்லாக வளைத்து முப்புரத்தை அழித்த தன்மையினையும், கங்கையாற்றைச் சடையில் தாங்கி உலகத்திற்கு அருளும் தன்மையினையும்

இந்தத் தொடரின் வாயிலாகக் கபிலர் குறிப்பிடுகின்றார்.

முப்புரங்களை அழித்தல் என்பதில் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களின் சிதைவையும் உலகத்துக்கு அருளல் என்பதில் நானிலம் செழித்து மக்கள் வாழ்வாங்கு வாழ்வதையும் மறைபொருளாக்கி, புலவர் இறைபொருளை இசைவாக விளக்க முயல்வதை அறியலாம். 'முப்புரமாவது மும்மலக் காரியம்' என்ற திருமூலருடைய வாக்கையும் இந்த இடத்தில் பொருத்திக் காணலாம். இதே போன்று சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ ஓரிடத்தில் இறைவனின் இருவேறு ஆற்றல்களையும் இணையாகக் கூறிச் செல்வதைப் பார்க்கலாம்.

திருவேங்கட மலையில் பெருமாளின் நின்ற கோலத்தை நிறைவான ஓர் உவமையின் வாயிலாகக் கூறுகிறார்.

''வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோன் நின்ற வண்ணமும்''

(சிலம்பு, காடுகாண் காதை, வரிகள்: 41-51)

என்ற பாடலில் திருவேங்கட நாதனின் தோற்றம் செவ்வனே விளக்கப்படுகின்றது. அது 'நன்னிற மேகம் நின்றது போலத்' தோன்றுகிறது. உலகத்துக்கு வளம் தருவது மேகம். நிலம் விளைந்து நாடு நலம்பெற ஏதுவான மேகம் இங்கே இறைவனுக்கு உவமை ஆகிறது. அவனுக்கு இருபக்கத்திலும் ஞாயிறும் திங்களும் போன்று சக்கரமும் (ஆயுதம்) சங்கும் (பஞ்ச சான்யம்) தோன்றுகின்றன. சக்கரம் சுடுகின்ற சூரியனைப் போன்றும் சங்கு தண்மையான சந்திரனைப் போன்றும் காணப்படுகின்றன. இவ்வாறு ஆசிரியர் கூறுவது நமது சிந்தனைக்கு நல்ல விருந்தளிக்கிறது. சக்கரத்தைப் 'பகையணங் காழி' என்றும் சங்கைப் 'பால்வெண் சங்கம்' என்றும் கூறுவது மேலும் எண்ணுதற்கு உரியது. முன்னது அழித்தலையும், பின்னது அருளலையும் குறிப்பிடுவதைக் கண்டு உணரலாம். இறைவனது தொழிலாற்றல், அருளாற்றல் ஆகிய இரண்டையும் குறிப்பனவாக ஆழியும் சங்கும் வந்துள்ளன. அவை ஞாயிறு, திங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டுள்ளன. சங்க காலத்துக் கபிலரின் குறிப்புடன் இளங்கோவின் கருத்தையும் பொருத்திக் காண்பது நலம். திமைக்கு அழிவும், நன்மைக்கு இறைவனின் அருளும் உண்டு என்ற இந்து சமயக் கொள்கை இவற்றுள் நன்கு உணர்த்தப்படுவதாகக் கருதலாம்.

ஆலமுண்டு அமுதளித்தல்

ஆலம் (நஞ்சு) உண்டு கறுத்த நீலகண்டனைப் பற்றிய குறிப்பு சங்கப் பாடலில் காணப்படுகிறது. அதியமான் என்ற குறுநில மன்னனை ஔவையார் பாராட்டிப்பாடும்போது,

'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே'

(புறநானூறு பாடல்: 91)

என்று கூறுவதைப் பார்க்கலாம். இதில் பால் போன்ற வெண்ணிறமுடைய பிறைச் சந்திரனைத் தலையில் அணிந்த நீலமணி போன்று கறுத்த கண்டத்தை உடைய 'ஒருவன்' என்று சிவபெருமான் குறிப்பிடப்படுகிறார். நஞ்சுண்டு கறுத்த கண்டத்துக்குத் தனிச்சிறப்பு இருப்பதினால் அதனை ஔவையார் குறிப்பிட்டுக் கூறுவதாகக் கருதலாம்.

சாவா மருந்தாகிய அமுதத்தை எடுக்கத் திருப்பாற் கடலைக் கடையும்போது சாவைத் தரும் கொடிய நஞ்சு தோன்றுகிறது. அனைவரும் அஞ்சி நடுங்கி ஆண்டவனைப் பணிகின்றனர். உடனே, இறைவன் அடிபணிந்தவர்களைக் காக்க நஞ்சைத் தானே உண்ணுகின்றான். உமாதேவியின் பிடியால் நஞ்சு இறைவனின் கண்டத்தில் தங்கி அவனை நீலகண்டனாக்கி விடுகிறது. இது கதை.

இந்தக் கதை அறிவிக்கும் தத்துவம் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்கு ஒரு சிறந்த விளக்கமாக மாணிக்கவாசகப்பெருமான், திருவாசகத்திலுள்ள 'நீத்தல் விண்ணப்பம்' பகுதியின் இறுதிப் பாடலில் கூறியுள்ள கருத்து மேலும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுவதாகும். இறைவனை நோக்கிப்பாடும் அந்தப் பாடலில்,

''சிற்றுயிருக்கு இரங்கி ஆலமுண்டாய்
அமுதுண்ணக் கடையவனே''
என்று மாணிக்கவாசகர் பணிந்து உருகுகிறார்.

உலகத்தில் தோன்றியுள்ள அனைத்து உயிர்களும் சிறந்து வாழவேண்டும் என்ற அருள் எண்ணத்துடன் ஆலமுண்டவன் ஆண்டவன். அமுது உண்ணுவதற்கு அவன்தான் இறுதியானவன். பிள்ளைகள் நல்ல உணவை நன்றாக உண்டல்லாமல், தாய் உணவு அருந்த மாட்டாள். அவளுடைய தாயுள்ளம் முன்னருந்தி தான் மகிழ ஒருநாளும் நினைக்காது. இறைநிலையும் இந்நிலையே என்பதை 'நஞ்சுண்டு கறுத்த கண்டம்' உணர்த்துவதாகக் கூறலாம். இத்தன்மை அருளாற்றலின் அடிப்படையில் முகிழ்த்தது.

தலை ஓட்டில் பிச்சை ஏற்றல்

இடைக்காலத்தில் வாழ்ந்த காளமேகப் புலவர் எள்ளல் சுவையுடன் பாடுவதில் வல்லவர். அவர் முருகனை எள்ளிப் பாடும் போது 'அப்பன் இரந்துண்ணி' என்று கூறுகிறார். சிவபெருமான் தலையோட்டைக் கையில் ஏந்தி வீடுவீடாகச் சென்று இரந்து உண்டார் என்பது கதை. இறைவன் மனிதனின் தலையோட்டில் பிச்சை எடுத்தான் என்று நினைக்கும் போதே ஒருவிதமான கழிவரல் உணர்வே முதலில் தோன்றும். ஆனால், ஆழ்ந்து நோக்கும் போது அரிய கருத்து பொலிவுடன் பிறப்பதைக் காணலாம்.

தலை ஓடு மனிதன் அழிவைக் குறிப்பது. அனைத்து மனிதரும் அழியக் கூடியவர் என்பதை முதலில் இது உணர்த்துகிறது. பின்னர் நிலைக்கக் கூடியது விளக்கப்படுகிறது. அதுதான் இறைவன் ஏற்கும் பிச்சை. இந்தப் பிச்சையானது மனிதன் தன் வாழ்வில் செய்யும் அறச்செயல்களைக் குறிப்பிடுவதாகக் கருத வேண்டும். அறத்துக்கு அழிவில்லை. அதை இறைவன் ஏற்றுக் கொள்கிறான். அழிவைக் காட்டி அறத்தின் சிறப்பை உணர்த்தும் உயர்ந்த தத்துவமாகத் தலை ஓட்டில் பிச்சை எடுத்த கதையைக் கூறலாம்.

நிறைவுரை:

இவ்வாறு, தத்துவக் கருத்துக்கள் நிறைந்த கதைகள் இந்து சமயத்தில் மிகப் பலவாக உள்ளன. அவை அனைத்தும் உருவக அமைப்பு உடையவை. உட்பொருள் நிரம்பியவை. குறிப்புகளைக் காட்டி குன்றுபோல் பெருங்கருத்துக்களை திரட்டித் தருபவை. சிந்தித்து உணர்வோருக்குச் சிறந்த பொருள்களை அள்ளியள்ளித் தரும் இயல்புடையவை. இத்தகைய அரிய தத்துவ மணிகளைத் தமிழ் இலக்கிய பேழையில் நிரம்பக் கண்டு மெய்ஞ்ஞான அறிவை மிகச் சிறப்பாகப் பெருக்கலாம்.

★

அவன் பணக்காரனை ஏழையோ, காசினி எங்கும் புகழ்பெற்றவனை, காதவழிகூடப் பெயரில்லாதவனை,-எவனாக இருந்தாலும் அவனவன் உள்ளத்திலும் ஒரு நெருப்பு எரிந்து கொண்டே இருக்கிறது.

அந்த நெருப்பின் ஜ்வாலை கூடலாம், குறையலாம் - குறைந்தபட்சம் புகை மண்டலமாவது மண்டிக்கிடக்கிறது.

ஒவ்வொரு நெஞ்சிலும் ஏதேனும் ஒருவடுவிழுந்திருக்கிறது.

ஒவ்வொரு முதுகிலும் ஏதாவது ஒரு ஊமைக்காயம் இருக்கிறது.

ஒருவேளையாவது மனிதனின் மூச்சு அனல் மூச்சாக இறங்குகிறது.

ஒவ்வொரு மனிதனும் மரணத்தைப்பற்றி ஒருமுறையாவது சிந்திக்கிறான்.

— அர்த்தமுள்ள இந்துமதம்

இந்து

—சுவாமி கெங்காதரானந்தா—
(திருக்கோணமலை)

பழமையிலும் புதுமையிலும் புகழ் பூத்து நிற்கும் இந்து என்ற நிறை வசனம் பூர்வீக காலத்திலிருந்தே உலகப் பேரறிஞர்களை வெகுவாகக் கவர்ந்து வந்திருக்கின்றது. அறிவு மண்டலத்தில் பலவாறான விமர்சனங்களுக்கும் கேந்திர பிந்துவாயிருக்கின்ற இச் சொல் அனேக கால கட்டங்களில் பல வர்க்கங்கள் மதங்கள் நாஸ்திகம் போன்றவைகளின் கடும் தாக்கங்களை ஏற்க வேண்டியிருந்தது. அத்தகைய தாக்கங்களுக்கிடையிலும் சமுத்திர அலைகள் மத்தியில் அசைவற்று நிற்கும் கருங்கல் பாறை போன்று இன்றும் உலக வியாபக ரீதியில் அது தலைநிமிர்ந்து நிற்கின்றது. தோன்றியும் தோன்றுமலுமிருக்கின்ற சகல தர்மங்களையும் சகல சாஸ்திரங்களையும் உள்ளடக்கி நிற்கும் இந்து என்ற பதத்திற்குச் சரியான அர்த்தமென்ன? அது யாரை அல்லது எதைக் குறிக்கின்றது.

"ஹீனம் துஷ்ய தீதி ஹிந்து" அதர்மங்களை ஒழிக்கின்றவன் இந்து". ஹிம்ஸாம்தமய நீதி ஹந்து" ஹிம்சாபரமாய சகல கருமங்களையும் நீக்கி ஜீவிகளை ஏகாத்ம பாவனையுடன் பார்க்கின்றவன் ஹிந்து. "ஹிம்ஸந்தி தர்மோ நிதி ஹிம் ஸா" சனாதன தர்மங்களுக்குக் கேடு விளைவிப்பவரை ஒடுக்கி விடுகின்றவன் ஹிந்து இந்து என்ற சொல்லுக்கு இந்துமத சாஸ்திரங்களில் இப்படிப்பட்ட அர்த்தங்களைக் காணக்கூடியதாயிருந்தாலும் அவையொன்றும் அதன் பொருளைச் சம்பூரணப்படுத்துவதாயில்லை. காரணம் அதன் உட்பொருள் வசனாதீதமானது. ஆத்மானுபூதியால் மாத்திரம் உணரக் கூடியது. அது மட்டுமல்ல இந்து என்ற பதப் பிரயோகத்தின் ஆரம்ப காலம் இது வரையில் அனுமான நிர்ணயமாயிருப்பதைத் தவிர சரியான கால நிர்ணயம் நிச்சயிக்கப்படவில்லை. நீண்ட காலமாகப் பௌதிக ஆத்மீக அனுபவங்களிற் கூடி வளர்ந்து வந்த இந்து மதம் அகண்ட பிரபஞ்ச சாராம்சங்களைத் தன்னகத்து அனுபூதிமயமாக்கிய ஒரு சர்வக்ஞான கலசம். இதுவரை காலமும் தோன்றியிருக்கின்ற சகல ஆத்மீக பௌதீக ஒளிகளும், சகல மதங்களுடைய அடிப்படைச் சித்தாந்தங்களும் இந்துக்களுடைய வேதாந்த தரிசன சாஸ்திரம் என்ற மணிவிளக்கிலிருந்து கொளுத்தியெடுத்த சுடர்களென்பது வெளிப்படையான ஒரு சத்தியமாகும். வேதாந்த தரிசனங்களிற் பரவலாகக் காணும் பொருளாதார சமத்துவ சித்தாந்தங்களுடைய ஒரு பிராகிருதபாவம் மாத்திரந்தான் மார்க்ஸீச தத்துவமென்பதைக்கூட நீங்கள் அறியும் பொழுது வியக்கக் கூடும். வேதாந்த தரிசன சாஸ்திரங்களைத் தவிர மற்றதொரு சாஸ்திரங்களும் சம்பூரணமானவையல்ல. வேதாந்த தரிசனங்களில் காணும் அந்தர்முக சத்தியங்களை ஏற்காத நவீன சாஸ்திரங்களும் பூரணப்படுவதில்லை.

சனாதன தர்மத்தை அனுசரித்து வாழ்கின்றவர்களெல்லாம் இந்துக்கள் என்ற நம்பிக்கை இந்துக்களிடம் பரம்பரை பரம்பரையாகவே இருந்து வருகின்றது. முற்றிலும் யதார்த்தமாயிருக்கின்ற இக்கருத்தில் ஹிந்துக்கள் முழுத் திருப்தி யுடையவர்களாயிருக்கின்றனர். ஆகையால் சனாதன தர்மந்தான் இந்து அல்லது இந்து மதம். சனாதனம் அல்லது என்றும் இருக்கின்ற தர்மம் என்பது இந்து சமுதாயத்தின் ஜீவித நிஷ்டையாயிருக்கின்ற படியால்தான் இன்றுவரையாதொரு உந்துதலும் இல்லாமல். இந்து கால வெள்ளத்தில் ஒழுகிப் போகாமல் இன்றும் மிதந்து நிற்கின்றது. சனாதன தர்மத்தின் மூல சக்திகள் உயிரினங்களுடைய நிலை பேற்றிற்கும், மானவ சமுதாயத்தினுடைய சேம நலத்திற்கும் அவ்வப்போது விலைமதிக்க முடியாத பலவற்றையும் ஈன்று கொடுத்திருக்கின்றது. இவைகள் உலக அரங்கில்இந்துக்களுக்கு நிலையானதொரு அந்தஸ்தை வழங்கிருக்கின்றன. நாம் நம்முடைய தர்மத்தைப் பற்றியும் கலை கலாச்சாரங்களைப் பற்றியும் பெருமையடைகின்றோம். எனினும் கண் மூடித்தனமாகப் பழையதெல்லாம் நல்லவையென்றும், புதியவையெல்லாம் தீயவையென்றும் கருதுவது சரியில்லை. இந்த இரண்டு வழிகளிலிருந்தும் விலகி மூன்றுவதொரு வழியிற் சிந்தனையைச் செலுத்த வேண்டும். பழையதிலும் புதியதிலும் நல்லவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து இரண்டும்கலந்ததொரு புதிய வெளிச்சத்தில் நடந்து செல்ல வேண்டும்.



உலக இந்து மகாநாடு
ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவருளால்
சிறப்புடன் நடைபெற
அன்புடன் வாழ்த்துகின்றோம்!

VASANTHAS

Singapore
Fashion
Centre.

NAWALAPITIYA.

வசந்தாஸ்

சிங்கப்பூர் பெசன் சென்டர்.
31, கம்பனி வீதி,
நாவலப்பிட்டி.

Phone: 405

வாழ்த்துகிறேம்!

உயர்தர பட்டு ஜவுளி
வாங்குவதற்கு சிறந்த இடம்

ஜோதி லெக்ஷ்மி விலாஸ்

எம்மிடம் – – –

★ காஞ்சிபுரம்
★ ஆரணி
★ கொள்ளேகாலம்
★ திருபுவனம்

பட்டு சேலைகளும், பட்டு பாவாடை & சோளி தினுசுகளும்
கைத்தறி & மில் ஜவுளி, மேட்டூர் மல்,
லாங்கிளாத் ரகங்களும் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்!

ஜோதி லெக்ஷ்மி விலாஸ்

D. வீரப்ப முதலியார்
ஜவுளி வியாபாரம்.
52, 53, தெற்கு வீதி - சிதம்பரம்.
தமிழ்நாடு.

WITH BEST COMPLIMENTS OF



ANANDHA STORES

DIRECT IMPORTERS

105, Bankshall Street,

Colombo - 11.

T'phone: 27643
Cable: VINAYAGAR

உ

நல் வாழ்த்துக்கள்!

நாணயத்தில், நம்பிக்கையில்
தொடர்ந்து 31 ஆம் ஆண்டு சேவை.

N. பாலசாமி செட்டியார் & சன்

ஜுவல்லரி.

22, கடைத்தெரு - சிதம்பரம்.

தமிழ்நாடு

WITH BEST COMPLIMENTS FROM:

Esjanson Jewellery Mart

51, Bazaar Street, Chidambaram - 608 001.

TAMILNADU.

WITH THE BEST COMPLIMENTS OF



Jeganathan Hardware Stores

PAINTS AND BUILDING MATERIELS.

194, Ahambaram Road - Trincomalee.

Phone: 218

அகில உலக
இந்து மகாநாட்டுக்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்!

நா. அ. மார்க்கண்டு அன் பிரதர்ஸ்

191, மத்திய வீதி,
திருக்கோணமலை.

N.A.M. THE HOUSEHOLD NAME OF TRINCOMALEE
FOR QUALITY AND CHEAP GOODS.

LAVY THE HOUSE HOLD NAME
FOR TRANSPORT OF GOODS AND PASSAGS PASSENGERS

NAMES YOU CAN RELY ON

N. A. MARKANDU & BROS.

191, Central Road,
Trincomalee.

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்!



கூடல் மா மதுரையில்

- காஞ்சிபுரம்
- தர்மாபுரம்
- ஆரணி
- மணிபுரி

பட்டு சேலைகள்

மற்றும் அனைத்து மில் கைத்தறி சேலைகள்,
சர்ட்டிங்ஸ், சூட்டிங்ஸ் ஜவுளிகளுக்கு

கண்டி கலைமகள் ஸ்டோர்ஸ்

(ஜவுளிகளின் சிகரம்)

43, மேலகோபுரத் தெரு,
மதுரை - 625 001.

●

KANDY KALAIMAGAL STORES

Fancy Cloth Merchants.

43, West Tower Street,
Maduraj-625001.

ஓ

எமது நல் வாழ்த்துக்கள்



ஸ்ரீ சபாநாயகர்கோவில்
திருக்கோபுரம் ஆலய திருப்பணிக்கு
நன்கொடை அனுப்பி
ஸ்ரீமந் நடராஜப்பெருமான் திருவருளைப்பெற வேண்டுகின்றோம்.

தலைவர் : **திரு. R. கனகசபை பிள்ளை**
செயலாளர் : **திரு. G. வாகீசம் பிள்ளை**
பொருளாளர்: **திரு. R. பாலசுப்பிரமணியம்**

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:

திரு. G. வாகீசம் பிள்ளை
சபாநாயகர் கோவில் ஆலயத் திருப்பணி கமிட்டி.
சிதம்பரம் - 608 001. (தமிழ்நாடு)

விளம்பர அன்பளிப்பு:

திருமதி. R. சேஷம்மாள்
16, சின்ன செட்டித் தெரு,
சிதம்பரம்.

மாற்றமும் வளர்ச்சியும் இயற்கை நியதிகளென்பதை அறிந்து செயலாற்றி விட்டால் காலச் சக்கரம் நம்மை ஒரு மூலையில் உருட்டி விடும். இந்து மதத்தின் சகல துறைகளும் காலா காலத்தில் படிப்படியாக மாற்றியமைக்கப்பட்டு வந்ததுதான் இன்று காணும் உயர் நிலை. ஆகையால் அடிப்படையில் மாற்றமில்லாமல் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு தயங்கக்கூடாது. இதற்கேற்றவிசால மனதையும் அறிவையும் ஆற்றலையும் இந்துக்கள் பெற்றெடுக்க வேண்டும்.

சரித்திர காலந் தொடக்கம் விதேச நீதியிலும் தேசிய நீதியிலும் இந்துக்கள் பல கோணத்திலிருந்தும் தாக்கப்பட்டு வந்திருக்கின்றனர். எனினும் இந்துக்களுடைய தாராளமனமும் பொறுமையும் விரோதிகளிடத்தில் இணங்கி வாழும் ஒருமைப்பாட்டுணர்வும் அவர்களை மேன்மேலும் மேன்மைப்படுத்தியிருக்கின்றது. நமது சனாதன தர்மத்தின் அத்திவாரம் மிக ஆழத்தில் பதிக்கப்பட்டிருப்பதால் இதுவரை ஏதொரு சக்திக்கும் அதைச் சிதைக்கவோ, நொறுக்கவோ முடியவில்லை. எனினும் இடைக்காலத்தில் எமக்கிடையே வளர்ந்து வந்த சில பலவீனங்கள் சமுதாய ஐக்கியத்தில் ஆழமான சில பிளவுகளை ஏற்படுத்திவிட்டிருக்கின்றது. பிரபஞ்சத்தில் பரஸ்பர விரோதங்கள் என்று தோன்றக்கூடிய பலவற்றையும் இணைத்து வாழத் தகைமையுடைய இந்துக்கள் தங்களுடைய சமுதாய முரண்பாடுகளைச் சமப்படுத்துவதில் தோல்வி கண்டிருக்கின்றனர்.

வேற்றுமையிலும் ஒற்றுமையைக் காணும் ஆத்மீக ரகசியங்களை உலகத்திற்கெடுத்தோதிய இந்துக்கள் இதில் தோல்வி கண்டிருப்பதன் காரணம் என்ன? இந்தத் தோல்வியின் யதார்த்த ரூபத்தை ஒரு ஆத்ம பரிசோதனை மூலம் கண்டறிவதால் மாத்திரந்தான் இந்தப் பிரச்சனையிலிருந்து விமோசனமடையலாம். இந்து சமாஜத்தில் இன்று காணும் சீர்கேடுகளுக்கு அன்னியரை குற்றஞ் சாட்டுவது நமது சுபாவமாயிருந்து வருகின்றது. இதில் சில உண்மைகளிருந்த போதிலும் நம்மிடமிருக்கின்ற ஏதோ பலவீனம்தான் அவர்களுக்கு அத்தகையதொரு சந்தர்ப்பமளித்திருக்கின்ற தென்பதை அவதானமாகச் சிந்தித்தறியவேண்டியிருக்கின்றது.

குலம், கோத்திரம், ஜாதி, தீண்டாமை, பிற்போக்கு தத்துவக் கொள்கைகள், குரு பாரம்பரிய பேதங்கள், வழிபாட்டு முறைகள் போன்ற வைகளிலிருந்தெழுந்த பிணக்கும் போராட்டமுந்தான் இந்துக்களுடைய ஐக்கியத்தைச் சீர்குலைத்து வந்திருக்கின்றது. இத்தப் பலவீனங்களை அன்னியர் தங்கள் சுயநலத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் உண்மை. நமது ஐக்கிய சக்தியைப் பிளவுபடுத்திக் கொண்டிருக்கும் உயர்வு தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் அறவே ஒழிக்க வேண்டும். இந்து ஆலயங்கள் இந்து சமுதாயத்தின் நடுநாடியாகவே இருந்து வந்திருக்கின்றது. இதன் கற்பக்கிரகத்திலிருந்து ஒழுகி வரும் பிராணசக்தி சமுதாயத்தின் நாடித் துடிப்பைச் சீராக்குகின்றது. க்ஷேத்திரச் சைதன்னியம் இருந்திருக்காதுவிட்டால் இந்து மதம் வரண்ட பாலைவனம் போன்ற சூனிய நிலையை அடைந்திருக்கும்.

வீண் பேதங்களும், முரண்பாடுகளும் சம்பிரதாய பேதங்களுமுடைய இந்துக்களெல்லாம் ஆலயத்தின் ஏக சைதன்ய சக்தியில் ஐக்கியப்படுகின்றனர். வெவ்வேறு திசையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்துக்களுடைய நாடி நரம்புகளை ஒன்றிணைத்துச் சமுதாயத்தின் இரத்தாசயங்களை ஆலயங்கள் சுத்திகரித்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மகாமகிமை பொருந்திய ஆலய கர்மங்களும், நிர்வாக முறைகளும் எவ்வளவு தூரம் இலட்சிய சுத்தியோடும், ஆத்மார்த்தத்தோடும் நடைபெறுகின்றதென்பது இன்று ஒரு விமரிசன விஷயமாயிருக்கின்றது. ஆலயங்களின் பிராண நாடியைப் பாதிக்கக்கூடிய இவ்விஷயத்தில் கண்மூடி மௌனிகளாயிருப்பதும், அல்லது தெளிவும் சக்தியுமில்லாத அபிப்பிராயங்களை வைத்துக் கொண்டிருப்பதும் எதிர்காலத் தலைமுறைகள் அவிசுவாசிகளாக மாறுவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆலயமென்ற நடுநாடியின் இருமருங்கிலும் இயங்கிக் கொண்டிருக்கும் இடகலை பிங்கலை போன்ற பெரும் சுவாசக் கலைகளாகிய ஆலய குருமார்களும் தர்மகர்த்தாக்களுந்தான் ஆலயச் சுடரொளியைத் தூண்டிவிடும் தூண்டுகோல்கள்.

இவர்கள் போதிய இலட்சிய சுத்தியோடும் ஆத்மார்த்தத்தோடும் ஈஸ்வரார்ப்பண புத்தியோடும் ஆலய கைங்கரியங்களை நிர்வகிக்கத் தவறும் பட்சத்தில் க்ஷேத்திரங்கள் விரைவில் இரவுச் சந்தைகளாக மாறிவிடும். இதில் பரவலாகக் காணப்படும் சீர்கேடுகளைத் தகுந்த முறையில் திருத்தியமைப்பதற்கு

ஆலய பக்தர்கள் சிரத்தையெடுக்கவேண்டும். தவறிஞல் வளர்ந்து வரும் நமது பசுமை நிறைந்த இளம் உள்ளங்களில் மதத்தைப் பற்றிய தப்பபிப்பிராயங்கள் ஏற்பட்டு சூனியவாதிகளாக மாறிவிடுவர். பக்தர்களுடைய பக்தி விஸ்வாசங்களைத் தவருன வழியில் சுரண்டியெடுத்து ஆலயங்களை வளர்க்கப் பார்ப்பது ஆலயங்களுக்கும் மதத்துக்கும் பெருங் களங்கத்தை ஏற்படுத்துவதாயிருக்கும். இந்து மதத்தை எதிர் நோக்கியிருக்கும் இன்னெரு அபாயமும் இருக்கின்றது.

பெரும்பாலான இந்துக்கள் கிராமப் புறங்களில் தான் வாழ்கின்றனர். அவர்கள் அஞ்ஞானத்தாலும் வறுமையாலும் மதரீதியான ஐக்கியத்தையிழந்து கூறு கூருகப் பிரிந்து கொண்டிருக்கின்றனர். உதிர்ந்து விழும் இத் துண்டுகளைக் கொத்தித் தின்னக் கூடிய கழுகுகள் ஏற்கனவே ஆங்காங்கு கூடு கட்டி வாழ்ந்து வருவதையும் அறிந்திருக்க வேண்டும். நகர மத்தியில் வசதியான நாற் காலிகளில் மாத்திரம் உலாவிக் கொண்டிருக்கும் நமது மத தத்துவ சம்ஹிதைகளும், புகழ் பெற்ற மத இயக்கங்களும் ஆதரவற்று ஒளியிழந்து வரும் கிராம இந்துக்கள் மத்தியில் ஒரு கை விளக்கையாவது கொளுத்தி வைக்க முயற்சிப்போமாஞல் இருளடைந்த அவர்களுடைய வாழ்விலும் ஒரு விடிவெள்ளி உதிக்க லாமல்லவா? தனிநபர்களை மாத்திரம் மோட்சத்திற்கனுப்பி வைக்க முயற்சிக்கின்றவர்கள் சமுதாய மோட்சத்திலும் ஒரு சிறு கண்பார்வை செலுத்திஞல் சமுதாயம்மோட்சத்துக்கு அருகதையுடையதாய்த் தீரும். சுதந்திரத்திற்குப் பின்னர் இந்துக்களுடைய எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்திருக்கின்ற தென்பது ஆழமாகச் சிந்திக்கவேண்டிய விஷயம். பல தலைமுறைகளாய் எங்களை நோக்கி ஒழுகிவந்தவிதேசச்சிந்தனைகளும் பழக்கவழக்கங்களும் இந்துக்களுடைய பாரம்பரியச்சிறப்புகளைச் சாரமாய்ப் பாதித்திருக்கின்றன. இன்னும் நாம் அதே ஒழுக்கில்தான் ஒழுகிக் கொண்டிருக்கின்ருேம். இந்த அடிமைத்துவ நிலை எங்களுடைய சுய அறிவிலும் சிந்தனையிலும் முரண்பாடுகளையும் மயக்கத்தையும் உண்டாக்கியிருக்கின்றது மல்லாமல் சுதந்திரமாகிய மூல வேரையும் அறுத்து விட்டிருக்கின்றது. இனியாவது சொந்தக் கால்களில் நிற்பதற்கும், சுயமாகச் சிந்திப்பதற்கும், செயலாற்றுவதற்கும் முயற்சிக்க வேண்டும். இந்து என்று சொல்வதற்கு வெட்கப்படும் சில பகுத்தறிவாளர்கள் காலம் மாறுவதை அறிவதில்லை. இந்துக்களுடைய தாயிருக்கின்ற எதையும் நிந்தனைக் கண்கொண்டு பார்க்கின்ற இந்த நவீன பகுத்தறிவாளர்கள் விஞ்ஞான மண்டலத்தில் நிமிஷம் தோறும் மாறிக் கொண்டிருக்கும் மாற்றங்களை அறியத் தவறிவிடுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஏட்டுப் பிரதிகளாயிருக்கின்ற இவர்கள் இருபதாம் நூற்றுண்டில் நவீன விஞ்ஞான கூடங்களில் இந்துமத வேதாந்த தரிசனங்களைச் சாஸ்திர ரீதியாக நிரூபித்து வருகின்றனர் என்பதை அறிய வேண்டும். இங்ஙனம் நவீன விஞ்ஞான சித்தாந்தங்கள் வேதாந்த தரிசனங்களை நோக்கிப் பருணமித்து வருகின்ற இவ்வேளையில் விஞ்ஞான அறிவில் அரிச்சுவடிப் பாடத்திலிருக்கின்ற நம்மவர்களில் பலர் மத யதார்த்தங்களில் கண்மூடிகளாயிருப்பது முழு முட்டாள் தனமாகும்.

மத ஞானமில்லாத பௌதீக சாஸ்திரமும், பௌதீக சாஸ்திரமில்லாத மத ஞானமும் மனித சமுதாயத்தின் சரியான வளர்ச்சிக்கு உதவுவதாயிருப்பதில்லை. ஆகையால் எதிர்கால உலகம் ஞான விஞ்ஞான யோகத்திலிருந்து உடலெடுத்தபழமையும் புதுமையுங் கலந்த ஒரு நவீன உலகமாயிருக்கும். இதன் அறிகுறியாக பௌதீக சுபீட்சம் நிறைந்த மேல் நாடுகளிலிருந்து தங்களுடைய கலை கலாச்சாரங்களைப் புறக்கணித்து இந்து ஆத்மீக குருமார்களை நாடி வந்து குவியும் மேல் நாட்டு இளைஞர்களைப் பார்த்தால் இதன் தாற்பரியங்களை நீங்கள் ஊகித்தறியலாம். வளர்ந்து வரும் இளம் வயதினர்கள் தங்களுடைய ஜீவித மூலகங்களை நோக்கி இறங்கிச் செல்வதற்கு இவ்வளவும் போதுமானது.

இனி எங்களுடைய வேதாந்த தரிசனங்களின் சாரமென்ன? பரமாத்மா என்பது ஏகமான, நிலையான ஒரு சத்திய வஸ்து. அது சர்வ சராசரங்களினுடைய இருதய குகையில் இருக்கின்றது. உள்ளேயிருப்பது போல் வெளியிலும் இருக்கின்றது. அது சலிக்கின்றது. சலனமில்லாமலுமிருக்கின்றது. எக்காரணங் கொண்டும் பிழவு படாத ஏக சக்தி எனினும் புலன்களுடைய பௌதீகானுபவங்களில் அது பலவாருகத் தோற்றப்படுகின்றது. இதுதான் பிரபஞ்சத்தின் தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் இவைகளுக்கு மூல காரணமாயிருக்கின்ற பரமாத்மா, இவ்வாறு பலவாருகத் தோற்றப்படுகின்ற துவைத பாவம் நிசிக்கும்.

சமீயாப்பாட்டுக்கும் தக்கபடி படிப்படியாக வளர்ந்து அத்வைதம் என்ற ஏகாத்மவாதத்தில் முடிகின்றது. இதுதான் வேதாந்த தரிசனம் தரும் ஏகாத்மவாத சித்தாந்தம். இது முழுமனித வர்க்கத்தை மாத்திரமல்ல, சகல ஜீவராசிகளையும் ஒரு குடும்பமாகவே இணைத்து வாழவைப்பதற்குரிய அற்புத ஆற்றலுடையது அமங்கலகரமானதொரு முகூர்த்தத்தை நோக்கிச்சென்றுகொண்டிருக்கும் இவ்வுலகத்தைப் பாதுகாப்பதற்குரிய சக்தி, இந்த ஏகாத்மவாத சித்தாந்தத்தைத் தவிர வேறெதற்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இலட்சியத்தின் கீழ் ஆத்மீகத் தலைவர்களும் மதாசாரியர்களும், மதஸ்தாபனங்களுமெல்லாம் ஒன்றுதிரண்டு செயலாற்ற வேண்டும்.

இது விஷயத்தில் ஜனங்களை ஒன்று திரட்டி அறிவுடையவர்களாக்கித் தீர்க்கும் பொழுது சமுதாயத்தில் உடைந்திருக்கும் பிணைப்புக்களெல்லாம் இணைந்து சரியாகி விடும். இந்து சமுதாயம் ஒருமுகப்பட்ட பெரும் சக்தியாகவே வடிவெடுக்கும். பிராமணர்களுக்கு இருக்கவேண்டிய பிரம்ம சிந்தனையும், சத்திரியர்களுக்கிருக்க வேண்டிய வீரமும், வணிகர்களுக்கிருக்க வேண்டிய வர்த்தக விவசாயத் திறமையும், சூத்திரர்களுக்கிருக்கவேண்டிய தொண்டாற்றும் விசால மனமும் எவரொருவரிடத்தில் இருக்கின்றதோ அவர்தான் உத்தமமான இந்து.

சுருங்கக் கூறின் இந்து மதத்தின் பல துறைகளிலும் நிலவி வருகின்ற பாகுபாடுகளும், ஆலய கைங்கரியங்களிலும் நிர்வாகத் துறைகளிலும் வளர்ந்து வருகின்ற சீர்கேடுகளும், கிராமிய இந்துக்களுடைய பரிதாபகரமான நிலையும், மத அறிவின்மையால் இளம் வயதினர்களுக்கிடையில் தோன்றிக் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்களும், சம்பூர்ணமடையாத விஞ்ஞான அறிவால் வரும் சூனியவாதம் போன்றவைக்கு முடிவுகாணும் வண்ணம் சக்தி வாய்ந்த ஒரு மார்க்கத்தைக் கண்டறிய வேண்டியிருக்கின்றது. இதுதான் இன்றைய அவசரமான தேவையும் நோக்கமும். இந்து என்ற அபிமானமும் மனப்பூர்வமான இருதயமும் இருக்குமாகில் இதற்குரிய சக்தி உங்களிடமே இருக்கின்றது.

உங்களுடைய இருதய நாடிகளைப் பூர்வீக இருஷிகளின் இருதயங்களுடன் இணைக்குக. இவர்கள் விட்டுச் சென்ற ஆத்மீகச் சுவடிகளை நன்றாகக் கற்றுணர்ந்து அதில் இரண்டறக் கலந்து விடுங்கள். உங்கள் கலை கலாச்சாரத்தின் முத்து மணிகளாயிருப்பவைகளைப் பேரபிமானத்துடன் தயங்காமல் ஏற்றுக் கொள்ளும் பொழுது உங்களுடைய சூக்கும சரீரத்தில் ஒரு சுதந்திரமான யதார்த்த இந்து உருவாகுவான். இந்தப் பரிபூரண சுதந்திரந்தான் ஒரு இந்துவின் பரம இலட்சியம். இதில் தான் உங்களுடைய ஐக்கியமும் திருப்தியும் சாஸ்வதமான இன்பமும் தங்கியிருக்கின்றது. இதை உணர்க. அனுபவிக்குக. வருங்கால உலகம் தனது ஆத்மாவின் குளிர்மைக்காக உங்களை நோக்கித்தான் வரப்போகின்றது. அதற்கிடையில் உங்களுடைய சொந்த கொதிவலிகளைத் தீர்த்து, ஒரு யதார்த்த இந்துவாகத் தலைநிமிர்ந்து நில்லுங்கள்.

''ஆரம்பத்தில் பிறப்பும் நம் கையில் இல்லை
அடுத்தடுத்து நடப்பும் நம் கைவசம் இல்லை''

— குழந்தை பிறந்ததிலிருந்து சுமார் பன்னிரண்டு வருஷங்கள் வரை இது முழுக்கப் பொருந்தும்.

'இந்தப் பருவத்தில் எப்படி வாழ்வது?' என்று அவனுக்குச் சொல்லிப் புரியாது. ஆனால் 'அவனை எப்படி வளர்ப்பது' என்று தந்தை தாய்க்குச் சொல்வது முக்கியம்.

இந்தப் பருவத்தில் ஒரு குழந்தை கவனமாக இருக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு.

ஒன்று, உணவு; மற்றொன்று, கல்வி. சுத்தமாக இருக்கப் பழக்கி வைப்பது மிக முக்கியம்.

— அர்த்தமுள்ள இந்துமதம்

சிரவையாதீனத்தின் வரலாறு

— புலவர், ப. வெ. நாகராஜன் (பி. லிட்.) விஷாரத்–சிரவையாதீனக்கவிஞர் —

இன்று தமிழகத்தில் சமயப்பணி புரியும் பல நிறுவனங்களிலும் சிரவையாதீனம் சிறப்பு மிக்க ஒரு தனி இடத்தைப் பெற்று விளங்குகிறது இது காலத்தால் இளைய ஆதீனம் ஆயினும் தொண்டால் முதிர்ந்து மிளிர்கிறது. இன்று இவ்வாதீன அன்பர்கள் பாரத நாடு எங்கும் பரவி உள்ளனர்.

சிரவையாதீனம் என்னும் சிரவணபுரம் கௌமார மடாலயம், கோவை மாநகருக்கு வடக்கே ஏழுகல் தொலைவில் உள்ள சிரவணம் பட்டி என்னும் அழகிய சிற்றூரில் தவத்திரு. இராமானந்த சுவாமிகள் அவர்களால் 1908ம் ஆண்டு நிறுவப்பெற்றது. இவர் வண்ணச் சரபம், தண்டபாணி சுவாமிகள் என்று புகழ் பெற்ற மகான் நெல்லை, முருகதாச சுவாமிகளின் தலைமை மாணாக்கர் ஆவர். இவருடைய திருப்பெயரைச் சூட்டாமல் சந்நிதானம் என்றே வழங்குவது இந்த ஆதீன சம்பிரதாயம்.

தவத்திரு. சந்நிதானம் அவர்கள் தமது சொந்த நிலத்தில் தவச்சாலை அமைத்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார். 1890-ம் ஆண்டு ஸ்ரீ சித்திமகோர்க்கட விநாயகர் ஆலயம், ஸ்ரீ தண்டபாணிக் கடவுள் ஆலயம் இரண்டும் அமைத்து ஆன்மார்த்தமாக வழிபாடியற்றி வந்தார்.

திருக்கோயிலுக்கு வரும் அடியார்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்கவே தனியாக ஒரு மடாலயம் அமைத்துக்கொண்டு தவமியற்றி வந்தார். 1908-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் நாள் தம் சொந்த நிலங்களை எல்லாம் கௌமார மடாலயத்திற்கு சாசனம் செய்து வைத்தார். இவ்வாதீனத்தின் ஆலயங்களும் கட்டிடங்களும் முன்பே இருந்த போதிலும் சிரவையாதீனத்தின் முறையான வரலாறு இவ்வாண்டிலிருந்தே தொடங்குகிறது.

சிரவையாதீனம் கலியுக வரதனும் கந்தக் கடவுளைப்பரம்பொருளாக ஏற்கும் கௌமாரத் திருமடம் ஆகும். என்றாலும் காணபத்யம், சைவம், சாக்தம், வைணவம், சௌரம் ஆகிய மற்ற ஐந்து வைதிக சமயங்களையும் பாகுபாடின்றிக்கௌமாரத்தின் அங்கமாகவே பாவிக்கிறது. மாணவனுக்கு ஞானதேசிகருடைய திருவடிவமே பரம்பொருளின் வடிவம் என்பதும், குருபரத்வமே கௌமாரத்தின் சாரம் என்பதும் இவ்வாதீனத்தின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும். உயிர்க்கொலையை உணவு, பூசைப்பலி, வேள்வி முதலிய எல்லா நிலைகளிலும் நீக்கிய தூயவர்களே இக் கௌமாரத்தைப் பின்பற்றத் தகுதி உடையோர் ஆவர். கொலைபுலை நீத்து, இறையுணர்வுடன் ஞானகுருவைக் கடவுளாகவே கருதும் மெய்யன்பர்கள் அனைவரும் — சாதி, மொழி, தேச வேறுபாடுகள் இன்றி — இந்நெறியைக் கைக்கொள்ளலாம்.

கௌமார மடாலயம் என்ற நிறுவனம் முறையாக ஏற்பட்ட பிறகு பல அடியார்கள் தங்கள் உடைமைகளை இதற்கு எழுதி வைத்தனர். திருக்கோயில் வழிபாடுகள் நாளுக்கு நாள் மிக்க சிறப்படைந்தன. 1918-ம் ஆண்டு கௌமாரசபை என்ற பெயரில் ஓர் அடியார் திருக்கூட்டம் நிறுவப்பெற்றது. வெள்ளிக் கிழமை தோறும் சிறப்புப் பூசனை, பஜனை, சாத்திர திருமுறை வரலாற்றுநூல் விரிவுரைகள் முதலியன நிகழ்ந்தன. பற்பல சாத்திர தோத்திர நூல்கள் பதிப்பிக்கப் பெற்றன. இந்நாள்வரை சிரவைக் கௌமார சபையின் வெளியீடுகளாகச் சுமார் 150 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பூசைப்பணிகள், நிர்வாக வேலைகள் இவ்வாறு வளர்ச்சியுறவே தவத்திரு சந்நிதானம் அவர்கள் 29-1-1923 அன்று தம் சீடர்களிற்றலை சிறந்து விழங்கிய தவத்திரு கந்தசாமி சுவாமிகள் அவர்களுக்கு ஆதீனத் தலைமைப் பட்டம் சூட்டியருளித் தன் முழுநேரத்தையும் தியானத்திலேயே செலவிட்டு வந்தார். இந்த இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள் ஓர் செந்தமிழ்ப் பெருங்கடல். அத்துடன் வடமொழி, மலையாளம் ஆகிய மொழிகளிலும் வல்லவர். சற்றேறக் குறைய 20,000 செந்தமிழ்ப் பாக்களை இயற்றிய பெரும் புலவர். பற்பல மெய்யடியார்களை ஆட்கொண்டருளிய குருமணிக்கடல். இவர்

அருளாட்சிக் காலத்தில் சிரவையாதீனம் கலை மகளின் நடன அரங்காக விளங்கியது என் றால் சற்றும் மிகையாகாது. இவருடைய தெய்வபத்தியும், குருபக்தியும் ஈடிணையற் றவை. இம்மகான் 10-12-1948 அன்று திரு வருளில் கலந்தருளினார்கள்.

தவத்திரு சந்நிதானம் அவர்கள் இதற்கு எட்டு ஆண்டுகள் கழித்து 21-12-1956 அன்று தமது 99-ஆவது அகவையில் ஞானதேசிகரின் திருவருட் பேறடைந்தார்கள்.

தற்போது சிரவையாதீனத்தின் மூன்றும் பட்டத்தில் அருளாட்சி புரிந்துவருபவர் தவத் திரு சுந்தர சுவாமிகள் ஆவர். இவர் 9-2-1964 அன்று அருளாட்சிஏற்றார் சிறந்த பேச்சாளர், நல்லகவிஞர். தமது ஞானகுருவிடத்தும் முரு கப்பெருமானிடத்தும் ஆறாப்பெருங் காதல் கொண்ட துறவி. சேக்கிழார் அருளிய பெரி யபுராணத்தில் ஆழ்ந்த புலமையும் பேரீடு பாடும் கொண்டவர். இத்துணைச் சிறப்புக்கள் வாய்ந்தும் பச்சிளங் குழவியைப் போன்று கள்ளமற்ற உள்ளங்கொண்ட உத்தமர். இவர் காலத்தே சிரவையாதீனத்தின் பணிகளும் திருவிழாக்களும் புகழும் மிக விரிவடைந்து செழித்து வளர்ந்து வருகின்றன.

1957-ம் ஆண்டு ஆதீன குருமுதல்வர் நினைவாக ஓர் உயர்நிலைப்பள்ளியும் 1976-ம் ஆண்டு ஓர் மழலையர் பள்ளியும் துவங்கப் பெற்று செவ்வனே இயங்கிவருகின்றன.

1966-ம் ஆண்டு அருண்மிகு தண்டபா ணிக் கடவுள் திருக்கோவில் விரிவாக்கப் பெற்றும் 1971-ம் ஆண்டு ராஜகோபுரம் கட் டப்பெற்றும் சிறப்பாக கும்பாபிஷேகம் செய் யப்பெற்றது. 1972-ல் முருகப்பெருமானுக் குப் பெரிய வெள்ளிமயில் வாகனம் செய்யப் பெற்றது 1977-ல் ஸ்ரீ கருணும்பிகையுடனமர் ஸ்ரீ அவினாசி லிங்கேசுவரர் ஆலயம் கருங்கற் பணி, தெப்பத் திருவிழாவிற்குரிய சரவணப் பொய்கை நிறைவேறின. சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் மிக நேர்த்தியான ஒரு சித் திரத்தேர் செய்யப்பட்டது. சுமார் 5 லட்ச ரூபாய் மதிப்பில் வெள்ளித்தேர்த் திருப்பணி தொடங்கப்பெற்றது. 1980-ல் நவக்கிரஹப் பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

தற்போது அருண்மிகு பண்டரிநாதர் திருக்கோவில் பண்டரிபுரத்துப் பாணியிலே யே உருவாகிக் கொண்டுள்ளது. கலைநிகழ்ச் சிகள், விரிவுரைகள் முதலியவைகட்கும், பொதுமக்கட்குத் திருமண மண்டபமாகவும் பயன்படும் வண்ணம் ஓர் அரங்கு அநேகமாக முற்றுப்பெற்று விட்டது. உயர்நிலைப் பள்ளிக் காக அதிக வகுப்பறைகள் கட்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இவைகள் எல்லாம் இவ்வருட முடிவிற்குள் நிறைவேறிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாதமும் ஸ்ரீ தண்டபாணி சுவாமி திருக்கோவிலில் நடைபெறும் கிருத் திகைத் திருவிழா மிகச் சிறப்புவாய்ந்தது. ஆடிக்கிருத்திகையில்தெப்பமும்உண்டு. ஆண் டுச் சிறப்புக்களில் வைகாசி விசாகம், கந்த சஷ்டியில் சூரசம்ஹாரம், லக்ஷார்ச்சனை தைப்பூசத்தில் தேர்ப்பெருவிழா குறிப்பிட்டுக் கூறவேண்டியவைகளாகும். இவையேயன்றி மார்கழி ஆயிலியத்தில் தவத்திரு சந்நிதானத் தின் மகா குருபூசையும். கார்த்திகை ரேவதி யில் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் மகா குருபூஜையும் சமாதி ஆலயத்தில் சிறப்பாக நடத்தப்பெறுகின்றன.

தவத்திரு. சுந்தர சுவாமிகள் அவர்கள் நாட்டில் உள்ள எல்லாத் திருக்கோயில்களி லும் நாள், சிறப்பு வழிபாடுகள் யாதொரு முட்டுப்பாடும் இன்றி செவ்வனே நடைபெற வேண்டும் என்னும் பெருவிருப்பு உடையவர் கள். இவர் முயற்சியால் திருப்பணி செய்யப் பெற்று குடமுழுக்காடிய புதுப்பொலிவுடன் சுமார் 400 ஆலயங்கள் இலங்குகின்றன. இவர்கள் தலயாத்திரையிலும் பெருவிருப்பு உடையவர்கள். பலமுறை அடியார் திருக் கூட்டத்துடன் இமயம் முதல் குமரிவரை தல யாத்திரை செய்து வழிபாடு செய்திருக்கிறார் கள். 1978 நவம்பரில் சிரவையாதீன அடியார் கள் தவத்திரு. சுந்தரசுவாமிகள் அவர்களின் பொன் விழாவை மூன்று நாட்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தவத்திரு. சுந்தரசுவாமிகள் கல்வியிலும் கலைகளிலும் சிறந்தவர்களைத் தாய்போல் அரவணைத்துப் போற்றும் புரவலராகவும் விளங்குகிறார். சுருங்கக்கூறின் தற்காலத்தில் ஓர் ஆதீனமும் ஆதீனகர்த்தரும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சிரவையா தீனமும் தவத்திரு சுந்தர சுவாமிகளின் அரு ளாட்சியும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுக் களாக விளங்குகின்றன.

நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர்

— வே. சதாசிவம் (B. A., M. Litt., Dip., C.E.S.)
(முன்னாள் உதவிப் பரீட்சையாணையாளர்)

குழந்தைப் பருவத்திலே ஞானப்பாலுண்ட சம்பந்தர் தென் இந்திய இராமேஸ்வரத்திலிருந்தே திருக்கோணேஸ்வரத்திற்கும் திருக்கேதீஸ்வரத்திற்கும் பாடல் வழங்கி ஈழத்தைப் பெருமைப்படுத்தினர். இந்நிகழ்ச்சி 1300 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. இளமைப்பருவத்திலேயே சிவ அருள் பெற்ற சிவபாலயோகியர் நம்மிடையே வந்துகிடைத்தற்கரியதொரு சுயம்புலிங்கம் தந்து அதற்குக் கோயில் எழுப்பச் செய்து பிரதிஷ்டையும் செய்து லங்காதீஸ்வரம்எனப்பெயருமிட்டுநம்மைக் கௌரவித்தனர். இந்நிகழ்ச்சி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது. அன்று ஞானத்துடன் சம்பந்தப்பட்ட சம்பந்தரும், இன்று யோகத்துடன் சம்பந்தப்பட்ட சிவபாலரும் தந்தைக்குத் தனயராகவுள்ள பெயர்ப் பொருத்தம் சிந்தித்து தெளிதற்குரியது.

இதுவரை வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலுள்ள கடலோரங்களிலும் வயற்பிரதேசங்களிலும் கோயில் கொண்ட தெய்வம் இப்பொழுது அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இலங்காதீஸ்வரர் என்ற பொதுப் பெயர் பொருத்தத்துடன் தமது அருள் ஆட்சிப் பரப்பினை மஞ்சுதோய் மத்திய மலைப்பிரதேசத்துக்கும் விஸ்தரித்து இதுவரை மலையக மக்களுக்கு சிவத்தலமில்லாத ஒரு பெருங்குறையை நீக்கியிருக்கிறது. அண்மையில் 16–10–78ல் எழுந்த இச்சிவத்தலம் ஏனைய சிவத்தலங்கள் போல எதிர்காலத்தில் பேரும் புகழும் வாய்ந்த மாபெரும் ஸ்தலமாக பொலிவுறும் என்பதற்கு தக்க அறிகுறிகள் காணப்படுகின்றன.

இக்கோயில் தோன்றியுள்ள இடம் ஸ்ரீ நகர் என்ற புனித ஸ்தலம். இலங்கையை ஆண்ட சிவபக்தனான இராவணனின் மகன் ''வில்லாளனூர்க்கெல்லாம்மேலவனான'' மேகநாதன் தனது தந்தையின் ஞாபகார்த்தமாகவும் அவரின் நற்கதிக்காகவும் இதே இடத்தில் இதே போன்றதொரு சுயம்புலிங்கம் வைத்து வழிபட்டதாகவும், மேகநாதனின் வழிபாட்டில் ஈர்ப்புண்ட பிரம்மா. விஷ்ணு, இந்திரன் முதலாகவுள்ள தேவர்கள் தண்மழை பொழிந்தும் பூ மழை சொரிந்தும் மேகநாதனையும் இவ்விடத்தையும் ஆசீர்வதித்துக் காத்தனரெனவும் இவ்விடம் இன்றும் காக்கப்படுகிறதெனவும் நூரளையில் நிலவும் ஓர் ஐதீகம் கூறுகிறது. திரிகால உணவுத் தவமுனிவரான ஸ்ரீ சிவபால யோகிகள் இக்கோவிலைத் தாபித்த பொழுது இலங்கை வானொலிக்கு விடுத்த செய்தியில் இவ்வைதீகம் மெய்யானதென உறுதிப்படுத்தி உள்ளார்கள். அன்று தொடக்கம் இன்றுவரை புனித ஸ்தலமாகவே இருந்த இச்சான்றுபோக, வேறொருவாறான விளக்கமும் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. ''கொல்புலித்தோல் நல்லாடை கட்டிய சிவன் சுடுகாட்டைக் கோவிலாகக் கொண்டவன். பேயோடாடியவன். அவன் அணியும் நீறு காடுடைய சுடலையிலுள்ள பொடி'' என நாம் அறிந்ததற்கேற்ப அன்று சுடுகாடாக இருந்த இன்றைய ஸ்ரீநகர் சிவன் தாண்டவம் ஆடும் களமாகவே இருந்து வந்துள்ளது. இப்புனித இடத்தில் தனிப்பட்ட மனிதர் குடியேறி வாழ்ந்ததேயில்லை. வாழமுடிவதுமில்லை. தூய்மை கருதி வாழமுடியாமல் பூதகணங்கள் தடுத்துக்கொண்டிருந்தன. 1975ம் ஆண்டில் அருள்திரு. முருகேசு குடியேறியதும், உரியவர் வரும்வரை தூய்மை காக்கப்பட்டது போல மனித சஞ்சாரத்திற்கேற்பட்ட இடர்கள், தடைகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் அகன்றன. தொடர்ந்து செப்டம்பர் 1978ம் ஆண்டு ஸ்ரீ இலங்காதீஸ்வரர் கோவிலும் இப்புனித இடத்தில் ஆரம்பமாயிற்று. தெய்வ அருளினால் விளைந்த சுயம்புலிங்கம் எமக்குக் கிடைத்தது; தெய்வ வடிவாக வந்த சிவபால யோகியரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது; புனிதமான ஸ்ரீ நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது; தவ வலிமை பெற்ற அருள்திரு. முருகேசு அவர்கள் ஸ்ரீ நகரில் குடியேறியது; இவையாவும் திட்டமிட்டுச் செயற்படுத்தும் எமையாழும் ஈசன் செயலாகத்தான் இருக்க முடியும்!

இவற்றுக்கேற்றவாறு தெய்வீக நிகழ்ச்சிகளும் ஸ்ரீநகரில் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கின்றன. தெய்வத்தின் கருணை வலுவில் நம்பாத மக்களையும் நம்பவைக்கும் அற்புதங்களும் இங்கு நடைபெறுமலில்லை. லிங்கப் பிரதிஷ்டை செய்த அதே நேரம் ஓவ்

வொரு நாளும் 12 மணி பூஜை நடைபெறும் பொழுது வரட்சி வெய்யிலிலும் மழை கொட்டுவது போன்ற ஓர் அற்புதமான சத்தம் கூரையின் மேல் இரண்டு நிமிடங்களுக்குக் கேட்கிறது. பளிங்கு போன்ற லிங்க மேனியிலிருந்து வேர்வைத் துளிகள் வழிந்து கொண்டிருக்கின்றன. பிரதிஷ்டை செய்த நாட்களிலிருந்து இதுவரை நம்பத்தக்க அளவு ஓர் அங்குல வளர்ச்சியும் லிங்கம் அடைந்துள்ளது. தெய்வம் நடமாடுகின்ற ஓர் உணர்வு அங்கு திரளும் மக்களுக்கு நாளடைவில் வலுப்பெறுகிறது.

இப்புனித நகருக்கு அணித்தாய் மூன்று மைல் தொலைவில் உள்ளது சீதாஎலியா. இது ராமாயணக் கதாநாயகி சீதா பிராட்டி இருந்த அசோகவனம் எனக்கருதப்படுகிறது. அநுமன் கண்ட அசோகவனம் என்பதற்கு ஆதாரமாக அசோகமரங்கள் காலத்திற் கேற்ப அழகுறு பூந்துணர்களுடன் காணப்படுவன. ஞாபகார்த்த கோயிலாக சீதையம்மன் கோயிலும் இங்குள்ளது. இதனருகில் இரு மருங்கிலும் மலிந்து உயர்ந்து நிற்கின்ற அசோகமரங்களைக் கொண்டதும் வற்ரு ஊற்றினைக் கொண்டதுமான ஓர் அருவி பாய்கிறது. பரந்துபட்ட பெருமலைச்சோலைகளும், குன்றுகளும் சூழ்ந்த இம்மலைப் பிரதேசம் இராம இராவண, இராமாயணக்காட்சிகளைக் காட்டுவது போலுள்ளன.

உள்ளங்கிளர்ந்து மெய்மறக்கவைக்கும் ஹனுமானின் சஞ்சீவி மலையெனப்படும் உயர் குன்றுக்குப் பக்கத்திலுள்ள பெயர்பெற்ற ஹக்கலைப் பூங்கா இதற்கு நாலு மைல் தொலைவில் உள்ளது. 7000 அடி உயரத்திற்கு மேலுள்ள இந்த மலைப் பிரதேசத்தில் நாள்முழுவதும் பனி பெய்வது பேன்ற (குட்டி இங்கிலாந்துக்) கால நிலை யுள்ளது. நறுமலர்கள் அன்றலர்ந்த பனிமலர்களாகவே நாள் முழுவதும் காணப்படுவன. இப்பனிமலர்கள் ''பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தியப் பனி மலரெடுக்க மனமும் நண்ணேன்'' என்ற தாயுமானரின் பாடலை உணர்த்தி அத்தெய்வ மலர்களைப் பறிக்கவொண்ணாது தடுக்கும் ஒரு மனநிலையை ஏற்படுத்துகிறது.

இராவணன் வழிவந்த மேகநாதனால் புனிதமாக்கப்பட்ட ஸ்ரீ நகரில் ஓர் இலங்காதீஸ்வரர்: இராவணனால் இடம் பெயர்ந்த சீதையின் விரத பிரார்த்தனைகளால் புனிதமாக்கப்பட்ட சீதா எலியாவிலுள்ள சீதையம்மன் கோயில்; மக்களுள் மறைந்துள்ள தெய்வீகத்தை வெளிக்கொணரும் அற்புத தெய்வீக ஹக்கலைப் பூங்காலை; இவையாவும் ஸ்தல யாத்திரீகர்களையும் உல்லாசப்பிரயாணிகளையும், ஈர்க்கும் கண்ணினையும், கருத்தினையும் கவருகின்ற தெய்வீகப் பதிகளாகும். இன்றும் ஏராளமான கதிர்காம யாத்ரீகர்கள் இவற்றைத்தரிசித்து செல்லத் தவறுவதில்லை.

எழில் மிகுந்த இக் குளிர் வலயத்தில் நீக்கமற நிறைந்து, அருளைப் பொழியும் ஸ்ரீ லங்காதீஸ்வரர் கோயிலை ஸ்தாபிப்பதற்கு தூண்டுகோலாக இருந்த தவவலிமைபெற்ற அருள் திரு. முருகேசர் அவர்கள் இப்புனித நகரிலுள்ள இக் கோயிற் பூசகராகவும், ஆன்மீக கலாச்சார நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாளராகவும் மாறுத மனநோய் அங்கத்துறு நோய்கள் பல தீர்க்கும் அருமருந்து கொடுக்கும் மருத்துவராகவும் பணிபுரிகிறார்கள். பற்றற்றான் பற்றினைப்பற்றி வாழ்வாங்கு வாழும் அருள்திருமுருகேசர் அவர்களை சுவாமிஎனவே பொதுவாக எல்லோரும் அழைத்து தக்க மதிப்பு கொடுக்கின்றனர். இவருக்கு உறுதுணையாக ஸ்ரீசிவபால யோகிகளின் அருட்பார்வைக்கு அருகதையாகிய ஆத்மீக உச்சஸ்தானம் பெற்ற அருள் திருமதி சீதாபாபு அம்மையார் அவர்கள் இக்கோயிற் திருப்பணிகளில் முக்கிய பங்கு பற்றி வருகிறார்கள். பால் பழம் மாத்திரம் உட்கொண்டுபிரதிஷ்டைக்குஇடையூறு வராமல் காப்பதற்காக 34 நாட்கள் லிங்கத்துக்கு அல்லும்பகலும் தியான பிரார்த்தனை, பூஜைகள் செய்யும் படி சுவாமிகளால் பணிக்கப்பட்ட பெருமை இவ்வம்மையாருக்குண்டு. இக்கோயில் சிவபாலயோகி மகராஜ் நம்பிக்கையுறுதியின் (Trust) கீழ் இயங்குகிறது. இக்கோயிலின் தர்மகர்த்தாக்களாக மேற்கூறிய இருவரையும் திரு. பாபு அவர்களையும் சுவாமி நியமித்துள்ளார்கள்.

இக்கோயிலில் நாள்தோறும் நடைபெறும் காலை, மாலைப் பூஜை பிரார்த்தனைகளிலும் வாரமொருமுறையுள்ள விசேட வியாழக்கிழமைப் பூஜை வழிபாடுகளிலும் மாதமொரு முறை நடைபெறும் பௌர்ணமி தினத்திலும் சாதி சமய பேதமற்ற மக்கள்கூட்டம் கலந்து கொள்கிறது. ஆண்டுதோறும் வருகிற மகாசிவராத்திரி விழா, நவராத்திரி விழாக்கள் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகின்றன.

பாரதியின் வழிபாட்டுக் கொள்கை

— பொன். தெய்வநாயகிசோதி —

வாழ்வு இன்பமாகவும் நிறைவாகவும் அமைய வழிபாடு தேவை. வழிபாட்டின் பயனுய் கிடைக்கின்ற ஆற்றலைக் கொண்டே, உலக செயல்களில் ஈடுபட்டுச் சிறப்பாகச் செயல்புரிய முடியும். பாரதியைத் தேசிய கவிஞர் என்றே நாடு புகழ்கிறது. அவர் வீர உணர்வுடைய பாடல்கள், எழுச்சியூட்டும் பாடல்கள் ஆகியவற்றைமட்டும் பாடவில்லை. இறையுணர்வை மிகுவிக்கும் பாடல்களையும் பாடியுள்ளார். கவிதை பலவற்றை யாக்கவும், நாட்டுக்கு உகந்த நல்ல கருத்துக்களை எடுத்துரைக்கவும், இறையருளே அவருக்குத் துணைசெய்திருக்க வேண்டும்.

அவர் பாடிய தோத்திரப் பாடல்களில் கருத்தாழம் மிக்க அழகிய தத்துவங்களும் உண்டு. முற்றும் துறந்த ஞானிகளுக்குக் கிடைத்த பேரின்ப நிலையும் இவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். விநாயகர் அகவலில் ''பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன், கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்'' — எனத் துணிவாக எடுத்துரைக்கிறார்.

'பேசாப் பொருள்'—என்றால் அதனை எப்படிப் பேச முடியும்?—எனச் சிந்திக்கத் தோன்றுகிறதல்லவா? வழிபாட்டின் முடிவில், தியானத்தில் ஆழ்ந்து, மௌன நிலையில் ஏற்படும் ஒப்பற்ற தன்மைகளைப் பேசத்தான் முடியுமா? உணர்ந்து அறியக்கூடிய பொருளை, உரையால் எடுத்துரைப்பது எங்ஙனம்? விண்டுரைக்க முடியாத பொருள், விண்டுரைத்தாலும் பிறரால் புரிந்துகொள்ள முடியாத பொருள், அதனைப் பேச நான் துணிந்தேன் என்கிறார்.

'கேட்கா வரத்தைக் கேட்கத் துணிந்தேன்' என்பதில் கேட்கா வரம் எது? நாமெல்லாம் இறைவனிடம் கேட்கும் வரம் எப்படிப்பட்டது? பொன், பொருள், புகழ், இன்பம் இவற்றிற்காகப் பலரும் இறைவனிடம் வேண்டுகின்றதைக் கண்டுள்ளார் பாரதி. அந்த சாதாரண ரகத்தைக் கேட்கவில்லை. தனக்கென சுயநலத்துக்காக வேண்டாமல் பொது நலத்துக்காக வேண்டுகிறார். இவர் கேட்கும் வேண்டுதல் இதோ...

''பூ மண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு மிடுமையு நோயுஞ்
சாவு நீக்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க! என்பேன்! இதனை நீ
திருச்செவிக் கொண்டு திருவுளமிரங்கி
அங்ஙன மாகுக என்பாய், ஐயனே
இந்நாள், இப்பொழு தெனக்கிவ் வரத்தினை
அருள்வாய் ஆதிமூலமே''

என விஞ்ஞகரிடம் வேண்டுகிறார்.

உலகில் அன்பும், அடக்கமும், பொறுமையும் நிலவ வேண்டும் என விரும்புகிறார். 'துன்ப நினைவு தரும் சோர்வும் பயமுமெல்லாம் அன்பிலழியுமடி கிளியே, அன்புக்கழிவில்லைதான்' என கிளிப்பாட்டில் அன்பைச் சிறப்பிக்கிறார்.

இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கையல்லவா? ஆனால் துன்பமே தலைக்காட்டாது இன்பமாக வாழ்க்கை அமைந்தால் அதுவே பெரும்பேறு அல்லவா? வறுமையோ உடல் நலக்குறைவோ ஏற்படாதிருத்தல் வேண்டும் என்றும் கேட்கிறார். இவைகள் யாவும் இறைவன் தரவும் செய்வான். அடுத்ததாக 'சாவு நீங்கி வாழ வேண்டும்' எனக் கேட்பது பொருந்துமா எனப் பார்ப்போம்.

அவரவர் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி, இயன்ற தொண்டுகளைப் பிறர்க்குச் செய்து, பிறந்ததின் பயனை முழுமையாக அடைய வேண்டும். அதுவரை எமன் நெருங்கக் கூடாது. 'என் பணிகள் யாவும் முடித்து விட்டேன், இனி உடல் தொடர்பு வேண்டாம்' எனக்கூறி எமனை அழைத்தாலொழிய வரக்கூடாது. இன்னொன்று, உயிர் என்றும் நிலைத்திருக்கக் கூடியது. உடல் மட்டும்தான் அழிந்து போகின்றது இறப்பு உயிர்க்கல்ல, உடலுக்கே! உயிர் பிறிதொரு உடலை எடுத்துக் கொள்கிறது. அவ்வளவே! 'சாவு நீங்கி

உ

சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற்று
இன்புற எமது உள்ள முருகும் வாழ்த்துக்கள்!



வெங்கடேஷ்வரன் ஏஜென்ட்ஸ்

VENKADESWARAN AGENTS

(Prop: C. A. RAMASWAMY)

விவசாய உர வியாபாரம்.

51, கந்தசாமி கோயில் வீதி
வவுனியா.

நல் வாழ்த்து கூறுகிறேம்!



நியூ வேல் கபே

சுத்தமான உணவு – சிற்றுண்டி வகைகள்.

ஹொரவப்பத்தானை வீதி,
வவுனியா.

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

மோகன்ஸ்

உயர்தரமான பேனைக்களுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

26. திருக்கோணமலை வீதி,
கண்டி.

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

இரவு பகல் சேவை

தூர இடங்களுக்கான சொகுசு பஸ் முன்கூட்டி
பதிவு செய்தல்

HOTEL DE RAJAGIRI

109, Kandy Road – Vavuniya.

T'phone: 336

WITH BEST COMPLIMENTS FROM

RATHNA MALIGAI

SOVEREIGN GOLD JEWELLERS
PAWN BROKERS AND
GENERAL MERCHANTS.

No. 48, D. S. Senanayake Vediya,
KANDY.

T'phone: 3636
T'grams: 'DIAMOND'

உ

உலக இந்து மகாநாடு உயர்ந்த பல கருத்துக்களை உலகுக்கு ஊக்குவித்து
உலக மக்களின் உளங்கனிந்த மகிழ்ச்சியை உலகுக்கு அளித்து
உமையாளும் – ஈசனும் போல் வாழ
எமை ஆளும் ஈசன் உமை ஆள்வானுக
வாழ்த்துகிறேம்!

★

சீவசக்தி

பஜார் வீதி,
வவுனியா.

நல் வாழ்த்துக்கள்!

- புத்தகம்
- சாப்புச்சாமான்கள்
- பிடவை
- ரேடியோ

→ விற்பனையாளர்கள்

↓

மொடர்ன் ஸ்டோர்ஸ்

36, கடை வீதி — வவுனியா.

நல் வாழ்த்துக்கள்!



S. ஆறுமுகம் அன் கோ.

மொத்த - சில்லறை பலசரக்கு வியாபாரம்

82, பசார் வீதி — வவுனியா.

Phone: 359

WITH BEST COMPLIMENTS FROM



VELMURUGAN JEWELLERS

வேல்முருகா ஜுவலர்ஸ்

KANDY ROAD – VAVUNIYA.

வாழ்த்துகிறோம்!



சிவா பிரதர்ஸ்

நகை அடைவு.

உர விற்பனையாளர்

கந்தசாமி கோவில் வீதி,

வவுனியா.

நல் வாழ்த்துக்கள்!

தேன்சுரபி ஹோட்டல்

இறக்குமதி செய்யப்பட்ட — சொக்கிலட்

பிஸ்கட்

பால் மாவகை

குளிர்பான சிற்றுண்டி உணவு வகைகள்

வவுனியா.

நல் வாழ்த்துக்கள்!



அலமு அச்சுக்கூடம்

5, அய்யா முதலி தெரு
இராயப்பேட்டை
சென்னை - 600 014.

☎ 848871



ALAMU PRINTING WORKS

Quality Printers & Book Binders

5, Iyah Mudali Street
Royapettah
MADRAS - 600 014
Tamilnadu.

WITH BEST COMPLIMENTS FROM:



Jai Bharath Metal Rolling Mills

Manufacturers of:
Brass, Copper, Aluminium, Stainless Steel, Sheets & Circle of Industrial & Commercial Quality.

No. J-13, P. V. R. Road

BANGALORE - 560 053

T'phone: Office - PP. 27622
Factory - 367294

WITH BEST COMPLIMENTS FROM:



T. K. R. & CO.

Dealers in Edible Oils & Commission Agents.

W. 98, OLD THARAGUPET.
BANGALORE - 560 053.

Phone 70728
600615



RATHNAM AGENCY

Dealers in Vanaspathi, Oils & Commission Agents.

98, OLD THARAGUPET
BANGALORE - 560 002.

Phone: 70728

With Best Compliments of



LORD KRISHNA METAL STORES

DEALERS IN ALL KINDS OF NONFERROUS METAL SCRAP
SUPPLIERS OF DOUBLE REFINED BATTERY LEAD
AND ANTIMONIAL LEAD INGOTS.

22, Ramiah Lane, Seegebeli
Post Box No. 7550
BANGALORE - 560 053.

Phone: 74212/27555
Grams: Lordmetal

WITH BEST COMPLIMENTS OF

ROHINI
INTERNATIONAL

67, G. N. Chetty Road,
T'Nagar – Madras - 17.

T'phone: 444255 10+50 Lines

Well furnished air-conditioned and non-air-conditioned double rooms.
All rooms bath attached with hot and cold water.
Telephone and Music in all rooms.
Moderate charge - Travel agents on the permises - Car parking facilities
Banks, Shopping Aricade - Entertainment area - Studios - V. G. P. Garden
Sea-shore - Railway station - Aerodram near by Added to all these.
Our annexe with 100 bed with more facilities
will be ready for occupation shortly.

PLANOGRAPH BANGALORE

Specialist in Reprographic Services



Photo Mechanical Reproduction
Reprotyping
Pre Printed Tracing Sheets
Printing
Spiral Binding



18 A, Chord Road
Opp. Power House
Rajaji Nagar
Bangalore - 560 010

PLANOGRAPH

Specialists in Reprographic Services



Photo Mechanical Reproduction
Reprotyping
Pre Printed Tracing Sheets



28, Kumbalamman Koil Street
Tondiarpet
Madras - 600 081.

ARTOGRAPHS

Specialists in General Printing and Spiral Binding
55, LAUNGS GARDEN ROAD
PUDUPET
MADRAS - 600 002.

வாழ்த்துக்கள்!



JANATHA POWER PRESS

CREATIVE PRINTER

16, Ebrahim Sahib Street

BANGALORE - 560 001.

Phone: 52845

இந்தோனேசியாவிற்கு இந்து சமய வருகை

— திரு. மோ. மு. ஸ்ரீராமுலு–மீடான் இந்தோனேசியா —

இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவில் வானுயர்ந்த கோபுரங்களைக்கொண்ட கோயில்கள் கால் இலட்சத்துக்குமேல் இருக்கின்றன என்றால் அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. உலகிலேயே மிகப்பெரிய இந்து ஆலயம் வெளி நாடாகிய இந்தோனேசியாவில் இருக்கிறது என்றால் யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. இந்த விஷயம் இந்தியாவிலுள்ள இந்துக்களில் பெரும்பான்மையோருக்கே தெரியாது. இந்த நாட்டின் இந்துசமய வளர்ச்சிக்கு இந்தியா எந்தவித ஆதரவும் காட்டாது இருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்.

உலகில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக பெருந்தொகையான இந்துக்களைக் கொண்ட நாடு இந்தோனேசியாவாகும். பெரிய எண்ணிக்கையைக் கொண்ட இந்து ஆலயங்களையும், இந்துக் கல்லூரிகளையும், இந்து உயர் நிலைப் பள்ளிகளையும் கொண்ட இந்த நாட்டிற்கு இந்து சமயம் எப்போ வருகை தந்தது என்பதைக் கூறமுடியாத நிலையில் சரித்திராசிரியர்கள் திண்டாடுகிறார்கள்.

ராப்ளஸ் (Raffles) தாம் எழுதிய 'ஜாவா வரலாறு, (History of Java) என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார். அதாவது அஜிசாகா (Ajisaka) என்பவர்தான் முதன்முதல் இந்த நாட்டிற்கு வந்த இந்துப்பெருமகனார். அவரே இந்து சமயத்தை இந்த நாட்டில் பரப்பினார். அதில் வெற்றியும் கண்டார். அவர் வந்த ஆண்டையே சாகா வருடம் (Caka year) என்று இன்றும் பாலியில் (Bali) நடைமுறையில் குறிப்பிடுகின்றனர். பாலியில் உள்ள பழைய ஏட்டுச் சுவடிகளில் அகஸ்திய முனிவர்தான் இந்த நாட்டில் இந்து சமயத்தைப் பரப்பினர் என்ற செய்தி காணப்படுகின்றது. இன்று வரைக்கும் அவரின் நாமம் போற்றப்பட்டுவருவதோடு, அவரின் சிலைகளை பாலியிலும் மற்றைய இடங்களிலும் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நாட்டிற்கு இந்துசமயம் வந்த வரலாறு பற்றியும் அது வந்த காலம் பற்றியும் இந்த நாட்டில் பலவிதமான கருத்துக்கள் நிலவிவருகின்றன.

இந்தியாவில் இருந்து இங்கு குடி புகுந்த இந்தியர்கள்தான் இந்த நாட்டு மக்களைத் திருமணம் செய்து கொண்டு ஒன்றுகக் கலந்து சுலபமான முறையில் இந்த நாட்டில் இந்து சமயத்தைப் பரப்பினார்கள் என்பது.

இந்தோனேசியர்களே இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு, அவர்கள் அங்கு இந்துசமயத்தை நன்கு கற்று வந்து, தமது சொந்த மொழியில் பல இந்து சமய நூல்களை இயற்றினர்கள் என்பது.

உலகம் முழுவதும் இந்து சமயமே இருந்த காலத்தில் இந்தோனேசியாவும் சமயத்தில் சிறந்து இருந்தது என்பது.

இந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக் கொண்டே இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது. இக்கருத்துக்களையேதான் இந்நாட்டு வரலாற்று அறிஞர்களும் கிட்டத்தட்ட ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்து சமயம் இந்நாட்டு மக்களின் வாழ்க்கையோடு இணைவதற்கு முன் இங்குள்ள மக்கள் பெரிய பெரிய மரங்களையும், கற்களையும், பெரிய மிருகங்களையும் வணங்கினார்கள். மலை உச்சியில் தமது மூதாதையர்களை வணங்குவதற்கான இடங்களை ஒதுக்கி, பெரிய சிலைகளையும் செதுக்கி வணங்கி வந்துள்ளனர். பிறப்பை முன்னிட்டும் இறப்பை முன்னிட்டும் பெரிய சடங்குகளை ஏற்படுத்தினர். இவை போன்ற சடங்குகளை இன்றும் இங்கு காணக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு நாட்டு மக்கள் மற்றைய நாட்டு மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பலப்பல காரணங்கள் உண்டு. வெளிநாட்டவர் இந்த நாட்டின்பால் கவனம் செலுத்தியதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று இந்த நாட்டின் செழிப்புமிக்க பூமியாகும். அடுத்த காரணம் இது இரண்டு சமுத்திரங்களுக்கு மத்தியிலும் கண்டங்களுக்கு மத்தியிலும் அமைந்திருந்தமை.

இந்தோனேசியர்கள் பரந்த மனப்பான்மை படைத்தவர்கள். வந்தவர்களை வரவேற்கும் தன்மை படைத்தவர்கள். இந்தோனேசியா, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில்

அமைந்திருந்தபடியினால் வியாபாரத்திற்காக இந்தியாவிலிருந்து சீனாவிற்கும், சீனாவிலிருந்து இந்தியாவிற்கும் சென்ற கப்பல்கள் இந்தோனேசியத் துறைமுகங்களில் தங்கிச் செல்ல வேண்டியிருந்தன.

கப்பலுக்குத் தேவையான தண்ணீர், சாப்பாட்டுச் சாமான்கள் யாவும் சேகரித்துக் கொண்டு செல்லும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. இத்தகைய தொடர்புகள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டன. காலப் போக்கில் இந்தியக்கப்பல்கள் இந்தோனேசியத் துறைமுகங்களில் நிறையக் காணப்பட்டன. இந்தோனேசியாவும் இந்தியாவுடன் நெருங்கிய வியாபாரத் தொடர்பு கொண்டு நல்லமுறையில் வாணிபம் செய்துவந்தது. இதனால் இந்த நாட்டிற்கு நிறைய இந்திய வியாபாரிகள் வரத் தொடங்கினர்.

இராமாயண காலத்தில் ஜாவா தீவிற்கு ஜவாடிவிபா என்ற பெயர் பிரபல்யமாக இருந்தது. 'யூனனி' தேயத்தைச் சேர்ந்த பூகோள சாஸ்திர நிபுணர் பத்தலோமேடயஸ் என்பவர் இந்த ஜாவா தீவை ''ஜாபா தீவு'' என்று அழைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தீவு என்பது தமிழ்ச்சொல். இந்தியர்கள் இதற்கு வேறு ஒரு பெயரும் சூட்டி உள்ளார்கள். ''சுவர்ணடிலிப்பா'' என்பதுதான் அப்பெயர். சுவர்ணடிலிப்பா என்றால் தங்கம் விளையும் நாடு என்பது பொருள். அக்காலத்தில் சுமாத்திரா தீவில் நிறையத் தங்கம் கிடைத்ததாகத் தெரிகிறது.

செல்வத்தின் சுரங்க பூமி என்று தெரிந்து கொண்ட இந்திய வியாபாரிகள் வியாபார நோக்கோடு வந்த போதிலும், பழகுவதற்கும், நட்புக்கொள்வதற்கும் நல்ல மக்கள் என்பதை உணர்ந்து இந்நாட்டிலேயே குடியேற ஆரம்பித்தனர். அத்தோடு தங்களுக்கென நல்ல இடங்களைத் தேர்ந்தெடுத்து கம்பங்களை (கிராமங்களை) இடங்களைத் தேர்ந்தெடுத்து கம்பங்களை (கிராமங்களை) அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஒருவன் தனக்குச்சொந்தமான நிலம் என்பதைக் காட்டுவதற்காக அந்நிலத்தில் கம்பை முதலில்ஊன்றினான். அதிலிருந்தே கம்பம் என்ற பெயர் வந்தது. இன்றும் கோஜா காரர்கள் கம்பம் என்றும் கிலிங்காரர்கள் கம்பம் என்றும் இந்தோனேசியாவில் பல பாகங்களைப் பார்க்கலாம். இந்த நாட்டில் தமிழர்களை 'கிலிங்காரர்கள்' என்று சொல்லும் பதம் இன்றும் உண்டு.

குடியேறிய இந்தியர்களும் பூர்வீகக் குடிமக்களும் ஒருவரை ஒருவர் போற்றி மதித்து நடந்து கொண்டதினால் நெருக்கமான உறவு ஏற்பட்டு கலாச்சார பரிமாற்றம் நடந்தேறியது. இந்த வகையில்தான் இந்த நாட்டில் இந்திய கலாச்சாரமும் சமயமும் வேர் ஊன்ற ஆரம்பித்தன.

இந்திய வியாபாரிகள் இந்த நாட்டில் முகாம்களை அமைத்துக் கொண்டு வாணிபம் செய்ய முன்வந்தவர்கள். இவர்கள் சமயச் சடங்குகள் தெரிந்த பிராமணர்களையும் உடன் கொண்டு வந்துள்ளார்கள். இந்தப் பிராமணர்களின் வழியிலேதான் இந்துப் பண்பாடு இங்கு வேரூன்ற ஆரம்பித்தது. இந்த நாட்டில் கிடைக்கப்பெறும் பெரும்படியான கல்வெட்டுகள், பல்லவகால எழுத்துக்களைக் கொண்ட சமஸ்கிருத பாஷையில் இருப்பதை இன்றும் காணலாம். இந்நாட்டில் நடைபெறும் இந்துசமயச் சடங்குகள் யாவும், பெரும் சமயச்சடங்குகள் யாவும் பிராமணீயத்தை ஒத்துள்ளன.

பிராமணர்களின் வருகை இந்நாட்டின் பூர்வீக குடிகளிடையே புதிய பிராமண வமிசம் உருவாவதற்கு ஏதுவாக இருந்தது. இந்த இந்துனேசியப் பிராமணர்கள் யாத்ரீகர்களாக இந்தியாவுக்குச் சென்று புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து தங்களைப் புனிதமாக்கிக் கொண்டதோடு இந்து சமய அறிவையும் வளர்த்துக்கொண்டனர். சிற்பக்கலை, சோதிடக் கலை, ஓவியக்கலைகளிலும் வல்லவராக விளங்கினர். இந்தியாவில் இருந்து திரும்பிய இந்துனேசியப் பிராமணர்கள்தான் இந்துனேசிய மொழியில் இந்து வேதங்களையும் இந்திய சாஸ்திரங்களையும் மற்றைய கலைகளையும் படைத்துள்ளனர். இந்துப் பண்பாட்டின் வருகையால் இந்த நாட்டில் அரசியல்முறைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன.

இந்துப்பண்பாடு இந்நாட்டிற்கு வருமுன் கிராமிய தலைவன்தான் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏகபோகமாக ஆளும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான். இவன் ஆத்மீக பலம் பெற்றவனாகவும் மக்களுக்கு நல்ல பாதுகாப்பாளனாகவும் மக்களை நல்ல வழியில் நடத்திச் செல்லுபவனாகவும் இருந்ததோடு தனது கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதியை சுபீட்சத்தோடு வைத்து நல்ல புகழோடும் இருந்திருக்கின்றான். ஆரம்பத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனே கிராமியத் தலைவனாக

வரமுடியும். காலப்போக்கில் தேர்தல் முறை மாறி ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பரம்பரை யே இப்பதவியை வகிக்கும் நிலை ஏற்பட்டது.

மேற்படி இந்து கலாச்சாரத்தின் வருகை யால் இதிலும் மாற்றம் ஏற்படலாயிற்று. அரச பரம்பரையும் உருவாக ஆரம்பித்தது. பரந்த நிலப்பரப்பைக் கொண்டு பல அரசர் கள் ஆள ஆரம்பித்தனர். அப்படி முதலில் உரு வான இந்து அரசாங்கம்தான் 'கூத்தாய்' (Kutai) அரசாங்கம். இந்த அரசாங்கம் கலிமண்தானில் (Kalimantan) மஹாகாம் (Mahakam) என்ற ஆற்றங்கரையில் நிறுவப் பட்டதாகத் தெரிகிறது. இந்த இடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் சமயச்சடங்குகள் நடந்த விவரங்கள் உள்ளன. தென் இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்லவ எழுத்தைக் கொண்டு எழுதப்பட்டுள் ளது. இந்தக் கல்வெட்டு 1500 வருடங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்டுள்ளதற்கான தடை யங்கள் கிடைத்துள்ளன. இந்தக் கல்வெட் டின்படி கூத்தாயை ஆண்ட முதல் அரசனின் பெயர் 'குண்டுரங்கா' என்பதாகும். அவனு டைய மகனின் பெயர் 'அஸ்வவர்மன்'. அஸ்வ வர்மனுக்கு 'வம்சகர்தா' என்றொரு பெயரும் உண்டு. குடும்ப விருத்திக்காக வம்சகர்தா என்ற பெயரைச் சூட்டி உள்ளார்கள்.

அஸ்வவர்ம அரசனுக்கு மூன்று ஆண் பிள்ளைகள். இந்த மூவரில் 'மூலவர்மன்' தான் பிரசித்தி பெற்றவன். மூலவர்ம அரசன் மக்க ளின் நலனில் அதிகம் கவனம் செலுத்தி நாட்டை நல்லவிதமாக நிர்வகித்து வந்த தோடு இந்து சமயச் சடங்குகளில் முக்கிய கவனம் செலுத்தி யாகங்கள் பல செய்து மக் களுக்கு மாடுகளைத் தானமாகக்கொடுத்து மக் களின் அன்பிற்கு ஆளானான் என்று கல்வெட் டுகள் கூறுகின்றன.

ஐந்தாம் நூற்றாண்டிலேயே இந்துசமயம் இந்தோனேசியாவில் வேர் ஊன்ற ஆரம்பித் துவிட்டதற்கான ஆதாரங்கள் நிறையக் கிடைக்கின்றன. ஆறும் நூற்றாண்டின் மத்தி யில் ஜாவாவில் வலுவான இந்து அரசாட்சி நடந்ததற்கான கல்வெட்டுகள் கிடைத்துள் ளன. ஒரு கல்வெட்டில் பின்வரும் செய்தி காணப்படுகின்றது. பரிசுத்தமான நீர் ஊற்று ஒன்று காணப்பட்டது. அப்புனித நீர் இந்தி யாவிலுள்ள கங்கை நீருக்குச் சமமாகக் கூறப் பட்டுள்ளது. அதே கல்வெட்டில் திரிசூலம், பாதங்கள், சங்குகள் மற்றும் சில ஆயுதங் களின் படங்களும் காணக்கிடக்கின்றன. இவை யாவும் இந்துசமயச் சின்னங்களாகும்.

தாங் (Tang) என்பவர் சீனநாட்டு யாத் திரிகர். இவரது குறிப்பில் பின்வரும் செய்தி கள் காணப்படுகின்றன. காலிங்கர்களின் பூமி செழிப்பான பூமி. மக்கள் செழிப்போடும் அமைதியோடும் வாழ்ந்து வருகின்றனர். அரசனின் சிம்மாசனம் தந்தத்தால் செய்யப் பட்டது. மக்கள் நல்ல கல்வி அறிவுடையவர் கள். வானசாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்ற வர்கள். கலிங்கர்களில் ஒருபகுதியினர் தென் னங் கள்ளைக் குடிக்கிறார்கள். கலிங்கர்கள் உணவு உண்பதற்கு சீனர்களைப் போல் குச்சி யையோ கரண்டியையோ உபயோகிக்காது கையையே உபயோகிக்கிறார்கள் என்று ஆச்ச ரியத்தோடு குறிப்பிட்டுள்ளார். ஜாவாவில் அமையப்பெற்ற இந்தக் கலிங்க அரசை சீமா என்ற அரசி ஆண்டிருக்கிறார். இவரின் ஆட் சிக்குட்பட்ட மக்கள் நேர்மையானவர்கள் என்றும் வீதிகளில் ஏதாயினும் பொருட்கள் காணக்கிடைத்தாலும் அதை அவ்வூர் மக்கள் தொடமாட்டார்கள் என்றும் தாங் தெரிவித் துள்ளார். இந்த நாட்டில் இன்றும் கிலிங் என்றால் தமிழர்களைத்தான் குறிக்கும். இந்த சீமாவின் ஆட்சிக்காலம் கி. பி. 640 ஆகும்.

கி.பி 664ல் ஈத்சிங் என்ற சீன யாத்ரீக ரின் குறிப்பில் சீன புத்த குருக்கள், காலிங் (Keling) அரசுக்கு வந்து புத்த காவியத்தைச் சீன மொழியில் மொழிபெயர்த்துச் சென்ற தாக தெரிவித்துள்ளார். ஒலிங்-காலிங்-கிலிங் என்ற பதம் இன்றும் தமிழர்களைக் குறிக்கும் ஒரு பதம். இந்த காலிங் அரசுக்கும் தமிழர் களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என் பதை கவனிக்க வேண்டியதவசியம்.

சிறிய பல அரசுகளாகச் சிதறிக்கிடந்த அரசுகளை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து ஒரு பெரிய சாம்ராச்சியமாக அமைத்த பெரு மை அரசர் 'ஆயம்வுருக்'கையும் அவர்தம் பிரதான மந்திரி 'காஜாமாடா'வையுமே சாரும். இவர்கள் அமைத்த சாம்ராச்சியம் தான் 'மாஜாபாயித்' என்ற சாம்பிராச்சியம். இந்தோனேசியா முழுமையும் சிங்கப்பூர் (துமாசி -Tumasik) மலாயா போன்ற நாடு களும் உள்ளடங்கியதாக நாடு சயாங்கா (Sian - Mungthai) முதல் மா (Birma) சம்பா (Kamboja வரை (Tongkinamman) இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் நல்ல நட்புறவு பூண்டு பெரிய விரிவான முறையில் வாணிபத்

தில் ஈடுபட்டு மக்களை சுபீட்சத்தோடும் அமைதியோடும் வாழ வழி வகுத்துத் தந்த தோடு நாட்டில் பல இந்து ஆலயங்களையும் பௌத்த ஆலயங்களையும் எழுப்பி மக்களை சமயவாதிகளாக வாழ வைத்தனர். இந்நாட்டின் சின்னம் இரண்டு மீன் (Minadwaya) கொண்டது தான்.

1328ல் மாஜபாயித் மன்னர் காலம் அடைந்தார். 1364ல் பிரதான மந்திரி காஜாமாடாவும் காலமடைந்தார். வலுவான கைகள் ஓய்ந்த பிற்பாடு மாஜாபாயித் சாம்பிராச்சியத்தின் பதவி போய்விட்டதால் உள்நாட்டுக் கலவரங்கள் மூண்டு மாஜாபாயித் சாம்பிராச்சியம் ஆட்டங்கண்டு சிதறிப் போய்விட்டது. அதோடு மற்றச் சமயக் கொள்கையும் நாட்டில் வேரூன்ற ஆரம்பித்தது.

இந்நாட்டில் மக்கள் ஏற்றுக்கொண்ட இந்துசமயம் அரசர்களின் பாதுகாப்பில்தான் இருந்தது. மக்கள் இந்துசமயத்தைப் பேணிப் பாதுகாக்க பிராமணர்கள் விட்டுக்கொடுக்காது தாமே சமயத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லிக்கொண்டு அரசர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தும் சமயத்தைப் பாதுகாக்காது சுகபோகத்தில் நீந்திக்கொண்டிருந்தனர். இச்சமயத்தில் இந்து சாம்பிராச்சியங்கள், அரசுகள் கவிழ்ந்தன. இத்தருணத்தில் இந்துசமயமும் ஆட்டங்கண்டு பின்தங்கி சிறுமை அடைந்தது. இந்தோனேசியா சுதந்திரம் அடைந்த பிற்பாடுதான் இந்துசமயத்திற்கு மறுபடியும் ஓர் மலர்ச்சி ஏற்பட்டது.

இந்தோனேசியாவில் வசிக்கும் ஒருகோடி இந்துக்களும் நூற்றுக்கு நூறு இந்துக்களாகவே வாழ்கின்றார்கள். மக்கள் சமயக் கருத்துக்களை நன்கு மனதில் பதித்து நல்ல சமய ஒழுக்கமுள்ளவர்களாய் புரிந்துணர்வோடு வேற்றுமை இன்றி ஒற்றுமையோடு வாழ்கின்றார்கள். அரசாங்கமும் சமயக் கருத்துக்களை தவறான நோக்கத்தோடு பிரச்சாரம் செய்து மக்கள் மனதில் வேற்றுமை எண்ணங்களை ஏற்படுத்திவிடாமல் பார்த்துக் கொள்ளுகின்றது. இந்தோனேசியாவில் இந்துக்களின் எண்ணிக்கை சிறியதாக இருந்தாலும் அவர்கள் நாட்டிற்கு ஆற்றும் தொண்டும் கொண்டுள்ள விசுவாசமும் மிகவும் பெரியது.

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியை இந்தோனேசிய மக்கள் நன்குணர்ந்து தமது சமய வழிபாட்டிற்குரிய ஆலயங்களைத் தாமே அமைத்துக்கொண்டனர். இந்து சமயப் பண்பாடு, சிற்பக்கலை, நாட்டியக்கலை யாவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இன்றும் இந்தோனேசிய இந்துக்கள் தூய இந்துக்களாக உலக இந்துக்களுக்கும் மற்றைய சமயங்களுக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருகின்றனர்.

நம்முடைய தேசிய மந்திரமாக இருப்பது தேசிய லட்சியமாக இருப்பது. மானிட வர்க்கத்திற்கே லட்சியமாக இருப்பது காயத்திரி மந்திரமாகும். வேதத்தினுடைய சாரம் காயத்திரியில் அடங்கி இருக்கிறது. மானிட வாழ்க்கையின் இலட்சியத்தை அது விளக்குகிறது. தத்துவப்பூர்வமாக காயத்திரி மந்திரத்தைச் சரியாக அறிந்து பிரயோசனப் படுத்துபவர்கள் இந்தோனேசிய இந்துக்கள். தினமும் காயத்திரி மந்திர ஜெபம் செய்வதில் அவர்கள் தவறுவதில்லை. இன்றும் சமையல் முடிந்ததும் ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்து உண்ணும் பழக்கத்தை தவறாது மேற்கொண்டுள்ளனர். வேத உண்மைகளும், மகாபாரதம், இராமாயணம் போன்ற நூல்களின் படிப்பினைகளும் மக்கள் மத்தியிலே நன்கு பரப்பப்பட்டு வருகின்றன. ஆலயத்திற்கு அழகையும் கம்பீரத்தையும் கொடுப்பது கோபுரமே. கோபுரம் இல்லாத கோயில்களே இங்கு காணமுடியாது. கோபுர தரிசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து 'கோபுர தரிசனம் பாபவிமோசனம்' 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற பழமொழிகளை உண்மைப்படுத்தியுள்ளார்கள்.

இந்தோனேசியாவில் வசிக்கும் இந்துக்கள் நாட்டிற்குப் பக்தியோடும் விசுவாசத்தோடும் ஆற்றும் சேவை மிகப் 'பெரியது' என்று ஜனாதிபதியான 'சுஹார்த்தோ' சமீபத்தில் இந்துக்கள் மத்தியிலே விதந்து கூறியுள்ளார்.

வாழவேண்டும் என்று கேட்ட பாரதி இறக்க வில்லை, புகழோடு நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். 'சாவினை வேண்டேன், தவிர்ப்பாய்போற்றி' என ஓரிடத்தில் கூறியுள்ளார்.

''சாகா வரமருள்வாய்--ராமா
சதுர்மறை நாதா—சரோசபாதா''
எனப் பிறிதோரிடத்தில் கூறுகிறார்.

அருட் பிரகாச வள்ளல் பெருமானும் 'மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்' என அழைக்கிறாரல்லவா? இறைவனின் திருவடியைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'சாகாவரந்தந்த தாரகபாதம்'- எனவும் வள்ளலார் குறிப்பிடுவார்.

இறைவழிபாட்டில் மேன்நிலையடைய பாரதி பட்ட துன்பத்தையும், உருக்கத்தையும் பல பாடல்கள் வாயிலாக அறியலாம்.

''கண்ணுங் கருத்துமெனக் கொண்டு—அன்பு
கசிந்து கசிந்துகசிந் துருகி—நான்
பண்ணும் பூசனைக ளெல்லாம்—வெறும்
பாலை வனத்தி லிட்ட நீரோ''

இப்பாடலில் வழிபாடு எப்படி அமைய வேண்டும் என்பதை தெளிவாகக் காட்டுகிறார். கை யொன்று செய்ய, வாய் ஒன்று சொல்ல வழிபாடு ஆற்றுவோர் பலருண்டு. கண்ணும் கருத்தையும் பூசையில் ஒன்றுபடுத்த வேண்டும். மன மொழி, மெய்களானவை வழிபாடே உகந்தது. எண்ணங்களை ஒரே நோக்கில் செலுத்த வேண்டும். எங்கும் எந்நேரமும் இறைவனின் திருப்பெயரை உச்சரித்தபடி இருக்க வேண்டும். மென்றாலும், தூங்கினாலும், விழித்தாலும், நடந்தாலும் மாறவாத நிலையடைய வேண்டும்! என்பதை 'கண்ணுங் கருத்துமெனக் கொண்டு என்ற வரிகளில் காட்டுகிறார்.

ஒரு சொல்லை, ஒரு முறைக்கு மேற்பட்டு அடுக்கினால்அழுத்தம் ஏற்படும். இங்கு கசிந்து என்ற சொல்லை மூன்று முறை உச்சரித்து உருகுகிறார். ''இப்படியெல்லாம் ஒன்றுபட்ட மனத்துடன் பூசை செய்யும் இவையெல்லாம் பாலைவனத்தில் ஊற்றிய நீராக மாறி விடுமோ, பயன் விளையாதோ அம்மா'' என எக்கி வினவுகின்றார்.

மகா சக்தியிடம் ஒரு விண்ணப்பம் விடுகின்றார் பாரதி. ''மோகத்தை கொன்று விடு, அல்லாலென்றன் மூச்சை நிறுத்திவிடு. பந்தத்தை நீக்கிவிடு, அல்லாலுயிர் பாரத்தைப் போக்கிவிடு'' இப்படி துணிவாக உரிமையாக கேட்க பாரதியால்தான் முடியும். மோகம் மனிதனைக் கொன்று விடும், அந்த மோகத்தையே கொன்றுவிட வேண்டுமாம். அப்படி இயலாவிடில் 'என்னுடைய மூச்சையே நிறுத்திவிடு' என கட்டளையிடுகின்றார்.

எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல நேசிக்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் பாரதி, அதனால் தான் ''நம்மை தின்ன வரும் புலி தன்னையும் அன்போடு சிந்தையில் போற்றிடுவாய்'' என பாடுகிறார். காணுகின்ற காட்சியெல்லாம் அன்னை பராசக்தியாகவே கண்டவர். அந்த புலியையும் அன்னை பராசக்தியாகவே நோக்குகின்றார்.

இப்படி உணர்வு நிலையில் வழிபாடு ஆற்றியதன் பயனாக அன்னை அவருக்குக் காட்சி தந்தாள். ஏதோ பெண் வடிவம் போல தோன்றுகின்றதே என்று அருகில் சென்று பார்த்தால் ஆதி பராசக்தியின் விஸ்வரூபத்தையே கண்டாராம். தானும் அவளும் இரண்டற்ற நிலைமாறி கலந்துவிட்டாராம். ''பின்பு நின்னையல்லால் காளி பிறிது நானு முண்டோ?'' என தான் என்பதே அங்கே இல்லாமல் ஒன்றுகலந்த நிலையை படம் பிடித்து காட்டுகிறார். அக்காட்சி அவரின் உள்ளத்தில் கிளுகிளுப்பை ஊட்டுகிறது. ஆடுகிறார், பாடுகிறார்:-

''தகத்த கத்தகத் தகதகவென் றுடோமோ – சிவ
சக்தி சக்தி சக்தியென்று பாடோமோ?''

என எக்களிப்போடு பாடிக் களிக்கின்றார்.

பாரதியின் வழிபாட்டில் பராசக்தி மிக சிறந்த இடத்தை பெற்றிருக்கிறாள். இருப்பினும் கணபதி, கண்ணன், சூரியன், அக்னி போன்ற தெய்வங்களையும் பாடியுள்ளார்.

பாரதியின் பக்திப் பாடல்களையெல்லாம் தொகுத்து ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை புலப்படுகிறது. உண்மையான பக்தனாகவும், தத்துவங்களை விளங்கி வந்த மேதையாகவும், ஏன் பெரிய ஞானியாகவும் தோன்றுகிறார். அவர் நாளும் இறைவனை வேண்டி பெற்ற ஆற்றலைக் கொண்டே, பின்பு கவிதை பலவற்றை படைத்திருக்க வேண்டும். அவர் படைத்த கவிதைகள் இன்னும் நிலைத்திருக்கிறதற்கும் அந்த இறையருளே துணையாக நின்று, வழிநடத்துகிறது என நம்பலாம்.

இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்கு இராமகிருஷ்ண மடங்களின் சேவை

— சுவாமி பிரேமாத்மானந்தா —

சுவாமி விவேகானந்தர் பாரதப் பிரதிநிதியாக 1893-ல் சீகாகோ சமயப் பாராளுமன்றத்தில் குழுமியிருந்த பலநாட்டுச் சமயப் பிரதிநிதிகளைக் கண்டு, எடுத்துக்கூறும் தமது தெய்வீக ஆற்றலால் அவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு இந்து சனாதன தர்மத்தை ஒப்பற்ற உலக மதமாக உயர்த்தி தாயகம் திரும்பும் பொழுது சுவாமிகளின் தெய்வீகப் பாதங்கள் நடமாடும் பாக்கியம் பெற்றது நமது நாடு. 1897-ல் கொழும்பு மாநகரில் சர். பி. இராமநாதன், சர். பி. குமாரசுவாமி, சர். பி. அருணாசலம் இந்து சமயத் தலைவர்களாக மக்கள் முன்னணியில் நின்று செயலாற்றியகாலம். எனவே, பெருமைப்பட வாழ்வாங்கு வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டிய இப்பெரியார்களின் நற்காலப் பகுதியிலே இராமகிருஷ்ண பரமஹம்சரின் திருவருள் பின்னுந்த அவருடைய பொக்கிஷமான முதற்சீடர் சுவாமி விவேகானந்தர் எமது மண்ணில் தெய்வசித்தப்படி காலடி வைத்தார். எமது நாடு புனித நாடாயிற்று.

கொழும்பில் 19–7–1897-ம் ஆண்டில் ''வேதாந்த தத்துவ ஞானம்'' என்ற சுவாமிகளின் சொற்பொழிவினுக்குத் தலைமை தாங்கிய பதிவாளர் நாயகம் (Registrar General) சர். பி. அருணாசலம் முகவுரையில் ''பேச்சாளர் இன்றிரவு எதிர்கால நல்லறுவடைக்கான ஆத்மீக விதையினை இடுவார்கள் என நம்புவதாக'' சுவாமிகளை அறிமுகஞ்செய்தனர். இது பொய்யா மொழியாக இராமகிருஷ்ண மடம் தனது ஆத்மீக அறுவடை 50 ஆண்டு நிறைவு விழாவினை மிகக் கோலாகலமாக 21-9-80ல் கொண்டாடியது. இந்து சமயம் வளர்ந்து வருகிறது என்பதற்கு இது ஓர் அத்தாட்சி.

செயல்திறன்படைத்த சுவாமிகள் இராமகிருஷ்ண சங்கத்தின் மடத்தின் நோக்கம்பற்றிக் கூறுகையில் 'வீழ்ந்துகிடக்கும் இன்றைய பாரதம் மறுபடியும் விழித்தெழ வேண்டும். இந்த மடத்திலிருந்தும் சங்கத்திலிருந்தும் தொங்கியெழுகின்ற தெய்வீக அலைகள் கங்கு கரையில்லா வெள்ளமெனப் பாய்ந்து மனித சமுதாயத்தைக்கூட மூழ்கடித்துத் துன்பம் துயர் என்பனவற்றைக் களைந்து பேரானந்தத்தின் நுழைவாயில்களுக்குமக்களை அழைத்துச் செல்ல வேண்டும். மடம் சங்கம் ஆரம்பிப்பதன் நோக்கம் இதுதான். வாழையடி வாழையாக இந்த நோக்கமும் நம்பிக்கையும் நமது சீடர்கள் மூலம் வெற்றிபெற நாம் அனைவரும் கங்கணங்கட்டிச் செயல்படவேண்டும். இந்த நோக்க அடிப்படையிலேயே 20-10-30 இல் சென்னை இராமகிருஷ்ண மடத் தலைவர் சுவாமி சர்வானந்தரால் இலங்கை இராமகிருஷ்ண சங்கம் நிறுவப்பெற்றது. சுவாமி சர்வானந்தரின் ஆத்மீக அலைகளுக்கு அடிபணிந்து தம்மை இராமகிருஷ்ணருக்கு அர்ப்பணித்த சுவாமி விபுலானந்தர் காரியதரிசியாக அன்று கடமையாற்றினர். அன்று அரும்பிய இந்த இராமகிருஷ்ண இயக்கம் போதாகி மலராகி இன்று கனிந்து நிற்கின்றது. நமது அரசாங்கமும் இதர மதத் தலைவர்களும் இந்துமத கலாச்சார அலுவல்களுக்குள்ள நமது யோசனைகளுக்குச் செவிசாய்க்கின்றனர்.

20-10-30க்கு முன்னருள்ள காலப் பகுதியிலே சுவாமி விவேகானந்தரின் ஞாபகார்த்தமாக 1902 ஜூலை மாதத்தில் கொழும்பு விவேகானந்த சபை உதயமாயிற்று. இச்சபையே பாரதத்திலிருந்து வருகை தரும் சுவாமிகளை வரவேற்று உபசரிக்கும் பெருமையும் புனிதமும் பெற்றது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில், மானிப்பாயில், மாத்தளையில், மட்டக்களப்பில், திருகோணமலையில், அநுராதபுரத்தில் விவேகானந்த சபைகள் உதயமாயின. 1930ல் இராமகிருஷ்ண சங்கம் தோன்றும்வரை மிஷன் அலுவல்கள் யாவும் விவேகானந்த சபை மூலமே சென்னை மடத்துச் சுவாமி சர்வானந்தா தலைமையில் சுவாமி விபுலானந்தர் பொறுப்பில் இலங்கையில் இயங்கலாயின. கண்டதும் மக்களைக் கவரும் ஆத்மீக அலைகள் நிரம்பப் பெற்ற சுவாமி சர்வானந்தர் அவர்கள் அடிக்கடி இலங்கை

வந்து தமது ஆழமான இனிய சொற்பொழிவு களால் இராமகிருஷ்ண இயக்கத்துக்கு பெரு மெருகூட்டி வலுவேற்றினர். இதற்கேற்ப சுவாமி விபுலானந்தரும் தமது பேச்சுத்திற மையால் மக்களை கவர்ந்து மிஷன்வழிப்படுத் தினர். சர்வானந்தரும் விபுலானந்தரும் குரு-சிஷ்யபாவனையில் இலங்கையில் இயங்கினர். விவேகானந்த சபைகள் இருந்த இடங்களி லெல்லாம் சிந்தனையைக் கவரும் 'கல்வி', இந்திய கலாச்சாரம், "கீதை கூறுவது" 'எமக்கு உதவும் கல்வி', 'சமயம் நாகரீகத் தின் உயிர்நாடி' 'எங்கள் பணித்திட்டம்' இந்த வாழ்க்கையின் 'உயர் நோக்கம்' என்ற இராமகிருஷ்ண மிஷனின் ஆணித்தரமான கொள்கைகளை எடுத்துக்கூறும் சொற்பொழி வுகளால் நின்று நிலவும் நிரந்தரத்தை மக் கள் மனதில் ஆழப்பதித்தனர்.

இதற்கு முன்னருள்ள காலப் பகுதியிலே (1897-1900) சுவாமி சிவானந்தர் உட்பட வுள்ள ஏழு இராமகிருஷ்ணரின் சீடர்கள் வரு கை தந்து சமயப்பிரசாரஞ் செய்து விவேகா நந்தர் ஏற்றி வைத்த ஞான தீபத்தை அணை யாதவாறு பாதுகாத்தனர். இந்த ஞானி களின் ஞான ஒளியையும் பெற்றது நமதுநாடு. இராமகிருஷ்ண சங்கத்தின் கொள்கைகளில் ஒன்றுகிய கல்வியிற் கவனஞ் செலுத்துதல் இலங்கை இராமகிருஷ்ண சங்கத்தில் மிகமுக் கிய இடம் பெற்றது.

மங்கி மண்டியிருக்கும் பெருவாரியான பாமர மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக் கம் வெற்றிபெற 'குருகுலவாச' கல்வி முறையே சிறந்தது எனக்கண்ட சுவாமிகள் கல்வியைப்பற்றிக் கூறுவதாவது. "மனிதருள் மறைந்துள்ள பூரணத்துவத்தை வெளிக்கொ ணர்வதே கல்வி எனவும், விருப்பம் தருகின்ற ஒழுக்கத்தை, திட்பம் ஊறுகின்ற மனத்தினை, கூர்மை தரும் புத்தியினை, எதனையும் சுயமா கச் செய்யும் ஆற்றலை தருகின்ற கல்வியே எமக்குத் தேவை. மனிதனை மனிதனுக்கும், ஆக்கபூர்வான ஒழுக்கம் தரும் ஆளுமையு டன் கலக்கும் கருத்துக்கள் தேவை. எமக்கே சொந்தமான அறிவுத்துறைகளைக் கற்றல் வேண்டும். இத்துடன் ஆங்கிலமும் மேலைத் தேய விஞ்ஞானமும் கற்றல் வேண்டும். போதிய அளவு ஊதியம் பெறவும் போது மான சேமிப்புக்கும் தேவையான தொழில்க ளைச் செய்வதற்கு ஏற்ற தொழிற் கல்வி தேவை என்பதை இன்றைய அரசு விரும்பும் கல்வித்திட்டத்தை அன்றே தீர்க்கதரிசி சுவாமி விவேகானந்தர் கூறிவிட்டார். இக்கல் வித்திட்ட அடிப்படையிலேயே முதற்தர மூன்று ஆங்கிலக் கல்லூரிகளும் 13 கலவன் பாடசாலைகளும் 4 பெண் பாடசாலைகளும் எல்லாமாக 20 கல்வி நிறுவனங்கள் இராம கிருஷ்ண சங்க மேற்பார்வையில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் கண் காணிப்பில் இயங்கின. மதவெறி பிடித்த ஊடுருவல்களை எவ்வாறு யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் அன்று தடுத்து நிறுத்தினர் களோ அவ்வாறே கிழங்கிலங்கையிலும் ஊடு ருவல்கள் இந்து பாடசாலைகள் அமைப்பதன் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டன. ஏழை எளி யவர், உயர்ந்த இழிந்த சாதி என்பன அகற் றப்பட்டன. நீதி நெறியில் நின்று பிறர்க்குத வும் நேர்மையராக எதிர்காலச் சந்ததியின ரான இளைஞர்கள் பயிற்றப்பட்டனர்.

இந்த இருபது கல்வி நிறுவனங்களில், சிவானந்த வித்தியாலயமும் இதனோடிணைந்த மாணவரில்லமும் அகில இலங்கைப் புகழு டன் கண்டாரைக் கேட்பாரை ஈர்க்கும் முதற்தர நிறுவனமாகக் கணிக்கப்படுகின் றன. உடல் பொருள் ஆவி அத்தனையும் அர்ப் பணித்து சுவாமி விபுலானந்தரால் இந்நிறு வனங்கள் அமைக்கப்பெற்றவையாகையால் சீரும் சிறப்பும் பேரும் புகழும் பொங்க இன் றும் கருமமாற்றுகின்றன. மட்டக்களப்பு மாணவரில்லத்தில் சுவாமி விவேகானந்தரின் நோக்கங்களைச் சிரமேற் கொண்டு பயபக்தியு டன் தலத்திலே வதியும் ஊண் உறக்கம் பாராது அல்லும் பகலும் அலைந்து திரிந்து அக்குழந்தைகளுக்காக அரும் பாடுபடும் கரும வீரரான சுவாமி ஜீவானந்தரின் சேவையை மெச்சாதார் இல்லை. நமது மிஷனும் பெரு மைப்படுகிறது.

'ஜீவ சேவையே சிவ சேவை' என்ற மந் திர ஆணிவேரில் இயங்கிய சாதி சமய வகுப் புப் பேதமின்றி கதிர்காம யாத்திரிகர்களுக்கு சேவை செய்த இராமகிருஷ்ண மடத்தை சென்ற அரசு சுவீகரித்து இன்று விந்தை தரும் புதை பொருள் காட்சிச் சாலையாக மாற்றியுள்ளது.

கொழும்பு இராமகிருஷ்ண ஆச்சிரமத் தில் வதியும் சுவாமிகள் பயபக்தியுடனை குருதேவருக்கு உரிய காலை மாலைப் பூஜைகளை யும், ஆத்மீகப் பணியினையும் வாழ்க்கைப் பிரச்ச னைகளையும் தீர்க்கவரும் பக்தர்களுக்குசாந்தி

உரைகளையும், குருதேவர் பற்றிய வாழ்க்கை வரலாற்றினையும், கீதை வகுப்புகளையும் நடத்தினர்கள். ஞாயிற்றுப் பாடசாலையில் சிறுவர்களின் எதிர்கால இந்துமத உணர்வுடன் ஆன எதிர்கால வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் சேவையினை தம்மை அர்ப்பணித்துக் கருமமாற்றும் ஆசிரியர் குழு செய்து வருகிறது. ஆண்டுதோறும் ஸ்ரீ இராமகிருஷ்ணர், சாரதா அன்னை, சுவாமி விவேகானந்தரின் குருபூசைகளும், கிருஷ்ண ஜயந்தி, நவராத்திரி, சிவராத்திரி விழாக்களும், பல்வேறு சமயத்தலைவர்களின் பிறந்த தினக் கொண்டாட்டங்களும் விமரிசையாக நடைபெறுகின்றன. மிஷன் பிரசுரங்களை விற்கும் புத்தகசாலை யொன்றும் பக்தர்கள் பயன்பட வாசிக்கக்கூடிய நூல் நிலைய மொன்றும் செயற்படுகிறது. பகிரங்க கூட்டங்கள், சமூக சமய ஆன்மீக கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற சுவாமி விவேகானந்தரின் ஞாபகார்த்த மண்டபமும், சர்வதேச கலாச்சார மண்டபமும், இராமகிருஷ்ணமிஷனைச் சர்வதேச புகழுக்குரிய ஸ்தாபனமாக உயர்பீடத்தில் வைக்கின்றன. அன்று 1930ல் சிறிய வாடகை வீட்டில் ஆரம்பித்த மிஷன் இன்று கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய கவினுறுமாற்றங்களோடு கூட்டங்களுடன் நிரந்தர நீடுழிபெற்று சர்வதேச புகழ்பெறும் ஒப்பற்ற ஸ்தாபனமாக விளங்குவது, ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரின் அருள்நோக்கினால். கண்டாரைக் கவரும் கம்பீர தோற்றமும் தட்டியெழுப்பும் வீரம் செறிந்த அழகும், உண்மையும், செம்மையும் பொருந்திய சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களினால், சுவாமி விவேகானந்தரை அடுத்து வந்த இராமகிருஷ்ணரின் சீடர்களான 7 துறவிகளின் தெய்வீகப் பாதங்கள் இம்மண்ணில் உலவியதனால் ஆகும். மேலும் சுவாமி சர்வானந்தா அவர்கள் அடுத்தடுத்து இலங்கை வந்து அவருடைய அற்புதச் சொற்பொழிவுகளினால் மிஷனின் நற்சேவையை மக்கள் மனதில் நிரந்தரமாகப் பதியவைத்தும், நிரந்தரமாக ஆச்சிரமத்தில் வதியும் துறவிகளின் இறைவனுக்கு ஒப்படைத்த பணிச்சேவையினாலுமாகும்.

தம்மை அர்ப்பணித்துச் சேவை செய்யும் அவர்களின் செயல் திறம், சாதி சமய வகுப்பு வித்தியாசங் காட்டாமல் மக்களால் மக்களுக்கு மக்களின் கருமபீடமாக மிஷன் இயங்குதல் 'உண்மை ஒன்று ஞானிகள் பல பெயரிட்டு இதனை அழைப்பர்' என்ற தாரக மந்திரம் மிஷனின் அச்சாணியாக விளங்குதல் இவையாவுமே சேர்ந்து தொனிக்கும் ஆருமையே இராமகிருஷ்ண சங்கமும் மடமும் ஆகும். பலரும் பெருமைப்பட உயர்த்திவைத்த எமது குருதேவருக்கும், அன்னையாருக்கும் சுவாமிஜீ அவர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துவோமாக.



'தேடுங்கள் கண்டடைவீர்கள்' என்பது ஏசுநாதர் வாக்கு;

'எங்கே நிம்மதி? அங்கே கிடைக்குமா, இங்கே கிடைக்குமா?' என்று தேடினால் நீங்கள் காணமாட்டீர்கள்;

அது உங்கள் உள்ளத்துக்கு உள்ளேயே ஒளி மயமாக நிற்கிறது.

பாண்டவர்களும் வன்வாசம் புரிந்தார்கள்; ராமனும் வனவாசம் சென்றான்; தேவர்களும் ஒளிந்து வாழ வேண்டியிருந்தது.

கேட்டவர்களுக்கெல்லாம் வரம் கொடுத்த சிவபெருமானுக்கும் நிம்மதியற்ற காலம் இருந்தது.

நிம்மதிக் குறைவு என்பது எல்லோருக்கும் ஒரு நாள் வந்தே திருகிறது.

பணக்காரனாயினும், ஏழையாயினும் வாழ்க்கைப் பயணத்தில், ஏதோ ஒரு சக்கரத்தில் காலைக்கொடுத்துவிடுகிறான். கொஞ்சக் காலம் அது அவனை வாட்டி எடுக்கிறது,

ஜீரணிக்கத் தெரிந்தவனுக்கு மலை கடுகளவு;
அது தெரியாதவனுக்கு கடுகு, மலையளவு.

— அரித்துவாரமங்கலம் இந்துமதம்

WITH BEST COMPLIMENTS FROM



Manufacturers of

JAMS, CORDIALS, FRUIT JUICES AND CANNED FRUIT.

FRUTO INDUSTRIES LTD.

688, Marbole, Wattala.

T'Phone: 548289

WITH BEST COMPLIMENTS FROM

IF YOU ARE IN NEED OF
ANY PRINTING
Please Call Over At

STANLEY PRESS

30, New Chetty Street,
COLOMBO-13.

T'Phone: 25137

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!

சோலை கோர்ப்பரேசன்
SOLAI CORPORATION

HIRERS OF CENTERING MATERIALS (STEEL & TIMBER)
AND CONTRACTORS.

B-9 FAIRLAND, SALEM-636004
PARTNER M. S. O. ANNAMALAI-B. E.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்
போற்றுகேரும் உங்கள் சேவை புனிதமானதென்றே நாமும்



SELLA MUTTU'S

A
NAME
ASSOCIATED WITH THE LATEST AND BEST
IN
TEXTILES
SINCE 1894

130, Second Cross Street
COLOMBO-11.

Tele: **24143**

BRANCH:

64, Main Street,
HATTON.

WE WISH WORLD HINDU CONFERENCE 1982
ALL SUCCESS



RAJANIEKA
JEWELLERY MERCHANTS

No. 13, Colombo Road - Kaluwella,
GALLE.

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!



P. I. S. S. IYANGAN NADAR & Co.

GENERAL WHOLESALE MERCHANTS,

No. 8, Matara Road,
GALLE.

Telephone: 2421

Telegrams: "THANGAMANY"

மண் தோன்றி மனுதோன்று காலத்தே
அவன் ஊன்றி அருள்புரி இவ்வையத்துள்
எஞ்ஞான்றும் மேன்மை கொள் எங்கள் நீதி
என வாழ்த்துகின்றேம் தமிழ் பேசும் இந்துக்களெல்லாம்....

With Best Compliments of

MESSRS.
UNITED GARMENTS INTERNATIONAL LTD.,

LEADING EXPORTERS OF READY MADE GARMENTS.

FACTORY:
No. 8, OLD AIRPORT ROAD,
RATMALANA.
T'Phone: 716141/715441/71332.

HEAD OFFICE:
130, 2nd CROSS STREET,
COLOMBO-11.
T'Phone: 547766/24143.
Cable : **UNIGARM**
Telex : 21492 **UNIGAM CE**

வெற்றிகாட்டும் விநாயகரும் கருப்பையடி அம்மனும்

எழுந்தருளி திருவருள் பாலிக்கும்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த,

அமரர்கள் ஆ. வ. கந்தையா-சின்னத்தங்கம்

தம்பதியினரின் ஞாபகார்த்தமாக

அன்னரின் பிள்ளைகளின்

அன்பளிப்பு

With Best Compliments of



THE ART GRAFTSMANSHIP PERFECTED BY
30 YEARS OF GOLDEN EXPERIENCE

Lalitha Jewellery Mart

103, 105, Sea Street,
COLOMBO-11

DIAL: 23691, 31993

பீஜித்தீவுகளில் இந்துமத வளர்ச்சி

— சாயிநாதன் — பீஜி —

உலகம் முழுவதிலும் இந்து மதம் பரவியிருந்த காலத்திலேயே இங்கும் இந்து மத வழிபாடு நடை பெற்றிருக்கிறது. உலகத்திலே இந்தியர்கள் எத்தப்பக்கத்தில் சென்று குடியேறினாலும் அவர்கள் தமது நாகரீகம், பண்பாடு, சமய நெறி முதலியவற்றை எடுத்துச் செல்லத்தவறவில்லை. அவரவர் வழிபாட்டிற்கு ஏற்ப கோயில்களையும் பிரார்த்தனைக் கூட்டங்களையும் ஆங்காங்கு நிறுவினர்கள்.

தென்மேற்குப் பசுபிக் சமுத்திரத்தில் சமோவா தீவுக்குத் தென்மேற்கில் இருக்கும் தீவுக் கூட்டம் பீஜித்தீவுகள் என்று அழைக்கப் படுகின்றன. பீஜித் தீவுக்கூட்டத்தில் 250 தீவுகளுக்கு மேல் உள்ளன. அத்தனை தீவுகளும் எரிமலையால் உண்டானவை. இங்கு தென்னை, கரும்பு, நெல், வாழை முதலியன விளைகின்றன. இங்குள்ள கரும்புத்தோட்டங்களில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் வேலை செய்கின்றனர்.

இங்குள்ள கரும்புத் தோட்டங்களில் இந்தியர் பட்டபாட்டைப் பற்றி பாரதியார் மனமுருகிப் பாடியிருக்கின்றார்.

கரும்புத் தோட்டத்தில் — அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து வீழும்படி
வருந்துகின்றனரே! — ஹிந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்குகின்றனரே! — அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோ! ஒரு
மருந்திதற்கில்லையோ? — செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின்றார்!

பீஜித்தீவு பசிபிக்கின் போக்கு வரத்து மையங்களில் முக்கியமானது. இங்குள்ள மக்களில் ஐரோப்பியர் 6,500 பேர்; பீஜியர் 1,30,000பேர்; இந்தியர்1,38000 பேர். இங்குள்ள சுதேசிகள் ஒரு காலத்தில் நரமாமிசம் புசித்தவர்கள்.

சுமார் 600 ஆண்டுகளுக்குமுன் இந்தியர்கள் இங்குள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஐரோப்பியர்களால் கொண்டுவரப்பட்டவர்கள். பீஜி, இலங்கை, தென் ஆபிரிக்கா போன்றநாடுகளை பொன் கொழிக்கும் நாடாக்கிய பெருமை இந்தியமக்களையே சாரும்.

துன்பத்தின் மத்தியிலும் இவர்கள் தமது சமயநெறியைக் கைவிடவில்லை. இங்குள்ள வட இந்தியர் துளசிதாசருடைய இராமாயணத்தை முறையாகப் படித்து இராம வழிபாடு செய்தனர். தென்னிந்தியர் மாரியம்மன் கோயில் கட்டி வழிபாடு செய்தனர். இலங்கையிலும், இந்துனேசியாவிலும், மலேசியாவிலும் மாரியம்மன் வழிபாடே மிக்கிருப்பதை இன்றும் காணலாம். பாடசாலைகள் இல்லாத தோட்டப்பகுதிகள் இருக்கின்றன. ஆனால் மாரியம்மன் வழிபாடில்லாத தோட்டங்களே கிடைக்கா. மக்களுக்கிடையே ஓரளவு பொருள் வசதி கூடியபோது மற்றைய கோயில்களும் கட்டினர்.

தலைநகரமாகிய 'சூவா' என்பது முக்கியத் தீவுகளில் ஒன்றுகிய 'வீட்டிவெலு' என்பதின் தென்கிழக்குக் கரையில் இருக்கிறது. 'நாண்டி' என்ற இடத்தில் பெரிய விமானத் துறை இருக்கிறது. இங்கு 1900ம் ஆண்டில் இராமசாமிப்பிள்ளை என்பவரால் முருகப்பெருமானுக்கு ஒரு கோயில் எழுப்பப்பட்டது. எல்லாருடைய ஒத்துழைப்பும் இக்கோயில் கட்டுவதற்குக் கிடைத்தது. 'சுவா', 'பா' ஆகிய நகரங்களில் மாரியம்மன் கோயில்கள் எழுந்தன. ஆண்டுதோறும் இராம நவமி, கோகுலாஷ்டமி போன்ற விழாக்களும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

1960ம் ஆண்டில் விஷ்ணு கோயில் ஒன்றும், 1977ம் ஆண்டில் ஹரேகிருஷ்ணு இயக்கத்தினால் ராதாகிருஷ்ணன் கோயிலும் 'ல்டோகா' நகரில் கட்டப்பட்டன. இக்கோயில்களில் வாரந்தோறும் தவறாது பிரார்த்தனைக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

1890ம் ஆண்டு பீஜியைச் சேர்ந்த மற்றொரு தீவில் 'பாலாஜி' என்ற கோயில் கட்டப்பட்டது. இதனைக் கட்டியவர்கள் தென்னிந்தியச் சங்கத்தினராவர். இக்கோயிலின் கும்பாபிஷேகத்தை, 'சுவாமி பாஷ்கரன் ஆரண்யா' என்பவரின் நேரடிக் கட்டளைப்படி இராஜ தேசிகர் என்பவர் நடத்தினர். வேதாகம விதிகளின்படி இக்கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேற்கு மலேசியாவில் இந்துசமயம்

— சி. மு. பொன்னையா B. A. —

மலேசியாவில் வாழும் குடிமக்கள்

எச்சமயத்தவராயினும் சரி அவர்கள் எல்லோருக்கும் சமயசுதந்திரம் உண்டு. மலேசியாவின் தேசிய சமயம் 'இஸ்லாம்' ஆகும். ஆனலும் அரசாங்கம் இந்துக்கோவில்கள், ஆச்சிரமங்கள், பள்ளிகள் போன்ற பல அற நிறுவனங்களுக்கு தொடர்ந்து நிதியுதவி அளித்து வருவது மெச்சப்படவேண்டிய ஒன்முகும்.

மலேசியாவில் கிட்டத்தட்ட 10 லட்சம் இந்தியர்கள் வாழுகின்றனர். இவர்களில் ஒரு லட்சம்பேர் கிறிஸ்தவர்கள். 60 ஆயிரம்பேர் சீக்கியர்கள். 40 ஆயிரம்பேர் முஸ்லீம்கள். 8 லட்சம்பேர்கள் இந்துக்களாக இருக்கின்றனர். இந்துக்களில் தமிழர்கள், வடநாட்டவர் என்று பல பிரிவினர் இருக்கின்றனர். இவர்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படும் உத்தியோகங்கள் பலவாருக இருக்கின்றன. எனினும் பெரும்பகுதியினர் தோட்டங்களில் வாழ்கின்றவர்களே. மலேசியாவில் வாழும் இந்துக்கள் சௌரம், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம் என்ற ஆறுவகை இறைவழிபாட்டையும் பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர்.

திருவிழாக்கள்

மலேசிய இந்துக்கள் பல திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். இந்துப் புத்தாண்டு, கோகுலாஷ்டமி, இராமநவமி, தீபாவளி, தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, வைகுண்டஏகாதசி, பங்குனிஉத்திரம், மாசிமகம், ஆடிப்பூரம், தைப்பொங்கல், திருக்கார்த்திகை, திருவாதிரை, விநாயக சதுர்த்தி போன்ற திருநாட்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்நாட்டில் தீபாவளி தினம் பொதுவிடுமுறையாக நாடுமுழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாட்டில் வாழும் பலவின மக்களும் கூடிமகிழ்கின்ற திருநாளாக மாறியுள்ளது.

நகரங்களில் வாழும் மக்கள்

நகர மக்களின் சமய வாழ்க்கை தேவாலயங் களோடு இணைந்திருப்பதைக் காணலாம். புதிய ஆலயங்களைக் கட்டுவதும், பழமையான ஆலயங்களைச் செப்பனிட்டுக் கும்பாபிஷேகங்களை நடத்துவதும் ஒவ்வொரு ஆண்டிலும் நிகழக் காண்கிறோம். நகரமக்கள் இந்து சமயத்தோடு தொடர்புடைய சில கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, நவராத்திரி விழாவின்போது தொடர்ந்து ஒன்பது நாட்களிலும் கலைநிகழ்ச்சிகளை நடத்திவருகின்றனர். இந்நிகழ்ச்சிகளில் சமயவழிபாடும், தமிழிசையும், பரதநாட்டியமும் இடம் பெற்று வருகின்றன. இதே போன்று மார்கழி மாதத்தில் தொடர்ந்து முப்பது நாட்களுக்குத் திருவெம்பாவை, திருப்பாவை ஓதப்பெற்றுவருகின்றன. இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் பெண்கள் சிறந்த பங்காற்றி வருகின்றனர்.

வடநாட்டினர்:

தமிழர் அல்லாத இந்துக்கள் பலர் இந்நாட்டில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் நகர்ப்பகுதிகளில் ஆங்காங்கே தேவாலயங்கள் அமைத்துக் கிருஷ்ணபகவானை வழிபட்டு வருகின்றனர். கோகுலாஷ்டமி, இராமநவமி போன்ற திருநாட்களைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தம்மக்களுக்கு வடமொழி வகுப்புக்களையும், பஜனைகளையும் பயிற்றுவித்து வருகின்றனர். இந்நாட்டில் இயங்கிவரும் இராமக்கிருஷ்ண இயக்கங்களுக்கும், இந்து ஆச்சிரமங்களுக்கும் பொருளுதவி செய்துவருகின்றனர். கீதா உபதேசங்களுக்கும், வேத விளக்கங்களுக்கும் வகுப்புகள் நடத்திவருகின்றனர்.

தோட்டங்களில் வாழும் மக்கள்:

பெரும்பான்மையான இந்துக்கள் தோட்டப்புறங்களில் வாழ்ந்து வருவதால், இந்துக்களுக்காக ஆலயங்கள் எங்கும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தோட்டங்களில் மிகுதியாக மாரியம்மன், காளியம்மன் கோயில்களும் முனீசுவரன் அல்லது முனியாண்டி கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. சிறு தெய்வ வழிபாடும், தீமிதித்தல் போன்ற செயல்களும்

காண்கின்றோம். சிறு தெய்வ வழிபாட்டின் பொழுது உயிர்பலியிடுதல், குடிவகை படைத்தல் போன்ற பிழைபட்ட செயல்களும் செயலில் இருந்து வருகின்றன. ஆலயங்களில் பூசைகள் அன்றுடம் நடத்தப்பட்டு வந்த பொழுதிலும், அதன் பொருள் உணர்ந்து வழிபடுந்தன்மை மக்களுக்கு இல்லை. மக்களின் கல்வியின்மையே இதற்குக் காரணம். இந்தக் குறைகளை நீக்குவதற்காகச் சமயப் பயிற்சி பெற்று வரும் தமிழாசிரியர்கள், தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சமய பாடங்களைப் போதித்துத் தேவாரத் திருமுறைப் பாடல்களுடன் முறையான வழிபாடு நடைபெறுகின்ற நிலைக்குத் தோட்டப்புற மக்களை வரச் செய்ய வேண்டும். இதனைச் செய்வார்கள் என்று நம்புதற்கிடமுண்டு.

ஆலயவழிபாடு:

இந்து மக்கள் தம் இஷ்ட தெய்வங்களை வாரந்தோறும் குறிப்பிட்ட ஒரு நாளில் சென்று வலம்வந்து, அருச்சனை செய்து, தியானம் செய்து, பிரசாதம் பெற்று இறைவனை வழிபட்டு வருகின்றனர். குடும்பத்தினரோடு ஒன்று சேர்ந்து ஆலய வழிபாடு செய்துவருகின்றனர். ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனை உலகத்தின் அரசனாக மதித்து வழிபடுகின்றனர். திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். தேவாலயங்களிலேயே தம் மக்களின் திருமணங்களை நடத்திவருகின்றனர். சமய நூல்களைப் படிக்கவும் கேட்கவும் முயல்கின்றனர்.

இல்லத்தில் வழிபாடு:

இந்துக்கள் வாழும் இல்லங்களில் அன்றுடம் இறை வழிபாடு நடத்துகின்றனர் பலர். இறைவன் படத்தையோ அல்லது உருவத்தையோ வைத்து நீரும் மலரும் இட்டு வழிபடுகின்றனர். இறைவனைத் தம் இல்லத்திற்கு வந்த விருந்தினராக வைத்து வழி படுகின்றனர். இறைவழிபாட்டு முறைகளை வீட்டிலேயே கற்றுக்கொள்ளுகின்றனர். இளைஞர்கள் தேவாரப் பாடல்களைப் பாடவும் படித்துக்கொள்ளுகின்றனர். காலையிலும் மாலையிலும் இவ் வழிபாடு நடந்து வருகிறது என்று கூறலாம்.

கூட்டுவழிபாடு தியானம்:

சமயச் சார்புடைய இயக்கங்கள் பல கூட்டுப்பிரார்த்தனை முறைகளை துவக்கியுள்ளன. இக் கூட்டுப்பிரார்த்தனைகளில் நாமாவளி, தியானம், நூல் விளக்கம், சமய விசாரணை, வழிபாடு போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. இத்தகைய கூட்டு வழிபாடு பல இடங்களில் வாரந்தோறும் நடைபெற்று வருகின்றன.

அந்தர்யோகம்:

பொது விடுமுறை நாட்களிலும், புண்ணிய தினங்களிலும் இந்நாட்டில் இயங்கிவருகின்ற திருமன்றங்களும் திருக்கூட்டங்களும் அந்தர் யோகங்களை நடத்திவருகின்றனர். ஒருநாள் முழுவதும் நடைபெறுகின்ற இந் நிகழ்ச்சிகளில் வழிபாடு, தியானம், சொற்பொழிவு, ஆலயத்தொண்டு போன்ற செயல்களில் மக்கள் ஒன்று கூடி ஈடுபட்டுவருகின்றனர்.

குருபூசைகள்:

நாட்டில் பல விடங்களில் ஆண்டு தோறும் நாயன்மார்களுடையவும், சமயாசாரியார்களுடையவும் பிறந்தநாட்களில் குருபூசைகள் நடத்தி, அவைகளை ஒரு திருநாளாகக் கொண்டாடி வருகின்றனர். தேவார திருவாசகப் பாராயணம் செய்வதோடு சிறப்புச் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இதன்மூலம் மக்கள் சமயப்பாடல்களையும், நூல்களையும் படித்துணர ஆர்வம் கொள்கின்றனர்.

இந்து தேவாலயங்கள்:

இந்துக்கள் வாழும் நகரங்களிலும், தோட்டபுறங்களிலும், ஆலயங்கள் அமைக்கப் பெற்று இயங்கி வருகின்றன. இந்த ஆலயங்கள் அனைத்தும் நிர்வாகக் குழுக்களாலோ, தனிப்பட்ட சமய நிறுவனத்தாலோ நிர்வகிக்கப்பட்டுவருகின்றன. இவ்வாலயங்களில் ஆகமப்படியான அன்றுட பூசைகள் நடைபெறுவதோடு மக்கள் வழிபடும், திருவிழாக்களும் திருமணங்களும் நடைபெறுகின்றன. பிரங்கு, சுங்கைப்பட்டாணி, கோலாலம்பூர் போன்ற நகரங்களில் கொண்டாடப்படுகின்ற தைப்பூசத் திருவிழா நாட்டின் பெருந்திருவிழாக்களில் ஒன்றாக அமைந்து விட்டதெனலாம். குறிப்பிட்ட சில கோயில்களில் சமய வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதோடு சமயநூல்களும் அச்சிடப்பெற்று வருகின்றன. ஆலய வருமானத்தில் ஒரு பகுதி சமயக்கல்விக்காக

ஒதுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆலயமும் குறிப்பிட்ட ஒரு திருநாளைத் திருவிழா நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

அருள்நெறிக் கூட்டம்

தவத்திரு குன்றக்குடி அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட இத்திருக்கூட்டம், சைவப் பெரியார் க. இராமநாதன் செட்டியார் அவர்களின் சிறப்புமிக்க தலைமையின்கீழ் பல ஆண்டுகள் இயங்கிவந்துள்ளது. சைவ சமய சாத்திர வகுப்புகளையும், திருமுறை மகாநாடுகளையும், நாயன்மார் குருபூசைகளையும் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது.

திருவருள் தவநெறி மன்றம்

திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் ஆசியோடு தோற்றுவிக்கப்பட்ட இம்மன்றம் கடந்த பத்து ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. இம்மன்றத்தாரின் சமயத் தொண்டு நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகின்றது. முக்கியமாகச் சமயவகுப்புகள் வாரந்தோறும் நடைபெற்று வருகின்றன.

தெய்வீக வாழ்க்கைச் சங்கம்:

சுவாமி சிவானந்த சரசுவதி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இச்சங்கம் மலேசியாவிலும் பரவி பத்துமலையின் அருகேயுள்ள சிவானந்தாச்சிரமத்தில் இடம்பெற்று இயங்கி வருகின்றது. நாடெங்கும் பலகிளைகள் இதற்குள்ளன. இந்து தேவாலயங்கள் செய்யவேண்டிய சமயப் பிரச்சாரத்தை இத்தெய்வீகவாழ்க்கைச் சங்கத்தினர் சிறப்பாகச் செய்துவருகின்றனர். கூட்டுப்பிரார்த்தனை, யோகப்பயிற்சி, தியானம், சமயச் சொற்பொழிவுகள் போன்றவைகளை நாடெங்கும் செய்து வருகின்றனர். மலேசியா தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் தலைவராக சுவாமி பிரணவானந்த சரசுவதி அவர்கள் தொண்டாற்றி வருகின்றார்.

மலேசிய இந்து சங்கம்:

இந்து சமயஸ்தாபனங்களை ஒன்று படுத்தும் நோக்கத்தோடு ஏறத்தாழ பதினைறு ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட ஸ்தாபனம் மலேசிய இந்து சங்கம். இதன் பணிகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழாசிரியர்களுக்காக ஆண்டு தோறும் நடத்தப்படும் சமய வகுப்பு மலேசிய இந்துக்களை ஒன்று படுத்திச் செயலூக்கம்தர நடத்தி வரும் "மலேசிய இந்துக்கள் மகாநாடு" இச் சங்கம் நடத்திவரும் சிறந்தபணி.

ருக்குன் நெகாராவில் இறை நம்பிக்கை:

இந் நாட்டில் வாழ்கின்ற பல இனமக்கள், சமய வழிபாடுடையவர்கள். இவர்களை, நாட்டின் நலனைக் கருதி, ஒற்றுமைப்படுத்த ருக்குன் நெகாரா என்ற பஞ்சசீலக் கொள்கையினை, மக்கள் பிரதிநிதிகளும், அரசாங்கத்தாரும் தேர்ந்தெடுத்துள்ளனர். இவ்வைந்தில் முதன்மையாக இடம் பெற்றிருப்பது "இறைவனிடத்தில் நம்பிக்கை" என்பதாகும். மனிதர் யாவரும் இறைவனின் படைப்பு என்ற உண்மையின் அடிப்படையில் நாம் ஒன்று பட்டு நாட்டின் அமைதிக்காகச் செயல்பட வேண்டும். மனிதனுக்குச் சமயப்பற்று ஓரளவாவது இருத்தல் வேண்டும். இருந்தால்தான் அவன் எல்லா இன மக்களுக்கும் நன்மையும் சேவையும் செய்ய முடியும். ஒரு மனிதன் முழுமை பெற்ற மனிதனாக வாழ வேண்டுமானால், அவன் இறை நம்பிக்கையுடன் வாழ வேண்டும். இத்தகைய ஒருவன்தான் நாட்டிற்கு உண்மையான தொண்டாற்ற முடியும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் வாக்கும், "அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்ற சுந்தரர் திருவாக்கும் உலகத்து மக்களையெல்லாம் ஒன்றுபடுத்த வல்லன. சமய நம்பிக்கையற்றவன் முழுமையான வாழ்க்கை வாழவோ, நாட்டிற்கு உண்மையான தொண்டாற்றவோ முடியாது. ஒவ்வொரு மனிதனும் தன் சமய போதனைகளின்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் வாழ்வு மகிழ்வுதரும்.

மலேசியாவில் இந்துசமயத்தின்எதிர்காலம்

இன்று மலேசியாவில் இந்து மக்களை எதிர்த்து நிற்பது வேறுயாரும் இல்லை, இந்துக்களே! அறியாமையும். அசிரத்தையும், சமய உணர்வு இன்மையும், சமுதாய அவநம்பிக்கையும், அக்கறையின்மையுமே நம் எதிரிகள். அறியாமையால் வருகின்ற மூட பழக்க வழக்கங்களும் நம்மைத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றன. சமயக்கல்வி அற்ற பெற்றோர்கள் தம்மக்களுக்குச் சமயவிளக்கம் செய்யும் நிலையில் இல்லாமல் இருப்பது வியப்பன்று. ஆங்கிலமேகற்று தமிழறியாத தமிழ் மக்கள் சமயநூல்களைப் படித்துணராத நிலையில் இருக்கின்றனர். சமயமும் சமுதாயமும் ஒன்றுசேரல் வேண்டும். சமயப் பெரியார்கள் இளைஞர்களுக்கு வழிகாட்டிகளாக இருத்தல் வேண்டும்.

நான்கு மனிதர்கள்

[திருமுருக கிருபானந்தவாரியார்]

மனிதர்களில் நான்கு வகையினர் உண்டு: (1) அதமாதமர்கள்-இவர்கள் நன்மையே புரிபவர்களுக்குத் தீமையையே புரிபவர்கள். 2) அதமர்கள்-இவர்கள் தீமை புரிகிறவர்களுக்குத் திரும்பத்தாமும் தீமைபுரிகிறவர்கள். 3) உத்தமர்கள்-நன்மை புரிகின்றவர்களுக்கு நன்மை புரிகின்றவர்கள். (4) உத்தமோத்தமர்கள் — தீமையே புரிகிறவர்களுக்கும் நன்மைபுரிகிறவர்கள்.

துரியோதனன் ஒரு சமயம் பாண்டவர்கள் கானகத்தில் இருக்கும்போது அவர்களை அவமதிக்கும் பொருட்டு, அந்தப்புரப் பெண்களை நன்கு ஆடையணிகலன்களால் அலங்கரித்துக் கொண்டுவரச் செய்து, தானும் தம்பியர்களும் நண்பர்களும் உயர்ந்த முறையில் அலங்கரித்துக் கொண்டு வனம் வந்தான்.

பாண்டவர்கள் முன் இனிய உணவுகளைத் தயாரித்து உண்டு உலவினன். பாண்டவர்கள் பெருந்தன்மை உடையவர்கள். கண்டுங்காணாதவர்கள் போலத் தவச் சிந்தையில் இருந்தார்கள். அப்பொழுது அருகில் உள்ள ஒரு வனத்தின் அதிபனை சித்திரசேனனுக்கும் துரியோதனனுக்கும் போர் மூண்டது. சித்திரசேனனும் துரியோதனாதிகளை வென்று, ஆண்களையும் பெண்களையும் கட்டிப்பிணைத்து மாடுபோல் ஓட்டிக் கொண்டு சென்றான். இச்செய்தியைத் தூதரால் அறிந்த தருமர் பெருங்கவலையுற்றார். ''நம்மை அவமானம் புரியவந்தவன் அவமானம் அடைந்தான்; அடாதனசெய்தோர் படாதன படுவார் படட்டும்'' என்றான் வீமன்

தருமர் ''அந்தோ; துரியோதனன் எனது தம்பி; அவனும் அவனுடைய துணைவரும் இன்னாரும் மகளிரும் அன்னியனிடம் அகப்பட்டு அவமானத்துக்கு உட்பட்டு மாள்வதைக் கேட்டு நான் சகிக்க மாட்டேன். அவன் சிறை மீண்டு வந்தாலன்றி நான் உண்ணீரும் பருகேன். பீமா! அருச்சுனா! நகுல சகாதேவா! நீங்கள்ஓடி எனது சகோதரனாகிய துரியோதனனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் சிறை மீட்டு வாருங்கள்'' என்றார். பீமார்ச்சுனர் சென்று சித்திரசேனனை வென்று துரியோதனாதியரைச் சிறை மீட்டு வந்து தருமரிடம் ஒப்புவித்தார்கள். தருமர் அவர்களுக்கு உணவுதந்தும், குபேரனால் தமக்குப் பரிசளிக்கப்பட்ட விலை மதிக்கமுடியாத ஆடை அணிகலன்களை ஈந்தும் உபசரித்து இன்னுரை கூறி அனுப்பினர்.

இவ்வாறு உதவிகள் ஒன்றல்ல இரண்டல்ல; பல புரிந்த பாண்டவர்களைக் கொல்வதற்குத் துரியோதனன் கேடுகள் பல சூழ்ந்தான். இங்ஙனம் நன்மை புரிகின்ற உத்தமர்களாகிய பாண்டவர்கட்கு இறுதிவரை தீமையேபுரிந்து வந்தான் துரியோதனன்.

ருரு என்பவர் ஒரு சிறந்த தபசி. அவர் பிரமத்வரா என்ற பெண்மணியைக் காதலித்திருந்தார். அப்பெண்மணி அரவந்தீண்டி இறந்துவிட்டாள். இதனையறிந்த ருரு என்பவர் பெரிதும் வருந்தினர். ''உன் ஆயுளில் பாதியைத் தந்தால் அவள் பிழைப்பாள்'' என்று அசரீரி கூறியது. அதன்படியே தன் வாழ் நாளில் ஒருபாதியை அவர் தந்தார். பிரமத்தவரா என்ற பெண்மணி பிழைத்து எழுந்தனள். அவளை அவர் மணந்துகொண்டார்.

தன் மனைவிக்குத் தீங்குசெய்த அரவினத்தையே அழிக்கச் செய்யவேண்டும் என்று முடிவுசெய்தார். தவசியாகிய அவர் தவ ஒழுக்கத்தையும் அகிம்சையையும் அறவே விடுத்து நீண்ட தாடியைத் தாங்கிப் பூதல மெல்லாம் சுற்றி, கண்ட கண்ட பாம்புகளை அடித்துக் கொன்றான். இச்செயல் அருளாளருக்கு உரியதன்று, அதமச்செயல்.

சுக்கிரீவன் கானகத்தில் தனது தோழருடன் துன்பக்கடலில் புகுந்து அலைந்து இருந்தான். அவனுடைய மனைவி ருமா என்பாளை வாலி கவர்ந்து கொண்டான். மனைவியையும் வீட்டையும் நாட்டையும் இழந்து இடர்ப்பட்டு இடிந்த மனத்தினனாய் துன்புற்றான் சுக்கிரீவன். இராமர் அவனைச்சந்தித்து, இயமனாலும் வெல்லுதற்கரிய வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு கிட்கிந்தையைக்கொடுத்தார். அவன் மனைவியுடன் வாழுமாறு அருள்புரிந்தார். உதவிபெற்ற சுக்கிரீவன் எழுபது வெள்ளவானர சேனைகளுடன் இராமருக்குத் துணையாகச் சென்று இராவணாதி அவுணருடன் போர்புரிந்து இராமருக்கு உதவி புரிந்தான்.

ஜயபாலன் என்ற இராஜகுமாரன் வேட்டைக்குச் சென்றான். பொழுதுபோய்விட்

டது; இருள் சூழ்ந்தது. அவனை ஒரு புலிவிரட்டியது. அவன் அதைரியம் அடைந்தான். ஆயுதங்கள் அவன் கரத்திலிருந்து நழுவிவிழுந்துவிட்டன. அவன் புலிக்கு அஞ்சி ஓடி ஒரு மரத்தின்மீது ஏறிக்கொண்டான். ஏற்கனவே அம்மரத்தின்மீது ஒருபெரியகரடி தன்மூன்றுகுட்டிகளுடன் ஏறி இருந்தது. அக்கரடியைக்கண்டு ஜயபாலன் நடுங்கினான். கீழே புலி; மேலே கரடி; என் செய்வான்? இரு புறத்தும் நெருப்புள்ள இருதலைக்கொள்ளி எறும்பாக ஆனான். கரடி அம்மனிதனைப் பார்த்து, ''ஐயா! நடுங்காதே, உனக்குமுன் இங்கு நான் இருக்கின்றேன். என் இருப்பிடத்துக்கு வந்த உன்னை ஆதரிப்பது என் கடமை. அன்பனே! நீ என்னைக்கண்டு அஞ்சாதே. என்னை உன் தோழனாக நினைத்துக்கொண்டு என் அருகில் இரு'' என்றது.

ஆபத்தில் அபயக்குரல் கேட்ட அவன் மனம் சாந்தி உற்றது. உலர்ந்த நாவில் நீர் ஊறியது. கரடியின் அருகில் அமர்ந்தான். புலி மரத்தடியில் அமர்ந்து, ''ஏ மனிதா! நீ ஏறியவழியேதான் இறங்கவேணும்; பசித்திருக்கின்ற நான் உன்னைப் புசிக்காமல்போகேன்'' என்று கூறிவிட்டு மரத்தடியில் அமர்ந்தது நடுநிசி. ஜயபாலனுக்கு உறக்கம் வரலாயிற்று. தூக்கத்தால் தலை சுற்றியது. புலி ''கரடியே! நீ மனிதனுக்கு இடந்தராதே. மனிதன் விலங்குகளாகிய நம்மைக் கொல்பவன். நமக்குக் குலப்பகைவன். பகைவனுக்கு இடந்தருவது பிழை. ஆதலால் நீ அவனைக் கீழே தள்ளிவிடு. நான் அவனைத் தின்று பசியாறிவிட்டுச் செல்வேன். உனக்கு இடையூறு செய்யேன்'' என்றது.

கரடி ''புலியாரே! இவன் பகைவனாயினும் என் இருப்பிடத்திற்கு வந்தவன். இருப்பிடம் வந்தவனை ஆதரிப்பது என் கடமை. ஆகவே இவனைத் தள்ளமாட்டேன்'' என்றது. இந்த உரையைக் கேட்ட ஜயபாலன் மனம் மகிழ்ந்தது. கரடி ''அப்பா! மனிதனே! உறக்கம் பொல்லாதது. நாம் இருவரும் ஒரே நேரத்தில் கண் விழிப்பது வேண்டாம். என் மடியில் நீ தலைவைத்துச் சிறிது உறங்கு. அயர்ச்சி நீங்கிய பின் நீ விழித்துக்கொள். நான் உன் மடியில் சிறிது உறங்குவேன். இது நமக்கு இருவருக்கும் நலம்'' என்றது. அதன் அறவுரைக்கு மேலும் மகிழ்ச்சியுற்ற ஜயபாலன் அக்கரடியின் மீது சிரம்வைத்து ஆறுதலாக உறங்கினான்.

புலி ''கரடியே! நீ மதியுற்ற கருமம் புரிகின்றாய்; பகைவனுக்கு இடந்தருகின்றாய்; நெருப்பு பகையானது; அதை உறவுகொண்டு தணியில் வைத்து ஆதரிக்கக்கூடாது. நீ என் சொல்லைக் கேள். இவன் நமது பகைஞன். இவனைத் தள்ளிவிடு. நான் பசியாறிப்போவேன்'' என்றது. கரடி, ''புலியரசே! உனக்கு வணக்கம். என் மனம் அதருமத்தில் செல்லாது. நம்பி வந்தவனை நட்டாற்றில் தள்ளமாட்டேன்'' என்றது. பின்னர் ஜயபாலன் விழித்து எழுந்தான். தூக்க மயக்கத்தால் துடிக்கும் கரடி அவன் மடியில் தலைவைத்து ''அப்பா! நீ இப்போது விழித்துக் கொண்டிரு'' என்று கூறிவிட்டு உறங்கியது. புலி ''அப்பா! மனிதனே! நீ மெத்தவும் நடுங்கியிருக்கிறாய்! நீ பிழைக்க வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உளது. நீ தயவு செய்து கரடியை கீழே தள்ளிவிடு. நான் கரடியைத் தின்றுவிட்டுப் போவேன். நீ உயிருடன் வாழலாம்'' என்றது.

ஜயபாலன் சரியென்றிசைந்து கரடியைத் தள்ள முயன்றான். கரடி விழித்துக்கொண்டது. ''அப்பனே! நம்பி உன்மடியில் உறங்கும் என்னைப் புலிக்கு உணவாகத் தள்ள நீ முயன்றது பெரும் பாவம். நம்பிக்கைத் துரோகம் செய்யாதே. இது உனக்குத் தருமம் ஆகாது'' என்று கூறிவிட்டு மீளவும் சற்று உறங்கியது. புலி ''அப்பா! மனிதனே கரடியின் மூன்று குட்டிகள் உறங்குகின்றன. அவற்றையாவது தள்ளிவிடு. நான் அவற்றை உண்டு உன்னைவிட்டு அகல்வேன்'' என்றது.

உடனே ஜயபாலன் இளங்குழவிகளாகிய கரடிக்குட்டிகளைத் தள்ளிவிட்டான். அவைகள் கீழே விழுந்து கதறின. அச்சத்தங்கேட்டு கரடி விழித்துக்கொண்டது. புலி ''கரடியே! நீ மூடனுக்கு இடந்தந்திருக்கின்றாய். யாரை நீ உயிருக்குத் தஞ்சந்தந்து ஆதரிக்கின்றனையோ, அவன் இதோபார் உன் குட்டிகளை எனக்கு உணவாகத் தள்ளியிருக்கின்றான். நான் உன் இளங்குட்டிகளைக் கொன்று புசிக்க விரும்பமாட்டேன். இப்பொழுதாவது இப்பாதகனைத் தள்ளு; இத்தீயவனைத் தின்றுவிட்டுச் செல்வேன்'' என்றது.

''புலியே! இவன் என்னையுந் தள்ளமுயன்றான். நம்பிஉறங்கிய என் குட்டிகளைத் தள்ளினான். எனினும் நான் இவனைத் தள்ளமாட்டேன். தீமை செய்தாருக்குத் தீமை செய்வது உத்தம தருமமாகாது. தீமைபுரிந்தாருக்கும் நன்மை புரிவதுதான் உத்தமோத்தம தருமம். அவன் பிழை செய்தான் என்று நானும் பிழை செய்யேன். நம்பிவந்தவனை இறுதிவரையில் காப்பாற்றுவேன்'' என்றது. புலி கரடியின் உயர்குணத்தை மெச்சி அகன்றது.

ராமதாஸ் சுவாமிகள்

தமிழில்: [B. S. சர்மா]

ஸ்ரீ ராமதாஸ் சுவாமிகள் அவர்கள் தம்முடைய சன்னியாசி வாழ்க்கையின் முன் விட்டல் ராவ் என்ற பெயரைக் கொண்டிருந்தார், இவர் வடகேரளத்தின் கன்ஜன் கார்ட் என்னும் ஊரில் ஹோர்ஸ்டர்க் என்ற பகுதியில் 1884ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்தாந்திகதி வியாழக்கிழமை பிறந்தார். அன்றைய தினம், ஸ்ரீ ராமபிரானுடைய பக்தனை அனுமான் பிறந்த பௌர்ணமி தினமாகிய அனுமான் ஜயந்தி நாளாகும். ஸ்ரீமதி லலிதா பாய் அவர்களுக்கும் ஸ்ரீ பாலகிருஷ்ணராவ் அவர்களுக்கும். அனுமான் ஜயந்தி தினத்திலேயே பிறந்த இக்குழந்தையின் பிற்கால வாழ்க்கையைப் பற்றி பெற்றோர் முன்கூட்டியே ஆரூடமாக அறிந்திருந்தனர். இக்குழந்தையைப் பற்றிய, குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், இவருடைய கண்களின் தெய்வீக ஒளியை அனைவரும் இலகுவில் தெரிந்து கொள்வதேயாம்.

விட்டால் தன்னுடைய பாடசாலை வாழ்க்கையையோ, அன்றி பாடங்களைப்பற்றியோ அக்கறை கொண்டிருக்கவில்லை. இதனால் இவர் இவர்களுடைய ஆசிரியர்களுடைய கடுங்கோபத்திற்கு ஆளானார். இதனால் இவர் அடிக்கடி பாடசாலைக்கு வராமல் வீணாக குளியல் அறைகளிலும், மாட்டுத் தொழுவத்திலும், ஒளிந்திருந்தார். எனினும் அவரைப் படைத்த எல்லாம்வல்ல ஆசிரியன் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியாத இம்மாணவன் எதனை நாடித்திரிகிறான் என்பதை அறிவான். இவருடைய உயர்கல்வி வாழ்க்கையும், பாடநூல்களின்பாலிருந்த ஆர்வமும் அலட்சியபாவமாகவே காணப்பட்டது. இவர் பாடசாலை பாடநூல்களை வெறுத்தொதுக்கினாலும், தன்கைக்கு எட்டிய பொதுவான நூல்களை எல்லாம் ஆர்வத்துடன் வாசித்தார். இளம் வயதிலேயே இலக்கியத்தின் மேல் ஏற்பட்ட ஈடுபாடு ஆங்கிலமொழியை இலாவகமாகவும், ஆழமாகவும் கையாளும் திறமையைப் பெற வழிகோலியது. மாணவனாக இருந்த காலகட்டத்திலேயே இவருடைய புத்திக்கூர்மையும் விவேகமும் மெச்சத்தக்கதாக அமைந்திருந்தது.

எதனையாவது ஒரு முறை வாசித்ததும், அதுபற்றிச் சுயமாகச்சிந்தித்துப் பார்ப்பார். அப்பிராயத்திலேயே இவர் ஏடு சிறந்த பேச்சாளராகவும், நகைச்சுவையாகஉரையாடலை நடத்தும் திறன் வாய்ந்தவராகவும் பெயர் பெற்றிருந்தார். இவ்வாறுன, புத்திசாதுரியத்தையும் நகைச் சுவையாகப் பேசும் திறமையையும் இவர் தமது தந்தையாரிடமிருந்து பாரம்பரியக் கொடையாகப் பெற்றார் எனலாம். இவர் தமது உரையாடல்களின் போதும் மேடைப் பேச்சுகளின் போதும், தமது சொந்த வாழ்க்கை அனுபவங்களிலுமிருந்தும், தாம் கண்டறிந்த சம்பவங்களிலிருந்தும் உதாரணங்களை எடுத்துக் கூறுவதாய் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் தங்கள் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவார்கள். "இவருடைய நகைச் சுவையானது, அச்சம்பவத்தை விட தாம் விளக்க எடுத்துக் கொண்ட பொருளைத் தெளிவாக்குவதையே முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை இவர் நன்குணர்ந்திருந்தார்." எச்சந்தர்ப்பத்திலும், எச்சூழ் நிலையிலும் மனதுக்குரம்மியமானதும், களிப்பூட்டும்வகையிலுமான பேச்சுக்களைத் தொடரவே இவர் அதிகமாக விரும்பினார்.

எதிர்பார்த்திருந்தவாறுவிட்டால், பாடசாலை கல்வியில் பின்னிடைவாகவே இருந்து மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்திபெறத் தவறிவிட்டார் இவர். இதன்பின், சித்திரக் கலைக்கல்லூரியில் சேர்ந்து வரைதல், செதுக்குதல் போன்ற துறைகளைப் பயின்றார். இவர் இத்துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தாலும், எதிர்கால நன்மையைப் பொறுத்தவரை இத்துறைகள் அவ்வளவு சிறப்பானதாக இருக்கவில்லை. இதனால் இவர், இக்கல்விக்கூடத்தை விட்டு, பம்பாயில் இருக்கும் விக்டோரியா ஞாபகார்த்த தொழில் நுட்ப நிறுவனத்தில் சேர்ந்து. நெசவுப் பொறி முறையைப் பயின்றார். மூன்று ஆண்டு கால நெறியின்பின், விட்டால் ராவ் விக்டோரியா ஞாபகார்த்த தொழில் நுட்ப நிறுவனத்தின் நெசவுப் பொறி முறையில் டிப்ளோமா பட்டம் பெற்றார்.

அனுகூலங்களும், இடைஞ்சல்களும் நிறைந்த பலவருட வாழ்க்கையின் பின், இறுதியாக 1917ம் ஆண்டு மங்களூருக்கு வந்து மாமனருடன் கூட்டுச்சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபட்டார். அங்கிருந்த வியாபார தந்திரங்கள், அவருடைய கௌரவத்திற்கும், கொள்கைகளுக்கும் மாறுபட்டதாகக்காணப்பட்டது. இது மாமனருடன் தவிர்க்கமுடியாதவாறு பிணக்குகளைத் தோற்றுவித்தது. முடிவில் இவ்வியாபாரத் தொடர்புகளை அறுத்து சுயமாக துணிகளுக்குச் சாயமூட்டுவது, அச்சிடுவது போன்றவற்றை தொடங்கி நடத்தினர். இவர் நல்ல உள்ளம் படைத்தவராக இருந்ததால் வியாபாரம் செய்வதற்கு அருகதையற்றவராக இருந்தார். இதனால் வியாபாரத்தின் பொருளாதாரநிலை நாளுக்கு நாள் குன்றலாயிற்று. ஆகசொந்த வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையவில்லை.

குல்பர்கா என்னும் இடத்தில் ஒரு நூல் ஆலையில் இவர் நூல் நூற்றல் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய போது ருக்மாபாய் என்ற பெண்மணியை 1908ம் ஆண்டு திருமணம் புரிந்தார். இருவருக்கும் 1913ம் ஆண்டு ராமாபாய் என்னும் மகள் பிறந்தாள்.

விட்டல்ராவ், அவருடைய வாழ்க்கை முழுவதிலும் குறுகியகால வேலைவாய்ப்பைத் தொடர்ந்து, நீண்டகால வேலையில்லாததும் பயனற்றதுமான காலங்களைக் கடத்திவந்தார். தாம் ஏற்றுக்கொண்ட தொழிலை நம்பி ஓரிடத்தில் நிலையாகத் தம்முடைய வாழ்க்கையை ஆரம்பிக்குமுன்பாக இவருடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக அவ்வேலைவாய்ப்பை இழக்கும் சூழ்நிலை உருவாகிக் கொண்டேயிருந்தது. இதனால் இவர் எப்பொழுதும் வாழ்க்கையை நடத்துவதற்கு மீண்டும் மீண்டும் வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்டேயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியது. எனவே இவருடைய வாழ்வில் தொடர்ச்சியான சந்தோஷகரமான வாழ்க்கை அமையவில்லை. இதனால் வருடத்தில் பெரும்பகுதி இன்பமயமான குடும்ப வாழ்க்கையை அனுபவிக்க முடியாதவாறு வாழ்க்கை கழிந்துகொண்டிருந்தது.

வெளிப்புறச் சூழ்நிலைகள் மெதுவாக, இலகுவில் புலப்படாதவகையில் விட்டல்ராவுடைய சமயத்தின் பால் உள்ள நாட்டத்தை ஊக்குவிக்க உதவின. படிப்படியாக இவருடைய சமய தத்துவத்திலும், ஆத்மசாந்தியிலும் பெற்ற அனுபவம் இவருக்கு மனவெளிமையையும், உத்வேகத்தையும் ஊட்டுவித்தது. இவர் தன்னுடைய சகோதரரான சீதாராம்ராவ் அவர்களுடைய வீட்டில் பிள்ளைகள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுடைய படிமத்துக்கு முன் மாலை வேளைகளில் ஒரு மணி நேரம் செய்யும் பஜனைகளில் இவரும் ஈடுபடத் தொடங்கினர். பஜனையின்போது விட்டல்ராவ் அவர்கள் தன் நிலை மறந்து, தன் புலனறிவு அற்று பேரானந்த நிலையை எய்துவது வழக்கம். இவ்வாருன நிலையில் அவர் எம் பெருமானுடைய திருநாமமாகிய 'ராம' என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்து கொண்டேயிருப்பார். இது இவருக்கு மன அமைதியையும் சுவாக்கானந்த இன்பத்தையும் நல்கியது. இத் திருமந்திரத்தை அவருடைய நா தன்னுணர்வின்றி அவருடைய வேலைகளின் போதும், வீதிகளில் நடமாடும் போதும் உச்சரித்துக்கொண்டேயிருக்கும். படிப்படியாக இவர் தன்னுடைய இரவு உணவையும், உடலுக்கு இன்பம் பயக்கும் செயல்களையும் அறவே துறந்தார். இவ்வாறு வாழ்க்கையில் இவர் புரியாத புதிராக மாறிவருவதைக் கண்ட இவருடைய மனைவி மிகவும் பயந்து மனம் வருந்தினர். மனைவி, மகள் ஆகியோர் விடுத்த வேண்டுகோள், கட்டளை, எச்சரிக்கை போன்றவை பயனளிக்கவில்லை. இவ்வாறு ஏற்படுத்திக்கொண்ட வாழ்க்கையானது, எல்லாம் வல்ல இறைவனை உணர்ந்து பேரானந்தப் பெருவாழ்வு அடைவதற்கென ஏதோவொரு சக்தியால் தான் உந்தப்பட்டுக் கவரப்பட்டிருப்பதை இவர் உணர்ந்ததால் தமது வீடு, மனைவி, மகள் போன்றவைபற்றிக் கவலைப்படவில்லை.

இந்த நிலையில் ஒருநாள் இவருடைய தந்தையார் இவரிடம் வந்து "ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய்ராம்" என்ற புனித மந்திரத்தை உபதேசித்து இம் மந்திரத்தை இடைவிடாது உச்சாடனம் செய்து வந்தால் பேரின்ப நிலையை அடையலாம் என்று ஆசிவழங்கிச் சென்றார். இது விட்டல்ராவுடைய வாழ்க்கையில் ஓர் அற்புதமான நிகழ்ச்சியாகும். இதிலிருந்து இவருடைய இல்வாழ்க்கையிலிருந்து துறவு வாழ்க்கையை நோக்கிய முன்னேற்றம் துரித கெதியில் நடைபெற்று அதன் இறுதி நிலையை அடைவதற்கான ஆயத்தங்கள் இடம்பெறலாயிற்று.

அடுத்த (டிசெம்பர் 1922ல்) இல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

WE DEDICATE OUR SELVES TO SERVE MANKIND THROUH

Medicines

Phone: 4905

KALYANI MEDICALS

(LEADING WHOLESALE & RETAIL PHARMACEUTICAL DEALERS)

45, First Agraharam,
SALEM 636 001
TAMIL NADU - S. INDIA

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

★

திருமணம், பண்டிகைக்கால விசேஷங்களுக்கு தேவையான
மில், கைத்தறி ஜவுளி ரகங்களுக்கு
கைராசியான ஸ்தாபனம்

☎ 25083

குலோப்'ஸ்

43, N. S. B. ரோடு,
திருச்சிராப்பள்ளி - 620002.

With Best Compliments of



SRI KRISHNA VIHAR

Prop: D. PURUSHOTHAM

BEST SWEETS AND SAVOURIES
SUITABLE FOR ALL OCCASIONS
(BENGALI SWEETS ALSO AVAILABLE)

125, MINT STREET,
MADRAS - 600 001.

Phone: 34808

அகில உலக இந்து மகாநாடு
எல்லா வகையிலும் சிறந்து விளங்க
எமது நல் வாழ்த்துக்கள்!



சிறந்த கல்யாண பட்டு, மில் ஜவுளிகளுக்கு

நடராஜா ஸ்டோர்

அனைத்து ஜவுளிகள் நிறைந்த ஒரே கடை

92, அம்மன் சன்னதி,
மதுரை - 625 001.

போன்: 22408

உ

1982ல் அகில உலக இந்து மகாநாடு இனிது நடைபெற
எங்களின் மனங்கனிந்த நல் வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கின்றோம்!

ஸ்டீல் பேலஸ்

பாத்திர வியாபாரம்.

92, கடைவீதி, சேலம் - 636001.

எவர்சில்வர், பித்தளை & அலுமினியபாத்திரங்கள்
பிரஷர் குக்கர்கள், மிக்சிகள்
மலிவான விலையில் கிடைக்கும்.

STEEL PALACE

UNTENSILS SHOW ROOM.

92, Bazaar Street, Salem - 1.

SOUTH INDIA.

அகில உலக இந்து மகாநாட்டை முன்னிட்டு
ஆத்மஜோதி வெளியிடும் சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!



MEENATSHI AGENCIES

PHARMACEUTICAL DISTRIBUTORS

11, MAJID STREET,
SALEM - 636 001.

Phone: 67272

SARASWATHY AGENCIES

DISTRIBUTORS OF LEADING BOOKS & MAGAZINES

2 A, MAJID STREET,
SALEM - 636 001.

Phone: 67272
2474

With best compliments of

Phone: 3709 Estd: 1949

EVEREST STUDIO,

5, Tipusultan Market, Salem 636 001

(First color film processors of Salem since 1972)

★

Phone: 66403 Estd: 1976

EVEREST COPIERS,

3, Tipusultan Market, Salem 636 001

(First Xerox copying unit of Salem)

★

Phone: 66403PP Estd: 1978

EVEREST ADORNERS,

3, Tipusultan Market, Salem 636 001

(First Shamiana Hirers of Salem)

With Best Compliments of

MADRAS CEMENTS Ltd.

MANUFACTURERS OF THE FAMOUS

Ram Co Brand
Cement

REGD. OFFICE:

'RAMAMANDIRAM'
Rajapalayam,
Pin: 626 117

FACTORY:

RAMASAMY RAJA NAGAR
Tulukkapatti R. S.
Pin: 626 204.

Tamil Nadu.

மங்களூருக்குச் சென்றார். இரு தினங்களின் பின் இவர் ஸ்ரீரங்கத்தை அடைந்தார். அங்கு காவேரி நதியில் தீர்த்தமாடியபின் காஷாயம் தரித்து தன்னுடைய ஆசானுகிய ராம் அவர்களின் கட்டளைப்படி சன்னியாசிக்குரிய சத்தியம் செய்து ராமதாஸ் (ராமனின் சேவகன்) என்ற துறவுப்பெயர் பூண்டார். இதனை படுத்து இவர் பகவான் ஸ்ரீ ரமணமகரிஷியின் முன்னிலையில் நின்று அவருடைய அருளாணையைப் பெற்றார். இவருடைய உயர்ந்த நோக்கை அறிந்த பகவான் தம்முடைய தலையை ஆட்டித் திருவருள்பாலித்தார். மகரிஷியின் ஆசீர்வாதம் கிடைக்கப் பெற்றதும் ராமதாஸ் அவர்களின் உடல் முழுவதும் புல்லரித்து மனவெழுச்சி உண்டாகியதை உணர்ந்தார். மகரிஷியை விட்டகன்ற இவர் நேராக அருணசல மலையில் ஒரு குகைக்குள் சென்று இருபது நாட்கள் தொடர்ச்சியாக ராமநாம ஜெபம் செய்தார். இடையில் இவரே சமைத்த சிறிதளவு சோற்றை மட்டுமே உண்டார். இதன் இறுதியாகப் புதிய மனோநிலையைப் பெற்றார். இவர் ராமபிரானை எங்கும், எதிலும் கண்டார். இப்பரவச நிலையினில் அவர் கண்ட எதையும் எவரையும் அணைத்துக் கொண்டார்.

அவர் கடவுள் பைத்தியமாகவே மாறி விட்டார். இந்நிலையில் இந்தியா முழுவதும் பாத்திரை செய்து, புனித ஸ்தலங்களையும், மகான்களையும் தரிசித்தார். ஒரு வருடத்தின் பின்னர் அவருடைய மனைவியும். மகளும் ஹுப்ளியில் ஸ்ரீ சித்தாருத்த சுவாமியின் ஆச்சிரமத்தில் இவர் இருப்பதை அறிந்து, அங்கு சென்று, ஸ்ரீ சித்தாருத்த சுவாமிகளின் அனுமதியுடன் இவரை மங்களூருக்கு அழைத்து வந்தனர். ஆனல் ராமதாஸ் சுவாமிகள் மனைவி, மகளுடன் அவருடைய வீட்டுக்குப் போவதற்குப் பதிலாக நேரே கதிரியில் உள்ள பஞ்சபாண்டவர் குகைக்குச் சென்றார். அங்கு அவர் மூன்று மாதங்களுக்கு மேல் தங்கியிருந்தார். இங்கு ராமதாஸ் சுவாமிகள் இடையூறில்லாத தியானத்திலிருக்கவும், புதிய அனுபவங்களைப் பெறவும் வாய்ப்பாக இருந்தது. இக்குகையில் இருந்த காலகட்டம் இவரது வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததெனலாம். அவருடைய கருத்துப்படி பஞ்சபாண்டவ குகையில்தான் அவர் முதன் முதலில் நிர்விகல்ப சமாதி நிலையை எய்தினார்.

இதன் பின் மீண்டும் இவர் இந்தியா வெங்கும் யாத்திரை செய்தார். இவரைப் பின்பற்றுவோரும் இவருடைய கொள்கைகளை மெச்சுவோரும் எண்ணிலடங்காதவாறு பல்கிப் பெருகினர். இவர் தம் சந்நியாசி வாழ்க்கையில் நடத்திய யாத்திரானுபவங்களைப் பற்றிப் பல்வேறு விவரங்களை தம்முடைய தெளிவான பாணியில் எழுதியவை, ''கடவுளைத் தேடுதல்'', ''கடவுளின் தரிசனம்'' என்ற நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

இவர், சில ஆண்டு புனித ஸ்தல யாத்திரைகளின் பின் கசரகோட்டுக்கு வந்து சிறிய தோர் ஆசிரமத்தை நிறுவினர். இங்குதான் அன்னை கிருஷ்ணபாய் முதன் முதலில் இவரைக் கண்டார். இங்கு, அன்னை கிருஷ்ணபாய் சில ஆண்டுகளின் பின் தம்முடைய வாழ்நாள் முழுவதையுமே ராமதாஸ் சுவாமிகளின் சேவைக்கும், கொள்கைப்பிரசாரத்துக்கும் செலவிட்டார்.

அந்தச் சிறு ஆசிரமத்திலேயே நீண்ட காலம் ராமதாஸ் சுவாமிகள் தொடர்ந்திருக்கக்கூடாது என்பது கடவுளின் திருவுளம் போலும். கடவுளுடைய திருவுளப்படி சில விஷமிகள்தொல்லைகொடுத்ததால் ராமதாஸ் சுவாமிகளும், அன்னை கிருஷ்ணபாயும் அவ்வாசிரமத்தை முற்றுக விட்டு அகன்று விட்டனர். இதன் பின் கள்வார்காட்டில் ஆனந்தாஸ்ரமம் உருவாகியது. இதன் திறப்புவிழா 1931ஆம் ஆண்டு மேமாதம் பதினைந்தாம் திகதி நடைபெற்றது. இந்த ஆசிரமம் ஒரு சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டாலும், இது, படிப்படியாக விரிவடைந்தது. இறுதியில் இவ்வானந்த ஆசிரமம் மிகச் சக்தி வாய்ந்த ஆன்மிக வழிகாட்டியாக மிளிர்ந்தது. ஆன்மிக ஆர்வம் கொண்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள்வருடாவருடம் இங்கு வந்து சக்திவாய்ந்த ஆசானிடம் அன்பு, ஆன்மிக அறிவு, சேவை மனப்பான்மை போன்றவற்றைப் புரிந்து சாந்தி பெற்று வீடு ஏகினர்.

ராமதாஸ் சுவாமிகளைப் பக்தர்களும், சிஷ்யர்களும் அன்புடன் 'பாபா' என்று அழைத்தனர். அவர் கடவுளைப் பரிபூரணமாக எல்லா நிலைகளிலும் உணர்ந்தறிந்து எப்பொழுதும் மனம் நிரம்பிய ஆனந்தத்துடன் காட்சியளித்தார். அவர் 'ஓம் ஸ்ரீராம், ஜெய் ராம், ஜெய் ஜெய்ராம்'(ஓம் என்பதை மந்திர உச்சாடனத்தின் ஆரம்பத்தில் தொடங்குவார்) என்ற ஜபத்தின் மூலமே கடவுளை

தெளிவாக அறிந்து கொள்ளும் உன்னத நிலையைப் பெற்றார். இவ்வாறு எப்பொழுதும் இம்மந்திர உச்சாடனத்தின் மூலம் கடவுள் தன்னுள்ளும், தன்னைச்சுற்றி எல்லாவிடங்களிலும் இருப்பதை உணர்ந்ததோடு மட்டுமன்றி, இந்த அண்ட சராசரத்தையும் கடவுளாகவே கண்டார். இது இயற்கையாக இவருக்கு பற்றற்ற நிலையில் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் பரிபூரண நிலையை ஏற்படுத்தியது. அதாவது நடைபெறும் சம்பவங்கள் அனைத்தும் ஆண்டவனின் ஆணைப்படியே நடைபெறுகிறது என்பதையும், எல்லாம்வல்ல இறைவனிலேயே அனைத்தும் ஒடுங்குகிறது என்பதையும் உணர்ந்தார். எனவே அவர், தம்மிடம் ஆத்மீக ஆலோசனை பெறவருபவர்களிடம் இடையறாது கடவுளின் திருநாமத்தை உச்சரிப்பதையும் எல்லாம் இறைவனின் திருவுளப்படியே நடைபெறுகிறது என்பதை ஏற்றுக் கொள்ளுமாறும் உபதேசித்தார். இந்த உபதேசத்தைக் கடைப்பிடித்தால் நிச்சயமாக பேரானந்தத்தைத்தரும் என்பதை வலியுறுத்தினார். ராமநாம ஜெபத்தால் ஏற்பட்ட ஆன்மீக ஈடேற்றத்துக்கு இவரே ஒரு கண்கண்ட உதாரணமாகத் திகழ்வதால் இந்த உபதேசத்தில் ஒருவருக்கும் எந்தவிதமான சந்தேகமும் ஏற்படக் காரணம் இல்லை.

1949 முதல் 1957 வரை ராமதாஸ் சுவாமிகளும் அன்னை கிருஷ்ணா பாயும், பக்தர்களின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவின் பல இடங்களுக்கு யாத்திரை செய்தார்கள். அவர் சென்ற இடங்களிலெல்லாம் கடவுளின் திருநாமத்தை ஜெபிப்பதுடன் கூடிய பஜனையே முக்கிய அம்சமாகக் காணப்பட்டது அவருக்கு விரிவுரைகள் செய்வதில் நாட்டம் இருக்கவில்லை. எனினும் ஆன்மிகத் துறையில் கேட்கும் எண்ணிலடங்காத வினாக்களுக்கு விடையளிப்பதிலும், சிறு விளக்கவுரை செய்வதிலும் இவர் வல்லவராயிருந்தார். 1954ஆம் ஆண்டு உலக நாடுகளுக்குச் செய்த சுற்றுப்பிரயாணத்தின் பலனாக ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான், மலாயா, சிங்கப்பூர், இலங்கை போன்ற இடங்களில் உள்ள நண்பர்கள் இவரைச் சந்தித்து அளவளாவும் நற்பேறு கிடைத்தது. இவர் ஆங்கிலத்தில் பல நூல்கள் எழுதியுள்ளதோடு, 1953ஆம் ஆண்டு முதல், 'நோக்கு' என்ற ஆங்கில சஞ்சிகையை வெளியிட்டார்.

இவருடைய சமய நோக்கின், சர்வ வியாபகத் தன்மையையும், மனோபாவத்தையும் இவர் அடிக்கடி கூறும் பின்வரும் கூற்றிலிருந்து தீர்மானிக்கலாம்.

"ராமதாஸ் ஒரு குறிப்பிட்ட மதக்கோட்பாடுகளுக்குரியவரல்லர். எல்லா மதக்கோட்பாடுகளும், நம்பிக்கைகளும், மதங்களும், ஒரே இலக்கை இறுதியில் அடைவதற்கான பல்வேறு வழிகளாம் முஸ்லீம் ஒருவரை முகமது நபியாகவும், கிறீஸ்தவரொருவரை ஏசு நாதராகவும், இந்துவை ராமராகவும், கிருஷ்ணராகவும், சிவனாகவும், பௌத்தர் ஒருவரை புத்தராகவும், பார்சிபரர் ஒருவரை சொரோஸ்ட்ராவாகவும் கண்டார். அழிவற்ற முழுமுதலாகவும், ஏனையவை யாவும் தோன்றக் காரணமாகவும் உள்ள இறைவனிடமிருந்தே உலகத்தில் மகான்கள் அவதரித்தார்கள். கீதை, பைபிள், குரான், சென்ட் அவிஸ்தா போன்ற அனைத்திலும் ஒரே நோக்கைக் கொண்ட கருத்துக்களே ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அதாவது தன்னை அறிந்து கொள்வதே மோட்சத்துக்கான உயரிய வழியாகும்"

ராமதாஸ் சுவாமிகள் தம்முடைய 79-வது வயது 1963-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபத்திஐந்தாம் திகதி மகாசமாதியடைந்தார். அவர் இன்று உயிருடன்எம்மிடையே உலவாவிடினும், அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ஆன்மிக உணர்ச்சி ஊட்டி, ஆன்ம ஈடேற்றத்துக்கான வழிவகைகளைக்காட்டிக் கொண்டிருக்கிறார்.

வாழ்க்கையின் சகல அனுபவங்களையும் பெற்ற பிற்பாடு துறவியாகும் ஒருவன், இல்லறத்தின் கஷ்ட நஷ்டங்களைத் தெளிவாகப் பிறருக்கு எடுத்துணர்த்த முடியும்.

புதுவாழ்வில் புகுகின்ற மனிதனுக்கு அது பெரும் உதவி புரியும்.

இயலாமை மட்டுமே இளமைத் துறவை மேற்கொள்ளலாம். அல்லது இறை அருளால் ஞானம் பெற்ற இளம் பருவம், அந்தத் துறவில் அடியெடுத்து வைக்கலாம்.

— அர்த்தமுள்ள இந்துமதம்

இருண்ட ஆபிரிக்காவில் இந்துசமய வளர்ச்சி

எஸ். பாஸ்கரன், பிரதம கணக்காளர், பஞ்சு உற்பத்தி நிறுவனம்—சம்பியா

இந்து சமயம் பரவியிருக்கும் நாடுகளில், மத்திய ஆபிரிக்காவில், சமபியா ஒரு முக்கிய நாடாகக் கருதலாம். 1965-ம் ஆண்டு வட ரோடேசியா சுதந்திரமடைந்துசம்பியா என்ற புதுப்பெயருடன் உலகில் இன்று பிரசித்தி பெற்று நிற்கின்றது.

சுதந்திரத்திற்கு முன்பே எத்தனையோ வட இந்திய இந்துக்கள் சம்பியாவில் வாழ்ந்து வந்தனர். சம்பியா சுதந்திரமடைந்தபின், நூற்றுக்கணக்கான வட, தென் இந்தியரும்,இலங்கையரும், வேலை நிமித்தமாகவும் வியாபார நிமித்தமாகவும், வந்து இங்கு குடியேறினர்.

இவர்களுள் இந்துக்கள் பெரும்பான்மையினர். வேறு காரணங்களுக்காக வந்தாலும், இவர்கள் தங்கள் இந்து சமயக் கோட்பாடுகளை கைவிடாது பின்பற்றினர். சம்பியாவை ஒரு கிறிஸ்தவ நாடாகக் கொள்ளலாம். அந்த நாட்டைச் சேர்ந்த 'சம்பியன்ஸ்' கூடிய பகுதியினர் கிறிஸ்தவ மதத்தினர். குறைந்த அளவில் சில பகுதிகளில் முஸ்லீம் மதத்தினரும் இருக்கிறார்கள்.

சமய சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் எல்லாம் சம்பியாவில் உண்டு. ஆகவே முக்கிய நகரங்களான லுசாகா, ன்டோலா, லிவிங்கஸ்டன் முப்வீரா என்ற இடங்களில் இந்து மண்டபங்களும் லுசாகாவிலும் ன்டோலாவிலும் இந்துக் கோயில்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கே பூஜைகள் கூட்டு வழிபாடுகள், விஷேச தினங்களில், உற்சவங்கள் கொண்டாட்டங்களும் நடை பெறுகின்றன. இவற்றைப் பெரும்பாலும் குஜராத்திய இந்துக்கள் நடத்துகிறார்கள்.

1977ம் ஆண்டு வேலை நிமித்தம் நான் எனது குடும்பத்துடன் சம்பியாவுக்கு வந்தேன். வந்த மறுநாளே லுசாகாவிலிருந்து 45 கிலோ மீற்றர் தூரத்தில் 'கபுலே' என்ற இடத்திலுள்ள ஒரு அம்மன் கோயிலுக்கு எங்கள் நண்பரொருவரால் அழைத்துச் செல்லப்பட்டோம். அந்தக் கோயில் எங்கள் மனதை மிகவும் கவர்ந்தது. குஜராத் பூசகர் ஒருவர் அங்கு தினமும் பூஜை செய்கிறார். வெங்கடாசலபதி அலுமேலு மங்கையின் படங்கள் இரண்டு பக்கமும் இருக்க நடுவில் ஒரு அம்மன் சிலை வைக்கப்பட்டிருந்தது. லுசாகாவிலிருந்து ஒவ்வோர் வாரமும் எத்தனையோ இந்துக்கள் இந்தக் கபுவே அம்மன் கோவிலுக்கு தரிசனத்துக்கு வருவார்கள். நாங்களும் இந்த வழக்கத்தை பின்பற்றத் தொடங்கினோம். 1979ம் ஆண்டில் இலங்கையிலிருந்து சென்ற ஒரு நண்பர் தன் முயற்சியால் அந்தக் கோயில் வாசலில் ஒரு மண்டபம் கட்டி, இந்தியாவிலிருந்து பஞ்சலோகத்தில் செய்த ஒரு ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி விக்கிரகமும் மேருவும் எடுப்பித்து ஒரு தெலுங்கு சாஸ்திரியாரால் கோயில் சந்நிதானத்தில் பிரதிஷ்டை செய்வித்தார்.

இதற்குப் பின் இன்னொரு நண்பர் 1980ம் ஆண்டில் இலங்கையிலிருந்து பஞ்சலோகத்தில் செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகமும், முருகன் விக்கிரகமும் எடுத்து வந்து அதே சாஸ்திரிகளால் அந்த அம்மன் கோவிலில் பிரதிஷ்டை செய்வித்தார். ஆக கபுவே அம்மன் கோவிலில் இப்போது தென்இந்தியாவில் செய்யப்பட்ட ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியும், மேருவும், இலங்கையில் செய்யப்பட்ட பிள்ளையாரும், முருகனும், சம்பியாவில் வாழ்ந்து வரும் இந்துக்கள் தரிசனத்துக்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

வாரம் தவறாது, முக்கியமாக சனி ஞாயிற்றுக்கிழமைகளில் லுசாகாவிலிருந்து எத்தனையோ இந்துக்கள் தரிசனத்துக்கு 'கபுலே' அம்மன் கோவிலுக்குச் சென்று வருவார்கள்.

இதைவிட வீட்டு வழிபாடும் லுசாகாவில் பிரசித்தி அடைந்துள்ளது. தொழில் நுட்பக்கலை இலங்கை நண்பர் ஒருவர் தனது சிறிய வீட்டில், கூடத்தை கோவிலாக மாற்றி பஞ்சலோகத்தில் செய்த ஒரு நடராஜர் விக்ரஹமும் ஒரு சிவகாமி அம்மையும், அத்துடன் சிவலிங்கம், முருகன் என்று பலவிதமான மூர்த்திகளும் பல விதமான சுவாமி படங்களும், வைத்து வெள்ளிக்கிழமை தோறும் பூஜை ஆராதனைகள் செய்தார். முதலில் அபிஷேக அலங்காரங்களுக்குப் பின், ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் படித்து, ஒரு மணிநேரம் பஜனை நடக்கிறது. எத்தனையோ இந்துக்கள்

வெள்ளிக்கிழமைகளில் தவறாது இங்கு வந்து இரண்டரை மணிநேரம், சுவாமி அலங்காரத்திலும், பக்தி பஜனைப்பாடல்களிலும் தங்களை மெய்மறந்து இறைவனை தரிசித்து செல்வார்கள்.

சென்ற வருடம் இந்த நண்பர் லுசாகாவை விட்டு அமெரிக்கா சென்ற போதும் அதே வீட்டில் குடிவந்துள்ள இன்னொரு இலங்கை உபாத்தியாயர் தொடர்ந்து இந்த பூஜை பஜனைகளை நடத்தி வருகிறார்.

அத்துடன் வேறு சில நண்பர்களின் வீடுகளிலும், பல பேர் ஒன்று சேர்ந்து செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில், ஸ்ரீலலிதா சகஸ்ர நாமம், ஸ்ரீ ராம சஹஸ்ர நாமம் ஆவன படித்து பூஜை பண்ணி, கீர்த்தனைகள் பஜனைகள் பாடுகிறார்கள்.

வியாழக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வீடுகளில் சாய்பாபா பஜனைகள் ஒரு மணி நேரமும் அதைத் தொடர்ந்து சில நிமிடங்கள், சாய்பாபாவின் அருள் மொழியில் சில அறிவுரைகளும் நடக்கின்றன; இவற்றிற்கும் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் வந்து பங்கு பற்றுகிறார்கள்.

லுசாகாவில் ஏற்கனவே ஒரு கோயில் கட்டப்பட்டிருந்தது 1980ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், இந்தியாவிலிருந்து சலவைக்கல்லில் அழகாகச் செதுக்கப்பட்ட ராதா கிருஷ்ண விக்ரஹங்களும், பிள்ளையார், சிவபார்வதி, துர்க்கை, சரஸ்வதி, ஹனுமான், இராமலக்ஷ்மண சீதா விக்கிரகங்களும் கொண்டு வந்து, 3 நாட்கள் விசேஷ ஹோம பூஜைகளுடன் பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

சமயத்தில் மிகவும் பற்றும் ஈடுபாடும் கொண்ட சம்பியா ஜனாதிபதி டாக்டர் கெனத் கவுண்டா அவர்களே, மிகவும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும், சுவாமி விக்ரஹங்களை பிரதிஷ்டை பண்ணுவதற்கு, கோவிலைத் திறந்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

குஜராதிய பூசகர், கோயில் பூஜைக்காக நியமிக்கப்பட்டுள்ளார். லுசாகாவில் உள்ள எல்லா இந்துக்களும், இந்த ராதாகிருஷ்ண கோயிலுக்கு வந்து ராதா கிருஷ்ணனையும், மற்றைய மூர்த்திகளையும் தரிசித்து வருவார்கள். வெள்ளிக்கிழமைகளில் விசேஷமாக, இலங்கையிலிருந்தும் தென் இந்தியாவிலிருந்தும் வந்த தமிழ் பேசும் இந்துக்களில் பெரும் பான்மையினரைக் காணலாம்.

இந்து சமயத்தின் அடிப்படையில் மேலே குறிப்பிட்டவையைவிட இன்னும் எத்தனையோ வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் வேதாந்த மண்டபம் ஒன்று லுசாகாவில் உள்ளது. அங்கு ஒரு புத்தகசாலையும் அமைக்கப்பட்டுள்ளது. சனிக்கிழமை மாலையிலும், ஞாயிற்றுக்கிழமை காலையிலும், இங்கு பலர் கூடி, ஸ்ரீராம கிருஷ்ணர் அஷ்டகமும், விஷ்ணுசகஸ்ரநாமமும் படித்து தொடர்ந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா தேவிக்கும் ஆராத்தியும் காட்டுவார்கள். இங்கு ஒரு மாமி சிறுவர்களுக்கு, தெய்வீகக் கதைகளும் சுலோகங்களும் சொல்லித்தருகிறார்.

இந்த மண்டபம் இருக்கும் இடத்தைப் பற்றி சிறிது சொன்னால், அதன் வாசலில் நின்று கிழக்கே திரும்பினால் ஒரு கிறிஸ்தவ கோயிலையும், வடக்கே நோக்கினால் ஒரு முஸ்லிம் பள்ளிவாசலையும்(Mosque), மேற்கே திரும்பினால் மேலே குறிப்பிட்ட ராதா கிருஷ்ண கோயிலையும் நாங்கள் பார்க்கக்கூடியதாக இந்த மண்டபம் அமைந்திருக்கிறது.

இந்த மண்டபத்தில் பல விதமான கலை நிகழ்ச்சிகள் சுவாமிகளின் பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. சென்ற ஆண்டில்(1981)முதன் முறையாக, சம்பியா தமிழ்க் கலாச்சார மன்றம் நவராத்திரி விழா கொண்டாடியது. எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த ராமகிருஷ்ணமண்டபத்தில் கொலு வைத்து, தினமும் பூஜை செய்து பத்து நாட்களும் விசேஷ கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஒவ்வொரு வழிபாட்டுக்கும் சிலர் ஒரு பகுதியினராக சேர்ந்து அந்த வழிபாட்டைத் தொடர்ந்து நடத்துகிறார்கள்.

ஒரு பகுதியினர் மாதம் ஒரு முறை, 24 மணி நேரம் தொடர்ந்து அகண்ட ராமாயணம் படிப்பதும் இன்னொரு பகுதியினர், மாதமொருமுறை அக்னிஹோமம்வளர்த்துபிரார்த்தனை பண்ணுவதுமாக வெவ்வேறுவிதமான வழிபாடுகள் நடக்கின்றன.

பழைய கீழைத் தேசம்
நவீன மேலைத் தேசத்தைச் சந்திக்கின்றது

[சுவாமி பிரகாஷானந்தமா]
—தமிழாக்கம்:— ம. சி. சிதம்பரப்பிள்ளை—

1960ம் ஆண்டு அமெரிக்கா ஒரு குழப்பம் நிறைந்த ஆண்டாகத் தோற்றம் அளித்தது. நாகரீகம் நிறைந்த நவீன சமுதாயத்தில் மாய் மாலங்களும், உள்ளீடற்ற வாழ்வும் நிரம்பி இருப்பதனை இளம் சந்ததியினர் கண்டனர். உலகில் சமநிலை இல்லாமையைக் கவனித்தனர். வெறுப்பு, அன்பின்மை, முடிவற்ற சண்டை – இவைகளைக் கண்டனர். 1960ல் வாழ்ந்த இளைஞர்கள் இவைகளுக் கெதிராகப் புரட்சி செய்தனர். இவர்களுள் சிலர் இவ்வாறான கோட்பாடுகளுக் கெதிராகப் போர் தொடுத்தனர். சிலர் சமாதான முறையில் – அகிம்சா வழியில் – ஊர்வலமும் எதிர்ப்பும் செய்தனர். இன்னும் சிலர் இவைகளில் இருந்து தப்பி ஓடுவதற்காகப் போதை வஸ்துக்களை விழுங்கினர். இருந்தும் இந்த இளைஞர்கள் தங்களுக்குள்ளே இம்மாதிரியான பிரச்சனைகளை எதிர்நோக்கினர்கள். இந்நிலை கெட்ட விளைவுகளின் வெறுமையிலிருந்து விடுபடுவதற்கு ஒரு முடிவாக யோகக் கலையில் சரணடைந்தனர்.

ஒரு திருப்புமுனை

யோகக் கலை அமெரிக்காவுக்கு புதியதன்று. எத்தனையோ வருடங்களுக்கு முன்பாகவே ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் அவர்களும், பரமஹம்ச யோகானந்தஜி அவர்களும் அமெரிக்காவுக்கு வருகை தந்ததால், யோகக் கலையின் எல்லையற்ற உண்மை நிலையை இன்றும் அவர்களது பரம்பரைச் சீடர்கள் பரப்பி வருகின்றனர். இருந்தும் அமெரிக்க மக்களின் ஒரு சிறு தொகையினரே யோகக்கலையை அறிந்துள்ளனர். 1960ல் அமெரிக்க மக்களுள் ஒரு திடீர் திருப்பம் சமாதானத்தை விரும்பும் ஒரு புது வாழ்க்கையை அழகை ஒவ்வொரு ஜீவனிலும் இயற்கையாகக் காணப்படும் அன்பை இதனிலும் மேலாக இயற்கை அன்னையின் வனப்பை அனுபவிக்கும் ஒரு வாய்ப்பினை பெறுவதற்கு முயன்றனர்.

சேற்றில் பூத்த செந்தாமரை

இவ்வாறான ஒரு குழப்பச் சூழ்நிலையில் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தஜீ யோகக்கலையைப் பற்றி உரை நிகழ்த்த அமெரிக்காவுக்கு வருகை தந்தார். தெய்வீக தரிசனம் பெற்ற ஒருவராலேயே ''மலர்களன்ன சிறுவர்களை'' அமெரிக்காவில் சந்திக்கவும், அங்குள்ள அழகைக் கண்டுகொள்ளமுடியும். இச்சிறுவர்கள் தங்கள் குடும்பங்கள் சமுதாயம் இவைகளுக்கு மாறுபட்டதாக, ஒழுங்கீன உடைகளை உடுத்துப், மரியாதையீனமாக நடந்தும், ஒரு போதும் நீராடாதும் இருக்கத் தொடங்கினர். ஆனால் அவர்களது இருதயம் பரிசுத்தமாக மலர்ந்திருந்தது. சுவாமிஜி அவர்களும் அவர்களைப் போன்று அமெரிக்காவைத் தரிசிக்க வந்த ஏனைய மகான்களும் சேற்றில் பூத்த செந்தாமரையன்ன இளைஞர்களைக் கண்டு பொறுமையுடன் போதனை புரிந்தனர்.

இந்து சமயத்தின் பரந்த நோக்கு

உண்மையில் யோகக் கலை இந்துசமயத்துக்கு வேறான தொன்றன்று. பூகோள ரீதியின் பார்வையில் - சகல சமயங்களையும் அணைத்துள்ளதும் சமமதமான சாரமே இந்து சமயம். உண்மையான ஒரு இந்து, சமய நம்பிக்கையற்றவனுக்கும் மரியாதை செலுத்துவான். தன்னை ஒரு கத்தோலிக்கனாகவும், முஸ்லீமாகவும், புத்தனாகவும், யூதனாகவும், எல்லாச்சமயியாகவும் கருதுவான். துரதிர்ஷ்டவசமாக, பலர் தாங்கள் இந்துசமயக்கோட்பாடுகளின் படியே வாழ்கின்றோ மென்று கூறிக்கொண்டு தங்கள் நம்பிக்கைக்கொரு எல்லை வகுத்து, மற்றும் சமயக் கோட்பாடுகளைப் பிரிக்கின்றனர். ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு பகுதியை உடைத்தானதே உண்மையான இந்துசமயம். ஆகவே கருப் பொருளை மிகவும் தெளிவாக்குவதற்கு சில மகான்கள்-விசேடமாக எங்கள் ஸ்ரீசுவாமிஜி அவர்கள் இந்து சமயம் என்னும் யோக என்று இலகுவில் அழைத்தனர். ''யோக'' என்னும்

போது, பரிசுத்த உண்மை இந்துசமயம் என் பதனையே பேசுகிறார்கள்.

யோகியர்களாகிய மெய்ஞானிகள் பல வருடங்களுக்கு முன்பு கண்டறிந்தவற்றை நவநாசரீக விஞ்ஞானிகள் சரியானது எனப் பரீட்சிக்கின்றனர்.

இப்போது 1980ம் ஆண்டில் அமெரிக்க மக்களது வாழ்வில் யோகக்கலை என்பதும் நடைமுறையில் உள்ள ஒன்று என வந்து விட்டது. கல்லூரிகளிலும் மற்றும் கல்விசம்பந்தமான சாலைகளிலும் ஹடயோகத்தை பாடத் திட்டத்துள் சேர்த்துள்ளனர் ஒரு அமெரிக்க தொழிலாளி தனது உத்தியோக தேவை கண்டு நிஷ்டை செய்து பெற்று அதனால் நிம்மதி வெற்றி அடைந்து விட்டான் என்று கூறுவது ஒரு புனிதமாகக் கருத முடியாது. ஒருகாலம் தாவர போசனம் புசிப்போரைப் பார்த்து அமெரிக்கர்கள் ஒரு புதினமாக — அவர்களை அந்நிய மக்களாகக் கருதினர். ஆனால் இப்போது அமெரிக்க மக்களிடையே மரக்கறிப் போசனம் முற்றாக நடைமுறை யாக மாறிவிட்டதைக் கவனிக்கலாம். எந்த பார்த்தாலும் சைவ போசன சாலைகளைக் காணலாம் யோக சித்தாந்தக் கலையை கல்வி மான்களும் பற்றையோரும் சபயத்தில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களைக் கற்றுணர்வதற்காக கற்கின்றார்கள் யோகச்சாலையின் நுட்பங்கள் மூலம் வைத்தியசாலை நிபுணர்கள் தம்மிடம் வரும் நோயாளரைக் குணப்படுத்துகின்றனர்.

யோகக்கிரமம்

கட்டுக்கடங்காத மலர்களன்ன சிறுவர் களின் கதி என்னவாயிற்று? யோகக்கலையை உண்மையாகப் பின்பற்றியவர்கள், போதை வஸ்துக்களைத் தூக்கி எறிந்தனர். தாவர போசனத்தை உண்ணப் போந்தனர் உடையில் தூய்மையையும் எளிமையையும் கடைப் பிடித்தனர். பெற்றோரை ஒருகால் வெறுத் தோம் என்று பேசியவர்கள், இரக்க உணர்ச்சி காட்டினர். சௌக்கியம் காரணமாக ஒளி விட்டுப்பிரகாசித்தனர். ஜீவாதார புஷ்டியுள் ளவர்களாயினர். எல்லா மக்கள் மீதும் அன்பு சொரியலாயினர். உலகில் உள்ளயா வும் எதற்காக ஏன் என்பன போன்றவை களில் ஒரு விளக்கமும் பொறுப்புவாய்ந்த பிர சையாகவும் மாறினர். பல இளைஞர்கள் இதன் பலனாக வாழ்க்கையில் முன்னேற்றம் அடையலானார்கள். சிலர் தங்கள் தொழில் மூலம் மக்களுக்குச் சேவை செய்ய இயலாது எனக் கண்டும், அதனையும் மக்கட் தொண் டாகச் செய்யத் தொடங்கினர். பல்லாயிரக் கணக்கான அமெரிக்கர்களுக்கு யோகக்கலை வாழ்க்கையில் ஒரு நடைமுறையாக மாறி விட்டது.

யோகக் கலையின் மூலம் தங்கள் வாழ்க்கை உயர்ந்து சுபீட்சமடைந்துவிட்டதைக் கண்ட பலர், மீண்டும் மீண்டும் யோகக்கலையின் ஆழத்தைக் காண்பதில் ஆர்வம் கொண்டுள் ளனர். யோக வாழ்க்கைக்குகந்த ஒரு தூய் மையான சுற்றுடலைத் தேடி அலைகின்றனர்.

நிரந்தர ஆச்சிரமம்

ஆயிரக்கணக்கான தமது மாணவர்களது தூண்டுதல் காரணமாக ஸ்ரீ சுவாமி சச்சிதா னந்தஜீ அவர்கள் 1966ம் ஆண்டில் ஒரு பூர ணத்துவ யோக ஆச்சிரமத்தை ஸ்தாபித்தார் கள். அதி விரைவில் அமெரிக்காவில் பல பாகங்களிலும் யோக ஆச்சிரமங்கள் தோன் றின. மற்றும் தேசங்களிலும் பரவின. பூர ணத்துவம் நிறைந்த யோக ஆச்சிரமத்தில் யோகக்கலையுடன் சேவைகளையும் புரிந்தனர். பிரதானமாக ஆச்சிரமத்தில் குடிகொண்ட வர்களுக்கு யோக வாழ்க்கைக்குரிய சகல வழிகளையும் ஏற்படுத்தினர். பரபரப்பும், லோகாயுதமும் நிரம்பி வழியும் நியூயோர்க் நகரத்தின் மத்தியிலும், மக்கள் மிகவும் எளி மையும் புரிசுத்தமும் உள்ள யோக வாழ்வு வாழ்வதற்கு முடிகின்றது.

எல்லோரும் லௌகீகத்தில் ஈடுபடுங்கள். அதுவே உங்களுக்குச் சுகமாக அமைந்துவிட்டால், உலக இயக்கத்தை உங்கள் இல்லறத்தின் மூலம் நடத்துங் கள். அதைத் தாங்க முடியாதவர்கள் மட்டும் வெளியே வாருங்கள். அதிகம் போனால் நூற்றுக்கு ஒரிரு வர் மட்டுமே தான் அப்படி வருவீர்கள். அப்போது போதிப்பவர்கள் குறைவாகவும், கேட்பவர்கள் அதிகமாகவும் இருப்பீர்கள். எல்லோரும் பல்லக்கில் அமர்ந்தால் தூக்குவது யார்? எல்லோரும் ஞானிகளாகி விட்டால் போதனைக்கென்ன அவசியம்?

—அர்த்தமுள்ள இந்து மதம்

ஹிந்து சமயமும் ஹிந்தாச்ரமப் பணியும்

A. R. சொன்ராஜ்

உலகம் தோன்றிய காலந் தொட்டு இன்றளவும் ஜீவசக்தி உடையதாகத் திகழும் ஒரு சமயம் உண்டு என்றால் அது நம் ஹிந்துப் பெருஞ் சமயமேயாகும். எந்த ஒரு தனிமனி தனாலும் ஏற்படுத்தப்படாத சமயம் ஹிந்து சமயம்.

கல் தோன்றி மண் தோன்றுக் காலத்தே முன்தோன்றி மூத்த சமயம் ஹிந்துசமயம். இதற்கு சநாதன சமயம் என்று பெயர்.

ஏடு தோன்றுக் காலத்தே-எழுதாக்கிளவி என வந்த வேதங்களைத் தன்னிடத்தே கொண்ட இந்த சமயம் வேதாந்த மதம் எனவும் பெயர் பெறும்.

ஹிந்து சமயத்தைப் பரப்ப எவரும் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தியதில்லை. அன்பு வழியே அதன் வழி. அஹிம்ஸா தர்மமே ஹிந்துமதம். இந்து சமயத்தை உலகமதம் என்பதுவும் சாலவும் ஏற்புடைத்தாகும். உலக உயிர்கள் யாவும் க்ஷேமம் உறவேண்டும் என்பதே நம் சமயத்தின் சீரிய கொள்கையும் குறிக்கோளும் ஆகும்.

எத்தனையோ பல இன்னல்களையும் சோதனைகளையும் இந்து சமயம் சந்தித்திருக்கிறது எனினும் காலவெள்ளத்தில் கலங்காது, அழியாது கவின் மிகப்பொலிந்து உயிராற்றலுடன் ஒளிவீசித் திகழ்கின்றது.

அதேசமயம் இந்து சமயத்துக்கு இணையாக அறிஞர்கள் கருதும் கிரேக்க, சுமேரிய, சினக்கலாச்சாரங்கள் எல்லாம் உலக வழக்கு ஒழிந்தன. வெறும் கல்லறைகளாய், பிரமிட்டுகளாய், சேஞ்சுவர்களாய்க் காட்சிதருகின்றன.

ஹிந்து சமயத்தின் இந்த நிலைபேற்றுக்கும் பெருமைக்கும் காரணம்என்ன? ஏனைய சமயங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட எல்லையோடு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

ஹிந்து சமயத்தில் எண்ணற்ற மஹான்கள் காலந்தோறும் தோன்றிச் சமயதத்துவங்களை ஆராய்ச்சி பூர்வமாக விளக்கித் தெளிவுறுத்தி மக்கள் ஆன்மீக, தார்மீக நெறிகளைப்பற்றி வாழ்வாங்கு வாழ வழி காட்டி வருகிறார்கள்.

வேதகால மகரிஷிகள் முதலாக அண்மைக்கால மஹான்களான இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமணர், வள்ளலார், ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகள் வரை அந்தப் பரம்பரை வாழையடி வாழையாகத் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது.

ஹிந்து சமய நெறிமுறைகளுக்கு எல்லாம் நமது வேதங்களே அடிப்படையாகும்.

ஹிந்து சமய நூல்கள் யாவும் வேதக் கருத்துக்களை ஒட்டியே எழுந்தன.

வேதநெறி முறைப்படி வாழ்ந்து காட்டிய ஸ்ரீ இராமன், ஸ்ரீ கிருஷ்ணன் ஆகியோரின் அவதார சரிதங்களே இதிகாசங்கள் எனப் போற்றப்பெறும் இராமாயணமும் பாரதமும்.

ஆகமங்கள் -ஸ்மிருதிகள் - பகவத்கீதை— திருமுறைகள்—திவ்யபிரபந்தங்கள் – அருட்பா போன்ற அரும்பெரும் நூல்கள்யாவும் வேதக் கருத்துக்களை விளக்குவனவே.

பாரத நாட்டில் வழங்கும் பல்வேறு மொழிகளிலும் வேதநெறி விளக்கும் ஞான நூல்கள் நிறைந்து விளங்குகின்றன. எல்லா நூல்களின் முடிபும் – சாராம்சமும் ஒன்றுதான்.

பிறவி எடுத்ததன் பெரும்பயனை–பிரமத்துடன் ஐக்கியமாவதை உயிர்கள் பெறவேண்டும் இதுவே மோட்சம் என்றும் முக்தி என்றும் கூறப்பெறும்.

இப்பயனை அடையும் மார்க்கங்களையே ஹிந்து சமயத்தின் இரண்டு கண்களாக விளங்கும் சைவமும் வைணவமும் காட்டுகின்றன.

ஒரே பரம்பொருளைத்தான் அனைந்து மார்க்கங்களும் வெவ்வேறு பெயரால் காட்டுகின்றன. ஒரே கடலுக்குப் பல நதிகளும் வந்து சேருகின்றன,

ஹிந்துசமய அஸ்திவாரம் அன்பு, அஹிம்சை, சத்தியம் போன்ற அறங்களே.

ஆகவே ஒரு ஹிந்துவானவன் அறவழி நின்று, பொருள் சேர்த்து, இன்பம் உற்று, இறுதியில் வீடுபேறு ஆகிய முத்திநிலை காண வேண்டும்.

மனுஸ்மிருதி நான்கு வருணங்களைக் கூறுகிறது. இது பிறப்பை அடிப்படையாகக் கொண்ட ஏற்பாடு அன்று. அவரவர் செய்யும் கடமைகளை உணர்த்துவது. உயர்வு தாழ்வு குறிப்பது அன்று. வருணபேதம் காட்டி நமது ஒற்றுமைக்கு உலை வைப்பவரைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒருவன் பிரமத்தை அடைய அருவ வழிபாடு கொண்டிருக்கலாம். வேறு ஒருவன் அருவுருவ வழிபாடு கொண்டிருக்கலாம். மற்றவன் உருவ வழிபாடு கொண்டிருக்கலாம். ஆனால் இறைவனைப் பற்றிய இவர்கள் ஒவ்வொருவரின் கருத்தும் மிகப் பரந்த தன்மையுடையதாகும்.

சீரும் சிறப்பும் மிக்க ஹிந்து சமயம் இயல்பாகவே சிரஞ்ஜீவித்துவம் வாய்ந்தது.

பெற்ற-தாயும் பிறந்த பொன்னாடும் போல நமது சமயமும் நமக்கு நனி சிறந்ததாகும். அதைக் கட்டிக் காத்து வளர்க்கும் கடமையை நாம் பெற்றிருக்கிறோம்.

காலத்தின் சவால்களைக் கருத்தில் கொண்டு, உலக மக்களுக்கு உகந்த நலன் கருதியாகிலும் நம் சமயக் கொள்கைகளின் சிறப்போங்க அவற்றைக் கடைப்பிடித்துக் காப்பது நமது முதற்கடமையாகும்.

நதிநீர் அசுத்தம் அடைவதைத் தடுக்க வேண்டும் என்று பேசுகிறோம். எதற்காக? உலக உயிர்களின் நலம் கருதி.

காற்றுமண்டலம் அசுத்தப்படுத்தப்படுவதைத் தடுக்கவேண்டும் என்கிறோம். ஏன்? உலக உயிர்களின் நலம் கருதி.

அதுபோலவே

உலக நாடுகளிடையே போட்டி, பொறாமை, பூசல் உருவாகிவரும் சூழ்நிலையில் பேரழிவுக்கு வழிவகுக்கும் பெரும் பெரும் ஆயுதங்களும் அணுக்குண்டுகளும் உலகத்தை அச்சுறுத்தி வரும் வேளையில்,

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று மக்கள் மெய்யெனப் போற்றிப் பரத்தைமறந்து இக வாழ்க்கையில் அமைதியிழந்து அல்லல் பல அடைந்திருக்கும் கால நிலையில்எத்துணையும் பேதம் உறுது எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி ஆன்மநேய ஒருமைப்பாடு கொண்டு அன்பு வளர்த்து, அருள் வளர்த்து எல்லோரும் இன்புற்று இருக்க வழி காட்டி ஒளியூட்டும் நமது ஹிந்துசமய உண்மைகளை உலகுக்குப் பறைசாற்றிச் சமயத்தை வளர்ப்பதுவே உலக அமைதியும் நலமும் ஊக்கமும் பெற ஒவ்வொருவரின் தலைசிறந்த கடமையாகும்.

இந்துவாகப் பிறக்கும் ஏற்றம் பெற்ற இனிய சகோதரனே! இந்து சமயச் சிறப்பை உலகுக்குப் பறைசாற்ற விரும்பும் நீ உண்மையான ஹிந்துவுக்கு உதாரணமாக விளங்குவாயாக. சமயநெறிகளை வாழ்வில் பின்பற்றி-சமயச் சின்னங்களைத் தரித்துக்கொள்-ஆலயம் தொழு-சமயச் சான்றோர் அருள்மொழி கேட்கத் தவறாதே - அன்பர் பணியில் இன்பம் கொள்-பின் 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநிலை வாய்க்கப் பெறு-இது நம் சமயாசாரியர்களின் அன்புக் கட்டளை.

நமது ஹிந்து சமய சாஸ்திரங்கள் மெய்ஞ்ஞான நெறியை மட்டுமா காட்டுகின்றன? விஞ்ஞான முறைகளையும் சிறப்பாக விளக்குகின்றன.

பஞ்ச பூதங்களைப் பற்றி விளக்கும் வழி காட்டும் ஆயுர்வேத, சித்த வைத்திய சாஸ்திரங்கள்-வான்புகழ் தந்த வானசாஸ்திரம் பூஜியத்தின் மதிப்பை உணர்த்தும் கணித சாஸ்திரம் - யக்ஞவேதிகைகளின் வடிவமைப்பின் மூலம் விளங்கும் ஜியோமதி (Geometry) கணிதசாஸ்திரம் - ஆலயங்கள் கம்பீரமாக நின்று அழியாச் சான்று தரும் கட்டிடக் கலை-மனையடி சாஸ்திரம் இவை போன்ற எண்ணற்ற கலைகளை வளர்த்தது நமது ஹிந்து சமயம்.

சர்வே ஜன தகிநோ பாவந்து - எல்லோரும் இன்புற்று இருக்கவேண்டும். இதுவே நமது வேதாந்தங்கள் முழங்கும் நமது ஹிந்து சமய லட்சியமாகும்.

ஓ
சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!



சுவைமிக்க - சுத்தமான
உணவு வகைகளுக்கு
வவுனியாவில்
சிறந்த ஹோட்டல்

சுத்தானந்த பவான்

பஜார் வீதி
வவுனியா.

தொலைபேசி இல: 395

With best compliments of



KAVITHAS

102-9/2, 3rd Cross Street
COLOMBO-11.

Phone: 29720

WITH BEST COMPLIMENTS FROM

S. S.

SARATHA STORES

Dealers in Textiles - Readymade Garments
Batiks and Silks Etc.

No. 96, 98, York Street,
Fort, Colombo - 1.

Phone: 22075

WITH BEST COMPLIMENTS FROM



GOLD STAR TEXTILES

DEALERS IN VERIETY TEXTILES.

95, 3rd Cross Street,
COLOMBO - 11.

Phone: 24564

With Best Compliments of

MAHESWARY STORES

34, CASTLE HILL STREET,
KANDY.

Phone: 2133

With Best Compliments of

NEW SARATHA TEXTILES

95, LOWER STREET,
BADULLA.

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

● சைவச் சாப்பாடு ● சுத்தபோசனம் ●

ஞானம்ஸ் கபே

கந்தசுவாமி கோவில் வீதி,
வவுனியா.

வாழ்த்துகிறோம்!



சிறந்த

வாசனை

வடமராப்சி

புகையிலை வகைக்கு

சற்குமாரி இல்லம்

கந்தசுவாமி கோவில் வீதி,
வவுனியா.

உ

அகில உலக இந்து மகாநாடு வெற்றிபெற
எமது நல்லாசிகள்!



சாந்தி நகை மாளிகை

மலேநாட்டில் சிறந்த தங்க நகை வியாபாரிகள்.

177, லோவர் வீதி,
பதுளை.

தொலைபேசி: 291

மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம்
விளங்க எமது அன்பான வாழ்த்துக்கள்!



சொர்ணா மஹால்

44, திருக்கோணமலை வீதி
கண்டி.

தொலைபேசி இல: 08 - 305

இந்த லட்சியம் நிறைவேற என்ன செய்ய வேண்டும்? சத்சங்கங்களின் தொடர்பு கொள்ள வேண்டும். உயர்ஞானிகள், சித்த புருஷர்கள் கூட்டுறவு பெறவேண்டும். இந்த வழியில் மதுரை ஸித்தாச்சிரமம் மக்களை நல்லமுறையில் பக்குவப்படுத்துகிறது.

இந்த ஆச்சிரமத்தின்-நிறுவனர்-தலைவர்-குருஜி-பூஜ்யஸ்ரீ சித்தநரஹரி ஆவார்.

அவரது வாழ்க்கை வரலாறு தெய்வீகப் புனிதம் நிறைந்தது.

செல்வச் சிறப்புடைய குடும்பத்தில் பிறந்தும் இளமையில் துறவையே செல்வமாகக் கொண்டார். க்ஷேத்திராடனம் மேற்கொண்டார். புனித நீராடினார். தபஸ்விகளைக் கூடினார். இமாசலம் சென்றார். பத்ரிகாசிரமம் குகையில் பல்லாண்டு தவமிருந்தார். பகவான் நாராயண மூர்த்தி பத்ம ஹஸ்தராகக் காட்சிதந்து தடுத்தாட்கொண்டார். தாம் பெற்ற இன்பம் உலகத்தார் யாவரும் பெற வேண்டுமென்ற அருள் நோக்கினால் மதுரையில் அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்தின் அண்மையில் ஸித்தாச்சிரமம் நிறுவி அருளாட்சி செய்து வருகிறார்.

ஆச்ரம ஸித்தாலயத்தின் உச்சியில் ஒருமை உணர்த்தும் ஓங்காரத்வஜம் காற்றில் அசைந்து ஆடுவது 'அமைதி வேண்டுவோர் இங்கே வாருங்கள். வாருங்கள்' என்று அழைப்பதுபோல் காட்சி தருகிறது. உள்ளே சென்றால் எங்கும் கிட்டாத அமைதி கிட்டுகிறது. குருதேவரின் எளிமைத்தோற்றம், புன்சிரிப்பு தவழும் மலர்முகம், பக்தர்களைக் கவரும் பார்வை, எளிய சொற்களால் அரிய பொருளை விளக்கும் ஆற்றல் எல்லாமே நம்மை வசீகரித்துவிடுகின்றன.

சித்தர்களின் ரஸவாதத்தால் இரும்பும் பொன் ஆகும் என்பர். இங்கே நெஞ்சைத் தொடும் குருதேவரின் அருளுரையால் கடினமான கல் நெஞ்சமும் பூப்போன்ற மென்மை பெறுகிறது.

[illegible] நடைபெறும் ஓங்கார தியானம் உள்ளத்துக்குப் பேரமைதியையும் ஒருமையுணர்வையும் ஊட்டுகிறது.

ஓங்காரம் பிரணவ மந்திரம்.

தமிழ்க் கடவுள் முருகன் தந்தைக்கு உபதேசித்த மஹாமந்திரம்.

ஒலிகளில் கண்ணன் ஓங்காரமாக ஒளிர்வதாய்க் கீதையில் கூறப்பெறுகிறது.

இந்த ஓங்காரம் ஸித்தாச்சிரமத்தில் எதிரொலிக்கிறது.

அருளுரை-தியானம்-ஆன்மீக நற்சிந்தனையாகயக்ஞங்கள் ஆகியவைகளுடன் அரிய பல நூல்களையும் இந்த ஆச்சிரமம் வெளியிட்டு ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி செய்கிறது.

நமது ஹிந்து சமய ஞான பொக்கிஷத்தின் திறவுகோலாக விளங்கும் ஸம்ஸ்கிருத மொழிப் பயிற்சியையும் இவ்வாச்சிரமம் தந்து வருகிறது ஸௌராஷ்டிர-தமிழ் திருக்குறள் ஞானயக்ஞம் நடத்துகிறது.

மாதர்கள் சத்ஸங்கம் கூடி வழிபாடுகள் நடத்த அஷ்டாங்க குடீரம் அமைந்துள்ளது.

'நான் ஒரு ஹிந்து' எனப் பெருமையுடன் கூறிக்கொள்ளும் சகல தகுதிகளையும் நமக்கு ஊட்டுகிறது ஸித்தாச்ரமம். ஹிந்து சமயம் உலக நலம் பேணுவது - உலக அமைதிக்கு ஊட்டம் தருவது என்ற பேருண்மையை மதுரை ஸித்தாச்ரமம் மாண்புற உணர்த்துகிறது. உலகில் இந்து சமயத்தின் எழிலையும் ஏற்றத்தையும் மேலும் பரப்ப சேர வாரும் ஜெகத்திரே என்று அறைகூவி இவ்வாச்சிரமம் அன்புடன் அழைக்கின்றது.

4. மாரியம்மன் தெப்பக்குளம் மேலவீதி, மதுரையில் உள்ள ஸித்தாச்ரமம் சேர்வோம். ஸித்தி பல பெறுவோம் - சிறப்புமிக்க இந்துப் பெருஞ்சமயத்தின் எழில் மாண்பினைப் பெருக்குவோம் ஓம் ஸாந்தி - ஸாந்தி - ஸாந்தி,

மங்களம் பகவான் ஸித்த:
மங்களம் ப்ரணவத்வஜ:
மங்களம் ஸ்ரீஸித்த குரு:
மங்களாய தநோ ஹரி:

ஸ்ரீ அரவிந்தர் இந்து சமயத்திற்கு ஆற்றியபணி

— சுவாமி கங்காதரன் - அரவிந்தாச்சிரமம் —

இந்துசமயம்

பழம் பண்பினையும் மகோன்னதமான நாகரீகத்தையும் ஆத்மீகச் செழுமையையும் ஞான வளத்தையுமுடைய புண்ணிய பாரதத்திற்கு ஊனுகவும் உதிரமாகவும் ஜீவனுகவும் விளங்குவதும் எக்காலத்தில் தோன்றிய தென்று வரையறுக்க முடியாததும் சனுதன மான இந்து சமயமாகும்.

அநாதியானதும் இறைவனுடைய அருள் வாக்குமாகிய வேத போதங்களின் அஸ்தி வாரத்தின் மீதே இந்து தத்துவதரிசனங்களும் சனுதனமான இந்து சமயக் கோட்பாடுகளும் சம்பிரதாயங்களும் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

புண்ணிய பாரதத்தில் கலை இலக்கியம் கவிதை காப்பியம், பண்பாடு நாகரீகம், சமூக தர்மங்கள், அரசியல் கோட்பாடுகள் யாவும் ஆத்மீக அஸ்திவாரத்தின் மீதே உருவானவைகளாகும் பிற்காலத்தில் தோன்றிய உலகப்பெரும் சமயங்களிலுள்ள அடிப்படையான உண்மைகளையும் மெய்ஞ்ஞான போதங்களையும் தன்னகத்தே கொண்டு என்றுங் குன்று எழிலிளமையுடன் பூரணப் பொலிவுடன் தெய்வீக சௌந்தர்யத்துடன் மிளிர்ந்து அல்லலுறும் மக்களுக்கு அறுதலையும் சாந்தியையும் அளிப்பதுடன் அழியாத அமரத்துவ நிலைய அடைந்து நிரந்தரம் பேரானந்தப் பெருங்களிப்பில் திளைக்க வழிகாட்டுகின்றது சனுதனமான இந்து சமயம்.

மாயை இருட்திரையால் மறைக்கப்பட்டு ஆசைக்கு அடிமையாகி புலன்வழி சென்று விஷய போகங்களை நாடி துயரப்படுகுழியில் வீழ்ந்து கரையேற வழியறியாது தத்தளிக்கும் பாசஜீவனே விழித்தெழு வீறுகொள். உழந்தவைகளை அறுத்தெறி. தடைகளை உடைத்தெறி எதற்கும் அஞ்சிக்கலங்காதே ஒளியை நோக்கித் திருப்பு உனக்கு அமரத்துவமளித்து அமரானந்தத்தை நுகரச் செய்யும் அருளுலகின் பொற்கதவம் திறக்க ஞானப் பறை அறைகின்றது இந்து தத்துவ தரிசன போதம்.

ஓமனிதனே, நீபாவியன்று இருள் செறிந்து இனல் தரும் கொடுந்துயர் நரகில் விழுந்து உழல்வதற்காகத் தோன்றிய பாவஜன்மமன்று. இவ்வுலக வாழ்க்கை பூர்வஜன்மங்களில் செய்த பாவங்களை அனுபவிப்பதற்காகத் தோன்றியதன்று.

அருளொளி படர்ந்து அன்பலை மோதும் அகண்டப் பெருங்கடலாம் பரம் பொருளினின்றும் தோன்றி அதிலேயே இயங்கிக் கொண்டிருக்கும் அமிர்த புத்திரன் நீ, அனந்தமயன் நீ என்று இன்று தத்துவம் அறிவுறுத்துகின்றது.

துன்பத்தின் சாயை சிறிதுகூட உனக்குக் கிடையாது துன்புறுவதாகக் கருதுவது உன்யதார்த்த சொரூபத்தையும் வாழ்வின் உண்மையையும் மரணத்தின் ரகசியத்தையும் உணராத அறியாமையேயாகும்.

மாயை இருட்திரையகன்று அகந்தைத் தனியுணர்வு அழியும்போது இவ்வுலகில் ஆனந்தத்தைத் தவிர வேறொன்றையும் காணமாட்டோம். அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி ஆனந்தத்திலுய்த்து ஆனந்தத்திலியங்கி முடிவில் பரிபூரணானந்த மோனசிவத்தில் ஒடுங்குகின்றன என்று அருள்மறைகள் அருளுகின்றன.

உருவ வழிபாடு மறுபிறவி வர்ணபேதம் கர்மபல சித்தாந்தம் என்ற விரிவான அஸ்திவாரத்தின் மீதே அழியாத அமரத்துவ நிலையை ஆசைவழிகாட்டும் சனுதனமான இந்து சமயமென்னும் எழில்மிக்க அருள்மாளிகை எழுப்பப்பட்டுள்ளது வேத ரிஷிகள் அருளிய சதுர்வர்ணபேதத்திற்தும், தற்போது நடைமுறையிலுள்ள பெரும் விவாதத்திற்தும் இடமளிக்கும் ஜாதிபேதத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

ஸ்தூல பிராண மன சைதிய உணர்வு நிலைகளையும் முக்குணங்களையும் குணாதீத நிலையையும் கொண்டே வேதரிஷிகள் சதுர்வர்ணபேதத்தை வகுத்துள்ளனர்.

வேத ரிஷிகளிலும் உபநிடத முனிவர்களிலும் பலர் பிறப்பால் உயர் குடியில் பிறந்தவர்களன்று. குணத்தால் உயர்நிலையை அடைந்தவர்களாவர். உலகப்பெரும் அமரகாவிய ராமாயணத்தை அருளிய மகரிஷி வால்மீகியும், வேதங்களை வகுத்துத் தொகுத்தவரும் மகாபாரதமென்னும் பெருங் காவியத்தை அருளியவரும் ஆத்மஞானக் களஞ்சியமான பிரம்மசூத்திரத்தை அருளியவருமான வியாச பகவானின் தாயாரும் பிறப்பால் உயர் குடியில் பிறந்தவர்களன்று.

இந்துசமயத்தின் அடிப்படையான உண்மைகள் மாறுதலை மறையாதலை சாஸ்வதமானவை. என்றும் நின்று நிலைத்து மனிதகுலமுய்ய வழிகாட்டிவரக்கூடியவை.

புற நியமங்களும் சம்பிரதாயங்களும் கோட்பாடுகளும் காலத்திற்கேற்ப மாறுதல் அடையக் கூடியவை மானிட உறவு மலர்ச்சியுற்று மேல் நோக்கி வளர்ச்சியடைந்து ஒரு நிலையில் வந்து நின்று இன்னும் மேல் நோக்கி வளர்ச்சியடையாமல் தேக்கமுறும் சமயங்களிலெல்லாம் இறைவனுடைய அருட்சக்தியானது பூத உடல் தாங்கி இவ்வுலகில் அவதரித்து அருட்பணி புரிந்து மனிதகுலம் மேலுணர்வு நிலைகளுக்கு உயர்ந்து செல்ல வழி காட்டுகின்றது.

யுகந்தோறும் புண்ணிய பாரதத்தில் இத்தகைய அவதார புருடர்கள் தோன்றி உலகுக்கு வழிகாட்டி வந்துள்ளனர். ராமர், கிருஷ்ணர், புத்தர், சங்கரர் போன்ற அவதார புருடர்களெல்லாம் புத்துணர்வின் புத்தொளியின் இறக்கத்திற்காகவும் வெளிப்பாட்டிற்காகவும் அவதரித்த மகாபுருடர்களேயாவர்.

உலகில் பரிணாம வாத சித்தாந்தம் தோன்றி மக்களுடைய உள்ளத்தில் உரம் பெறுவதற்கு பல்லாயிர வருசங்களுக்கு முன்பே தோன்றிய மச்ச கூர்ம வராக நரசிம்ம வாமன பரசுராமர் போன்ற தசாவதார தத்துவம், உணர்வின் பரிணாம கதியை மிகத்தெளிவாக விளக்கும் மகோன்னதமான இந்து தத்துவதரிசன போதமாகும். இது நவீன பௌதீக விஞ்ஞானிகளையும் உலகப் பெரும் சிந்தனையாளர்களையும் பிரமிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

தன்னிகரில்லாத் தனிப்பெரும் சிறப்பினையும் மகோன்னதமான பண்பினையுமுடையது இந்துசமயம். அது எவ்வித கட்டுப்பாடுமற்ற சிந்தனைச் சுதந்திரத்தை மக்களுக்கு அளிக்கின்றது. தெய்வ நம்பிக்கையற்ற நாத்திகனையும் அவன் வழியே சென்று வளர்ச்சியடைய ஊக்கமளிக்கின்றது. உலகப் பெரும் பிறசமயங்களை எல்லாம் ஆதரித்து தழைத்தோங்க ஆக்கமளிக்கின்றது இத்தகைய உயரிய பண்பை புண்ணிய பாரதத்தில் இந்து சமயத்தில் தவிர உலகில் வேறு எந்த தேசத்திலும் காண முடியாது.

ஸ்ரீ அரவிந்தரும் இந்துசமய மறுமலர்ச்சியும் அநாதியான வேத தர்மங்களிலும் உபநிடதம் கீதை பிரம்மசூத்திரம் போன்ற அருள்மறைகளிலும் இந்து தத்துவ தரிசன போதங்களிலும் இந்து சமயத்தின் ஆழ்ந்த அடிப்படையான உண்மைகளிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும் பற்றும் பாசமும் உடையவர் ஸ்ரீ அரவிந்தர்.

உலகப் பிரசித்தியுடைய ஸ்ரீ அரவிந்தருடைய யோகாசிரமத்தில் எந்தவிதமான சமய நியமங்களும் பின்பற்றப்படுவது இல்லை என்பது உண்மையேயாயினும் ஆசிரமம் இந்து தத்துவதரிசன பேதங்களின் அஸ்திவாரத்தின் மீதே எழுப்பப்பட்டதாகும். ஸ்ரீ அரவிந்தர் எழுதிய கீதைக்கட்டுரைகளிலும் ஈசோபநிஷ விளக்கமுமே இதற்கு போதிய சான்றாகும். வாழ்நாள் முழுவதும் சில ஆத்மீக யோக சமய நியமங்களைப் பின்பற்றுவது நமது நோக்கமாக இருக்கக்கூடாது.

புறனியமங்களின் மூலம் சித்தசுத்தியும் அகமலர்ச்சியும் ஆத்மவளர்ச்சியும் அடைவதுவே நமது நோக்கமாக இருக்கவேண்டும். எல்லா வகையான ஆத்மீக நியமங்களினுடைய நோக்கம் கீழியல் குணங்களினின்றும் முற்றும் விடுபட்டு ஆத்மானுபவங்களையும் ஆத்மசாட்சாத் க்ஷாரத்தையும் அடைவதுவே யாகும்.

புலனடக்கம், மனதடக்கம் பிரம்மச்சாரியம், அகத்துறவு மோனம் தியானமாகும். ஏகாக்கிரமம் நிஷ்காம்ய கர்மம் தத்துவ விசாரம் குருபக்தி குருசேவை தூய்மை அமைதி எளிமை, பற்றின்மை முதலிய ஆத்மீக நியமங்களெல்லாம் ஆசிரமத்தில் மிகக் கவனமாகவும் மிகக்கண்டிப்பாகவும் பின்பற்றப்படுகின்றன.

தற்கால உலகில் ஆசனம் பிராணயாமம் போன்ற ஹடயோக நியமங்களே யோக சாதனை என்றும், இவைகள் இல்லாமல் ஆத்மீக வாழ்வில் முன்னேற முடியாதென்றும் கருதப்படுகின்றது.

ஆசிரமத்தில் ஆசனம் பிராணயாமம் போன்ற நியமங்களை பின்பற்றுத போதிலும் முறையான தேகப்பயிற்சி மிதமான சாத்வீக உணவு தூய்மையையும், எளிமையான வாழ்க்கை குருவால் அளிக்கப்படும் பணி இவைகளின் மூலமாக வலியும் வனப்பும் திடகாத்திரமும் ஆரோக்கியமுமுடைய உடலைப் பெற அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. ஸ்ரீ அரவிந்தர் தேகப்பயிற்சிக்கும், ஆரோக்கியமான வாழ்க்கைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். வேத உபநிடத ராமாயண மகாபாரத காலத்திற்குப்பிறகு தோன்றிய ஆத்ம தத்துவதரிசன போதகர்களில் பெரும்பாலோர் வாழ்வை வெறுத்து அழிக்கும் துறவு மனப்பான்மையை மக்களுடைய உள்ளத்தில் வளர்த்துச் சென்றுள்ளனர். இதற்கு எதிரிடையாகவே பிற்காலத்தில் லோகாயதவாதமும் நாத்தீகமும் தழைத்துச் செழித்தோங்கலாயின.

கந்தையுடுத்தி கஞ்சிகுடித்துத் தரையிற் படுப்பதுவே உண்மைத்துறவு எனக்கருதப்படுகின்றது. அப்படியாயின் ஜனகர் மார்க்க அரேலியர் போன்றோர் தலைசிறந்த ஆத்ம ஞானிகளாக இருந்திருக்க முடியாது. புறத்துறவைவிட அகத்துறவும் உள்ளப்பரிபக்குவமும் ஆத்மப்பரிபூரணத்துவமுமே முக்கியமானதாகும்.

ஒடுக்கம் வாழ்வின் குறிக்கோளன்று. மலர்ச்சியும் வளர்ச்சியும் வெளிப்பாடுமேயாகும்.

இறைவன் வதியும் திருவிடம் இவ்வையகம். இறைவனுக்கு உறைவிடமாகவே யாவும் உள்ளன என்று ஈசோப நிடதம் அருளுகின்றது. இறைவனும் வாழ்க்கையும் வெவ்வேறு வைகளன்று. பொன்னும் அணியும் போன்று ஒரே பொருளின் இருவகைத்தன்மைகளாகும். இறைவனுடைய திருவுருவங்களே இவ்விஸ்வப் பிரபஞ்சத் தோற்றங்கள். பகவான் பார்த்தனுக்கு அருள்பாலித்தருளிய விஸ்வரூப தரிசனத்தின் கருப்பொருளிதுவே.

ஸ்ரீ அரவிந்தர் வாழ்க்கைக்குத் தன்னிகரில்லாத் தனிப்பெரும் இடத்தை அளித்துள்ளார். தெய்வ நம்பிக்கையற்ற லோகாயதவாதிகள் கூட வாழ்க்கைக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

வாழ்க்கை இறைவனை உணர்வதற்கும் இறைவனை இவ்வுலகில் வெளிப்படுத்துவதற்கும் ஆன மாபெரும் யோக நிலையம் என்பது ஸ்ரீ அரவிந்தருடைய திருவுளமாகும்.

சனாதனமான இந்து சமயம் வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துவந்துள்ளது. வேதரிஷிகளிலும் உபநிடதமுனிவர்களிலும் பெரும்பாலோர் தலைசிறந்த இல்லற ஞானிகளேயாவர். இதனின்றும் சனாதன மான இந்து தத்துவ தரிசனபோதம் வாழ்க்கைக்கு எத்தகைய முக்கியத்துவம் அளித்துள்ளது என்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ அரவிந்தர் அதிமானமென்று அருளுவது வேதரிஷிகள் விஞ்ஞானசத்திய சேதனமென்று அருளும் ஒளியுணர்வு நிலையையேயாகும். எல்லாம் ஒன்றே, பிரம்மமே சத்தியம், உணர்த்துவது ஞானம்.

பிரம்மமே உலகாடலின் பொருட்டு இவ்விஸ்வப் பிரபஞ்சத் தோற்றங்களாகவும், இயக்கங்களாகவும் பர்ணமித்து இயங்கிக் கொண்டிருக்கின்றது பிரம்மம் எப்படி சத்தியமோ அதுபோலவே அதனின்றும் தோன்றி இயங்கிக்கொண்டிருக்கும் இவ் விஸ்வப்பிரபஞ்சத்தோற்றங்களும், சத்தியமும் நித்தியமும் நிரந்தரானந்தமும் உடையவர் என்று உணர்த்துவது விஞ்ஞான மென்றும் அதிமானசம்.

அதிமானச உணர்வின் இறக்கத்தால் திருவுருமாற்றமும் திவ்விய பரிபூரணமும் அடைதல் என்று ஸ்ரீ அரவிந்தர் அருளுவது வேதரிஷிகள் அருளும் சத்தியயுகத்தையேயாகும்.

அனைத்தையும் இறைவனுடைய வடிவங்களாகக் கண்டு ஒய்விலும், விழிப்பிலும், துயிலிலும் செயல்படும் போதும் மற்ற வேறெந்த நிலைகளிலும் இறைவனுடைய சாந்நித்யத்தை இடை விடாது உணர்ந்து இறைவனில் பதிந்து இறைபணிபுரிபவனே சத்தியயுக மனிதன். பரசாந்த மோனப் பெருநிலையிலும் சொர்க்கபோகங்களிலும் மட்டுமின்றி இருள் செறிந்து இன்னல் தரும் கொடுந்துயர் தருகிலும் இறைவனுடைய சாந்நித்தியத்தையும் இறைவனுடைய ஆனந்தப்பரவச கவிநடனத்

தையுங்கண்டு நிரந்தரம் பேரானந்தப்பெருங் களிப்பில் திகழ்பவனே பரிபூரணத்துவமு டைய சத்தியயுக மனிதன். அன்பும் அறமும் அருளும் அருந்தவமும், அருட்பெருங் குண அறவாழ்வும் தழைத்துச் செழித்தோங்கும்.

கடவுளின் ராஜ்யமென்று அறவோர்கள் போற்றும் பொற்காலமே சத்யயுகம். கலியி னின்றும் சத்தியயுகத்திற்கும் சத்தியயுகத்தி னின்றும் கலிக்கும் காலவட்டம் அதிவேக மாக சுழன்றுகொண்டிருக்கின்றது. சத்திய யுக அருணோதயம் உதயமாகிக்கொண்டிருக் கின்றது. இன்று மனிதகுலம் சத்தியயுகத்தின் நுழைவாயிலில் அதிவேகமாகச் சென்று கொண்டிருக்கின்றது. உலகில் தனிமனிதனு டைய வாழ்விலும் உலகிலும் நிகழும் மிகச் சாதாரணமான சம்பவங்கள் முதல உலகில் மனிதகுலத்தையே நிர்மூலம் செய்யும் மிக பயங்கரமான கோர சம்பவங்கள்வரை யாவும் மனித சமுதாயத்தை சத்தியயுகத்தை நோக்கி அதிவேகமாக உந்தித்தள்ளும் சாத னங்களேயாகும். கலிமுடிந்து சதியியுகம் ஆரம்பமாகிவிட்டால்தான் கலியின் வேகம் அதிகமாக இருக்கின்றது. உலகெங்கும் அதர் மத்தின் வேகம் அதிகமாக மனிதகுலம் சொல்லொணுதுயருக்கும் வேதனைக்கும் உள் ளாகி கரையேற வகையறியாது தத்தளிக் கின்றது. இரவுக்குப்பின் தோன்றும் அருணோ தயம் போன்று அதர்மமும் கொடுமைகளும் நிரம்பிய கலிமுடிந்து தர்மம் செழித்தோங் கும் ராமராஜ்யமாகிய சத்யயுக அருணன் உதயமாகிவிட்டான்.

நவீன சிந்தனையினாலும் பௌதீக விஞ் ஞான வளர்ச்சியினாலும் தொழில் வளத்தி னாலும் செல்வச் செழுமையினாலும் இன்று உல கம் சுபீட்சத்தை நோக்கி வேகமாக முன் னேறிக்கொண்டு இருக்கின்றது. அரசியல் சமூகம் பொருளாதாரம் கலை இலக்கியம் நாகரீகம் பண்பாடு சமூகம் சமயம் தத்துவம் முதலிய எல்லாத் துறைகளிலும் புரட்சிகர மான பெரும் மாறுதல்கள் தோன்றிக்கொண் டிருக்கின்றன. மனிதனுடைய அகவாழ் விலும் புறவாழ்விலும் பெரும் மாறுதல்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. மனித குலம் உறக்கத்தினின்றும் விழித்தெழுந்து வீறுகொண்டு பழந்தளைகளை அறுத்தெறிந்து தடைகளை உடைத்தெறிந்து புத்தொளியை புதுவாழ்வை நோக்கி அதி வேகமாக முன் னேறிக்கொண்டிருக்கின்றது. புத்தொளியும் புத்துணர்வும் புத்தெழுச்சியும் புது மலர்ச்சியு முற்ற மனித குலம் புது யுகத்தின் புது வாழ் வை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றது. இன்று உலகில் காணும் மிகப் பயங்கரமான கோர நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மூலகாரணம் புதுவாழ்வை உருவாக்குவதற்கு முன் இடைக் காலத்தில் தோன்றும் மாற்றமேயாகும்.

காலத்திற்கேற்ப இந்துசமயம் புறநிய மங்களில் புரட்சிகரமான மாறுதல்களை செய்து கொண்டு உருவாகி வரும் புது உல குடன் சரிநிகர் சமானமாக தோளோடு தோள் சேர்ந்து வேகமாக முன்னேற வேண் டும். இல்லாவிடில் சனாதனமான உயரிய ஆதரிசமுடைய இந்துசமயம் பின்தங்கி நலி வுற்றுவிடும்.

நவயுக அருணோதயத்தின் அருட்காட்சிக ளைக் காணும் அருட்கவிஞனும் நவயுக ரிஷி புமாகிய ஸ்ரீ அரவிந்தர் தம் உயிரினும் மேலா கப் போற்றிப் பேணும் இந்து சமயத்தின் புற நியமங்களில புரட்சிகரமான பெரும் மாறுத லச்செய்து இன்னும் பல நூற்றாண்டுகளுக் குப்பிறகு உருவாகபோகும் நவமானவ சமு தாயத்தை நவஜீவனத்தை நவசமயதத்துவ போதத்தை உருவாக்கி உலகின்முன் வைத் துள்ளார். ஸ்ரீ அரவிந்தர் இந்து சமயத்திற்கு சமுதாயத்திற்கு புண்ணிய பாரதத்திற்கு இந்து தத்துவ தரிசன போதங்களின் மறு மலர்ச்சிக்கு செய்துள்ள அரும்பணி எத்தகை யது என்பதை எதிர்கால உலகம் போற்றிப் பின்பற்றும்.

அறிவிலும் ஆற்றலிலும் ஆத்மீக வேட் கையிலும் தலைசிறந்த தமிழ்ப்பெருமக்கள் ஸ்ரீ அரவிந்தரின் அருட்பணியின் சிறப்பை உணர்ந்து அதை சரியான முறையில் பயன் படுத்தி பிறவிப்பயன் அடைய பெருமுயற்சி செய்ய வேண்டும் என்பதுவே என்தாழ்மை யான வேண்டுகோளும் பிரார்த்தனையுமா கும்.

நவயுக அருணோதயம்

நவயுக அருணோதயத்தின் அருட்காட்சி தோன்றுகின்றன. நவயுகம் உதயமாகிவிட் டது, பரிமோனம்கவிகின்ற பரசாந்தம் நில வுகின்றது. பரவொளிபடருகின்றது, இடை விடாது பரஒலி கேட்கின்றது, இறைவனு டைய சாநித்தியம் எங்கும் எப்பொழுதும் எல்லாவிடங்களிலும் நீக்கமற நிலவுகின்றது.

யோகாசன ஆலயம்

இந்துசமய வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டுகள்

-புலவர் பா. ஆழ்வார், ஆசிரியர் 'யோகாசன ஆலய விஜயம்' திங்கள் இதழ்-

மூர்த்தியெல்லாம் வாழியெங்கள் மோனகுரு வாழியருள்
வார்த்தையென்றும் வாழியன்பர் வாழி பராபரமே.

—தாயுமானவர்

உலகம்போற்றும் சமயங்கள் அனைத்துக்கும் தாய்ச் சமயமாக விளங்குவது இந்து சமயமாம் காலம் வரையறுக்கவியலாத ஆதியந்தமில்லா இந்துசமயமென்னும் தாய் ஈன்றெடுத்த மழலைச் செல்வங்களாகிய பிற சமயங்கள் உலகெங்கும் தவழ்ந்து வருகின்றன அவைகள் மழலைச் செல்வங்களாதலால் தாயாகிய இந்துசமயத்தினிடமிருந்தே சத்தாகிய மூலப்பொருளைப் பெறவேண்டியிருக்கின்றன இந்து சமயம் தனியொரு ரால், அன்றியொரு நாரின் பெயரால் தோற்றுவிக்கப்படவில்லையென்பது உலகறிந்ததே! சிறப்புமிக்க இந்து சமயத்தில் தான் ஆன்மீகக் கருவூலம் நிறைந்திருக்கக் காண்கின்றோம் இதனையுணர்ந்து நுகர்ந்த தாயுமான அடிகள்;

அந்தோஈ ததிசயம்இச் சமயம் போல் இன்(று)
அறிஞர் எல்லாம் நடுவறிய அணிமா ஆதி
வந்தாடித் திரிவார்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற போக்கும்
இதுவன்றித் தாயகம்வேறில்லை இல்லை
சந்தான கற்பகம் போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான் சன்மார்க்கம்.

என வியந்து போற்றுகிறார்.

இத்தகு சீர்மிகு தருமத்தைச் சிதைக்க முற்படுபவர்கள் சிதைந்துபோவார்கள் என்கின்ற உண்மையைச் சுவாமி விவேகானந்தரின் திருவாக்கினால் காண்கின்றோம்:

"இந்தியாவில் வேத மார்க்கத்தை வேரோடு பெயர்க்க வேண்டி அனேக மதவாதிகள் உண்டானார்கள். அவர்கள் கிளம்பி முக்கரணம் போட்டும் இந்து மதத்தை அசைக்க முடியாமல் போயிற்று. இந்து வேதாந்தமானது அதற்கு விரோதமாய்க் கிளம்பின சகல மதங்களையும் வாயிற் போட்டுக் கொண்டது. இந்தியாவில் விக்கிரகஆராதனை செய்பவர்களும், துவைதர்களும், ஜெயினர்களும், பௌத்தர்களும் இன்னும் பற்பல மதஸ்தர்களும் உளர் இவர்களெல்லாம் புறப்பட்ட இடம் ஒன்றே! இந்துக்களிலுள்ள சைவம், வைணவம் முதலான சகல மதங்களுக்கும் ஆதாரம் ஒன்றுதான். அதுதான் எல்லோருக்கும் பொது. அப்படிப்பட்டபொதுவான வஸ்து என்ன? அதைத்தான் நாம் இன்னதென்று அறிந்து கொள்ள வேண்டும்''

இத்தகைய பொதுவான வஸ்துவை இன்னதென அறியச் செய்யும் இந்து தருமத்தின் நெறி நின்று, 'யோகாசன ஆலயம்' ஆறு சீரிய கொள்கைகளை வகுத்துத்தொண்டாற்றி வருகிறது அவையாவன;

1 கடவுள்:- சிவமயம், நிட்களம், நிர்க்குணம், நிராலம்பம், நிர்விஷயம், விஷ்ணுமயமாய் இருப்பவர்.

2. சகல உண்மை அறிவிற்கும், அவ்வறிவால் அறியப்படுகின்ற அனுபவத்திற்கும் மூல காரணராய் இருப்பவரே ஈசுவரர்.

3. தெளிந்த அறிவே வேதமெனப்படுவது; வேதத்தை அறிதல், அறிவித்தல் ஒவ்வொரு அங்கத்தினரின் கடமை

4. ஆத்ம சம்பந்தமாகவும் சரீர சம்பந்தமாகவும் பண்டைய வேத தர்மத்தைக் காப்பதே இவ்வாலய அங்கத்தினரின் முக்கிய கடமை.

5. எல்லோரிடத்திலும் அன்போடும், நியாயத்தோடும், தகுந்த மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

6. கொலை, களவு, கள், காமம், கோபம் இவைகளை விலக்குதல்.

இந்து தரும போதனை வழியைக் கடைப்பிடித்துச் சரியை, கிரியை, யோகம், ஞானம்

ஆகிய நான்குவித நெறிகளுர் கடந்து இறை வனேடு ஒரண்டறக்கலந்த சித்தர்கள், மா முனிவர்கள், மற்றும் அருளாளர்கள் எண் ணற்றோராவர். இன்றும் முது பெரும் ஞானி யர் 'ஆத்மஜோதி' யைக்கண்டு நடமாடும் கோயில்களாக உலவிக் கொண்டுதான் இருக் கின்றனர். 'பாப்பின் கால் பாம்பறியுமாப் போலே அவர்களே யுறிபவர் அறிவுக்கண் பெற்றவர்களாகத் தான் இருக்க முடியும்.!

நம் முன்னோர்களால் நமக்காக இயற்றப் பட்ட வேதங்கள், ஆகமங்கள், புராண, இதி காசங்கள், மற்றும் அருட்பாடல்கள் எண்ணி லடங்கா. ஆயினும் இவற்றின் குறிக்கோள் ஒன்றேயாம்! அஃதாவது, உயிர்கள் நல்வினை தீவினைகட்கேற்ப உடலெடுத்து இன்ப துன் பங்களை நுகர்கின்றன; இத்துன்பமாகிய பிற வியினின்றும் விடுதலை பெற்று இறையடி சார் தலையே எடுத்துரைப்பதாகும் மக்களாய்ப் பிறந்தோர்க்கே இஃது இயல்பாதுமெனவே தாயுமானவர் ''தேகம் விழுமுன் புசிப்பதற் குச்சேர வாரும் செகத்தீரே!'' என அழைப்பு விடுக்கின்றார்.

மிக விரைந்து கழியும் வாழ்நாளில் நமக் காக முன்னோரால் அளிக்கப்பட்டுள்ள அனைத்து நூல்களையும் ஐயந் திரி பற கற்று ணர்ந்து நெறிநிற்றல் என்பது அனைவர்க்கும் இயலாத ஒன்றேயாம். எனவே ஒருவர் யாதே னும் ஒரு நூலை உறுதியாக ஏற்று அதனை ஓதி யுணர்ந்து நெறிநிற்றலே மானிடப்பேற்றுக் குப் பயனுக அமையும். இன்ன நூல் என்ப தனை அவரவர் தேர்ந்து கொள்ளலே மிக நன்று. ஏனெனில்? நம்மவர் அருளிய அருள் நூல்கள் ஒன்றுக் கொன்று முரண்பட்டன வாகவோ ஏற்றத் தாழ்வுடையனவாகவோ அமையவில்லை.

''கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' எனக்கூறும் தமிழ் வேதத்தின் அறவுரையை ஏற்று 'யோகாசன ஆலயம்' மாமுனிவர் தாயுமானவரின் திருப் பாடல்களை கைந்நூலாகக் கொண்டு மக்க ளுக்குப் போதித்தும் நெறிநிற்கச் செய்தும் தொண்டாற்றி வருகின்றது.

மக்கள் இதனை நன்கறியும் பொருட்டு ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் நாளன்று 'தாயுமானவர் திருநாள்' விழா வமைத்து மாண்புமிகு நீதிபதிகள் தலைமையில் தாயுமானவர் பாடல்களை மனனம் செய்தோ ரைப் பரிசளித்துப் பரிசுகள் வளங்கி ஊக்கு வித்து வருகின்றது. நூல் முழுமையும் (1450) பாடல்கள் மனனஞ் செய்தோர் இந்துசமயத் துக்குத் தொண்டாற்ற முன்வருவரேல் அவர் களுக்குப் 'பிரசாரகர்' என்ற விருது வழங்கிப் பயிற்சியளிக்கப்படுகிறது.

யோகாசனங்கள்

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்(று)
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

இப்பாடல் திருமூலரின் திருமந்திரம் என் பது யாவரும் அறிந்ததே! அருமையாகப் பெற்ற நம் உடலுக்குள்ளேயே உத்தமனாம் பரம்பொருள் குடிகொண்டிருக்கின்றான் அவனைக் காண்பதற்காகச் செயல்படும் (யோகம்) முயற்சிக்கு உடல் உறுதியாக இருக் கவேண்டுமல்லவா? அதற்கான பயிற்சியே 'யோகாசனங்கள்'. இஃதைச் சித்தர் முதலான முன்னவரே நமக்களித்த பெருஞ்செல்வமா கும் மேலை நாட்டவர் இப்போதுதான் இதன் பெருமையறிந்து பயின்று வருகின்ற னர். யோகாசனங்கள் பல நூறு இருப்பினும் இல்லறத்தார்க்கென தெரிந்தெடுத்திருப்பது பதினேழாதும். இவற்றை யாவரும் பழக லாம். இப்பயிற்சியினை மக்களுக்குப் பயிற்று வித்து வருகிறது யோகாசன் ஆலயம்.

'யோகம்' என்பது ஒப்புயர்வற்ற கலை! இதுவே இந்து தருமத்தின் நடு நாடியாகும். பிற மதத்தினருக்குப் புரியாத தெரியாத கரு வூலம் இதுவே! இவ்வரிய கலையைப் பயில்வ தெனில் எத்தகைய நூல்களினையும் விளங்கிக் கொள்ள வியலா! குரு (ஞான ஆசிரியர்) மூல மாகவே சுட்டியறியப்படும். பக்குவப்பட்ட ஆன்மாக்களே இதனைக் கைக்கொண்டு 'ஆத் மஜோதி' யைக் காண வியலும்.

''வேதத்தி லேதர்க்க வாதத்தி லேவிளங்கா துனிந்து
நாதத்தி லேயடங் காதந்த வான்பெரு ளாடிக்-
கொள்ளே'' என்பார் தாயுமானவர்.

இவ்விலாப்புயர்வற்ற கலையை 'யோகாசன் ஆலயம்' மக்களுக்குப் பயிற்றுவித்து வருகின் றது. பயின்ற பக்குவான்மாக்கள் யோகாசன ஆலயத்தில் பெருமளவில் அனுபவங்களைப் பெற்றிருக்கின்றனர். இவ்வியோகக்கலையைப் பக்குவமாகப் போதிக்கின்றார் திருமூல நாயனார்

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்பால் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.

இப்பயிற்சிதனை திங்கள் இரு முறையும், பிரதி நிறைநிலா (பௌர்ணமி) நாள்களிலும் தியான வகுப்பு மூலமாக நடாத்தி வருகின்றது யோகாசன ஆலயம்.

இசை என்றாலே எல்லா உயிரினங்களும் இசையுமல்லவா? மனிதன் மட்டும் விதிவிலக்கா என்ன? இசைக்கு உருகாதவன் எதற்கும் உருகான் என்பது முதுமொழியன்றோ? இசை வடிவில் இறைவனை வணங்குவது மிக எளியோர்க்கும் எளிதே! ''பண்மாலைத் திரளிருக்கத் தமையுணர்ந்தோர் பாமாலைக்கே நீதான் பட்சமென்று நன்மாலைத் யாயெடுத்துச்சொன்னார் நல்லோர்''என்றார் தாயுமானவரும். எனவே யோகாசன ஆலயமும் இசை வகுப்பின் வாயிலாக தாயுமானார் பாடல்களையும் நாமாவளி பஜனைப் பாடல்களையும் பரவச் செய்து வருகின்றது.

நம்முடைய இந்துசமயம் வேள்வியினை மிக உயர்வாகப் போற்றி வந்திருக்கின்றது. இதிகாசங்கள் இலக்கியங்களில் வேள்வி முதலிடம் பெற்றிருக்கக் காண்கின்றோம் நீண்ட நெடுங்காலமாகவே தேவர்களாலும் முனிவர்களாலும் வேள்வி இயற்றப்பட்டு வந்திருக்கின்றது. விஞ்ஞான வடிவிலும் இது முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது! மிகத் தூய்மையான இச்சடங்கினை இந்துக்களாகிய ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய அவசியத்தைக் கருதி அதற்கென தொகுக்கப்பட்டுள்ள வேதமந்திரத் தொகுப்பினை பயிற்றுவித்த மங்கல அமங்கல காலச்சடங்குகளைச் செய்வித்து வருகிறது யோகாசன ஆலயம்.

செய்திகள் எதுவாயினும் செய்தித்தாள்களில் வெளியிட்டு விளம்பரப்படுத்துவதென்பது இன்றைய சூழ்நிலைக்கு பெரும் பயனைத் தருவதை யறிகிறோம். செய்தித் தாள்கள் நாட்டின் முதுகெலும்பு எனவும் கூறலாம். ஒவ்வொரு இயக்கமும் தமக்கென சஞ்சிகைகளை வெளியிட்டுத் தம் கொள்கைகளைப் பரவச் செய்கின்றன. யோகாசன ஆலயம் தனக்கென ''யோகாசன ஆலய விஜயம்'' என்ற பெயரில் திங்கள் இதழினை வெளியிட்டு வருகின்றது. இவ்விதழ் தொடங்கி முப்பத்து நான்காண்டுகள் இடையீடின்றித் தன்பங்கைச் செய்து வருகின்றது. இதன் நோக்கம் இந்துசமய நுண்பொருளைத் தாயுமானவர் திருப்பாடல் வழி வெளிப்படுத்துவதேயாகும்.

பழமைமிக்க நம் தருமத்தின் வேத முதலான அருள்நூல்களைப் பாதுகாப்பது நம்முடைய கடமைகளில் ஒன்றாகும். இதையுணர்ந்து யோகாசன ஆலயமும் அரும்பெரும் நூல்களைச் சேமித்து நூல் நிலையம் அமைத்துச் செயல்படுகின்றது. அன்பர்கள், கிடைப்பரிய நூல்கள் தம்மிடமிருப்பின் போற்றிப் பாதுகாப்பார்களாக!

இங்ஙனம் யோகாசன ஆலயம் தமிழகத்தில் தன்னலமான இந்துசமய வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை இறையருளால் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டு முழுவதும் ஒரு நாளும் இடையீடின்றி ஆலயங்களிலும் பிற விடங்களிலும் தெய்வத் தொண்டு நடைபெறச் செய்கின்றது.

ஒவ்வோர் இயக்கத்திற்கும் தலைமைப் பீடம் உள்ளது போல யோகாசன ஆலயத்தின் தலைமையகம் இந்தியாவின் தென்பாகத்தில் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் வண்ணையம்பகுதியில் அமைத்து அமைதியாகத் தொண்டாற்றுகின்றது.

இத்துணைக்கும் மூலகாரணராக, இறைவனுக்கு அடுத்த குரு பீடத்திலமர்ந்து யோகாசன ஆலயத்தை நாற்பத்தொரு ஆண்டுகட்கு முன்னர் நிறுவி இயக்குவித்து வருபவர் எம் மாசான் உயர்திரு கோ. மு. சுவாமியவர்களாவார். இவரது பேரவா! இந்துசமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அதன் கருப்பொருளைத் தெரிந்து ஒன்றுபட்டு வாழவேண்டுமென்பதேயாகும். இச்சீர்மிகு தொண்டினைக் கைம்மாறு கருதாது தாயுமானவரின் வழி நின்று

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய்
ஏக வருவாய்க் கிடக்குதையோ இன்புற் றிடநாம் இனி
யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே
என அறைகூவி அழைக்கின்றோர்!

ஓமெனும் ஒப்பற்ற கொடியின்கீழ் ஒன்று சேர்வோமாக!

With Best Compliments of

AMBALAVANAR & SONS

(APPROVED DEALERS FOR NATIONAL PAPER CORPORATION)

- PAPER MERCHANTS
- IMPORTED WEDDING CARDS &
- STATIONERY
- PRINTERS REQUISITES

78, MALIBAN STREET, COLOMBO - 11.

Phone: 24821, 28244

For

ELECTRICAL GOODS, RADIOS & STATIONERS

AMBALAVANAR & SONS

196, K. K. S. Road,
JAFFNA.

LUCKSHUMI BHAWAN

BRAMNAL HOTEL

97, NORRIS ROAD, COLOMBO - 11.

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!



ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ்

சகலவித
புத்தகங்கள் - சஞ்சிகைகள்
மற்றும்
சாப்புச் சாமான் வகைகள்

இல. 29, கொத்மலே வீதி – நாவலப்பிட்டி.
தொலைபேசி இல: 359.

With best compliments of



SIVARANJANI STORES

75, Fifth Cross Street,
Colombo - 11.

T'phone: 27884



அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

International Hardwares

DEALERS IN;

HARDWARES, ELECTRICALS & ESTATE SUPPLIERS.

60, D. S. Senanayake Vidiya,

KANDY.

DIAL: 08 - 2220

எங்கள் நல் வாழ்த்துக்கள்!



கண்டியில் சிறந்த தங்க நகைகள் வாங்க
நம்பிக்கைமிக்க ஸ்தாபனம்

லதா ஜுவலர்ஸ்

27, கொட்டுகொடெல்ல வீதி,
கண்டி.

தொலைபேசி இல: 08 - 3955

வாழ்த்துகிறோம்!



GANTHIMATHI GOLD HOUSE

JEWELLERS.

Kittangi, 42, Colombo Road - Galle.

Phone: 09 - 2568

HEAD OFFICE:

68, Sea Street - Colombo. Phone: 24541

With Best Compliments of

Estate Supplies Agency

LEADING HARDWARE MERCHANTS & ESTATE SUPPLIERS.

19, 21, Gampola Road,
Nawalapitiya.

Phone: 262

உ

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்!

Ajantha Hardware Stores

No. 40, Colombo Street,
KANDY.

Phone: 08 - 3398

ஓ

சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!



கண்டியன் டிரேடிங் கார்ப்பரேசன்

93, திருக்கோணமலை வீதி
கண்டி.

தொலைபேசி இல: 08 - 2616

திருப்புகழின் தாள நுட்பங்கள்

— த. ஏகாம்பரம், தலைவர்: இறைபணி மன்றம்–தாம்பரம் —

'இலக்கியத்திற்கு இலக்கணமா... அல்லது இலக்கணத்திற்கு இலக்கியமா'?
–என்ற பிரச்சனைக்கு சுலபமாக பதிலளிக்கலாம்!

இலக்கியத்திற்குத்தான் இலக்கணம்!
இலக்கியம் இன்றி இலக்கணம் இல்லை!!
–இதுபோலவே மற்றொரு பிரச்சனை!

''இசைக்குச் சாகித்தியமா?–அல்லது
சாகித்தியத்திற்கு இசையா?''

பொதுவாக-ராக ஆலாபனை-, வாத்திய இசை-, இங்கெல்லாம் ''சாகித்திய உணர்வு'' (அல்லது சாகித்தியம்) இல்லாமலேயே இசையை விரிவாக்கலாம்–அனுபவிக்கலாம்...எனினும்-,

பொருள் தழும்பிய செய்யுளை–அல்லது பாடலை–இசையோடு பாடும் போது - இசையானது சாகித்தியத்திற்கு ''அணி''யாக விளங்கி அழகு செய்கிறது! அப்படி - ''அணி''யாக இசையமையும்போது–'இசை'யை மறந்து-பாடலின் உட்பொருளிலேயே ஈடுபடுகிறோம்.

''லய''த்தை எடுத்துக் கொண்டோமானால்— சாகித்தியத்திற்கும் ''லயம்'' உண்டு! - சாகித்தியத்தை எடுத்துக்காட்டும் இசைக்கும்-''லயம்'' உண்டு!

''லயம்'' தனிப்பட்டு இயங்குவது ஒரு ''வித்தை''யே யன்றி ஒரு ''வண்ண வடிவம்'' அல்ல!-உதாரணம் தாள வாத்தியங்களின் — தனி ஆவர்த்தனம்! இதை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்!-எனவே-

''லயம்''-பாடலைத் தொடர்ந்து-, அதைத் தழுவி அதன் கட்டுக்கோப்பை விளக்க உதவுகின்றது! அதுவே ''லய''த்தின் கடமை!

ஒன்று கேட்கலாம்!

''ஆதி'' தாளத்தில் இந்தோளராகத்தில் - ஒரு பாடல் இயற்றுவதாக சங்கற்பம் செய்துகொண்டு – ராக தாள வித்தியாசத்துடன் ஒரு கிருதி''யை இயற்றிப்பாட முடியாதா.'' இயலும்! ஆனால், அத்தகைய கிருதியும் பரிமளிப்பது ''பாடலின் தகுதி''க்காகத்தான்! என்பதை உணரவேண்டும்! தாளத்திற்காக அல்ல!

முத்தமிழ்வித்தகர்களும், மெய்ஞ்ஞானியர்களும் பக்தர்களும் இயற்றிய பாடல்கள் ''ஆத்மார்த்த'' மாகவே ஊற்றெடுத்துவரும் அருள்வாக்குகள்!

பொருளோப்போலவே ''ராகம்'' ''தாளம்'' இரண்டையும் தன்னுள்ளேயே அமையப்பெற்றவை! அவைகளுக்கு உரித்தான ராகமும், தாளமும்! நமக்குத் தெரிந்த ராகத்தில் பாடுகிறோம்! நமக்குத் தெரிந்த தாளக்கட்டுக்கோப்பில் சரிப்பட்டுவரும் ஏதாவது ஒன்றில் அமைத்துப் பாடுகிறோம்!

இது ஒரு ''உத்தி'' (Make Shift) தான்! அந்த முறையில் பார்த்தால் நாம் ''அருள்வாக்கு''களை ''மெட்டு'' (Tune) அமைத்துப் பாடுவதில் ''குறை பாடு'' இருக்கத்தான் செய்யும்!

நமக்குப் பழக்கத்தில் தெரிந்த தாளங்கள் வெகு சிலவே! ஏட்டளவில் இருப்பதுவும், ''108-தாளங்''களும் அவைகளின் லகுவின் ஜாதிபேத''ங்களால் உண்டாகும் தாள பேதங்களுமே!

திருப்புகழ் போன்ற பாடல்கள் பலவற்றின் தாளம் இவைகள் எதிலும் நிர்ணயிக்க முடியாதவை! ஒரே ''ஆவர்த்த''த்தில் ''கதிபேதம்'' மட்டுமல்லாமல் ''தாளபேத''மும் கொண்டுள்ளதாக அந்தப் பாடல்கள் அமைந்துள்ளதைப் பார்க்கிறோம்!

இப்பாடல்கள் ஒவ்வொன்றும் தனக்கெனவே ஒரு "தாள சட்ட''த்தோடு சுரந்து வெளிவந்திருக்கின்றது.

எனவே நம்முடைய குறுகிய லயஞானத்தால் திருப்புகழில் உள்ள தெய்வப் பாடல்களை ஒரு கட்டுக்கோப்பில் ''திணிக்க'' முயல்வது அறியாமையாகும்!

திருப்புகழுக்கே உரித்தான ''சந்த''ங்களைத் தெளிவாக ஆராய்ந்தறிந்து ''சந்த''த்தின் போக்கு, ''நடை'' ''கால அடவு''கள் ஆகியவற்றை அனுசரித்து தாள அமைப்பை நிர்ணயம் செய்து பாடுவதே முறையாகும்!

அருள் வாக்குக்குத் தகுந்த லயக்கோப்பு!

''லயக்கோப்பு''க்குக் கட்டுப்பட்ட அருள்வாக்கு அல்ல!!

''தாளமும் இசையும் விரைந்து, தொடர்ந்து அமையும்பதங்கள் ''வண்ணம்'' எனப்படும்!

''நந்தன் சரித்திரம்'' பாடிய கோபாலகிருஷ்ண பாரதியின் பாடல்களில் "இலக்கண இழுக்கு''கள் கண்ட மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், பாரதியார் மெய்ம்மறந்து பாடும் சமயம் ஒன்றில் அதைப் பார்த்து "பக்திப்பாட்டு கேவலம் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டதாது!'' என்று சொன்னார்!

வாழ்க்கையின் அடியும் முடியும்

— இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று தொடங்கும் பாடல் புறநானூறு முழுவதிலும் மிகமிக உச்சமானதொரு பாடல்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது மேலே குறிப்பிட்ட பாடலின் இரண்டாவது அடி. இந்த இரண்டாம் அடிதான் குறிப்பிட்ட பாடலின் உயிர்நிலை; பல்லவி. இந்தப் பல்லவியில்,

'தீது பிறர்தர வாரா' என்பது வாழ்க்கையின் அடிநிலை.

'நன்று பிறர்தர வாரா' என்பது வாழ்க்கையின் முடிநிலை. இந்த முடிநிலை பற்றிப் பொறுத்துச் சிந்திப்போம்.

முதற்கண் 'தீது பிறர்தர வாரா' என்பதை எடுத்துக்கொள்ளுவோம்.

வாழ்க்கையின் அடிநிலை

நாம் இப்பிறப்பில் அநுபவிக்கும் துன்ப அநுபவங்கள், முந்திய பிறப்புக்களில் நாம் சம்பாதித்த சம்பாத்தியங்களேயாம்; இவை பிராரத்தம் எனப்படும். இப்பிராரத்தத்தை ஊட்டுவோன் இறைவன். ஊட்டுவோன் இறைவன் என்பதைச் சொல்லளவில் வைத்துக் கொண்டு, பிராரத்தமாகிய துன்பங்கள் வரும் வாய்தல்களை நோகின்றோம். வாய்தல்களை நோதல் மகாமகா தப்பு.

விளக்கம்

ஒருவன் நமக்கு அடிக்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். நம் சம்பாத்தியம் அவனுக்கூடாக வருகின்றது; 'இறைவன் அவனுக்கூடாக வரச்செய்கின்றான்' என்பதே உண்மை.

இந்த உண்மையை உணராமல், தீதாகிய துன்பம் வரும் வாய்தல்களை நோவது, எய்தவனிருக்க அம்பை நோவதாம். வாய்தல்களை நோதல் ஆகாமியமாய் வரும் பிறப்புக்களில் துன்புறுதற்கு இப்பிறப்பில் வித்திட்டு வைப்பதாயிருக்கும்.

ஒரு உதாரணம்

கோவலன் கொலையுண்டான்; கொலைக்கு வாய்தலாயமைந்த பாண்டியனை முனிந்தாள் கண்ணகி.

இக்கண்ணகி, தெய்வக் கண்ணகியாய் மாறித் தெய்வநிலை எய்திய போதுதான், கோவலன் சம்பாத்தியமே அஃதாவது அவன் செய்துவைத்த தீதே அவன் மரணத்துக்குக் காரணம் என்பதை உணர்ந்தாள்.

"தென்னவன் தீதிலன்
தேவர்கோன் தன்மனை
நல்விருந் தாகினன்"
என்கின்றாள் தெய்வக் கண்ணகி.

அன்றி, வாய்தலாகிய பாண்டியனை முனிந்த பாவத்தால் 'பெயர்த்தும் பெயர்த்தும் பிறப்பல்' என்றுங் கூறுகின்றாள். ஒரு காலத்தில் தெய்வநிலை நீங்கிப் பிறவி எடுக்க நேரிடும் என்பது அவள் கருத்து. 'துன்ப அனுபவம், நம் சம்பாத்திய விளைவு என்று அறிவது எளிதன்று' என்பது கண்ணகி மூலம் தெளிவாகின்றது.

மகா தவத்தவர்களான முனிவர்கள், நிலத்தில் குதிக்கால் படாமல், கிந்திக் கிந்தி நிலத்தை நோக்கியபடி நடப்பார்கள். நிலத்தில் ஊரும் செந்துக்களுக்குத் தம்மால் தாக்க முண்டாகாமைப் பொருட்டே அவ்வாறு நடக்கின்றார்கள்.

தம்மால் உயிர்களுக்குத் தாக்கம் நேருமானால், அது ஆகாமியமாய் வரும் பிறவிகளுக்கு வித்தாய்விடும் என்பது அவர்கள் நன்கு உணர்ந்தது.

"உற்றநோய் நோன்றல் உயிருக்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

தவம் இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டது.

முதலாவது அம்சம்: 'உற்றநோய் நோன் றல்', அஃதாவது, தன்சம்பாத்தியமாய் அநு பவத்துக்கு வந்த பிராரத்தமாகிய துன் பத்தை, ஆகாமியம் விளையாமல் அநுபவித் தல்.

இரண்டாவது அம்சம்: 'உயிர்க்கு உறு கண் செய்யாமை', உறுகண்–துன்பம். தம் மால் பிற உயிர்க்கு உறுகண் விளையுமானால் அதுஆகாமிய வித்தாய்விடும். ஆகவே ஆகா மியம் விளையாமல் பிராரத்தத்தை அநுபவிப் பதாம் என்றவாறு.

இவ்வாறு நடக்கும் தவத்தவர்களைத் 'தம்மைத் தாம் காதலர்' என்கின்றார் வள்ளு வர். காதல்–அன்பு. ஒவ்வொருவரும் தம் மேல் தாம் அன்புடையராதல் வேண்டும் என்பது கருத்து.

வள்ளுவர் ஒவ்வொருவரையும் நோக்கி, 'நீ உன்மேல் அன்புடையையாயிரு' என்கின் றார்.

'நீ எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்ற போதனையை அடுத்தபடியில் வைத்துக் கொண்டு, 'நீ உன்னுயிரில் அன்பாயிரு' என் பதற்கே முதன்மையான முக்கியத்துவம் அளிக்கின்றார் வள்ளுவர்.

'தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்'

என்பது அருமையான குறள்.

ஒருவன் தன்மேல் தான் அன்புடையனா யின், எந்த ஒரு உயிருக்கும் தீவினைப்பாலின் விளைவாகிய துன்பம் விளையாமல் நடப்பான் என்றவாறு.

தீவினைப்பால், தீவினையின் விளைவாகிய துன்பப் பகுதிகள் - சொல்லால், செயலால், நினைவால், பலவேறு தந்திர வகையால் மற்றை உயிர்க்குத் துன்பம் விளையலாம்.

தம்மேல் அன்பில்லாதவர்கள், தாம் பிறர்மேல் அன்புடையர் என்று, தம்மைத் தாமே ஏமாற்றுகின்றார்கள். பகிரங்க உலகில் இந்த முழு மக்களையே கண்ணுரக் காண்கின் றோம்.

தம்மால், மற்றையுயிர்கள் துன்புறும் போது, அவ்வுயிர்களின் நன்மைக்கே, தாம் அந்த அருமந்த கைங்கரியத்தைச் செய்கின் றோம் என்று பறை அறைவதில் அவர்கள் தவ றுவதில்லை.

துன்புறுவோர் நிலையிலும் துன்புறுத் துவோர் நிலை பொல்லாதது என்பதை அறி யும் அறிவு அவர்களுக்கு இல்லை.

துன்புறுவோர், துன்பம் தம் சம்பாத்தி யம் என்பதை உணர்ந்து இந்தப் பிறப்பி லேயே சாந்தி அடையலாம்.

துன்புறுத்துவோர்க்கு, எத்துணைப் பிற வி களெடுத்தும் சாந்தி பிறப்பதற்கு வழியில்லை.

இறைவனுக்கும் அவன் வழிநிற்கும் இயம தருமனுக்குமே (உயிர்களின் நன்மைப் பொருட்டு) துன்புறுத்தும் அதிகாரம் உண்டு. மற்றெவருக்கும் அந்த அதிகாரம் இல்லை.

ஆகவே துன்புறுவோர் நிலையினும், துன் புறுத்துவோர் நிலையே பரிதாபத்துக்குரியது. அவர்கள் குற்றம் உய்தியில் குற்றம்; அறி யாமையின் மிகுதிப்பாட்டால் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் குற்றம் அக்குற் றம். அக்குற்றம் மிக்க சாதுரியவான்கள்பால் வஞ்சகத்தோடு கூடியிருக்கும்; அவர்கள் மனம் மாசாகிய பாசி படிந்திருக்கும்.

மனத்துக்கண் மாசுள்ளார் – தம்மேல் தாம் அன்பிலாதார் – என்பவர்களின் செயற் பாடுகள், அஸ்திபாரமில்லாத மேன்மாடிக் கட்டிடங்கள் போல்வதாம்; தம்மையும் தம் மைத் தொடர்பவர்களையும் ஒருசேரத் தகர்த் துவிடுபவர்கள்.

சாரம்:

துன்ப அநுபவங்கள் நம் சம்பாத்திய விளைவுகள்; அவை வருந் தானங்கள் வெறும் வாய்தல்கள்.

உயிர்களுக்கு உறுகண் விளையாமல், பிரா ரத்தத்தை அநுபவிக்கும் வாழ்வு தவ வாழ்வு; அவ்வாறு வாழ்பவனே தன்னைத் தான் காத லன்.

துன்புறுவோன் எடுத்த பிறப்பிலேயே சாந்தியடைய வழியுண்டு; துன்புறுத்துவோ னுக்கு எப்பிறப்பிலும் சாந்திக்கு வழியில்லை.

இவ்வாற்றுல் வாழ்க்கையின் அடிநிலையா கிய மூலாதார அத்திபார தத்துவம் தெளி வாகலாம்.

தியானத்தின் அங்காதி பாத சாஸ்திரம்

[சுவாமி சிவலிங்கம்]

— தமிழாக்கம்: ம. சி. சிதம்பரப்பிள்ளை —

தியானம் என்பதன் பொருள் யாது? மனம் குவிதல் என்றால் கருத்து யாது? சிந்தனை—சிந்திப்பது என்பதின் விளக்கம் என்ன? எங்கள் கற்பனை சக்தி என்பது யாது? எதன் மீது மனம் ஒரு முகப்படுத்தப் போகின்றது? அவ்வாறு மனதை ஒரு முகப்படுத்திக் காண்பது யாது? தன்னை அறியாத ஒருவன் தியானத்தைப்பற்றியுள்ள முறை-ஒழுங்கு-இவைகளில்லாது செய்யும் தியானம்-இதன் விளைவு வெறுமை (சூனியம்) நிறைந்த சிந்தனைகள் தான் நிரம்பி இருக்கும். இதனை நீங்கள் அறிவீர்கள். வெறுமை நிறைந்த எண்ணங்கள் கபடத் தன்மையைத் தோற்றுவிக்கும். எவ்விதமான கபடத் தன்மை? மன உளைச்சல், பயங்கர திகில், தடுமாற்றம் உண்மையில் இவைகள் தியானத்துக்கு ஒரு விதமான துணையும் செய்யாது. உன்னை உயர்த்துவதற்கு உதவாது! வேறு ஒன்றுக்கும் உதவாது? ஆகவே தான் நாம் தியானிக்கின்றோம்.

எதற்காக மந்திரத்தைத் திருப்பித்திருப்பிச் சொல்லுகின்றோம். நீங்கள் மந்திரத்தை மீண்டும் மீண்டும் உச்சாடனம் செய்யும் போது அது நாளடைவில் ஒரு பசை போன்று மனத்தில் ஒட்டிக் கொள்ளும். — உனது வெறுமை நிறைந்த சிந்தனைகளில் ஒட்டிக் கொள்ளும். பசையைத் தொட்டால், அது எவ்வாறு தொடர்ச்சியாகக் கையில் இருக்குமோ அவ்வாறே மந்திரம் மூலம் தொடர்பு கொள்ளமுடியும். அவ்வாறு மந்திரமாகிய பசையை வெறுமையான எண்ணத்தில் பதிய வைத்தால் மந்திரம் நாளடைவில் வெறுமையான எண்ணத்திலும் பார்க்க வலிமை பெற்றுவிடுகின்றது. அது காரணமாக மந்திரத்தை மானசமாகவோ, உரத்தோ உச்சரிக்கமுடியும். இதனை மனம் குவிதல் என்று கூறுகின்றோம். ஒருவர் மனதை ஒரு முகப்படுத்தல் இயலாது. ஆகவே தான் நாம் ஓம் ஓம் ஓம் ஓம் என்று மீண்டும் மீண்டும் கூறிவருகின்றோம்.

தொடர்ந்து இம்மந்திரத்தை நாம் கூறிவருவோமானால் இம்மந்திரம் வெறுமையான எண்ணத்தைத் தீண்டும் ஒவ்வொன்றிலும் தொடர்பு கொள்ளும். அதாவது, குருதியில், நரம்புகளில் — எண்ணங்களில் — தொடர்பு கொள்ளும். இதனால் மனம் தாமாக இயங்காது நின்றுவிடும். உடனே நீங்கள் ஓம் அல்லது வேறு மந்திரம் ஒன்றுடன் தொடர்பு கொள்ளமுடியும். ஆனபடியினாற்றான் நாம் மந்திரத்தை இடைவிடாது உச்சாடனம் செய்ய வேண்டும். மந்திரத்தை உரத்துச் சொல்லவேண்டுமாகில் — அப்படிச் செய்யும் போது மனத்தை அம்மந்திரத்தின் மீது மையமாக வைத்துச் சொல்லவேண்டும். இதனைத்தான் மனம்குவிதல் என்று சொல்லப்படும். மனம் குவிதல் என்பது ஒருமுகப்படுத்தல். இது இல்லாது ஒருவர் தியானிக்க முடியாது. தியானம் இல்லாத மனிதன் ஆழ்ந்த தியானத்துக்கு அருகதை அற்றவனாவான். யப்பானிய பாஷையில் தியானத்தை ZAZEN ''சாசென்'' ஆழ்ந்த தியானம்.

முதலாவதாக ஓரிடத்தில் உட்கார்ந்து கொள். பின்பு கண்களை மூடிக்கொண்டு மந்திரத்தின் மீது மனத்தைச் செலுத்தி அதனை மானசமாகத் திரும்பத் திரும்பச் சொல். இதனையே மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்று கூறுவது. அதன்பின்பு அம்மந்திரத்தை உரத்துச் சொல்லாமல், மானசமாகவும் சொல்லாமலும் உனது மனம் நெஞ்சு, உன் ஆன்மா, உனது எண்ணங்கள் யாவையும் மந்திரத்தின் மீது செலுத்தி இவை அனைத்தும் உருகும் வண்ணம் செய்க. இதனையே தியானம் என்கின்றோம். தியானம் ஒருமுகப்படுத்தலோடினைந்து செய்தால் புற உலக சிந்தனையற்றவர்களாகிவிடுவோம். ஒருமுகப்பட்ட தியானத்திலமர்ந்துள்ளோம் என்ற சிந்தனையே எஞ்சியிருக்கின்ற பலத்த எண்ணமாகவிருக்கும். இதன் பின்பு மூச்சுவிடுவதையும் மறந்துவிடுகின்றோம். இதனையே தியானம் அல்லது ''சாசென்'' என்று கூறுகின்றோம். இதற்கு உருவமில்லை. முற்றும் குருடாகவே இருக்கும். இவ்வாறு இருபத்தைந்து மணித்தியாலத்துக்கு மேலாக அமர்ந்திருக்கலாம். எறும்பு தீண்டினாலும் அல்லது எவர்தான் கூப்பிட்டாலும் இவைகள் உனக்குக் கேட்காது. ஏனெனில் ஒரு நெருங்கிய, இறுக்கமான தியானத்தில் ஆழ்ந்திருக்கின்றதனால் இதே

போன்று எமது தியான நிலையை விருத்தி செய்தல் வேண்டும்.

மந்திரசக்தி

இதற்கு முதலாவது தேவை–மந்திரம். நான் சிலருக்கு உபதேசிப்பது – ஒரு பாறைங் கல்லை மனத்தில் பதியவைக்குமாறு அல்லது ஒரு நீர்வீழ்ச்சி அல்லது சூரியன், சந்திரன் சமுத்திரம் அல்லது யேசுநாதர், புத்தர் அல்லது தம்மை வென்றெடுத்த மகானை – மனத்தில் தியானிக்குமாறு கூறுவேன். இவைகளுள் ஒன்றை இடையருது சிந்தித்து வருவீராகில்– இவ்வாறு செய்வதும் மந்திர ஜெபம் என்று நான் கூறவேண்டும். மந்திரம் என்ன என்று தெரியாத ஒருவர் ஏதாவது ஒரு எண்ணம் உண்மையான ஒரு விளக்கம் – உருவம் ஒன்றினை மனத்தில் பதியவைக்கவும் இவ்வாறு சிந்திப்பதும் மந்திர உச்சாடனமாகவே இருக்கும். அப்படியானால் சுவாமிஜி ஏன் எங்கள் கணவன்மாரை–மனைவிமாரை மனத்தில் சிந்திக்க முடியாது? இது ஒரு விசித்திரமான கேள்வியாகும். நீங்கள் அவ்வாறு சிந்தித்தால் என்ன விளையும்? ஆகா! மகனே! நீ தொங்கிப் பாயவேண்டும், ஓடவேண்டும் என்று எண்ணினால் அதேவிதமான உணர்ச்சி வரும். சாதாரணமான மனிதரை – அவர்கள் உருவத்தை சிந்திக்கமுடியாது. உயர்ந்தநிலையான ஒன்றின் மேலேயே தியானம் அமைதல் வேண்டும். உனது வாழ்க்கையை–உனது ஆன்மாவை மாற்றி உயர்நிலைக்காக்குவதனையே குறிக்கோளாக வைத்து தியானம் அமைதல் வேண்டும்.

ஒரு மகத்தான மகானைத் தியானிக்க வேண்டும். பிராண வாயுவை எவ்வாறு அடக்கி ஆள முடியும் என்று கற்பிக்கக்கூடிய ஒரு உன்னத குருவைத்தியானிக்க வேண்டும். பிராண வாயுதான் உனது ஜீவியம் என்றதைச் சொல்லித்தரக்கூடிய ஆசானைத் தியானிக்க வேண்டும். உனது சந்தேகங்களை, கஷ்டங்களை நீக்கக்கூடியவரைத் தியானிக்கவேண்டும். அம்மகான் எவ்வாறு வாழ்ந்து காட்டுகின்றாரோ அவ்வாறு நீயும் வாழலாம் அல்லவா? ஆகவே அவரைக் குறிக்கோளாக வைத்து-நடுமையமாக-நடுநாயகனாக வைத்து இடைவிடாது சிந்தனை செய்ய வேண்டும். இதனை விட்டு உனது உறவினரை மனத்தில் தியானித்தால் சம்பவிப்பது யாது? இதன் விளைவாக நீ ஒரு பெரிய சிக்கலுக்குள் அகப்பட்டுக் கொள்வாய். ஒரு வித்தியாசம் காண மாட்டீர்.

ஒருவர் சுயிங்கம் என்று கூறப்படும் ஒரு வகை இனிப்பைத்தியானித்தால் என்ன விளையும்? இதே போன்ற தோற்றங்களே உன் மனத்தில் அலை அலையாகத் தோற்றும். உண்மையாக இவை உனக்கு ஒருவித பலனையும் அளிக்காது. பெரும் ஆபத்துக்களையும் கொண்டு வரும். ஆகவே பொது மக்களை மனத்தில் சிந்திப்பாயின்—அவர்கள் என்ன கஷ்டங்களை அனுபவித்தனரோ-என்ன பிரச்சனைகளை எதிர் கொண்டனரோ-இவைகளே உன்னையும் பீடித்துக் கொள்ளும். எனவே நீ அடையும் இலாபம் யாது? எதனிடம் இருந்து விடுதலை அடைகின்றாய்? ஒன்றிலிருந்தும் விடுதலை பெற்றாயில்லை.

தியானத்தின் வேறுபாடு

இதோ பார்! நீ வெற்றிபெற எண்ணினால் முன்னேற யோசித்தால் - யாவும் உனது இரு கரங்களிலேதான் தங்கி இருக்கின்றன. உன்னையே தேர்ந்தெடுத்து அவ்வாறே சிந்தனையை ஒருமுகப் படுத்து! இயல்பாகவே சிந்தனை பிறக்கும். இதனை விடுத்து, உன் கண்களை மூடிக்கொண்டு - கணவனையோ மனைவியையோ மக்களையோ தியானித்தால் என்ன விளையும்? உனது மனம் மேலும் மேலும் எழும்பிவிழும். உனது மனமானது உணர்ச்சி வசப்பட்டு, சமாதானத்தை இழந்து அல்லற் படும். அது எப்படி? உனது தியானத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிந்தனைக்குரியவைகள் படும் அவஸ்தையும் அவ்வாறானதே. இதனால் நீ மிகவும் அவஸ்தைப்படுவாய்.

அது சரி சுவாமிஜி! நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்கள். பின் எதற்காக இவர்களுக்காக வணக்கம்செய்வது சுவாமிஜீ! அவர்களுக்காக வணங்குவதும் அவர்களைத் தியானிப்பதும் என்பன இரண்டும் வேறு தன்மைத்தானவை. தெய்வீகத்தன்மை அடைந்த பின்பு-அதனால் ஆன்மபலம் பெற்ற பின்பு – முன் எடுத்துக் கூறப்பட்ட பசை உங்களைப் பற்றும். அப்பசையில் ஒரு சிறு பகுதியை அவர்களுக்கும் பங்கிடவும். அது அவர்களை நல்வழிப் படுத்தும். இவ்வித நிலையை அடையாது – அவர்கள் வைத்திருப்பவைகளையும் நீ பங்கிட முயன்றால் – அதாவது – அவர்களிடமுள்ள தொல்லைகளை – மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவும். இதனையிட்டு சிலவேளை நான் சொல்லுவேன். எல்லோரும் மந்திரம் ஜெபிக்கின்றார்கள் என்று. இவ்வாறு ஜெபம் செய்

கின்றவர்கள் இந்த இடத்திலும் உள்ளார்கள் என உணருகின்றேன். மூன்று நிமிடங்களுக்கு அவர்களுக்காகத் தியானிப்போம். அவர்களது பெயர்களைச் சொல்வேன். உங்களிற் சிலர் ''சுவாமிஜி! அதனைப்பற்றி என்ன?'' என வினவுவீர்கள். அதனைத்தான் யானும் கூறுகின்றேன்.

தியானத்தின் மூலம் பெற்ற நன்மைகள் பயன்கள் யாவற்றிலும் ஒரு சிறு பங்கினை அவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கலாம். எங்கள் உணர்ச்சிகளையும் அவர்களைத் தாக்கும் என்பதனை அறிவாய். இது அவர்களுக்கு எத்துணை சிறந்ததும் உதவி உள்ளதுமானதும் இதுவே சிறந்த வழி ஆன்ம வளர்ச்சியின் பொருட்டு தியானமூலம் பெறவேண்டியனவற்றைப் பெறுது, பொதுமக்கள் மீது சிந்திப்பதால் ஈற்றில் நீயும் பொதுமக்களின் நிலையைத் தான் அடைவாய். அதனால் அவர்களுக்கு உன்னால் ஒரு உதவியும் செய்ய முடியாமல் போய்விடும். பெரிய கஷ்டங்களுக்குள் கிடக்க நேரிடும் ஏனெனில், இக்கஷ்டங்களைத் தாங்கும் சக்தியதனைப் பெருக்கத் தவறிவிட்டாய். மீண்டும் அவர்களை நினைக்குந்தோறும் மீண்டும் மீண்டும் அவர்களுக்குத் துன்பமே நேரிடும். அவர்களுக்கும் பிரச்சனைகள் எழும். அது எவ்வாறு? அவர்கள் உன்னைப் பற்றிச் சிந்திப்பார்கள். நீர் அவர்களைப் பற்றிச் சிந்திக்க அவர்கள் உன்னைச் சிந்திக்க இச்சிந்தனைகள் ஒரு இறுக்கத்தைத் தோற்றுவிக்கும். இதுகாரணமாக ஒருவரை யொருவர் முரண்பட நேரிடும்.

ஆகவேதான் மனத்தை ஒருமுகப்படுத்தியும் தியானத்திலிருத்தியும் இவ்வாறு பழகிக் கொள்ள வேண்டும முதலாவதாக ஏதாவது ஓர் மந்திரத்தை எங்களுக்கு வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு சில சில இடங்களுக்குச் செல்கின்றீர்கள் போன இடங்களில் உங்கள் கருமங்கள் சிறப்பாக நிறைவேறிவிட்டது. இது காரணமாக உங்கள் மனதில் ஒரு சந்தோஷமான உணர்ச்சி தோன்றும். ''அந்த மந்திரம் எனக்கு உதவி புரிந்துள்ளது. எனக்கு எப்போதும் உதவக் கூடிய அந்த மந்திரத்தை சுவாமிஜி எவ்வாறு புத்திபுகட்டிக் கூறியுள்ளார்.'' இவ்வாறு உனது மனதுக்குள் சிந்திப்பாயானால் நாளடைவில் மனச்சாந்தி பெறுவீர். மந்திரத் தொடர்பு, குருஜியுடன் தொடர்பு, உனது நடைமுறையிற்றொடர்பு இம் மூன்றிலும் தொடர்புகள் இருக்குமாகில், எடுத்துக் கொண்ட பாதை, குறிக்கோள் இரண்டும் உன்னை கட்டாயமாக உயர்த்தும்.

தியான நேரம் எப்போதும் நீ இங்கே தான் என்ற எண்ணம் பிறக்கவேண்டும். 'நீ' என்றதின்பொருள் யாது? ''உனது தேகம், மனம், மூச்சு, எண்ணம் இவையாவும் உனக்குள்ளே உண்டு. இவை எந்நேரமும் ஒன்றுக் கொன்று தொடர்புள்ளதாக இருக்குமாகில் 'நீ' இங்கேயே இருக்கின்றாய். இவ்வாறு உன் மனம் ஒருமுகப்படுத்த வேண்டும். நூற்றுக்கு நூறுவீதம் இவ்வாறு மனத்தை ஒருமுகப் படுத்தினால் மூன்று நாட்களில் அல்லது இரண்டு நாட்களில் அல்லது ஒரு மணித்தியாலத்தில – வித்தியாசம் இலகுவாக நாளடைவில் தெரியவரும் எவ்வாறெனில், கைமணிக் கட்டில் அணியும் மணிக்கூட்டைக் கவனிக்கவும். நிமிடக்கம்பியும் செக்கன் கம்பியும் மெல்ல மெல்ல நகருகின்றது. நிமிடக்கம்பி என்ன கணக்கில் செல்கின்றதோ அதே கணக்கில் செக்கன் கம்பியும் செல்கின்றது. இதே போன்று உனக்குள் ஒரு மாற்றத்தைக் கண்டறிய முடியும்.

தவருன தியானம்

ஒருமுறை நான் கனடாவில், வான் கூவர் என்னுமிடத்தில் இருந்தபோது ஒரு பெண் எனக்குக் கூறினார் ''சுவாமிஜீ! உங்களுக்காக இரண்டுமணித்தியாலம் மெழுகுவர்த்தி கொழுத்தி தியானம் செய்தேன்'' என்றார். நான் அப் பெண்ணைப்பார்த்து ''இம்மாதிரியான மூடத்தனமான தியானத்தினால் ஒரு பலனுமில்லை என்றேன். அப் பெண் மீண்டும் என்னை நோக்கி ''சுவாமிஜீ! ஏன் இவ்வாறு கூறுகின்றீர்கள்?'' என்றார். ''ஆம்! உண்மைதான். என்ன மடமைத்தனமான தியானம். உண்மையாகத் தியானிப்பதாகில் இவ்வாறு கூற இயலாது. என்ன காரணத்துக்காக என்னைத் தியானிக்கின்றீர். நான் போதிப்பதனை இந்த இடத்தில் கூற இயலாது. என்றேன். அழுத குரலில் அம்மாது ''அப்படியானால் நான் ஒப்புக் கொள்கிறேன்.'' என்றார். மீண்டும் அப் பெண்ணைப் பார்த்து, 'நீ உனது கணவனை, அல்லது உனது சிநேகிதப் பையனை நினைத்து தியானம் செய்தால் என்ன? ஒருவர் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலம் தியானம் செய்தால் அவர் மற்றவரைப் பார்த்து தான் இத்தனை மணித்தியாலம் தியானத்திலிருந்தேன் என்று சொல்லுவதில் ஒரு பொருளு

மில்லை. மூன்று மணித்தியாலம் ஒருவர் தியானத்திலிருந்தால், அதி உன்னத பலன் வாய்க்கப்பெறும். ஆகவே எதற்காக எனக்கு இதனைப் பற்றிக்கூறவேண்டும். விளம்பரம் வேண்டியா? இதனுலடையும் நன்மை? உண்மையான தியானம் இவ்வாறுன முறையால் ஒருபோதும் கிட்டாது.

அமைதி பிறக்கும்

தியானம் செய்வதில் எவ்வாறு வெற்றியும் முன்னேற்றமும் அடையமுடியும் என்பதனை அறிவாய்? உள்ளம் அமைதி அடைவதனுல் எவ்வாறு அமைதி பெற முடியும்? மந்திரங்கள் அந்த அமைதியைத் தரும். மந்திரத்தோடு நீ சங்கமமாகிவிட்டால் – ஒன்றுகிவிட்டால் தொடர்ச்சியாக அதனுடன் ஐக்கியப்படுத்திவிட்டால் அவைகள் உண்மையாக உதவும். உனக்கு ஏதாவது கஷ்டம் வரும்போது ஓம் ஓம் ஓம் ஓம். ஏதாவது பிரச்சினை தோன்றினுல் ஓம் ஓம் ஓம் ஓம். உனது தினசரி வேலை முடிந்தால் ஓம் ஓம் ஓம் ஓம். நித்திரை கொள்ள விரும்பினுல் அதற்கு முன்பும் ஓம் ஓம் ஓம் ஓம். நித்திரைவிட்டு எழும்பியதும் ஓம் ஓம் ஓம் ஓம். நீர் எந்த நாளும் இந்த மந்திரத்தை இடைவிடாது செய்துவந்தால் ஒரு நாளில் (24 மணிநேரம் என்று சொல்ல எனக்கு விருப்பமில்லை. 23 மணித்தியாலத்துள்) உமக்கு நிச்சயம் அது உதவி செய்யும். உருத்திராட்சமணி கொண்டு பன்முறை இம் மந்திரத்தை கூறிக்கொண்டுவந்தால் உனக்குள் தோன்றும் வித்தியாசத்தை அறியலாம்.

உனது மனம் உன்னுடன் பேசும்போது உனது நெஞ்சு உள்மனதுடன் உரையாட முடியும். அதன் பின்பு வித்தியாசத்தை அறிய முடியும். "ஆகா! இப்போது எவ்வளவோ இன்பமாக இருக்கின்றதைப் பார்க்க முடிகின்றது. நான் இப்போது எவ்வளவோ உயர்ச்சியாகவுள்ளேன்" என்று உணர்வாய். இவ்வாறு நீ உணர்ந்துகொள்ள முடியும். உருத்திராட்ச மாலை இல்லாதவர்கள் ஓம் ஓம் ஓம் என்பதனைத் தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டு வரவேண்டும். உருத்திராட்சமாலை வைத்துக்கொள்பவர்கள் மூன்று தரம் அல்லது நான்கு முறை 108 தரம் சொல்லவேண்டும் தொடர்ந்து ஒரு கிழமை – இரண்டு கிழமை சொல்லிக்கொண்டு வரவும். உடனே வித்தியாசத்தை தெரிந்து கொள்வாய். மிகவும் குதூகலமான உணர்ச்சி தென்படும்.

அதன் பின்பு எவ்வாறு பிரச்சினைகளை விட்டு நீங்கும் முறை பிறக்கும் என்ன நடக்கின்றது? கஷ்டங்கள் மறைகின்றன தொல்லைகளும் கஷ்டங்களும் எல்லாம் பறந்தன. இது உண்மையில் அதிசயமே! என்ன நடந்து விட்டது? அவை எங்கே சென்றுவிட்டன? நீ அவைகளைத் தேடுவாய்! இவைகள் யாவும் எதிர் மறையானவை. தீர்க்கமானவர்கள் பால் அஞ்சும் எவ ரொருவரிடம் தன் நம்பிக்கை திடமாக உண்டோ, அவர் எங்கும் மிகவும் வெற்றியுடனும் முன்னேற்றத்தோடும் செல்லலாம்.

நாம் எப்போதும் எங்கள் பற்களைச் சுத்தி செய்கின்றோம். எங்கள் நாவை எந்நாளும் சுத்தி செய்கின்றோம். சுத்தமான நல்ல உணவை உண்கின்றோம். எங்கே அந்தப் பிசாசு? பேய்? அசுத்தமான பேச்சுப் பேசியும், 24 மணித்தியாலமும் நல்ல படுக்கையில் உறங்கினுலன்றோ எமக்குப் பிரச்சினைகள் தோன்றும். இதனுல் யாவும்அழிவுப் பாதையைநாடிச் செல்லும். ஆகவே பிரச்சினைகளை எவ்வாறு களைவது என்பதுதெரியாது அல்லற் படுவார்கள். தினமும் சுத்தமான போசனம் உண்டும் சுவாமியுடன் தொடர்பு கொண்டும் இடையறாது அநுட்டானம் செய்தும் வந்தால் உன்னை நீ அறிவாய் என்பதனை அறிந்து கொள். நீ எவ்வாறு எதிர் மறையாளனைக் காட்சித் தரமுடியும்? செய்பவைகளை முறையாகச் செய்தால் உனது நிலையை நீ அறிவாய். உடனே அதனைத்தெரிந்து கொள்வாய். இறைவன், குரு, நீ-ஒன்றுக் கொன்று தொடர்புண்டு. இறைவன் என்பது உண்மை உண்மையை இறைவன் என்போம். உண்மைதான் இறைவன் என்பதனை பிறிதோரிடத்தில் காண முடியாது.

எனவேதான் நீ உன்னை நம்ப வேண்டும். உன்னில் மிகவும் ஊன்றி நம்பிக்கை செலுத்தினுல் உண்மை என்பது உதிக்கும். அந்தநேரம் குரு தோன்றுவார். அப்போது அந்த இடத்தில் எல்லாம் காணமுடியும். எல்லாம் அந்த இடத்தில் உண்டு. மனத்தை ஒருமுகப்படுத்தலினுலும் தியானத்தினுலுமே கைகூடக் கூடிய இந்த சாஸ்திரம். இது அவ்வளவு கஷ்டமுமன்று – இது அவ்வளவு இலகுவானதுமன்று. நாம் நம்மை நல்ல மேன்மையான முறையில் வைத்துக்கொள்ளல் வேண்டும். ஆகவே ஆரம்பிக்கும் போது இது மிகவும் கஷ்டமானதென எண்ணக்கூடாது. ஆரம்பிக்கு முன்பு

சுவாமிஜி சொன்னவைகளைக் குறித்து நினைத்து அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம். இது உனக்குத் தெரியும். சரி! சுவாமிஜி கூறியவற்றை நான் மிகவும் ஆழ்ந்து ஒருமுகப்படுத்திச் சிந்திக்க வேண்டும். நீ உன்னைப்பற்றி அதிகம் அதிகம் சிரத்தை எடுத்தால் அது கடினமாகவே தோன்றும். யாவையும் லாவகமாக எடுத்துக்கொள். கூறப்பட்ட படி சாசுவதமாகச் செய்து கொண்டு வரவும். **வரவேண்டிய யாவும் உன்னிடமே உண்டு.** இயற்கையாகவே உனக்குள் நீ தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவேதான் தியானம் மந்திரம்—மனம்குவிதல்—இவை அத்தியாவசியம் வேண்டப்படுவன. உனது நெஞ்சைத் திறந்து மீண்டும் மீண்டும் மேலே சொன்ன மந்திரத்தை மீட்டல் செய்தால் சிறிதுகாலத்துள் பலாபலனை அறிவீர்.

ஆரம்பமாகு முன்பு நீர் மிகவும் பலமாகச் சிந்திக்க வேண்டும். "யான் ஒரு கன்மலை" யான் பத்து நிமிடங்கள் தியானிக்கப்போகின்றேன். அதுவரை கண்கள் இரண்டையும் திறக்கப்போவதில்லை. எனது வீட்டைப்பற்றியோ, பொதுமக்களைப் பற்றியோ வேறு எதனைப்பற்றியும் சிந்திக்கப்போவதில்லை. **எல்லாவற்றையும் மறந்திருக்கப் போகின்றேன்.**

"ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்" என்ற மந்திரத்தை நீ தொடர்ச்சியாகத் திரும்பத் திரும்பச் சொல். தீட்சை பெறுதவர்கள் "ஓம்" என்பதனை வேண்டுமளவு சொல்லலாம். உனக்குத் தெரிந்த மந்திரத்தை உச்சரிக்க, உச்சரிக்க, மனத்தைரியம், உற்சாகம் விருத்தியடையும். அதன் பின்பு நீ யாரிடம் தங்க வேண்டும். பைத்தியக்கார மனிதர் மீது நீ தங்கியிருந்தால் அந்தப் பைத்தியக்கார மனிதர் உதவ வருவார்களா? மந்திரமே உதவும். மந்திரமே தெளிவு தரும். சித்தியையும் தரும். வளர்ச்சியையும் தரும். பல மனிதரிடம் நம்பிக்கை வைத்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணமும் மனநிலையும் அதனோடி ணைந்த பிரச்சினையும் சேர்ந்து உனக்கு நிரம்பிய பிரச்சினைகளைத் தரும். நீங்கள் இது போன்றவர்களிடம் நம்பித் தங்கினால் நீ அப்போது எப்படிப்பட்ட மனிதனாகின்றாய்? சொல்!

நான் இன்று 30 நிமிடம் கண்களைத் திறவாது ஜெபிக்க இருக்கின்றேன். என்ன நேர்ந்தாலும் நான் பொருட்படுத்தப் போவதில்லை. யான் ஒரு கன் மலை! யான் ஒரு கல்! யான் மிகவும் திடமானவன்! யான் ஒரு பலவீனனல்ல! இவ்வாறான சிந்தனைகள் உனக்குள் விருத்திசெய்து மந்திரத்தை தொடர்ந்து உச்சரிக்க வேண்டும். எல்லாம் நன்றாக மலரும். நேரத்தையிட்டுக் கவனம் செலுத்த வேண்டும். "ஓ.கே. என்ன நேரம் இப்போது? ஓ 7-30. இப்போது ஓ.கே. சரி. அதன் பின்பு ஓ! 6-35 ஓ! ச்சாய்" இது என்ன நேரத்தைப் பார்த்துப் பார்த்து வீண் தொல்லைப்பட வேண்டாம். சும்மா தொடர்ந்து அமர்ந்திருக்க வேண்டும். இயல்பான முறையில் மந்திரத்தை உச்சரிக்கவும். நேரம் வந்ததும் கண்களைத் திறக்கவும். உள்மனதோடு தொடர்பு கொள்ளாது மந்திரத்தை உச்சரித்தால் அது உனக்குப்பெரிய தொல்லையையே தரும். மனமானது உனக்கு "கண்களைத் திறந்து பார்! சுற்றுமுற்றும் பார்!" இவ்வாறுகவே 30 நிமிடத்துக்கு தியானம் செய். எப்போது கண்களைத் திறக்க வேண்டுமென்பது சரியாகத் தானாகவே நடக்கும்.

யான் நித்திரைக்கு 2-30 மணி அல்லது 3-00 மணி அல்லது 4-00. நான் நித்திரை விட்டு 6-00 மணிக்கு அல்லது 7-00 மணிக்கு எழும்பவேண்டுமென்றால் அந்த எண்ணத்தில் எனது மனம் குவியும். நான் அவ்வாறு நித்திரைக்குச் சென்று சரியான நேரத்தில் கண் விழித்திடுவேன். 10 நிமிடத்துக்கு முன்பே விழித்துக்கொள்வேன். அலாரம் அடிக்கும் மணிக்கூடோ அல்லது வேறு ஏதும் என்னிடம் இல்லை. என்னிடம் உள்ள மணிக்கூடு இதுதான். நீ இதனை எவ்வாறு செய்வாய்? உனக்குள் இதனைச் சிந்திப்பதனால்-உன் ஆன்மாவுடன்-உன்னுடன் தொடர்பு கொள்வதனால் உன்னால் முழு இரவும் நித்திரை கொள்ள இயலாது விடும். விடியுமுன் நித்திரை விட்டு எழும்புகின்றாய். 'ஆ என்னால் தாங்க இயலாமல் இருக்கின்றதே! தேவையான நித்திரை இல்லையே! கண்கள் எரிகின்றனவே!" இவ்வாறு ஒரு உணர்ச்சி! உனக்குள்ளே தொடர்பு கொண்டு உன் மனசும் நீயுமாக இருந்தால் அது நிசமாக உதவிபுரியும். உண்மையாக உதவும். உன்மீது உன்மனத்தைச் செலுத்து. மந்திரமீது செலுத்து! தியானமும் மனம் குவிதலும் உண்மையாகத் தொழில் நடத்தும்.

ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் அனுஷ்டிக்கும் ஒரே பஞ்சாங்கம்



All Rights Reserved

M. S. பச்சையப்ப முதலியார்

மனோன்மணி விலாசம் பிரஸ்

26, பாஷ்யகாரலு வீதி – கொண்டித்தோப்பு

சென்னை - 600 001

தமிழ்நாடு

WITH BEST COMPLIMENTS OF:



T. ANGAMUTHU & SONS

Mfrs: of G. R. Brand Cooking Medium
Dealers in Vanaspathi, Refined Oil, Castor Oil & other Oils.
280, OLD THARAGUPET
BANGALORE - 560 002.

TEE AEY AGENCY

Dealers in Oil V. G. R. O., Castor Oil & Commission Agents.
280, OLD THARAGUPET
BANGALORE - 560 053.

Phone: Shop - 76262
27126
Resi. - 26807

உ

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற
வாழ்த்துகிறேம்!



கீதா

முகூர்த்தப்பட்டு மற்றும் அனைத்து ஜவுளிகளுக்கு

கீதா
சில்க் & சாரி பஜார்

N. S. B. ரோடு - திருச்சி.

☎ 24410 **Cable: DELIGHT**

உ

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்!''

அகில உலக இந்து மகாநாடு விழாக்கோலம் பூண்டிருக்கும்
இந்நன்னாளில் சிறப்புமலர் வெளியிட விளைந்திருக்கும்
நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினருக்கு
எங்களது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

SUBMUR AGENCIES

DEALERS OF D & H SECHERON WELDING ELECTRODES
STOCKISTS OF ALL INDUSTRIAL TOOLS & ACCESSORIES.

'TAMIL SANGAM BUILDING'
46, West Bouleward Road,
Tiruchirapalli - 620008.
TAMIL NADU - INDIA.

☎ 28501



அகில உலக இந்து மகாநாட்டை

முன்னிட்டு

ஆத்மஜோதி நிலையம் வெளியிடும்

சிறப்பு மலருக்கு

எமது நல்வாழ்த்துக்கள்!

தலைவர்: தவத்திரு ஸ்வாமி ஹரிதாஸ்கிரி

(ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகளின் பிரதம சிடர்)

SRI GNANANANDA SEVA SAMAJAM

(REGD:)

227, AVVAI SHANMUGAM ROAD,

MADARS-600 086.

Phone: 83377 - 89889.

உ

வாழ்த்துகிறோம்!



ஸ்ரீ முருகன் உபாசகர்

ஸ்ரீ J. A. ரங்கசாமி

திருப்பணி அரசு, திருப்பணிச் செம்மல்,
அம்பத்தூர் தெய்வத் திருஅருட்சபைத் தலைவர்,
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆலய ஸ்தாபகர்.

21, ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவில் தெரு,

மேனாம் பேடு, அம்பத்தூர், மதராஸ்-53.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் அநுக்ரகப்படி முதன் முதலாக விளம்பி வருடம் சித்திரை மாதம் 8-ம் நாள் (21–4–58) முதல் துர்மதி ஆண்டு கார்த்திகை மாதம் 10-ம் நாள் (25–11–81) வரை நடந்துள்ள ஆலயத் திருப்பணிகள் முடிந்து 31 ஆலயங்கள் பூர்த்தி செய்து

ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் யந்திரஸ்தாபனத்துடன்

அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடந்தேறியதுடன் திரிகால பூஜைகளும் செவ்வனே நடந்து வருகின்றது. சுமார் 15 கிராமங்களில் பழைய ஆலயங்களைப் புதுப்பித்தும் ஆலயம் இல்லாத கிராமங்களில் புதிய ஆலயம் புதுப்பித்தும் குறைபாடின்றி முடிந்துள்ள ஆலயங்கள்

ஸ்ரீ விநாயகர் ஆலயம், ஸ்ரீ அம்பாள் ஆலயம், ஸ்ரீ முருகன் ஆலயம் ஸ்ரீ சுப்ரமண்யர் ஆலயம், ஸ்ரீ ஈஸ்வரர் ஆலயம் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஆலயம், ஐயப்பசுவாமி ஆலயம், நவக்கிரக ஆலயம், ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் ஆலயம், உற்சவமூர்த்திகள் கிணறுகள் பொருளாதாரத்துடன் பூஜா காரியங்கள், உற்சவங்கள் சிறந்த முறையில் நடந்தேறி வருகின்றன.

தமிழ்நாட்டில் காணக்கிடைக்காத ஸ்ரீ முருகன் உதித்தான்! பொன்னேரிக்கு அடுத்த ''பெரும்பேடு'' கிராமத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் மண்ணில் புதையுண்டு நள ஆண்டு வைகாசி மாதம் 21-ம் (3-6-76) வியாழக்கிழமை காலை 8-45 மணிக்கு 6½ அடி உயரமுள்ள ஸ்ரீ முருகன் சிலை 1-ம், 5½ அடி உயரமுள்ள ஸ்ரீ வள்ளி-தெய்வயானை சிலை 2-ம், ஆக மூன்று சிலைகள் கண்டெடுக்கப்பட்டு, திரு. J. A. ரங்கசாமி திருப்பணி அரசு அவர்கள் ஸ்ரீ அருள்மிகு முத்துக்குமாரசாமி என நாமதேயம் சூட்டப்பெற்று ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் யந்திரஸ்தாபனத்துடன் அழகான ஆலயங்கள் அமைத்து அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடந்து பக்தகோடிகள் எல்லா நாட்களிலும் தரிசனம் உபயம் நடந்து வருவதோடு ஒவ்வொரு மாதமும் பரணி கிருத்திகை நாட்களில் விசேஷ அபிஷேகம் நடைபெறும்.

உலக மக்கள் அனைவரும் தரிசனம் பெற்று நற்பயனடையும்படி மிகவும் தாழ்மையோடு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



ஸ்ரீ முருகன் உபாசகர்

J. A. ரங்கசாமி

திருப்பணி அரசு,
திருப்பணிச் செம்மல்.

J. A. ரங்கசாமி திருப்பணி அரசு,

21, சுந்தர விநாயகர் கோவில் தெரு, மேனாம் பேடு, அம்பத்தூர், மதராஸ்–53.

With Best Compliments of



P. NAMASIVAYAM & SONS

MERCHANTS & COMMISSION AGENTS
Dealers in Vanaspathi, Refined Oil & other edible oils.
298, OLD THARAGUPET,
BANGALORE - 560 053.
Phone: Shop: 24934
Resi : 41766



THANGAM SONS

Dealers in G. I. Pipes and Pipe Fittings.
28/4, SADAIPATHRAPPA ROAD,
BANGALORE - 2.

உ

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலைக்
கண்ணில் நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே

— திருஞானசம்பந்தர்.

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!

T. G. SAMBANDAM & CO.

'COUNIAN PRESS'

Printers & Binders.

169, Broadway

MADRAS - 600 001

Estd: 1900

Phone: 27257

பிரஜாபிதா பிரம்மா குமாரிகள்

ஈஸ்வரீய விஷ்வ வித்தியாலயம்

தோற்றம்: 1937ம் ஆண்டு பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ-வித்தியாலயமானது தோற்றுவிக்கப்பட்டது. இது தோன்றிய பிறகு அதன் அங்கத்தினர்கள் 14 ஆண்டுக் காலம் கடும் தவம் புரிந்தனர். ராஜ யோகப் பயிற்சி பெற்றனர் அதை அனுபவித்து உணர்ந்தனர். தெய்வீக சக்திகளைப் பெற்றனர். தமது வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெற்றனர் தமக்குள் ஆன்ம ஊற்று பெருகுவதையும் அறிந்தனர். தெய்வீக ஞானத்தைக் கற்றுத் தெளிந்தனர் ஞான மார்க்கத்தில் அடி எடுத்து வைத்தனர். அதன் பிறகு தாம் கேட்டு அறிந்த ஞானத்தையும் பயின்ற ராஜ யோகத்தையும்மற்றவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். மற்ற ஆன்மீகச் சகோதரர்களுக்கும் இதைப்பற்றி விளக்கிச் சொல்லும்பொருட்டு 1953ல் ஒரு கிளை ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. அதற்காக அந்த ஸ்தாபனம் கடுமையாக உழைத்தது. அக்கடின உழைப்பின் பலனாக இன்று இந்தியாவில் 700க்கும் மேற்பட்ட வித்தியாலயங்கள் உள்ளன. வெளி நாடுகளில் 50 க்கும் மேற்பட்ட கிளை ஸ்தாபனங்கள் செயலாற்றிக் கொண்டுள்ளன. இவற்றின் தலைமைக் காரியாலயம் இந்தியாவில் ராஜஸ்தானத்திலுள்ள ஆபுமலையில் நிறுவப்பட்டுள்ளது.

வித்தியாலயத்தின் தன்மை: பிரம்மா குமாரிகளின் இந்த விஷ்வ வித்தியாலயமானது ஒரு ஆன்மீகப் பல்கலைக் கழகமாக இயங்கி வருகிறது. மனிதன் இவ்வுலகினை ஓர் உயர்ந்தகண்ணோட்டத்துடன் காண்பதற்குத் தேவையான ஆத்மீகக் கல்வியை இப்பல்கலைக் கழகம் போதிக்கிறது. மனிதனின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகவும் நல்ல பண்புகளுடன் வாழும் வகையைப் பற்றியும் போதனைகளைச் செய்கிறது. கர்மங்கள் செய்வதால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றியும் போதிக்கிறது. பல விதமான நம்பிக்கைகளைக் கொண்டிருப்பவர்களுக்கும் பல விதமான மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும்பொதுவான கருத்துக்களைக் கற்பிக்கிறது. எந்த நாட்டவராக இருந்தாலும் எவ்வினத்தைச்சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாம் அனைவரும் ஆத்மாக்களாக இருப்பதால் நாம் அனைவரும் சகோதர சகோதரர்களாக இருக்கிறோம் என்பதை தெளிவாக விளக்குகிறது. நாம் அனைவரும் பகவானுடைய பிள்ளைகளாக இருந்து நீதி நெறியில் உயர்ந்து நிற்பதால் மனித குலம் உயர்வதற்கும் உலகினில் சமாதானமும் அமைதியும் தழைப்பதற்கும் ஆவன எங்களால் செய்யமுடியும். அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையானவர் பகவான் ஆகையால் உலகாயத சகோதரத்துவத்தைப் போதிக்க முடியும்.

வித்தியாலயத்தின் முக்கியமான நோக்கங்கள்:-

1. நீதி நெறி விளக்கங்களைப் பற்றி ஒரு தனிமனிதன் அறிந்து கொண்டு நல்ல நடத்தை கொண்டவனாக இருந்து பரந்த மனப்பான்மையும் ஒழுக்கமும் உடையவனாக இருந்து சமூகத்தில் ஒரு முக்கிய மனிதனாக வாழமுடியும்.

2. அழியாத பொருளால் ஆனது ஆத்மா. அழியும் பொருளால் ஆனது உடல். ஆகவே உடலிலிருந்து அப்பாற்பட்டது ஆத்மா. மனம், புத்தி, சப்ஸ்காரம் என்ற மூன்றையும் கொண்டது ஆத்மா. ஆத்மாவைப் பற்றிய சம்பூர்ண ஞானத்தை அறிந்துகொள்வதால் ஒருவர் கமலத்தினை ஒத்த பரிசுத்தமான வாழ்க்கை நடத்த முடியும்.

3. உலக நாடக சக்கரத்தைப் பற்றியும் ஆன்மீகத்தின் அடிப்படையில் உலக சரித்திரத்தை அறிந்து கொள்வது.

4. ஆத்மீகத்தின் அடிப்படையில் படைப்பவர், அவர்தம் படைப்பு ஆகியவற்றை அறிதல்.

5. எளிமையான இந்த ராஜயோகத்திலும் ஒரு மனிதன் பகவானுடன் நேரடித் தொடர்பு கொண்டு மன அமைதி அடைகிறான்; ஆத்மாவுக்கும், ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பை தெரிந்துகொள்கிறான். இரக்கம், அன்பு, நட்பு, ஒற்றுமை ஆகிய தெய்வீக குணங்களுடன் வாழவும் பயிற்சிபெறுகிறான்.

6. இன்று மதங்களின் அடிப்படையில் எழுந்துள்ள மூட நம்பிக்கைகளை ஒழித்தல்; பொருள் தெரியாமல் செய்யும் சடங்குகளைத் தடுத்தல்; அறியாமை என்னும் இருளைப் போக்குதல் – இவற்றைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வது வித்தியாலயத்தின் லட்சியமாகும்.

பிரம்மாகுமாரிகளின் ஆத்மீகப் பல்கலைக் கழகத்தின் அவசியம் என்ன?

நல்லவனாக இருந்து நல்லதைச் செய்யச் சொல்லுவதுதான் மதத்தின் குறிக்கோள். நடைமுறையில் அவற்றைக் கொண்டுவருவதற்குப் பதிலாக மதங்கள் சில சடங்குகளைச் செய்வதில் முக்கிய கவனம் செய்து வருகிறது. இது வருந்துவதற்குரிய விஷயமாகும். பிரார்த்தனைக்காக பொதுமக்கள் கூடும் இடத்தில் அவர்களுக்குப் போதுமான ஆத்மீகப் பயிற்சியை அளிப்பதில்லை. பக்தகோடிகள் காமம், கோபம், பேராசை, பந்த பாசங்கள், அகங்காரம், போன்ற தீயசக்திகளிலிருந்து விடுபடமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இக்குறையை போக்குவதற்காக பிரம்மாகுமாரிகளின் வித்தியாலயம் போதுமான கவனம் செலுத்தி வருகிறது. கர்மயோக தத்துவத்தின் படி நடந்து பந்தபாசமின்றி பகவானின் செயல்களைச் செய்வது பற்றி வித்தியாலயம் கற்பிக்கிறது. விஞ்ஞானத்தின் அடிப்படையில் உண்மையான ஆத்மீக ஞானத்தையும் பரமாத்மாவைப்பற்றிய அறிவையும், உலக நாடக சக்கரத்தைப் பற்றியும் கர்மத்தத்துவத்தைப்பற்றியும் இவ்வுலகின் சரித்திர-பூகோளத்தைப் பற்றியும் அவை பற்றி அறிந்து கொள்வதன் அவசியத்தைப் பற்றியும் சொல்லித்தருவதால் இது மிக முக்கியமான வித்தியாலயமாகக் கருதப்பட்டு வருகிறது.

வகுப்புக்கள் நடத்தும் விதம்:

750 கிளை ஸ்தாபனங்களில் தினந்தோறும் வகுப்புக்கள் காலையிலும் மாலையிலும் நடத்தப் படுகின்றன. ஒவ்வொரு வகுப்பும் 1½ மணி நேரத்திலிருந்து 2 மணிநேரம் நடத்தப்படும். இதன் ஒரு பகுதி தெய்வீக ஞானத்தை விளக்கிச் சொல்லுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தெய்வீகஞானத்திலுள் நல்ல காரியங்கள் எவை, தீயவை எவை என்பதை அறிந்து கொள்கிறார்கள். அமைதியாக வாழ்ந்து சமூகத்திற்குத் தம்மால் இயன்ற சேவைகளையும் செய்து வருகிறார்கள். ராஜயோகப் பயிற்சியினுல் ஆத்மபலம் பெற்று அதைக்கொண்டு ஈஸ்வரீய சேவை செய்கிறார்கள். செய்யத்தகாதவற்றைச் செய்யாமல் இருக்கிறார்கள்.

மதம், இனம், வயது வேறுபாடு ஏதுமின்றி அனைவருக்கும் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. மதம் மாற்றும் முயற்சிகள் ஏதும் செய்யப் படுவதில்லை. படவிளக்கங்கள் மூலமாகக் கற்றுக்கொடுப்பதன் மூலமாக இளம் மாணவர்களும் மிக நல்ல முறையில் புரிந்து கொள்கிறார்கள். கல்வி அறிவு இல்லாதவர்களும் அறிந்து கொள்ளுகிறார்கள் இதற்கென கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை.

1. "நான் ஆத்மாவாக இருக்கிறேன். நான் பௌதீக உடலிலிருந்து அப்பாற்பட்டவனாக இருக்கிறேன்" என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. ஆத்மாவாக நினைத்து தூய்மையுடனும் அமைதியுடனும் வாழ வேண்டும் என்பதே அவனுடைய குறிக்கோளாக இருக்கவேண்டும்.

3. ஒவ்வொருவரும் பகவானின் குழந்தை. ஒவ்வொருவருக்கும் அவரை அணுகுவதற்கு உரிமை இருக்கிறது. அவரிடமிருந்து தெய்வீகக் குணங்களைப் பெறுவதற்கும் உரிமை உண்டு. பகவான் ஒருவரே ஆனந்தத்தையும் தெய்வீகக் குணங்களையும் அளிக்கும் ஊற்றாக இருப்பவர் ஆவார்.

ஒவ்வொரு கிளை ஸ்தாபனமும் பொருளாதாரத் துறையில் தன்னிறைவு பெற்றிருக்கிறது. ஒருவரோ பலரோ சேர்ந்து கிளை ஸ்தாபனம் அமைக்க முன்வருவதால் தான் அவைகள் அமைக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. இத்தெய்வீக ஞானத்தையும் யோகத்தையும் பின்பற்றி நடப்பவர்கள் தம்மாலான பொருள் உதவியைச் செய்வதால்தான் இந்த வித்தியாலயங்கள் செயல்பட்டு வருகின்றன.

சமயப் பணியில் சைவ பரிபாலன சபையின் பண்பு

— நம. சிவப்பிரகாசம்–ஆசிரியர்: இந்து சாதனம் —

ஓடும் நீர் எங்கிருந்தூற்றெடுக்கின்ற தென்று உற்றுநோக்கி அதன் வழிச்சென்றூற் பல்வளப் பொதிந்த சன்மலை ஒன்று தோன்றும். மலையைக் கடைநவில் ஆசானுக்குவமையாக நிலைபெறச்செய்தனர் ஒல்காப்புகழ்த் தொல்காப்பியனார். கற்கப்படுவோனை இலக்கண நூலார் ''மலை நிலம் பூவே துலாக்கோலென்றின்ன ருலைவினுணர் வுடையோர்'' என்று விதந்தோதி 'மலையே, அளக்கலாகாப் பெருமையு மருமையு மருங்கல முடைமையு மேற்ற கருமையும் பொருந்தக் கூறுபொச்சாப்பின்றி'' என்று நன்றுரைத்தனர். ஈழத்தென்னாட்டிற் கல் மலைகள் பல்வகையுள. அவ்வாறு கலைமலைசளும் நிலவியுள்ளன. அவற்றுள் ஒன்று நாவலர் மலை. இது யாழ் மாநாட்டில் நல்லை நகரில் வண்ணைப் பாங்கரில் உள்ளது. எனினும் அம்மலையின் அறிவொளி நீழல் தென்பொதிய மாமலை திகழ்ந்த இந்திய நாட்டிலும் நீடித்துச் செறிந்து நின்றது. சிதம்பரத்திலும் செந்நெயிலும் திருவாவடுதுறை ஆதீனத்திலும் அம் மலையினின்றும் போந்த அறிவுக்கதிர்கள் ஒளிபரப்பின.

இந்த நாவலர் மலையினின்றும் ஊற்றெடுத்தன இருஞ்சுனை நீர்யாறுகள் சிலமெல்லெனப்பாயும் அருவிகள் சில. அறிஞர்கள்; அறிஞர் அமைந்த அவைகள் தாம் இந்த யாறுகள் அருவிகள்.

நாவலர்மலை வீழ் நல் அருவி அந்த வித்துவ சிரோமணி ந ச. பொன்னம்பலபிள்ளை. அந்த நல் அருவியோடு மருவிய நீரூற்று அறிஞர் த. கயிலாயபிள்ளை. இந்த அருவிகளின் சங்கமம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை யென்றும் வற்றுவாவி. அளக்கலாகாப் பெருமைக்கும் அருமைக்கும் மருங்கல முடைமைக்கும் ஏறற்கருமைக்கும் விளக்கமாய் நின்றது வியன்சீர் நாவலர்மலை.

புறமதப் போதகாசிரியர் கனம் பேர்சிவல் அந்த அளக்கலாகாப் பெருமையையும் அருமையையும் கண்டார். அரிய விவிலிய நூலை ஆங்கிலத்திலிருந்து அருந் தமிழிற்றருக என வேண்டினர்.

திருவாவடுதுறை ஆதீனத்தார் தெற்றெனத்தெளிந்தனர். மலைக்கு நாவலர்மலையென மகுடஞ்சூட்டினர்.

பல்கலைப் புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் மெல்லவுணர்ந்தனர். நாவலர் நடைநயம் எடுத்தோதினர்.

சேதுபதி மகாராசா யாது இது என்று நாவலர் மலையின் மருங்ககலமுடைமையை ஏதுக்களாலுய்த்துவந்தனர்.

இம்மலை ஏறற்கருமையென்று இராமலிங்க சுவாமிகள் பொது நின்று கண்டனர்.

உலகம் புகழும் அரசியல் அறிஞர் ஆத்ம ஞானி வீரன் வள்ளல் பொன் இராமநாதன் இம்மலையை இந்துக்கலங்கரை விளக்கமாய்க் கண்டனர்.– Champion Reformer of the Hindus

இம்மலையில் ஊற்றெடுத்த சைவ பரிபாலன சபை தோன்றிய ஞான்றே புகழொடு தோன்றிற்றென்று புகலவும் வேண்டுமோ.

ஆயிரத்தெண்ணூற் எண்பத்தெட்டாண்டதனிற் சைவ அறிஞர்கள் நாவலர் நன்னெறி நயஞ்சுவைத்த நற்றொண்டர்கள் கூடினர் சங்கமாய். இலகொளி பரப்பிய சற்குருமணியின் பொற்பினை எடுத்துப் பூவுலகறிய வைக்கும் புனிதப்பணியில் இறங்கினர். வித்துவ சிரோமணி ந. ச பொன்னம்பலபிள்ளை நாவலரின் மருகர் நாவலர் மெச்சிய நன்மாணாக்கர். இவரே சைவ பரிபாலன சபையின் ஆரம்ப அவைத் தலைவர்.

நாவலர் உடன்பிறந்தாரின் உத்தமபுத்திரன் த. கயிலாயபிள்ளை சைவ பரிபாலன சபையின் வெளியீடாம் இந்து சாதனத்தின் முதலாவது தமிழ் ஆசிரியர்.

வண்ணை வளநகரில் நாப்பண் நீராவியடி என்னும் பேராற் புகழ்பெற்ற சிற்றூர். ஆங்கு நாவலர் காலத்துச் சைவ சீலர்கள் திகழ்ந்தனர். அவர்களில் ஒருவர் திருவிசாகன்

கூர் உயர் நீதிமன்றின் அரசர் தி. செல்லப்பா பிள்ளை அவர்கள். ஆங்கில மொழி இந்து சாதனம் ஓங்கவைத்த ஆசிரியர் இவர்.

வீரன் இராமநாதவள்ளலின் அரசியல் அபிமான வலதுகரம் ஆக விளங்கியவர் வண்ணை தலையாளி அ. சபாபதி அவர்கள். இலங்கைச் சட்ட நிபரூணசபை அங்கத்தவர். ஆங்கில இந்து சாதனத்தின் ஆசிரியராக 1890–1924 முப்பான் மூன்றுண்டுகள் அரிதின் முயன்று சபையை வளர்த்தவர்.

கற்பக தருபோல பற்பல பயன் கொடுக்கும் சங்கமானது சைவ பரிபாலன சபை.

யாழ் நாட்டின் சமய வளர்ச்சிக்கின்றியமையாதது. சமயத்தோடிணைந்த கல்வியென்றுணர்ந்த சைவ பரிபாலன சபையார் இந்துக்கல்லூரி என்ற பெரும் பெயருடன் இந்துகலாச்சாரப் பின்னணியில் இந்நாட்டு மாணாக்கர் உயர்தரக்கல்வி யூட்டப்பட வழி வகுக்கும் கலைக்கூடமாக விளங்க இலங்கையில்இந்து நாகரீகம் இலங்க இத்தீவகம் வாழ் மக்கள் நன்னெறியில் வாழ் வாங்கு வாழ வித்திட்டனர். நாவலர் மரபில் வந்த நற்சிறுண்டார் நாட்டிய இவ்வித்து அங்கு இந்துக் கல்வி வானளாவும் விருட்சமாக விரிந்து விளங்கும் பெருமை சைவ பரிபாலன சபைக்குரியது.

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
நுண்ணிதே யாயினும் அண்ணல் மாநில
அனிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

என்றாங்கு அன்று சிறுவிதையானது இன்று சைவசமயிகளாம் மக்கள் தம் மன்னர்கிருக்க வாய்ப்பான நிழலாய்விட்டது.

இந்துக்கல்லூரி என்னும் ஆல விருட்சம் விழுது விட்டுப் பலப்பல இந்துக்கல்லூரிகளாய் நாடெங்கும் நிறுவ நின்றது. ஆயிரம் ஆயிரம் அறிஞர்கள் இவ்விருட்சங்களின் நீழலிலிருந்து கலை பயின்று இந்நாட்டின் பெருவளத்துக்குதவி வந்தனர், வருகின்றனர், வருவர். இம்மைக்கும் மறுமைக்கும் செம்மை நெறி "கற்க கசடற, கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற குறள் சொல்லும் குறிக்கோளைச் சின்னமாகக் கொண்டுள்ளது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

கசடறக் கற்றனர், கற்றபின் கற்றாங் கொழுகினர், இந்துக்கல்லூரி மாணாக்கர்கள்.

முருகப்பெருமானை நூலறிபுலவ என்று நக்கீரர் மிக்கார்வத்துடன் உள்ளத்தில் முன்வைக்கின்றார் நூலறிதல், நூலறியவைத்தல் நுண்மாண் நுழைபுல வண்மையருக்கேயாம் நாவலர் பெருமான் நூலறிந்தார், நூலெல்லாம் நூலாமே என்றுய்ந்து மெய்ந்நூல்களையே விளங்கக் கற்றார். தாம்பெற்ற அறிவு இன்பத்தைத்தாரணி பெறவைத்தார். நாவலர்நெறி நிற்கும்சைவபரிபாலனசபையாரும்இந்நாட்டு மக்களை நூலறியவைத்தனர். அதற்கென ஏந்திரம் அமைத்தனர். சைவப்பிரகாச இயந்திரசாலைநிறுவப் பெற்றது. சைவ பாடங்கள், சைவபோதம் முதலியவற்றைப் பதிப்பித்துப்பல பல்லாயிரம் மாணாக்கர்கள் பயில வெளியிட்டனர்.

அறிஞர்கள் ஆய்தமைத்த நூல்கள் பலவற்றை அச்சேற்றி அரும்பணி ஆற்றினர். அவ்வழி இன்றும் அயராதுழைக்கின்றனர். சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை எழுதிய நூல்களைப் பதிப்பதில் முன்னணியில் நின்றனர். திருவருட்பயனுக்கு ஒரு அருமையானவிளக்கம் சைவப்பெரியார் எழுதஅதனை நூலாக்கிவெளியிட்டுச் சைவ சாத்திரங்கற்கும் மாணாக்கர்களுக்குப் பேருதவி புரிந்தனர். அவ்வாறே சைவக்கிரியை விளக்கமும் வெளியிடப்பட்டது.

வசன நடையலங்கார மாமேதை நாவலர். அன்னார் இயற்றிய கந்தபுராண வசனம் ஒரு கலைக்களஞ்சியம் அதனை நாவலர் சபையாரின் பணிப்பின் பேரில் சைவ பரிபாலன சபை புதுப்பதிப்பாக வெளியிட்ட பெருமையும் அதற்குண்டு.

மெய்கண்ட சாத்திர விளக்கம் ஆங்கில மொழியில் வருவதவசியம் என்று கண்டு அறிஞர் அ.விசுவநாதன், விஞ்ஞானக் கலைமாணி ஆங்கில இந்துசாதனத்தில் எழுதிய தொடர் கட்டுரைகளைத் தொகுத்த நூல்கள் அமைத்தனர். சபையார் உலக நூல் அரங்கில் நிலவும் நூல்கள் இவை-Elements of Saiva Siddantham.- Thirumanthiram-Commentary.

சமய வெளியீடாக இந்து சாதனம் ஆங்கிலத்திலும் செந்தமிழிலும் அன்று தொட்டு (1889) இன்றும் மினிர்ந்த வண்ணம் இயங்குகின்றன.

ஆசிரியர் த. கைலாயபிள்ளையின் பின் முப்பத்து மூன்றுண்டுகள் இந்துசாதனத்தின்

இணையிலா ஆசிரியராக விளங்கியவர் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள். நாவலர் பெருமானின் நன்மாணாக்கர் வழி நின்ற உரையாசிரியர் மட்டுவில் கதிரவேற்பிள்ளை அவர்களின் சிரேட்ட புத்திரர். சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரப்பிள்ளை அவர்களின் தங்கையார் மகன். புலவர் புலோலி குமாரசுவாமிப்பிள்ளையின் சுற்றத்தவர் சபையார் நிறுவிய இந்துக்கல்லூரியின் நீண்டகாலத் தமிழ் விரிவுரையாளர். பாடப் புத்தகங்கள் பல இயற்றிய பண்டிதர் இவர்.

ஆங்கில இதழ் ஆசிரியர் அ. சபாபதி அவர்களின் சாதனையை அடுத்து இன்று அதற்கு ஆசிரியராக இருக்கும் சிவப்பிரகாசம் அவர்கள் இச்சேவையில் முப்பத்திரண்டாம் ஆண்டில் நிற்கின்றனர். இவரே இந்துசாதனத்திற்கும் ஆசிரியராவர்.

''கற்றிலன் ஆயினுங் கேட்க அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றுந் துணை''

என்று சொற்றனர் திருக்குறள் நிகழ்த்திய தெய்வப் புலவர். கேட்கவைகின்ற சமயப்பணி யாவற்றிலும் மேலானது. கேட்போருக்கென்றும் உறுதுணையாவது.

சைவ பரிபாலன சபையார் இத்தகைய செவிச்செல்வத்தை செழித்து வருகின்றனர் என்பது ஆண்டாண்டு தோறும் சைவ மகாநாடுகள் அமைத்துப் பேரறிஞர்களை வரவழைத்துச் சைவசமய சாத்திர தோத்திர புராணேதிகாச அரும்பொருள்களைச் செந்தமிழிற் சுவைதொடக் கேட்போரை மீண்டும் வேட்கையுறும் வகையில் உரைசெயவைத்துச் சபை ஒரு பணி மரபை வகுத்தமை காட்டும்.

கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார், சித்தாந்த வித்தகர் அருணை வடிவேலு முதலியார், மெய்கண்டார் ஆதீன சுவாமிகள், மெய்கண்ட சாத்திரப் பேராசிரியர் வச்சிரவேலு முதலியார், திருப்புகழ்மணி என்ற வரிசையிலே நூலறிவுசால் பெரியோர்கள் பாரத நாட்டினின்றும் இங்குவந்து மக்களுக்குச் செவிக்குணவு செறிவு செய்ய வைத்த பெருமை இச்சபைக்குண்டு.

இந்நாட்டுப் பேரறிஞர்கள் பொன் இராமநாத வள்ளல், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை, பண்டிதர் வே. நாகலிங்கம், இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை ஆதியாம் கற்றோரும் பல்கலைக்கழகப்பேராசிரியர்கள்பலரும் இச்சபையின் மாநாடுகளைச் சிறப்பித்து வந்தனர்.

நாவலர் மகளின் வீழ்நதி சைவபரிபாலன சபை என்ற உண்மைக்குச் சான்றாக நாவலர் ஆச்சிரம மண்டபம் ஒன்றும் சபையால் நிறுவப்பெற்றது யாவற்றிலும் மேலான தோர் நிகழ்ச்சி.

இந்த ஆச்சிரமம் நாவலர் நன்னமத்துக்கும் ஆச்சிரமம் என்ற அமைப்புக்கும் அணி செயும் பான்மையிலே குருபூசைகளையும் சமயதீட்சை சிவதீட்சை முதலியனவற்றையும் சபை ஒழுங்கு தவறுது நிகழ்த்திவருகின்றது.

நால்வராம் சமய குரவர்களின் பணியே பணியாகக் கொண்ட நாவலரின் நாமஞ்சூட்டப்பெற்ற ஆச்சிரமத்தில் நால்வருக்குக் கோயில் எழுப்பவும் சபையார் முயன்று வருவது முன்மாதிரியேயாகும்.

தரும பரிபாலனம் சைவமரபுநெறியாம். இந்நாட்டில் எந்நாளும் தருமசீலர்கள் தோன்றி அற நிலையங்களை அமைத்து வந்திருக்கின்றனர். அத்தகைய உத்தமர் புண்ணிய நாச்சி அம்மையார். இந்தத்தருமத்தின் பொறுப்பைச் சபையார் ஏற்று அறம் அமைத்த அம்மையாரின் அரிய நோக்கங்களை ஆக்க வழியிற் செவ்வனே நடத்திவருகின்றனர்.

நாவலர் பெருமானின் சிதம்பர தருமத்தின் நிருவாக அமைப்பிற் சபையாரும் அங்கத்துவம் வகித்து நாவலர் உயர் நிலைப்பள்ளியின் உன்னத உயர்ச்சிக்கும் சேக்கிழார் கோயில் நித்தியநைமித்திய ஒழுங்குகளுக்கும் சைவசித்தாந்த வகுப்புகள் நடப்பதற்கும் நெறியாக உழைத்து வருகின்றனர்.

சைவக் குருமார்களின் நன்மைகருதி அவர்கள் இந்நாட்டில் ஆற்றிவரும் நீண்டகாலத்தொண்டு தொடரவைத்ததுவும் சபையின் முயற்சியாலென்போம்.

வேதாரணியம் கார்த்திகை மடபரிபாலனத்தையும் சபையார் கைஏற்றுத் தாய் நாட்டுத் தொடர்பினைச் சேய்போற் பேணிவருகின்றனர்.

இத்தருமச் சொத்துகளிலே உள்ள கோயில்களையும் முறையாகப் பரிபாலனஞ் செய்வது சபையின் கடமையாய்விட்டது.

பொங்கும் அருள் விளக்கு மங்களத் திருவிளக்கு

— ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகள் —

"ஒன்றுய் அரும்பிப் பலவாய் விரிந்து
இவ்வுலகெங்குமாய் நிறைகும்" அன்னை பரா சக்தி ஜோதி வடிவமாக விளங்குகின்றாள். மங்கலமங்கையர் தமதில்லங்களில் தெய்வத்தின் திருவுருவாகக் குத்துவிளக்கு ஏற்றிவைத்து வழிபடுவது மரபு. செவ்வாய், வெள்ளி போன்ற தினங்களில் திருவிளக்குப் பூஜை செய்வதும், முக்கியமான நாட்களில் 'பகவதி சேவை' என்றும், 'சக்தி பூஜை' என்றும் குத்துவிளக்கில் பூஜை செய்வது உண்டு. மஹாலக்ஷ்மியின் கடாக்ஷம் ஏற்பட குத்து விளக்குப் பூஜை செய்வதும் வழக்கமாகக் கொள்ளப்படுகிறது. குத்துவிளக்கை திரு விளக்கு என்றும் அழைக்கின்றோம்.

குத்துவிளக்கை வணங்கும் போது எல் லாத தெய்வங்களையும் வணங்குவதாக ஆகி றது. குத்துவிளக்கின் அடிப்பாகம் பிரம்மா வின் சொரூபமாகும். நடுப்பாகத்தில் மஹா விஷ்ணுவும் மேல்பாகத்தில் ருத்திரனும் இருக்கின்றார்கள். குத்துவிளக்கின் சுடர் தாங் குமாகிய சக்தியாக விளங்குகிறது. எண் ணெய் கிரியா சக்தியாகவும், திரி இச்சா சக்தி யாகவும் ஏற்றப்படும். சுடர் ஞான சக்தியாக விளங்குகின்றது. எனவே மூன்று தெய்வங்க ளையும் சக்திகளுடன் வணங்குவதற்கு ஏற்ற தாக நமது முன்னோர்கள் குத்துவிளக்கினை அமைத்துள்ளார்கள். டஞ்ச பூதங்களைக் குறிப் பிட ஐந்து முகங்கள் குத்து விளக்கிற்கு அமைக் கப்பட்டிருக்கின்றன. ஒளிமயமான சக்தியை, ஜோதியே போற்றி, சுடரே போற்றி என்று சொல்லி வணங்குகின்றோம். ஒளிவடிவான் சக்தியை மஹாகவி பாரதியார்,

"மூர்த்திகள் மூன்று பொருள் ஒன்று - அந்த
மூலப்பொருள் ஒளியின் குன்று
நேர்த்தி திகழும் அந்த ஒளியை - எந்த
நேரமும் போற்று சக்தியென்று"

என்று குறிப்பிடுகின்றார்.

மற்றத் தெய்வங்களைவிட விரைவில் சாந் நித்யம் அருளுபவள் சக்தி சக்தியைப்பற்றிய லலிதா ஸஹஸ்ர நாமத்தில் முதல் நாமாவளி யாகிய ஸ்ரீ மாதரே நம: என்று ஆரம்பித்த உடனேயே அன்னை பராசக்தி ஓடோடியும் வந்து அருள்பாலிக்கின்றாள் என்று நாம் சொல்லுகின்றோம். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநா மம் சொல்லிப் பூஜை செய்யும் பக்தர்கள் இல் லத்தில் அஷ்டலக்ஷ்மி கடாக்ஷமும், சாந்தி யும் ஏற்படுகின்றன. துன்பங்கள் விலகி இன் பம் விளைகின்றது.

அன்னை பராசக்தியின் பலவடிவங்களில் காயத்ரி, சாவித்ரி, ஸரஸ்வதி என்று மூன்று சக்தி வடிவங்கள் சிறப்பானவை. மூன்று சக் திகளையும் வணங்கும் போது அன்னை பராசக் தியை வணங்குவதாக ஏற்படுகின்றது. சக்திக் குள் சிவம் அடக்கம் என்பதுபோல் மூன்று சக்திக்குள்ளும் முத்தொழில் புரிகின்ற தெய் வங்களும் அடங்குகின்றன. எனவேதான் மூன்று குத்துவிளக்குகளும் ஒரு சாட்சி விளக் கும் வைத்து நாம் பூஜை செய்கின்றோம். பூஜையில் கும்பக்கலசம் வைக்கப்பட்டு அதில் தீர்த்தமும் வைக்கப்படுகிறது. தீர்த்தத்திலும் சுடரிலும் தெய்வத்தை ஆவாஹனம் செய் வது எளிது என்று முன்னோர்கள் தீர்த்தத்தை யும் விளக்கையும் வைத்து அதற்கு வழிபாட் டையும் செய்யும்படி பூஜையை அமைத்துள் ளார்கள்.

திருவிளக்கு பூசையில் குங்குமமும் புஷ்ப மும் முதலிடம் பெறுகின்றன. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமம் அர்ச்சனை செய்த குங்குமம் இருக்குமிடத்தில் எவ்விதமான கெடுதலும் ஸம்பவிக்காது. குங்கும அர்ச்சனை செய்கை யில் திருவிளக்கின் பாதத்தில் நாமாவளி சொல்லிச் சொல்லிக் கொண்டு அர்ச்சனை செய்தால் அது பராசக்தியின் பாதத்தில் அர்ச்சனை செய்த பலனைக் கொடுக்கின்றது. அன்னையின் ஆயிரத்தெட்டு நாமங்களையும் சொல்லி அர்ச்சனை செய்யும் பொழுது நமது உள்ளம் வேறு சிந்தனைகளில் ஈடுபடாமல் ஒரே நோக்குடன் செய்யப்படுமானால் அதன் பலனை விரைவில் நாம் காணலாம். மனப் பூர்வமான நம்பிக்கையுடன் உள்ளம் ஒன்று பட்டுச் செயல்படுகின்ற பூஜையினையே சிறந்த தாக அன்னை ஏற்றுக்கொள்கிறாள்.

"சொல்லும் பொருளும் என நடமாடும்
துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடி"

யாகிய அன்னை பராசக்தியின் பாத கமலங் களைத் துதிப்பவர்க்கு அழியாத அரசும்

செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்கும் என்று அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில் குறிப்பிடுகின்றார்.

குத்துவிளக்கு ஏற்றிப் பூஜை செய்யும் இல்லங்களில் மங்களம் பொங்கி வருவதைக் காணலாம். மங்களம் விரும்பும் மங்கையர்கள் தினசரி செய்ய வேண்டிய கடமைகளில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுதல் சாலப் பொருத்தமாகும்.

சூரியன் உதிப்பதற்கு ஒரு நாழிகை முன்னதாகவே விழித்தெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொள்ள வேண்டும். வீட்டு வாயிலில் பசுஞ்சாணமிட்டு மெழுகிக் கோலமிடுதல் வேண்டும். வீட்டுத் தலைவியே கோலமிடுதல் நல்லது. அரிசிமாவுக் கோலத்திலுள்ள சிறு அரிசித் துணுக்குகளை எறும்பு, அணில், காகம் போன்ற ஜீவபிராணிகள் உணவாகப் பயன்படுத்துகின்றன. அதனால் நூற்றுக் கணக்கான உயிர்களுக்கு அன்னமிட்ட பலன் உண்டாகின்றது. வீட்டுத் தலைவியே தன் கையால் கோலமிட்டால் அந்த பலன் அந்த இல்லத் தலைவிக்குச் சேரும். அன்றி வேலைக்காரிகளைப் பயன்படுத்தினால் அந்தப் பலனை அனுபவிக்கும் பாக்கியம் அவ்வேலைக்காரிகளைச் சேர்ந்துவிடுமல்லவா?

வாசலை மெழுகிக் கோலமிட்டபின் அங்கு விளக்கு ஒன்றை ஏற்றிவைக்க வேண்டும். உள்ளே பூஜை அறையிலும் சுவாமி படத்தின் முன்னால் குத்துவிளக்கு ஏற்றி வைக்க வேண்டும். உதயகாலத்தில் இதனைச் செய்கின்ற இல்லங்களை மஹாலக்ஷ்மி தனது நிரந்தர வாசஸ்தலமாகக் கொள்கின்றாள்.

வாயிலின் முன்னாலோ, பின்னாலோ அல்லது வீட்டின் குறிப்பிட்ட ஒரு இடத்திலோ துளசிச் செடியினை வளர்க்கவேண்டும். அத்துளசிச் செடிக்கு ஜலமிட்டு, மலரிட்டு குங்குமசந்தனமிட்டு, தீபம் வைத்து தினந்தோறும் காலை மாலை இரு வேளைகளிலும் வணங்கி வர வேண்டும். அப்படிச் செய்பவர்களுக்கு மாங்கல்ய பலமும் லக்ஷ்மி கடாக்ஷமும் ஏற்படும். துளசிச்செடி மீது பட்ட காற்று வீட்டிற்குள் வருவது வீட்டைச் சுத்தப்படுத்துகிறது. துளசிச்செடியின் மகத்துவம் போற்றுதற்குரியது. பூஜா பாத்திரங்களில் மிகவும் சிறந்ததான பில்வ தளத்துடன் சேர்ந்து எட்டாகக் கூறப்படும் அஷ்டபில்வத்தில் துளசியும் ஒன்று என்பது கவனத்திற்குரியது. இது விஷ்ணுபூஜைக்கு மட்டுமேயன்றி சிவபூஜைக்கும் சாலச்சிறந்தது. வலப்புரிச் சங்கில் வைக்கப்பட்ட தீர்த்தத்தில் துளசி இலை போட்டு மறுநாள் காலையில் அதை அருந்தும் போது ஸகலவிதமான நோய்களும் தீர்கின்றன. துளசிச்செடி உள்ள இடங்களில் பூச்சிகள் வருவதில்லை. விஷஜந்துகள் நடமாட்டம் இருக்காது. பூச்சிகடி போன்ற இடங்களில் துளசி இலையை அரைத்துப் பூசினால் அவை குணமாவதைக் காணலாம். துளசி மணிமாலை அணிவது பரிசுத்தமானது. இப்படிப்பலவகையிலும் சிறந்ததும் பயனளிப்பதுமான துளசிச்செடியினைப் பேணி வளர்த்துநாம் வணங்குவதால் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படுகின்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

தவிர தினந்தோறும் குத்துவிளக்கு ஏற்றிக் காலை மாலை இரு நேரங்களிலும் இல்லத் தரசிகள் வணங்கவேண்டும். குத்துவிளக்கிற்கு மஞ்சள், குங்குமம் புஷ்பம் இவைகள் மூலம் அலங்காரம் செய்து சுத்தமான இடத்தில் வைத்து அதனைப் பதினெருமுறை வலம் வந்து நமஸ்கரிக்க வேண்டும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மஹாலக்ஷ்மி அஷ்டோத்திரம், லலிதா அஷ்டோத்திரம், லலிதாஸஹஸ்ர நாமம் போன்றவைகளைச் சொல்லி குங்குமத்தாலோ புஷ்பத்தாலோ அர்ச்சனை செய்தால் அந்த இல்லம் லக்ஷ்மிகரமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நாடு முழுவதிலும் தெய்வீகம் தழைக்க வேண்டும். எல்லா இல்லங்களிலும் மங்களம் பொங்க வேண்டும் என்ற சீரிய நோக்குடன்தான் அங்கங்கே காயத்ரி பூஜை என்று நடத்தப்படுகிறது. பூஜை சமயத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தம் கைகளால் மலர்களாலும் குங்குமத்தாலும் அர்ச்சனை செய்வதைக் காணும் பொழுது உண்மையிலேயே தெய்வீகம் தழைத்து வருகிறது என்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

நாடெங்கும் பக்தி செழித்து மக்களெல்லாம் மங்களம் பொங்க மகிழ்ச்சிபெற வாழ வேண்டுமென்பதையே லட்சியமாகக் கொண்டு இந்தப் பூஜைகள் நடத்தப்பெற்று வருகின்றன.

மனைகள் தோறும் மங்களம் பொங்குக!
மக்கள் அனைவரும் மகிழ்வுடன் விளங்குக!

யாழ்ப்பாணம் யோக சுவாமிகள்

— இ. துரைராசசிங்கம் —

எமது மதம் சைவம். இது என்று தோன்றியது என்று கூற முடியாவிட்டாலும் இன்றுவரை தன் நிலையிற் குறைவுறாது செழித்தும் கிளைத்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறப்பு இதற்குண்டு இதற்குக்காரணம் காலந் தோறும் தோன்றி காலத்துக்கேற்ற மலர்ச்சியுடன் அதனை வாழ்வித்த மெய்ஞ்ஞானிகளின் தொண்டே என்பது வெளிப்படை. இதற்கு மெய்ஞ்ஞானிகளுள் ஒருவரே அண்மைக்காலம் வரை நம் மத்தியில் வாழ்ந்து நமது மதத்துக்குப் பெரிதும் தொண்டாற்றி ஞானப் பேறு பெற்ற சிவயோக சுவாமிகள் ஆவர்.

யோக சுவாமிகள் 1872ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதிக்குச் சமமான ஆங்கீரச ஆண்டு வைகாசி மாதம் 18ம் திகதி அவிட்ட நட்சத்திரம் கூடிய அதிகாலை 3-30 மணிக்கு யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்தில் திருவவதாரஞ் செய்தார். இவரது தந்தை அம்பலவாணர். தாய் சின்னாச்சியம்மை. இவரின் பிள்ளைத்திருநாமம் சதாசிவன் என்று சொல்லப்படுகின்றது. சதாசிவனார் மாவிட்டபுரத்திற் பிறந்த போதும், தந்தையாரின் ஊரான கொழும்புத்துறையிலேயே தமது ஆரம்பக் கல்வியைப் பயின்றார். இவரது எட்டாம் வயதளவில் இவரை ஈன்றளித்த அன்னையார் பரமபதமெய்தினர்.

சதாசிவனாரின் தந்தையார் ஒரு வியாபாரி. இவர் மலையகத்திலுள்ள மஸ்கெலியா என்னுமிடத்தில் தனது வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்தார். இதனால் இவரது தமக்கையாரான முத்துப்பிள்ளை என்னும் அம்மாளே சதாசிவனாரை வளர்த்து வந்தார். சதாசிவனார் நான்காம் வகுப்பில் கற்றுக்கொண்டிருக்கையில் இவரின் தந்தையாரும் இவ்வுலக வாழ்வை நீத்தார். பெற்றோரை இழந்த சதாசிவனாரின் ஆற்றல் பற்றி இவரது சிறிய தந்தையாரான சின்னையா அறிந்து வைத்திருந்தார். எனவே இவரை யாழ்ப்பாணம் செப்பத்திரிசியார் பாடசாலையிற் சேர்த்து ஆங்கிலக்கல்வி பயிலச் செய்தார்.

சிறிய தந்தையாரின் உதவி தொடர்ந்து கிடைக்காமையாலோ என்னவோ சதாசிவனார் ஏழாம் வகுப்புப் பயின்றதுடன் தமது படிப்பை நிறுத்திக்கொண்டார் இளைஞரான சதாசிவனாருக்கு தான் தொடர்ந்தும் தமது மாமியாரான, வளர்ப்புத் தாய், முத்துப்பிள்ளைக்குப் பாரமாயிருப்பதுமனதுக்குப் பிடிக்கவில்லை. எனவே ஏதேனும் தொழிலொன்றைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். இதன் காரணமாக கிளிநொச்சியில் அமைந்துள்ள இரணைமடுக் குளத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 'பொருட்காப்பாளர்' என்னும் பதவி இவருக்குக் கிடைத்தது.

தொழிலொன்று கிடைத்தமை காரணமாக, கடமை நேரம் போக எஞ்சிய நேரத்தில் நல்ல ஓய்வு கிடைத்தது. இதன் காரணமாக அவருள்ளே உறங்கிக்கிடந்த சமய நாட்டம் மெல்ல விழித்துக் கொண்டது. எனவே சைவ சமயம் பற்றிய பல நூல்களையும், தோத்திரங்களையும் அடியார்தம் வரலாறுகளையும் நேரம் கிடைத்தபோதெல்லாம் படிக்கத்தவறினாரில்லை. பழவினைப் பயனின் காரணமாக, எம்மனோரைப் போல் நூல்களை வெறுமனே வாசித்துக் கொண்டிராது, அவற்றின் உண்மைப்பொருளை 'உணர்ந்து' படிக்கும் ஆற்றல் அவருக்குக் கைவரப் பெற்றது. இதன் காரணமாக தோத்திரங்களைப் படிக்கும் போதெல்லாம் இவர் மெய்மறந்து தியானத்தில் ஆழ்ந்து விடுவார்.

தியானம் என்பது தன்னையே மறந்து தன்னைப் படைத்த பரம்பொருளிற் கலந்து நிற்கின்ற ஒரு மோன நிலையாகும். கண்ணை மூடிக்கொண்டிருப்போருக்கெல்லாம் இந்த நிலை கைவரப் பெறாது. இது மெய்யுணர்வு பெற்ற ஞானிகளால் மட்டுமே அடையக் கூடிய ஒரு பேரின்ப நிலையாகும். உலக மாயையிலே வீழ்ந்து ஆசைகட்கு அடிமைப்பட்டு தம்மையறியாமலே துன்பத்தில் வீழ்ந்து விடுகின்ற வாலிபப் பருவத்திலே, இத்தகு பேரின்ப நிலையை எய்துதலென்பது ஞானிகளால் மட்டுமே இயலக்கூடிய தொன்றாகும்.

ஓ
சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!



With Best Compliments

O. M. S. S.
Palanichamy Nadar & Sons

TOOR OILD DHALL MERCHANTS

Siva Murugan & Bros.

CORRIONDER SEED MERCHANTS EXPORTERS

VIRUDHUNAGAR & MATHURAI.

VIRUTHUNAGAR

Phone Shop: 3155
House: 3255
Mill: 3449

MATHURAI

Phone: 25337

WITH BEST COMPLIMENTS FROM

SILVERSTARS

★ YOUR HOME AWAY FROM HOME.
★ SPACIOUS, COMFORTABLE ROOMS WITH A 24 HOUR ROOM SERVICE.
★ ALL ROOMS WITH ATTACHED BATH AND SHOWER.
★ WELL STOCKED BAR WITH A CHOICE OF SNACKS.
★ SCRUMPTIOUS, EASTERN AND WESTERN SPECIALITES.
★ LOCATED IN THE HEART OF THE CITY, A STONES THROW AWAY FROM THE SEA.

Specialists in personalised travel

For Reservations:

JEEVA TRAVELS LIMITED 1, BLOCK 'N' BAMBALAPITIYA FLATS
COLOMBO 4, SRI LANKA.
PHONE: 85582 CABLE: JEEVA - COLOMBO.
TELEX: 21538 SENTHI-CE (ATTEN: JEEVA)

25/10, College Street, Trincomalee
Sri Lanka-Phone: 348

★ ★

For Your Requirements in:

WESTERN MEDICINES

Always Visit

ST. JAMES MEDICAL HALL

No. 5, COLLEGE STREET,
TRINCOMALEE. Phone: 482

★ ★

சுவைக்கும் தரத்திற்கும் உத்தரவாதமுள்ள
சைவ உணவுகள் — சிற்றுண்டிகள்
மற்றும்
பல் சுவை பானவகைகள் யாவற்றிற்கும்
ஒரே தாபனம்

விஜய்கபே

401, டொக்யாட் வீதி — திருக்கோணமலை.

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!

எங்களிடம்

கப்டிடத் தளபாடச் சாமான்கள்
பெயின்ற் வகைகள்
அஸ்பெஸ்டாஸ் சீட் வகை
கல்வனைஸ் தகடுகள்
ஒடு
பெற்றோமாக்ஸ் உதிரிப்பாகங்கள்
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
சிறந்த ரகத்தில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ அசோகா

ஹார்டுவெயார் அன் ஜெனரல் மேர்ச்சன்ட்

42, மத்திய வீதி, திருக்கோணமலை.

நல் வாழ்த்துக்கள்!

அழகிய தங்க - வைர நகைகள்
தங்கள் மனதிற்குகந்த நவீன முறையில்
கிடைக்குமிடம்

நியூ வி. எஸ். இ. நகைமாளிகை

8 W, காசுக் கடைத் தெரு — திருக்கோணமலை.

தொலைபேசி: 599

ஸ்ரீ லங்கா உலக இந்து சமய மகாநாட்டிற்கு
எங்களின் உளம் கனிந்த நல் வாழ்த்துக்கள்!

ஸ்தாபிதம்:
1959

ரிஜிஸ்டர் எண்:
N. N. 135

கூட்டுறவே — நாட்டுயர்வு!

சிவாஜி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்.

பரமக்குடி, தமிழ்நாடு.
623707

உயர்ந்த ரகம்!
உறுதியான வேலை!
உளங்கவர் வர்ணம்!
நீங்காத சாயம்!
நீடித்த உழைப்பு!
நேர்த்தியான தினுசு!

எல்லாம் ஒருங்கே அமைந்ததுதான்

'சிவாஜி டெக்ஸ்'

சேலைகள்

செல்பு ஜரி முந்தி புட்டா & உடல் புட்டா சேலைகள், கோடம்பாக்கம்,
ஆர்ட் சில்க் & நூல் சேலைகள் தேவைக்கேற்ப மீட்டர்களில்
எங்களிடமும், தமிழ்நாடு கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை
நிலையங்களிலும், கைத்தறி மாளிகை நிலையங்களிலும்
கிடைக்கும்.

T. G. S. விஸ்வநாத்,
தலைவர்

''வெற்றி நிச்சயம் ஏனெனில் தருமத்துடன் கூட
தெய்வமும், தெய்வத்துடன் கூட வெற்றியும் சேர்ந்திருக்கிறது'' — ஸ்ரீகுருஜி கோல்வல்கர்.

வாழ்த்துகிறோம்!

ஆங்கில – சித்த ஆயுர்வேத மருந்துகள்
ஹோமி மருந்துகள், கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
திருமண விழாக்கள், புதுமனைப்பிரவேசம்
புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்குத் தேவையான அபிசேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ கோரோசனை, புனுகு, ஜவ்வாது, சூடம், விளாவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி வாசனைதிகள், பன்னீர் அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம், லேகியவகைகள், கண் மருந்து எண்ணை வகைகள் — — —

திருமலையில் தங்கள் திருப்திக்கேற்றவகையில் மலிவாக
எம்மிடம் கிடைக்கும்.

ராஜா மெடிக்கல் ஸ்டோர்ஸ்

46, 3-ம் குறுக்குத்தெரு — திருக்கோணமலை.

ஆரம்பம்: 1955

நல் வாழ்த்துக்கள்!

திருமலையில் சிறந்த கட்டிடப் பொருட்கள்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

குமரன் டிரேடர்ஸ்

(பதிவு எண்: 1333)

176/A, கண்டி வீதி,
வவுனியா.

உ

முருவில் பிள்ளையார் துணை

இலங்கையில் நடைபெறும்
அகில உலக இந்து மகாநாடு குறித்து
''ஆத்மஜோதி சிறப்பு மலர்''
வெளிவருவதையிட்டு
நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்!



சரஸ்வதி ஸ்டோர்ஸ்

(ஸ்தாபிதம்: 1931)

இல. 15, நீர்கொழும்பு வீதி,
குருநாகல்.

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

★ மின்சாரப் பாவனைப் பொருட்கள்
★ இரும்புச் சாமான்
★ றயர் சாமான்கள்
★ பெயின்ட் வகைகள்
★ P. V. C. பைப் வகைகள்

தொகையாகவும் - சில்லறையாகவும்
சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

காயத்ரீ ரேடர்ஸ்

176, கண்டி வீதி,
வவுனியா.

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடனும் - பொலிவுடனும் நடைபெற
எமது நல் ஆசிகள்!

விநியோகஸ்தர்கள்:—

வீரகேசரி	தூது
மித்திரன்	கல்கண்டு
ஈழநாடு	இதயம்
சுதந்திரன்	சாவி
	குங்குமம்

கவிதா ஸ்ரோர்ஸ்

5/B, பஸ் நிலையம்,
வவுனியா.

நல் வாழ்த்துக்கள்!



சிறந்த மோட்டார் உழவுயந்திர
உதிரிப்பாகங்களுக்கு

தேவகுண அன் கோ.

கண்டி வீதி,
வவுனியா.

பொருட்காப்பாளராய்ப் பணிபுரிந்த சதா சிவனுர் இவ்வாறு அடிக்கடி மோன நிலையை அடைந்து, யோகிகள் போலக் காணப்படு கின்றார் என்பது அவரோடு வேலை செய்த பல ருக்குத் தெரியும். இதனல் இவரை யோகர்' என அழைக்கத் தொடங்கினர்கள். 'எல்லோ ரும் உறங்குகின்ற பொழுது ஞானி விழித் திருப்பான்' என்பதற்கிணங்க அனைவரும் உறங்கச் சென்றதன்பின் யோகர் தோத்திரப் பாடல்களைப் பாடித் தியானத்தில் ஆழ்ந்துவி டுவார். இச்செய்தியை அறிந்த தலைமைப் பொறியியலாளரான பிறவுணி (Browne) என் பார் யோகரை 'கடவுள் மனிதன்' (God Man) என்று அழைக்கத் தொடங்கினர்.

யோகருக்கு ஞானம் கைவரக், கைவர உத்தியோகத்தின் பால் இருந்த நாட்டம் படிப்படியாகக் குறையத் தொடங்கிபது இத னல் உத்தியோகத்தைத் துறந்துவிட்டு ஊருக் குத்திரும்பிவிட்டார். இவர் கொழும்புத்துறை யில் வாழ்ந்த காலத்தில் செல்லப்பா என் னும் ஒரு சுவாமியார் நல்லூரில் இருக்கின் றார் என்பதைப்பற்றி அறிந்திருந்தார்.

மக்கள் அவரை 'விசர்ச்செல்லப்பா' என அழைப்பது வழக்கம். யோகர் பலமுறை இவ ரைக் கண்டுள்ளார். அப்போதெல்லாம் மற் றையவர்களைப் போற்றும் இவரும் என நினைத்துக்கொண்டிருந்தார். ஆனல் ஞான நாட்டத்தின் காரணமாக உத்தியோகத் தைத் துறந்து விட்டு வந்ததன் பின் யோக ரின் எண்ணங்கள் செல்லப்பா பால் ஈர்க்கப் பட்டன. உண்மையிலேயே அவர் விசரனல் லர், அவர் ஒரு ஞானப்பழம், 'நிர்வாண உல கில் கோவணம் கட்டுபவன் பழிப்புக்கிடமா தல் போல, இவரையும் மக்கள் பழிக்கின்ற னர் என யோகர் உணர்ந்து கொண்டார்.

அன்றொரு நாள்....யோகரின் உள்ளத்தில் ஏதோவொரு உள்ளுணர்வு உந்தத்தொடங்கி யது. நல்லூரை நோக்கி நடந்தார். அவரது கால்கள் அவரையறியாமலே வேகங்கொண் டன கண்கள் எதையோ ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தன. நல்லூர்த்தேரடி -....அங்கே அந்த உருவம்.....பலரால் விசர னென்று சொல்லப்பட்டபோதும் செல்லப்பா சுவாமிகள்' என்று அடிக்கடி சொல்லப்படு கின்ற அந்த ஞானப்பழம்....மோன நிலையிலே உள்ளும் புறமும் அசைவின்றி, கற்சிலைபோல் வெகு கச்சிதமாக....அங்கே அமர்ந்திருக்கின் றது. கடும் பசி கொண்ட கன்றுக்குட்டியைப் போல யோகர் அந்த இடத்தையணுகி தலை குனிந்தபடி நிற்கின்றார். சொல்லி வைத்தாற் போல செல்லப்பா சுவாமிகளின் கண்கள் திறக்கின்றன. அவர் தனது வலக்கரத்தைத் தூக்கி தாழ்ந்து நிற்கும் அந்த இளைஞனின் தலைகளில் வைக்கிறார்.....ஒரு நொடிப்பொ ழுது ஓடி மறைந்தது....."நீ யாரடா? உன் னுள்ளே பாரடா! வினை தீரடா 'பிச்சை எடடா! என்ற வார்த்தைகள் கணீர்.... எனத் தெறிக்கின்றன. திடீரென எழுந்த செல் லப்பா சுவாமிகள் விறுவிறென நடக்கின்றார். யோகர்.. சிலையாக நின்றவர், வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

அன்றிலிருந்து யோகர் செல்லப்பா சுவா மிகள் அடிச் சுவடுகளையே பின்பற்றித் திரிந் தார். இருவரும் குருவும் சீடனுமாயினர். அடிக்கடி மிகச் சிறந்த தத்துவ விளக்கங்கள் யோகருக்குக் கிடைக்கும். இருவரும் நாட் கணக்காக நல்லூர்த் தேரடியில் விழித்தநிலை யிற் சமாதியாகிவிடுவர். வெறுமனே பார்ப் பவர்களுக்கு வேடிக்கையாகவும், ஞான நாட் டம்கொண்டவர்கட்கு வெகு அற்புதமாகவும் இருக்கும் அந்தக் காட்சி சில நாட்களின் பின் செல்லப்பா சுவாமிகளின் வேண்டுகோ ளுக்கிணங்க யோகர் கொழும்புத்துறைச் சந் தியில் அமைந்துள்ள இலுப்பை மரத்தடியைத் தனது உறைவிடமாக்கிக் கொண்டார்.

யோகரைப் போல செல்லப்பா சுவாமி கட்கு கதிரவேலு என்னும் இன்னொரு சீட ரும் இருந்தார். ஒரு நாள் யோகரும், கதிர வேலரும் நல்லூர்த்தேரடியில் தியானத்தில் அமர்ந்து கொண்டனர். நாற்பது நாட்கள் அவர்களது தியானம் தொடர்ந்து இடையி டையே செல்லப்பா சுவாமிகள் அவ்விடம் வந்து சீடர்களை அவதானித்து விட்டுச் செல் வார். நாப்பதாவது நாள் அவ்விடம் வந்த செல்லப்பா சுவாமிகள் 'இரண்டு யானைகளை ஒரு தறியிற் கட்ட முடியாது' என்று கூறிய படியே இருவரையும் எழுப்பி எங்காவது போய் வாருங்கள், என்று துரத்தி விட்டார். இருவரும் கிழக்கு நோக்கி நடக்கத் தொடங் கினர்கள்.

சென்றவர்கள்; சென்றவர்கள் தான், பல நாட்கள்களாகத் திரும்பிவரவேயில்லை. யோகரின் உறவினர்கள் செல்லப்பா சுவா மி களிடம் யோகரைப்பற்றி விஞவியபோது

'அவன் செத்துவிட்டான்' என்று சொல்லி விட்டார். நீண்ட நாட்களாக யோகரை காணுது கூற்றத்தினர் யோகர் இறந்துவிட்ட தற்கான கிரியைகள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டனர்.

இவ்வாறெல்லாம் யாழ்ப்பாணத்தில் நடக்க, சீடர்கள் இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினர்கள். யோகர் வழியிற் கிடைத்ததை உண்டும், நித்திரை வந்த இடத்தில் படுத்தும், நடந்தும் கதிர்காமத்தை அடைந்து அங்கிருந்து கொழும்பு வழியாகத் திரும்பி, மலைநாட்டுக்குச் சென்று, இறுதியாக நல்லூரை அடைந்தார். இதையறிந்த யோகரின் உறவினர்கள் செல்லப்பா சுவாமிகளை அணுகி 'யோகர் இறந்ததாக கூறிவிட்டீர்களே' என்றபோது 'உண்மையிலே அவன் செத்து விட்டான்' என்று அவர் குறிப்பிட்டார், அவர் கூறியதன் உட்பொருளை அறியாத அவர்கள் 'அவர் விசரர்தானே' என்று எண்ணிக் கொண்டே அவ்விடத்தை விட்டகன்றனர்.

தமது முப்பத்துநான்காம் வயதில் மேற்கூறப்பட்ட படியாத்திரை புறப்பட்ட யோகர் நான்கு ஆண்டுகளின் பின்புதான் மீண்டும் யாழ்ப்பாணத்தை அடைந்தார்; ஆனால் கதிரவேலுவுக்குயாதுநிகழ்ந்ததோதெரியாது அவர் போனவர் போனவர்தான். எங்கு சென்றார் என்னவானார் என்பதுபற்றி யாருக்குமே தெரியாது.

யோகர் சென்றது, மீண்டும் வந்தது, அவரது நடவடிக்கைகளில் காணப்பட்ட மாற்றம்....இவற்றையெல்லாம் கண்ணுற்ற மக்கள் யோகரை யோக சுவாமிகள் என்று அழைக்கத் தொடங்கினர்கள். இக்காலத்திற்றான் யோக சுவாமிகளின் குருநாதர் செல்லப்பா சுவாமிகள் சிவபதமடைந்தார். இதன்பின் யோக சுவாமிகள் கொழும்புத்துறையிலே இலுப்பை மரமொன்றின் கீழ் அமர்ந்துகொண்டு தன்னை நாடி வந்தவர்கட்கெல்லாம் பல விதங்களில் அருள் செய்யத் தொடங்கினர். பலரது நோய்கள், வறுமை, துன்பம் என்பன யோக சுவாமிகளின் அருட் கடாட்சத்தால் நீங்கிப்போயின.

இதன் பின்னர் யோக சுவாமிகளை நோக்கி அன்பர்கள் படையெடுத்தவண்ணமிருந்தனர் இலுப்பை மரத்துக்கு அணித்தாக, கடையொன்றை நடத்தியவர்கள் நாளடைவில் அதனைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர். மழை வெயிலெனப் பாராது இலுப்பை மரத்தின் கீழிருந்த யோகர் சுவாமிகளைக் கண்ணுற்ற, கடை அமைத்திருந்த காணிச்சொந்தக்காரரினதும் அன்பர்களினதும் வேண்டுகோளுக்கிணங்க, யோக சுவாமிகள் அந்தக் கடைக் கொட்டிலிற் குடியேறினர். அங்கு தேவார பாராயணமும் சமயம் சம்பந்தமான உரையாடல்களும் நாளும் பொழுதும் நடைபெற்றவண்ணம் இருந்தன. திருப்பெருந்துறை குருந்தமர நிழலில் எம்பெருமான் குருவடிவம் கொண்டு தேவகணங்களான சீடர்கட்கு அருளுபதேசம் செய்துகொண்டிருந்ததைப் போன்றிருக்கும், அந்தக் காட்சி.

தகதகவென்று வெள்ளிக் கம்பிகள் போல் விளங்கி ஒளிர்கின்ற வெண்தாடி... பஞ்சு பொதிந்தால் போன்ற வேட்டி. அதன் மேற் போர்த்துக்கொள்கின்ற சால்வை. கட்டையான, கெட்டியான, வச்சிரம் போன்ற தேகம். இத்தனையும் இலங்கையில் மட்டுமின்றி உலகில் பல பாகங்களிலிருந்தும் பல அன்பர்களையும் அடியவர்களையும் யாழ்ப்பாணத்தை நோக்கி கவர்ந்திழுக்கும் காந்தமாயிற்று.

'சமயம் என்பது சொல்லி விளங்கவைக்க வொண்ணுதது' என்பது யோக சுவாமிகளின் கொள்கை. இருப்பினும் மக்கள் மத்தியிலே சமய உணர்வை மெல்ல மெல்லத் தூண்டுவதன் மூலம் அவர்களை விழிப்படையச் செய்யலாமென்பதுஅவரதுநம்பிக்கை.இதன் காரணமாகத்தான் அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு சமய சஞ்சிகையை ஏற்படுத்த சுவாமிகள் இணங்கினர். சுவாமிகளின் நல்லாசிகளுடன் 'சிவதொண்டன்' என்னும் தமிழ் ஆங்கில வெளியீடான சமய சஞ்சிகை 1935ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் இன்று வரை மாத வெளியீடாக வெளிவந்து ஞான ஒளி பரப்பிக் கொண்டிருக்கின்றது.

இச் சஞ்சிகையின் மூலம் வேதாந்த சித்தாந்தக் கருத்துக்கள் பல, பாமர மக்கள் தெளிவுறக் கூடிய விதத்தில் மிக எளிமையாக விளக்கப்படுகின்றன. சுவாமிகளால் அவ்வப்போது சொல்லப்பட்டவையும், எழுதப்பட்டவையுமான, பாடல்களாயும், உரையாயும் அமைந்த நற்சிந்தனைகள், ஒவ்வொரு சிவதொண்டனிலும் தவறாது இடம் பெறும். சுவாமிகளின் அடியவர்கள் இச்சிறந்த

தொண்டினை 'சிவ தொண்டாகவே' கருதிச் செய்து கொண்டிருக்கின்றனர். சிவ தொண்டன் வெளிவரத் தொடங்கியதும் யோக சுவாமிகளின் புகழ் உலகின் எல்லாத் திக்குகளிலும் பரவத் தொடங்கியது. அன்பர்கள் பலர் சுவாமிகளின் அடியவர்கள் ஆனார்கள். சுவாமிகளின் போதனைப்படி தேவார பாராயணம், புராண படனம், தியானம் என்பன செய்ய ஒரு பொது இடம் வேண்டும் என்ற எண்ணம் அன்பர்கள் மத்தியில் உருக்கொண்டது. சுவாமிகள் இக்கருத்தை ஏற்றுக்கொள்வாரோ இல்லையோ என்ற ஏக்கத்துடன் இது பற்றி சுவாமிகளுடன் பேசினர்.

காலத்துக்கேற்ப சமயத்துக்கு புத்துயிர்ப்பு ஊட்ட வேண்டும் என்பதை உணர்ந்த சுவாமிகள், ஆரம்பத்தில் அன்பர்களின் கூற்றை ஏற்றுக்கொள்ளாத போதும், இறுதியில் சம்மதம் தந்தார். இதன் காரணமாக 4-11-1953ல் காங்கேசன்துறை வீதியில் யாழ் இந்துக் கல்லூரிக்கு அணித்தாக 'சிவதொண்டன் நிலையம்' என்னும் பெயரில் ஒரு ஆச்சிரமம் அமைக்கப்பட்டது. இந்த நிலையத்தின் கிளை நிலையமொன்று நாளடைவில் மட்டக்களப்பில் செங்கலடி என்னுமிடத்தில் அமைக்கப்பட்டு கிழக்கிலங்கை மக்களுக்கு ஞான ஒளி ஊட்டிக்கொண்டிருக்கிறது. சிவதொண்டன் நிலையங்கள் வட மாகாண மக்களுக்கும், கிழக்கு மாகாண மக்களுக்கும் தம்மிடையே வேற்றுமையின்றிக் கலந்து பழகுவதற்கான இணைப்புப் பாலங்களாக அமைய வேண்டுமென்பது சுவாமிகளின் அவாவாகும்.

சிவதொண்டன் நிலையம் புராண மண்டபம், தியான மண்டபம் என்னும் இரு பிரதான மண்டபங்களைக் கொண்டது. புராண மண்டபத்தில் யோக சுவாமிகளினதும், தேவார முதலிகளதும், முருகன், சிவன், விஞ்யகர் போன்ற மூர்த்திகளினதும் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இங்கு புராண படனம், சித்தாந்த வகுப்பு, பண்ணிசை வகுப்பு, தேவார பாராயணம் என்பன நடைபெறும். தியான மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள பீடமொன்றில் 'திருவடி' வைக்கப்பட்டுள்ளது. இங்கு அன்பர்கள் தியானம் செய்வார்கள். ஒவ்வொருநாளும் காலை, மாலை இரு வேளைகளிலும் பூசை நடைபெறும். பூசை மௌன பூசையாகவே இருக்கும். மாலையில் பூசை நடைபெறுவதைத் தொடர்ந்து தோத்திரப் பாடல்கள் பாடப்படும். இதனை விட சிவராத்திரி, திருவடி பூசை, குருபூசை, திருவாதிரை, யாகம், ஆச்சிரமவாழ்வு என்னும் விசேட பூசைகளும் அவ்வவ்நாட்களில் நடைபெறும்.

சிவதொண்டன் நிலையங்கள், 'சிவதொண்டன் சபை' எனப்படும் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றன. இச்சபையினர் யோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களையும், உரைகளையும் தொகுத்து 'நற்சிந்தனை' என்னும் நூலொன்றை வெளியிட்டுள்ளனர். இதன் முதற் பதிப்பு 1959ம் ஆண்டில் வெளிவந்தது. இதுவரை மூன்று பதிப்புக்களாக இந்நூல் வெளிவந்துள்ளது. தற்காலத்தவர்க்கேற்ற இலகு தமிழில் வேதாந்த, சித்தாந்த, சாதாரண, தோத்திரக் கருத்துக்களைப் பிழிந்து சுருக்கமாவும், தெளிவாகவும் அவ்வப்போது தமது அன்பர்கட்கும் அடியார்கட்கும் வாழ்க்கைச் சாதனைகளாகவும், போதனைகளாகவும் கூறிய பாடல்களினதும், உரைநடைகளினதும் தொகுப்பாக இந்த நற்சிந்தனை அமைந்துள்ளது.

இவ்வாறெல்லாம் பெருந் தொண்டாற்றி அத்தொண்டின் சின்னங்களாக மேற்குறித்த நூல்கள் நிலையம் என்பவற்றோடு தமது அன்பர்களையும், அடியார்களையும் தம்பணியைத் தொடர்ந்து ஆற்றும்படி நிறுத்தி விட்டு, எமக்கெல்லாம்ஞான ஒளியூட்டிக் கொண்டு நின்ற அந்தச் சுடர் விளக்கு 23-4-1964 அன்று ஆயிலிய நட்சத்திரம் கூடிநின்றதும், இவ்வுலகிற் தாம் அவதாரம் செய்ததுமான அதிகாலை 3.30 மணிக்கு தன் ஒளிக் கதிர்களை விட்டு விட்டு தான் பரம் பொருட் சோதியுட் கலந்து விட்டது.

யோக சுவாமிகளின் உபதேசங்களிற் சில

- 'ஒரு பொல்லாப்புமில்லை'
- 'முழுது முண்மை'
- 'எப்பவோ முடிந்த காரியம்'
- 'யாம் அறியோம்'
- 'அலைகின்ற மனதை அடக்க தேவாரம் படிப்பது ஒரு வழி'
- 'கை விரல்களைப்போற் தனியேயிருக்க வேண்டும், தேவையானபோது கூடிக் கொள்ள வேண்டும்.
- 'இமிளி புகைபிடித்தால் வெளியே ஒளி தெரியாது. இதே போன்றதே ஆன்மாவும் மாயையும்'
- 'தாழ்ந்த இடத்தைத் தண்ணீர் அடைவது போல எப்போதும் தாழ்ப்படிவாயிருங்கள்'

பசுவும் - பசுபதியும்

— டி. டி. நாணயக்கார J.P. —

ஆதியில் பிளவு இல்லாத ஒரு கடவுள் கொள்கையே நிலவியது; அது இயற்கையிலிருந்து பிறந்தது. கடவுள் இயற்கைக்குப் புறம்பாகக் கொள்ளாத மதம் இந்துமதம். இயற்கையையும் இறைவனையும் ஒன்ற வைத்தது இந்து மதம்; அரிவரி பாடமாக பசுவைத் தெய்வமாக ஆதிமனிதன் கருதினான். உணவைத் தந்து உடலை வளர்ப்பது அது என்று கருதினான். உடல் வளர்ச்சியில் அறிவு வளம்பெற உயிரையும் பசுவே ஓம்புகின்றது என்று உணர்ந்தான் ஆதி மனிதன். ஆதலால் உடலுள் தரித்து கண்ணிற்குப் புலப்படாத உயிருக்கும் பசு என்றே பெயரிட்டு அழைத்தான். பசு இன்றேல் அந்த உயிர் உடலை ஓட்டி இயங்க மாட்டாது என்ற காரணத்தால் ஆன்மாவுக்கும் பசு என்றே பெயரிட்டான்.

பசு, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற கருத்தில், தீம்பாலாகிய உணவைத் தருகிறது. அத்தீம்பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் என்ற பல்வகைச் சுவையுடன் கூடிய பதார்த்தங்கள் பெறப்படுவதோடு அதுவே தாகத்தைத் தீர்க்கவும், உபஉணவாகப் போசனஞ் செய்யவும் அமைகிறது. "தம்பியுள்ளான் சண்டைக்கஞ்சான்" "பாலுள்ளான் விருந்துக்கஞ்சான்" என்றொரு பழமொழியும் நினைவுகூர்தற்குரியது. பல காரணங்களால் பசு ஓர் புனிதமான பிராணியாகிறது. அது சாந்தத்திற்கும் உவமையாகிறது. அவனைப் பார்த்தால் பசுபோல் இருக்கிறான் என்று பொறுமைக்கும் சாந்தத்திற்கும் பசு உபமானமாக அமைகிறது. பசுவின் சாணி தாவரங்களுக்கு நல்ல எருவாக உதவுகிறது.

ஆன்ம நாயகர் என்றும், பசுபதி என்றும் இந்துக்கள் இறைவனை வழிபடுகிறார்கள். பதி என்ற கடவுளும், பசு என்ற ஆன்மாவும், ஆணவம், கன்மம், மாயை மூன்றும் அடங்கிய பாசமும் ஆகிய முப்பொருள்களும் உண்மையானவை; பதியைப்போல் பசுவும் (ஆன்மாவும்) பசுவைப் பற்றி நிற்கும் மும்மலங்களும் அநாதியானவை என்ற கொள்கை இந்துசமயத்தில் வலிவுடையது. ஆன்மா உடம்புடன் சேர்ந்து இயங்குகிறது; இந்தச் சேர்வும் உடம்பை விட்டுப் பிரிந்தாலும் ஆன்மா தன்வசமாகச் செய்வதொருகருமமல்ல. மணியின் கண் ஒளிபோலவும், நெருப்பின்கண் சூடு போலவும், உயிருடன் ஒன்றியும் வேருயும் நின்று இயக்கி இயங்குபவர் இறைவன். இந்துக்கள் இறைவனை உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் வழிபட்டு வருகின்றனர். பசுபதியாய இறைவனுக்கு ஒரு ஆலயம் எடுத்து அங்கு இறைவன் அம்சங்களைக் கற்பனைப்படுத்தி ஒரு உருவம் அமைத்து வழிபாடு செய்வது உருவ வழிபாடு. இதுவன்றி மனதிலே உருவமொன்றை அமைத்து இறைவன் திருநாமங்களை ஜெபித்து வழிபாடு செய்தல் அருவ வழிபாடு ஆகும். புறத்தில் உருவமாகவும் பொருள் புலப்பாடு அகத்தில் நிகழவும் அமைவது அருவுருவ வழிபாடு ஆகும். சிவலிங்கம் அத்தகைய வழிபாட்டின் அடையாளம். இந்தச் சிவலிங்க வழிபாடு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சைவ சமயத்தில் நிகழ்ந்து வருகிறது.

பசுவைத் தெய்வமாகப் பூசித்து, பசுபதியாகிய சிவனையே வணங்கிவந்த இந்திய சமூகத்துக்குள்ளே விஞ்ஞான விளைவுகளின் மூலம் கண்டம் விட்டுக் கண்டமான மக்கள் புடைபெயரத் தொடங்க அன்னிய மக்கள் வரவு ஏற்படலாயிற்று. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், அராபியர், ஆங்கிலேயர் போன்ற பிற நாட்டு மக்கள் வரவால், இந்து சமயத்தின் உயர்ந்த உயிர்நாடி தளர்வதாயிற்று. நாட்டில் புகுந்தவர்கள், அங்கே நிலையாக வாழ்ந்து தெய்வமாக வழிபட்ட பசுவை வெட்டிப் புசித்தலை மேற்கொண்டனர். இதற்கு எதிர்ப்புகள் இல்லாமல் இல்லை. நிலையாக வாழ்ந்து வந்த இனத்திலும் பார்க்க புகுந்த இனம் கொலைக்கருவிகள் தாங்கி மிருக வதைபோல மண்ணில் பிறந்த மக்களையும் வதை செய்யத் தலைப்பட்டனர். அன்று தொட்டு இன்றும் உணவுக்காக பசுவதை இன்றும் இந்தப் புண்ணிய பூமிகளில் நிகழ்ந்து வருதலைக் காணலாம்.

அன்று ஆசிரியர் இந்திய மண்ணில் நுழைந்து வேதகாலம் என்று சொல்லத்தக்கதான காலத்தில் இறைவழிபாட்டிற்காக பசுக்களை யாகாக்கினியில் இட்டு யாகங்கள் செய்தமையை புத்தபகவான் வன்மையாகக் கண்டித்து ஜீவஹிம்சை செய்து கடவுளை வழிபடுதலிலும் பார்க்க ஒரு பிராணியையும் கொன்று உண்ணுமை நல்லது என்று ஒரு புரட்சியை உண்டாக்கினர். இவ்வாறு இந்து மதத்தைக் கண்டித்து பௌத்தமதம் என்று புத்தபகவான் பெயரில் ஒரு மதமும் ஏற்படலாயிற்று.

மனிதனைப் பிறந்து, மனிதனோடு மனிதனாக வளர்ந்து பசுபதியாய இறைவனை அடையும் நெறி இதுவென்று போதித்து இந்து மதத்தின் மூலவேர் அற்றுப் போகாமல் பசுபதியை காட்டிய பெருமையை நாம் மறக்கலாகுமா.

"ஒன்றேகுலம் ஒருவனே தேவன்"

யோகத்தின் அவசியம்

— டாக்டர் பண்டிட் ஜி. கண்ணைய யோகி, ஆத்மயோக ஞானசபா-சென்னை —

மண்ணுலகில் மனிதன் தோன்றிய நாள் முதல் அவன் வாழ்க்கையின் மறைவில், அவன் வாழும் உலகில் நடைபெறும் சம்பவங்களின் மறைவில் ஏதோவொரு சக்தியிருக்கிறதென நம்பிவந்தான். அச்சக்தி தனக்கு ஏதும் தீமைசெய்யாதிருக்கவும், தனக்கு வேண்டிய நன்மைகளைக் கொடுத்துதவவும் அதை செயல்படுத்துவதற்கான பலவேறு வழிகளைக் கடைப்பிடித்து வந்தான். நரபலி முதல் ஆடு மாடு பலிகள் தொடங்கி, இன்றையதினம் சர்க்கரைப் பொங்கல் படைக்கும் சடங்குகள் வரை இந்த கருத்துக்கொண்டவைதான். இவ்வழிபாடு வேற்றுமைகளின் அடிப்படையில் சமயங்கள் பல தோன்றின. ''கடவுள் அருளைப்பெற அவருக்கு அன்பை, பக்தியைக் கொடுப்பதைத் தவிர வேறெதையும் கொடுக்கத் தேவையில்லை'' என்ற வரையில் சமயங்கள் முறையிட்டுவந்தன.

''நரபலி முதல், பிரார்த்தனை, பக்தி, அன்பு போதும்'' என்று சொல்லும்வரையுள்ள சமயங்களெல்லாம் தம்மையும், தாம்வாழும் உலகத்தையும் ஆட்டிப் படைக்கும் அப்பரம்பொருள் தனக்கு வெளியில், ஆகாயத்தில் எங்கோ ஒரு இடத்தில் உறைவதாகவும், அங்கிருந்தே அனைத்தையும் ஆட்டிப்படைப்பதாகவும் கூறிவந்தன. இத்தகைய நப்பிக்கைக்கு இடையிடையில் அங்கங்கு சமயச்சூழலில் அகப்படாமல் தனித்திருந்து, அப்பராசக்தியைக் கண்டறிய முற்பட்ட சிலர் ''கடவுள் மனிதனுக்கு வெளியில் இல்லை, அவனுக்குள்ளேயே உறைகிறான், மனிதன் தன் உணர்வை உள்முகப்படுத்தினானேயானால் அம்மகா சக்தியை நேருக்கு நேராகக் கண்டருள் பெறலாம்'' எனக்கூறிவந்தனர்.

இக்கூற்றின் அடிப்படையில் தோன்றியதுதான் ''யோகம்''. சமயங்கள் கடவுள் எங்கோ இருப்பதாகச்சொல்ல யோகம் அது மனிதனுக்குள், எல்லா உயிரினங்களுக்குள் நிறைந்திருப்பது அவைகளை ஆட்டிப்படைக்கிறது என்று கூறுகிறது. சமயங்கள் கடவுள் அருளைப்பெற ஏதேதோ சடங்குகளைச் செய்ய வேண்டுமென்று சொல்ல யோகம் ''உணர்வை உள்முகப்படுத்துவதுதான் கடவுளை நேருக்கு நேராக அறியும் வழி'' என்று கூறுகிறது. தாயுமானார், ராமலிங்கர், வேமன்னா, ஜைனகுருக்கள், புத்தசமயத்தவர்கள், பகவத்கீதை போன்றவைகள் கடவுளையறிய யோகநெறியையே வற்புறுத்துகின்றனர். ''சித்தமிசைசுடி கொண்ட அறிவான தெய்வம்'' என்றார் தாயுமானார்; ''ஈஸ்வரன் எல்லா உயிர்களின் இருதயத்திலும் உறைகிறார்'' என்கிறது கீதை. யோக நூல்களில் சகஸ்ரசக்கரத்தில் இறைவன் உறைவதாக விளக்கப்பட்டிருக்கிறது.

''யோகம்'' என்றால் சேர், ஒன்றுபடு, இணையென்று பொருள். ஜீவான்மா பரமான்மாவுடன் சேர்வதற்கான வழியைச் சொல்வது யோகம். மற்ற சமய வழிபாடுகளின் குறிக்கோள்களை ஆராய்ந்தாலும் அவையும் இதே கருத்தைத்தான்சொல்கின்றன என்பது விளங்கும். இதனாலேயே பல்வேறு சாதனைகளுடன் யோகம் என்ற சொல் இணைக்கப்பட்டுள்ளது. ''பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், தபயோகம், மந்திரயோகம், பிரார்த்தனா யோகம்'' இப்படி எல்லாச் சாதனைகளுடனும் யோகம் இணைக்கப்பட்டுள்ளதன் கருத்து ''இவ்வெல்லா வழிகளும் அன்பானவை பரமாத்மாவுடன் சேர்ப்பவையே'' என்பதாகும். உருவெளித்தோற்றத்தில் தம் இஷ்ட தெய்வத்தின் உருவை பலர்கண்டதும் கூட ''அவர்கள் உள்ளத்தில் அவ்வுரு உண்டாக்கப்பட்டதன் பயன்தான்' என தற்கால மனோதத்துவ ஆராய்ச்சி கூறுகிறது. முருகன் வடிவு உள்ளத்தில் உருப்பெற்றுள்ளதான் வெளியில் அவன் வடிவைக்காணலாம்; மந்திரம், பூஜை முதலிய எல்லா வழிபாடுகளும் உள்ளுறை சக்தியை விழிப்படையச் செய்யும் சாதனங்களே. இவைகளில் உள்ளத்தில் குறித்த பொருள் குறித்த ஒரு வடிவில் அச்சக்தியை விழிப்பித்தால் அவ்வளவு வெளியிலும் காணப்படுகிறது. உள்ளே உருப்பெறுத எந்த உருவையும் பக்தன் வெளியினில் காணமுடியாது.

உள்ளத்தில் உறை சக்தியை உருவத்திலோ, அருவத்திலோ விழிப்படையச் செய்யும் சாதனை 'யோகமே'. இது பக்தி, கர்மம், ஞானம் முதலிய எந்த வழியிலும் செய்யப்படலாம். ஆனால் அது யோகமாக முற்றுப் பெறும்வரை பலன்கிடைக்காது.

யோகிகள் சுற்றுவழிகளைவிட்டு, நேர் வழியில் தம்மை உள்முகப்படுத்தி, உள்ளுறையும் பிரபஞ்ச மூலத்தை நேருக்கு நேராக, அதன் உண்மையான, திரிபற்ற வடிவில் கண்டுகளித்துப் பயன் பெறுகிறார்கள்.

யோகம் இறைவனைக்காண்பதற்காக மட்டும் பயன்படுவதல்ல. இவ்வுலகில் நோயில்லாமல், துன்பங்களை அகற்றி, நிம்மதியாய் வாழவும் அது உதவுகிறது. எப்படியென்றால் நோயும், கவலையும் வெளிமுகத்தொடர்பால்தான் உண்டாகின்றன. மனிதன் தன்னை, சித்தத்தை உள்முகப்படுத்தினானேயானால் வெளியுலகத்தின் எதுவும் அவனைத்தாக்காது. யோக ஆரம்ப சாதகர்களும் நோய் நொடிகளிலிருந்து விடுபட்டு கவலை, துன்பங்களை வென்று, விதியை மாற்றியமைத்து நிம்மதியாய் வாழுத்தொடங்குகிறார்கள்

சகல சமயங்களிலும் சமரசம் காணும்

உத்தம ஞானிகளே ஸூபியாக்கள்

— Dr. K M.P. முஹம்மது காசிம் —

வாழ்க்கைப் போராட்டத்தில் நிகழும் கணக்கற்ற பிரச்சனைகளுக்கு முடிவு காண வேண்டுமானால் பிரச்சனைகளை உருவாக்கிடும் ஸ்தானம் எதுவென விளங்க வேண்டும். அது நமது மனமேயாகும். மனம் என்பது என்ன? மனதை முற்றிலும் அழித்துவிட முடியுமா? என்ற கேள்வி சதாகாலமும் ஆத்மீகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சாதகர்களுக்கு ஒரு பெரும் புதிராக இருக்கிறது. மனம் விருப்பு வெறுப்புகளினால் உந்தப்பட்டு தடுமாறும் வேளையிலேதான் குழப்பங்களும், சூழ்நிலைகளும் கொந்தளிக்கின்றன.

மனது எந்தவித விருப்பு வெறுப்பில்லாது செயலாற்றிடும் நிலையில் பந்தங்களில்லை, ஆசைகளின் பதிவுகளுமில்லை, பயமுமில்லை. மனது உணர்ச்சிவசப்பட்டு விட்டால் அமைதியை, ஆனந்தத்தை, அன்பை இழந்துவிடும். ஆகவே, மனது எல்லா நிலையிலும் எதிலும் பற்றுது அறிவோடு வாழ வழி வகுப்பதே சமயங்களின் நோக்கமாகும்.

வெகுளி, அச்சம், மனக்கிளர்ச்சி இவற்றினின்றும் விடுபட்டு பயமற்று எந்நிலையிலும் கலக்கமற்ற சாந்தமாக வாழ்ந்திடும் அருட்கலையை போதிப்பதே சமயங்களின் நோக்கமாகும். யாரிடத்திலும் ஆசையும் வெறுப்புமின்றி பற்று அகற்றி, புலன்களை வென்று, அன்பும் கருணையுங் கொண்டு, துக்கத்தையும் சுகத்தையும் சமமாகக் கருதி செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்வதோடு, ஒழுக்கமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டுமென சமயங்கள் வற்புறுத்துகின்றன வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாது சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமானால், மனம் அசைவற்று இறையாணத்திலேயே ஒன்றுபடும் பண்பினை அவசியம் பெற்றுக வேண்டும். மனிதன் உடம்பையும் மனதையும் தப்பாக தனது யதார்த்த நிலையாகக் கருதும் வேளையிலேதான் துக்கத்திற்கும் ஆசைகளுக்கும் அடிமையாகிறான். உடம்பின் பிடியிலிருந்தும் மனத்தின் கட்டுக்கோப்புகளிலிருந்தும் முற்றிலும் விடுதலை பெற்று மனங்கடந்த ''தாத்'' என்னும் அகண்ட உணர்வெளியில், தாக்கற்ற பரிபூரண நிலையில் ஐக்கியமாகி நிறைவு பெறுவதே மனித ஜீவியத்தின் நோக்கமாகுமென ஆத்மீக அனுபூதி நிலையில் உச்சநிலை அடைந்த ஸூபியாக்கள் கருதுகிறார்கள். யாதெனில் இந்த நிர்மலமான நித்திய என்றும் எப்பொழுதும் அழியாத தெய்வீக நிலை யாவருக்கும் பொதுவானது.

அகண்ட உணர்வெளியில் சரணாகதி அடைவது என்பது சிந்தனையின் செயலன்று. மேலும் புத்திகூர்மையின் நுட்பத்திறனும் துணரும் திறமையுமன்று. அல்லது தத்துவக் கண்ணோட்டத்தில் எதையும் தர்க்க ரீதியாக ஆராய்ந்திடும் கலையுமன்று. இதற்கு காரணம் யாதெனில் மனிதனின் முயற்சிகள் யாவும் மனதினால் உருவகப் படுத்திய ஓர் எல்லைக் கோட்டில்—கண்டத்திரையில்தான் தங்கி நிற்கிறது. ஆகவே, மனம் எவ்வித சலனமுமின்றி நினைவொன்றும் நினையாமல் சகலவித எண்ணங்களுமற்ற கற்பனை கடந்த மோன நிலையில் சார்ந்திருப்பதே சம்பூர்ண சரணாகதியாகும். இந்த முக்தி நிலையாகிய ஆத்மீக விடுதலையை மனிதன் நேரடியாக அனுபவிக்கவேண்டுமென்ற அன்பின் அழைப்பிலேதான் சகல சமயங்களும் சமரசமும் ஒருமைப்பாடும் காண்கிறது.

"திருமேவு மொருமாலை வருமான்ம நாயகன்"

மஹாராஜ ஸ்ரீ ஈ. து. ஷண்முகநாதக்குருக்கள் —

தோற்றம்

"ஈசானும் சர்வ வித்யானும்
ஈஸ்வர சர்வ பூதானும்"

என்ற உபநிஷத் இறைவனே சகல கலைக ளின் வடிவமாக உள்ளவன் என்றும் அவனே எல்லா உயிரினங்களின் உருவமுமானவன் என்றும் விளம்புகிறது.

காலம் என்ற தத்துவம் கடந்து நின்று, பாரடங்கிலும் விரவிச் செறிந்து, பரிபூரண மாய் எங்கும் நீக்கமற நிறைந்து, ஏகமாய், அனேகமாய், ரூபமாய் அரூபமாய், ஆதியாய், அநாதியாய், அந்தமாய், தூய்மையுடைய தாய், சர்வவல்லமை படைத்ததாய், என் றும் அன்புமயமாய், அழகு மயமாய், அறிவு மயமாய், இன்பமயமாய், ஆனந்தமயமாய் உணரப்படும் வீழுமிய பொருளே இறைவன்.

போக்கும் வரவும், வாக்கும் வடிவும் இல்லாத இப்பரம்பொருளே, வானுகி மண் ணுகி, வளியாகி, ஒளியாகி, நீராகி, பற்பல லீலா வினோதங்களை நடத்தி வருகின்றது.

சகல உயிரினங்களின் கற்பமாக இத்த னிப் பொருளாகிய இறைவன் இருந்த போதி லும், அவன் என்றும் குறைவறு நிறை வின னாய், நுண்ணியனாய், மிகப் பெரியவனாய் மனம் வாக்கிற்கப்பாற் பட்டவனாய், சொல்லுக்க டங்காத சுகப் பொருளாய் பக்தி வசீப்படும் உத்தமனாய் இருந்து வருகின்றான்.

தான் படைத்த சகல உயிரினங்களையும் காத்து ரட்சிக்கும் பெருங்கருணையோடும், பற் பல நாமங்களோடும், பற்பல ரூபங்களோடும் இயங்குகின்றான், இறைவன். அண்ட சராச ரங்களே அம்பலமாக ஆனந்தத் தாண்டவம் ஆடும் நடராஜனாகப் பாரினைத்தையும் படைத்து, கருணையோடு காத்து, அயர்வை அழித்து மதிநலம் பெற மறைத்து, ஆன்ம நலம்பெற அருள்பாலித்து ஐந்தொழில் புரி கின்றான்.

கோலமாமணி ஆரமும், முத்துத் தாம மும், முடிவும் இல்லதோர் நீலமேக சியாமள வண்ணனாய் பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளி கொண்ட பரந்தாமனாகக் காத்து ரட் சிக்கின்றான்.

அகிலமெங்கும் வியாபித்து விளங்கி ஏக பரிபூரணனாய் துலங்கித் தன்னை ஆவலித்து வரும் ஆன்மாக்களை அள்ளி அணைத்து ஆண் டருளும் ஆறுமுகனாக அருள்பாலிக்கின்றான்.

எங்கும் வியாபித்திருக்கும் பரத்துவமே சிவசண்முகன். இத்தத்துவத்தை கந்த புரா ணம்

"எங்கணும் பணி வதனங்கள், எங்கணும் விழிகள்
எங்கணும் திருக்கேள்விகள், எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக்கழலடி, எங்கணும் வடிவம்
எங்கணும் செறிந்(து) அருள்செயும் அறுமுகத் தது)
இறைக்கே"

என ஓர் விசுவரூபசித்திரமாகக் காட்டுகிறது.

அழகும், மணமும், இளமையும், இன்பும் அருளும், ஆற்றலும் நிறைந்த சிவசண்முகப் பரம்பொருளே, முருகன், குகன், குமரன், கந்தன், விசாகன், கார்த்திகேயன், காங்கே யன், சுப்பிரமணியன், சுவாமிநாதன், ஞான பண்டிதன், குருபரன், வடிவேலன், வள்ளி நாயகன், மயில்வாகனன் எனப் பல்வேறு திருநாமங்களால் அழைக்கப்படுகிறான்.

வேதங்கள் ஏற்கின்ற சமயங்கள் ஆறுகிய சைவம், வைணவம், சாக்தம், காணபத்தி தியம், கௌமாரம், சௌரம் ஆகியவற்றின் ஆதார தெய்வமாக விளங்குபவனும் ஆறுமு கனே. இவ்வருள் நிலையை அருணகிரிநாத சுவாமிகள்

"அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறிவார் குணக்கடலோனே"

எனக்குறிப்பிடுகிறார்.

சாகைகள் பல கொண்ட அநாதிவேதம் அதன் பொருள் முடிபாகிய உபநிடதம் ஆகி யவற்றின் அடி, நடு, முடியிலும் அதன் மேலுள்ள மௌனப் பொருளாகிய ஓங்கார முருகனே என்பதை

"சுருதி முடி மோனஞ் சொல், சிற்பரம ஞானசிவ
சமய வடிவாய் வந்த அத்து விதமான பர
சுடரொளியதாய் நின்ற நிஷ்கள சொரூப முதலொரு
— வாழ்வே"

எனவும்,

நாலந்த வேதத்தின் பொருளோனே''
எனவும் அருணகிரிநாத சுவாமிகள் விளக்கியுள்ளார்கள்.

சகல வடிவாய சதுரனுய், பவனம் முதலாம் பூதப்படையுடைய முதல்வனுய், அநாதி நித்ய நிர்மல சொருபனுய் விளங்கும் ஆறுமுகன், ஆராத காதலோடு, ஆறெழுத்தோதி, அழுதழுது தொழுகின்ற அடியவர்க்குத் தன் ஆறு முகங்காட்டி, அருள் பொலி உருக்காட்டி, தன் அருளாலும், அழகாலும், அவர் பாபம் தடிந்து பிறவித் தாபம் தணிக்கும் பேரருளாளனுகச் சகல தேவாலயங்களிலும், புறக் காட்சி கொடுத்து அருள் பாலிக்கின்றுன்.

கோதகன்ற யோகியர் உள்ளக் கோயிலிலும், வஞ்ச வாதகன் ஞானியர் மனக்கோயிலிலும், போதகன்ற முக்தர் சிந்தை வாலி சத்திலும், வனிதையர்கள் இருவருடன் வந்தருளும் வடிவழகனுக அகக்காட்சிகொடுத்து அருள் செய்கிறுன்.

அருட் தெய்வமாகிய அறுமாமுகவனின் அறுசமயக் காட்சியையும், வேதக்காட்சியையும், அகப் புறக்காட்சிகளையும் அருணகிரி நாத சுவாமிகள்,

''ஒரு நியமமே விண்ட வேத அடி முடி நடுவுமாய்
அண்டமுட்ட வெளியாகி, உயிர், உடல் உணர்வதாய்
எங்கும் உற்பவமதாய்— அமருள வோனே'';

எனவும்,

''கொந்துவார் குரா அடிநிழலிலும்
அடியவர் சிந்தை வாலிச நடுவிலும்
நெறிபல கொண்ட வேதநன் முடியிலும்
மருவிய-குருநாதா''

எனவும் எடுத்துக் காட்டுகிறுர்

மருவும் அடியார்கள் கண்ணிலும், கருத்திலும், கனவிலும், நனவிலும், அவர்தம் உள்ளத்திலும், உணர்விலும், என்றும் வாழ்ந்து வளர்கின்ற ''அயிலுமயிலும்; அறமும் நிறமும் அழகுமுடைய'' பெருமாளாகிய முருகன்.

''மாசிலடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று
தேடி விளையாடி யங்ஙனே நின்று
வாழும் மயில் வீரனே''

என்று அருணை முனிவர் கூறிவைக்கிறுர்.

அவர் அழுதவாக்கிற்கமைய மாசிலடியாராகிய மாருதப்புரவல்லி என்ற மாதரசியின் மாறுப்பிணி நோய் மாற்றி அதிசய, அற்புத, உற்பாதங்கள் நிகழ்த்தி, அவ்விடத்திலேயே முருகப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளிய பொற்புடை திருப்பதியே ''திரு மேவு மொருமாவை'' எனப் பாவலரும் நாவலரும் பணிந்து போற்றும் பழம்பதியாகிய மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவிலாகும்.

வரலாறு

பல நூற்றுண்டுகட்கு முன் ஈழநாட்டின் வடபகுதியில் அமைந்த கடலோரப் பிரதேசம் ''கோவிற் கடவை'' என அழைக்கப்பட்டு மிகப் பிரசித்தி பெற்றிருக்கிறது.

இப்பகுதியிலிருந்த பழமையான சிவாலயமும், கடலோரக்குன்றுகளில் உற்பத்தியாகி வங்கக் கடலுடன் சங்கமித்த நன்னீர் அருவிகளும், கப்பல் இடையறுது போக்குவரவு புரிந்த ''கயாத்துறை'' என்ற துறைமுகமும் இப்பகுதிக்குச் சிறப்பு பெற்றுக் கொடுத்தன.

'திருத்தம்பலேஸ்வரம்' என அழைக்கப்பட்ட சிவாலயத்தின் மூர்த்தியின் கீர்த்தி கடல் கடந்து பரவியிருந்தது.

முன்னெருகால், தனது குரு இட்ட சாபத்தால் கிரி முகம் பெற்று, நகுல முனிவர் என்று அழைக்கப்பட்ட வடநாட்டு முனிவர் ஒருவர் இங்கு வந்து நன்னீர் அருவிகளில் நீராடித் திருத்தம்பலேஸ்வரரை வழிபட்டு சாப விமோசனம் பெற்றிருந்தார். இக்காரணத்தால் இப்பகுதி கீரிமலை என அழைக்கப்பட்டு இங்குள்ள நன்னீர் அருவிகள் மாறுப்பிணி நோய் மாற்றவல்ல மகிமை வாய்ந்த புண்ணிய தீர்த்தங்கள் எனச் சிறப்புப் பெற்றிருக்கின்றன.

உள்நாட்டு விளைபொருளும், பிறநாட்டுப் பொருளும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வணிகத்துறையாகவும், புத்தகாயா போன்ற புனித தலங்களுக்குச் செல்லும் யாத்ரீகர்கள் வெளிநாடுகள் செல்லும் பயணிகள் ஆகியோர் கூடும் துறைமுகமாகவும், தென் தமிழ்நாட்டுக் கொள்கை, நாகை, முசிரி போன்ற பிரபல துறைமுகங்கட்கு நிகரானதாகவும் 'கயாத்துறை' அக்காலத்தில் சிறந்து விளங்கியிருக்கிறது.

இத்துணை சிறப்பும் பொலிந்த 'கோவிற் கடவை'ப் பிரதேசத்திற்கு இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன் திசை உக்கிர சோழன் மகள் மாருதப்புரவல்லி வந்திறங்கினுள்.

WITH BEST COMPLIMENTS FROM

NEW LALITHA GOLD HOUSE

42, COLOMBO ROAD,
KITTANGI - GALLE.

Phone: 2130



Sri Vijeyarani Jewellery Mart

No. 6/1, Gamini Mawatha (opp. Galle Bus Stand) Galle.

WITH BEST COMPLIMENTS FROM



PUSHPPA JEWELLERS

JEWELLERS.

24 A, Colombo Road - Kaluwella,
GALLE.

Phone: 09 - 2568

With best compliments from



NEW UDAYA JEWELLERS

26, Colombo Road - Kaluwella,
GALLE.

With Best Compliments of



SUNDDARA JEWELLERS

MANUFACTURING JEWELLERY

95, Colombo Road, Kaluwella
GALLE.

With best compliments of



NEW LATHA GOLD HOUSE

97, Colombo Road - Kaluwella,

GALLE.

With best compliments of

SANTHANI GOLD HOUSE

34, Main Street,
ELPITIYA.

With Best Compliments of



Santhimathi Gold House

JEWELLERS

14, Colombo Road - Kaluwella,
GALLE.

With best compliments from



RENUKA JEWELLERS

42, Colombo Road - Kittangi, GALLE.

With best compliments of

Letchumi JEWELLERS

SOVEREIGN GOLD JEWELLERY EXPERT
CRAFTSMANSHIP GUARANTEED QUALITY
ORDERS ARE UNDERTAKEN TO SUIT INDIVIDUAL TASTE.

111, SEA STREET, COLOMBO-11.

BRANCH:-

43, Colombo Road, Galle.
42, Kittangi, Galle.

* *

HILLTOP HOLIDAY INN

51, HIGHLEVEL ROAD, HOMAGAMA, SRI LANKA. Tel: 0793 297
Head Office: 111, SEA STREET, COLOMBO-11, SRI LANKA. Tel: 36862

With Best Compliments
from



RAJU JEWELLERY

42, Colombo Road, Kittangi,
GALLE.

Tele: 2567

With best compliments from

Phone: 09 - 2894



ලලිතා ජුවලරී
LALIETHA JEWELLERY

No. 38, Colombo Road,

GALLE.

●

GOWRI JEWELLERY

No. 93, Colombo Road - Kaluwella,

GALLE.

கன்மவினையால் குன்ம நோயும், குதிரை முகமும் பீடிக்கப்பட்டிருந்த இம்மாதரசி, பாரத நாட்டின் பல்வேறு திருத்தலங்களிலும் புண்ணிய நதிகள், தீர்த்தங்கள் ஆகியவற்றில் வழிபாடு செய்தும், தீர்த்தமாடியும் தன் நோய் மாறுத நிலையில் கோயிற்கடவை நன் னீர் ஊற்றுக்களில் தீர்த்தமாடத் தன் பரிவா ரங்களோடு வந்து முகாமிட்டாள்.

கிரிமலையில் அப்போதிருந்த நகுலமுனி வரைத் தரிசித்து அவர் வாயிலாக இப்புண் ணிய பிரதேசத்தின் மகிமைகளை அறிந்து, மாருதப்புரவல்லி திருத்தம்பலேஸ்வரரைத் தானும் வழிபாடு செய்து, தன் இஷ்ட தெய் வமான முருகப்பெருமானை நீள நினைந்து தன் தீராப்பிணி தீர்த்தருள வேண்டும் என்று தியானித்து நன்னீர் ஊற்றுக்களில் நீராடி வருவாராயினாள்.

ஒரு சிறிது காலத்தில் நோய்பிணியும் நீங் கப்பெற்ற மாருதப்புரவல்லி நன்றிக்கட னேடு முருகப்பெருமானுக்கு ஆலயம் எடுப் பித்தாள். தன் தந்தையின் உதவியோடு தமி ழகத்திலிருந்து தருவித்த 'காங்கேயன்' விக் கரகத்தை பிரதிஷ்டை செய்து, தில்லை மூவா யிரவரில் ஒருவரான பெரிய மனத்துள்ளாரை பிரதம குருவாக நியமித்து, பரிசனங்களைக் குடியிருத்தி கும்பாபிஷேகம் ஆகிய வைபவங் களை நடாத்தி, ஆலய பரிபாலனத்துக்குரிய நிபந்தங்களை ஏற்படுத்தி சிலகாலம் நிர்வ கித்து புகழ்பெற்றாள்.

மாருதப்புரவல்லி தருவித்த 'காங்கே யன்' விக்கிரகம் வந்திறங்கிய 'கயாத்துறை' அன்று முதல் 'காங்கேயன்துறை' என வழங் கப்படலாயிற்று.

மங்கையின் குதிரை முகம் நீங்கப் பெற்ற தலமாகையால், இத்திருத்தலம் தமிழ் மொழி யில் 'மா-விட்ட-புரம்' எனவும் வடமொழி யில் 'துரகானன விமோசன புரி' எனவும் வழங்கப்படலாயிற்று.

மாருதப்புரவல்லி காலந்தொட்டு, இத் திருவோங்கு தலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வரும், பூசை வழிபாட்டுப் பத்ததியொன்றில்

''ஸ்ரீமத் காவேர்யாஹ தக்ஷிண தீரே!
ஸமுத்ரஸ்ய பஸ்சிம தடே!
பாஸ்கர ஷேத்ரே!
துர்க்கானன விமோசன புரே!
அஸ்ய தேவ தேவஸ்ய
மஹாவல்லி கஜவல்லி சமேத
ஸ்ரீ சுப்ரமண்ய பரமேஸ்வரஸ்ய!

என்ற சுலோகம் ஒன்றில் இத்திருத்தலம் தோன்றிய பின்னணி குறிக்கப்படுவதை அறி யக்கூடியதாகவுள்ளது.

மாருதப்புரவல்லியின் மகன் பாலசிங்க னும், அவன் சந்ததியாரும் சிங்கள சூர்யச் சக்கரவர்த்திகளும் தமிழரசர்களும், இத் திருத்தலத்திலே மிகுந்த ஈடுபாடுடையவர்க ளாகஇருந்தனர் என்பது வரலாற்றுச் செய்தி.

பரங்கியர் காலத்தில் இத்தலம் இடிக்கப் பட்டு கேடு விளைவிக்கப்பட்டதாகும். ஆலய மூர்த்திகளை அப்போதிருந்த அந்தனப் பெரி யார்கள் மறைவாகப் பாதுகாத்து பயபக்தி யோடு பேணியதாகவும் வரலாறு கூறுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே இத்தி ருத்தலப் பரிபாலனர் மரபில் வந்த சபாபதிக் குருக்களால், புனருத்தாரண வேலைகள் மேற் கொள்ளப்பட்டு, பூசைகள், ஆராதனைகள், உற்சவங்கள் முன்போலவே நடைபெற்றன என்பது யாழ்ப்பாணச் செயலகத்திலுள்ள கோயில் டாப்பில் இடம் பெற்றிருக்கிறது.

சபாபதிக் குருக்கள் காலத்தின் பின் இத் தலம் சிறப்பாக வளர்ந்து சென்ற நூற்றாண் டில் காங்கேசன் துறையிலிருந்து வாணிபம் செய்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார்க ளாலும், ஆலயச் சூழலில் வாழ்ந்த தனவந் தர்களாலும், அடியார்களின் ஆதரவோடும், மிகப் பிரபலம்வாய்ந்ததலமாகவளர்க்கப்பட் டுள்ளதை, 'மாவையமக அந்தாதி' போன்ற நூல்களால் அறியக் கூடியதாகவுள்ளது.

இத் தலபரிபாலனம், நிர்வாகம், பொருட் சேகரம், பூசை ஆராதனைகள், உற்சவங்கள் யாவும், மாருதப்புரவல்லி காலத்தில் எவ் வாறு நடைபெற்றதோ அவ்வாறே பெரிய மனத்துள்ளாரும் அவர் வழி வழி வந்த சந்த தியினரும் நடத்தி வந்திருக்கின்றார்கள். இவ் வாலய பூசைகள், ஆராதனைகள் யாவும் குமார தந்திரப்படி, தூய்மை, பயபக்தி, பாரம்பரி யம் ஆகியவை பேணப்பட்டு இன்றும் நடை பெற்று வருகின்றன.

சைவப்பண்பாடு, வேத ஆகமநெறி முறை ஆகியவை பேணப்பட்டு, முருக பக்தியின் வளர்ப்புப் பண்ணையாக, இத்தலம், கால வரலாற்றில் திகழ்ந்தமையால் இதன் கீர்த்தி, பாரதம், மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய பிற நாட்டுக்குப் பரவி அங்கிருந்து முருக பக்தர்களை இங்கு ஆகர்ஷித்திருக்கிறது.

சிறப்பு

மாருதப்புரவல்லியின் காலந்தொட்டே இத்திருத்தலம் 'காண்பினிய மாவையாக', 'எழில்சேர் மாவையாக', 'சைவம் வளரும் மாவையாக' தெய்வ ஒளிதிகழும் மாவையாக வேதமணங் கமழ, ஞான ஒளிவீசி காலவெள்ளத்தைக் கடந்து வந்திருக்கிறது.

தனித்துவம் மிக்க இத்தலம் வேதநெறி முறை தவறாது பரிபாலிக்கப்பட்டுச் சிவம் பெருக்கி, சீலம்காத்து, அறம் பெருக்கி, பக்தி பயிர் வளர்க்கும் பண்ணையாக வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க ஈழத்தின் வரலாற்றிலே துலங்கி வந்திருக்கிறது.

உள்ளத் தூய்மைக்கும், உணர்வுத் தூய்மைக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் தூண்டாமணி விளக்காகத், தீராத வினை தீர்க்கும் திவ்விய தலமாக முருக பக்தியென்ற தீர்த்த வாரிதியில் கோடானு கோடி உள்ளங்களை முழுகவைத்த முதுபெரும் தலமாக வளர்ந்து வந்திருக்கின்றது.

மூர்த்திதலதீர்த்தமும் இத்திருத்தலத்தில் நாளும் சங்கொலி, முழவொலி, கண்டாமணி ஒலி, நாயன ஒலி, வேதமந்திர ஒலி, அடியார் அரோகரா ஒலி, திருமுறை, திருப்புகழ் ஒலி ஆகிய பல்வேறு ஒலிகள் முழங்க பூசை ஆராதனைகள், அபிடேகங்கள் நிகழ்கின்றன. சுக்கிரவாரந்தோறும் விழா நடக்கின்றது. திங்கள்தோறும் கார்த்திகை விழா திகழ்கிறது. ஆண்டுதோறும் அணி விழாக்கள், லட்சார்ச்சனை, பிரமோத்சவம், கந்தசஷ்டி விழா ஆகியவை பக்திசிரத்தையோடு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

விழாக்காலங்களிலே மக்கள் உள்ளம் அமைதி பெற, அவர்களை ஆட்டிப்படைக்கும் சினம், காமம், வெகுளி, வெறுப்பு, பொறுமை ஆகிய தீய உணர்வுகள் நழுவிவிட, ஆணவம், அகங்காரம் ஆகிய அசுரசக்திகள் அகன்றுவிட அமைதியும், அன்புணர்வும், அழகுணர்வும் தழைவிடக்கூடிய வகையில் ஆராதனைகள் நிகழ்ச்சிகள் நிறைவேற்றப்படுகின்றன. மக்கள் உள்ளமெல்லாம் முருகபக்தியின் சக்தி ஊடுருவி இதயத்தை விசாலமாக்க, அவர்கள் நன்மக்களாக வாழவும், இன்ப வாழ்வுபெற்று உய்யவும், அறநெறியையும், தெய்வவழிபாட்டையும் அளிக்கின்ற சிவசண்முக ராஜதானியாக இத்திருத்தலம் விளங்குகிறது.

இன்று இத்தலம், விண் மறைக்கும் கோபுரமும், வியத்தகு மண்டபங்களும், கல்லிலே கனியவைத்துப் புராண இதிகாசக் கதை பேசும் கற்றூண்கள் நிறைந்த நிர்த்த மண்டபமும், முகோத்ரத் தேரோடுகூடிய பஞ்சரதங்கள், அரிய பெரிய வெள்ளித் துவஜஸ்தம்பம், மாபெரும் வசந்த மண்டபம், பெரிய சப்பரம். முழுதுமழகிய மூர்த்திகள், கைலாய பர்வதம், அணிபணிகள், அழகு வாகனங்கள் ஆகியவை நிறைந்த பேராலயமாகத் திகழ்கிறது.

கட்டிடச் சிறப்பு, அபிடேக ஆராதனைச் சிறப்பு, அணிவிழாச் சிறப்பு, பக்திச்சிறப்பு, அலங்காரச்சிறப்பு, ஆகிய பல்வேறு சிறப்புகள் நிறைந்த இத்திருத்தலம், வெங்கொடுபவங்கள் போக்கும் நன்மங்களப்பதியாக இன்று விளங்குகிறது.

அருளும் அழகும்

புதுமைக்குப் புதுமையாய், பழமைக்குப் பழமையாய், விளங்கும் மாவையம்பதியின் புகழ் நாயகனாக, அருளாட்சி புரியும் அழகு முருகன் மந்தாகினி தந்த வரோதயன் 'காங்கேயன்' என்ற திருநாமத்தோடு மூலவராக விளங்குகின்றான்.

இப்பெருமான் 'அடி போற்றி அல்லி முடி சூட்ட வல்ல அடியார்க்கு நல்ல பெருமானாக, அடியார் இதயத்தாமரையில் அரும்பும் மாரூப்பரிமளமாகக், குலிசள் மடக்கிளியும் குறவர் இளங்குயிலும், அகலாது என்றும் அயல் நிற்க, திருக்கை வேலழகிய பெருமானாக' அருளாடல் புரிகின்றான்.

பக்தித் திருமுகமாறுடன் பன்னிரு கைகளுடன், தித்திக்கும் திருவமுதமாய், தென்திசை நோக்கிக் காட்சி கொடுக்கும் சண்முகன் சிறந்த வரப்பிரசாதி இப்பெருமான். எங்கும் நிறைந்திருப்போர்கள் நேசசரவணனாக, சிந்தூரகற்பூர ஆறுமுக குகனைத் துதிப்போர் துயர் தீர்க்கும் தூயவனாகப், பதம் பரவும்

அடியார் பாவங்களையும் அருமருந்தாக ஆறெழுத்தின் அரும் பயனாக, காமேஷ மாவையிற் கந்த வேளாக அருள் பாலிக்கின்றான். அடியார்கள் எங்கேனும், யாதாகிப் பிறந்திடினும், அவர்களை இங்கே, இங்கே, என அழைத்து, தன் எழில் சரணத் தாமரைத் திருவடி நிற்பித்து, சாண் பரிய மெய்ஞ்ஞானக் கழல் காட்டி அடி ஞானத்தால் பொருளும் ஆன்மாவும் காட்டி, எங்கும் நீக்கமற நிற்கின்ற நிலை காட்டி, தன் அழகாலும், அருட் திறத்தாலும், அடியவர் உள்ளம் உருகவைத்து அவர் பிறவிப் பிணி கெட அருள் தரு சிவசண்முகனாக காலங் காலமாக விளங்கிவருகின்றான். மருள் அழித்து, உள்ளம் உருகவைத்துப் பிறவி நோயைப் பெயர்த்தெறியும் பேரருளாளன் இம் மாவைக் சண்முகன் என்பதை அவனை உன்னி உன்னி உணர்ந்து அனுபவித்த அடியவர் ஒருவர் அவனை

''தெய்வநீறை சந்நீதி, சேர்நின்று
கை நீட்டித் திருவருட் திறங்களுன்னி
தேயனையிபடி மகர் செங்கைக்கு எட்டும் தீர''

என்றல்லவா விழிக்கிறார்.

இச் சண்முகனுக்கு நடைபெறும் சண்முக அர்ச்சனைகளின் போதும், அவன்எழுந்தருளித் தேரேற நடனமாடி வரும் போதும், ஆடிப் பிரமோத்சவ ஐந்தாம் திருநாளன்றும், பரம ஞானமும், அழகும் நிரம்பிய பெருமாளாகக் காட்சி கொடுப்பது காண்பரிய எழிற் காட்சி.

''எழுதரிய அறுமுகமும், மணிஒதலும்
இட்டுச் சமைத்த செஞ்சுட்டிக் கலன்களும்
துங்கநீர் பன்னிரு விழி மலரும்
இலகு பதினிரு குழையும், ரத்னக் குதம்பையும்
பத்மக்கரங்களும், செம்பொன் நூலும்
மொழி புகழும் உடைமணியும் அரைவடமும்
அடியிணையும் முத்துச்சதங்கையும் சித்ரச்சிலம்பியும்
செங்கை வேலும்-முழுதுமழகிய குமரா''

என அருணை முனிவர் தீட்டியுள்ள சித்திரத்தை தான் நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

திருத்தல உற்சவ காலத்தில் எழுந்தருளும் முத்துக்குமாரனே எழிற்கோல வடிவினன். தெய்வமணம் மாறா இளமை அழியா வழகு ஆகியவை ஒருங்கே திரண்ட அழகனாகப், பேரழகனாக, உலாவரும் காட்சி உள்ளத்தை உருக்கும் காட்சி.

இவ்வழகிய மூர்த்தி இரு மாதர் புடை சூழ அணிமணிகளேந்தி, ராஜ கம்பீர நாடாளுனையகனாக பச்சை மயிலேறிப் பவனி வரும் போது, அதன் முத்து மணி முடியழகும், பொன்மேனிப் பொலிவழகும், மார்பிலணி மாலையழகும், செங்கை வடிவேலழகும், தனித் துவமிக்க காட்சியாக, நெஞ்சை விட்டு நீங்காத காட்சியாக, அழகுணர்ச்சியையும், இறையுணர்ச்சியையும், இன்ப உணர்ச்சியையும் உண்டாக்கும் அதிசய அபூர்வக் காட்சி என்றால் அது மிகையாகாது.

அடியார் உள்ளம்

மாவை முருகன் மேல் மறவாத சிந்தை அடியவர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடி கொண்டிருப்பவை இம்மாவையும் பதியும் அதில் வதியும் கோலக்குமரனுமாம். அவரவர் நிலைக்கு, அவரவர் பக்குவத்திற்கேற்ப அவர்கள் மேல் மாவை முருகன் அருள்மழை பொழிகின்றான் என்பதும் இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாயிருந்து அவர்களை ஆட் கொள்ளச் சித்தமாக என்பதும் இவ்வடியார்களின் அசையாத நம்பிக்கை தமக்கும் இந்த மாவை முருகனுக்கும் உள்ள உறவு மிகத் தொன்மையானது.

''கூடிக்குலவி மெத்தக் குகனோடு வாழ்ந்ததெல்லாம்
வேடிக்கையல்லவடி, வெகுநாளைத் தொந்தமடி''

என எண்ணி, எந்த வேளையும் மாவை வேளை எண்ணி எண்ணி மனங்குதூகலிப்பார்கள்.

பரங்குன்றின் பரம்சோதி, செந்தில்நகர் சேவகன், ஆவினன்குடி அரசன், ஏரகத்து ஏந்தல், குன்றுதோறாடும் குழகன், பழமுதிர் சோலைப் பாலன் ஆகிய பழையவடிவாகிய வேலவன், இத்திரு மேவுமொருமாவை ஆன்ம நாயகனைத் தென்கொண்ட அமரர் பதி திறை கொண்ட மாவை வேளாக, இங்கு அருளாட்சி செய்கின்றான் என்று எண்ணி அகங்குழைந்து ''உண்மைப் பொருளே, அழகின் உருவே, உயிர்க்கு உயிரான கருணைக்கடலே, காங்கேயா'' என்றெல்லாம் போற்றிப் போற்றி மனமகிழ்வார்கள்.

இதனாலன்றே இத்திருப்பதியும், இதில் வதியும் முருகப்பரமனும்

''உருகும் மடியார் இதயம் நெகிழ
உணர்வில் எழும் உள்ளொளியாக''

விளங்கி வருகின்றார்கள்.

மகாதேவ ஆசிரமமும் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளும்

— ப. கணேசபிள்ளை - ஜெயந்திநகர், கிளிநொச்சி —

அம்மை அப்பருக்கு அன்பு செய்ய அருட்குருவாய்
வந்து எமது
அம்மை இம்மை அல்லல் அகற்றி அருள் செய்திடுவர்
பொல்லாங்கனை தவிர்த்து பொன்னடிக் கீழ்ச் சேர்த்
திடுவர்
எல்லோரும் இன்புற்றிருக்க அருள் செய்திடுவன்.

இன்றைய உலகைத் தனி நோக்கிலும் பொது நோக்கிலும் எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் எங்கும் ஒரு குழப்பமான அமைதியற்ற சலனமான வாழ்வியலேயே காணமுடிகிறது. மக்களிடம் காமம், கோபம், கடும் பற்று, பேராசை, அகங்காரம், சோம்பேறித்தனம் என்ற கெட்ட பண்புகளில் ஏதாவதொன்றேனும் இருந்தே வருகிறது. இந்தப் பொய்யான சரீரத்தின் மீதுள்ள பற்றுதலே இத்தீய குணங்கட்கெல்லாம் அடிப்படை.

பண்டைய ஆச்சிரம முறையில் ஆதி கேஷத்திரமாய்த் திகழ்வது கந்தர் மடம் வேதாந்த மடமாகும். இங்கே உருவான பரம்பரையிலே ஒருவர்தான் மகாதேவசுவாமிகள். இவர்களிடம் கற்றுத்துறவு பூண்ட ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளுக்கு யோகர் சுவாமிகள் கொடுத்த அருட் கட்டளையின் அடிக்கல்லில் இருந்து கால்கோள் ஆன ஸ்தாபனமே மகாதேவ ஆச்சிரமம். உலகெலாம் சமயப் பணி செய்யும் பிரசார சாதனமான ஆத்மஜோதியிலே இப்படியொரு கட்டுரைவருவது சிவன் செயல் மட்டுமல்ல சைவ சமயிகளின் பாக்கியமும் கூட. மகாமேகவனம், தண்ட காரணியம், சித்திர கூடம், மஞ்ச வடி, சித்தாச்சிரமம் இவைகளைப் பற்றிப் படித்தோமானால் நேரிலே ஆஸ்ரமத்தின் நிதர்சனமாய்த் திகழ்வது மகாதேவ ஆஸ்ரமமே.

ஈழம் வாழ் சைவப்பெருங்குடி மக்களின் வாழ்வும், வனப்பும், பண்பும் பெரிதும் பேணப்பட வேண்டுமென உழைத்த உத்தம ஞானிகள் பலர், எமது தலைமுறையில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் அவர்களுள் ஒருவர். மேற்கத்திய நாகரீகத்தில் நிலைத்து, அந்நியர்க்கு அடிபணிவதிலும் பார்க்க பயிர்த் தொழிலே நாட்டின் உயிர்த் தொழிலாயமைய வேண்டுமென யோகர் சுவாமிகள் பெரிதும் விரும்பினார்கள்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகெங்கணும் பரப்புவதற்கு உறுதியான உள்ளமும் கலைஞானமும் பொருளாதாரக் கட்டுக்கோப்புமின்றியமையாதன. ஒரு வாய்க்கஞ்சிக்கேனும் பிறரிடம் கையேந்தாமல், சிறு தொழிலாயினுஞ் செய்து வாழ்வதே சிறந்த இலட்சிய வாழ்வாகும் என்பதைச் சாதனையில் கொண்டுவரப் பல தொண்டர்களை உருவாக்கினார் யோகர் சுவாமிகள். சுதந்தரமான வாழ்வின் அடிநாதமாகச் சொந்தத் தொழிலும் பொருளாதார வளர்ச்சியும் அமைய வேண்டுமென்ற கோட்பாட்டை நிலைநிறுத்திய அருட் குரவர் அவர்.

அந்த ஆத்ம ஞானியின் திருவுள்ளத்தில் அரும்பிய சிந்தனைகளுள் ஓர் உருவமாக மிளிர்வது மகாதேவ ஆச்சிரமம். கிளிநொச்சியில் யாழ். கண்டி வீதியிலுள்ள கரடிப்போக்கு சந்தியிலிருந்து உருத்திரபுரம் செல்லும் பெருஞ் சாலையில் இருக்கும் ஏழாம் வாய்க்காலில் உள்ள சைவ மகா வித்தியாலயத்திற்கு மேற்கே, தெற்கு நோக்கிச்செல்லும் ஒழுங்கையில் (கப்பிரோட்டில்) ஜெயந்தி நகரின் சிவ சின்னமாக விளங்குவது தான் மகாதேவ ஆச்சிரமம். இவ்வாச்சிரமம் பண்டைக்கால குருகுல வாசத்தையும், ஆன்மஞானிகளின் திவ்ய தரிசனத்தையும் அவர்களின் அருளுரைகளையும் நிதர்சனமாகக் கொண்டு மிளிர்கிறது. கட்டளையெதுவுமின்றி திருநெறிய தமிழை ஓதித், தெய்வீக நாட்டத்தையும், தவ வேட்டலையும் பரப்பும் ஒரு தவச்சாலையாக மிளிர்கிறது.

ஆச்சிரமத்தை நாடும் பல்வேறுபட்ட பக்தர்களுக்குப் பசிப்பிணிக்கு உணவும் மனப்பிணிக்குக் குரு தரிசனமும் பிறவிப் பிணிக்கு அருளுரைகளையும் வாரி வழங்கி ஆதரிக்கும் அறநிலையமே மகாதேவ ஆச்சிரமம். தவத்திரு வடிவேற் சுவாமிகள் ஒரு கர்ம வீரர். சோம்பலென்று நுடங்கிக்கிடவாமல் பணி செய்பவர். பரிபூரணனுக்கே அடிமைத்திறம் பூண்ட திருவருட் செல்வர். ஊர்நடுவே பழுத்த நல்மரம்தான் அவர்கள். ஆச்சிரமத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரிக்குமவர்களின் வாக்கில் சாத்திரங்களும் தோத்திரங்களும் சரளமாகத் துள்ளுநடை போடும்

பிரஸ்தானத்திரேயமென்ன, தத்துவக் கட்டளை, ஆத்மபுராணம், ஞான வசிட்டம் என்ன – ஏன் ஆதிசங்கரரின் அத்து விதத்துவ மென்ன, அவர்களுக்குத் தெரியாததொன்று மேயில்லை. சந்தேகம் தீர்த்து அருளுரை வழங்கும் திறமை அன்னருக்கே உரித்தான தனிப் பண்பாகும்.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலிருக்கும் வேதாந்த மடத்து ஞானசிரியர் மகாதேவ சுவாமிகளின் அருளாணைப்பில் வளர்ந்த ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் குருநாதனின் பெயரால் ஆச்சிரமத்தை அமைத்துத் தொண்டு செய்கின்றார்களென்றால் குருபக்தி எவ்வளவு மகத்தானது.

இணுவிலைத் தாயகமாகக் கொண்ட வடிவேல் சுவாமிகள் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தைப் பிறந்த மண்ணிலே அமைத்து தன் இளமைக் காலத்தைத் தொண்டிலே கழித்தார். அது மட்டுமன்றி பூமி வளம் காணும் சிறந்த கமக்காரராயும் வாழ்ந்தார். உடலுழைப்பிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தபடியாற்றான் காடு வெட்டி, நிலம் திருத்தி களனி கண்டு பாலைவனமாய் கிடந்த ஜெயந்தி நகரிலே சோலைவனத்தை அமைத்தார். வெறும் வரண்ட உள்ளங்களைக் கூட நல்ல விளைநிலங்களாக்கி சைவப்பயிரும், தமிழ்ப்பயிரும் வளர்த்தார். வளர்த்துக் கொண்டே இருக்கிறார். பத்து அம்சத் திட்டங்களைத் தீட்டி அவற்றைக் கட்டளைகளாகக் கொண்டு அருள் தொண்டாற்றி வருகிறார்கள். பாடசாலைகளை அமைத்தல், புதிய ஆலயங்களை ஸ்தாபித்தல், பழையனவற்றைப் புனருத்தாரணஞ் செய்தல், திருமுறை வகுப்பும், பண்ணிசைப் படிப்பும், சிவதீட்சை வைத்தல், சமய போதனையும் பிரசாரமும், கூட்டுவழிபாடும் பஜனையும், தியான வாழ்வும் தத்துவ நூல்களைக் கற்பித்தலும், உலகெங்குமுள்ள பெரியோர்களை அழைத்து அவர்களின் அருள்வாக்கை மக்கள் பெற வைத்தலும், அனைதைச் சிறார்களின் உயர்மட்டக் கல்விவரை வழிப்படுத்தலும் போன்ற பெரிய காரியங்களை யெல்லாம் நிறைவேற்றி கிறார்கள் சுவாமிகள். ஆச்சிரமத்திலே குரு பூர்ணிமா தினம், ஏகாதசி விழா, சிவராத்திரி விழா, குருநாதர் நினைவு விழா, ஆஸ்சிரம ஜெயந்தி விழா என்பன சிறப்பாகக் கொண்டாடப்பட்டு மகேஸ்வர பூசையும் தவறாமல் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு கிளிநொச்சியில் மட்டுமன்றி சுவாமிகள் மட்டக்களப்பு, நாவலப்பிட்டி, கொழும்பு போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று கதாகாலட்சேபமும் இலக்கியப்பேருரையும் சமயப்பிரச்சாரமும் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களுடைய அசையாத குருபக்தியே காரணம்.

இவ்வாச்சிரமம் 1957ம் ஆண்டு ஆவணியில் நிறுவப்பெற்றது. வெள்ளிவிழாவை எட்டிப் பிடிக்கும் காலகட்டத்தில் 75 ஆண்டைத் தாண்டிய வடிவேற் சுவாமிகளின் அயராத உழைப்பும், அசையாத நம்பிக்கையும் நம்மையெல்லாம் தட்டி யெழுப்புகின்றதன்றோ. இத்தனைக்கும் முளங்காலளவு மேலே நிற்கும் காவியுடை,தோளிலேயோர் துவர் ஆடைத் துண்டு, நீண்டு வளர்ந்த ஞானத்தாடி, நரையோடு பின்னிய குடும்பி, செக்கச்சிவந்த மேனியில் திருநீற்றிலொளி, வாய் நிறைந்த சிரிப்பு, தளர் நடையோடு கூடிய எடுப்பான தோற்றம்,அறிவுக்கோர் களஞ்சியமான முகக்களை, பாவம் நிறைந்த பார்வை இதுதான் சுவாமிகளின் தோற்றம். காட்சியிலே எளியவர், காரியத்திலே கெட்டி.

இவ்வாறு வண்ணத் தமிழும் சுவையும் போல், மகரயாழும் இசையும் போல, கன்னல் சுவையும் கருத்தும் போல ஆச்சிரமத்தோடு ஒன்றித்து நிற்கும் சுவாமிகளின் தொண்டும் வாழ்வும் இமயம் முதல் குமரி ஏன் அப்பாலே தெய்வந்துறை வரை ஒரு புதிய உலகத்தையே ஆக்கிக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் தபோதனர்க்கோர் எடுத்துக் காட்டாகும்.

★

சகல சமயங்களிலும் சமரசம் காணும்

உத்தம ஞானிகளே ஸூபியாக்கள்

— Dr. K. M. P. முகம்மது காசிம் —

வாழ்க்கைப் போராட்டத்தில் நிகழும் கணக்கற்ற பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டுமானால் பிரச்சனைகளை உருவாக்கிடும் ஸ்தானம் எதுவென விளங்கவேண்டும். அது நமது மனமேயாகும். மனம் என்பது என்ன? மனதை முற்றிலும் அழித்து விட முடியுமா என்ற கேள்வி சதா காலமும் ஆத்மீகப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சாதகர்களுக்கு ஒரு பெரும் புதிராக இருக்கிறது. மனம் விருப்பு வெறுப்புகளினால் உந்தப்பட்டு தடுமாறும் வேளையிலேதான் குழப்பங்களும், குமுறல்களும் கொந்தளிக்கின்றன. மனது எந்தவித விருப்பு வெறுப்பில்லாது செயலாற்றிடும் நிலையில் பந்தங்களில்லை, ஆசைகளின் பதிவுகளுமில்லை, பயமுமில்லை, மனது உணர்ச்சி வசப்பட்டு விட்டால் அமைதியை, ஆனந்தத்தை, அன்பை இழந்துவிடும். ஆகவே, மனது எல்லா நிலையிலும் எதிலும் பற்றுது அறிவோடு வாழ வழி வகுப்பதே சமயங்களின் நோக்கமாகும்.

வெகுளி, அச்சம், மனக்கிளர்ச்சி இவற்றின்றும் விடுபட்டு பயமற்று எந்நிலையிலும் கலக்கமற்று சாந்தமாக வாழ்ந்திடும் அருட்கலையை போதிப்பதே சமயங்களின் நோக்கமாகும். யாரிடத்திலும் ஆசையும் வெறுப்பு மின்றி பற்று அகற்றி, புலன்களை வென்று, அன்பும் கருணையுங் கொண்டு, துக்கத்தையும் சுகத்தையும் சமமாகக் கருதி செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்வதோடு ஒழுக்கமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வேண்டுமென சமயங்கள் வற்புறுத்துகின்றன. வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாது சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமானால் மனம் அசைவற்று இறை தியானத்திலே ஒன்று படும் பண்பினை அவசியம் பெற்றுக வேண்டும். மனிதன் உடம்பையும் மனதையும் தப்பாக தனது யதார்த்த நிலையாகக் கருதும் வேலையிலே தான் துக்கத்திற்கும் ஆசைகளுக்கும் அடிமையாகிறான்.

உடம்பின் பிடியிலிருந்தும் மனதின் கட்டுக்கோப்புகளிலிருந்தும் முற்றிலும் விடுதலை பெற்று மனங்கடந்த "தாத்" என்னும் அகண்ட உணர்வெளியில், தாக்கற்ற பரிபூரண, நிலையில் ஐக்கியமாகி நிறைவு பெறுவதே மனித ஜீவியத்தின் நோக்கமாகுமென ஆத்மீக அனுபூதி நிலையில் உச்சநிலை அடைந்த ஸூபியாக்கள் கருதுகிறார்கள். யாதெனில் இந்த நிர்மலமான நித்திய என்றும் எப்பொழுதும் அழியாத தெய்வீக நிலை யாவருக்கும் பொதுவானது.

அகண்ட உணர்வெளியில் சரணாகதி அடைவது என்பது சிந்தனையின் செயலன்று. மேலும் புத்திகூர்மையின் நுட்பத்தினால் பகுத்துணரும் திறமையுமன்று. அல்லது தத்துவக் கண்ணோட்டத்தில் எதையும் தர்க்க ரீதியாக ஆராய்ந்திடும் கலையுமன்று. இதற்கு காரணம் யாதெனில் மனிதனின் முயற்சிகள் யாவும் மனதினால் உருவகப்படுத்திய ஓர் எல்லைக் கோட்டில் – கண்டத்திரையில் தான் தங்கி நிற்கிறது. ஆகவே, மனம் எவ்வித சலனமுமின்றி நினைவொன்றும் நினையாமல் சகலவித எண்ணங்களுமற்ற சுற்பனை கடந்த மோன நிலையில் சார்ந்திருப்பதே சம்பூர்ண சரணாகதியாகும். இந்த முக்தி நிலையாகிய ஆத்மீக விடுதலையை மனிதன் நேரடியாக அனுபவிக்க வேண்டுமென்ற அன்பின் அழைப்பிலேதான் சகல சமயங்களும் சமரசமும், ஒருமைப்பாடும் காண்கிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

— மு. சிவராசா —

சித்தாந்த சைவம் மிக மிக தொன்மையானது. அதன் தொன்மைக்கும், அது பரந்து நிலவிய தன்மைக்கும் சிந்து வெளி நாகரீக ஆராய்ச்சி முடிவுகளும் உறுதியளிக்கின்றன. சைவ நெறியில் மக்கள் வாழ்வதற்கும் அதினின்று விலகியிருப்போருக்கு உய்வு நெறி காட்டுவதற்கும் உறுதுணையாய் இருப்பவை சைவ ஆலயங்கள், சைவப் பள்ளிக்கூடங்கள், சைவ ஆதீனங்கள் என்பன. ஆலயங்கள் பக்தியை வளர்க்கவும், பள்ளிக்கூடங்கள் அறிவை வளர்க்கவும், ஆதீனங்கள் பண்பை வளர்க்கவும் பெரிதும் உதவுவனவாம்.

முதலாவது ஆலயம் எங்கே, எப்போது அமைக்கப்பட்டதென்பதை அறுதியிட்டுக் கூற முடியாதாயினும், பல்லாயிர வருடங்களுக்கு முன்னரே அது இருந்தது என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளுவர். முதலாவது சைவப்பாடசாலை கல்லாலமர நிழலில் நான்கு மாணவரோடு ஆரம்பிக்கப்பட்டது. காலம் எதுவெனக் கணக்கிட முடியவில்லை. முதலாவது ஆதீனம் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் தொடங்கப்பெற்ற திருஞான சம்பந்தர் ஆதீனமாகும். இது மங்கையர்க்கரசியார் வேண்டுதலினால் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மதுரைக்கு எழுந்தருளி வந்து தங்கியிருந்ததும், சமணரால் தீ கொளுவப்பட்டதுமான மடத்தில் தொடங்கப் பெற்றது. ஆதீன பரம்பரையில் தற்போது பீடாதிபதியாக அருளாட்சி செய்பவர் 292 ஆவது குருமகா சந்நிதானம் ஆவர்.

மதுரை ஆதீனம் தோன்றிய பின், சைவத் துறை விளங்கும் பொருட்டு அருளாளர்களால் வேறும் பல ஆதீனங்கள் அவ்வப்போது தொடங்கப்பட்டன. இவற்றுள் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம், காஞ்புரம் மெய்கண்டார் ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் என்பன சில.

தமிழ்நாட்டில் பல்வேறு ஆதீனங்கள் தோன்றிப் பல காலமாகப் பணிபுரிந்து வருகின்றனவே யெனினும், தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணமலை ஆகிய சிவ ஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஈழ நாட்டில் ஓர் ஆதீனம் இல்லாமை பெருங்குறையாக இருந்தது. சைவத்துக்கும் தமிழுக்கும் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துச் சேவை செய்த நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே இக்குறையை வெளிப்படுத்தி மனம் மிக வருந்தினர்கள்.

ஈழத்துச் சைவ நன் மக்களின் தவப்பயனாக இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன் 1966ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தை ஸ்ரீமத் ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள் நிறுவினர்கள். இவர்கள் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் மகா சந்நிதானத்தைக் குருவாகப் பெற்று மந்திரோபதேசமும் காஷாயமும் வாங்கிக்கொண்டார்கள். தம்பிரான் ஸ்வாமிகள் 1977ம் வருடம் ஆவணி மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் நல்லை ஆதீனக் குருமுதல்வராக அபிஷேகம் செய்து ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் எனத் திருநாமம் கொண்டார்கள்.

சித்தாந்த வித்தகர் பிரமஸ்ரீ செந்திநாத ஐயர், இலக்கணப் பேரறிஞர் வித்துவான் கணேச ஐயர் ஆகியோரது பேரனாக பிரமஸ்ரீ செல்லையாக் குருக்கள் கனகாம்பாள் அம்மையார் ஆகியோருக்கு மகனாக அறுபத்து மூன்று ஆண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் பிறந்தவர் சிவசுப்பிரமணிய ஐயர். இவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையிலும், யாழ் இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்று தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் பயிலும் காலத்தில் அவரது நாட்டம் புகழ்பெற்ற சங்கர சுப்பையர் சுவாமிகளின் இன்னிசை விரிவுரைகளிலேயே சென்றது. இக்கலையில் அந்நாட்களில் தன்னிகரற்றும், விளங்கிய சுவாமிகள் சைவத்தையும், சைவத் திருமுறைகளையும் யாழ்ப்பாண மக்களின் நெஞ்சில் ஆழமாகப் பதித்துக்கொண்டிருந்

தார்கள். இவர் பிரசங்கங்கள் எங்கு நடந்தாலும் நிழல்போல் இவரைத் தொடர்ந்து சென்று அநுபவித்து வந்தான் சிறுவன் சிவசுப்பிரமணியன். அவரைப் போல் தானும் கதை செய்ய வேண்டும் என்ற வேணவா சிறுவனைப் பிடித்துக் கொண்டது. சிறுவனது ஆர்வத்தை அறிந்த சுவாமிகள், தமக்குப்பின் இக்கலையில் புகழ்பெற்று விளங்கக் கூடியவன் என அவர் உள்ளுணர்வு தெரிவித்தமையால் மணி ஐயருக்கு தமது சுருதி வாத்தியத்தையும் வழங்கி ஆசீர்வதித்தார்.

தனது பதினெட்டாவது வயதில் இன்னிசை விரிவுரை நடத்தத் தொடங்கிய சிவகப்பிரமணிய ஐயர் நாளடைவில் சுவாமிகளின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பத் தகுந்தவர்ஆனார் வண்ணை ஸ்ரீ சி. எஸ். எஸ். மணி ஐயர் என்ற பெயரில் புகழடைந்த இவர் நாடகம், நடனம், ஓவியம் ஆகிய துறைகளிலும் சிறந்த விற்பன்னராயிருந்தார். தமது முறைப்பெண்ணை யோகாம்பாள் என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்று முருகானந்த சர்மா என்பவரைப் புத்திரராகப் பெற்றார்.

மணி ஐயரின் கதாப்பிரசங்கங்கள் பிரபல்யமடையவே அவர் "மணி பாகவதர்" ஆனார். அவரது கதாகாலட்சேபங்கள் இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளிலும் மக்களை பெரிதும் கவருவதாயிற்று. கந்தபுராண பெரியபுராண, திருவிளையாடற் புராண பிரசங்கங்களும் இராமாயணம் பாரதம் போன்ற இதிகாசங்களின் தொடர் கதாப்பிரசங்கங்களும் பலப்பல முறைகள் செய்துள்ளார்கள். இராமாயணம் தொடர் பிரசங்கம் 25 முதல் 40 நாள்வரை நீடிக்கும். இதனை 40 தடவைக்கு மேல் செய்துள்ளார்கள். இவர்களது இன்னிசை விரிவுரைகளில் திருமுறைகள், திருப்புகழ், அநுபூதி, அலங்காரம், அபிராமி அந்தாதி, பிள்ளைத் தமிழ் ஆகியன எல்லாம் பொங்கி வழியும் தத்துவார்த்த விளக்கங்கள் நிறைந்திருக்கும். பக்திச்சுவை நிறைந்த இவரின் விரிவுரைகள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதின 291வது குருமகா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவுள்ளத்தில் ஒரு குறிப்பைத் தோற்றுவித்தது. அதன் பிரகாரம் 'மணிபாகவதர்' 1966ம் ஆண்டில் இல்லற வாழ்வைத் துறந்து சந்நிதானத்திடம் மந்திரோபதேசமும் காஷாயமும் பெற்று ஸ்ரீமத் ஸ்வாமிநாதத்தப்பிரான் சுவாமிகள் ஆனார். பதினைந்து ஆண்டுகளின் பின் பீடாதிபதியானார்கள்.

நல்லை ஆதீனம் பொருள்வளம் படைத்தது அன்று. ஆயின் அருள்வளம் நிரம்பவுடையது. பணம் இல்லையெனினும் அங்கு பண்பு நிலவுகிறது. ஆதீன சம்பிரதாயங்களைக் கட்டிக் காத்து வருவது. நல்லை ஆதீன முதல்வரைப் போன்று சமயப் பிராசாரத்துக்காக மன மொழி, மெய்களால் அரும்பாடுபட்ட ஆதீன கர்த்தர்கள் வெகு சிலரே இருந்திருக்கலாம். நல்லைக்குருமணி அருளாட்சி இயற்றிய காலத்துள் ஆதீனப்பணிகள் பெருகிக்கொண்டே வந்தன. ஆதீனத்தில் மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளைத் தவிர இலவச சமயதீட்சை, விசேட தீட்சை, உபநயனம், திருமணக் கிரியைகள், வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், சமயபாட வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள், யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் என்பனவும், நாயன்மார் குருபூசை, மாகேசுர பூசைகள், மாநாடுகள், விழாக்கள் யாத்திரிகர்களை உபசரித்தல் முதலியனவும் ஆதீனப் பணிகளுள் சிலவாம்.

தொடங்கப்பெற்ற ஆதீனம் தொடர்ந்து இயங்க வேண்டுமென்ற பெருவிருப்பு ஸ்வாமிகள் திருவுள்ளத்தில் மிக்கிருந்ததால் சிறியவர்களும் பெரியவர்களுமான பலரை ஆதீனத்தில் சேர்த்து உணவும், உறையுளும் வழங்கி அவர்களைச் சிவப்பணியில் ஈடுபடுத்த முயன்றார்கள். சிலர் அணுகினர்—பலர் அகன்றனர். சுவாமிகள் தெரிந்தெடுத்த சிறுவன் சுந்தரலிங்கத்தைத் தமதுஞான பரம்பரைக்கு உகந்தவன் எனக் கண்டார்கள். 7-4-1977 இல் இளைஞனுக்கு மந்திரோபதேசம் செய்து ஆதீன இளவரசாக்கி ஸ்ரீமத் சோமசுந்தரத் தப்பிரான் சுவாமிகள் ஆக்கினார்கள். தற்போது இருபத்தைந்து வயது நிரம்பிய இளவரசு சிறந்த பக்தர்; பண்பாளர்; அமைதியாகப் பேசுபவர்; பழக இனியவர்; பார்வைக்கு எளியவர்; அவர் சிவபூசை செய்வதைக் காண்போர் பரவசமடைவர்.

சரீர வளமும் சாரீர வளமும் பெற்றிருந்த குருமகா சந்நிதானம் சில காலமாக உடல்நலம் குன்றியிருந்தார்கள். பல நாட்களில் தினம் மூன்று நான்கு இன்னிசை விரிவுரைகள் செய்வதால் உடல் தளர்வதாயிற்று. இரத்த அழுத்தம் அதிகரித்திருப்பதால் விரிவுரைகளை மட்டுப்படுத்துமாறு வைத்தியர்கள் பலகாலும் இரந்து கேட்டார்கள்.

உலக இந்து மகாநாடு சிறப்புற
எமது நல்வாழ்த்துக்கள்!

★ சகலவித சில்லறைச் சாமான்கள் ★
பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

★
★ ★
★ ★
★

ஸ்ரீ ராஜலெட்சுமி ஸ்டோர்ஸ்

333, பிரதான வீதி,
திருக்கோணமலை.

Phone: 602

நல் வாழ்த்துக்கள்!

திருமலையில்
● சைவ உணவு தேடி வருவோருக்கு ●
சிறந்த சேவையாற்றும்
ஒரே ஸ்தாபனம்

மணிவிழா கபே

சைவ ஹோட்டல்
பிரதான வீதி — திருக்கோணமலை.

Phone: 602

வாழ்த்துகிறோம்!

சிறந்த மளிகைச் சாமான்களை
சகாயமான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம் — — —

ஸ்ரீ ராஜா ஸ்டோர்ஸ்

197, மத்திய வீதி,
திருக்கோணமலை.
☎ 598

நல் வாழ்த்துக்கள்!

உங்கள் தேவைகளுக்கான — — —

சகலவித மருந்துச் சாமான்களையும்

பெற்றுக்கொள்ள

சிறந்த - நம்பிக்கையான ஸ்தாபனம்

★
★
★

பரஞ்சோதி மருந்துச்சாலை

ஆங்கில - ஆயுர்வேத மருந்துகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
இரவு - பகல் தொடர்ந்து சேவையாற்றுகிறோம்.

★

PARANJOTHY MEDICAL STORES

192, & 194, EHAMBARAM ROAD — TRINCOMALEE.
Phone: 419

WITH BEST COMPLIMENTS FROM

YOGAM STORES

39, Central Road - Trincomalee.

Phone: 286

★

WITH BEST COMPLIMENTS FROM



MURUGANANDHA MEDICAL HALL

201, Sea Street,
Colombo - 11.

உலக இந்து மகாநாடு சிறப்புற எங்கள் நல் வாழ்த்துக்கள்!

எங்களிடம்

சிறந்த டேப் றெக்கோடர்கள்
ரேடியோக்கள்
ரேடியோ உதிரிப்பாகங்கள்
சைக்கிள், அதன் உதிரிப்பாகங்கள்
மின்சார உபகரணங்கள்
மீன்பிடி உபகரணங்கள்
மற்றும் சகல தேவைகட்கும் சிறந்த இடம்

வேல் அழகன் ஸ்டோர்ஸ்

184, ஏகாம்பரம் வீதி—திருக்கோணமலை.
தொலைபேசி: 662

சிவசக்திமயம்

வாழ்த்துகின்றோம்!

அழகான ரெடிமேட் ஆடைகள், பாதணிகள்
அலங்காரப் பொருட்கள், அன்பான உபசரிப்பு.
வருகைதர அழைக்கின்றோம்!

பரமேஸ்வரன்ஸ் Parameswarans

178, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை.

(SHOE PALACE & TEX)
178, Ehamparam Road
Trincomalee.

உ

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற்று
இன்புற எமது உள்ள முருகும் வாழ்த்துக்கள்!



நம்பிக்கைக்குப்! உத்தரவாதத்திற்கும்!!
தற்காலத்திற்கேற்ற நவீன மோஸ்தரில்
தங்க, வைர ஆபரணங்கள்
தெரிவு செய்ய ஒரே இடம்



எஸ். கே. எஸ். அன் சன்ஸ்

10, மூன்றும் குறுக்குத் தெரு
திருக்கோணமலை.

S. K. S. & SONS

JEWELLERS
10, 3RD CROSS STREET
TRINCOMALEE.

Phone: 219

WITH BEST COMPLIMENTS FROM

BAVANI STORES

பவானி ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: K. R. சின்னத்துரை

6, 3rd Cross Street,
Trincomalee.

6, 3-ம் குறுக்குத் தெரு
திருக்கோணமலை.

Phone: 359

WITH BEST COMPLIMENTS FROM

SELVASANNITHI STORES

Proprietor: M. VELUPPILLAI

★

DEALERS IN:

Elephant Brand Soft Drinks.

★

No. 11 & 18, Third Cross Street,
Trincomalee.

T'phone:
Shop: 563
Residence: 585

With best compliments from





RANJANA TRADERS

213, Deans Road
COLOMBO - 10.

T'phone: 596999

With Best Compliments of



Sri Lanka Block Makers

ஸ்ரீ லங்கா புளொக் மேக்கர்ஸ்

181, Messenger Street,
COLOMBO - 12.

T'phone: 34775

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்!



SRI THIRUPPATHY AGENCY

General Merchants, Commission Agents & Transporters.

130, Fourth Cross Street,
COLOMBO - 11.

T'phone: 29676

With best compliments of

T. S. P. & COY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS.
FOR LOCAL PRODUCES

108, Fourth Cross Street,

COLOMBO - 11.

T'grams: 'TEEYESPEE'

T'phone: 21741, 26960

With best compliments of

G. VELAYUDAN

HOTEL KAVITHA

BASIN BRIDGE ROAD,
MADRAS 600 001
TAMIL NADU

Telephone: 36048

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற

வாழ்த்துகிறேம்!



காந்திமதி கோல்ட் ஹவுஸ்

68, செட்டியார் தெரு
கொழும்பு-11.

தொலைபேசி. 24541

★

கிளை:-

42, கிட்டங்கி
கொழும்பு வீதி, காலி.

தொலைபேசி: 2568

With the Best Compliments of

WOODLANDS COMPANY

Importers
Exporters
and
Commission Agents.

Dealer in
all Kinds of Local Produce.

192, 4th Cross Street,
Colombo - 11

Phone: 27451

With best compliments of

NATHAN & COMPANY

AGENTS, IMPORTERS, EXPORTERS
MANUFACTURER'S REPRESENTATIVES

71, Fourth Cross Street,
COLOMBO-11.
SRI LANKA.

செல்வச் சந்நிதித் திருத்தலமும் ஆனந்தா ஆச்சிரம திருமடமும்

— மீளா அடிமை—ஆனந்தாச்சிரமம், செல்வச்சந்நிதி

''மூர்த்தி தலம்தீர்த்தம் முறையாய்த்தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''
—என்பது தாயுமானவர் திருவாக்கு

அதற்கு இலக்கியமாக அமைந்தது தொண்டை மானுற்றில் விளங்கும் செல்லச்சந்நிதி முருகன்கோவிலும் திருமடங்களும்.

'கோவிலும் மடமும் கடலொடு சூழ்ந்த'

திருக்கோவில் அது. தொண்டைமானுறு வலம்வரும் இலங்கையின் வடபாலமைந்த, யாழ்ப்பாணத்தின் வடகோடியில் அமைந்த குமரகோட்டம் அது. இலங்கையின் தென்பாலமைந்த தந்திர மந்திர யந்திர மகிமை கொண்ட கதிர்காமத்தின் முருகனது கோலமே தானுக வடகோடியில் அமைந்தது செல்வச் சந்நிதி. அங்கும் ஒரு மாணிக்கப் பிள்ளையார், இங்கும் ஒரு மாணிக்கப் பிள்ளையார். அங்கு ஒரு மாணிக்க கங்கை. இங்கு தொண்டைமானுறு. அங்கு தலவிருட்சம் அரசு, இங்கு பூவரசு. அங்கு ஏழுமலை உச்சியில் திகழும் வெற்றி வேல். இங்கும் மூலஸ்தானத்துள் திகழும் சக்திவேல். அங்கு தெய்வயானை அம்மன் மடம், இராமகிருஷ்ண மடம். வள்ளியம்மன் மடம், இங்கும் ஆனந்தாச்சிரமம், வள்ளியம்மன் மடம், இராஜ இராஜேஸ்வரி மடம்.

இவ்வாறு மூர்த்தி மகிமை, தலமகிமை, தீர்த்தமகிமை கொண்டதும் கதிர்காமத் தலத்தைக் கண்ணுடியில் நோக்குவது போல அமைந்ததும் ஆன செல்வச் சந்நிதித் தலத்துக்கும் கந்தபுராணக் கலாச்சாரத் தொடர்பு பல.

திருச்செந்தூரில் இருந்து தென்திசை நோக்கி சூரசங்காரம் செய்ய எழுந்த முருகக் கடவுளுக்கு, ஏமகூடம் அமைத்து வீரவாகு தேவராதி அரிபிரமேந்திராதிகள் வழிபட்ட தலம் இச்செல்வச் சந்நிதி என்பது ஐதிகம்.

''அந்தமில் அவுணர்தங்கள் அடல்கெட உதித்த செவ்வேள்
செந்திலம் பதியினின்று தென்பதி ஏமகூடம்
வந்திடும் போதில் வீரவாகு மால் வானவீரர்
சந்தி கண்டித் தலத்தே சரவணற் பூசை செய்தார்''
என்பது செல்வச்சந்நிதி தலபுராணம்-செய்யுள்-7

வீரவாகு தேவராதியோர் வழிபட்ட பெருமை கொண்ட செல்வச் சந்நிதியில் என்றும் எழுந்தருளி அடியன்பர்க்கு அருளுமாறு வரம் கொண்டபடி அற்புதம் நிறைந்த பதி இச் செல்வச் சந்நிதி. ஏமகூடமான கதிர்காமத்திலிருந்து சூரசங்காரம் செய்தமையும், வீரமாமகேந்திரத்தையும், சூரனையும் அழித்து வடதிசை சிங்கனது அசுரநகரை அழித்தற்குப் பாடிவீடு கொண்ட பதி இச்செல்வச் சந்நிதி யென்பது வரலாறு.

இத் தெய்வப் பழம்பதியான செல்வச் சந்நிதியில் வாழ்ந்த பெரியவர் 'மருதர் கதிர்காமர்' என்பவர். ஒருநாள் தொண்டைமானுற்றின் ஓரமாக வந்துகொண்டிருந்த வேளை அனுதை போலக் கங்கையின் கிழக்கு கரையில் நின்ற கோலங்காட்டி ''இங்கே வா; எங்கும் நீ கேட்க முடியாத கதை ஒன்று சொல்வேன் கேட்குதி'' எனக்கூறி அழைத்து, ''செல்வ புஷ்பகரணி'' என்ற ஆற்றிலேரம் உள்ள செல்வச்சந்நிதியின் வரலாறும், மகிமையும், பெருமையும் கூறி உளங்கனிய வைத்தார். அதிதீவிர பக்குவநிலை கொண்ட கதிர்காமர் நிலை நோக்கி, அரிசி காய்கறிகளை நல்கி, அமுது சமைப்பித்து, கலமாக ஆலமிலைகளை வைத்துப் படைக்கச் செய்து தானும் உடனிருந்து திருவமுது செய்தருளி, இறுதியில் வள்ளி தேவகுஞ்சரி சமேதரரான மணவாளக் கோலம் காட்டி மறைந்தருளினர்.

தானே வந்து தலையளித்து ஆட்கொண்டருளிய, குமரக்கடவுளே கன்றையகன்ற புனிற்றுப்போலக் கதறி அழுது ''ஓம் முருகா'' என அழைத்து நைந்துருகினர் கதிர்காமர்.

''அப்பனே முருகா! திணைப்புனம் சென்றுயோ? அல்லது தமிழின்பத்து மயங்கி மாமதுரை சென்றுயோ? அல்லது கயிலைக்கு அப்பனிடம் சென்றுயோ? வாரும்; என் கண்களிப்ப வந்தருள்வாய்;'' என வாழ்த்தினர். உடனே நீலமயிலில் வேலேந்திச் செம்பவள மேனி தோன்றக் காட்சிதந்து அன்பு மொழி கூறி 'என்னை ஏத்தி இங்கே இருக்க' என்றார். கதிர்காமர் அழகிய முருகன் இரு சரணங்களையும் பற்றி சிறியேனைப் பிரியாதிங்கே இருக்க வேண்டுமென விண்ணப்பித்தார். அதற்கிசைந்து 'எனது பாதங்களை மலரிட்டு அருச்சித்திருக்குதி என்றும், சத்தியன் முத்தியின்பம் பெறுகவென்றும்' ஆசீர்வதித்தார்

உருகிய அன்பர் 'ஐயனே நின்னை அர்ச்சிக்கும் மந்திர பூசை அறியேன்! எவ்வாறு பூசிப்பேன்? எனக்கு உணர்த்தி அருளவேண்டும் என்றார்.

அதற்கு முருகன் 'கதிர்காமத் தலத்தில் வேடுவர் மரபாக வாய்கட்டி உண்மையன்பின் பூசை செய்தருளும் வகையில் புரிகுதி' என்றார். அப்போது கதிர்காமர் 'ஐயனே! கதிரமலை சென்றறியேன்; கருதும் மௌன பூசை எவ்வாறு செய்ய வல்லேன்?' என்றதும் அன்பு ததும்பத் தன் பன்னிரண்டு கரங்களாலும் கதிர்காமர் இரு கரங்களையும் பற்றி முன்னைப் பொழுதும் காணுத கதிரமலையில் ஏழுமலையான் வடிவேலும் ஆடும் மயிலும் அடியார் கூட்டமும் பக்திப் பூசை பண்ணும் மௌன பூசை முறைகளையும் திரையினுள் மறைந்த இயந்திர இரகசியமும் ஆகிய யாவற்றையும் கணத்தினுள்ளே கண்டு தன்வயமிழந்து பரவசராக அருளினர்.

அந்நிலையில், முருகப் பெருமான் வேல் ஒன்றினைக் கையிற் கொடுத்து 'இதனை, நீர் இருக்கும் செல்வச் சந்நிதியில் பூவரசின் நிழலிலே தாபித்து வழிபட்டு வருகுதி' என்றும் 'இத்தலத்தின் பெயர் செல்வச் சந்நிதி என்றும் வழங்கக் கடவதாக' எனவும் திருவாய் மலர்ந்தருளினர். மேலும், வள்ளி தெய்வானை சமேதராகத் தொண்டைமானாற்றூரம் அடைந்து வீற்றிருந்தருளினர்.

கோயில் கொண்ட முருகனை வாய்கட்டிக் கதிர்காமர் வழிபாடு செய்ய முருகன் மகிழ்ந்து உறைவார். அப்பரவை ஆற்றூரம் முருகன் களிநடனம் புரிந்து காட்சி தருவான். மேலும் முன்னவனுக கணேச மூர்த்தியோடு செல்வபுஷ்கரணியில் நீந்தி விளையாடுவான். 'இத்தலத்தைத் தரிசிப்போருக்கு நற்சிவகதி உண்டு. இத்தலத்தில் ஒரு தருமம் செய்தவற்கு பொன்னும், மணியும், போகமும், மறுமையில் மன்னு சுவர்க்க மாதி வாழ்வுமுண்டு. தர்மங்களில் மேலான தர்மம் அழிபசிதீர்த்தல் – அன்னதானமாகும்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி" என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க இத்தலத்தில் அன்னதான புண்ணியம் செய்தோர் அடையும் பலன் அளப்பரியது.

"உத்தமமே பசிதீர்க்கும் உண்டித்தானம்
உத்தமமே காதலரொத்துதவும் தானம்
உத்தமமே வருந்தாகந் தீர்க்குந் தானம்
உத்தமமே அடியாரைப் பேணும் தானம்"
என்றும் உரைக்கக் கேட்கின்ற மெய்யன்பர்க்கு மேலும் சொல்கிறார்—

"எனக்கினியது அன்பு மலர் மாலையாகும்
எனக்கினியது உண்மை வளர் இதயமாகும்
எனக்கினியது தான தவம் இயற்றும் சாலை
எனக்கினியது தொண்டர் படு மிடர்களை தலே"
என்றும் கூறி

"ஆறெழுத்துப் பசிநோய்க்கு மருந்துமாகும்
ஆறெழுத்துப் பவநோய்க்கு மருந்துமாகும்"
என்றும் "சரவணபவ" மந்திர மகிமை உணர்த்தி அருளினர். உபதேசம் பெற்ற மெய்யன்பர் கதிர்காமர் அன்றுமுதல் அப்பூவரச மரத்தின் கீழ் அமர்ந்து முருகனுக்குப் பூசனை புரிந்து வருவாராயினர்.

ஒரு முறை செலவுக்குப் பணமில்லையெனக் கதிர்காமர் வருந்தும் போது முருகப்பிரான் நிலத்து வீழ்ந்த சருகுகளை எடுத்துப் பரீட்சித்த மாத்திரத்தில் பணக்கட்டுகளாகமாறிடக்கண்டுபரவசமானார். தனக்கு உகந்தது தேனும் தினைமாவும் என்றும், கதிரமலை சென்று மீண்டால், களைப்புத் தீர்க்கப் பயிற்றந் துவையலும் தண்ணிள நீரும் தருக எனவும் பெற்றுண்பார். இவ்வாறு கண்கண்ட தெய்வமாகத் திருவிளையாடல் புரிந்த முருகன் ஒருநாள் கொடுத்த வேலை மறையச்செய்தருளினர்.

கண்ணிழந்தவன் போலக் கதிர்காமர் அடைந்த துயருக்கோர் அளவில்லை, வருந்தும் அடியானுக்குக் காட்சி கொடுத்து "இந்த ஒரு வேல் போனால் இன்னும் பல வேல் வர இருக்கிறது" என்றார். அம்மட்டில் பல வேல் பிரதிஷ்டைகள் தோன்றக் கண்டு திருவிளையாடல் புரியும் முருகையன் அருளில் ஒடுங்கி அவன் பாதபூசை புரிந்துருகுவார்.

ஆடிமாதத்தில் ஒரு வள்ளிக்கொடி முளைக்கக்கண்டு அன்றே கொடியேற்ற நாளாகக் கொண்டு மகோற்சவ விழா எடுத்து ஆவணிப் பூரணையில் செல்வபுஷ்கரணியில் தீர்த்த உற்சவம் கண்டு பக்த கோடிகள் காவடி கரகம் எடுத்து முருகனுக்குக்காணிக்கையாக்கி அருட்பேறடைந்து வருகிறார்கள்.

கதிர்காமத்து ஏழுமலை ஐயன் தீர்த்தம் முடிந்து, நல்லூர்த் திருவிழா பூர்த்தியான ஆவணி அமாவாசைத் தீர்த்தத்தையடுத்து, செல்வச் சந்நிதி மகோற்சவம் நிகழும் மரபு பெருவழக்காக நிகழ்ந்து வருகிறது.

தீர்த்த விசேடம், தல விசேடமுள்ள இத்தலத்தில் திருநீறு தரிப்போர்க்கு நோய் நீக்கமுண்டாகும். தீர்த்தம், திருநீறு பிரசாதம், நூல்கட்டல் மகத்துவத்தால் வினை நீக்கப், நோய் நீக்கம் நினைத்த காரியம் முதலாய் சித்தியுண்டாகும் கண்டாமணி ஓசை கேட்டதும் பேய் பிடித்தவர்கள் அலறியும்ஆடியும், பாடியும் உருளுவார். திபாராதனை கண்டதும்பித்துச் சேட்டையிழந்து அலறிக்கொண்டு பேய்கள் ஓட்டம் பிடிக்கும்.

திருமுறை பேசும் தெய்வத் திருக்கோலங்கள்

திருமதி. பொன். கிருஷ்ணபிள்ளை

திருக்கோயில் இல்லாத ஊர் திருவில் ஊர் "என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. திரு என்பது செல்வமும், சிறப்பும், மேன்மை சீர் என்றெல்லாம் இருந்தாலும், ஒரு ஊருக்குச் சிறப்புத் தருவது செல்வம் எனப்படுவது திருக்கோயிலாகும். செல்வாய செல்வம் தரும் செல்வன் இறைவனேயாகும். அவன் கழல் ஏத்தும் செல்வர், பெருஞ் செல்வர்களே." கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா அடியவர்கள், தலவிசேஷங்களை அறிந்தவர்கள். அவர்களுக்கு இறைவன் "இடபாரூடராக"க் காட்சி அளித்தார் என்பதை திருமுறைகள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

மக்களாகிய நாம் ஆலயங்களுக்குச் சென்று, அங்குள்ள தெய்வத் திருக்கோலங்களை வணங்குகிறோம். அத்திருக்கோலங்களை அறிந்தும், அறியாமலும், அறிய முடியாமலும், அறிய முயலாமலும், சென்ம சென்மாந்திரங்களாக, வணங்குகிறோம். வாழுகிறோம். இறைவனது திருக்கோலங்கள் பலதரப்பட்டவை என்பதாக, பெரியோர் கூறுகிறார்கள்.

ஞானக் குழந்தையோ எடுத்த எடுப்பிலே, அம்மையே அப்பா என்று அழுதபோது, இறைவன் இடபாரூடராகக் காட்சி அளித்தார். முப்புரங்களை எரி செய்த காலத்தில், விஷ்ணு இடபமாகி, எம்பிரானை தாங்கினார். அந்தமால் விடைமேல் ஆரோகணித்த ரூபம், இடபாரூடமூர்த்த மென்பதை திருவாசகத்தில் காணலாம்.

"கடகரியும் பரிமாவும் தேரும் உகந்தேறுதே
இடப முகந்தேறிய வாறெனக் கறிய வீயம்பேடி
தடமதில் களைவை மூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமாய்ந் தாங்கனை திருமால் காண்சாழலோ"

என்பதாகும்.

இனி சுந்தரவேளுடன் கூடிக் காட்சியளிக்கும் போது, அருள் வெள்ளம் பொங்கி வழியும். "ஸோமாஸ்கந்த மூர்த்தமான அநட்கோலத்துடன், ஆன்மாக்களுக்குக் காட்சியளித்தார். சிவத்தினின்றும் வேறுபடாதது சக்தி. சக்தியினின்றும் வேறுபடாதவன் முருகன். இம் மூவரும், ஒன்றுபட்டு திகழும் கோலமே ஸோமாஸ்கந்த ரூபம். திருமால் வழி இந்திரனுக்குக் கிடைத்த மூர்த்தத்தை முசுகுந்தச் சக்கரவர்த்தி பூமியில் கொண்டுவந்து ஸ்தாபித்தான். இதைக் காஞ்சி புராணத்தில் வரும் பாடலொன்றில் அறியலாம்.

"அடலிற் கொளிக்கும் படையாளி யண்ணன், -
முதலோர் ஏத்தெடுப்ப
தடவுஞ் சியப்பிடர்த்தலையிற், கவினு மணிப்பூந்த-
விசும்பர்க்
கடவுட் பிராட்டியுடங் கிருப்பக், கதிர், வேற்காளை -
நள்ளிருப்ப
நடலைப்பிறவி மருந்தாகி, வைகு நாதன் திருவுருவம்"

என்று பாடப்பட்டுள்ளது.

பரம்பொருளான இறைவன் தட்சிணமூர்த்தி வடிவத்தில், ஆலின்கீழ் அமர்ந்து மௌனமாகச்சின் முத்திரையைக் காட்டி, சனகர் முதலான முனிவர்களுக்கு உபதேசம் செய்கின்ற தன்மை "எல்லாம் தன் மயம்" என்ற பேருண்மையைத் தென்முக மூர்த்தி போதிக்கும் அற்புதத்தை, வியந்தே "தெட்சிணமூர்த்தி" தோத்திரம் என்ற நூலில் சங்கரர் போற்றிப் பாடுகிறார்.

விஞ்ஞானிகள் திசையறி கருவியினாலே அந்தந்தத் திசைகளைக் கவனித்து வைத்திருக்கிறார்கள். எமது சைவ சமயமோ கோயில்களைக் கொண்டே திசைகளை அறியக்கூடியதாக உள்ளது. கருவறையின் தென்புறச் சுவரின், வெளிப்புறத்தே தெற்கு நோக்கிக்கல்லாலின் கீழ்த் தட்சிணமூர்த்தி அமர்ந்திருக்கிறார். மூர்த்தியின் சந்நிதானத்தைக்கொண்டே எந்த இடத்திலும் திசைகளைத் தீர்மானிக்க முடிகிறது. நாரதர், தும்புருவர், சுகர் முதலானோருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்தி, அதனை வாசித்துக்காட்டியவர் வீணைதட்சிணமூர்த்தி ஆவார். இதனை மணிவாசகரும் "வெண்காடதனில் குருந்தின் கீழ் அன்றிருந்த கொள்கையும்" எனக்குறிப்பிடுகிறார்.

சுந்தரர், சிவபெருமானின் நீலகண்டமூர்த்தித் திருக்கோலத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், தேவுக்களுக்காக, நஞ்சை மிடற்றில் அடக்கிய தேவன், நமது பிறவிநோய்க்கு மருந்தாக அயன், அரி, அரன் என மூவராகவும், சக்தியும் சிவமுமென்று இருவராய், இவ்வாறு ஒருவரே ஐவரான செஞ்சடைக் கடவுளை, நெஞ்சில் நினைத்தால் வஞ்சம் ஒழியும். அவன் பூங்கழலைப் பற்றுங்கள். புல்லிக்காட்டிப் பசுவை அழைப்பதுபோல், நீறணிந்து, வெள்ளையேற்றிலமர்ந்த நீலகண்டப்பெருமானைத் துணையாகக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தும் பாடல் இதோ!

"தோற்றமுண்டேல் மரணமுண்டு, துயரமனவாழ்க்கை
மாற்றமுண்டேல் வஞ்சமுண்டு, நெஞ்ச மனத்தீரே
நீற்றர் ஏற்றர் நீலகண்டர், நிறைபுனல் நீள் சடைமேல்
ஏற்றர் கோயில் எதிர்கொள்பாடி யென்பதடைவோமே"

என்று நீலகண்டர் திருக்கோலத்தையும், நமக்கு உய்யும் வழியையும் கூறி வீர முழக்கம் செய்கிறார்.

கோயில் என்றால் சிதம்பரத்தையே குறிக்கிறது. பஞ்ச பூதஸ்தலங்களில் ஒன்றாயும் அமைந்துள்ளது. அங்கே நடனமாடுகிறார் நடராஜப் பெருமான். நாம் சுயநலத்துடன் ஆடுகிறோம். இறைவன் உலகை இயக்குவதற்கு ஆடுகிறான். மன்றாடியை மன்றாடினால் அருள் பெறலாம். அவனைப் பாடாதபனுவலோர்களே இல்லை எனலாம். பிரணவமே திருவாசியாகவும் ஐந்தெழுத்தே திருவுருவாகவும் பராசக்தியே சிற்சபையாகவும் கொண்டு ஆடுகிறார். கூத்தப்பெருமான் ஆடும் திருநடனத்தைப் பட்டினத்து அடிகள் பவ்வியமாகப் பாடுகிறார்:

'அடியொன்று பாதலமேழிற்கு மப்புறப்பட்டதிப்பான்"
முடியொன்றில் அண்டங்களெல்லாங் கடந்து
முற்றும் வெள்ளைப்
பொடியொன்று தோளெட்டுந் திக்கின்
புறத்தனபூங் கரும்பின்
செடியொன்று தில்லைச் சிற்றம்பலத்தான்றன்
திருநடமே" என்கிறார்

இறைவன் அட்டமூர்த்தியாக, அங்கிங்கெனாத படி எங்கும் நிறைந்திருக்கிறான்; இதனைத் தாண்டக வேந்தன் நிலம், நீர், தீ, காற்று ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா இவைகளை அதிட்டிக்கும் சக்திகள் சிவபிரானது திருவடிவங்களாதலின் அட்டமூர்த்தமாகிறார் எனக் கூறுகிறார்.

மகான் ஆதிசங்கரர் நான் 'பிரம்மம்' என்கிறார். கடவுள் நானே என்கிறான் இரணியன். இருவர் வாக்கும் இரு துருவங்களே. சுருங்கக் கூறின், இரணியன் தன்னைத் தவிர வேறு தெய்வமே இல்லை என்கிறான். சங்கரரோ கடவுளைத்தவிர வேறு பொருளொன்று உலகில் இல்லை என்கிறார். பரவஸ்துவைத் தவிர வேறொன்றில்லை என்பதை 'ஈசனே நீ யல்லது இல்லை இடிகு மன்னும் என்பதும் பேசினேன் ஓர் பேதையேன்' என்று குறிப்பிடுகிறார் மணிவாசகப்பெருந்தகை.

எம்பிரான் என்று அழைத்தாலும், எல்லார்க்கும் தான் ஈசன் என்றாலும், தாம் தாம் கண்ட அநுபூதியை மகான்கள் சொல்லியும் எழுதியும் வைத்தார்கள்; அந்த அடிச்சுவடு காலம் கடந்தும் நமக்கு வழி காட்டுகிறது; நம்மாழ்வாரும்,

"வணங்கும் துறைகள் பலபலவாக்கி மநிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி அவை அவை தோறு
அணங்கும் பலபல ஆக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்
யாவையும் யாவையும் தானுய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலம் புலனுக்கும் சொலப்படான்
உணர்வின் மூர்த்தி" என்கிறார்.

சமயங்கள் வேறுயிருப்பினும், சேரும் இடம் ஒன்றேதான். வேறு வேறு யாக்கையுடன் திரியும் உயிரும் சேரும் இடம் ஒன்று. பல நாமங்கொண்ட ஆறுகளும், மகா சமுத்திரத்தில் ஒன்றாய் கலந்து விடுகின்றன. 'அங்கோலம்' என்னும் மரத்தின் வித்து தோன்றி, உதிரும் வேளையில் வேறு எங்கும் செல்லாது உடனே அம்மரத்தில் ஒட்டிக்கொள்ளும். இதே போன்று யாவும் வேறு வேறு பேதங்களாக இருப்பினும், கடைசியில் இறைவனின் அருட்பெருங் கருணைக் கடலில் ஒன்றுகலந்துவிடுவதையே திருமுறைகள் பேசுகின்றன. இதனால் நம் முன்னோர் தம்முடன் ஒன்றுகி நிற்கும் இறைவனின் திருக்கோலத்தின் வண்ணமும் வடிவும் கண்டு இறைவனேடிசைந்த வாழ்வை மேற்கொண்டனர். இறைவனின் திருநாமத்திற்கும், திருவடிவத்திற்கும் திருக்கோயில்களுக்கும் எல்லையில்லை.

இறைவனும் உயிர்களுக்கு அருள்பாலிக்கும் மனிதனேடு மனிதனாய்க் கரந்துறைகிறான். அந்த மெய்க் கருணையே சக்தியாகும்; சிவபெருமான் ஒரு மாறுதலும் அமையாமல் நிற்பது போல, அவருடைய சக்தியும் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு மாறுதல் அடையாமல் நிற்கின்றது. இந்தச் சக்தியும் உமையாகவும் இலக்குமியாகவும் சரஸ்வதியாகவும் நின்று நடத்துகிறாள். இப்படியாகவே மூன்று மூர்த்திகள் (பிரம்மா-விஷ்ணு-சிவன்) மூன்று சக்திகள், மூன்று குணங்கள், மூன்று நிலைகள் எல்லாம் மூன்றாக இருக்கின்றன. மூன்றுக்கும் அப்பாற்பட்டதே துரீயம்.

சைவசமய தத்துவங்களைத் தருகின்ற மெய்கண்ட சாஸ்திரங்கள் கூறும் ஆன்மாக்களின் பதியான இறைவன் திருமேனித்திறங்களைக்காண்போம். சிவபெருமானுடைய திருமேனிக்கு 'லிங்கம்' என்று பெயர். இதன் பொருள் ஆன்மாக்களும், உலகங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்குமான இடமாகும்; எனவே தான் தெய்வத் திருக்கோலங்களை 'அருவம்-உருவம்-அருவுருவம்' என மூன்று நிலையிற் கண்டனர். எனவே சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு தாங்கிய தெய்வத்திருக்கோலங்களை அருவம்-உருவம்-அருவுருவமென மூவகையாக விளக்கினார்கள்.

இன்னும் பிறப்பில்லாதவன் 'பல பிறப்புக்களை எடுத்தான்' என்பது புதிராக இருக்கிறதானாலும், எம்பெருமானின் லீலைகளும் புதிர்தானே!

இந்து சமயத்தின் சிறப்பு

ஸ்ரீ வித்யா ஞானபாஸ்கரா "நஜன்"—சென்னை

"நதிகள் பல இடங்களில் உற்பத்தியாகி பெருகி ஓடினாலும் எல்லாம் கடலை கடப்பது போல மதங்கள் பலவாயினும் அவைகளின் குறிக்கோள் இறைவனையடைதலே."

மதம் என்றால் என்ன?

நாமே ஏற்படுத்திக்கொள்ளாமல் சில பெரியோர்கள் தீவிரமாக ஆலோசித்து அருளுடன் சில கட்டுப்பாடுகளையும் பழக்கங்களையும் ஏற்படுத்தி இருப்பதுதான் மதம். மதத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழ்க்கை நடத்தினால் வாழ்வு உன்னதமாகத் திகழ்கிறது.

மதம் என்பது தெய்வ சம்பந்தத்தைப் போதிக்காமல் இருக்காது. நம் புலன்களுக்குத் தெரியாததை அறியமுடியாததை அனுபவிக்க முடியாததை தெரிவித்து அந்த அறிவு முதிர்ந்த ஓர் அனுபவத்தை ஏற்படுத்துவதுதான் மதத்தின் பிரயோஜனம்.

எம்மதத்தில் இருந்தாலும் அதில் பூரண நம்பிக்கையோடு இருந்து வந்தால் அதனால் வாழ்வு முன்னேறும். மனித வாழ்வு மலரதிட நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் திட சித்தத்துடனும் காரியங்களைச் செய்ய வேண்டும். மதப்பற்றால் மனநிம்மதியடைய முடியும். மன அமைதி பெறுவதே மனித வாழ்வின் மேலான லட்சியம்.

உலகத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு பெயர் இருக்கிறது. இம்மதத்தின் பெயர்கள் எல்லாம் மனிதரைப் பொறுத்தே இருக்கின்றன. புத்தர் ஏற்படுத்தியதால் புத்தமதம், முகம்மது ஏற்படுத்தியதால் முகம்மதியமதம், இந்து மதத்திற்கு அது அனுதியானதால் ஒருவருடைய பெயர் அதற்கு இடப்படவில்லை. இந்து மதம்பற்றி பேசுமுன் உலக மதங்களைப் பற்றி தெரிந்துகொள்ளலாம்.

உலகாயத மதம்

காட்சி யொன்றே இவர்களுக்குப்பிரமாணம். பிருதிவி அப்பு தேயு வாயு என்கிற நான்கு பூதங்களே மெய்ப்பொருள். இம்மையில் சுகமே சுவர்க்கம். துக்கமே நரகம்.

நிரிஸ்வ சாங்கியம்

கபில முனிவர் இயற்றிய சாங்கிய நூலில் தேகாதி பிரபஞ்சத்திற்குக் காரணமாய் மாயையுண்டு என்றும் அறிவு மாத்திரம் இருக்கும் ஆத்மா உண்டென்றும், மாயையும் ஆத்மாவையும் விவேகஞானம் மூலம் அஞ்ஞானம் நீங்கி ஆத்மா முக்தியடையும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பௌத்த மதம்

பஞ்ச பூதத்தினாலான இச் சரீரத்தில் புத்தி தத்துவமே உள்ளது. இம்மதம் குறிப்பிடும் முக்தியாவது நித்தியமாக அனுபவிக்கப்படும் இன்ப துன்பத் தொடர்ச்சியின்றி சுத்தமான ஞானமென்பதே. பௌத்தத்தில் சௌந்திசாந்திகம் வைபாஷிகம், மகாயாமிகம், மாத்திமிகம் என நால்வகைப் பேதங்களுண்டு.

சமண மதம்

அருண் என்பவர் கடவுள். தவம் உயிர்க் கொலை முதலிய பாவங்களை நீக்கவேண்டும். விளக்கு வைத்தபின் உண்ணை மாட்டார்கள். பரிபூரண அஹிம்ஸை.

வைகேதிக மதம்

கணாதர் என்ற முனிவர் இயற்றப்பட்ட நூலில் ஆத்மா பரமாத்மா, ஜீவாத்மா என்று இருவகைப்படும் என்றும் ஞானத்தால் ஆத்மாவின் கர்மம் நடக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆரிய மதம்

வைஷ்ணவம் சைவம் பௌத்தம் ஜைனம் சீக்கியம் முதலிய எல்லா மதங்களும் ஆரியத் தொடர்பை விட்டு நீங்கியதல்ல.

இன்று உலகில் பரவியிருக்கும் மதங்களை சமூகவாரியாக வகுக்க வேண்டுமானால் இம் மதங்களை இரு பிரிவுகளாக கூறலாம். ஒன்று 'ஆரியத்' தொடர்புடையது. மற்றொன்று 'சீமாதி' தொடர்புடையது.

சீமாதி பிரிவில் யூதமதம், கிறிஸ்துமதம், இஸ்லாம் மதம் ஆகியவை சேர்ந்ததே.

ஹிந்து மதம்

தர்மம் என்பது சமஸ்கிருதச் சொல். இதையே மதம், சமயம் என்பர். ஒருகாலத்தில் இந்த ஒரு மதமே இருந்ததால் அதற்கு இன்ன மதம் என பெயரிடப்படவில்லை. இம் மதத்திற்கு பேரில்லாததுதான் அடையாளம். வேதத்தில் சொல்லியிருப்பதை நம்புவது தான் பொதுஅடையாளம்.

இந்துமதத்திற்கு மூலநூல் வேதமே. இம் மதத்தில் அநேக கிளைகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மூலம் வேதமே.

"ஏகம் ஏவா அத்விதீயம் ப்பிரமம்" என்பது வேதவாக்கு.

இதன் பொருள் 'ஒன்றே தான் பொருள். இரண்டாவதில்லை! என்பது இதை. ஆதிசங்கரர் பிரும்மத்தைத் தவிர வேறு பொருள் இல்லை என்று முடிவு கட்டினார்.

இதன் சரியான அர்த்தப் பிரும்மத்தைத் தவிர தனிமைப் பொருள்வேறு இல்லை என்று கொள்ள வேண்டும் என்று ஒரு கருத்து.

ந-த்வைதம் என்பது சேர்ந்து அத்வைதம் என்றுயிற்று.

'ந' என்ற சொல்லுக்கு சப்த கல்பதருமம் என்ற நூலில் ஆறு பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் மூன்று அன்மை, இன்மை, மறுதலை என்பன. இன்மை என்ற பொருளில் அப்பிர காசம் எனக் கொண்டு ஒன்றேதான் என்றார் ஆதிசங்கரர். (அத்வைதம்)

மறுதலைப் பொருளில் அரூதி அதர்மம் எனக்கொண்டு இரு பொருள்கள் என்றார் மத்வர். (த்வைதம்)

பேதா பேதம் என்று பொருள் கொண்டு விசேஷ அத்வைதம் என்றார் ராமானுஜர். (விசிஷ்பாத் வைதம்)

சிவாத்வித சைவர்களும் மரமும் கிளையும் போல பேதா பேதம் உண்டென்றனர்.

மெய்கண்டசிவம் இம்மூன்றனுள் ஒன்றையே கூறுது மூன்று தன்மைகளும் தன்னுள் காணப்படும் அத்வைதத் தொடர்பே உலகிற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்கிறார். அதாவது பொருள் இரண்டுதான். இரண்டாயினும் வேறுவேறாய் இல்லாது ஒன்றியே நிற்கும்.

வேற்றுமைகளைக் காட்டி (பேதத்தைக் காட்டி) ஐக்கியத்தை (அபேதத்தை) உணர்த்துவதே அனுதியான நம் ஹிந்து தர்மத்தின் சிறப்பான அம்சம்.

"ஸர்வேஜனா; சுகினோ பவந்து" என்பதில் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் சௌக்கியமாக வாழட்டும் என்ற பிரார்த்தனை செய்யும் வாய்ப்புதான் இந்து மதத்தில் ஒவ்வொருவரும் அடையும் மகா பாக்கியம்.

குருகுலம்–கிளிநொச்சி

–வே. கதிரவேலு

கௌதமர், வசிட்டர், விசுவாமித்திரர் போன்ற உயர் முனிவர்களின் தவச்சாலைகளாயிருந்தன குருகுலங்கள்; மிக முற்திய காலத்தில் மனத்துக்கண் மாசிலராய் புண்ணியவான்கள் வாழ்ந்த அமைப்பு அது. வேத உபநிஷத, புராண, இதிகாசங்கள் யாவும் இக்குருகுலத்தில் முளைத்து வளர்ந்து இன்றும்நின்று நிலவுகின்றது. குரு சிஷ்ய பாரம்பரியமாய் - கர்ண பரம்பரையாய்ப் பிந்திய காலத்தில் இந்து சமயத்தின் பொக்கிஷங்களாய் வளர்ந்த உண்மைச்சாத்திரங்கள் யாவும் அங்கே வளர்ந்தன. அக்கால வாழ்வு புனிதத்தில் தெய்வீக சாந்நித்தியத்தில் மலர்ந்தது. இது அந்தக் காலம்.

கலிகாலப் போக்கும், விபரீதமும் மலிந்த இன்றைய நிலை சமய வாழ்விலும் பல மாறுதல்களையும் ஏற்படுத்தி விட்டது. வாழ்வு நெறி என்பது தான் தோன்றித் தனம் நிறைந்ததாய் - நினைத்தபடியெல்லாம் வாழலாம் என்ற நிலைக்குக் கீழிறங்கிவிட்டது. கல்விக்கும், வாழ்வுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. வாழ்ந்துகாட்டுவோர் அருகிவிட்டார்கள். தலை தடுமாற்றம் இப்படியிருப்பினும் இலைமறைகாய் போலச் சில ஆச்சிரமங்களும் அறவாழ்வு நிலையங்களும் பழமைதழுவியும், காலத்துக்கேற்ப சில மாற்றங்களுடனும் தோன்றி வளர்ந்துள்ளன. மிகப் பிந்திய காலத்தில் இந்த வகையில் 1964ல் ஐம்பது ஏக்கர் காட்டுக்காணி மத்தியில் கிளிநொச்சியில் கரைச்சிச் சைவவித்தியா விருத்திச் சங்க அனுசரணையில்காடே தன் அடியூற்று என்ற இலட்சியத்தில், தன் கையே தனக்கு உதவி என்பதை நம்பி, மகாத்மாவின் ஆதாரக் கல்வித் திட்டத்தை அனுசரித்து முளைத்த இக்குருகுலம் இன்றுவரை தன்னிலே தங்கி வளர்ந்து கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட இருநூறுக்கதிகமானோர்–ஆண் பெண் இருபாலார்க்கும் தனித் தனி அமைப்புப் பொருந்த கல்வி, 'தொழில்' அறிவுடன் கூடிய இணைப்புச் செயலகமாய் மறுமலர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. பாலர் முதல் விருத்தரீருக வாழும் பெரிய குடும்பம். வாழ்ந்துகாட்டும் செயற் கூட்டம், இந்திய நாட்டிலுள்ள அரவிந்தாச்சிரமம், தயாள்பாக், சாந்திநிகேதனம்' வாலஸாபாத் இந்து மத பாடசாலை, காந்திக்கிராமம் போன்ற தாபனங்களின் அமைப்பை முன்வைத்து வளர்கின்றது.

பாடசாலைக் கல்வியுடன்வாழ்வுக்கல்வியளித்தல், தொழிற்பயிற்சி இருபாலார்க்கும் தகவளித்தல், யுவதிகள் இளைஞர்கள் பயிற்சி அறிவுக்கும் தொழிலுக்கும் இணைவுப்பயிற்சி முதலாய பயிற்சிகளுடன் அறிவு, ஒழுக்கம், சமயவாழ்வுக்கு முக்கியத்துவமளித்து வழி நடத்திக்கொண்டிருக்கிறது. பாடசாலைக் கல்வி பெறுவோர் 120. சர்வசக்திப் பயிற்சி பெறுவோர் 55. இந்து போதகர் பயிற்சிபெறுவோர் 20. முதியோர், தொழிலாளர் முதல் பலரும் வாழும் இடம்.

கல்விக்கூடம், விடுதிகள், கிணறுகள், கக்கூசுகள் நெசவுகூடம், தையலகம், பாகைப்பின்னி நிலையம், பன்னவேலை நிலையம், சமையற்கூடம், பான்போரணை பால் பண்ணை, தச்சுக்கூடம், மேசன் வேலைக்கூடம், பல்வேறு விடுதிகள், இவையாவற்றுக்கும் மத்தியில் சர்வ சக்தி பீடம் என அழைக்கப்படும் கோவில் முதலிய யாவும் அமைக்கப்பட்டுள்ளன. குழாய் கிணறு, காற்றாடி மூலம் நீரிறைத்தல் முதலிய அமைப்புகளுமுள; மின்னிணைப்பும் மிக அண்மையில் கிடைத்துள்ளது. 30 ஏக்கர் வயல் மிகுதி தோட்டநிலமும் தென்னையும்.

தென்னை, மா, பலா முதலியனவும் நடப்பட்டுள்ளன. நல்லகுழலின்மத்தியில் அமைந்துள்ளது இக்குருகுலம். முன்பு எமது சங்கத்தால் பரிபாலிக்கப்பட்ட இந்து மகாவித்தியாலயம்: அருகில் மகாதேவ ஆச்சிரமம். உருத்திரபுரம் வீதியில் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து இரண்டரை மைல் தொலைவில் உள்ளது இக்குருகுலம்: இதன் தேவைகள் இன்னும் அதிகமதிகமாகவுண்டு. விவசாயம், பால்பண்ணை, கைத்தொழிற் கூடங்கள் அதிகமதிகமாகத் திறக்கப்படவேண்டும்: வளர்ச்சிக்கு இன்னமுமதிக இடமுண்டு. இவைகள் குருகுல வளர்ச்சியின் சில குறிப்புகள் மட்டுமே.

இனி நம் சமூகத்தில் உள்ள குறைபாட்டில் மிகத் தேவையான தியாகிகள் சமுதாயத்தை – சாந்தி சேனையை – சமய, சமூக சேவையாளர்களை – கருமயோகிகளை (வெறுமனே தெருத்தெருவாகத் திரியும் பக்தர்கள் போன்றவர்களையல்ல) பணியாளர்களை – முழுநேர ஊழியர்களை சேவைக்கே முற்ற முழுக்கத் தம்மையர்ப்பணிப்பவர்களைக்காணுதல், அதுவும் இந்துசமயத்தவரிடையே காணுதல் மிகமிக அருமையாகிவிட்டது. பிரமச்சரிய கிருகஸ்த வாழ்வு அறுபது வயது வரையில் வாழ்ந்து, பின் அவ்வாழ்வை விடுத்து வானப்பிரஸ்த சந்நியாச நிலைகளில் புகுந்து சமய சமூக சேவைக்குக் கட்டாய இடம் வகுத்து அதன்படி வாழ்ந்து கொண்டிருந்த அக்காலத்தில் முதிய அனுபவம் முதிய அனுபவமிக்க அறிஞர்கள் தியாகிகளாய் வாழ்ந்தார்கள்.

சமுதாயத்தை வழி நடத்தினார்கள். அறிஞர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். மக்கள் சேவைக்கு அறிஞர் பஞ்சம் கிடைக்கவில்லை. இந்த வகையில் நாம் திருப்தியுடன் புதிய சேவையாளர் தேவையின்றி இருந்தோம். அந்தக்காலத்தில், ஆனால் இன்றோ கிருகஸ்தர் யாவரும் சாகும் வரை கிருகஸ்தராகவே வாழ்ந்து மரிக்கின்றார்கள். இவர்கள் தங்கள் பூட்டப் பிள்ளைகளுக்குக் கூடச் சம்பாதித்து வைத்துச் சாக வேண்டும் என்று கருதுகின்றார்கள். வெளவுதல் பாவம் இந்த அளவுக்கு அதிகரித்து விட்டது. இதனால் நம் இந்துக்களிடையே முழுநேர ஊழியரைக் காண்பது முயற்கொம்பாகிவிட்டது. யாவரும் பணி செய்யக் காண்பது அரிதிலு மரிதாகி விட்டது. இந்துக் கோயில்கள், அற நிலையங்கள் முதல் எவைகளாயினும் தியாகிகளால் பரிபாலிக்கப்படுவதில்லை.

ஏன் பயிற்சிபெற்ற சம்பளம் பெறும் பரிபாலகர்களைக்கூடக் காண்பதரிது. நம்மிழிநிலை இப்படியாயிற்றே. சாதாரண தொழிற்கூடங்களை நடத்துவதற்குக் கூடப் பயிற்சிக்கல்லூரிகள் நிறுவிப் பயிற்சியளித்தபின்னரே தகுதிபெற்றோர் மாத்திரம் அவ்வத் தொழில் முகாமையாளராய் நியமித்தல் மரபாக எமது இந்து நிறுவனங்கள் மாத்திரம் எவ்வித தகுதி பெறாதவர்களாயினும் சில பெருமைகள் மாத்திரமிருப்பதால் முகாமையாளராய்ப் பூசகர்களாய் கோவில் முதலாளிகளாய் நியமிக்கப்படுதல் எவ்வளவு அறியாமை.

சைவம் தெரியாத - சைவ ஒழுக்கம் சிறிதுமில்லாத சுரண்டும் புள்ளிகளிடம் நிறுவனங்களை ஒப்படைத்துப்படும் இழிகோலங்கள் சொல்லுந்தரமல்லவே. பாடசாலைகளில் சைவப்பற்றில்லாத - சைவ சமய உண்மை விளங்காத பல ஆசிரியர்களிடம் சைவம் போதிக்கும் நிலையை உருவாக்கிவிட்ட அறியாமைக்கு விடிவு வேண்டாமா? பயிற்சிபெற்ற மௌலவிமாரும், குருத்துவம் பெற்ற கிறீஸ்தவ குருமாரும், பௌத்த ஆமத்துறுக்களும் சமயம் போதிக்கும் உரிமை பெற்றிருப்பது உள்ளபடி அவர்கள் சமயம் போதிக்க நாம் மட்டும் யாரும் போதிக்கட்டும் என்றிருப்பது நம் சமயத்துக்குச் செய்யும் துரோகமல்லவா? கொஞ்சம் சிந்தியுங்கள்.

இந்தத் தேடுவாரற்ற நிலைக்கு விடிவு காணாவிடின் நமது இந்து நிறுவனங்களும் அதற்குரிய இலட்சியங்களும் நிறைவேற வழியின்றி மங்கி மறையவேண்டி வரும். சைவ சாதனையும் சைவ நுணுக்கங்களும் தெரியாத பலர் சைவ வழிகாட்டிகளாய் சைவ போதகர்களாய் இருந்து, சைவத்தின் உண்மைகளை மறந்து சைவக் கொலை செய்கின்றனரே. இதைத்தான் எத்தனை நாட்கள் பொறுத்திருந்து பார்ப்பது. 120 வருடங்களுக்கு முன்பிருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் இந்து பிரசாரகர்களைச் சிருட்டிக்கும் ஐந்தாண்டுத் திட்டமிட்டார்.

அவரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எமது குருகுலம் இந்து போதகர் பயிற்சித் திட்டம் ஒன்றை இந்த ஆண்டில் ஆரம்பித்துவைத்து நடாத்துகின்றது. 20 பிள்ளைகள் ஆண், பெண் இருபாலாரிடையேயும் படித்து வருகின்றனர். இவர்கள் பொ. க. தராதரம் சாதாரணம் உயர்தர பரீட்சைகளில் திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்தவர்கள். இவர்களின் பயிற்சிக்காலம் மூன்று வருடம். பின்னர் சேவையாற்றிக் கொண்டு நடாத்தும் சாதனா பயிற்சியும் இருவருடங்கள் நீடிக்கும். பயிற்சிக் காலத்தில் எல்லாம் இலவசம். நான்கு பாஷைகள் எழுத, பேச வாசிக்கப்பயில்வர்.

சிந்தாந்த வேதாந்த சாத்திர அறிவு நிரம்புவர். தற்கால சமூகத்துக்கு இன்றியமையாத தேவைக்குரிய பல் வேறு சமூகதத்துவ பாடங்களும் பயில்வர். சமூக சேவைப் பயிற்சி முக்சியமாய் பயில்வர். இவர்கள் மறுசமய குருமார்போல மதிப்புப் பெற்று வாழ்ந்து கிராமங்கள் தோறும் கிராம ஊழியர்களாகவும் போதகர்களாகவும் தேவைப்படின் பூஜகர்களாகவும் வாழ்ந்து சைவ நிறுவனங்களை நடாத்துவார்கள். இவர்களின் எதிர்காலத்தில் இந்துதியாகிகள் பீடம் அமைக்கப்பட்டு அதன் உறுப்பினர்களாகி உயர்தியாக பீடமமைப்பர். இவர்கள் தம்முள் சிறந்தவரை உருவாக்கி அவரை முதல்வராக்கி வாழ்ந்து அவர்தலைமையை ஏற்று இணைந்து ஊழியஞ் செய்வர். அப்பொழுது இவர்களுக்கு எல்லாவித வசதிகளும் பணமும் வந்து சேரும். பெரிய சாதனைகளைச் சாதிக்கும் முன்னோடிகளாவார்கள். இவர்களும் காலகதியில் தம்மைப்போன்ற பலரைச் சிருட்டித்து ஒரு பெரிய தியாக பீடத்தை அகில இலங்கை ரீதியில் அமைத்துக் கொள்வார்கள்.

இந்த வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அடுத்த வகுப்பும் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால் இவர்களின் தேவைகள் மிக மிக அதிகம். அதற்காகக் குருகுலத்துக்குப் பொது மக்கள் வேண்டிய உதவிகள் புரியவேண்டும். வேண்டிய உதவிகள் பின்வருமாறு.

இவர்கள் தங்கிப் படித்து வாழ விடுதிகள் கட்டப்படவேண்டும், நீர் விநியோகத்துக்காக பைப்திட்டம் மின்னிணைப்புப் பொருத்தப்பட வேண்டும். அன்றாட உணவு, உடை முதலிய பிற தேவைகளுக்காகச்செலவிட நிதி வேண்டும், இவர்களுக்கு வேண்டிய தளவாடங்கள் செய்யப்படவேண்டும் ஆண்கள், பெண்களுக்காக தனித்தனி தொழிற்கூடங்கள் தாபிக்கப்பட வேண்டும்.

1982ல் அகில உலக இந்து மகாநாடு இனிது நடைபெற
எங்களின் மனங்கனிந்த நல் வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கின்றோம்!

Everybody Prefer
Hotel LAKSHMI
for
★ ALL ROOMS LAVISHLY FURNISHED WITH MODERN AMENITIES
★ MODERATE TARIFF
★ NEARER TO BUS STAND & RLY. STATION.



Phone: 25298. Grams: HOTELAX
(Sri Lakshmi Hotels private Ltd.)
3-A. ALEXANDRIA ROAD,
CANTONMENT, TIRUCHI-620 001.

HOTEL LAKSHMI

TRICHY.

WE WISH WORLD HINDU CONFERENCE 1982
ALL SUCCESS

★

★

★

★

KAMALA STORES

General Merchant, Commission Agents
Estate Suppliers and Transporters.

No. 149, Main Street - Bandarawela.

கமலா ஸ்டோர்ஸ்

நிர். 149, பிரதான வீதி,
பண்டாரவளை.

Estd: 1942 **T'phone: 406**

அகில உலக இந்து மகாநாடு
எல்லா வகையிலும் சிறந்து விளங்க
எமது நல் வாழ்த்துக்கள்!



SRI GOWRI STORES

General Merchants, Agents, Estate Suppliers and
Dealers in Ceylon Produce.

173, Main Street - Bandarawela.

Telephone: 211

Telegrams: "GOWRIS"

With Best Compliments of

Iron Trading Company

Hardware, Electrical Merchants, Estate Suppliers
and Forwarding Agents.

179, Main Street - Bandarawela.

Phone: 479

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

SRI LANKA STORES

PAWN BROKERS, JEWELLERY & STAINLESS STEEL.

No. 70, Main Street – Bandarawela.

Phone: 477

With Best Compliments
From



TATA COMPANY

Dealers in:
Hardware, Building Materials and
Agro Chemicals.

No. 139, Main Street – Bandarawela.

Dial: 205

Cable: "TATA"

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்!

SELVAM FORAGE STORES

FORAGE, HARDWARE MERCHANTS, GENERAL SUPPLIERS AND TRANSPORT AGENTS.

No. 183, Main Street – Bandarawela.

Phone: 340

உ

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!



காந்தி ஸ்டோர்ஸ்

161, 110, லோவர் வீதி

பதுளை.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில் வரலாறு

— தேவஸ்தானத்தார் —

விஷ்ணுவை முழுமுதற் பொருளாகக் கொண்டு வணங்கும் சமயம் வைணவம் என்று அழைக்கப்படும். வைணவத்தின் நாதன் நாராயணன் என்று போற்றப்படுகின்றான். விஷ்ணுவைப் போற்றி வழிபடுபவரை வைணவர் என்று அழைப்பர். படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில் காத்தல் தொழிலை ஏற்று உலகத்தைக் காத்து இரட்சிப்பவன் திருமால் ஆவன். பழந்தமிழ் இலக்கியங்களும் மாயோன் வழிபாட்டை எடுத்தியம்புகின்றன. பண்டு தொட்டுத் தமிழ் மக்கள் திருமால் வழிபாட்டையும், சிவ வழி பாட்டையும் இரு கண்களெனப் போற்றி வளர்த்து வருகின்றனர். தமிழ்நாடு எங்கணும் சிவத்தலங்களுக்கு ஒப்பான விஷ்ணு தலங்கள் பலவுள்ளன.

தமிழும், சைவமும் தழைத்தோங்கும் ஈழவழநாட்டின் கண் வைணவத் தலங்கள் பலவுள்ளன. இவற்றில் ஈழத்திருப்பதியென வழங்கப்பெறும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். இவ் வாலயம் யாழ்நகரில் வண்ணையம்பதியில் அமைந்துள்ளது. இத்தலம் பண்டுதொட்டு நவக்கிரக வழிபாட்டிற்குப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

ஆலய வரலாறு

கி. பி. 1347ல் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் முடி சூடப்பெற்ற குணபூசண சிங்கை ஆரியன் நெசவுத் தொழிலை விருத்தி செய்யும் பொருட்டு இத்தேவஸ்தானத்தின் பரிபாலகரின் மூதாதையராகிய நுண்ணிய கைத்திறமை வாய்ந்த காருக வினையாளரான பத்மசாலிச்செட்டிப் பிள்ளைகளை ஆந்திர நாட்டினின்றும், காஞ்சியினின்றும் அழைப்பித்து, இவர்கள் வதிவதற்கு வண்ணையம்பதியில் இடமும் அளித்தனன். இவரில் பெரும்பாலானோர் வைணவர்களாயிருந்தமையினால் தம் வழிபாட்டிற்காக இத்திருக்கோவிலை ஸ்தாபித்து, பரிபாலித்து வருகின்றனர். இக்கோவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலம் "அடியார்க்கு நல்லான் வரம்பு" என உறுதிச் சாசனம் சான்று பகர்கின்றது. இக்கோவிலின் தலவிருட்சம் டலாமரமாகும். இவ்வாலயத்தை உருவாக்க முன்பு இச்சாகியத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவர் இவ்விருட்சத்தின் அடியில் தாம்பரத் திலால் செய்யப்பட்ட ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் விக்கிரகத்தை வைத்து ஆராதித்தனர் என்றும், இதன்பின்பே இவ்வாலயம் இச்சாகியத்தினரால் நிர்மாணிக்கப்பெற்றது என்று ஐதிகம் சான்று புகல்கின்றது. இப்பழமையான சிறிய விக்கிரகத்திற்கு ஏகாதசி தினங்களிலும், கொடியேற்ற உற்சவம், தீர்த்தோற்சவ தினங்களிலும் விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

ஆலய அமைப்பு

இத்தேவஸ்தானத்தின் முன் வாயிலில் ஏழு மாடங்களைக் கொண்ட நீண்டுயர்ந்த இராஜகோபுரமும் இதன் இரு புறத்தேயும் மணிக்கோபுரங்களும் நிர்மாணிக்கப்பெற்றுள்ளன. இந்த இராஜ கோபுரத்தில் இடம்பெறும் சுதைவிக்கிரகங்கள் திருமாலின் தச அவதாரத்தையும், ஸ்ரீ இராமாயண, ஸ்ரீமந் பாகவத புராணங்களின் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றன.

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இவரின் பின்புறத்தே சாயாவிக்கிரக ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரரான ஸ்ரீவரதராஜப்பெருமாள் எழுந்தருளியுள்ளார். இவர்கள் இருவரும் மூலமூர்த்திகள் ஆவர். இதனையடுத்த அர்த்த மண்டபத்தில் ஸ்ரீ இரங்கநாத சுவாமி ஆதிசேஷசயனராய்உந்திக்கமலத்தில் ஸ்ரீ பிரம்மனை ஏந்திய வண்ணம் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக தென்திசை நோக்கிய வண்ணம் எழுந்தருளியுள்ளார். இவரின் முன் புறத்தே ஆதி வேங்கடேஸ்வரமூர்த்தியும், உற்சவ மூர்த்தியான ஸ்ரீவரதராஜப் பெருமானும் அம்மாள்மாருடன் வீற்றிருக்கின்றனர். இம்மண்டபத்தின் ஈசான மூலையில் விஸ்வக்சேன மூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்.

இதனை அடுத்துவரும் மகாமண்டபத்தின் தென் பாகத்தில் ஸ்ரீ விக்கிநேஸ்வரப் பெருமானும் வட பாகத்தில் ஸ்ரீ இராமானுஜ ஆச்சாரியாரும் கோவில் கொண்டுள்ளனர்.

இமய ஜோதியின் திவ்விய ஜீவன சங்கம்

— பண்டிதை செல்வி. சி. இராசலக்குமி —

பேரானந்தப் பெருவாழ்வைத் தரும் இந்து மதம் பெருமைமிக்கது; அனுதியானது. இந்துமதத்தின் சிறந்த பண்பாடுகளையும், தத்துவங்களையும் அறிஞர்களும் அனுபூதி மான்களும் போதனையாலும் சாதனையாலும் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். அவர் கள்தந்த நிறுவனங்கள் அருட்பணிகளை ஆர்வமு டன் ஆற்றி, மக்களின் ஆன்ம ஈடேற்றத் திற்கு ஆக்கம் தருகின்றன. இருபதாம் நூற் றாண்டில் லௌகீக ஆசைகளை தோற்றுவித்த அமைதியின்மை, சகிப்பின்மை, சண்டை, சமயக் கொள்கையில் மோதல் ஆகியவை மக் கள் உள்ளத்தில் ஆத்மீக தாகத்தைத் தூண் டிவிட்டன என்பது மிகையாகாது. இந்நிலை யில் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு, இவ்வுலம் தோறும் ஆன்மீக நாட்டமுள்ள, தெய்வீக வாழ்க்கை தேவைப்பட்டது. ஒவ் வொருவரும் மற்றவர்களின் மதத்தையும் மதிப்பவர்களாய், சர்வசமரசம், சகோ தரத்துவம், அன்பு, தியாகம், நல்லெண் ணம், பரஸ்பர நல்லிணக்கம் என்பவற்றோடு கூடிய நல்லதோர் சூழ்நிலையில் வாழ வேண் டும். ஒவ்வொருவரும் தத்தம் மதத்தை உறு தியோடும், மன ஒருமைப்பாட்டோடும் பின் பற்றி, தெய்வீக வாழ்க்கை வாழ வேண்டும். ஆன்மீகக் கொள்கைகளை அனுபவபூர்வமாக அப்பியசிக்கும்—யோகம், தினசரி வாழ்க்கை யில் அமைதல் வேண்டும். இத் தகைய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே திவ்விய ஜீவன சங்கம்.

புனிதத்தில், தோற்றத்தில் உலகில் உயர்ந்த இமயமலை இறையொளி வீசும் இன்ப மலை. அங்கு கங்கா தேவியின் அரவணைப்பில் விளங்குவது இருஷிகேசம். அனுபூதிமான்க ளின் ஆன்மீக அலைவீசும் இருஷிகேசத்திற்கு, மணிமுடியாகத் திகழ்ந்து சிறப்பைத் தருவது சிவானந்த நகர். அதனை அமைத்தவர் அகி லம் அனைத்தும் போற்றும் சுவாமி சிவானந்த மகராஜ் அவர்கள். 1887ம்ஆண்டு செப்டம்பர் 8ந் தேதி சுவாமி சிவானந்தர் தமிழ் நாட்டிற் பத்தமடையிற் பிறக்கும் போதே கருவில் திரு வாகி தோன்றிய தெய்வீக சிந்தனை, தந்தை யாரின் ஆதரவில் எட்டயபுரத்தில் வளர்ந்து, திருச்சியில் உயர்கல்வி சற்கும் போது, செ ழித்து, தஞ்சையில் வைத்தியக் கல்லூரியில் வாசித்தபோது தழைத்து, மலேயாவில் டாக் டராயிருந்த போது மலர்ந்து, வடநாட்டில் சாதனை செய்யுங் காலத்து காய்த்து, இருஷி கேசத்தில் பழுத்து பரவிய விதையே, திவ்ய ஜீவன சங்கம்.

அச்சங்கம் யோக வேதாந்தச் சோலை யாக நிழல் தந்து, கர்மயோகம், பக்தியோ கம், ஞானயோகனிகளை அன்புடன் கொடுக் கின்றது. சேவை செய்யுங்கள், அன்பு செலுத் துங்கள், தியானம் பயிலுங்கள், அனுபூதி யடையுங்கள், நல்லவராய் வாழுங்கள், நன் மையே செய்யுங்கள் என்று அறிவுரைகளைப் புகட்டுகின்றது. ஸத்சங்கம், நாமசங்கீர்த் தனம், ஜெபம், தியானம், லிகித ஜெபம், சம்பூர்ணயோகம் ஆகிய சாதனைகளைப் பயிற் றுகின்றது. திவ்ய ஜீவன சங்க அன்பர்கள் சமயப்பெரியோர்களின் குருபூசை, சிவராத் திரி, நவராத்திரி, திருவாதிரை முதலிய சமய விழாக்களைக் கொண்டாடுகின்றனர். மன ஒருமைப்பாடு பெறுவதற்கு அந்தர்யோக சாதனை செய்கின்றனர். உலக சேமத்திற் காக விசேஷ பிரார்த்தனை செய்கின்றனர். குருபூர்ணிமா தினத்தில் வெகு சிறப்பாகக் குருவழிபாடு செய்கின்றனர். 1936ம் ஆண்டு சிவானந்தரால் ஆரம்பித்த திவ்ய ஜீவன சங் கத்தின் வெள்ளிவிழாவை 1960ல் பாரத தேசத்து அன்பர்கள், மேலைநாட்டு அன்பர் கள், ஈழத்து அன்பர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந் தனர்.

இராமகிருஷ்ணர் இயற்றிய ஞானதீபத் தை எல்லாத் திசையிலும் பிரகாசிக்கவைத்த வர் சுவாமி விவேகானந்தர். அவர் கீழைத் தேசத்தில் மட்டுமல்ல மேலைத் தேசத்திலும் மக்களுக்கு இந்துமதத்தின் பெருமையை உணர்த்தினார். அதனால் மேல் நாட்டார் பலர் ஆசியாவை நாடி வந்து ஆத்மஞானத் தை ஆர்வமுடன் தேடினர். தேடுகின்றனர். ஆத்மஞானம் தேடி வந்தவர்களை அன்புடன் வரவேற்ற சுவாமி சிவானந்தரின் ஆசியும், அன்பும் பெற்று இன்புற்று வாழ்வோர் மேல் நாட்டில் பலர். அவர்கள் ஒன்றுசேர்ந்து பணி யாற்றும் திவ்ய ஜீவன சங்கமும் பல. சுவாமி சிவானந்தர் அமைத்த சமயநெறியை மேல்

நாட்டு அன்பர்கள் பாராட்டி உள்ளனர். திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளிவிழாக் கண்டு இன்புற்ற உள்ளங்களில் உதித்த உணர் வூற்றிற் சிலவற்றைத் தருகின்றோம்.

"தெய்வநெறிக்கழகம் அதன் சரித்திரத் தில் அரியதோர் கட்டத்தை தாண்டிச் சென்று கொண்டு இருக்கிறது. பொதுவாக அகில உலகிற்கும், விசேஷமாக இந்தியாவிற் கும் தனது 25 வருட சேவையை முடித்துக் கொண்டுள்ளது. ஸ்ரீ சுவாமி சிவானந்தரால் தொடக்கப்பட்ட இந்தச் சங்கம் அவருடைய வும், அவர் சீடர்களுடையவும் அரும்பணி யால் அகில உலக ஸ்தாபனமாக வளர்ச்சி யடைந்துள்ளது. இதன் காரணம் ஆத்மீக அறிவுப் பிரசாரமெனும் அதன் நோக்கத்தில் தான் அமைந்துள்ளது. ஸ்ரீ சுவாமி சிவானந் தர் எல்லா நாட்டிலும் உள்ள மக்கள் வாழ்க் கையின் லட்சியத்தைக் குறித்தும் அதற்கான பாதைகள் குறித்தும் தெரிந்து கொள்ள வழி வகுத்துள்ளார். பொதுமக்களுக்கு ஆத்மீக அறிவைப் பரப்புவதெனும் ஸ்தாபகத் தலைவ ரின் நோக்கத்தின் பிரகாரம் ஆத்மீக மறு மலர்ச்சி இயக்கத்தில் கழகம் ஒரு பெரும் அமைப்பாக ஆகியுள்ளது."

தெய்வ நெறிக் கழகத்தின் தெய்வீகப்பணி அகில உலகிலும் ஆத்மஜோதியைப் பிரகா சிக்கச் செய்கின்றது. குருதேவர் அருளிச் செய்த நூல்கள் பல; அவர்தம் அருளுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் அன்பர்கள் பெற் றுப் பயன் பெறுகின்றனர். ஆத்மீகக் கருத்து களைத் தாங்கிய துண்டுப்பிரசுரங்கள், எல்லாத்திசை களிலும் பரப்பி நிற்கின்றன. குருதேவரின் ஞானக்குழந்தைகள், உலகம் எங்கும் சென்று தெய்வீக வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விள ங்குகின்றனர். ஆங்காங்கே சங்கங்கள் அமைத் தும் ஆசிரமங்கள் அமைத்தும் அரும்பணியா ற்றுகின்றனர்.

சுவாமி சிவானந்த மகராஜ் அவர்கள் 1950 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அகில இந் திய யாத்திரை செய்தார். குருதேவர் செய்த திக்விஜயம் திவ்ய ஜீவன சங்கச் சோலையை மேலும் செழிப்புறச் செய்தது. வடநாட்டு யாத்திரையில், பைஸாபாத், காசி, சாரநாத் பாட்னா, ஹாஜிப்பூர், காயா, கல்கத்தா, வால்டேர் இராஜ மகேந்திரம், விஜயவாடா, மதுரை, ஆகிய இடங்களில் சுவாமிஜியின் அருளுரைகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டு, ஆத்மீக லாபம் பெற்றின்புற்றனர். அங்கிருந்த தெய்வ நெறிக்கழகங்கள் புத்தூக் கம் பெற்றன. புதிய பல சங்கங்கள் அமைக் கப்பட்டன. தெய்வ நெறிக் கழகத்தின் இலட் சியங்கள் மக்கள்மனதிற் பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்தன. அவற்றைக் கேட்ட அளவில் நின்று விடாது, ஆர்வமுடன் அப்பணியில் மக்கள் ஈடுபட்டனர்.

வட நாட்டில் அருளொளி பரப்பிய குரு தேவர் 1950 ஒக்டோபர் மாதம் தென்னாட் டிற்கும் விஜயம் செய்தார். பேரானந்தம் பிரவாகிக்க, மக்கள் சுவாமி சிவானந்த மக ராஜ் அவர்களை வரவேற்றார்கள். சென்னை விழுப்புரம், தருமபுரம், தஞ்சை, நாகப்பட் டனம், திருச்சி, புதுக்கோட்டை, கோயம்புத் தூர், தனுஷ்கோடி ஆகிய இடங்கள் மகிழ்ச்சி பொங்க சகத் குருவை வரவேற்ற சிறப்பு எழுத்தில் அடங்காது. அங்கே இன்றும் பல தெய்வ நெறிக் கழகங்கள் பெரும்பணியாற்றி வருகின்றன.

1950 அக்டோபர் 12ம் திகதி ஸ்ரீ சுவாமி சிவானந்தமகராஜ் இலங்கைக்கு விஜயம்செய் தார். கொழும்பு மாநகர சபை, இலங்கை சர்வகலாசாலை இந்து மாணவர் சங்கம், ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம், சைவ மங்கையர் கழ கம், விவேகானந்த சபை என்பன அன்புடன் வரவேற்றன.

இறைவன் திருவருளும் ஸ்ரீ சற்குரு சிவா னந்த மகரிஷியின் நல்லாசியும் பெற்று திவ்ய ஜீவன சங்கம் இலங்கையின் கீழ்த்திசையில் 1953ம் ஆண்டு தோன்றிய பெருமை திருக் கோணமலைக்கே உரியது. இது ஆரம்பமாகிச் சிறந்த பணியாற்ற ஆதிகாரணமாக இருந்து அயராது அரும்பணி ஆற்றியவர்கள் ஸ்ரீ சிவா னந்த சச்சிதானந்த மாதாஜி அவர்களும், ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர் களுமாவர்.

ஓம் எனும் ஒலியானது உலகெங்கும் எதி ரொலிக்கின்றது. இந்நாதம் அருள்பெற்ற வர்கள் காதுக்கு மட்டுமல்லாது எல்லாத் தேசங்களிலும். எல்லா மதத்தினராலும் செவிமடுக்கப்படுகிறது. இறைவனை நாடி நிற் போர் இன்னும் உயர்ந்த பல அற்புதங்களைக் காண்கின்றனர். அன்பு வாழ்க்கை, தன்னல மற்ற சேவை, அறிவு, ஆற்றல் இவைகளின் கருவூலமாக விளங்கும் காரணத்தினால் சுவாமி சிவானந்தர் உலகுக்கே ஒரு புது தோற்றத்தை கொடுத்திருக்கிறார்.

மேன்மை அடைவோம்

— சுவாமி சித்ருபானந்தா —

மனிதன் உலகில்தோன்றிய காலம்தொட்டு அவனதுபிரச்சனைகள்ஒரே தன்மையுடையதாகவே இருக்கின்றன காலமும் சூழ்நிலையும் மாறியதே தவிர, பிரச்சனைகளின் தன்மையாவும் ஒன்றே. மனிதன் இவ்வுலகில் இன்பம் அடையவே பாடுபடுகிறான். துன்பம் எத்தன்மையாய் இருந்தாலும் அதை அறவே வெறுக்கிறான்.

இன்பம் அடையவேண்டுமென்று எண்ணுவது மனிதனது பிறப்புரிமை. இவ்வுடலில் இருக்கும் ஆத்மாவின் தன்மையை மூன்றுகப் பிரிக்கலாம். ஆத்மா, என்றும் உள்ளது. அறிவு மயமானது. பேரானந்தத்தை இயற்கையாக நாடும் தன்மையுடையது.

இப்படி ஆத்மாவின் தன்மை இருக்கையில், மனிதன் உடலில் கட்டுண்கின்றான். உடலோடு பிணைக்கப்படும் பாசமானது நாளுக்கு நாள், பல பிறவிகள் தோறும், இறுக்கப்பட்டு, முறுக்கேறி, ஈற்றில் ஒரு வேறான மனிதன் ஆகின்றான்.

உலகில் இருக்கும் தற்கால புற சூழலும் அவனுக்குப் பாதகமாகவே அமைகின்றன. முன்பு இருந்த மனிதனுக்கு ஆத்மீக நாட்டமும் பெருமளவில் இருந்தது. புறச் சூழலும் அமைதியானதாகவே இருந்தது. ஆகவே வெகுவிரைவில் முன்னேற்றம் அடைந்து வீடு பேற்றை அடைந்தான்.

தற்கால மனிதனுக்கு வீடு பேற்றைப்பற்றி அறிய அவகாசம் இல்லை. சாஸ்திரங்களில் பெரு அளவில் நம்பிக்கை இல்லை. ஆக அவன் செய்யும் ஒரு நல்ல செயல் சிறிய அளவில் அவன் ஆற்றும் ஆலயவழிபாடு. இவ் ஆலய வழிபாடும் கூடபொருள் உணர்ந்துசெய்வான் ஆனால் அவனுக்கு சாந்தி யுண்டாகும். இவ் ஆலயவழிபாடும் ஆங்கிலத்தில் சொல்வார்கள் (Automatic and Mechanical)ஆகஅமைந்து விட்டது.

அருணகிரிநாதர் ''சரணகமலாலயத்தை அரை நிமிஷம் நேரமட்டில்''என்றார். இன்று உலகில் தியானத்தின் பெயரால் பல இயக்கங்கள் ஆரம்பித்து மனிதனை சுழப்புகின்றன. இவையாவும் மனிதனை தாக்கி அவன் சின்ன பின்னம் அடைந்து விடுவான் என்பதை எத்தனையோ ஆயிரம் வருடங்கள்வாழ்ந்த அருணகிரி நாதர் உணர்ந்து தவமுறை தியானம் செய்ய மனிதனுக்கு மிகச் சொற்ப நேரம் போதும் என்றார்.

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் மிகவும் அண்மையில் வாழ்ந்தவர். இவர் ஒரு சந்தர்ப்பத்தில் ஜபம் பல ஆயிரம் தடவை செய்வதிலும் பார்க்க ஸ்திரமான உள்ளத்துடன் ஆண்டவனின் நாமத்தை ஒரு தரம் சொன்னாலும் அவன் நற்கதியடைவான் என்பது உறுதி என்றார்.

மனிதன் பேரின்பம் அடைய பல வழிகள் உண்டு. தியானம், ஜபம், சேவை, பூஜை ஆகியவையாம். சேவையின் மகத்துவத்தை பாரத நாட்டில் அள்ளி இறைத்தவர்களில் சுவாமி விவேகானந்தர்முதன்மை பெறுகிறார். இவர் அமெரிக்க நாட்டில் பல இயக்கங்கள் செயல்படுவதை பார்த்தார். இந்தியாவில் ஒரு பேரியக்கத்தை ஸ்தாபித்து அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்வதை தனது முழு நேர பணியாக்கினார். சேவை மூலம் இறைவனை அடையலாம். சேவை மூலம் பேரின்பம் கிட்டும். சேவைமூலம் சிவனை ஆராதிக்கலாம் என்ற கருத்துக்கள் சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும்.

இன்றைய நவீன நாளில் ஸ்ரீ சத்தியசாயி பாபா பூஜை மூலம் இறை தரிசனம், சாந்தி கிடைக்கும் என்ற ஸ்ரீ சைதன்ய மகாபிரபு, மீரா போன்றவர்கள் காட்டிய மார்க்கத்துக்கு ஒரு மிகச் சிறந்த முறையில் மெருகு ஊட்டியுள்ளார்.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்ற தாயுமானவர் வாக்கு அமைய எல்லா முனிவர்களும் நாம் இன்புற்று இருக்க வழிகாட்டினார்கள். ஆகவே நாம் அதன்படி மனதார ஒழுகி மேன்மை அடைவோமாக. ''அனுதினம் சாதனை செய்யச்செய்ய ஆனந்தமான மோட்ச நிலையை அடையலாம். இதில் ஓர் ஐயமில்லை''

தபோவனம் மக்களிடையில் பரப்பும் இந்து மதம்

— ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் —

இந்துமதம் என்னும் பெயர் புறமதஸ்தர்கள் கொடுத்துள்ளதாம். இப்பெயருடன் இந்தியாவில் எந்த மதமும் உருவெடுக்கவில்லை. உலகிலுள்ள மதங்களனைத்துக்கும் தாய் மதமாக அமைந்திருப்பது, இந்தியாவில் மக்கள் எல்லாரும் அனுஷ்டித்து வரும் பொதுக்கோட்பாடுகளாம். உலகிலுள்ள மற்ற மதங்களுக்கு மதஸ்தாபகர்கள் உண்டு. புத்தர் நிறுவியது புத்த மதம். ஜினர் நிறுவியது ஜைன மதம். கிறிஸ்து நிறுவியது கிறிஸ்துவ மதம். முகமது நிறுவியது முகமதிய மதம். ஜொராஸ்திரர் பார்ஸீகத்தில்நிறுவியது ஜொராஸ்திரமதம். கன்பூசியஸ் சீனாவில்நிறுவியது கன்பூசியஸ் மதம். இந்தப் பாங்கில் இந்தியர்கள் அனுஷ்டித்து வரும் இந்து மதத்தை யாரும் ஸ்தாபிக்க வில்லை. எனவே பெயரில்லாததும், ஸ்தாபகரில்லாததும் ஆக உருவெடுத்திருப்பது இந்நாட்டில் தீவிரமாக நடைமுறையில் இருந்து வரும் கொள்கைகளாம்.

இக் கொள்கைகளனைத்தையும் சத்யம்வத-சத்தியத்தைச் சொல்லு, தர்மம்சர-தர்மத்தைக் கடைப்பிடி என்னும் இரண்டு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவைகளாம். சுருங்கச் சொல்லின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது இந்நாட்டின் மதம். மதஸ்தாபகரை அடிப்படையாகக் கொண்டதன்று இது. 'The Religion of this land is based Principles and not Personality.

கிறிஸ்தவன் ஒருவன் முறைதவறி நடந்து கொண்டால் நீ நல்ல கிறிஸ்துவனாக நடந்து கொள்ளவில்லை என்பார் அம்மதத்தைச் சேர்ந்தவர். அதே விதத்தில் அந்தந்த மதவாதிகள் மதஸ்தாபகனுக்கு ஒத்த பாங்கில் நடந்து கொள்ளவில்லை என்று நெறி வழுவியவர்களைக் கண்டிப்பார்கள். ஆனால் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் நெறி பிறழ்ந்தவனை நீ தர்மத்திலிருந்து பிசகியவன் என்பார்கள்.

இயற்கையின் நடைமுறைகளுக்கு நல்ல விளக்கமாக அமைந்திருப்பவை நான்கு வேதங்கள். இந்த வேதங்களை உருவாக்கியவர்கள் ரிஷிகள், அல்லது தீர்க்கதரிசிகள். அவர்களும் தங்களுடைய பெயர்களை வெளியிடவில்லை. இயற்கையின் திட்டப்படி ஒழுகுகிறவன் இயற்கைக்கு அப்பாலுள்ள பரத்தை அடைகிறான். இயற்கையைப் பற்றிய விளக்கம் வேதம் எனவும், பரத்தைப் பற்றிய விளக்கம் வேத அந்தம் அல்லது வேதாந்தம் என இயம்பப் பெறுகின்றன. பரவஸ்து ஒன்று; அதற்குப் பெயர்கள் எண்ணிக்கையிலடங்காதவைகள்.

இந்து மதக் கோட்பாடுகளுக்கு ஆதரவு அளிப்பது வேதாந்தம் அல்லது உபநிஷதங்கள். வேதாந்தம் என்னும் அடிமரத்தினின்று ஆறு கிளைகள் தோன்றி வந்தன. அந்த ஆறு கிளைகளும் ஆறு சமயங்கள் எனவும் ஷண்மதங்கள் எனவும் இயம்பப்படுகின்றன.

அவைகள் முறையே சைவசமயம், சாக்த சமயம், வைஷ்ணவ சமயம், காணபத்திய சமயம், கௌமார சமயம், சௌரசமயம் எனப் பெயர் பெற்றிருக்கின்றன. இந்த ஆறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் மெய்ப்பொருளை முறையே சிவம் என்றும், சக்தி என்றும், விஷ்ணு என்றும், கணபதி என்றும், குமரன் என்றும், சூரிய நாராயணன் என்றும் இயம்புகிறார்கள். இந்த ஆறு சமயங்களிலும் வேறுவேறு விபூதிகளிலும் இலங்கும் மெய்ப்பொருள் ஒன்றேயாம்.

யாண்டும் தன்மயமாயிருக்கும் மெய்ப்பொருளிடத்திலிருந்து பிரபஞ்சம் தோற்றத்துக்கு வரவும், நிலைபெற்றிருக்கவும், ஒடுங்கவும் செய்கிறது. இப்பிரபஞ்சத்தில் ஜீவகோடிகளனைத்தும் இடம்பெற்றிருக்கின்றன. ஜீவகோடிகளாக வடிவெடுத்திருப்பவைகள் சிற்றுயிர்களாக துவங்கிப் படிப்படியாக பேருயிர்களாகப் பரணமித்து மனித நிலையை எட்டுகின்றன. இத்தகைய சிருஷ்டிக்குத் துவக்கமுமில்லை. முடிவுமில்லை. அனாதி அனந்தமாக சர்வகாலமும் இவ்விளையாட்டு நிகழ்ந்து வருகின்றது.

மனித நிலையை எட்டிய ஜீவாத்மன் பல பிறவிகளுக்குப் பிறகு இப்பிரபஞ்ச வாழ்வில் துன்பம் கலவாத இன்பம் இல்லை என அறிய வருகின்றான். மனிதனும் மற்ற உயிர்களும் நாடுவது இன்பம். தடைப்பட்டு வருகிற இன்பத்தைத் தவிர்த்து பேரின்பம் வேண்டுமென்று மனிதன் நாடுகின்றான்.

கோப்பாய் இருபாலைச் சித்தர்கள்

— கோவை வாணன் —

சென்ற மூன்று நூற்றாண்டுகளுக்கிடையில் இருபாலை கோப்பாய்க் கிராமங்களில் தோன்றி மறைந்த சித்தர்கள் யாராவது உளரேல் அவர்களை ஞாபகப்படுத்தவே இக்கட்டுரை எழுகின்றது. காவி தரித்த சுவாமி ஒருவர் சேஞ்திராய முதலியார் பரம்பரையில் 1900ம் ஆண்டுவரையில் வாழ்ந்திருக்கின்றார். இவரை இத்திச்சுவாமி என்று அழைப்பதுண்டு. ஆனால், இவர் சித்தர் வரிசையில் வைத்தெண்ணப்படவில்லை. இவருக்குச் சீஷரும் இல்லை. இவர் அக்காலத்துக் கல்கற்ற F. A. பரீட்சையில் சித்தியெய்தினராயினும் யாதொரு தொழிலிலும் ஈடுபடாது, அங்கம் முழுவதும், உத்தூளனமாக நீறணிந்து காவி பூண்டு உலாவியதையே அறிவேன்.

1850 வரையில் கோப்பாயில் மயில்வாகனம் துரை வீட்டில் ஒரு மலையாளச் சுவாமி வந்து தங்குவதுண்டு. இவர் மாந்ரீகமும் அறிந்தவர். எனவே, அதர்வவேத அறிவு இவருக்கிருந்தது என்னலாம். இவர் ஒரு வேலாயுதம் வைத்துப் பூசை செய்து வந்தவர். சிறிது காலத்தில் இவர் தாய்நாடு சென்றுவிட்டார். இவருடைய வேலுக்கு ஒரு குடிசைக் கோயில் அமைத்து அந்தக் குடும்பப் பரம்பரையினர் தம் குலதெய்வமாக வணங்கிவந்திருக்கின்றனர்.

1875 வரையில், உடுப்பிட்டிக் குமாரசாமி முதலியார் பரம்பரையில் வந்த இரகுநாதர் என்பவர் கோப்பாயில் வசித்தவர். இவருடைய வீட்டில் ஓட்டிசுட்டான் சாமியார் என்றழைக்கப்படும் சுவாமியார் ஒருவர் வாழ்ந்தார். இவரும் முருக உபாசகராவர். இவர் வணங்கி வந்த வேலினைக் கோப்பாய் அம்மன் கோயிலுக்கு முன்பாக ஒரு பீடம் அமைத்துக் கோயிலும் கட்டி அதில் பிரதிட்டை செய்து நித்திய பூசைகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. இப்போது அந்த வேல் அங்கே இல்லை. ஆனால், குமாரசாமி முதலியார் இதன் பேரில் பாடிக்கொடுத்த ஓர் ஊஞ்சற் பாசுரம் இருக்கிறது. அதிலுள்ள பாட்டொன்று மாதிரிக்கு வருமாறு:-

"சீரிய செய்யாமொழி நாற்கம்பமாகத்
திருத்திருபத்தெட்டெட்டு விட்டமாக
நேரிய வெட்டெட்டு நூற்கயிறதாக
நிகழ்த்து செய்யா மொழி தலைநீள் பலகையாக
பாரிய கோப்பாய் பலானையின் மெய்ஞ்ஞான
பருவதபத்தினி பயந்த பாலனை
ஏரியல் செவ்வேற் குமரரே ஆடீரூஞ்சல்
இலகுமயில் வாகனரே ஆடீரூஞ்சல்"

நாம் மேற்கூறிய இருவரும் சிறிது காலம் கோப்பாயில் வாழ்ந்த சுவாமிகளே ஒழிய, இங்கு சமாதியானவர்கள் அல்லர். எனினும் இவர்கள் இங்கிருந்தமையினால் இக்கிராமம் புனிதமடைந்தது என்பதற்கு ஐயமில்லை.

வைத்திலிங்கச் செட்டியார் இல்லத்தில் கூழங்கைத்தம்பிரானைச் சந்திக்கின்ற காலத்தில் நெல்லைநாத முனிவர் இருபாலையில் வசிக்கத் தொடங்கி விட்டார். இது 1770வதுவரையில் இருக்கலாம். இவர் சிறந்த ஞாபகசக்தி வாய்ந்தவர் என்பது நாம் நூல்கள் வாயிலாக அறிந்த உண்மை. ஆனால் இவர் ஒரு சித்த ஆயுள்வேத வைத்தியருமாக இருந்தவர் என்பதை அறிந்தோர் வாயிலாக அறிந்துள்ளேன். இக்காலத்தில் இருபாலைச் செட்டியார் ஒரு சிறு பிள்ளை. இவர் முதலியாரிடம் வைத்தியம் கற்றவர். முதலியாருக்கு ஏடுகள் மனப்பாடம். எனவே அவற்றைச் செட்டியாருக்குக் கையளித்தார். ஆனால் செட்டியார் படிக்கும் போது தவிர்ந்த மற்றைய வேளைகளில் முதலியார் வீட்டுப் பெட்டகத்திலேயே அவற்றைப் பேணி வைப்பர்.

செட்டியார் முருக உபாசகர்; நித்திய சிவபூசைக்காரர். தன் இனத்தவருள் ஒருவருக்காவது சித்தாயுள்வேதம், விஷக்கடி வைத்தியம், மாந்திரீகம், முதலியவற்றைக் கற்பிக்க முயன்றிருக்கின்றார்; முடியவில்லை. எனவே, மனமுடைந்த செட்டியார் வேல், தூபதீபம், மணி, தட்டு, சேமக்கலம் ஆகியனவற்றை ஒரு செப்புப் பாத்திரத்தில் இட்டுத் தோட்டத்துள் ஒரு மூலையில் புதைத்து விட்டார். ஒரு நூற்றாண்டுக்கு மேல் கழிந்தது.

இப்பொழுது முனியப்பர் கோயில் பூசகராக இருக்கும் வேலாயுதரின் மூதாதையர் ஒருவர் தோட்டம் கிண்டிப் பண்படுத்துகையில் தற்செயலாக இப்பாத்திரத்தை கண்டெடுத்தார். இந்த வேல்தான் இப்போது முனியப்பர் கோயில் மூலஸ்தானத்தில் இருக்கின்றது. நித்திய பூசையும் ஆராதனையும் நடைபெறுகின்றன.

ஆதி–நடு–முடிவு

–பித்துக்குளி முருகதாஸ்–

1. மதம்: சமயம் என்று தமிழில் இதனைச் சொல்லலாம். இதே பெயரில் கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம் என்று மூன்று பெரிய மதங்கள் சொல்லப்படுகின்றன. முகமது நபிநாயகம் அக்காலத்தில் முஸ்லிம்களின் தன்மை–சூழ்நிலை–பழக்க வழக்கங்களை கண்டு தெளிந்து தொகுத்து நடந்து காட்டியது. அதேமாதிரி பௌத்த மதத்தை கௌதம புத்தர் தொகுத்து துவக்கி வைத்தார். இதுபோல ஏசு கிறிஸ்துநாதர் கிறிஸ்துவமதத்தைத் தொகுத்துத் தந்தார்; இந்து – பௌத்தம் – இஸ்லாம் – கிறிஸ்துவ மதங்கள் காலக்கிரமத்தில் பல உட்பிரிவுகளாச் செய்து கொண்டு 'சரி' 'தப்பு' கண்டுபிடித்து உள்ளுக்குள்ளே பல மதங்களாய் பிரிந்து மோதிக் கொள்கின்றன.

2. தோற்றம்: பிரளயம் முடிந்து பரகாச வெட்டவெளியிலே ஓம் என்ற நாதம் தோன்றியது. அது எல்லா இடத்திலும் எதிரொலியாகியது. அதன் நாத எதிரொலியின் அதிர்ச்சி காற்றை உண்டாக்கியது. நாதமும் காற்றும் மாறி மாறி உரைவதால் ஒளி ஏற்பட்டது. ஒளி காற்று ஒளி என்ற மூன்றின் கலவையினால் நீர் தோன்றியது. நீருடன் மற்ற மூன்றின் சேர்க்கையால் பூமி தோன்றியது.

3. தோன்றிய பூமியில் மறுபடியும் நீர், காற்று, ஒளியின் கலவையால் சதசதப்பு தளதளப்பு-பளபளப்பு என்று நெகிழ்ந்தும், இறுகியும் நிலங்கள் உண்டாகின. நெகிழ்ந்தபகுதியில் புல், பூண்டு, புழுக்கள், மரங்கள் பல ஜீவராசிகள் ஆயின. புல் புழுக்களில் சில பறவையாகின – பாம்புகளாகின – கடினமான இறுகிய பகுதிகளில் கற்கள், மலைகள் தோன்றின. நெகிழ்ந்த பகுதியில் உள்ள ஜீவன்களின் வளர்ச்சியும் அதிலே தோன்றிய மற்ற தாவரங்களை உண்டு வளர்ந்து சேர்ந்து அழிந்து மறுபடியும் அழிவையே எருவாகக் கொண்டு குரங்குகள் மனிதர்கள் வரை தோன்றின.

4. கடினம்-நளினம்-சதப்பு என்ற மூன்று நிலங்களிலும் மரங்கள் வளர்ந்தன. கடினப் பகுதி மலைகள்; நளினப் பகுதி–பாலை–சதப்பு பகுதி–நெய்தல் என்று மூன்று நிலமாகக் கொண்டு மனிதன் தன்னை வளர்த்துக் கொண்டான். மலைகள் மருதம் என்றும்; பாலையைப் பண்படுத்தி முல்லை என்றும் இருநிலமாக ஆக்கிக் கொண்டான். சதசதப்பு நிலம் உழவும், பயிரிடவும், கடல் பகுதியை படகோட்டி முத்துக் குளித்து உணவுக்கு மீன் பிடித்து வாழவும் பழகிக் கொண்டான்.

5. ஆதியில் ஒலித்த நாதம் சூழ்நிலை, சந்தர்ப்பம், குரல் வளத்திற்குத் தக்கபடி மொழி, இயல், இசை, நாடகம் என ஆக்கிக் கொண்டான். நீர் தத்துவத்தை கடல் – நதிகள் – ஏரிகள் – குளங்கள் – குட்டைகள் – கிணறுகள் என்று தன்வரை கொண்டு வாழ்ந்தான். பயிர்கள்–தருக்கள் வளர்த்து நாவுக்கு ருசியாக சமைத்துச் சாப்பிட்டும், பேசிப் பழகி இல்லறம் நடத்தி வந்தான்; நாதம் கிளப்புவது நாக்கு; கேட்பது காது என்று வாழ்கிறான் இன்று.

6. ஒளியைக் கண்டான் ஒளியின் ஊடுருவல் ஏற்படும் வண்ண ஜாலங்களைக் காண்பதிலே அறிவை வளர்த்துக் கொண்டான். ஒளியை உண்டாக்கும் நெருப்பு கிடைத்தது. அதனைக் கொண்டு உணவு சமைப்பது முதல் உருக்கி, தட்டி, நீட்டி, ஓட்டி வெற்றி கொண்டு வாகனங்களைக் கண்டான். இன்று டீவி, வீடியோ முதலிய விசை ஒளியின் அற்புதத்தையும் ஒலியின் ஊடுருவலையும் கண்டு மகிழ்கிறான்.

7. காற்று என்ற தத்துவத்தால் இடைவெளியில் உள்ள அழுத்தங்களை உணர்ந்து நீர்மேல், வான வெளியில் உலவக் கற்றுக் கொண்டான். வான மண்டலத்தில் உள்ள மேகங்கள் அதன் வேகம், அதன் பொழிவு ஆகிய கொண்டு ருதுக்களை அமைத்து, காலங்களை நிர்ணயித்து, பூமியில் வளங்களைப் பெருக்கி வாழக் கற்றுக்கொண்டான். உடல் உறுப்புள் பிராண, அபானம் முதலிய பத்துவித வாயுக்களின் உலாவலைக் கண்டு கட்டுப்படுத்தி தெளிந்து வாழும் யோகத்தைத் தெரிந்தான். கரியமில வாயு, பிராணவாயு என பிரித்து வாழத் தேவையான காற்றை உள் புறங்களில் காற்றைக் கொண்டும், வெளியிட்டும் நிம்மதியாக வாழ்கிறான்.

8. நீர்: பிராணவாயு நிறைய உள்ள தண்ணீர், கரியமிலவாயு நிறைய உள்ள தண்ணீர் அனைத்தையும் வித்தியாசமின்றி உண்டு வாழும் மிருகங்களையும் மரங்களையும் வளர்க்கிறது. தண்ணீரில் ருசியற்ற தன்மை, பாய்ந்து ஓடும் பூமிக்குத் தக்கபடி ருசியைப் பெறுகிறது. ஓடுவதால் உடலில் வியர்வை, சுவாசிப்பதன் மூலம், நாவில் ருசிக்குத் தக்கபடி உமிழ்நீர், உடலில் இரத்த ஓட்டத்திற்கு தக்கபடி பித்தநீர், இன்பதுன்பத்தைக் காட்டும் கண்ணீர் காக்கும் கண்ணுள் ஒளிநீர் என உடலினுள்ளே வியாபித்தது.

வெளிஉலகில் மேகங்களில் நிறைந்த மழைநீர், மலைகளினின்று பாய்ந்தோடி வரும் நதிகளின் நீர் பெரிய குளங்களில் நிரம்பி ஏரிகளுங்கள் நீர் குட்டை

கிணறுகளில் நிரம்பியுள்ள ஊற்றுநீர், இறைக்கப் பாய்ந்து வரும் வயல்களுக்கான பாசனத் தண்ணீர் என்று இத்தனை பெயர்களுடன் உலாவிவரும் நண்ணீரை உபயோகித்து நால்வித வளங்களைப் பெருக்கி நலிலதொரு விவசாயி ஆனான் மனிதன். உபரிநீரை ஒழுங்குபடுத்தி வாய்க்கால் மூலம் தேங்க வைத்து குழாய்கள் மூலமாக உயரத்திலிருந்து அடிவாரத்தில் அமைந்துள்ள சிலிண்டரை பாய்ந்து சுழலவைத்து மின்சாரத்தையும் தண்ணீரால் உண்டாக்கக் கற்றான். மின்சாரத்தால் உடல், வீடு, தொழில் அனைத்தையும் சொகுசாக வளர்த்து வருகிறான். வீதிகளில் விளக்கு, ரேடியோ, பேன், குளியமைப்பு பெட்டி, சமைத்துச் சூடாகவே வைத்திருக்கும் பெட்டி, ஏர்கண்டிசன் பல நவீன கண்டுபிடிப்புகளால் தானும் வாழ்ந்து நாட்டையும் வாழ வைக்கிறான்.

9. பூமி: இது சமவெளி-மலைகள்-பள்ளம் என மூன்றுகப் பிரிந்து மலைகளில் வளங்களுக்கான உற்பத்திகளும், பள்ளங்களில் நீர்நிலைகளும், சமவெளியில் விவசாயம் முதலிய தொழில் செய்து தானும் தங்க வசதிகளையும் செய்து கொண்டு மனிதன் வாழ்கிறான். இப்பூமியைத் தோண்டினால் ஐந்துவிதப் பொன், தண்ணீர், எண்ணெய், இரசாயன மற்றும் கனிப்பொருள்களைப் பெறலாம் என மனிதன் கண்டான். பூமித்தாய் எவ்வம் பலகாலும் எடுக்க எடுக்க குறையாத வளங்களையும், வளர்ச்சியையும், தத்துவங்களையும் கொண்டது என்பதை அறிந்து அதனோடு ஒட்டி உறவாடி வீடு கட்டி வாழ்ந்து வருகிறான். நடை, கால்நடை, வண்டி சைக்கிள், கார், பஸ், ரெயில் வண்டி போன்ற பல போக்குவரத்து சாதனங்களை பூமியின் மேல் ஓட விட்டு தான் போய் வந்துகொண்டிருக்கிறான் மனிதன்.

இப்படி 'ஓம்' என்ற தத்துவ ஒலியிலிருந்து,

> ''புல்லாகி, பூடாகி, புழுவாகி, மரமாகி,
> பல்விருகமாகி, பறவையாய், பாம்பாகி, கல்லாய்,
> மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராகி,
> முனிவராய், தேவராய், சொல்லா நின்ற
> இத்தாவர சங்கமத்துள்''
>
> என்று மணிவாசகர் பாடுகிறார்.

மனிதன் தன்னை மனிதன் என்று அறிந்து கொண்டு சுகபோகங்களை வளர்த்துக்கொண்டு வாழ்ந்து பழகி விடுகிறான்.

10. 'தான்' தன் குடும்பம், நான், எனது என்ற அகங்காரம் தலைதூக்கும் பொழுது மனிதன், நீ, நினது என்ற எதிர்பகுதியைப் பார்க்கும் போது ஒத்திட்டுப் பார்க்கவும், உயர்வு தாழ்வுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஆரம்பிக்கும் போது வாதப் பிரதிவாதம், சண்டை, சமாதானம், இன்பம், துன்பம் என்ற இருபகுதியாகத் தன்னைப் பிரித்துக்கொண்டு இறப்பு பிறப்பினூடே ஆண்-பெண் பால் உணர்வால் உலகில் வாழ்கிறான்.

இந்த சமயத்தில்தான் அவனை நல்லவனுக்க, கொடுத்து வாங்கிப் பழக, நான், எனதால் ஏற்படும் பேதங்கள் நீங்க நல்ஆசான், நல்ல கூட்டம், நல்ல சாத்திரம் (அல்லது புராணங்கள்) தேவைப்படுகின்றன. இவற்றினையெல்லாம் சொல்லக் கூடியதுதான் வேதம். வேதம் ருக், யஜுர், சாமம், அதர்வனம் என நான்கு பாகங்களோடு கூடியது. ஓம் முதல் உலகியல் மனித தேவ ராக்ஷச குணங்களின் தன்மைகளையும் சொல்வது வேதங்கள்.

வேதங்களின் விரிவினைத் தெளிந்து மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு சட்டதிட்டங்களையும், பழகும் ஒழுங்குமுறைகளையும், ஒழுக்க நெறிகளையும் உண்மை வாழ்க்கைச் சிறப்பையும், வாழவேண்டிய முறைகளையும் விபரமாக எடுத்துச் சொல்லுகின்றன உபநிடதங்கள்.

இத்தகைய வேத தத்துவங்களான உபநிடத நல் உரைகளை உபதேசமாகக் கொண்டு மனிதன் பின் பற்றி வந்திருக்கிறான். அதனால் தான் நம், நாம் என்று சொல்லிக் கொள்ள நாமும், நம்மினமும் இன்றுவரை இருந்து வருகிறோம். மனிதர் ஒருவரோடொருவர் மோதிக் கொள்ளாமல், அழிந்து விடாமல் வாழ பஞ்ச தத்துவங்களை இன்றுவரை அழிவிற்கு பயன்படுத்தாமல் நம்மை மனிதர்களாகவே வாழ வைத்திருப்பது வேதங்கள் வகுத்த சட்டதிட்ட வாழ்க்கை ஒழுங்கான நெறிமுறைகள்தான். அதனைச் சுமந்து கொண்டுள்ளது உபநிடதங்கள். அதனைக் கைக்கொண்டு உலகில் ஏற்படும் துன்பங்களை நீக்கி இன்பங்களை நிலைக்கச் செய்யத் தோன்றியவர்கள் தான் தெய்வங்களும், அவதாரங்களும், சமய ஆராய்ச்சியாளர்களும் ஆவார்கள்.

> 'பரித்ராணய சாதுனும் விநாசாய சதுஸ்கிருதாம்
> தர்ம சமஸ்தாப னார்த்தாய சம்பவாமி யுகேயுகே'

என்ற பகவத்கீதையின் மொழிப்படி உலகில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான பழக்க வழக்கங்கள் மனித இனம் அவர்கள் வாழ்க்கைக்கான பஞ்ச பூத விரிவுகள் அனைத்தும் ஒரேமாதிரிதான். ஆனால் அதனை அனுபவிக்கும் மனிதன் நான், எனது என்ற அகங்கார, மமகாரம் என்ற விஷயமான (விஷமான) வெறியைக் கொண்டு விடுவதால் பேதங்களும் சண்டைகளும் இருப்பவன் இல்லாதவனிடம் சண்டை மூட்டிவிடும் கொடுமைகளும் எல்லா தேசங்களிலும் உண்டாகின்றன. இந்தச் சூழ்நிலையைச் சமாதானப்படுத்த அவதாரங்கள் தோன்றுகின்றன.

WE WISH WORLD HINDU CONFERENCE 1982
ALL SUCCESS



THE LITERARY PRESS

SALEM - 636001
SOUTH INDIA.

Phone: 3321

PIONEERS IN PRINTING

SINCE: 1937

அகில உலக இந்து மகாநாட்டை முன்னிட்டு
ஆத்மஜோதி வெளியிடும் சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

மலைநாட்டில் சிறந்த இரும்புச் சாமான்கள்
கம்பிட - வீட்டு நிர்மாணத்திற்கான சகல தேவைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்:

சென்றல் டிரேடிங் கோர்ப்பரேசன்

27, கம்பளை. வீதி,
நாவலப்பிட்டி.

தொலைபேசி இல: 323

★ ★

சகலவிதமான பெயின்ட் வகைகள்
மின்சார விளக்குகள் - சுவிட்சுகள்
மற்றும்
உதிரிப்பாகங்களுக்கு

நேஷனல் பெயின்ட் ஹவுஸ்

33, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி.

தொலைபேசி இல: 337

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!



யாழ்நகரில்.....

- சிறந்த கைக்கடிகாரங்கள்
- சுவர் மணிக்கூடுகள்
- மேசை மணிக்கூடுகள்
- சைக்கிள்கள்
- சைக்கிள் உதிரிப்பாகங்கள்

மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

நா. சாம்பசிவம் அன் கோ.

54, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.

N. SAMBASIVAM & CO.

54, Kasturiar Road – Jaffna.

Phone: 454

Grams: 'ENESCO'

1982ல் அகில உலக இந்து மகாநாடு இனிது நடைபெற
எங்களின் மனங்கனிந்த நல் வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கின்றோம்!

*

TATA Textiles

Stockist:

PANI CORPORATION

151, N. S. C. Bose Road,
MADRAS - 600 001

Phone: 34646

அகில உலக இந்து மகாநாடு
எல்லா வகையிலும் சிறந்து விளங்க
எமது நல் வாழ்த்துக்கள்!

R. A. N. A. TRANSPORTS

BUS OPERATORS

114, Valayakkara Street,
ERODE - 638001
TAMILNADU.

Phone: 3916

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!



அனைத்து மில் ஜவுளி ரகங்கள் வாங்க
கைராசியான இடம்

MARIS' TEXTILES

மாரிஸ் டெக்ஸ்டைல்ஸ் அன் சில்க்ஸ்

416, கடைவீதி,
சேலம் - 636001

Phone: 67061

உ

சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!



ஆடவர், இளம் நங்கையர்க்கேற்ற
உள்நாட்டு - வெளிநாட்டு சிறந்தவகை பிடவைகளுக்கும்

திருமண வைபவங்களுக்கும் ஏற்ற
அழகுமிகு சின்டெக்ஸ், சலுசலா, ஜே பி. சாரி, சூட்டிங்ஸ் வகைகள்
பெற்றுக்கொள்ளவும்,

சிறந்த விதை, மருந்து வகைகளுக்கும்

ஏற்ற ஒரே ஸ்தாபனம்

கலைமகள் ஸ்டோர்ஸ்

53 E, கோவில் கட்டிடம் - ராகல பஜார்,
ஹல்கரஞ்யா.

எங்கள் நல் வாழ்த்துக்கள்!



R. A. N. முத்துசாமி முதலியார்

நூல் வியாபாரம்

121, ஈசுவரன் கோவில் வீதி

ஈரோடு - 638001

தமிழ்நாடு.

பழக்கவழக்கங்கள் வித்தியாசப்படலாம்; சூழ் நிலை சந்தர்ப்பங்களுக்கும், மொழிகளுக்கும் ஏற்றபடி நடை, உடை பாவனை வித்தியாசப்படலாம். ஆனால் மனிதன் உடலில் கோளாறு, உணர்ச்சிகளின் புணர்ச் சிகள் ஆகியவற்றில் பெரிய அளவில் வித்தியாச மின்றி உண்பது; கேட்பது சொல்லுவது, செய்வது, புணர்வது போன்றவை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரிதான்;

ஏன் மனிதன் சண்டையிட்டுக் கொள்கிறான்? இதற்கு விடை மனிதன் தன் சுகம் பிறருக்குப் போய்விடக் கூடாது, பிறரிடம் துன்பம், துக்கம் தனக்கு வந்து விடக்கூடாதே என்ற பயம்; தன்னைவிட பிறர்பால் இவ்வளவு நலங்கள் இருக்கின்றன என்று பொறுமை நமக்குப் பிறரால் கஷ்டம் வந்து விடுமோ என்ற சந் தேகம்; பொறுமை மூன்றும் சேர்ந்து எதிராளியை எதுவும் செய்யத் தூண்டி விடுகிறது. எதிரில் உள்ள வன் பலசாலியாகவும் ஆள்கட்டுள்ளவனுகவும் இருந்தால் இன்னும் கோஷ்டி சேர்ந்து வர்க்கஜாதி இனப் போராட்டங்களை ஏற்படுத்தி நாட்டை குழப் புகிறான்.

இப்படிப் போராட்டம் நடக்கும் போது நியாய மூளைவர்கள் சத்தியம்-தர்மம்-கருணை என்ற பெய ரில் வாழ்பவர்கள் முதலில் தோன்றி தொல்லைப்படு வார்கள். பொறுமை, பொய், கொடுமை நிறைந்த வர்கள் தோற்ற நல்லவர்களை நோக அடிப்பார்கள் அப்போது, அருணகிரிநாதர் சொல்லியபடி:

"யான் எனதெனச் சருவும் ஈனசமயத்து எவரும்
உணர்தற்கு
அறிய நேர்மைக்காரனை" -தேவ புருஷன்

'தான் தனதெனத் தருக்கி எறிக்கும் தீமைகள் மாறி
டவும்
வான் புவியனைத்துமான தத்வம் பணிபவர் வாழ்த்தி
டவும்
'நான் தோன்றுவேன்" அவசியமானபோது உடனுக்
குடன்
உனைவருத்தம்விடு எல்லாம் என்செயல் பார் மகனே'

என்று எல்லாமான தத்வம் அங்கங்கு அவதா ரங்கள் சொல்கின்றன; அப்படி உலகம் வாழத் தோன்றிய அவதாரங்கள் சிவம், விஷ்ணு, சக்தி, கணபதி, குமரன், புத்தர், அல்லா, கர்த்தன் என்ற பெயர்களைக் கொண்டன; அந்தந்த அவதாரங்களை தீமைகளை நீக்கியபின் நல்லவர்கள் தீயவர்களாக 'தன் முனைப்பால்' யான், எனது கொண்டு மோதி வாதித்து அழியாமலிருக்க நீடுழிவாழ பழமையான உபநிடத்துக் கருத்துக்களையே பழக்க வழக்க நடை உடை பாவனைகளுக்குத் தக்கபடி அந்தந்த மொழி களில் முறையே சைவம், வைணவம், சாக்தேயம், காணபத்யம், கௌமாரம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் என்று சமயங்களை ஏற்படுத்தினர். அத னைப் பின்பற்றி நாயன்மார்கள், ஆழ்வார்கள், பக்தர் கள், பீஹர்க்கள், பகிர்கள், பாதிரியார்கள் தோன்றி முறை வழுவாமல் ஒன்றோடொன்று மோதிக் கொள் ளாமல் அங்கங்கே வாழ்ந்து வந்தனர்.

கலாச்சாரம் விஞ்ஞானம் வளர்ச்சியடையும் போது வெளியூர், வெளிநாடு, வெளி தேசங்களில் வியாபார நிமித்தம் ஒருநாட்டவர் மற்ற நாட்டினை நோக்கிச் சென்றனர். வியாபாரப் பொருள்கள் அந் நியர்களால் பறிபோகாமலிருக்க ஆயுதம் தாங்கிய ஆட்களுடன் சென்றனர். பலவான் புத்திமானுன். பேராசை கொடிகட்டிப்பறந்தன. வேற்று நாட்டுக்கு வியாபாரத்திற்கென கிளம்பியவர்கள் நாடுகளைப் பிடித்துக்கொண்டனர். கொள்ளையர்களுடன் கூட் டுச் சேர்ந்து கொண்டு உள்நாட்டிலுள்ள விரோத வெறியைப் பயன்படுத்தித் தங்கள் ஆதிக்கத்தால் நாட்டையே பற்றிக்கொண்டனர். இவை பல நாடு களிலும் தேசங்களிலும் அந்நாளில் நடு நடுங்க வைத்து யுத்தங்களை உண்டாக்கின.

இத்தகைய கொடுமைகளை வளரவிடாமல் அந் தந்த மதத் தலைவர்கள் வேத நியதிப்படி புத்தி சொல்லித் தடுத்திருக்கலாம். ஆனால் அம்மதத் தலை வர்கள் பஞ்சம், பசி, பொறுமை, பயம், ஏழ்மை, விரோதம் ஆகியவற்றை சாதகமான சூழ்நிலையைக் கொண்டு வியாபார - நாடுபிடி - ஆட்களோடு வந்து தங்கள் மதத்தைப் பரப்பினர்கள். பஞ்சம் போக்கல் ஆரோக்கியம் ஈதல் கல்வி தருவது என்ற நற்பணிகள் மூலம் மக்களையும், நாட்டையும் விலைக்கு வாங்கிவிட் டனர்.

ஜாதிச் சண்டை, நிலச்சொத்து தகராறு, உயர்வு, தாழ்வு மனப்பான்மை முதலிய வெறிகள் சூழ்ந்த இடங்களிலெல்லாம் பிறமதத்தவர்கள் ஊடு ருவ முடிந்தது. நல்ல வேளை மறுபடியும் இவ் இனவெ றிகளை விட்டொழிக்க விவேகானந்தர், இராமலிங்க வள்ளலார் - நாராயணகுரு, மகாத்மா காந்தி, ஸ்ரீ ஆனந்தாஸ்ரம சிவானந்தர் எனப் பல மகான்கள் தோன்றினர். அவர்களால் தெய்வீக தேசிய சுதந்தி ரம் பெற்றோம். இன்று நாம் சுதந்திர மக்கள்.

நாடு பிடிகாரர்களை விரட்டியாயிற்று பின்னும் ஏன் பேதங்கள்? எதற்காக ஜாதி பேதங்கள்? என்றால் அன்னியன் விதைத்த விதைப் பிடிப்பினை வேரோடு

களைந்தாலும் அம் மண்ணில் உள்ள பேத எண்ணம் உள்நாட்டுக்குள்ளே பதவி-புகழ் பிடிக்கும் போராட்டத்தை காஷி என்ற திரை மறைவில் ஜாதியின் பெயரால் ஓட்டுப் பெறுவதற்காக இன்றும் நிலவி வருகிறது.

நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்மை செய்ய ஓட்டுப் பெற்றிருந்தால் எவ்வளவோ நலனைச் செய்திருக்கலாம். 'எரியும் வீட்டில் பிடுங்கியது லாபம்' என்று சொந்த சுயநல ஆதாரத்திற்காக வாழும் அரசியலில் நாம் மாட்டிக் கொண்டுள்ளோம். ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்ளுதல், குறை கூறல், இவைதான் நாம் கேட்கும் பார்லிமெண்டின் குரல்; தண்ணீர் சிறிதுமில்லாத பகுதி - தண்ணீரில் கரைந்தோடும் பகுதி - சரியான சாலை வசதி - சட்ட ஒழுங்கு ஆகியவற்றிற்காக யார் பாடுபடுகிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் நாம் தர்மங்களைச் சொல்லும் வேதங்களை நல்வழிகளைக் காட்டும் உபநிஷத்துக்களையும் பின்பற்ற வேண்டும். சாமியார்கள், மடாதிபதிகள், பக்தர்கள், பாதிரியார்கள், பிஷப்புக்கள், பகிர்கள், மௌலாக்கள் ஆகியவர்கள் மனித இனத்தின் பெயரால் ஒன்று கூடவேண்டும் – வேத காலத்திற்கு நாம் போகமுடியாது. ஆனால் நிகழ்கால விஞ்ஞான அறிவுடன் பல நல் வாய்ப்புக்களைக் கொண்டு நல்ல பிரசாரம் செய்து நல்லவர்களாக வாழ வேண்டும்.

ஒவ்வொரு சமயமும் முதலில் தங்களுள் அபிப்பிராய பேதங்களை வேற்றுமைகளை நீக்கிக் கொள்ள வேண்டும். தங்கள், தங்கள் மதத்தில் உள்ள குறைகளை நீக்கிக் கொண்டு பிற மதங்களில் சமயங்களில் உள்ள மேன்மைகளைப் புரிந்து சேர்த்துக் கொள்ள வேண்டும். நன்மைகளைத் தவிர மதத்தலைவர்கள் பேசாமலிருக்க தங்களைத் தாங்களே அடக்கிக் கொள்ள வேண்டும். தப்பும் தவறுமாக உளறக் கூடாது. ஒரு வேளை யாராவது தவறு செய்தாலும் அவரைத் தனிமையில் சந்தித்து 'உணர்த்தும்' ஞானம், வைராக்கியம், ஒழுக்கம், நேர்மை நமக்குள் இருக்கவேண்டும்.

எனவே மகாநாட்டில் தாஸன் கொண்டுவரும் சில தீர்மானங்களை அலசிப்பாருங்கள்.

மதம்என்பதுஒன்றுதான்; அதுதனது நான்குவேதங்களையும் நூற்றுக்கு மேற்பட்ட உபநிடத்துக்களையும் கொண்டது. அதிலிருந்து தத்துவங்களையும் பின்பற்ற வேண்டிய முறைகளையும் அவதாரம் செய்து நடத்திக் காட்டிய தெய்வங்களின் பெயரால் அமைந்த சமயங்கள் தான் இப்பொழுது நம்மால் மதங்களாகப் போற்றப்படுகிறது. அவைகள் சைவம், வைணவம், சாத்வேயம், காணபத்யம், கௌமாரம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் அதன் பின்னும் முன்னும் எவ்வளவோ மதங்கள் ஹிந்துசமயம் தனக்கென்று ஆறுபகுதியையும் கொண்டு விட்டது. புத்த, இஸ்லாம், கிறிஸ்துவம் முதலியன தனியாகப் பிரிந்து நிற்கின்றன.

இந்துமதம் எல்லா மதக் கோட்பாடுகளுக்கும் தாயகமாக இருப்பதால் பாரத தேசத்தில் எல்லா மதத்தவர்களும் வந்து சுரண்டிக் கொண்டு போனது போக இன்று இந்த நாட்டிலேயே வானளாவிய கோபுரங்களோடு கூடிய தொழுகை ஸ்தலங்கள் அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

மேற்சொன்ன சமயங்கள் அந்தந்த தேசங்களிடையே ஏற்பட்ட தீமைகளை நீக்கி நன்மைகளை நிலை நிறுத்த தோன்றியவைகள் தான். எல்லா சமயங்களிலும் செயல்பட வேண்டிய தர்மங்களை அன்பு, பாசம், சத்தியம். நேர்மை, தியாகம் என்ற நற்பண்புகள் வளர அந்தந்த நாட்டிற்குத் தக்கபடி அகிம்சை, ஆற்றல் முதலியவற்றை கொண்டிருக்கின்றன. முக்கிய நோக்கம் ஆனந்தம், ஆரோக்கியம் என்பதான உபநிஷத்தின் லக்ஷியங்களைத்தான் போதிக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நம் மதத்தில் உள்ளவர்களுக்கு நம் சமய சான்றோர்கள் என்னென்ன நன்மைகள் செய்துள்ளனர். பிற மதத்தவர்கள் நம் மதத்தவர்களையும் மதம் மாற்ற என்னென்ன சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள் என்பதை நம் மத குருமார்கள் தலைவர்கள், மடாதிபதிகள் கவனித்தார்களா? ஏன் கவனிக்கவில்லை; மடங்கள், ஆசிரமங்கள், சமயப்பற்றுள்ள நிலையங்கள் இவைகள் தாம் வளர்ச்சி பெற என்னென்ன செய்ய வேண்டுமெனக் கவனித்துக் கொண்டிருந்தார்களே தவிர தாழ்த்தப்பட்டவர்கள் நடுத்தர கஷ்டப்படும் மக்கள் நலத்திற்காக ஏதாவது செய்தார்களா?

எக்காரணம் கொண்டும் சமய வளர்ச்சிக்கான தெய்வீகம் தவிர 'இந்து ஸ்தாபனங்களில் பிரசங்கங்கள் அமைக்கக்கூடாது. கருத்து மோதல்களையோ பட்டிமன்ற விவாத அரங்கு முதலிய சர்ச்சைகளை மத சம்பந்தமான கோவில்கள் முதலிய ஸ்தாபனங்களில் நிச்சயமாக ஏற்படுத்தக் கூடாது. வாதப்பிரதிவாதங்கள் சர்ச்சைகள் அனுபவமில்லாமல் கிளம்புவதால் அறிவையும் மனத்தையும் குழப்பிவிடுகிறது.

கோவில்களில் விக்கிரகங்கள் திருட்டுப்போவதும் கோவில்களுள் முறைகேடாக சிலர் நடந்து கொள்ளுதல் பொறுப்புள்ள சிலர் அதற்குத் துணைபோதல் ஆகியவை நேராமல் இருக்க அரசை நமக்குக் காவலாகக் கொள்ளும்படியான தகுதி பெறவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவ சமயம்

— முல்லைமணி வே. சுப்பிரமணியம்B.A. (Hons) —

எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
வல்லோர் புகழருவி தெற்கெல்லை — நல்லதிருக்
கோணமலை கீழ்பால் கேதீச் சரமேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு.

என்னும் வெண்பா வன்னிநாட்டின் எல்லைகளை எடுத்துக் கூறுகின்றது; இவ்வெல்லைக்குள் அடங்கிய வன்னிநாடு மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களையும் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்பகுதியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பான்மையோர் சைவசமயத்தவர்கள்; கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் சிறுபான்மையாக வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கையிலும் சைவசமயத்தின் பாதிப்பு இருப்பதைக் காணலாம்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சைவசமயிகளிலுடைய வழிபாட்டு முறைகள் யாழ்; மாவட்டத்திலுள்ளதை விடச் சற்று வேறுபட்டதாகவே காணப்படுகின்றது; இப்பிரதேசத்தின் புவியியல் தன்மை, மக்கள் மனப்பாங்கு, தொழில் என்பவற்றிற்கும் சமயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம்.

யாழ்ப்பாணக் கலாசாரம் 'கந்தபுராண கலாச்சாரம்' என்பர் பண்டிதமணி சி; கணபதிப்பிள்ளை அவர்கள்; யாழ்ப்பானத்தில் முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்க முல்லைத்தீவில் சிவவழிபாடும், சக்தி வழிபாடுமே முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

முல்லைத்தீவுப் பிரதேச சைவசமயிகளின் வழிபாட்டு முறைகளை இருபெரும் பிரிவுகளாக வகுக்கலாம்;

(1) பெருந்தெய்வ வழிபாடு
(2) சிறுதெய்வ வழிபாடு

பெருந்தெய்வ வழிபாடு

சிவன், சப்தகன்னியர், கண்ணகி அம்மன், பிள்ளையார், முருகன் என்னும் தெய்வங்களுக்குரிய வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்கள் இங்கு உண்டு. முள்ளியவளைக் காட்டு வினையகர், நெடுங்கேணி வில்லையடிப் பிள்ளையார், தண்ணீரூற்று ஊற்றங்கரை வினையகர், குமுழமுனை கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார்என்பவை பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்களாகும்; ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரன் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த சிவன் கோயிலாகும். வற்றாப்பழைக் கண்ணகை அம்மன், வட்டுவாகல் சப்தகன்னியர் என்பவை சிறந்த சக்தி வழிபாட்டுத் தலங்களாகும். குமாரபுரம் சித்திரவேலாயுதர், முள்ளியவளைக் கல்யாண வேலவர் ஆலயங்களும் பிரசித்தி வாய்ந்தவை.

சிறு தெய்வ வழிபாடு

விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்ட இப் பகுதி மக்கள் ஐயனார், வன்னியில் தெய்வம், அண்ணமார், வதனமார், வைரவர், வீரபத்திரர், நாகதம்பிரான், பத்திரகாளி போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இவற்றுள் நாகதம்பிரான், ஐயன் வைரவர் என்னும் தெய்வங்களுக்கே நிரந்தர கோயில்கள் உண்டு. ஏனையவற்றிற்கென கோயில்கள் இல்லை; விவசாய விருத்திக்காகவும், வனவிலங்குகளிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் நோய் நீக்கத்தின் பொருட்டும் விவசாயத்திற்கு உதவியான கால்நடைகளின் பாதுகாப்பிற்காகவும் இத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

பிள்ளையார்

ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோயில்கள் மாத்திரமன்றி வயல் வெளிகளிலும் வினையகர் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்; விவசாயத்திற்கும், கல்விக்கும், நோய் நீக்கத்திற்குமாகப் பிள்ளையார் வழிபடப்படுகின்றார்;

முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள வினையகர் ஆலயங்களில் முள்ளியவளைக் காட்டு வினையகர் ஆலயமே மிகவும் பழமை வாய்ந்தது. இவ்வாலயத்தை யாழ்ப்பாணத்தை யாண்ட பரராசசேகர மன்னன் வழிபட்டான் எனக் கர்ணபரம்பரைக் கதையுண்டு. பரராசசேகர மன்னன் பெயரால் அமைந்த கோட்டையின் அழிபாடுகள் இவ்வாலயத்தின் அண்மையில் உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் முடியையும் செங்கோலையும் மறைத்து வைத்து உண்மத்த வைரவனைக் காவல் வைத்தான் என்றும் காட்டுவினையகர் ஆலயத்தை வழிபட்டான் என்றும் யாழ்ப்பாணவைபவமாலை குறிப்பிடுகின்றது.

நினைவன் கந்தன் என்னும் பக்தனைப் போரித்துக் கேயப்படைவீரர் துரத்திச் சென்றனர். அவன் விநாயகர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள மரமொன்றில் ஏறி இருந்தான். தன்னைப் படைவீரர் கண்ணுக்குத்

காட்டாமல் மறைக்குமாறு விநாயகரை வேண்டினான். மரத்திலிருந்த குளவிக்கூடு உடைந்து குளவிகள் படை வீரரைத் துரத்தத் தொடங்கின. நினவன் கந்தன் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்ற மணியொன்றை வார்ப்பித்துக் கொடுத்தான். அந்த மணி இப்பொழுதும் ஆலயத்தில் உண்டு. அடிக்கும் பொழுது 'நினவன் கந்தன்' என்றே ஒலிக்கின்றது. மறைந்திருந்த பக்தனைக் காட்டாதபடியால் காட்டா விநாயகன் என்றும், அடியவனுக்கு அருள் காட்டிய தனால் காட்டுவிநாயகன் என்றும் அழைக்கப்படுகின்றார். வற்றாப்பழைக் கண்ணகை அம்மன் பொங்கல் கிரியைகளுடன் இவ்வாலயம் தொடர்புடையது. கதிரையப்பர் பள்ளில் மூத்த நயினாதை என இவ்விநாயகர் குறிப்பிடப்படுகிறார்.

குமுழமுனையில் கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் ஆலயம் உண்டு, ''கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கும்மிகள்'' என்னும் நூல் இவ்வாலயத்தின் வரலாற்றை விரித்துக்கூறுகின்றது. பரத கண்டத்திலிருந்து பட்டாணி ஒருவன் மூன்று விநாயகர் விக்கிரகங்களைக் கருவாடு ஏற்றிவந்த படகிலே இலங்கைக்குக் கொண்டுவந்தான். கருவாட்டின் நாற்றத்தைச் சகிக்காமல் விக்கிரகங்கள் செம்மலைக் கடலிலே குதித்துவிட்டன. இவற்றுள் ஒன்று குமுழமுனையிலுள்ள கொட்டுக்கிணற்று வயலிலும் மற்றது கொக்குத் தொடுவாயிலுள்ள கோட்டகக் கேணியிலும், மூன்றாவது விக்கிரகம் அமரிவயலிலும் சென்று மறைந்து கொண்டன. குமுழமுனையை அடைந்த பிள்ளையார் மருதமரமொன்றின் கீழுள்ள நெற்களத்தை அடைந்து அங்கே தூற்றுப் பொலியுள் மறைந்திருந்தார். மூன்று நாட்களாக நெல்லைத் தூற்றியபோதும் பொலி பெருகிக் கொண்டே வந்தது. பொலி தூற்றியவர்கள் களைப்பினால் நித்திரையாகி விட்டனர். பிள்ளையார் கனவில் தோன்றிப் பட்டாணியொருவன் தன்னைத் தேடி வருவான் என்றும் 'நெல்லுக்குள் இருக்கும் கல்லைத் தவிர வேறு கல் இல்லையென்று சத்தியம் செய்யவும்' என்று கூறினர். பட்டாணி தேடிவந்து விசாரித்த போது அவர்கள் அப்படியே கூறினர். பின்னர் கொட்டுக் கிணற்றடியில் பிள்ளையாரைப் பிரதிட்டை செய்து பூசிக்கத் தொடங்கினர்.

கோட்டகக் கேணிப் பிள்ளையார் முஸ்லிம் ஒருவருக்கு அருள் புரிந்ததாகக் கூறப்படுகின்றது. உழவு மாட்டைக் காணாமல் முஸ்லிம் ஒருவர் பல நாட்களாகத் தேடினார். கவலையுடன் இருக்கும் போது கோட்டகக் கேணிப் பிள்ளையாருக்குக் கற்பூரம் கொளுத்தித் தேங்காய் அடிப்பதாக நேர்த்திக் கடன் வைத்தால் மாடு கிடைக்கும் என்று ஒருவர் கூறினார். நேர்த்தி வைக்கவே மாடுகள் அகப்பட்டன. தேங்காயும் கற்பூரமும் கொண்டு கோட்டகக் கேணியை நோக்கிச் செல்லும்போது தெருவில் ஒருவர் விசாரித்தார். நேர்த்திக் கடனை நிறைவேற்றப் போவதாகக் கூறவே பிள்ளையாருக்கு எங்கேயும் கற்பூரம் கொளுத்தலாம் என்று வழிப்போக்கன் கூறினான். அதன்படி அவ்விடத்திலேயே கற்பூரம் கொளுத்தித் தேங்காய் அடித்தார். திரும்பிப் பார்க்கும் போது வழிபோக்கரைக் காணவில்லை. பிள்ளையாரே வழிப்போக்கனாக வந்து காட்சி கொடுத்தார் எனக் கருதப்படுகின்றது.

தண்ணீரூற்று ஊற்றங்கரை விநாயகர் கோயில் வரலாற்றையும் பிள்ளைச் சதகம் என்னும் நூல் விரித்துக் கூறுகின்றது. 'நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலையில்' வில்வையடிப் பிள்ளையார் வரலாறு கூறப்படுகின்றது.

சக்தி வழிபாடு

சப்த கன்னியர் வழிபாடும், கண்ணகை அம்மன் வழிபாடுமே மிக மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஒட்டு சுட்டானுக்கும் புதுக்குடியிருப்புக்கு மிடையேயுள்ள மன்ன கன்டல் என்னுமிடத்தில் சப்த கன்னியர் ஆலயமொன்றின் அழிபாடுகள் உண்டு. மிகவும் தொன்மைவாய்ந்த சப்த கன்னியர் ஆலயம் வட்டுவாகலில் உண்டு; முன்பிருந்த பழைய ஆலயத்தைத் திருத்திக் கட்டுவதற்காக அகழ்ந்த பொழுது கிடைத்த கட்டடப்பொருள்கள் இந்தியாவிலுள்ள வேதாரணியத்திற்கு அண்மையிலுள்ள திருக்கிளர் என்னுமிடத்திலிருந்து கொண்டுவரப் பட்டதாகக் கருதப்படுகின்றது; சப்த கன்னியர் பற்றிய விபரம் சப்த கன்னியர் தோத்திரத்தில் பின் வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

மங்கை அபிராமி மகேஸ்வரி கௌமாரி
நங்கை நாராயணியாம் நாதனெடு-தங்கிமன்றுள்
வாதாடுங்காளி வராகி யிந்திராணி யிவர்
பாதாரவிந்தம் பணி.

ஏட்டுப் பிரதியாகவுள்ள சப்தகன்னியர் தோத்திரம் பொங்கல் காலத்தில் பாராயணம் செய்யப்படுகின்றது. ஆனிமாதப் பௌர்ணமியை அடுத்துவரும் திருவோணத்திற்கு முன்பின்னாக வரும் திங்கட்கிழமை பொங்கல் நடைபெறும்.

பொங்கல் தினத்தன்று பூசாரியார் மஞ்சள் உடை உடுத்துதலையை மஞ்சள்துணியால்கட்டிப்பின்னுக்குத் தொங்கவிட்டு பொற்பிரம்பு சொருகி உருக்கொண்டு ஆடும் காட்சியை இன்றும் காணலாம்; முள்ளியவளையிலுள்ள பூசாரியார் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே பரம்பரை பரம்பரையாகப் பூசையையும் பொங்கலையும் நடத்திவருகின்றனர்.

வற்றுப்பளைக் கண்ணகி அம்மன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகப்பிரசித்தி பெற்ற ஆலயம் வற்றுப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயமாகும். இவ்வாலயத்திற்கு ஈழத்தின் பல பாகங்களிலிருந்து இந்துக்களும், பௌத்தர்களும் வழிபாட்டிற்கு வருகின்றனர். இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிச் 'சிலம்புகூறல்' என்னும் ஏட்டுப் பிரதியிலுள்ள காப்பியமும் 'அம்மன் சிந்து', 'வற்றுப் பளைக் கண்ணகி அம்மன் வரலாற்றுச் சிந்து', 'பனிச் சையாடிய சிந்து' என்பன விரிவாகக் குறிப்பிடுகின்றன.

நந்திக்கடற்கரை வெளியிலே சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டு நின்றனர். அப்பொழுது நரை மூதாட்டி யொருத்தி தோன்றினாள். சிறுவர்கள் அவளை வரவேற்று உபசரித்தனர். மூதாட்டியின் பசியைப் போக்க பொங்கல் செய்தனர். அப்பொழுது பொழுது சாய்ந்த நேரமாகையால் விளக்கேற்று மாறு மூதாட்டி கூறினாள். எண்ணெய் இல்லை யென்று சிறுவர்கள் கூறினர். கடல் நீரை அள்ளி நெய்யாக இட்டு விளக்கேற்றுமாறு மூதாட்டி கூறினாள். அவர்கள் விளக்கேற்றி மூதாட்டியின் பசியை ஆற்றினர். தனது தலையைப் பார்க்குமாறு மூதாட்டி கூறவே தலையைப் பார்த்தனர். தலையைப் பார்த்த சிறுவர்கள் அதில் ஆயிரம் கண்கள் இருப்பதைக் கண்டு பயந்து அலறினர். மூதாட்டி மறைந்து விட்டாள். தனது பெயர் கண்ணகி என்றும், தொடர்ந்து வைகாசி மாத விசாகத்தை அண்மிய திங்கட்கிழமை தான் வருவதாகவும் அசரீரி கூறியது. கண்ணகி அம்மன் காட்சி கொடுத்து மறைந்த பின் இச்செய்தியை ஊர்ப் பெரியவர்களிடம் கூறினர். ஊரவர்கள் ஒன்று சேர்ந்து நந்திக் கடற்கரையில் பொங்கல் செய்து வந்தனர். கண்ணகி அம்மன் வந்து அமர்ந்திருந்த வேப்பம் படவாள் தளைத்து மரமாக வளரத் தொடங்கியது.

காலப் போக்கில் அம்மன் பொங்கலுடன் வற்றுப்பளைக்கு அண்மையிலுள்ள கிராமங்கள் தொடர்பு படுத்தப்பட்டன. வையாபாடல், கதிரையப்பர்பள்ளு என்னும் நூல்களில் சிறப்பித்துக் கூறப்படும் முள்ளிய வளைக் காட்டுவிநாயகர் ஆலயத்திற்கும் வற்றுப்பளைக் கண்ணகி அம்மனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அம்மன் காட்சி கொடுத்த இடத்தில் பொங்கலிட்டு வந்தவர்கள் அப்பொங்கலுக்கு முன்னோடியான வழிபாட்டு நிகழ்ச்சிகளை முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்தில் தொடங்கி வைக்கின்றனர். பொங்கலுக்கு முதல் மடைகளும் ஞாயிற்றுக்கிழமைப் பொங்கலும் காட்டுவிநாயகர் ஆலயத்தில் இடம்பெறுகின்றன. முதலிலே வேளாளரும் பிற தொழில்புரியும் சாதியினரும் இணைந்து நடத்திவந்த பொங்கலில் பிராமணர்களும் பங்குகொள்ளத் தொடங்கினர். ஆகம முறைப்படி கோயில் அமைக்கப்பட்டு தென்னன் மரபடியிலிருந்து வருவிக்கப்பட்ட அந்தணர்கள் திங்கட்கிழமைகளில் பூசை செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

இன்னும் ஏட்டுப்பிரதியாக இருக்கும் சிலம்பு கூறல் காவியம் சிலப்பதிகாரக் கதையிலிருந்து சற்று வேறுபட்ட கதையை மிகவிரிவாக எடுத்துக்கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் மானிடப் பெண் தெய்வமான கதை கூறப்பட சிலம்பு கூறலில் உமாதேவியாரே பாண்டியன் மகளாகப் பிறப்பதாக உரைக்கப்படுகின்றது. பாண்டியன் நெடுஞ்செழியன் மகப்பேறுவேண்டித் தவஞ் செய்தான். சிவபெருமான் உமாதேவியார் சகிதம் காட்சி கொடுத்தார். சிவபெருமான் பாண்டியனுக்குப் பெண்மகளொன்று பிறக்குமென வரமளித்தார். அப்பொழுது முன்செய்வினை சூழ பாண்டியன் உமாதேவியாரது தனபாரத்தைக் கண்டு சிற்றுசைகொண்டு சிரித்தான். தேவியின் கண்ணிலிருந்து தீச்சுவாலை தோன்றியது. அத்தீச் சுவாலை இறைவனது அருளால் அடங்கி இரண்டு தீப்பொறிகளாகி அருகே நின்ற மாமரத்தின்கண் சென்று தங்கி மலர்களாயின. உமையம்மையார் பாண்டியனைப் பார்த்து

"அறிதிரண்ட முலைமிசைநீ ஆசைகொண்டு சிரித்ததனால்
குறிதிரண்ட கூடலுடன் கொன்றிடுவேன் உன்னையும்
நான்"

எனவஞ்சினங் கூறி "உனக்குப் பிறக்கும் பிள்ளையினால் நீ ஆசை கொண்ட எனது முலையை உனது முன்னிலையில் திருகி எறிந்து மதுரையை எரிப்பேன்" என்று கூறி மறைந்தார். இதனால் மனக்கலக்கம் அடைந்த பாண்டியன் சிவபெருமானைத் தினந்தோறும் வழிபட்டு வந்தான்.

கோவிலருகிலிருந்த மாமரத்திலிருந்து நாள்தோறும் மாங்கனி யொன்று விழுந்தது. அதனை இறைவன் பூசைக்கு உபயோகித்தான். ஒருநாள் இரண்டு மாங்கனிகள் விழுந்தன. நன்கு கனிந்ததைப் பூசைக்கு உபயோகித்து மற்றதை மறுநாள் பூசைக்கெனக் கருதிப் பொற்குடத்தில் இட்டான். அடுத்த நாள் பார்த்த பொழுது அழகானபெண் குழந்தையொன்று காணப்பட்டது. அக்குழந்தையைக் கோப்பெருந்தேவியின் கையிற் கொடுக்க தேவியும் மனம்மகிழ்ந்தார். சோதிடரை வரவழைத்து பலாபலன்களைப் பார்ப்பித்தான். அவர்கள் இக்குழந்தையால் மதுரைக்கும் மன்னனுக்கும் அழிவு நேரிடும் என்று கூறினர்.

பாண்டியன் அக்குழந்தையைப் பேழை யொன்றில் இட்டு அலைகடலில் தள்ளிவிட்டான். இப்பேழையைக் காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த மாநாகர் கண்டெடுத்து அதனுள் இருந்த குழந்தையை

வளர்த்தார். குழந்தை வளர்ந்து மணப்பருவம் அடைந்ததும் மாசாத்துவான் மகன் கோவலனுக்குத் திருமணம் செய்து வைத்தான். கோவலன் கண்ணகியை ஆணைத்துக் கொள்ள நெருங்கவே அக்கினிச் சுவாலையொன்று கண்ணகியின் கக்கத்திலிருந்து எழுந்தது. அதன் காரணத்தைக் கோவலன் வினவினான். அப்பொழுது கண்ணகி நான் ஒரு தெய்வீகம் நிறைந்த அவதாரப் பெண்ணாவேன்; என்னை நீர் அணுகுவீராயின் அக்கினியால் எரிந்து நீருகிவிடுவீர். நான் உலக ஆசாரப்படி தங்கள் மனைவியாக மங்களநாண் பூட்டப் பெற்றதற்கமையத் தங்களுக்குரிய தொண்டுகள் புரிந்து பார்ப்பவர்கள் கொண்டாடும் பத்தினிபோல் வாழ்ந்து வருவேன்' என்று கூறியருளினார். காப்பியம் முழுவதும் கண்ணகியைத் தெய்வத்தின் அவதாரமாகவே புலவர் வர்ணிக்கிறார்.

கண்ணகி அம்மனின் அற்புதங்கள் பற்றிப் பல கதைகள் உண்டு ஆலயத்தில் களவெடுத்துச் சென்றவர்களுக்கு உடனே கண்தெரியாமல் போய்விட்டது. உடனே களவெடுத்த பொருட்களை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். கண்ணகித் தெய்வத்தைப் பறங்கித்துரை யொருவன் ஏளனம் செய்தான். கோயிலுக்குப் படகுத்திலே நின்ற பனிச்சை மரம் ஆடி அவன்மீது காய்களை எறியத் தொடங்கியது.

பத்தஞானி என்பவர் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த பத்ததியில் கூறியபடியே பொங்கற் கிரியைகள் எல்லாம் நடைபெறும். வற்றுப்பளை பொங்கலை அடுத்த வெள்ளிக்கிழமை முள்ளியவளையிலுள்ள நாவற்காட்டில் பத்தஞானியை அடக்கம் செய்த இடத்தில் பத்தஞானி பூஜை நடைபெறும்.

வற்றுப்பளைப் பொங்கலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் 'பாக்குத் தெண்டுதல்' என்னும் வைபவம் இடம்பெறும். இதுவே பொங்கலுக்குரிய ஆயத்தக் கிரியை யாகும். அடுத்த திங்கட்கிழமை சிலர் பத்தைக் கடலில் நீர் எடுத்துக்கொண்டு முள்ளியவளை காட்டு வினாயகர் ஆலயத்திற்குச் செல்வர். இவ்வைபவம் 'தீர்த்த மெடுத்தல்' எனப்படும். கடல் நீரையே நெய்யாக விட்டு எட்டு நாளும் விளக்கெரிக்கப்படும். பாக்குத் தெண்டிய நாள் தொடக்கம் பொங்கல் நடைபெறும் நாள்வரையும் வற்றுப்பளைக்கு அண்மையிலுள்ள கிராமத்தவர் அமைதியான வாழ்க்கையைக் கடைப்பிடிப்பர். இக்காலப் பகுதியில் மேளமடித்தல், அரிசி, தூள் என்பன இடித்தல் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் நடத்துதல் தவிர்க்கப்படும்.

தான் தோன்றி ஈஸ்வரர்

ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர் ஆலயமே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரேயொரு சிவன் கோயிலாகும். இதன் தோற்றம் பற்றி 'தான்றி ஈஸ்வரன் பாமாலை' என்னும் நூல் விரித்துக் கூறுகின்றது. மூன்று சித்தர்கள் ஒட்டுசுட்டானுக்கு வந்தார்கள்; ஒருவர் ஒட்டுசுட்டானிலும், இன்னொருவர் சம்மாந்துறையிலும் மூன்றாமவர் வாவெட்டி மலையிலும் சமாதி அடைந்தார்கள்.

யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த தீரபுத்திரர் என்பவர் தம் சுற்றத்தவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக ஊரைவிட்டு இங்குவந்து குடியேறினார். அவர் காடு வெட்டித் திருத்தி குரக்கன் பயிர் செய்தார். குரக்கனை வெட்டிய பின் காய்ந்த ஒட்டுக்களை எரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஒரு இடத்தில் ஒட்டு எரியவில்லை; மண்வெட்டியால் வெட்டி ஒட்டை அகற்ற முனைந்தார். அப்பொழுது இரத்தம் தோன்றியது. அவ்விடத்தைக் கூர்ந்து நோக்கிய போது ஓர் லிங்கம் காணப்பட்டது. இதனை வன்னி மன்னனுக்கு அறிவித்தார். அவ்விடத்திலே சிறிய ஆலயம் அமைத்து வழிபாடு நடைபெறத் தொடங்கியது. அவ்விடத்திற்கு ஒட்டு சுட்டான் என்றும் பெருமானுக்கு தான் தோன்றி ஈஸ்வரர் என்றும் பெயர் வழங்கியது. வேகாவனேஸ்வரர் என்றும் அழைக்கும் வழக்கமும் உண்டு.

ஒரு முறை வன்னி மன்னன் யானைகள் பிடித்துத் தரும்படி பணிக்கனுக்குக் கட்டளையிட்டான். பல நாள் தேடியும் யானைகள் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட தினத்திற்குள் யானைகள் பிடித்துத் தரப்படாவிட்டால் பணிக்கனைச் சிரச்சேதம் செய்வதாக வன்னி மன்னன் கூறினான்.

மன்னனின் தண்டனையிலிருந்து தன்னைத் தப்புவிக்குமாறு தான் தோன்றி ஈஸ்வரனை வேண்டினான். யானைகள் கிடைத்தால் கோயிலைப் பெருப்பித்துக் கட்டுவதாக நேர்த்திக்கடன் வைத்தான். இறைவன் கனவில் தோன்றி 'இத்திமடுவிற்கு அண்மையிலுள்ள கினிமடுக் காட்டினுள் பூரண தினத்தில் சென்றால் யானைகளைக் காண்பாய்' எனத்திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி யானைகளைப் பிடித்து வன்னி மன்னனுக்குக் கொடுத்தான். தன் நேர்த்திக் கடனை நிறைவேற்றக் கோயிலைப் பெருப்பித்துக்கட்டினான். ஒட்டுசுட்டானில் பிரதான வேலைப்பகுதி ஓவசியர் சண்டிலிப்பாய் சின்னத்துரை என்பவர் அடுத்த கட்டத் திருப்பணியைத் தொடர்ந்தார். ஆலயத்தின் முன் அழகான தோற்றமுடைய திருக்குளத்தைக் கட்டுவித்தார். ஒருமுறை சீமெந்துப் பீப்பாக்களை கோயிலுக்கு வெளியேயுள்ள அரசமரத்தின் கீழ் பறிப்பித்து விட்டார். அன்றிரவு பெருமழை பெய்தது. சீமெந்து முழுவதும்பழுதடைந்துவிடுமே என்றுகவலை கொண்டு போய்ப் பார்த்தபொழுது சீமேந்துப் பீப்பாக்கள் ஆலய மண்டபத்தினுள் உருட்டி விடப்பட்டிருப்பதைக் கண்டார்.

நகுலேஸ்வரத்தின் பெருமை

— நகுலேஸ்வரக் குருக்கள் —

கீரி மாமலை வாரிதி பாடியே
கிரிச னைநகு லேசனை நாடியே
சேரு மன்பொடு சிந்தனை செய்துமேற்
றிசைகொ ளுக்கிர சோழரா சன்மகள்
வரு தப்பிர வல்லியென் பேரினள்
வாவு வெம்பரி மாமுக மோடுநோய்
தீர நீங்கின ளித்தலத் தேயெனிற்
செப்பி லங்கையி லொப்பிதற் கில்லையே.

புராதன காலத்திலே திருத்தம்பலேசுரம் எனவும், நகுலமுனிவர் அருள் பெற்றபின் நகுலேசுவரம் எனவும் அழைக்கப்படும் கீரிமலைச் சிவன் கோயில் யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலே சாகர சங்கம புண்ணிய தீர்த்தக்கரையிலே இருக்கின்றது, இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் விஷேடம் பெற்றது; இட்ட சித்திகளைக் கொடுப்பது; மனோலையத்துக்கும், வியாதி நீக்கம் முதலிய வைகளுக்கும் ஏற்றது.

நகுலேச தீர்த்தமானது நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலாறுகின்ற சுத்த சலமும் வடக்கிலுள்ள உப்புச் சலமுங் கலந்து கிழக்கு நோக்கிய சிவரூபமுஞ் சத்திரூபமுமாயிருக்கின்ற இயல்பினாலே திவ்விய தீர்த்தமாகும். இது கங்கா சமுத்திர சங்கமமென்றும், கண்டகி தீர்த்தமென்றும் பெயர் பெறும். இத் தீர்த்தத்திலே காலந்தோறும் அளவில்லாத அன்பர்கள் விதிப்படி ஸ்நானஞ் செய்து பயன் பெற்று வருகிறார்கள்.

முன்னொரு காலத்திலே மேருமலையின் இடப்பாகத்திலே தவஞ் செய்துகொண்டிருந்த சுதாமா என்னும் முனிவருடைய சாபத்தினாலே துர்த்தரன் என்னும் வேடன் கீரிமுகம் பெற்றான். உடனே வேடன் நடுநடுங்கி அச்சாபத்துக்கு விமோசனம் கொடுக்கும்படி வேண்டினான். முனிவர் கருணை கொண்டு "வேடனே, நீ என் தரிசனத்தாற் சுத்தனானாய். வேதாரணியத்திற்குத் தெற்கிலுள்ள கடலிலே இலங்கையென்றொரு தீவு உளது. அதன் வடக்கே ஓர் உயர்ந்த மலையிருக்கிறது. அங்கு சென்று கருமயோகஞ் செய்தால், கீரிமுகம் மாறி மோட்சமும் பெறுவாய்" என்று கூறி யோக மார்க்கங்களை உபதேசித்து ஆற்றுப்படுத்தி அனுப்பினார்.

கீரிமுகம் பெற்ற அவ்வேடன் இங்கு வந்து கங்கா தீர்த்தத்தில் நீராடி மலையிலே ஒரு சாரலிலிருந்து கருமயோகஞ் செய்வானாயினன். பல்லாண்டு காலப் தீர்த்தஸ்நானம், ஈசுரவழிபாடு, செபம் முதலியன செய்துகொண்டிருந்தலைத் திருவுளங்கொண்ட சிவபெருமான் உமாதேவியாரோடும் முருகப்பிராணோடுங் கூடி இடபாரூடராய்க்காட்சி கொடுத்தருளினார். அப்போது அவ்வேடனாகிய நகுலமுனிவர் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தோத்திரஞ் செய்து வணங்கினார். சிவபெருமான், "அறிஞனே, நீஇப்போது அழகிய முகம் பெறுவாய்; நீ தவஞ் செய்த இம்மலை நகுலமலையென்றும், உனக்கு அருள் செய்த எம் நாமம் நகுலேசுரர் என்றும், தேவி நாமம் நகுலாம்பிகையென்றும், தீர்த்தம் நகுலேச தீர்த்தமென்றும் வழங்குக" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். நகுல முனிவர் பின்னும் பலகாலம் தவஞ் செய்து மோட்சமடைந்தார்.

திசையுக்கிர சோழன் மனைவியாகிய கனகாங்கியென்பவள் குதிரைமுகமுடைய கின்னரப் பெண்ணொருத்தியின் சாபத்தினாலே குதிரை முகமுடைய மாருதப்புரவிகவல்லியென்னும் பெண்ணைப் பெற்றாள். அப்பெண் குன்ம நோயும் உடையவளாய் இருந்தாள். வெட்கத்தினால் வருந்த கழுத்துடையவளாய்ப் பல தீர்த்தங்களாடி இறைவனைத் துதித்து வந்தாள். நகுலேசுவரப் பெருமான் அவளது கனவிலே சந்நியாசியாய்த் தோன்றி "மாருதப் புரவிகவல்லியே, யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள நகுலேச தீர்த்தம் கங்கையிலும் மேன்மையுடையது; அத்தீர்த்தத்திலே முழுகிச் சுகமடைவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவள் அவ்வாறே அத்தீர்த்தத்திலாடிக் குதிரைமுகமுங் குன்மநோயும் மாறப்பெற்றாள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி, இராமர், சுசங்கிதன், நளன், அருச்சுனன் முதலிய பலர் நகுலேசுவரத்துக்கு வந்து, நகுலேச தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, நகுலாம்பிகாசமேத நகுலேசுவரப் பெருமானைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டு, இட்ட சித்திகளைப் பெற்று உய்ந்தார்கள்.

வடமொழிச் சைவ புராணங்கள் பத்தினுள் கந்தபுராணம் சிறப்பானது. அதிலுள்ள சூதசங்கிதையில் நகுலேசுவரம் பழைமையான யாத்திரைத் தலங்களுள் ஒன்றெனக் குறிக்கப்பட்டுள்ளது. இதனால் நகுலேசுவரத்தின் தொன்மையை யாம் அறிந்து கொள்ளலாம்.

நகுலாசல வரலாறு மிகமிகப் பழைமை வாய்ந்தது; இலங்கை வேந்தனான இராவணன் காலத்தோடு சம்பந்தப்பட்டது. இராமபாணம் இராவணன் மார்பை ஊடுருவும் போது, செவ்வி பார்த்திருந்த கந்தருவலோகனான இராவணன் கையொன்றிலிருந்தசாமவேதகான வீணையைஅது நிலத்தில்விழ முன்னமே பறந்து பாய்ந்து கவர்ந்து சென்று நகுலாசலத்திலமர்ந்து, சாமவேதகீத கானம் செய்வானாயினன். நகுலாசலம் வெண்ணெயாய் நெகிழ்ந்தது. இறைவியோடு இறைவன் எழுந்தருளி கந்தருவனுக்கு அவன் வேண்டும் வரங்களைக் கொடுத்தருளினார். சாமகானம் பரவிய இடம் 'வீணைகானபுரம்' என்ற பெயருடைத்தாயிற்று. அன்றைய வீணைகானபுரமே இன்றைய யாழ்ப்பாணம். இவ்வாறு நகுலாசல மகிமை பேசுகின்றது ஈழ மண்டல சதகம்.

விஜயன் இலங்கை மன்னனாக இருந்தபோது இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாலயத்தின் தொன்மையும், பெருமையும் பற்றிக் கூறும் நூல்களாவன; தட்சண கயிலாய புராணம், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, நகுலகிரிப்புராணம், நகுலாசலப்புராணம், நகுலமலைக் குறவஞ்சி முதலியனவாம். இவற்றுள் நகுலாசலப் புராணம் கையெழுத்துப் பிரதியாக இருக்கின்றது. அச்சில் வெளிவரவில்லை. தலபுராணமாகிய நகுலகிரிப்புராணம் உரையுடன் வெளியிடப் பெற்றிருக்கிறது.

நகுலேசராலயம் போர்த்துக்கீசர் காலத்தில் இடிக்கப்பட்டது. பின்னர் ஆங்கிலேயர் காலத்திலே 1878ம் ஆண்டு வெகுதானிய வருவைகாசி மீ 24ம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் கீரிமலைச் சிவன் கோயில் பற்றி ஒரு விஞ்ஞாபனம் தமது கையொப்பத்தோடு வெளியிட்டார்கள். 'யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்திற்கு வடமேற்கே 2 மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது' என அந்த விஞ்ஞாபனம் தொடங்குகிறது. அந்த விஞ்ஞாடனத்தில் கீரிமலையிலே ஒரு சிவன் கோயில் கட்டுவித்துச் சிவலிங்க பிரதிட்டை செய்விக்க வேண்டியதின் அவசியம் பற்றியும், சனங்கள் இச் சிவதருமத்திற்கு எவ்வெவ் வழிகளில் உதவலாமென்பது பற்றியும் விரிவாகக் காட்டியிருந்தார்கள்.

அப்போது ஷி கோயில அமைப்பதற்கு முன்னின்றுழைத்தவரும், கல்வியறிவு ஒழுக்கம் என்பவற்றிற் சிறந்தவருமாகிய பிரம்மஸ்ரீ கா. தியாகராசாக்குருக்கள் அவர்கள் 1882ம் ஆண்டு சித்திரபானு வரு ஐப்பசி மீ அச்சிடுவித்து வெளியிட்ட ஆவேதனத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இக்கோயில் கட்டுவிப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன. 1879ல் சைவசமயிகளுடைய பாக்கியக் குறைவினாலே நாவலரவர்கள் சிவபத மடைந்துவிடக் குருக்கள்மாரது ஊக்கத்தினாலும், வண்ணார்பண்ணை வை. ஆறுமுகம்பிள்ளை போன்ற சைவ அன்பர்களது உதவியினாலும் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு 1895ம் ஆண்டு மன்மத வரு ஆனி மீ சிவலிங்கப் பிரதிட்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக்காலத்தில் நித்திய நைமித்திகபூசைகள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்றதாக அறிகிறோம். தேர்த்திருவிழாவிலன்று ஐந்து தேர்கள் இழுக்கப்பட்டதாக அறிகிறோம். 18-7-1898ல் தொல்புரம் ஸ்ரீ மு. ஆறுமுகம் பிள்ளையின் உபயமாக வட்டுநகர் சு. சின்னப்பாசாரியாற் செய்யப்பட்ட பெரிய இடபவாகனம் கீரிமலை நகுலேசுவர சுவாமி கோயிலின் பழைமையைக் காட்டும் சின்னங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அப்பொழுது கோயிற் சுற்றுப்பிரகாரக் கொட்டகைகளெல்லாம் தென்னோலைக் கிடுகுகளால் வேயப்பட்டிருந்தன.

1918ம் ஆண்டு காத்திராப்பிரகாரமாகக் கோயில் தீக்கிரையானது. அப்போது அங்கு நின்ற அடியார்கள் பெரிய இடபவாகனத்தைக் கஷ்டப்பட்டு வெளியே கொண்டுவந்து சேர்த்தார்களென அறிகிறோம். அக்காலத்தில் மேற்படி கோயிலின் ஆதீனகர்த்தராயிருந்தவரும் எமது தந்தையாருமாகிய ஸ்ரீமத் தி. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் சிறிது காலம் மனந் தளர்ந்து இருந்தாராயினும் பின்பு தாம் என்ன கஷ்டப்பட்டாயினும் கோயிலை நல்ல நிலைக்கு ஆக்கவேண்டுமென முயன்று தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்துத் திருப்பணிகள் செய்வித்தார்கள்.

SUPERB SIDDHA MEDICINE FOR DIABETES



FOUNDER S. V. R.

DIABETES is a disorder due to the lack of INSULIN, which enables the body to burn its food for perfect Health. The Diabetic patient feels very thirsty, and is troubled with frequent and excessive urnation with glycogen, resulting in giddiness, fatigue and debility.

Our DIABETIC - set, containing the most tested SIDDHA recipes, restores proper secretion of INSULIN, and checks the flow of glycogen in urine, tones up the nervous system and kidneys, thus removes the root cause of DIABETES MELLITUS, and DIABETES INSIPIDUS. This is absolutely non - toxic and is guaranteed to produce a state of proper Health.

This 'DIABETIC - SET', containing (1) Swarnabrak Chendooram (with Gold) (2) Aavaara Panchang, and (3) Sarkkaraikkolli Powder, costs Rs. 250.

N. B. ORDERS for this 'DIABETIC - SET - MEDICINE' must contain I. O. Bank D. DRAFT for Rs. 250 - in favour of "RAJA SIDDHA VAIDYASALA, SALEM - 9", and must be sent by REGISTERED AIR-MAIL POST.

நீரிழிவை நீக்கும் நிகரற்ற சித்த மருந்து.

முழுமையான ஆரோக்கியம் தரும் உணவை ஊட்டச்சத்தாக மாற்றும் இன்சுலின் (INSULIN) குறைவாலேயே நீரிழிவுநோய் வருகிறது. நீரிழிவால் அதிதாகம், இனிப்புச்சத் துடன் அடிக்கடி அதிகமாய் மூத்திரம் போதல், அதன் மூலம் சோர்வு, மயக்கம், பலகீனம் முதலியவை ஏற்படுகின்றன.

மிகுந்த அனுபவமுள்ள சித்தமருந்துகள் அடங்கிய நமது நீரிழிவு செட் மருந்து, தேவையான இன்சுலினைச் சுரப்பித்து, நீரில் இனிப்புச்சத்து போவதைத் தடுத்து, நரம்பு மண்டலத்தையும், மூத்திர கோசத்தையும் வலுப்படுத்தி, நீரிழிவு, மதுமேகம் இவற்றின் மூலகாரணத்தை நீக்கி முறையான ஆரோக்கியத்திற்கு முழு உத்தரவாதம் அளிக்கிறது: விஷவினைவுகள் அற்றது.

(1) சுவர்ணப்ரேக் செந்தூரம் (தங்கம் சேர்ந்தது), (2) ஆவாரைப் பஞ்சாங்கம், (3) சர்க்கரைக்கொல்லி பவுடர் அடங்கிய 1 செட் நீரிழிவு மருந்து ரூ. 250.

N. B. மருந்து தேவைக்கு "RAJA SIDDHA VAIDYASALA, SALEM - 9" என்ற பெயரில் ரூ 250-க்கு I. O. BANKல் D.DARFT எடுத்து, ரெஜிஸ்டர்டு ஏர்மெய்ல் மூலம் அனுப்பி உடன் பெற்று, சுகம் காண்க.

WRITE TO:

M/S. RAJA SIDDHA VAIDYA SALA,

(S. V. R. KANDAR SONS, R. I. M. P.),

ARISIPALAYAM, SALEM - 636 009,

Tamilnadu, South India.

With best compliments of

SOUTHERN ASBESTOS CEMENT LIMITED

Chordia Mansion III Floor
739, Anna Salai
MADRAS - 600 002

Manufacturers of:
'Ramco' Asbestos - Cement - Roofing Sheet - Flat Sheets
Accessories - Gutters - Fittings Etc.

REGISTERED OFFICE:

'Ramamandiram,
Rajapalayam,
Tamil Nadu.

FACTORIES:

Arkonam (Tamil Nadu)
Karur (Karnataka)

உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரி சங்கர் குரூப்

பார்ட்னர்கள் திருவாளர்கள்:

கே. தாமோதரசாமி நாயுடு அன். பிரதர்ஸ்.

29/29, சுப்பிரமணியம் ரோட்,
ஆர். எஸ். புரம்,
கோயமுத்தூர் – 641 002

டெலிபோன்: 33052 Telegrams: "POORNAM"

எங்களது கீழ்க்கண்ட ஹோட்டல்களுக்கு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ அன்னபூர்ணா ஹோட்டல் காம்பளக்ஸ்

ஆர். எஸ். புரம்,
கோயமுத்தூர் – 641002.
டெலிபோன்: 33053, 27081.

ஸ்ரீ அன்னபூர்ணா இன்,

முனிசிபல் மத்திய பஸ் நிலையம்,
கோயமுத்தூர் – 641012.
டெலிபோன்: 27010.

ஸ்ரீ கௌரி சங்கர்,

காந்திபுரம்,
கோயமுத்தூர் – 641012.
டெலிபோன்: 27049.

ஸ்ரீ கௌரி சங்கர் இன்,

ஆர்ட்ஸ் காலேஜ் ரோட்,
கோயமுத்தூர் – 641018.
டெலிபோன். 27045.

☆ ★

ஆடிட்டோரியம், திருமண வரவேற்பு முதலிய நிகழ்ச்சிகளுக்கு
ரத்தின சபாபதிபுரம் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அகில உலக இந்து மகாநாடு
எல்லா வகையிலும் சிறந்து விளங்க
எமது நல் வாழ்த்துக்கள்!



சியாமளா டெக்ஸ்டைல்ஸ்

104, அருணாசல ஆசாரி தெரு,
சேலம் - 636 001

போன்: 4574 P. P.

அனைத்து மில் ஜவுளிகள் வாங்கிட சிறந்த இடம்

SHIYAMALA TEXTILES

RETAIL SHOWROOM

104, Arunachala Achari Street,
Salem - 636001

Phone: 4574 P. P.

With Best Compliments of

JAYARAM Industrials

Designers & Manufacturers of
AUTOMATIC MACHINERIES FOR PAPER CONVERSION

Specialists in
PAPER CONES TUBES (STRAIGHT TAPPER & SPIRAL) BAGS ENVELOPES
WAX MATCHES MAKING MACHINERIES

PHONE 34374

POST BOX No. 6408
381/84 4th STREET
KUPPAKKONAMPUDUR
SAIBABA COLONY
COIMBATORE 641 038.



Lakshmi Textile Paper Tubes

Designers & Mfrs. of PAPER CONVERSION MACHINERIES
Specialists in PAPER PRODUCTS.

G. I. Industrial Estate - Devakottai Road - KARAIKUDI - 623 006

முருகன் அருளால் மகாநாடு
ஜெயம் கொள்ள எங்கள் வேண்டுதல் பல



ஜெய முருகன்ஸ்

75, கெய்சர் வீதி - கொழும்பு-11.

தொலைபேசி: 31729

JAYA MURUGANS

75, Keyzer Street – Colombo-11

T'phone: 31729.

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்!

சிறு துளி! பெரும் பயன்.

'ஆன்டிஸால்' கிருமி நாசினியின் ஒவ்வொரு துளியும் உங்களைத் தாக்க வரும் விஷக் கிருமிகளை அழிக்கிறது.

'ஆன்டிஸால்' உங்களது வாழ்நாளெல்லாம் ஆரோக்கிய வழிகாட்டியாக ஆறு வழிகளில் செயல்படுகிறது.



1. இதமான முகச்சவரத்தின் பின்னர் பொலிவுடன் விளங்கவும்,
2. வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவை உண்டாக்கும் பாக்டீரியாக்களையும் ஒழிக்க வாய் கொப்பளிப்பதற்கும்,
3. காயம், புண் முதலியவற்றிற்கும்,
4. நீருடன் கலந்து குளிப்பதற்கும்,
5. பிரசவகால அவசரத் தேவைக்கும் மற்றும் மருத்துவமனைத் தேவைகட்கும்,
6. அம்மை, காலரா போன்ற தொற்று வியாதியின்போது துணி விரிப்புகளிலும், படுக்கையறை, தரை போன்ற இடங்களிலும் விஷக்கிருமிகளைக் கொன்றிடவும்,

சக்தி வாய்ந்த பாதுகாப்பான கிருமி நாசினி **'ஆன்டிஸால்'**

குறைந்த விலையில் நிறைந்த பயன்!

இல்லந்தோறும் அவசியம் இருக்க வேண்டியது

'ஆன்டிஸால்'

(கிருமி நாசினி)

தயாரிப்பாளர்கள் :

சோலார் பார்மாசூடிகல் இண்டஸ்ரீஸ்

பைபாஸ் ரோடு - மதுரை - 625 016
போன் : 30731 & 34538 Gram: SOLOVIN

விநியோக உரிமை பெற அணுகுவீர்.

1982ல் அகில உலக இந்து மகாநாடு இனிது நடைபெற
எங்களின் மனங்கனிந்த நல் வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கின்றோம்!



ABC LABORATORIES

Pharmaceutical Manufacturers,

5/89, Anna Puram,
SALEM - 636 004
TAMILNADU, INDIA.

Phone: 7121

Prop: A. B. Chandrasekaran, B. Pharm.

- ★ **COFMA** (Cough Syrup)
- ★ **DISODIN** (Alkaline Citrate Syrup)
- ★ **VIVEMOL** (Paediatric Paracetamol Syrup)
- ★ **PREMAHIST** (Cough Syrup in Jars)
- ★ **PACMA** (Tablets of Paracetamol, Analgin and Caffeinie)
- ★ **OXYMA** (Tablets of Oxyphenbutazone and Analgin
- ★ **RUBINIL** (Ayurvedic Liver Tonic)
- ★ **UT - 10** (Ayurvedic Uterine Sedative and Tonic)

திருக்கோணமலையில் சைவ வளர்ச்சி

(சைவப்புலவர்-பண்டிதர் இ. வடிவேலு-திருக்கோணமலை)

இலங்கையிலுள்ள ஊர்ப் பெயர்களுக்கு முன்னால் 'திரு' என்ற சிறப்புச் சொல் சேர்ந்த ஊர்ப் பெயர்கள் மிகச்சிலவேயுள. திருக்கோணமலை, திருக்கோயில், திருநெல்வேலி, திருமங்கலாய் என்பன அவற்றுட் சில. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன ஸ்தலப் பெயர்கள். ஊர்ப்பெயர்களல்ல. திருக்கோணமலையிலுள்ள சிவஸ்தலம் திருக்கோணேஸ்வரம். திருக்கோணமலையை நினைவுகூரும் போது கோணேசர் ஆலயம் மனக்கண்முன் வந்து தோன்றுகின்றது. திருக்கோணமலை தென் கயிலாயம் என்று போற்றப்பட்டு வருகின்றது. உத்தர கயிலையிலுள்ள தெய்வீகம் திருக்கோணமலையிலும் இருப்பதால் அது தென்கயிலாயம் என்று பேசப்படுகின்றது. ஸ்தலபுராணங்கள், இதிகாசங்கள், தேவாரங்கள், கோணேசர் கல்வெட்டு என்பன இதனை உறுதிப்படுத்துகின்றன.

மக்களின் லௌகீக வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டுவரும் மாற்றங்களாலும், பிறநாட்டு நாகரீகங்கள் நமது நாட்டிலேற்படுத்தியுள்ள மாற்றங்களாலும், பிறமதக் கோட்பாடுகள் மக்களுடைய உள்ளத்தில் புகுத்தப்பட்டதாலேற்பட்ட தாக்கங்களாலும், ஆதியாகிய சைவநெறி மக்களுடைய வாழ்க்கையிலிருந்து வழுவிச் சென்றுகொண்டிருப்பதாக நினைக்கலாம். மக்களின் புற வாழ்க்கையை அவதானித்து எடுக்கப்படும் இந்த முடிவில் உண்மையிருப்பதாகச் சொல்ல முடியாது. சமயநெறி மக்களின் அகவாழ்க்கையோடு தொடர்பு பட்டது. சைவசமயத்துவங்கள் வளர்ச்சியடைய வேண்டியவைகளல்ல. அவை பூரண வளர்ச்சியடைந்த சத்தியங்களாயுள்ளன. சைவசமய நெறியினைக் கடைப்பிடித்தொழுகும் திருக்கோணமலைச் சைவ மக்களின் சமய வளர்ச்சியை ஆராய்வதன் மூலம் திருக்கோணமலைச் சைவ வளர்ச்சியை அறியலாம்.

திருக்கோணேஸ்வரம் தெய்வீகம் நிறைந்த பாடல் பெற்ற க்ஷேத்திரம். இயற்கையாகவே தெய்வ சான்னித்தியம் பிரவாகித்துக்கொண்டிருக்குமிடம். சைவம் வளருவதற்கு விளம்பரம் வேண்டப்படாத இடம். அப்போர்ப்பட்ட தலத்தை வழிபட்டு வந்த சைவசமயத்தவனாகிய இலங்கை மன்னன் இராவணனுடைய வரலாறு திருக்கோணமலையின் சைவ வளர்ச்சிக்கு விளக்கமும், விளம்பரமுமாயமைந்திருக்கின்றது.

சோழ பரம்பரையில் வந்த குளக்கோட்டு மன்னன் இற்றைக்கு 1700 வருடங்களுக்கு முன் திருக்கோணமலையில் கோணேசப்பெருமானுக்குக் கோவிலெடுத்து திருப்பணி நிறைவேற்றினன். ஆலயத்தைப் பரிபாலனம் செய்வதற்காகக் குளக்கோட்டு மன்னன் பொருளாதாரத் திட்டமொன்றை வகுத்தான். அதுவே கோணேசர் கல்வெட்டு எனப்படுவது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சிந்து நாடு, மருங்கூர், காரைக்கால், என்னும் இடங்களிலிருந்து குடிமக்களை அழைத்துவந்து, திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கட்டுக்குளப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகமப்பற்று என்னும் இடங்களிற் குடியமர்த்தினன். குடியேற்றப்பட்ட மக்கள் கோயிற்தொழும்புகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள். கோயிற்தொழும்பாளர்கள்சிவநெறியாளர்களாயிருந்ததால் குளக்கோட்டு மன்னனுடைய காலத்தொடக்கம் திருக்கோணமலை மாவட்டம் சைவ வளர்ச்சியில் சிறப்புற்றோங்கியது.

திருக்கோணமலை மாவட்டம் வெருகல் தொடக்கம் தென்னமரவாடி வரையும் தம்பலகமம், கந்தளாய், பதவியாவை உள்ளடக்கிய பெரிய பிரதேசமாயிருந்தது. இங்கெல்லாம் அனேக சைவாலயங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கிராமங்களிலும் சைவாலயங்களிருக்கின்றன. திருக்கோணமலைப் பட்டணத்தில் மாத்திரம் முப்பத்தைந்து ஆலயங்களிருக்கின்றன.

கொட்டியாபுரப்பற்றில் மகாவலிகங்கைக் கரையோரமாகத் திருக்கரசையம்பதி யெனச் சிறப்புற்று விளங்கிய ஸ்தலமிருந்தது. அங்குள்ள திருமங்கலாய், அகஸ்தியர் ஸ்தாபனம் சங்குவேலி என்னுமிடங்களில் மாபெரும் சிவாலயங்களிருந்து இன்று அழிந்து கிடக்கின்றன. கந்தளாயில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட சிவன் கோவிலும், பெரியகுளாதனூர் கோவிலும், தென்னமரவாடி சிவன்

கோவில் என்பனவும்சிதைந்துகிடக்கின்றபோதிலும், திருக்கோணமலை மாவட்டத்தின் சைவ வளர்ச்சியை அவைகள் பெருமிதத்தோடு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. ஈழநாட்டின் வரலாற்றைக் கூற முற்படும் போது, திருக்கோணமலை மாவட்டம் தமிழ் மக்களின் குடியிருப்பாகவும், சைவ சமயம் வளர்ந்தோங்கிய பிரதேசமாகவும் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தராலும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் அருணகிரிநாத சுவாமிகளாலும்பாடப்பெற்ற திருக்கோணேஸ்வரத்திலுள்ள கோணேசர் ஆலயத்தைப் பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் இடித்தழித்தனர். இதனால் திருக்கோணமலைச் சைவமக்கள் சமய வளர்ச்சியில் பின்தங்கிவிடவில்லை. கோணேசப்பெருமான் திருக்கோணமலைத் தேவாரத் திருப்பதிகத்தில் அமர்ந்திருந்தார். சைவநெறி மக்களுடைய உள்ளத்திலே வளர்ந்தது. இதன் பிரதிபலனைத் திருக்கோணமலைப் பட்டணத்திலும், கிராமங்களிலும் மக்கள் ஆலயங்களை அமைத்துச் சைவம் வளர்த்தார்கள். இன்று திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பழைய ஆலயங்களின் இடிபாடுகளும், புதிய ஆலயங்களும், திருக்கோணேசர் ஆலயமும், திருக்கோணமலைச் சைவ மக்களின் சமய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஆலயங்களுக்குப் பாடியருளிய, திருக்கோணேசலபுராணம், தெட்சணகயிலாய புராணம், திருக்கோணமலையந்தாதி, திருக்கரசைப் புராணம் என்பவைகளும், தேவாரம், திருப்புகழ் என்பனவும், சிந்து, ஊஞ்சல், பதிகம் முதலிய தனிப்பாடல்களும், வெருகல், கல்வெட்டு, கங்குவேலிக் கல்வெட்டு, பெரியகுளம் கல்வெட்டு, கந்தளாய்க் கல்வெட்டு, குச்சவெளிக் கல்வெட்டு, திரியாய்க்கல்வெட்டு, பழமோட்டைக் கல்வெட்டு, கோட்டைவாசற் கல்வெட்டு என்பனவும், திருக்கோணமலையின் சைவ வளர்ச்சியையும், பரம்பலையும் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் வேறெங்கேயும் நடைபெறுத ''கும்பவிழா'' திருக்கோணமலையில் சிறப்புவிழாவாக நவராத்திரியின் கடைசி நாளில் நடைபெற்றுவருகின்றது. இங்குள்ள எல்லா ஆலயங்களிலிருந்தும் கும்பம், கரகம் என்பனவற்றை அடியார்கள் தாங்கிக்கொண்டு பக்திப்பரவசத்தோடு புறப்பட்டு வீதிகள் தோறும் சென்று ஒவ்வொரு ஆலயங்களையும் தரிசித்து வருவார்கள். மக்கள் சைவாசார முறைப்படி வீடுகள் தோறும் நிறைகுடம் வைத்து வரவேற்று வழிபடுவார்கள். இது திருக்கோணமலைக்கே உரியசைவப் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது. கோணேசப் பெருமான் சிவராத்திரிக்கு அடுத்துவரும் மூன்று நாட்களுக்கு நகர்வலம் வருகின்ற பெருவிழாவும் திருக்கோணமலைச் சைவ வளர்ச்சியின்எழுச்சிவிழாவாக நடைபெற்று வருகின்றது. இது போன்ற நெடுவிழா இந்தியாவிலுங்கூட நடைபெறுவதில்லையென அறிகின்றோம். சல்லியம்மன் கோயிலிலும், பாலம் போட்டாற்றுப் பத்தினியம்மன் கோவிலிலும் வருடமொருநாள் நடைபெறும் பொங்கல் விழாவும், ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோயிலில் நடைபெறும் வைகாசி பொங்கல் விழாவும், கௌரிநோன்பும், திருக்கோணேசர் ஆலயத்திலும், கன்னியாய் நடேசர் ஆலயத்திலும் நடைபெறும் சிவராத்திரி விழாக்களும் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் உறியடி விழாவும், அகஸ்தியர் ஸ்தாபனம், கங்கைத்துறை என்னுமிடங்களில் நடைபெறும் ஆடியமாவாசைத் தீர்த்தவிழாவும், திருக்கோணமலைச்சைவவளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்து வருகின்றன. சைவாலயங்கள் நிறைந்த திருக்கோணமலையில் வருடத்தில் டன்னிரண்டு மாதங்களிலும் எங்காவது ஓராலயத்தில் உற்சவம் நடந்துகொண்டிருப்பதால் திருக்கோணமலை மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் சைவ நெறியைக் கடைப்பிடித்துவாழ்ந்துவருகிறார்கள் இதனால் வீடுதோறும் சைவம் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆலயங்களை அமைத்துச் சைவத்தை வளர்த்த திருக்கோணமலை மக்கள் சமயஸ்தாபனங்களாலும் சைவத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்து இளைஞர் மன்றம், இந்து மாமன்றம், சிவயோக சமாஜம், அருள்நெறி மன்றம், தெய்வநெறிக் கழகம், சைவ மங்கையர் மன்றம் இவை போன்ற பல சங்கங்கள் அரும்பெரும் சிவப்பணிகளை யாற்றிச் சைவத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. கல்வி நிலையங்களும் சைவசமய வளர்ச்சியில் மாபெரும் பங்கெடுத்து வருகின்றது. சைவச் சான்றோர்களும், சமயத் தொண்டர்களும் சைவத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மெய்ஞானியும் கலைஞானியும் உண்மை ஞானிகளே

— க. கார்த்திகேசு - ஓவியக்கலைவிற்பன்னர்–காரைநகர் (கி.மா.) —

இறைவனைக் காணவேண்டும் பேசவேண்டும் என்று எத்தனையோ மக்கள் துடிக்கின்றனர். மனிதப்பிறவி எடுத்த நாம் ஒவ்வொருவரும் உடலின்பத்தில் லயமடையாது இறைபின்பத்தில் மூழ்க வேண்டும். அதுவே பிறவியின் நோக்கமாகும் என்று இந்துமதம் இடித்துக்கூறுகின்றது. ஆனால் மக்கள் அவ்வாறன்றி கண்ணுற் காண்கின்ற பொருளனைத்திலும் ஆசை கொள்கின்றனர். அவற்றை அடைவதற்கான முயற்சியில் வாழ்நாளைச் செலவிடுகின்றனர். இவர்கள் உண்பதும் உறங்குவதுமன்றி வேறெருரு பலனுமடைய முடியாதவர்கள். பிறவிப்பலனை அடைய முடியாதவர்கள். இவர்களை இருவகையிற் காணலாம். ஒருவகையினர் பொருளை வளம்படுத்தும் முயற்சியில் முன்னேற்றமடைகின்றனர். மற்றவகையினர் உழைத்து முன்னேற முடியாமல் மற்றையோரின் உழைப்பில் வாழ முயற்சிக்கின்றனர். பிறர் பொருள்வளத்தில் ஆசை அதிகரிக்க அதிகரிக்க குறுக்கு வழிகளில் பொருளிட்டத் தலைப்படுகின்றனர். இந்த இருவகையினரும் தாம் பிறந்ததின் நோக்கம் உணரமுடியாதவர்கள். இவர்கள் தம் வாழ்வு இன்பகரமானது என்று நினைக்கின்றனர். இதனால் காலம் அவமே கழிகிறது.

இந்த லோகாயத வாழ்வில் மயங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்புகின்றன ஓவியம், சிற்பம், போன்ற கலைகள். இக்கலைகளின் ஆரம்பம் எப்போது என்று எவராலும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால் இக்கலைகள் இறை தத்துவத்தை மக்கள் மனதிற் பதிய வைத்தது கி.மு. 5ம் நூற்றாண்டேயாகும். அக்காலத்திலே வாழ்ந்த பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்னும் முனிவர்கள் முதன் முதலில் ஓவிய சிற்பத்தின் மூலம் இறைவனை உலக மக்கட்குக் காட்டியவர்களாவர். கண்ணுற் காணமுடியாதது. வாய்விட்டுப் பேசொணாதது, எல்லையற்றது, பரந்தது. இப்படியான பரம்பொருளைக் கண்ணுற் கண்டகாலம் காதாற் கேட்டகாலம், புகழ்ந்து பாடியகாலம், சிந்திக்க வைத்தகாலம் அதுவேயாகும்.

இந்து மதத்திற் கூறப்பட்ட நூற்றெட்டுதத்துவங்களையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தவர்கள் தான் இம்முனிபுங்கவர்கள். இவர்கள் சதா இறைவனை இதயத்திற் காண்பவர்கள். அவர்களுக்கு ஒரே ஆசை, ''தாம் இறைவனை நேரிற் காண்பதுபோல உலக மக்களும் இறைவனைக் காண வேண்டும் என்பது. இறை தத்துவங்களை நினைத்ததும் இறைவனை நேரிற்காணும் வல்லபம் பெற்ற இம்முனிவர்கள், எழுந்து வாசனையற்ற பாமரமக்களும் இறைவனின் தோற்றத்தை நேரிற் காணவேண்டும் என்று கருதிக்கொண்டு நடராசவடிவத்தை ஆக்கித்தந்தனர், அவ்வுருவத்தில் இறை தத்துவங்கள் எல்லாம் அடக்கியிருப்பதை நாம் உணரலாம்

தோற்றம் துடியதனில் தோயும் நிதியமைப்பில்
சாற்றியிரு மங்கியிலே சங்காரம்-ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

என்னும் இப்பாடலில், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் பஞ்சகிருத்தியங்கள் வெளிப்பட்டு நிற்பதை நாம் காணலாம். டமருகம் தாங்கிய கரத்தினால் உலக சிருஷ்டியையும், அபயகரத்தினால்காத்தலையும், அக்கினியேந்தியகரத்தினால் மலசங்காரத்தையும், ஊன்றியபாதத்தால் ஆன்மாக்களை மறைத்தலையும் தூக்கிய பாதத்தினால்ஆன்மானுக்கிரகத்தையும்காட்டுகின்றது இவ்வுருவம், ஐந்து அடி உயரமாய், அரிய தத்துவங்களின் பொக்கிஷமாய் சிதம்பரத்திலே தில்லைத் திருநடனம் ஆடிக்கொண்டே இருக்கின்றார் எம் இறைவன். அவர் ஆடிக்கொண்டிருப்பதனாற்றான் இவ்வுலகம் மட்டுமல்ல, நவக்கிரகங்கள் மட்டுமல்ல, நட்சத்திர மண்டலங்கள் அத்தனையும் உள்ளடக்கிய அண்டசராசரங்கள் அத்தனையும் ஆடிக்கொண்டேயிருக்கின்றன.

அது மட்டுமல்ல, இறைவடிவம் தோற்றப் பொருளாயிற்றே என்று சிலர் நினைக்கலாம், பரமான்மா வினையும் தூலப்பொருளாகிய எம்மையும் இணைத்து நிற்கும் சூக்குமப் பொருளாகிய மானச நிலையை நாம் சிந்திக்க வேண்டும். இந்த நிலையிலே தோற்றுவதும் அழிவதும் மாறி மாறி நிகழ்வதைக் காணலாம். அந்த நிலையைக் காட்டிக் கொண்டு நிற்கிறது இறைவனின் கருணைக்கண்கள்.

அவைகள் சிந்தனையைக்காட்டுகின்றன. இந்த அதீத நிலை இறைவனின் சூக்கும வடிவை உணர்த்துகின்றது

''குனித்த புருவமும் கொவ்வைச் செல்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

என்னும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருப் பாடலில் இறைவனின் திருவுருவைச் சிந்திப் போமாக.

இத்தனை அற்புத சக்தி படைத்த இறைவன் திருவுருவங்களைப் படைக்கும் இயல்பு ஓவிய சிற்பக் கலைகளுக்கு மட்டுமே உண்டு. எழுத்து வாசனையற்ற பாமரமக்கள் கூட இறைவனை நேரிற்கண்டு தம் குறையிரந்து நிற்கும் தன்மையை இக்கலைகள் ஏற்படுத்துவதென்றால் இக்கலையின் பெருமைதானென்ன. கலைஞர்கள் இத்தெய்வ வடிவங்களை வடிப்பதற்கு சிறந்த ஞானம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அவர்களது உளம் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையில் இருக்கவேண்டும் என்பது எமது ஆய்வின் முடிவாகும். இதன்பின் பத்து நூற்றாண்டுகளுக்கு எவ்வித மாற்றமும் நிகழவில்லை. கி. பி. 5ம் நூற்றாண்டில் திருவாங்கூர் மகாராசாவின் மூத்தமகனை 'ராஜாரவிவரகமா' தமது ராஜ ஐஸ்வரிய போகங்களைத் துறந்து கலைத்துறவியாகி கடவுளின் தத்துவங்களைத் தெய்வ உருவில் அமைத்தார். அவர் அமைத்த வடிவங்களே நாம் இன்று வணங்கும் சகல தெய்வ உருவங்களுமாகும். இப்படியான தெய்வ வடிவங்கள் அமைப்போர் நினைத்தவுடனே தெய்வ வடிவங்களை அமைக்க முடியாது. இறைதத்துவங்களை மனதிற்கொண்டு தியானத்தில் அமர்ந்து இறைகாட்சியை நேரிற்கண்டே திருவுரு அமைத்திருக்கின்றனர். இப்படிப்பட்ட கலைஞானிகளும் மெய்ஞானிகளும் செயலில் வேறுபட்டிருப்பினும் ஒரே தன்மைத்தான உணர்ச்சிநிலையில் இருப்பதை நாம் காண்கின்றோம்.

இத்தகைய கலைஞர்களுள் ஒருவரே தஞ்சாவூர் பெரிய சிவன் கோவிலைக் கட்டியவரான வர். 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த ''ராஜராஜ சோழன்'' என்பான் ஒளி நிழலற்ற இறைவனுக்குக் கோவில் சமைக்க எண்ணினான். அக்கோவிலின் நிழல் நிலத்தில் விழக் கூடாது என விரும்பினான்.

அவ்வாறே 260 அடி உயரமான கோவிலின் நிழல் நிலத்தில் விழாத வண்ணம் அமைப்பதாயின் அவனது சிற்பியின் அறிவு சாதனைதானென்ன? அச்சிற்பி தனியிடத்திலமர்ந்து தியானத்திலிருந்தான் என்றும் அவனுக்கு வேண்டிய சகல உதவிகளும் அரசன் கொடுத்தானென்றும் அவன் அக்கட்டிடத்தின் உருவைக் கண்டுபிடிக்க 6 மாதங்கள் பிடித்தன என்றும் சிற்பச்சரித்திரங்கள் கூறுகின்றன. இந்த நேரத்தில் அவனது சிந்தனை சக்தியின் ஆழத்தை நாம் சிந்திக்க வேண்டும்.

6 மாதங்களுக்கு மனதை ஒரேவழிப்படுத்தித் தன்னந்தனியே இருந்து ஆராய்வதாயிருந்தால் அவனது மனம் இறைவனுடன் இரண்டறக் கலந்திருக்க வேண்டும் என்பது எமது முடிபாகும். இந்நிலையில், ''இறைவா! எனது பணி முட்டின்றி நிறைவேறத் திருவருள் பாலிக்க வேண்டும்'' என்று கேட்டிருக்க வேண்டும். அவர் அனுமதி கொடுத்த பின்பே தமது பணியை ஆரம்பித்திருக்க வேண்டும். தெய்வத் திருவருள் துணைநிற்க அக்கட்டிடப் பணி நிறைவுற்றிருக்க வேண்டும் என்பது எமது தெளிபாகும்.

இன்று அக்கோவிலுக்குச் செல்கின்ற மக்கள் அக்கலைஞனின் அபார சிந்தையையும் அவனிடத்திலே அமைந்துள்ள ஞானசக்தியையும் வியந்து செல்கின்றனர். இறைவன் தன் அடியார்களுக்குக் காட்சி கொடுத்து அருள் புரிந்தார் என்பதை எமது நாயன்மார் கூற்றுக்களிலிருந்து அறிகின்றோம். இதுபோலவே இறைவனின் திருவருளினாலே இந்தப் பிரமாண்டமான கட்டிடம் நிழலின்றி அமைந்திருப்பது பெருவியப்பாகவே அமைந்துள்ளது.

எனவே சிறந்த மெய்ஞானிகளும், உரையுணர்வு கடந்த கலைஞானிகளும் சமமானவர்கள் என்பதை உணர்ந்து பாமர மக்களும் சமய உணர்வு பெற்றுய்யக் கூடிய தெய்வீகக் கலைஞர்களை உருவாக்குவோமாக.

கி.பி. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தென்கிழக்காசியாவில் இந்து சமய வளர்ச்சியும் செல்வாக்கும்

— ச. சிங்காரவேலு எம்.ஏ. —

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பண் பாடு, நாகரிகம் ஆகியவற்றின் வரலாற்றைக் கூறும் நூல்களில் 'Indianization' 'Indian Colonization' என்னும் சொற்கள் வழங்கு கின்றன. இச்சொற்கள் குறிக்கும் பொருள் யாது என்பதை அறிந்திருத்தல் நல்லது. 'இந்திய நாட்டு அரசுகள் தென்கிழக்காசிய நாடுகளில் அரசியல் அல்லது காலனித்துவ ஆதிக்கம் செலுத்தினர்'' என்னும் பொருளே 'Indianization' என்னும் சொல்லாட்சி குறிப்பிடவில்லை. பின்னர், இச்சொல் எதைக் குறிப்பிடுகிறது என்றால், இந்தியப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் கூறுகளில் பலவற்றைத் தென்கிழக்காசிய நாடுகளின் அரசர்களும் அரசவையினரும் ஏனையோரும் விரும்பிப் பெற்றுத் தம் பண்பாட்டுக்கூறுகளுடன் கலந்து தமக்கே உரிய பண்பாட்டையும் நாகரிகத்தையும் உருவாக்கிக்கொண்ட முயற்சியில் இந்தியநாட்டுச்சமயங்களின்கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும், புராணச் செய்திகளும், அறவாழ்வியல் முறைகளும், அரசரை மூக்கிய அம்சமாகக் கொண்டிருந்த இந்திய அரசியல் முறையும், சமஸ்கிருத மொழியும் இலக்கியமும் அடிப்படை அம்சங்களாக அமைந்தன என்பதைத்தான் 'Indianization' என்னும் சொல், அல்லது 'இந்திய நாகரிகச் செல்வாக்கு' என்னும் சொற்றொடர் குறிப்பிடுகின்றது.

இந்தியப் பண்பாட்டுக் கூறுகளைப்பற்றித் தென்கிழக்காசிய நாடுகளில் வசித்த மக்கள் அறிந்துகொள்வதற்கு ஏதுவாய் இருந்தது. கிறிஸ்துவ சகாப்தத்தின் ஆரம்பத்தில் இந்தியர்கள் வாணிகம் காரணமாகத் தென்கிழக்காசிய நாடுகளுக்கு வருகை புரிந்ததாகும். பொன்னும் நறுமணப் பொருளும் நிரம்பிய பூமி என்னும் புகழ்பெற்று விளங்கிய தென்கிழக்காசியா இந்திய வணிகர்களை ஈர்த்தது.

இந்தியர்கள் தென்கிழக்காசிய நாடுகளை நோக்கிக் கடற்செலவு மேற்கொண்டதற்கு மற்றொரு காரணமாக அமைந்தது இந்தியாவில் தோன்றி வளர்ச்சி அடைந்திருந்த பௌத்த சமயமாகும். பௌத்த சமய ஆசிரியர்கள் இனத்தூய்மையில் அதிக அக்கறை செலுத்துதல், சாதிவேறுபாடுகளைப் பாராட்டுதல் ஆகியவை போன்ற கொள்கைகளை நிராகரித்தனர். பௌத்த சமயத்தைத் தழுவிய இந்திய மன்னர்களும் பௌத்த சமயக் கொள்கைகள், மற்ற நாடுகளிலும் பரவுதல் வேண்டும் என விழைந்தனர். இதற்காக பௌத்தசமய ஆசிரியர்களும் ஏனையோரும் கடற்செலவு மேற்கொள்வதை ஆதரித்தனர். இத்தகைய கடற்செலவின்போது பிரயாணிகள் எதிர்நோக்கவேண்டியிருந்த நிகழ்ச்சிகளைப்பற்றியும் இன்னல்களைப்பற்றியும் பௌத்த ஜாதகக் கதைகள் கூறுகின்றன. கடற்பிரயாணத்தின்போது ஏற்படக்கூடிய துன்பத்திலிருந்து,

''கடல் அலைகளுக்கு அமைதியூட்டும் புத்தர்'' கடற் செலவாளர்களைக் காப்பாற்றி அருள்வார் என்னும் நம்பிக்கையுடன் அவர்கள் தம்முடன் கொண்டுசென்ற ''தீபங்கர புத்தர்'' சிலைகள் பல தென்கிழக்காசிய நாடுகளில் கிடைக்கப்பெற்றுள்ளன.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் சமுத்திரகுப்த மன்னர் தென்னிந்தியாவில் நடத்திய போரின் விளைவு காரணமாக கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலான இடைக்காலத்தில் தென் இந்திய வம்சத்தினர் சிலரும் அறிஞர் பெருமக்களில் சிலரும் கீழ்த்திசை நாடுகளை நோக்கிச் சென்றனர் என்று அறிகிறோம்.

பண்டைக்காலந் தொட்டு தென்கிழக்காசிய நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்த இந்திய வணிகர்கள் வாயிலாக தென்கிழக்காசிய நாட்டு அரசர்கள் இந்திய நாட்டு அந்தணர்கள் பயன் படுத்திய மந்திரங்களைப் பற்றியும் அறிந்து, அத்தகைய அந்தணர்களைத்தாமும் பெறவேண்டி அவர்களைத் தம் நாடுகளுக்கு அழைத்துவந்ததற்கும் ஆதாரங்கள் உள்ளன. அவ்வாறு வந்த அந்தணர்கள்மூலம் இந்து சமயக்கோட்பாடுகள் தென்கிழக்காசிய நாட்டு அரசவையில் இடம் பெறலாயின.

தென்கிழக்காசிய அரசவைகளில் புரோகிதர்களாக, அல்லது அரச குருவாகப் பணியாற்றவேண்டிய அந்தணர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தென்கிழக்காசிய மன்னர்களின் அழைப்பிற்கிணங்க வந்தனர் என்னும் செய்தி அம்மன்னர் தம் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. அவ்வாறு வந்த அந்தணர்கள் நன்கொடையாகப் பெற்ற நிலத்தில் சிறு கோயில்களை நிறுவி வழிபாடு செய்தனர் என்பதற்கும் கலவெட்டுச் சான்றுகள் உள்ளன. தென்கிழக்காசிய மன்னர்களிற் சிலர் அந்தணர்களுக்குத் தம் உறவினர்களையும், மணம் செய்வித்து அவர்கள் அந்நாடுகளிலேயே நிலை பெற்று வாழ்வதற்கு ஏற்பாடு செய்தனர் என்னும் குறிப்புகளும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இந்திய வணிகர்களும் தென்கிழக்காசிய மக்களுடன் குடும்பத் தொடர்புகளை நிறுவி வாழ்ந்ததன் வாயிலாகவும் இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் தென்கிழக்காசிய நாட்டு மக்களிடையே பரவியிருத்தல் கூடும்.

தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த வணிகர்களும் மற்றவர்களும் இந்திய நாட்டுத் துறைமுகங்களுக்குச் சென்று தங்கியபோது இந்தியர்களின் பழக்கவழக்கங்களை அறிந்து தங்கள் நாட்டுக்குத் திரும்பினர். அவ் வழக்கங்களைப் போற்றி பின்பற்றிய தோடலாமல் ஏனைய மக்களிடையேயும் பரவச் செய்திருத்தல் கூடும். இக்காலத்தில் மேற்கத்திய நாகரிகக் கூறுகள் ஆசியநாட்டுமக்களிடையே மிகுதியாகப் பரவியதற்குக் காரணமாயிருந்தவர்கள் ஆசியநாடுகளில் தங்கியிருந்த ஐரோப்பியர்களைக் காட்டிலும் மேலை நாடுகளுக்குச் சென்று திரும்பிய ஆசியர்களேயாவர் என்னும் ஒரு கருத்தையும் நாம் ஒப்புநோக்கலாம்.

தென்கிழக்காசிய மக்களிடையே இந்தியப்பண்பாட்டுக் கூறுகள் வெளிநாட்டவரின் வற்புறுத்தலின் பேரிலோ திடீரென்றே பரவவில்லை. அக்கூறுகள் மக்களே விரும்பி ஏற்றுக் கொள்ளும் முறையில் அமைதியாகப் பரவுதற்குப் பல நூற்றாண்டுகள் ஆயின.

இந்தியச் சமயங்கள் பரவிய காலம்

கிறிஸ்த சகாப்தத்தின் ஆரம்பத்தில் பௌத்த சமயம் தென்கிழக்காசிய நாடுகளில் பரவி இந்தியப் பண்பாடு பரவுவதற்கு வழி செய்த பின்னர், சைவ சமயக் கோட்பாடுகளும் ஏறக்குறைய ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் வைணவ சமயமும் பரவின என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

இந்து சமய வளர்ச்சிக்கு அந்தணர்கள் ஆற்றிய பணி

அரசவை அந்தணர் வாயிலாக இந்துசமயக் கூறுகள் தென்கிழக்காசிய நாடுகளில் மிகுதியாகப் பரவின என்பதில் ஐயமில்லை. தென்கிழக்காசியாவில் கிறிஸ்துவ சகாப்தத்தின் துவக்கத்தில் நிறுவப்பட்டதாகக் கருதப்படும் 'புனன்' என்னும் அரசினை நிறுவியவர் ஓர் அந்தணர் என்றும் அவர் தென்னிந்தியாவில் ஏறக்குறைய அதேகாலத்தில் செல்வாக்குப்பெற்றிருந்த 'கௌண்டினிய அல்லதுகௌணிய குலத்தைச் சேர்ந்தவர் என்றும் அறிகின்றோம். சங்கத்தொகை நூலான புறநானூற்றில் மூலங்கிழார் என்னும் புலவர் பாடியதாக உள்ள 166ம் பாடல் கௌணியன் விண்ணன் தாயன் என்னும் ஓர் அரசனின் மூதாதையாசைவ சமயத்தின் பொருட்டு ஆற்றிய வீரச் செயல்களைக் குறிப்பிடுகின்றது.

இந்துசமயக் கூறுகள் தென்கிழக்காசியாவில் சிறப்பாக இந்தோனேசியப் பகுதியில் பரவுவதற்கு மூலகாரணமாயிருந்தவர்கள் எனக் கருதப்படுபவர்களில் அகத்தியர் பிரதான இடத்தை வகிக்கின்றார்.

தென்னிந்தியாவில் அரசாண்ட பாண்டிய மன்னர்களின் புரோகிதராகவோ அரச குருவாகவோ அகத்தியர்பணியாற்றியசெய்தி தென்னிந்தியாவில் கிடைக்கப்பெற்றமையும் கி.பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையுமான வேள்விக்குடிச்சாசனம், இன்னம்பூர் செப்பேடுகள் ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் (ஜாவாவில்) கிடைக்கப்பெற்றதும் கி.பி. 132ம் ஆண்டைச் சேர்ந்ததுமான 'சங்கால்' கல்வெட்டு, குஞ்சர குஞ்ச தேசத்தைச் சேர்ந்த அகத்தியர் எனும் புரோகிதர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் உதவியைக் கொண்டு ஜாவா நாட்டு அரசர் சஞ்சயன் நிறுவிய இலிங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

இவ்விரண்டு கல்வெட்டுச் செய்திகளிலிருந்து குஞ்சரகுஞ்ச தேசம் என்பது தென்னிந்தியாவில் மதுரைக்கு அருகில் உள்ள 'ஆனமலை' என்னும் ஊரினைக் குறிக்கும் என்றும், அவ்வாருனல் அகத்தியரைப் புரோகிதராகக் கொண்ட பாண்டிய மன்னர்கள் கீழ்த்திசை நாடுகளில் இந்து சமயத்தைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டு பணியாற்றி இருத்தல் வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். அகத்தியர் சிலைகள் பல தென்கிழக்காசிய நாடுகளில் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றிற்கும் இந்திய அகத்தியர் சிலைகளுக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையும் கலைவல்லுநர் வரலாற்றில் அறிஞர் ஆகியோரின் கவனத்தையும் கவர்ந்துள்ளது.

அகத்தியர் என்பவர் தென்கிழக்காசியாவில் தொடங்கி வைத்ததாகக் கருதப்படும் புரோகிதர் பணியைத் தலைமுறை தலைமுறையாக ஆற்றவேண்டிய அந்தணர்கள் தென்கிழக்காசிய அரசவைகளில் இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அத்தகைய அந்தணர்கள் இன்றும்கூட கம்போடியாவின் தலைநகரான ''புனோம்பெக்'' நகரத்திலும், தாய்லாந்திலும் ''பாங்காக்'' நகரத்திலும் அரசவை அந்தணராகப் பணியாற்றுகின்றனர். கம்போடிய நாட்டு அரசவை அந்தணர் ''பங்கு'' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றார். இந்தச் சொல்லின் வரலாறு சரியாகத் தெரியவில்லை. ஆயினும் இச்சொல் 'பக்குவம்' 'பக்குவர்' என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றிய சொல்லாக இருக்கக் கூடுமா என்னும் ஐயம் ஏற்பட்டுள்ளது. மேலும் சங்கத்தொகை நூலான புறநானூற்றைச் சேர்ந்த 194ஆம் பாடலின் ஆசிரியர் பெயர் பக்குடுக்கை நன்கணியார் என்று அறிகின்றோம். 'பங்கு' என்பது துறவோர் அணிந்த ஒருவகை உடையையோ, துறவோர் பயன்படுத்திய ஒருவகைப் பையையோ குறிக்கும் என்பர். மேற்குறிப்பிட்ட புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர் சோதிடம் கணித்தலில் வல்லவராய் இருந்திருக்கக்கூடும் என்றும் கூறுவர். கம்போடிய நாட்டுப் பக்குவம் சமயமகாராஜ குருவும் சோதிட நூல் வல்லவராகவும் விளங்கியுள்ள செய்தியும் ஒப்பு நோக்கற்பாலது.

தென்கிழக்காசிய அரசவை அந்தணர்கள் அரசியல் சார்புடைய அதிகாரத்தை உடையவராய் இல்லை எனினும் அக்காலத்து அரசர்கள் அந்தணர் ஆற்றியபணியைச் சார்ந்திருந்தனர். அந்தணர் நடத்திய சடங்குகள் இன்றியமையாதவையாகக் கருதப்பட்டன அரசவையில் அந்தணர்கள் பெற்றிருந்த செல்வாக்கும், மக்கள் இந்து சமயத் தெய்வங்கள்மீதும் இந்து சமயச் சார்புடைய சடங்குகள் மீதும் கொண்டிருந்த நம்பிக்கைக்குக் காரணம் ஆகவும் ஆதாரமாகவும் அமைந்தது. அரசச் சடங்குகள் விழாக்கள் ஆகியவை இந்து சமயக் கோட்பாட்டின்படியும், அந்தணர் அக் கோட்பாட்டினை விளக்கிக் கூறியதற்கு இணங்கவும் நடைபெறலாயின. அரசர் முடிசூட்டு விழா அரச குடும்பத்திருமண விழா, அரச குடும்பத்துக் குழந்தைகளுக்குரிய சடங்குகள், அரசர் ஈமச் சடங்கு ஆகியவை அந்தணர் முக்கிய பங்கேற்று நடத்திய சடங்குகளாக அமைந்தன. மேலும் அந்தணர் அரசவையை சேர்ந்த சோதிடநூல் வல்லவராகவும் விளங்கினர். இராசிபலன்களை ஆராய்ந்து சாதகம் கணித்தல், அரசியல் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற காலத்தைக் கணித்துக்கூறுதல். அரசரின் கனவுப் பலன்களைக் கூறுதல், போரில் வெற்றியா தோல்வியா என்பதைக் குறிப்பிடுவது, மழைவளம் வற்றுமா, வளம் பெறுமா என ஆராய்ந்து சொல்வது ஆகிய பணிகளிலும் அந்தணர் ஈடுபட்டிருந்தனர்.

தாய்லாந்தில் அரசர் முடிசூட்டுவிழாவில் அந்தணர் பணி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அவ்விழாவில் திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய நாயன்மார் அருளிய தமிழ்த் தேவார திருப்பதிகங்களில் சிலவற்றையும் மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவைப் பாடல்களையும், ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவைப்பாடல்களையும் மகாராஜ குரு ஓதுவது இன்றியமையாத நிகழ்ச்சியாகக் கருதப்பட்டு வந்துள்ளது. சைவத்திருமுறைப்பாடல்களும் அரசர் முடிசூட்டு விழாவில் ஓதப்படுதற்குரிய காரணத்தைப் பின்னரே காண்போம்.

தாய்லாந்தில் திருவெம்பாவை திருப்பாவைத் திருவிழா

தாய்லாந்தில் கொண்டாடப்பட்ட திருவெம்பாவை, திருப்பாவைத் திருவிழா அந்நாட்டு மொழியில் 'லோஜின்தா' என அழைக்கப்பட்டது. இதற்குப் பொருள் 'ஊஞ்சலை வலித்தல்' என்பது. இதன் காரணமாக இத் திருவிழாவிற்கு ஊஞ்சல் திருவிழா என்னும் பெயருமுண்டு.

சைவ வரலாற்றில் இணுவிலின் பங்கு

— கா. செ. நடராசா-பி.ஏ. (சிறப்) எம். ஏ. யூ. —

இணுவில் என்ற ஊரின் வாழ்வினை அதன் பண்பாட்டினை ஆராயும் பொழுது; இக்கால வரலாற்றுசிரியரின் கருத்தின்படி கி. பி. 13ம் நூற்றாண்டில் இருந்தே தொடங்க வேண்டியுள்ளது. அஃதாவது யாழ்ப்பாண அரசு தோன்றிய பின்தான் இணுவிலின் வரலாறு தோன்றியது எனக்கருதுவர். அதற்கு முன் அது தனக்கு என ஓர் தனி வரலாறு உடையதாக இருக்கவில்லை என்பர். அதன் வரலாறு யாழ்ப்பாணத்துடனும் ஈழத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது.

யாழ்பாடி வடமாநிலத்தினைப் பரிசிலாகப் பெறுமுன் மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் அதனை மணிபல்லவம் எனக் குறிப்பிடுவர். தென் இந்திய நிலப்பரப்பில் இருந்து ஈழநாடு கடல்கோளால் பிரிக்கப்படு முன்னர் இந்நாட்டில் நாகர்குல மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இதற்கு மரபுவழிச் செய்திகளும் புராண இதிகாசச் செய்திகளும் அகச்சான்றுகளாக அண்மிக்கின்றன. இத்தகைய பெருமைமிகு ஈழநாட்டில் அருள்வழமும், கலைவழமும் நிறைந்து விளங்கும் இணையிலி எனப் பெயர் கொண்ட இணுவிலின் வரலாற்றை ஆராய்வது நலம் என எண்ணுகிறேன்.

யாழ்பாடி தமிழ்க் குடியேற்றத்தினை; தொண்டைநாடு, பாண்டியநாடு, சோழநாடு ஆகிய இடங்களில் இருந்து அழைத்து வந்த தமிழர்கள் மூலம் நிறைவேற்றினர் எனப் பாரம்பரிய செய்திகள் மூலம் தெரியவருகின்றது. இப்படி வந்த மக்களுடன் ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்த மக்களும் இடம் பெற்று இருத்தல் வேண்டும். தொண்டை நாட்டின் வேளிர் தலைவர் பேராயிரவர் தலைமையில் வந்த குடிகளோடு இனு குண்டா என்ற பேரூரில் இருந்தும் மக்கள் குடியேறியதாகவும் அவர்கள் இனு குண்டா எனத் தமது ஊர்ப்பேரை வைத்து அழைத்தனர் எனவும் எண்ணவேண்டியுள்ளது. வடுக வேளாளர் எனக் கூறப்படும் மக்கள் இன்றும் இணுவிலில் வாழ்கின்றனர். இப்பேர் சிங்கள மக்கள் தொடர்பினால் ஈற்றில் நின்றகுண்டு (நீர் நிலை) வில் என மொழியாக்கஞ் செய்யப்பட்டு இணுவில் என வழக்குப்பெறலாயிற்று எனலாம்.

தொண்டை மண்டலத்தை ஆண்ட தொண்டையர் மரபில் வந்த கருணாகரத் தொண்டைமானுக்கும் இணுவிலுக்கும் பெருந் தொடர்புண்டு. அஃதே போல் யாழ்ப்பாண மன்னர்களான பரராச சேகரன் சேகராச சேகரன் என்போரும் இணுவில் வாழ்வில் கலந்து நிற்கின்றனர். இந் நோக்கில் பார்க்கும்பொழுது யாழ்ப்பாண வரலாறு கி.பி. 3ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்குவதாக உள்ளது. ஏனெனில் எல்லாளன் என்ற தமிழ் வேந்தனிடம் இருந்து யாழ்பாடியால் மணற்றிடல் பரிசிலாகப் பெறப்பட்டதென வரலாற்றுசிரியர் சிலர் கருதுகின்றனர். தொண்டையர் கோன் கருணாகரத் தொண்டைமானின் ஆளும் கணத்தவரான கருணாகரர், பேராயிரவர், காலிங்கராயர் என்போர், யாழ்ப்பாண அரசாட்சியில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் சைவமும் தமிழும் வளரப் பணி புரிந்த செய்திகள் வாய் வழிச் செய்தியின் மூலம் உறுதிப்படுகின்றது. எனவே கி. பி 3ம் நூற்றாண்டில் தொடங்கிய யாழ்ப்பாணக் குடியேற்றம் 10 நூற்றாண்டுகள் கழிந்து கி.பி. 13ம் நூற்றாண்டளவில் பெருநிலை அடைந்தது எனக்கொள்ளலாம். புதிய குடியேற்றம் 1000 ஆண்டுகள் தொடர்ந்து நிகழ்ந்தது என்று கொள்வதில் தவறில்லை. தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் இருந்த தொடர்புகள் இதனை நிலைப்படுத்தும்.

மேற்குறித்த வரலாற்றுப் பின்னணியினைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத் தலைநகரில் இருந்து காங்கேயன் பெருவீதியில் நாலாவது கல் எல்லையில் இருந்து 5 வது கல் எல்லைவரை நீண்டு சுன்னாகம் பெரிய மதவு என அழைக்கப்படும் குறிச்சி வரை பரந்து கிழக்கோரமாகச் சென்று உரும்பிராய் வரை வேரூன்றித் தெற்கே கோண்டாவில் வரை கிளை பரந்து தாவடிவரை மொட்டரும் பிச்சுதுமலைவரை பிஞ்சாகி உடுவில் எல்லை வரை காய் நிலை அடைந்து இணுவிலாகக் கனிந்தது எனலாம். இவ்வூர் ஓங்கார வடிவமைப்புடன் விளங்குகிறது.

செம்மண் வழமும் நன்னீர்க் கிணறுகளும் கொண்டமைந்த இவ்வூரின் வடக்கே மருதையனார் பெயர் கொண்டு விளங்கும் மருதனார்

With best compliments of

UP-COUNTRY FORAGE
AND
BINNY TEXTILES

4 A, Goonawardane Building,
HATTON.

Phone: 0512 - 335

* *

CEYLON COMMERCIAL CO.

57, Wolfendhal Street, - Colombo-13.

Telephone: 23002

Dealers in: Forage, Textiles and Estate Suppliers.

அகில உலக இந்து மகாநாடு
சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

72, ஆனந்தக்குமாரசுவாமி மாவத்தை,
தபால் பெட்டி இல. 1294
கொழும்பு – 7.

With best compliments of

P. VAIKUNDA NADAR

GENERAL MERCHANT.

ESTATE SUPPLIERS, TAXI CARS, LORRIES, VANS
FOR HIRE.

239/B, Lower Street – Badulla.

DIAL: 469

With best compliments of

K. A. VELUPPILLAI

No. 57, Bazaar Street - Badulla.

WITH BEST COMPLIMENTS FROM

SRI BALASUBRAMANIAM & Co.,

General Merchants
Commission Agents
and
Estate Suppliers.

AGENTS FOR:

Ceylon Fertilizer Corporation
Sri Lanka Sugar Corporation.
Main Stockist Lankem Products etc.

No. 16, Main Street,
HAPUTALE.

ஸ்ரீ பாலசுப்பிரமணியம் அன் கோ.,

நிர். 16, மெயின் வீதி
அப்புத்தளை.

1982ல் அகில உலக இந்து மகாநாடு இனிது நடைபெற
எங்களின் மனங்கனிந்த நல் வாழ்த்துக்களை
சமர்ப்பிக்கின்றோம்!



சீ சன்ஸ்

நிர். 19, ஹட்டன் ரோடு
கினிகத்தேன.

WITH BEST COMPLIMENTS
FROM

Lanka Trading Company,

DEALERS IN:

- DRUGS
- FANCY GOODS
- FROZEN FOODS
- TINNED FOODS
- OILMAN GOODS
- TOYS ETC.

No. 1, Main Street
Bandarawela.

Phone: 334

With best compliments
from

A. B. S. KALIANNAN & CO.,

ESTATE SUPPLIERS, HARDWARE MERCHANTS
Textile Dealers, Pawn Broker and
Agent for Robialac Paint.

No. 58, Main Street
Haputale.

T'Phone: 292

WITH BEST COMPLIMENTS FROM

RAVI STORES

GENERAL MERCHANT
VEGETABLE SEEDS AND CHEMICALS
HOME NEEDS.

No. 19, Main Street - Haputale.

With Best Compliments of

R. N. K. RICE AGENCYS

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

44 - 46, 4th Cross Street,
Colombo-11.

Grams: RUBANS

Phone: 24365

WITH THE COMPLIMENTS FROM

VINAYAGA RICE MILL

Chanthivaly,
Morakkottanchenai.

With Best Compliments

from



K. SELVADURAI & CO.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

39, Fourth Cross Street,

COLOMBO–11.

Phone: 24008

மடத்தில் பல்லப்ப வைரவரும், கிழக்கே கருணைகரத் தொண்டமானின் பேராளரான கருணைகரரால் வழிபாடு செய்யப்பட்ட கருணை கரப்பிள்ளையாரும் (கருணைகரப் பரம்பரையினர் இன்றும் இணுவிலில் உள்ளனர்.) தென் கிழக்கில் இணுவை அப்பர் பெரிய சன்னியாசியாரால் வணங்கப்பட்ட காரைக்கால் சிவனும், சிவன் கோவிலுக்கு நேர் மேற்கே கோண்டாவிலில் தெற்கு எல்லையில் பேராயிரவர் பரம்பரையில் வந்த முதல்வர் (முதலர்) வழிபட்ட சிவகாமி அம்மனும், சிவகாமி அம்மன் கோயிலுக்கு மேற்கே இணுவை அப்பர் பெரிய சன்னியாசியாரின் சமாதியில் எழுந்தருளியிருக்கும் மஞ்சத்தடிக் கந்தனும், அவர் மூதாதையாரால் வழிபாடு செய்யப்பட்ட ஈழத்தின் அறுபடை வீடுகளில் ஒன்றுகக் கருதப்படும் இணுவில் சந்தசுவாமி கோவிலில் எழுந்தருளியிருக்கும் முருகனும், பரராசசேகரப் பேராளரால் வழிபட்ட பரராசசேகரப் பிள்ளையாரும், மேற்கின் மத்தியில் சேகராசசேகரன் பேராளரால் வழிபாடு செய்யப்பட்ட சேகராசசேகரப் பிள்ளையாரும், இணுவிலில் வாழ்விற்கு அருள் சுரக்கின்றனர். இவற்றைவிடச் சிறியதும் பெரியதுமான சிவாலயங்களும் அம்மையின் திருத்தலங்களும் நிறைந்து; சைவம் கமழும் இணையற்ற ஊராகத் திகழும் இடம் இணுவில் எனக் கூறுதல் பொருத்தமுடையது என எண்ணுகிறேன்.

சங்கச்சான்றோரான ஈழத்துப் பூதந்தேவனுக்குப்பின் இணுவில் சின்னத்தம்பிப் புலவர், இணுவில் நடராசையர், புலவர் அம்பிகை பாகனார் என்போர் குறிப்பிடத்தக்கவர். பின்னவர் இருவரும் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டு இருந்தனர். வேதாந்தத்தின் கனிவும் சித்தாந்தத்தின் சுவையும் நிறைந்து பண்பாட்டின் வழிவந்த இணுவிலில் வேற்று மதத்தைத் தழுவிய இணுவிலார் ஒருவர் கூட இல்லை என்று கூறலாம். இத்தகைய பெருமையும் உடையது இவ்வூர்.

இணுவிலின் சித்தர் பரம்பரையில் காலிங்கராயன் கைலாயநாதன் முன்வைத்து எண்ணத் தகுந்தவர்கள். சித்துக்கள் கைவரப் பெற்றவர். கர்மயோகி, அவர் வாழ்ந்த இடத்தில் அவர் மரபில் வந்தவர்கள் இன்றும் இணுவிலில் வாழ்கின்றனர். அவரின் பெயரால் இளந்தாரிகோயில் ஆலயமும் அமைந்துள்ளது. பூத உடலோடு பேரருளிற் கலந்தது என்ற செய்தியை வாய்மொழிச் செய்திகள் மூலம் கேட்டுள்ளோம். இச் செய்தி கற்பனை அல்ல. நவீன விஞ்ஞான உலகமாகக் கருதப்படும் இக் காலத்தில், காற்றோடு மனிதர்களும் படை அணிகளும், கலந்த செய்தி இன்றைய விஞ்ஞானிகளையும் சிந்திக்க வைத்துள்ளது. இது இயற்கையில் நிகழும் வியப்புக்குரிய செய்தியாகக் கருதப்படுகின்றது. உண்மையில், இயற்கையே பிரமம்–பிரம்மமே இயற்கை. சரியென்றும்–பிழையென்றும், அழகென்றும் -அழகற்றதென்றும் நாம் எண்ணுபவை எல்லாம் நம் அனுபவ நிலை கொண்டு உணர்பவை. பேரா இயற்கைப் பரம்பொருளின் திறம் உணர்ந்தவர்கள் "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே" எனப் பகர்வர். வாழ்வு எப்படி அமைதல் வேண்டும் என எண்ணும் திண்ணியர் தமது ஆத்ம அனுபூதி மூலம் பேரா இயற்கையுடன் அதாவது பிரம்மத்துடன் இரண்டறக் கலத்தல் வியப்பூட்டும் செய்தியன்று – நிகழக் கூடியதே. ஆத்ம ஞானிகள் மூவகைப் படுவர். முதல் தரத்தினர் தம் ஊர் பெயர் தெரியாது அடங்கி வாழ்ந்து இயற்கை நெறிக்கு உரம் ஊட்டுபவர்.. அத்தகையோரின் சிந்தனைகள் செயல்கள் மூலம் உருவாகின்றவர்கள் "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" ஞாயிறு போன்றவர்கள். இந்த ஞாயிற்றின் ஒளியால் வாழ்வு பெற்று அருட் கொடை கொடுப்பவர் மூன்றும் படியினர். இத்தகைய மரபு நெறிவந்தவர்கள் இணுவிலில் தோன்றி உள்ளனர். முதல் நிலை உடைய ஆத்மஞானிக்கு-கர்ம யோகிக்கும் காலிங்கராயர்–கைலாயநாதனும், இரண்டாம் நிலைக்கும் பெரிய சந்நியாசியாரும், மூன்றும் நிலைக்கு இணுவை நடராசையரும் அவர் மரபு வந்த மார்க்கண்டையரும் எடுத்துக் காட்டு. கைலாய நாதன் சிந்தித்து நெறிப்படுத்தியதை நடராசையர் உலகினுக்கு வெளிப்படுத்த இணுவை அப்பர் அதைச் செயல்ப்படுத்தினார். மார்க்கண்டையர் அதற்கு உருக் கொடுத்தார்

நடராசையர் வேப்பம் சருகு இலுப்பைச் சருகு என்பவற்றைக் கையிலேந்தி மந்திர சக்தியால் (மனோசக்தியால்) பாம்பாக ஓடச் செய்தார். பாம்புகளை அழைத்து அவற்றால் கடியுண்டோரின் நஞ்சினை எடுக்கச் செய்து பாம்புக்கும் கடியுண்டோருக்கும் வாழ்வழித்தார். இணுவை அப்பர் நிகழ்காலம் எதிர்காலம் கூறி மக்களை நெறிப்படுத்தினர். அதற்குச் சான்றாக இணுவில் மஞ்சமும், மஞ்சத்தடிக் கந்தசுவாமி கோயிலும் அமைந்துள்ளன.

நல்லூர் நகரில் வளர்ந்த சமயம்

— க. சி. குலரத்தினம்–மில்க்வைற் செய்தி ஆசிரியர் —

நல்லூரின் பூர்வகாலப் புகழ்

இதிகாச காலத்து நல்லூர் எவ்வாறு

இருந்தது என்பதை நன்முக அறிவதற்குச் சான்றுகள் போதியனவாக இல்லை. வரலாற்றுக் காலத்தில் நல்லூர் புகழ் பெற்றமை இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகும் என்பர். பொன்பற்றியூர் வேளான் பாண்டி மழவன் என்பான் முயற்சியால் தமிழ் நாட்டுச் சிங்கையாரியன் என்னும் அரசகுமாரன் நல்லூரில் அரியணை ஏறிய பின்னரே நல்லூர் பலவழிகளிலும் நிறைவுகண்டது என்பர். சிங்கையாரியனின் மந்திரியாயிருந்த புவனேகபாகு என்பானின் அறிவாற்றலைப் புகழ்பவர்கள், அவனே நல்லூரை முன்னணிக்குக் கொண்டுவந்தானென்பர். இதற்கு ஆதாரமாகப் பழைய பாடலொன்றையும் குறிப்பிடுவர்.

'இலகிய சகாப்த மெண்ணூற் றெழுப தாமாண்டினெல்லை
யலர் பொலி மார்பனும் புவனேகவாகு
நலமிகு யாழ்ப்பாணத்தினகரி கட்டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே.''

புவனேகவாகு என்னும் மந்திரியார் சேக்கிழாரைப் போல ஒரு சைவப்பெரியார். அவர்காலம் இப்பாடலிற் குறித்தவண்ணம் கி.பி. 950ம் ஆண்டளவிற் முயின் அவர் சேக்கிழாருக்கு முற்பட்டவராகும். அவரே நல்லூர்க் கந்தசுவாமியார் கோயிலைக் கட்டுவித்தார் என்பது பாடலிற் குறிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பொன்னகராவதியெனப் பொலிந்து விளங்குவதற்கு ஏதுவாக எங்கும் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள், அழகிய சோலைகள், கோயில்கள் திருக்குளங்கள், மடங்கள் முதலியன பொலிவுபெற்றன. தேரோடும் வீதிகள், ஆனைப் பந்திகள், அஸ்வ பந்திகள், அத்தியடிகள், பிராமணர் இருக்கைகள், செட்டிமார் தெருக்கள், புலவர்மார் இல்லங்கள், பஞ்சகம்மாளர் இருக்கைகள், நெசவாளர் இருக்கைகள், தூபமிடுவோர் இருக்கைகள், பட்டாத்திரஞ் செய்வோர் வீடுகள், தூணிவெழுப்போர் இருக்கைகள், அவர்களுக்குக் குளங்கள் முதலியன வரிசைவரிசையாக அமைக்கப்பெற்றன: மருத்துவர், சோதிடர், மந்திரங்கள் ஆகமங்கள் அறிந்தோர் மனைகள் சித்திரந் தீட்டுவோர், புலவர்கள், நூல்செய்வோர் இல்லங்கள் யாவும் வரிசை நோக்கி அமைக்கப்பெற்றன.

நல்லூரில் நடுநாயகமாய் அமைந்த கந்தசுவாமி கோயிலைச் சூழ நாற்றிசைகளிலும் காவற்கோட்டங்களாக நகரப் பெருவீதிகளில் கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், தெற்கில் கைலாசநாதர் கோயிலும், மேற்கில் வீரமாகாளியம்மன் கோயிலும், வடக்கில் சட்டநாதர் கோயிலும் அமைந்தன. இத்திருக்கோயில்களைச் சூழ இன்னும் பல பரிவார தெய்வங்களுக்கும் கோயில்கள் எழுந்தன.

யாழ்ப்பாணத்து நாகரிகம் குளங்கரை நாகரிகம் என்பது கூருமலே அமையுமாறு ஊர்கள் தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட குளங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். குளம்தொட்டு வளம் பெருக்கிய நாகரிகம் தமிழ்நாகரிகம் என்பதற்கு யாழ்ப்பாணத்தையும் அவர்கள் செல்வாக்குப் பரந்த வன்னிநாட்டையும் விட வேறு இடங்கள் மிகக்குறைவானவை என்றே கூறுதல் அமையும்.

நல்லூரிலேயே யமுனைஏரி, நாயன்மார்கட்டு பிராமணக்குளம், பண்டாரக்குளம், அம்மைச்சிகுளம், ஆரியகுளம், தாமரைக் குளம், தேவரீர்க்குளம், பூதராயர்குளம், பரவைக்குளம் முதலிய பல குளங்கள் உள்ளன. நல்லூரையடுத்திருநெல்வேலி, இருபாலை, கைதடி, செம்மணி, கந்தர்மடம் முதலிய இடங்களில் மேலும் பல குளங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.

கனகசூரியனுக்குப்பின் அவன் மைந்தர் காலத்தில் நல்லூர் மேலும் பல சிறப்புக்கள் பெற்றிருந்தன. நல்லூரிலமைந்த தமிழ்ச் சங்கமும் அறுபத்து மூன்று நாயன்மார் கட்டும் குளமும் மடமும் புலவர்கள் இருக்கையும் முன்னர் பாண்டியன் சைவமும் தமிழும் வளர்த்த பாங்கையொத்திருந்தன. அரச குடும்பத்தார் அனைவரும் செந்தமிழன்பும் சிவநேயமும் பூண்டிருந்தனர். பண்ணில் தோயப் பொருள் பொதிந்த பாடல்களை யாத்த புலவர்களுக்கு எண்ணி எண்ணிப் பொன் முடிப்புக்களை ஈந்தனர். அறுபத்து மூவர்கட்டு என்னும் மடத்தோடு அடியார்க்கு நல்லார் திருக்குளமும் புலவர்களுக்கு உறைவிட வசதியாய் இருந்தன. அரச குடும்பத்தவருள் ஒருவராய அரசகேசரி என்பார் காளிதாசரின் இருகுவம்சம் என்னும் காவியத்தைத் தமிழில் பெயர்த்தெழுதித் திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயிலில் அரங்கேற்றினர். யாழ்ப்பாணத்து அரசர் திருக்கேதீச்சரம் திருக்கோணேச்சரம், இராமேஸ்வரம் முதலிய ஈஸ்வரங்களை அதிகாரிகளை நியமித்துப் பரிபாலித்தனர். அரண்மனைப் புரோகிதர்களாகக் கங்காதரக்குருக்களின் பரம்பரையினர் இருந்தனர் என்பர்.

கந்தபுராண கலாசாரம்

காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் கந்த புராணத்தை அரங்கேற்றிய காலத்தை அடுத்து வீர ராகவன் என்றும் சைவப்பெரியார் கந்தபுராணப் பிரதி ஒன்று கொண்டு யாழ்ப்பாணம் வந்தார் என் பர். அவர்வருகையோடு யாழ்ப்பாணமெங்கும் கந்த புராணம் படித்துப் பயன்சொல்லும் பாரம்பரியமும் உண்டாயிற்று. யாழ்ப்பாணத்துக் கலாசார மூலம் கந்தபுராணமாயிற்று. நல்லூரின் மேற்கெல்லை அரச வெளி எனப் பெயர் பெற்றிருந்தது. அங்கே அமைந்த மடம் ஒன்றில் கந்தபுராணம் படிக்கப் பெற்றதால் அம்மடம் கந்தபுராணமடம் எனப்பெயர்பெற்ற தோடு அந்த இடம் கந்தமடம் எனப்பெயர் பெறுவ தாயிற்று. கந்தமடவூரில் கந்தபுராண மடத்தைவிட செல்லப்பிள்ளையார் மடம், சின்ன மடம் முதலான மடங்களும் கோணிகளும் நல்லூர்ப்பெருமானே நாடிவ ரும் அயலூர் அன்பர்களின் வசதிகளுக்காக அக்கா லத்தில் கட்டப்பெற்றன.

சைவப்பிரகாச வித்தியாசாலை அம்மச்சி குளக் கரையிலிருந்தது. இன்னும் கடையிற் சுவாமியார் வழிவந்த சின்னச்சாமி அவர்களின் சமாதிப்பேறுள்ள குருவார அன்னசத்திரமும், சின்மயானந்த சுவாமி கள் வழிவந்த சார்சன் சுவாமிகள் எனவழங்கும் சின் னத்தம்பி சுவாமிகள் சீடர் கனகரத்தின சுவாமிகள் தாபித்த வேதாந்த மடமும் கந்த மடவூரில் பணி புரிந்து வந்தன. நாவலரவர் கண்டனங்களுக்காளாய சந்தமடப்பிரபு சைவப்பணியும் கல்விப்பணியும் செய்துவந்த பெரியவர். ஆனல் சாராயக் குத்தகை எடுத்தமையும் கூத்தாடிகளை வரவழைத்தமையையும் நாவலர் ஐயா விரும்பவில்லை.

இரகுநாதமாப்பாண முதலியார் புதிய கோயில் அமைத்தல்

தமிழரசர் ஆட்சியும் நல்லூரின் பெருமையும் 1621ம் ஆண்டின் பின் ஒளி குன்றக் காரணமாயிருந் தவர் பறங்கியர் என வழங்கும் போர்த்துக்கேயரா வர். அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தர் காலத் தில் நீறு பூத்த நெருப்புப் போல இருந்த குடும்பங் களுள் ஒன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்தம் முன்னோரா வர்; அவர்களுள் ஒருவராய ஞானப்பிரகாசத்தம்பி ரான் சுவாமிகளே ஒல்லாந்த அதிபதிக்குப் பசுக்கன்று கொடுப்பதிலும் பார்க்கத் தேசாந்தரம் போகலாம் எனக்கருதி பாரதநாட்டுக்குச் சென்றவர்; அங்குப் பெரும் பணி புரிந்தவர்.

ஒல்லாந்தர் காலத்திற் பிற்பகுதியில் ஓரளவு சைவ சமயம் ஒளிகாலத் தொடங்கியது. அக்காலத் தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் அலுவல் பார்த்த இரகுநாத மாப்பாண முதலியார் என்பார் 1734ம் ஆண்டில் குருக்கள் வளவு என்னும் நிலப்பரப்பில் கந்தசுவாமியாருக்கு ஒரு வேற்கோட்டம் அமைத் தார். அது நாள்தோறும் வளர்ந்து உலகப் புகழ் பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாக வளர்ந்துள் ளது. இரகுநாத முதலியார் அவர்களின் வழித் தோன்றல்கள் இக்கோயிலை நன்கு பரிபாலித்து வரு கின்றார்கள். இன்று தமிழ்நாட்டிற் காண முடியாத வகையில் உற்சவங்கள் காலந்தவருமல் நடைபெறு கின்றன; இவற்றைக் கண்டு வள்ளி தேவயானை சமேத முருகப்பெருமானைப் பணிந்து போக நாள்தோ றும் காலைமாலை பல்லாயிரவர் வந்து போகின்றனர்; உற்சவங்கள் இல்லாத சாதாரண நாட்களிலும் நாள் தோறும் நூற்றுக்கணக்கானோர் வழிபட்டுப் போகும் சிறப்பு வேறெங்குங் காண முடியாததாகும்.

சைவம் வளர்த்த புலவர்கள்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் அலுவல்பார்த்த மற்றொருவர் வில்வராய முதலியார் என்பாராவர்; அவர் மைந்தர் சின்னத் தம்பி பெரும்புலவராய் இருந்ததோடு இளமையி லேயே சுயம்பாடத் தொடங்கியவர்; அக்காலத்தில் திருவண்ணுமலை ஆதீனத்தம்பிரான் சுவாமிகளுள் ஒரு வரான கனகசபாபதி யோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் என்பார் யாழ்ப்பாணத்திற்கு எழுந்தருளி வண்ணை வைத்திலிங்கம் செட்டியாரைக் கொண்டு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டுவித்தவர். அவர் இடையிடை நல்லூர் வில்வராய முதலியார் இல்லத்தில் கதாகாலட்சேபஞ் செய்வது வழக்கம் என்பர். அக்காலத்தில் நல்லூர் புகழ்பெற்றிருந்த மையைக் குழந்தைக் கவிராய சின்னத்தம்பிப்புலவர் வீசுபுகழ் நல்லூர் எனப்பாடியுள்ளார்;

அவர் கரவெட்டி வேலாயுத முதலியார் மீது கரவைவேலன் கோவை பாடி நல்லூரில் பண்டாரக் குளத்தடி வயலைப் பரிசாகப் பெற்றவர் என்பர்; அவர் திருமறைக்காடு என்னும் வேதாரணியத்து இறைவன் மீது மறைசையந்தாதி பாடி அரங்கேற் றித் தமிழ்நாட்டிற் பெரும்புகழ் பெற்றவர். அவரே பருளை விநாயகர்பள்ளு முதலிய பல பிரபந்தங்களை யும் பாடினர் என்பர்.

சின்னத்தம்பிப் புலவர் செய்த நூல்கள் யாவும் இலக்கிய நயஞ் சிறந்துள்ள அளவில் சைவசமயத்திற னும் பொருந்தியுள்ளன. பழைய சைவ சம்பிரதாயங் கள், ஒழுங்குகள், சம்ஸ்காரங்கள் என்பன அவர் பாடல்களில் பலவிடங்களில் பக்தி பூர்வமாகச் கூறப் பெற்றுள்ளன;

ஆறுமுகநாவலர் அவர்களின் தாயார் சிவகாமி, தந்தையார் வேதவனம் என்பவரின் முன்னோரே முன்

சொன்ன ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளாவர். நாவலர் அவர்களின் தந்தையார் கந்தர் என்னும் இலங்கையரின் முன்னோர் மூத்ததம்பி முதலியார், சோதிநாதர் இலங்கை காவலர், பரமானந்தர் என்பவராவர். நாவலருடன் முன் பிறந்த சகோதரர் தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தப்பு என்பவராவர். இவர்களிடை நாவலர்களுக்குச் சகோதரிமார் ஆறுபேரிருந்தனர்.

நாவலரவர்களின் குடும்பத்தினர் நல்லூர் முருகனையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டவர்கள். அவர்கள் எல்லோருமே புலமைவாய்ந்தவர்களாவர்; அவர்கள் முருகன் மீது பல பக்திப்பிரபந்தங்களும், தனிப்பாடல்களும் பாடியுள்ளார்கள். நல்லூரை மையமாகக் கொண்டு சைவப் புனருத்தாரணஞ் செய்வதும் மறுமலர்ச்சி செய்வதுமே நாவலரவர்களின்வேணவாவாகும். அது வீணவாவாப்போதலாகாது எனக்கருதியே அவர் நைட்டிகப் பிரமசாரியாயிருந்ததும் தமது ஆசிரியத் தொழிலைப் பரித்தியாகஞ் செய்ததுமாகும்.

நல்லூரினணித்தாக வாழ்ந்து நாள்தோறும் வழிபடுதல் வேண்டும் எனக் கருதிச் சின்னத்தம்பிப் புலவர், சேனாதிராச முதலியார், சரவணமுத்துப் புலவர், சிவசம்புப் புலவர், சபாபதி நாவலர், குமாரசுவாமி முதலியார், ஐயாத்துரை ஐயர், பரமானந்தப் புலவர், தில்லைநாதப்புலவர், சோமசுந்தரப்புலவர் முதலாக ஐம்பதுக்கதிகமானோர் பல்வேறு வகைப்பட்ட பக்திப் பிரபந்தங்கள் பாடியுள்ளார்கள்.

நல்லூரில் நல்லமுறையில் சைவம் வளர வேண்டும், சைவச்சூழல் உண்டாதல் வேண்டும், சைவச் சிறார்கள் சைவப் பெரியார்களாய் உருவாதல் வேண்டும் எனக்கருதிய பெரியவர்கள் சைவப் பெண்களை நினைவிற் கொண்டு மங்கையர்க்கரசி வித்தியாசாலை, பார்வதி வித்தியாசாலை, மகேஸ்வரி வித்தியாசாலை முதலிய சைவப் பாடசாலைகளை நிறுவினர்கள்.

பக்திப் பிரபந்தங்கள், பாடல்கள்

நல்லூர் முருகன் மீது புலவர்கள் பக்திதெறியாளர் பாடிய பிரபந்தங்கள் பக்திப் பாடல்கள் மிகப் பல. கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் நல்லைக்கலிவெண்பா பாடியுள்ளார். அவர் மாணாக்கரும் ஆறுமுக நாவலரின் ஆசிரியருமான இருபாலைச் சேனாதிராய முதலியார் நல்லூரிலே அலுவலகம் அமைத்து நல்லூர்த் திருக்கோயிலை நாளும் வழிபட்டு நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி முதலிய பிரபந்தங்கள் பாடியுள்ளார். "திருவாரும் நல்லைநகர், கொடிவளரு மணிமாடக்கோபுரஞ்சூழ் நல்லூரி, காங்கேயன் காதலித்து வந்த நல்லூர், நன்னூல் கலை விளங்கு நல்லூர் என்றெல்லாம் போற்றியுள்ளார்.

சேனாதிராய முதலியாருக்கு முன் வாழ்ந்த சந்திரசேகரபண்டிதர் என்பர் 1785ம் ஆண்டில் ஒல்லாந்தர் காலத்திலே நல்லூர் முருகன் மீது கிள்ளைவிடுதூது பாடியுள்ளார். "விந்தைசெறி நல்லூர் விரும்பியுறுங் கந்தன்பாற் சுந்தரஞ்சேர் கிள்ளைவிடுதூது" என்று தமது காப்புச் செய்யுளில் குறிப்பிடுகின்றார்.

ஆறுமுகநாவலரின் தந்தையார் கந்தர் நல்லை நகர்க்குறவஞ்சி பாடியுள்ளார். நாவலரின் தமையனார் பரமானந்தர் நல்லைக் கந்தரகவல், நல்லைக்கந்தர் கீர்த்தனம் முதலிய பிரபந்தங்கள் பாடியுள்ளார். ஆறுமுகநாவலர் தமது இளமைக்காலம் முதலாக வழிபட்டுவந்த நல்லூர்ப் பெருமானை வாழ்த்திப் பல விருத்தப்பாக்கள் பாடியுள்ளார்; "தருண மிதுவென வமரர்பணி நல்லை யமர்கந்தர் தமதடியர் நிதமும் வாழி சகசநிரு மலபரமசுகிர்த பரிபூரண சடாட்சரம் வாழி வாழி" என வருவது ஒரு பாடல் ஈற்றடி.

நாவலரவர்களின் மாணாக்கர்களுள் ஒருவராய கொக்குவில் சபாரத்தின முதலியார் முருகப்பெருமான் மீது பக்திகொண்டவர் என்பதோடு, குகதாசர் எனத் தம்மை அடிமைப் படுத்திக் கொண்டவர். தமது உபாசனை மூர்த்தியாய குகப்பெருமான் அடியிணையை முடியணியாகக் கொண்டு வாழ்வாம் என்று காப்புப் பாடல் பாடிய அவர் நல்லை நான் மணிமாலை என்னும் பிரபந்தமும் பாடியுள்ளார். மறுமலர்ச்சிக்காலம் முதலாக இன்று வரை நூற்றுக்கு மேற்பட்ட முருகனடியார்கள் நல்லூரையும் முருகனையும் போற்றிப் பல்வேறு பிரபந்தங்கள் பாடிச் சைவம் வளர்த்துள்ளார்கள்; அவர்கள் முருகன் மீதும் வள்ளிதெய்வானை மீதும், வேல்மீதும், மயில் மீதும், நல்லூர் மீதும் பாடிய பாடல்கள் அதிகம்; அவை கிளிக்கண்ணி, காவடிப்பாட்டு, சிந்து முதலிய துறைகளிலும் அமைந்துள்ளன.

நல்லூர் இருதயஸ்தானம்

நல்லூர் யாழ்ப்பாண அரசின் தலை நகரமாயிருந்த காலம் போய் இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சைவசமயத்தின் இருதயஸ்தானமாய் இலங்கையருக்கு இன்பசுகமளிக்கின்றது. உள்ளூரவர், அயலூரவர், இலங்கையர் என்ற விரிவில் வியாபக முற்று அயல் நாட்டவர் வெளி நாட்டவர் உலக உல்லாசப் பிரயாணிகள் என எல்லோரும் நல்லூரைக்கண்டு தலை தாழ்த்திப் போவதற்குக் காரணமான காந்த சக்தி இங்கே வேலை செய்கிறது; பாரம்பரியமாய் அறங்காவல் செய்து வருகின்ற மாப்பாணர் குடும்பத்தாரை எத்தனைமுறை பாராட்டினாலும் தகும். அவர்கள் கோயில் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாய் இருப்பவர்கள்;

சைவம் வளர்த்த மடங்கள்

முற்காலத்தில் அயலூரவர் கால்நடையாகவும், மாட்டுவண்டி மூலமும் நல்லூருக்கு வந்த காலத்தில் அவர்கள் திருக்கோயிலின் சூழலில் தங்கி உண்டு உறங்கி வணங்கிப்போவதற்கு வசதி வாய்ப்புச் செய்யும் மடங்கள் வெளிப்பிராகாரங்களில் ஆங்காங்கே அமைந்திருந்தன. கிழக்கு வீதியில் அறுபத்து மூவர் குருபூசை மடம், சடையம்மா மடம் என்னும் மடங்கள் உள்ளன. முருக பக்தியில் முதிர்ந்து வினங்கிய சடையம்மா கிரிமலையிலும், கதிர்காமத்திலும் மடங்கள் கட்டித் தொண்டு புரிந்தவர். அறுபத்து மூவர் மடத்தில் முன்னர் வாழ்ந்த கார்த்திகேசுச்சுவாமி என்பார் வேலணையைச் சேர்ந்தவர் என்பர். இவர் இளமையிலே நல்லூரையடைந்து ஆசார சீலராய் மூவகைத்தீட்சைகளையும் முறையாகப் பெற்று ஆத்ம ஞானப்படியில் முன்னேறியவர். நல்லூரில் தினமும் சிவநாமஞ்சொல்லிவந்த இவர் பழுத்த சிவஞானியாய்ச் சீவன் முத்தராய் வாழ்ந்து சமாதி கூடியவர்.

தெற்கு வீதியில் பிராமணர்களின் மனைகளிடையே வாழ்ந்த ஜானகி அம்மாள் என்பார் தமது வளவை 1872ம் ஆண்டளவில் ஆறுமுகநாவலர் அவர்களுக்கு விலைக்கு விற்றபோது அதிலே மடம் அமைத்துக் கந்தபுராணம் படித்து வருதல் வேண்டும் என விருப்பந்தெரிவித்திருந்தார். அம்மையாரின் விருப்பம் ஏறக்குறைய நூறுண்டுகளின்பின் 1969ம் ஆண்டு முதலாக அங்கே நாவலர் மண்டபம் உருவாகி நடைபெற்று வருகின்றது.

மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோயிலருகில் மங்கையர்க்கரசி வித்தியாலயமும் பெரிய மடமும் மானிப்பாயைச் சேர்ந்த மதியாபரண முதலியார் மைந்தர் முத்த தம்பி என்னும் சிறுப்பர் அவர்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இப்பெரியார் நல்லூர்த் தீர்த்தக்கேணியை நல்முறையில் திருத்திக் கட்டுவித்தார் என்றும் அறியக்கிடக்கின்றது.

வடக்கு வீதியில் சின்னர் மடம் எனப் பெயர் பெற்று நிலவிய மடத்தில் இன்று கோயிற் குருக்கள் மார் சிலர் வாழ்ந்து வருகின்றனர். நல்லூரிலும் அதனை மருவிய அயலூர்களிலும் வாழ்ந்த பெரியவர்கள் அக்காலத்தில் மடங்களில் புராணபடனங்கள், சைவப்பிரசங்கங்கள் கேட்டு உய்தியடைந்து, தங்கள் பெருநிலப்பரப்பின் ஒருபகுதியைத் திருக்கோயில்களுக்குத் தருமசாதனஞ் செய்தார்கள். தாமும் சில இடங்களில் மடங்கள் அமைத்துப் பரிபாலித்தார்கள்.

கந்தமடத்தில் வாழ்ந்த தம்பையா உபாத்தியாயர் என்னும் சாமிநாதபண்டிதர் ஆறுமுகநாவலரவர்களின் மருகருமானவித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்று விற்பத்தி மானுகி, சைவாலயங்களில் சைவப் பிரசங்கங்கள் செய்தும், திருமுறைகளையும் சிவஞானபோதத்தையும் அச்சிட்டுப் பரப்பியும் பெருந்தொண்டு செய்தார்.

சித்தர் பரம்பரை செய்த பணி

இலங்கையைச் சிவ பூமியென்று திருமூலர் பாடியுள்ளார். இலங்கையை ஆண்ட இராவணன் மேலது நீறு என்று திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் அருளியுள்ளார். இராவணனின் தேவி மண்டோதரிக்குச் சிவபிரானருள் செய்த திறத்தை மாணிக்கவாசக சுவாமிகள் போற்றியுள்ளார். சிவ பூமியாய சிரிலங்கா புரியின் சிறப்பும் மேன்மையும் மத்திய காலத்தில் போர்த்துக்கேயர்வருகையால்மறைக்கப்பட்டன. கிரகண காலம் போல ஐரோப்பியர் ஆக்கிரமிப்பு நீங்கும்வேளையில் மகத்தான மறுமலர்ச்சி உண்டாயிற்று.

மறுமலர்ச்சிப் பாதையில் புனராவர்த்தம் புதுப் பொலிவோடு உதயமாவதற்கு மூலபண்டாரம் வழங்கியவர்கள் முப்பெருஞ் சித்தர்கள். சித்தத்தைச் சிவன் பாலே வைத்த இவர்கள் மும்மூர்த்திகள் போல் வடதேயத்திலிருந்து தெற்கு நோக்கித் தட்சிணமூர்த்தத்தில் வந்தார்கள். இவர்கள் முத்தியானந்தர், சின்மயானந்தர், நிரஞ்சனானந்தர் என்பவர்களாவர். இவர்கள் இலங்கையின் மூலை முடுக்கெங்குஞ் சென்று மூல பண்டாரம் வழங்கிச் சித்தமலம் அறுவித்துச் சிவநெறி காட்டி வந்த காலத்தில் ஈழத்துச் சித்தர் பரம்பரை எங்கும் உண்டாயின.

முத்தானந்தர் என்பவரே புகழ்பெற்ற கடையிற் சுவாமிகளாவர். இவர் தரிசனத்தால், திருநோக்கால் பரிசத்தால், ஏச்சினால், பேச்சினால், உபதேசத்தால், தீட்சையால் உய்யும் நெறிகண்டவர்கள் பலர். இவர் நடந்து சென்ற பாதையின் மண்ணை வாரித் திருநீறைப் பூசியவர் பலர்.

கடையிற் சுவாமிகள் கந்தர்மடத்தில் நடமாடிய காலத்தில் சாஜுன் சின்னத்தம்பி கந்தபுராண வீதியில் வாழ்ந்தவர். சின்னத்தம்பி அவர்கள் கடையிற் சுவாமிகளை பின்தொடர்ந்தபோது அவரை சின்மயானந்த சுவாமிகளிடம் அனுப்பிவிட்டு நல்லூருக்குச் சென்றார். நல்லூர்த் தேரடிக்கு அணித்தாகச் செல்லப்பா என்றொருவர் ஞானமார்க்கத்தை அவாவி விசர்ப்போக்கில் ஒரு மூலையில் முடங்கிக்கிடந்தார். மூலையில் முடங்கிக்கிடந்த செல்லப்பரைக் கடையிற் சுவாமி ஏச்சினால் உபதேசித்து நோக்கினால் தீட்சை புரிந்து, மூலையைவிட்டு வெளியேறித் தேரடியில் இருக்குமாறு பணித்தார்.

''மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என்றுந் திபற,
தவத்தில் தலைவர் என்றுந்திபற''

இந்து சமய வளர்ச்சிக்கு நயினாதீவு அளித்த பங்கு

— கவிஞர் நா க. சண்முகநாதபிள்ளை-B.Sc.Dip. in Ed. —

இந்து சமயம் மிகத்தொன்மையானது. இது பல பிரிவுகளைக் கொண்டது. சிந்துவெளி நாகரிகத்தின் அகழ்வாராய்ச்சி மூலம் பல தொன்மையான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிவவழிபாடு, சக்திவழிபாடு, சிவலிங்கவழிபாடு, மால்வழிபாடு, திங்கள் வழிபாடு, முருக வழிபாடு எனப் பல வழி பாட்டு முறைகள், இந்து சமயத்தைப் பரந்து விரி து உயர்ந்து செல்ல வழிவகுத்துள்ளன. இவற்றை சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டெழுந்தது சைவம், சக்தியை முழுமுதற்கடவுளாகக் கொண்டது சாக்தம். திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டது வைஷ்ணவம். பாரத நாட்டிலே இந்து சமயவழிபாட்டுப் பிரிவுகள் அனைத்தும் சிறப்புற்றுள்ளன. ஆனால் இலங்கையிலே சைவ சமயமே சிறப்புற்று விளங்குகின்றது. சிவனையும் சிவ மூர்த்தங்களையும் இலங்கைச் சைவர்கள் வழிபடுகின்றனர். சமயமும் கலைகளும் போலவே சிறிய தொடக்கத்திலிருந்து பலநூறு ஆண்டுகளாக வளர்ந்து கிளைகளாகப் பிரிந்துள்ளது எனக் கூறுவதே பொருத்தமாகும்.

"அவ்வாறு அறிவார் அறிகின்றதலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே" என்ற கந்தர் அனுபூதி அடிகளுக்கொப்ப மக்கள் கூட்டத்தினர் சாத்தமக்குப் புலப்பட்ட 'பட்டறிவின்படி' வணக்க முறைகளைக் கைக்கொண்டனர். இந்த வகையில் இலங்கையிலுள்ள நயினாதீவு இந்து சமயவளர்ச்சிக்கு அளித்த பங்கை ஆராய்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும். நயினாதீவு இலங்கையிலுள்ள மிகத் தொன்மையான தலங்களில் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புடையது.

இங்கு அமைந்துள்ள ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயம் முன்னர் நாகம்மாள் கோயில் என்றும் நாகேஸ்வரி ஆலயம் என்றும் நாகராஜேஸ்வரி ஆலயம் என்றும் அழைக்கப்பெற்றதாக அறியக்கிடக்கிறது. அல்லாமலும் முற்காலத்தில் இங்கே அம்மன் சந்நிதியோடு சிவன் சந்நிதியும் இருந்ததாகவும் ஊகங்கள் கிடைக்கின்றன. தற்போதுள்ள ஆலயத்தின் மூலஸ்தானத்தில் கல்லினால் அமைந்த ஐந்துதலை நாகச்சிலை ஒன்றும் அதன் முன்பாக லிங்க வடிவில் அமைந்த அமைப்பொன்றும் உண்டு. இவ்வாலயத்தைத் தரிசித்த தமிழ்நாடு – காரைக்குடி செல்லக்கண்ணு ஸ்தபதியார் "மூலத்தான விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகின்றது. ஆனால் நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னர் ஏற்பட்டிருக்கலாம். மூலஸ்தான விக்கிரகத்திற்குப் பின்னாலுள்ள நாக படம் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கிறது. சீறுவது போலிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்தியச் சிற்பவல்லுனர் திரு. நரசிம்மன் அவர்கள் மூலத்தான அமைப்பைப் பார்த்தபின் "நயினாதீவில் மூலத்தான அம்மன் போலிருப்பது நாகப்பிரதிஷ்டையே, இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போல் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்து தலை நாகப்பிரதிஷ்டை ஒன்றுண்டு. இந்தியாவிலும் நாகவழிபாட்டிற்கே பிரதிதியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயில் காண்பது அரிது. கலப்பற்ற தூய்மையான நாகவழிபாட்டுப் பண்பினை நயினாதீவில் காணலாம். சரித்திர காலத்திற்கு எட்டாத காலந் தொடக்கம் உள்ள கோயில் இது என்பது புலனாகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிருள்ள நாகபாம்பு வழிபாடுகூட நயினாதீவில் இருந்ததாகச் செல்வி. சி. எவ். கோர்டன் கம்மிங் குறிப்பிட்டுள்ளதாக வண. ஜேம்ஸ் காட்மன் எடுத்துக்காட்டியுள்ளார்.

பண்டிற் சேதுராமன் அவர்கள் 1951-ல் நயினாதீவிற்கு வந்தபோது, "மூலமூர்த்தியாக விளங்குவது சர்ப்ப உருவில் அமைந்த மகாகுண்டலினி சக்தியே" என்று குறிப்பிட்டுள்ளார். 1955ம் ஆண்டு கிருபானந்தவாரியார் அவர்கள் நயினாதீவு அம்மனைத் தரிசித்தார்கள். அவர் "அம்பிகையின் திருவுருவம் இன்ன காலத்தில் அமைக்கப்பெற்றதென நிச்சயிக்க முடியாத அத்துணைப் பழமை வாய்ந்தது. வழிபாட்டாளர்களின் வல்வினைகளை ஒருங்கே நீக்கி வரங்கள் அருளவல்ல வரதமுடையது" என்றார்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளிலிருந்து நாகவழிபாட்டின் தொன்மைப் பழம்பெருங் கோயிலாக நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்திருந்ததென்பதை அறியமுடிகிறது. நாகவழிபாடு இந்தியாவின் பழங்குடிகளுள் மட்டுமல்ல, சரித்திரகாலத்திற்கு முற்பட்ட வேறனேக குழுவின ருள்ளும் பரவியிருந்தது. "சாதி நச்சுவாய் அகிமாலினி" என்று அபிராமிப்பட்டர் தமது அந்தாதியிலே குறிப்பிடுவது பாம்போடு பொருந்திய அம்மனையேயென்றும், இப்பெயர் இலங்கையில் நயினாதீவிலுள்ள அம்மனையே சூட்டலாம் என்றும் திரு.கி.வா.ஜகநாதன் அவர்கள் தமது "மாலைபூண்ட மலர்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே நாகர்கள் அநுட்டித்த நாகவழிபாடு இன்று மிக ஆணித்தரமாக உலகில் வேறெங்கும் இல்லாதவகை

பில் நயினையில் நிலைத்துவிட்டது. இந்து சமய வழி பாட்டு முறைகளில் நாகம் முக்கிய இடம்பெறுகிறது. "மனிதனின் உடல் நிலைசீரடையவும் அதிஷ்டம் விளைய வும் நாகதேவதையை அக்காலமக்கள் வழிபட்டு வந் தார்கள்" என்று பிரபல சரித்திர ஆராய்ச்சியாளர் பர்கூஸன் குறித்திருக்கின்றார். ருக்வேத காலத்தில் நாகவழிபாடு தோன்றியது என்பது இந்திய ஆராய்ச் சியாளர் கருத்து. யசுர்வேத காலத்தில் மக்கள் நாகத்தைப் பொதுத் தெய்வமாகப் போற்றினர்கள். அதர்வண வேதத்தில் நாகவழிபாட்டு மந்திரங்கள் பல உண்டு. புராணங்களிலும் இலக்கியங்களிலும் நாகங்கள் குறிப்பிடப்படுகின்றன.

5000 ஆண்டுகட்கு முற்பட்ட மொகஞ்சதாரோ நாகரிக காலத்திலுள்ள பட்டயங்களிலும் நாக வழி பாடு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. முழு முதற் கடவுளாகிய சிவன் சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்திருப்பதும், கண்ணன் பாம்பின் தலைமேல் நடமிடும் பாதத்துடன் காட்சியளிப்பதும் அமுதம் கடைந்தெடுக்க ஆதி சேடனைக் கயிறுக்கியதும், எல் லாம் பாம்போடு தொடர்பான ஒரு தெய்வப் பரம் பரையையே நாம் இந்து சமயத்தில் காண்கின்றோம்.

"பணி பதி வேஷ்டித சோபிதலிங்கம்" என்று லிங்காஷ்டகத்தில் கூறப்பட்டதன் பொருள் பாம்பின் படத்தினால் இயற்கையாகச் சுற்றப்பட்ட அல்லது மூடப்பட்ட லிங்கத்தையே குறிக்கிறது. எனவே இந்துசமய வளர்ச்சிக்கு நயினாதீவிலுள்ள நாகவழி பாட்டுப் பழமை முக்கியமானதாகும்.

இனி சக்திவழிபாடு பற்றிச் சிந்திப்போம். "இச்சா மாத்ரம் ப்ரபோ சிருஷ்டி" என்ற சமஸ்கிருத சுலோ கம்-சிவமின்றிச் சக்தியில்லைச் சக்தியின்றிச் சிவமில்லை என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது. நயினையில் இருப்பது 64 சக்திபீடங்களில் ஒன்றான "புவனேஸ் வரி பீடமாகும். இதனைப் புத்த பீடிகை என்று கருது வது தத்துவ தவறாகும். இதற்கான விளக்கங்களை "புராதனி நயினை நாகபூஷணி" என்ற ஸ்தலவர லாற்று நூலில் விபரமாகக்காணலாம்.

நயினையிலுள்ள சக்தி, தவநேயமுள்ளவர்களுக்கு தக்கதோர் அருட்சுரப்பியாகும். "சந்தன குங்கும அலங்காரத்துடன் இங்குள்ள எழுந்தருளி அம்மன் விக்கிரகத்தின் கிருபா சோபையைக் கண்டு களித்த வர்கள் அன்னையின் அருளை என்றும் மறவார். நீலக் கடற்பாம்பின் நடுவிலிருந்து ஆசைக்கடலில் அகப் பட்டு அலைவோர்க்கு தனது திருவடிகளான வாசக் கமலங்களைத் தலைமேல் வைத்து, அருள் நேசகரம் நீட்டி நிம்மதி தருகின்றாள் அன்னை. பிள்ளைக்கனிய முதம் வேண்டுவோருக்கு அதனை அள்ளிக் கையால் அளைத்திடுவதற்கு அருள் சுரக்கின்றாள். இலங்கையி லே சக்தி வழிபாட்டிற்கு மிகச் சிறந்த தலமாக இருப் பது நயினாதீவேயாகும். இந்து சமயத்தின் ஒரு பிரி வான சாக்த சமயத்தின் உச்ச நிலையில் சக்தியின் திருவதன அமைப்பு இங்கே வண்ணமுற அலமந்திருப் பதைக் கண்டு தெளியலாம். எனவே,

"வல்லமை தாராயோ பராசக்தி இந்த
வையகம் பயனுற வாழ்வதற்கே"

என்று பாடிப் பணிவோமாக.

இத்தகு சிறப்போடும், இயற்கை எழிலோடும் பற்பல அற்புதங்களைப் புரியும் நயினை அன்னை இந்து மதத்திற்கும், குறிப்பாக சைவ மதத்திற்கும் ஒரு பேரொளிப் பிழம்பாக மிளிர்கின்றாள்.

ஆறுமைல் சுற்றளவு, அலை கடலின் அரவணைப்பு ஊழிபெயரினும் உலகுக்கு அருள்பொழியும் உத்தம தேசோ மயம், கிழக்கு நோக்கிய கோபுரவாசல் - நேரே நீலக்கடற்பரப்பைப் பார்த்தவண்ணமிருக்கும் கோலமிகு வனப்பு - அதற்கு முன்னே அடியார் திருக் கூட்டம் வந்திறங்கும் அதியற்புத மனோரம்மியமான காட்சி - காலையிற் கிழ்வானத்திலே எழுந்து வரு கின்ற இளம்பரிதியின் தண்ணொளிக் கற்றைகள், நேரே கர்ப்பக்கிருகத்திலுள்ள மூலமூர்த்தியில் சங்க மிக்கிறது. இதனால் அன்னை

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வு டையோர் மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங் கும தோயமென்ன வீதிக்கின்ற" மேனியொடு திகழ் கின்றாள். அன்னை ஒரே சோதிமயமாகத் திகழ்கின் றாள். அதுவும் செவ்வண்ணச்சோதி. உலகிற்கெல் லாம் இருள்கடிந்து எழுந்து வருகின்ற இளஞாயிறு அன்னையின் திருவடித் தாமரைகளிலிருந்துதான் தனது இயக்க சக்தியைப் பெறுகின்றதோ என்று எண்ணும் பாங்கில் அவள் அருளாலே அவள்தாள் பணிந்து எழுகிறது. இத்தகு தெய்வ அமைப்பு சித்த மடியார் பாடிப்பரவசமடையக்கூடியது. பாரத நாட் டுப் பக்தர்களும், உலகெங்குமுள்ள தவநேயச் செல் வர்களும், உவந்து பணியும் ஒப்பரியதலமாக சைவ உலகிலே ஓங்கி உயர்ந்து நின்று உத்தமமான சைவ நெறிப்பக்தியைச் சக்தி மூலமாகப் பறைசாற்றுகின் றது.

அன்னையின் ஆலயத்தோடு கூடிய மண்வாசனை யின் மகிமையையும் சொல்லாவிட்டால் என்பணி நிறைவு பெறாது. நயினை மண் புறந்தந்த நற்றவத் தொண்டர்களும், சித்தர்களும், ஞானிகளும், செழுங்கருணை ஓடிப் பெருகும் அறிவாளர்க ளும், புலவர்களும், ஆன்று அவிந்து அடங்கிய கொள் கைச் சான்றோரும் பலர். புலமை நிறைந்த நயினை மண் பல புலவர்களைத் தந்திருக்கிறது. அவர்களுள்

வரகவி நயினை நாகமணிப்புலவர், பாரதி அடியான் ப. கு. சரவணபவன், வரகவி ஆ. இராமுப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தகுந்தோர். நாகமணிப்புலவர் இயற்றிய 'நயினை மான்மியம்', 'நி ரொட்டயாக அந்தாதி – என்பன உச்சிமேல் வைத்து மெச்சுதற்குரியன.

ஈழத்து இல்லற ஞானி என்று போற்றப்படும் சிவபதமடைந்த உயர்திரு. க. இராமச்சந்திரா அவர்கள் நயினை தந்த சிவனடியே சிந்திக்கும் திருப்பெருஞ் சிந்தனையாளனுவார். இவர் இலங்கைப் புகையிரதப் பகுதியிலே உயர் பதவி வகித்து – அரசசேவையோடு அன்பர் பணிக்கே தம்மை ஆளாக்கிக் கொண்டவர்.

தவசிரேஷ்டர் ரமண மகரிஷி, சுவாமி இராம தாஸ், மகாத்மாகாந்தி, சுத்தானந்த பாரதியார் மற்றும் உலகப் பெரியார்களின் அன்பிற்கு உரித்தானவர். ஆரம்பகாலத்தில் "ஆத்மஜோதி" ஆசிரியராக விருந்து, பின்னர் கௌரவ ஆசிரியராக இருந்து நாமேல் நடந்த நற்றவத் தொண்டர். "சமயசஞ்சிகை" (Religious Digest) என்ற ஆங்கில நூலின் ஆசிரியராயிருந்து – உலகையும் ஆத்ம சாதகனையும் இணைத்த பெரியார். இதன் மூலம் வெளிநாடுகள் பல வற்றிற்கும் சென்று 'மேன்மைகொள் சைவநீதி உலகெலாம்' விளங்க வைத்தவர்.

அடுத்து நயினை தந்த குருமணி சிவாகம ஞான பானு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களை அறியாதார் சைவ உலகில் இருக்கவே முடியாது. சலப்பூவொடு தூபம் மறவாது தமிழோடு வடமொழியும் இசைபாடி நலந்தீங்கினும் நயினை நாகம்மாள் அருளால் உலகில் உள்ள பல கோயில்களுக்குக் குட முழுக்காற்றி இறை அனுபவத்தோடு இறைவனடி சேர்ந்தவர். பிராமண குல சிரேஷ்டராய்-அவர்களின் கிரியா முறைகள் நெறியொடு நடபெற வேண்டுமென்ற ஆவலால் "ஆகமாமிர்தவர்ஷணி" என்ற அரிய பெரிய நூலை எழுதி வெளியிட்டவர்.

ஈழத்தில் சித்தர் பரம்பரையில் வந்த நயினை முத்துக்குமாரசாமி அவர்கள் முதுபெரும் ஞானி ஆவார். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள சிவலிங்கப் புளியடியில் தமது இருக்கையை அமைத்திருந்தார். இவருடைய சீடர்கள் இலங்கையின் பல பாகங்களிலு முள்ளனர். இவருடைய தூரதிருஷ்டியும் ஞான திட்சையும் நயினை மேற்குக்கரையோரத்தில் ஓர் நன்னீர் தீர்த்த ஊற்றைக் கண்டு பிடித்து உருவாக்க உதவியது. அன்னை நாகபூஷணி அம்மன் தீர்த்தமாடுவதற்காக அத்தீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவது குறிப்பிடத்தக்கது. இவர் 1949ம் ஆண்டு சமாதியடைந்தார் இவருடைய சமாதி நயினைதீவு 5ம் வட்டாரத்தில் அருளொளி நிலையமாக மிளிர்கிறது. அதன் எதிர்காலம் சிறந்து ஓங்குவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது போல நயினை தீவிலே ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு கோயில் உண்டு. அவற்றை விபரமாக எழுதமுற்பட்டால் எனது பணி விரிவடையும் என அஞ்சிச் சுருக்கிக் கொள்கின்றேன். அன்னம் பாலிக்கும் நாகம்மை 'அமுதசுரபி' மூலம் இன்னும் பாலித்து அடியார்களுக்கு நிவேதனம் பண்ணும் சிறப்பு ஈழத்தில் எங்குமில்லாத தனிச் சிறப்பாகும். "வயிற்றிற்குச் சோறிடும்' சைவத் தொண்டில் முன்னிற்கும் நல்லடியாரை நாளும் நாள் போற்றவேண்டும்.

எதிர்காலத்தில் நயினையிலுள்ள சக்திபீடம் இந்து மதத்திற்கும், குறிப்பாகச் சைவ உலகிற்கும், உள்ளொளி பரப்பி – உதவக்கூடிய ஒப்பரிய தலமாகத் திகழத்தக்க அறிகுறிகள் தென்படுகின்றன. இதற்கான ஆக்கப்பணிகளை சைவநன்மக்கள் ஒருமுகமாக மேற்கொள்ளுதல் வேண்டும். "எது எமைப்பணி கொளுமாறதும் கேட்போம்" என்று அன்னை பராசத்தியிடம் கேட்டுச் செயற்படவேண்டும். "சக்தி சக்தி சக்தி என்று சொல்லிக்கெட்ட சஞ்சலங்கள் யாவற்றையும் வென்று" அன்னை பணியில் சுத்த சித்த சுத்தியோடு – பணி செய்துகிடக்கவேண்டும். அற நிலையங்கள் அன்னையின் ஆலய வீதிகளில் – அன்பர் பணிக்கான அறச்சாலைகளைத் தவச்சாலைகளாக அமைக்க முன்வரவேண்டும். ஆதீனங்கள் அருளாசியுடன் சமயப்பணியகங்களை நிறுவித்தரவேண்டும். இவற்றின் மூலம் இந்து சமய கலாச்சாரமும், எம் பாரம்பரியங்களும் நிச்சயமாகப் பேணப்படும் என்பதில் என்ன சந்தேகம்.

"துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்"

ஓ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்

அன்பளிப்பு

தந்தி: மில்க்வைற் தொலைபேசி: 7233

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

உரிமையாளர்: க. கனகராசா ஜே. பி.

இடம்:

79, மெசென்ஜர் வீதி,
கொழும்பு-12.
தொலைபேசி: 36063

525/2, காங்கேசன்துறை வீதி
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

With best Compliments from

V. T. V. Deivanayagam Pillai & Co.

IMPORTERS & EXPORTERS

DISTRIBUTORS FOR PRODUCTS OF
B. C. C. LTD., O. C. C. LTD. & B. C. M. LTD.

37, 5th Cross Street,
COLOMBO-11.

Telephone No: 23195
31741

Telegrams: "DEIVOO"

With Best Compliments

of



Seven Seas (Export) Ceylon

P. O. BOX No. 1751
COLOMBO.
SRI LANKA.

Tel: 29307
25655
22576

Cable: SESEX

TELEX: 21254

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!



செல்வசிங் ஸ்டோர்ஸ்



10, 12, நியூ பஜார் வீதி
நுவரெலியா.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற சைவம் தழைத்தோங்க
எமது வாழ்த்துக்கள்!

சைவ இளைஞர் மன்றம்

ஸ்ரீ கதிர்வேலாயுத தேவஸ்தானம்,
அப்புத்தளை - இலங்கை.

சைவமும் தமிழும் தழைத்தோங்க எமது வாழ்த்துக்கள்!

வீனஸ் பிரிண்டிங் வேர்க்ஸ்

5/5, புகையிரத நிலைய வீதி,
அப்புத்தளை - இலங்கை.

*

VEENUS PRINTING WORKS

Estate Commercial Printers, Book Binders,
Picture Framers and Stationers.

No. 5/5, STATION ROAD - HAPUTALE.

அகில உலக இந்து மகாநாட்டை முன்னிட்டு
ஆத்மஜோதி வெளியிடும் சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

கோமதி விலாஸ்

- சூடான பலகாரங்கள்
- சுத்தமான பசும்பால்
- மற்றும் நெய்யில் தயாரித்த இனிப்புப் பலகாரங்களும்
- பலவகையான சிற்றுண்டி வகைகளும்
- குளிர்பானங்களும்

எவ்வேளையிலும் உகந்த முறையில் கிடைக்கும்.

எல்லாவிதமான சாப்புச் சாமான்களும்
சில்லறை விலைக்கு சகாயமாகக் கிடைக்கும்.

142, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி: 34144

★

KOMATHI VILAS

142, SEA STREET, COLOMBO - 11.

Phone: 34144

இந்து மாநாடு சிறப்புற நடைபெற எமது
வாழ்த்துக்கள்!



S. S. Nellaiyappah Pillai & Coy.

MILLERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

IMPORTERS AND EXPORTERS

●

P. O. BOX 141
141, Maliban Street
COLOMBO–11.

T'grams: VALAMPURI

T'phone: 29561

அவனே தானே யாகிய வந்நெறி
யேக ஞகி விறைபணி நிற்க
மலமாயை தன்னெடு வல்வினை யின்றே

– சிவஞானபோதம்.

The THALAYAN Printing Works

PRINTERS
BOOK BINDERS
PAPER MERCHANTS
RUBBER STAMP MAKERS
MACHINERY IMPORTERS
PRINTING INK
AND
TYPE STOCKISTS

115 Messenger Street,
1

COLOMBO-12.

BANKERS:

GRINDLAYS BANK LTD. (PETTAH BRANCH)
BANK OF CEYLON (PETTAH BRANCH)
PEOPLES BANK, SRI SANGARAJA MAWATHA.

Phone: 24531, 33774

Telegrams: THALAYAN Colombo

தனிச் சிறப்புவாய்ந்த தம்பலகமம் கோணேஸ்வரம்

— க. வேலாயுதம்-தம்பலகமம் —

தம்பலகமம் கோணேஸ்வரம் தனிச் சிறப்பு வாய்ந்தது. அதன் தெய்வீக முக்கியத் துவம் மிகவும் மேலானது. மற்றெந்த ஆல யங்களுக்குமில்லாத தெய்வீகச் சிறப்பு இந்த ஆலயத்துக்குண்டு. குறிப்பாக புதிதாக ஆல யங்களை அமைப்பவர்கள், ஆலய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதோ அல்லது கட்டி முடிக்கப்பட்ட பின்போ அந்த ஆலயங்களில் பிரதிட்டை செய்வதற்காக மூர்த்திகளை வார்த்தெடுப்பார்கள். அல்லது தேடிப்பெறுவார்கள். ஆனால் தம்பலகமம் கோணேஸ்வரம் இந்த முறையில் கட்டப் பட்ட ஆலயமல்ல.

பறங்கியர்களால் கோணேஸ்வரத்துக்கு அழிவு வரும். கோணேஸ்வரரைத் தெற்கே யுள்ள தம்பலகமம் மேற்கு மலைத்தொடர் சிக ரங்களிலொன்றான கழனி மலையில் வைத்துப் பூசித்துப் பின் தம்பலகமத்தில் கோயில மைத்து பூசை, அபிஷேகம், விழாக்கள் நடை பெறச் செய்வதுடன் வேள்வி, மடை, பொங் கல் போன்ற சுற்று ஆராதனைகளையும் செய்ய வேண்டுமென வழி வழியாக மொழியப்பட்டு வந்த தீர்க்க தரிசனத்துக் கமைய பறங்கியர் களால் கோணேஸ்வரம் அழிக்கப்பட்ட போது சைவப்பெரியார்கள் துணிந்து கோண நாயகரின் திருஉருவை எடுத்துக்கொண்டு வந்து தம்பலகமம் மேற்கு மலைத்தொடரி லுள்ள அருள்மிகுந்த கழனி மலையில் வைத் துப் பூசிக்கப்பட்டு வரும் ஆதி கோணநாயக ருக்காக ஜெயதுங்க வரராஜன் என்னும் தூயோனால் அமைக்கப்பட்ட மகாதலமாகும். இந்த ஆலய அமைப்பைப் பற்றி கோணேசர் கல்வெட்டு, திருகோணேசலப் புராணம் போன்ற நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

கோணமலை நாதனே ஜெயதுங்க வரராஜன் கனவில் தோன்றிக் 'கழனிகள் சூழ்ந்த திருத் தம்பலகமத்தில் கோயிலொன்றை அமைத்து தேர்த்திருவிழா போன்ற வைபவங்களை நடத் துக' எனக்கூறி மறைந்ததாக கோணேஸ் வரத்தின் ஸ்தலபுராணம் கூறுகின்றது. இறை வனின் ஆக்ஞைக்கு அமைய கட்டப்பட்ட கோயிலெனில் தம்பலகமம் கோணேஸ்வரத் தின் தெய்வீகச் சிறப்பை யாரால் அளவிட்டுக் கூறமுடியும். ஆலய அமைப்புப் பற்றிக் கோ ணேசர் கல்வெட்டு பின்வருமாறு கூறுகின்றது.

''சேர்ந்த பின்னர் மறையோர்கள் கோணை நாதன்
திருப்பூசை வெகுகாலம் செய்யு மந்நாள்
மாந்தளிர் போல் மேனியுடைப் பறங்கி வந்து
மாகோணப் பதியழிக்க வரு மந்நாளில்
வேந்த தென்பால் கழனிமலை யொன்றுண்டங்கு
வீசனுக்கு ஆலயம் இயற்றிப் பின்னர்
கோந்தறை சேரொல்லாந்த பிடிக்கு மந்நாட்
குலசிங்க இரவிகுலம் குறைந்து போகும்''

(கோணேசர் கல்வெட்டு)

இந்தச் செய்யுள் பறங்கியர்களால் கோ ணேஸ்வரம் அழிக்கப்படும்போது கோணேஸ் வரரை எங்கே வைத்துப் பூசிக்க வேண்டும் என்பதையும் பின் ஆலயம் அமைத்து வழி படவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல் கிறது. அடுத்த செய்யுள் கழனிமலையில் வைத் துப் பூசிக்கப்பட்டு வந்த கோணநாயகரின் திருவுருக்காகத்தம்பலகமத்தில் கோயிலமைந்த கதையையும் இந்த ஆலயத் தைப் பக்தி சிரத்தையுடன் சொன்ன விதி தவறுமல் பூசிக்கப்பட்டு வந்தால் திருமலை இராஜ்ய மக்களுக்கு சோர்வு, நோய், துன் பம், பசி, பட்டினி போன்ற எந்தக் குறைபாடு களுமே அணுகாது. மக்கள் கோணேஸ்வரப் பெருமானின் திருவடி மறவாதவர்களாக பேரின்பம் துய்த்துப் பெரு வாழ்வு வாழ்வார் கள் என்றும் கல்வெட்டு உறுதி கூறுகிறது.

''வணங்குமரன் பூசை முன்போல் நடக்கும் காலம்
மகா விலங்கைப் பதியாளும் வால சிங்கன்
மிணங்கு மண் ரெத்தினத்தால் பொன்னுல் முத்தால்
வீசனுக்கு ஆலயமங் கமைக்கும் காலம்
சுணங்கலில்லை மானிடர்க்குத் துக்கமில்லை
சோம்பலின்றி நிதம் போக சுகமே துய்த்து
மணங்கமழும் திரி கைலைப் பெருமான் பாதம்
மனத்திருத்திப் பக்தியோடு வாழ்வார் மக்கள்''

(கோணேசர் கல்வெட்டு)

கழனி மலையின் தெய்வீகச் சிறப்பு

முன்பாடலில் கோணேஸ்வரத்துக்கு அழிவு வரும் போது கோணேஸ்வரரின் திரு உருவைக் கழனி மலையில் வைத்துப் பூசித்துக்

கோயில் கட்டி வழிபடவேண்டும் என்று கூறப் படுகிறது. இப்மக்கள் தலப்பெருமையை விட மூர்த்திப் பெருமைக்கே முக்கியத்துவம் அளிக் கின்றனர். காரணம் குளக்கோட்டன் கொண் டுவந்து ஸ்தாபித்த கடவுளின் உருவம் என் பதேயாகும். தம்பலகமம் மேற்கு மலைத் தொடரில் உவமியனூற்றுக்கருகே சுவாமியை வைத்துப் பூசித்த சிகரத்துக்கு சுவாமி மலை கழனிமலை என்ற பெயர்கள் வழக்கிலுள்ளன. திருமலை இராஜ்ஜியத்தின் மன்னரான தனி யுண்ணுப் பூபால வன்னிபம் சபை கூடி இருக் கும் போது கழனி மலை பற்றி கனக சுந்தரப் பெருமாள் என்னும் ராஜ்ய ஆலய பிரதம கணக்காளரிடம்விசாரிக்கிறார். கோணேஸ்வர ஆலய தொழும்பாளர்கள், என்ன என்ன செய்ய வேண்டும் என்ற விபரங்களும் வேறு முக்கிய பல விஷயங்கள் அடங்கிய பெரிய வள மைப் பத்தி என்னும் புத்தகம் அவரிடம் இருந்தது.

கனக சுந்தரப் பெருமாள் பெரிய பிரமு கர். ஆலய விஷயங்களில் மட்டுமின்றி ராஜ்ய விவகாரங்களிலும் அரசருக்கு ஆலோசனை சொல்லும் அமைச்சர் போன்றவர். ஆகவே அரசர் கனகசுந்தரப் பெருமானை நோக்கி ''இலங்கையில் பெரிய பெரிய பர்வதங்கள் இருக்கின்றன. அந்த மலைகளில் குடைந்த நில வறைகளும் இருப்பதாகத் தெரிகிறது. அப் படி எல்லாம் இருக்கும் போது பறங்கிக்கலகம் வரும்போது கோணேஸ்வரரின் திருவுருவை கழனிமலையில் கொண்டு போய் வைத்து வழி படச்சொல்லி இருப்பதின் காரணமென்ன''? என்று அரசர் கேட்டார்.

அதற்கு கனகசுந்தரப்பெருமாள் ''அரசே ஆதிகைலாயமாகிய வெள்ளியங்கிரிக்குச் சரி தெற்கே முக்காத தூரத்தில் கழனிமலை என் னும் அருள்ச் சிறப்புமிக்க பதி இருக்கிறது. இது கைலை நாதனுக்கு மிக உகப்பான புனித மலை. க்ஷேத்திரச் சிறப்பில் கைலாயத்தைவிட ஒருபடி உயர்ந்தது என்று கூடச் சொல்ல லாம், கைலாசபதிக்குத் திருமண வைபவம் நடைபெற இருந்த போது பனிக்கடல் உண்டு அமரர் கோனுக்குச் சகாயம்புரிந்த குறுமுனி அகத்தியர் ஐயனின் கலியாணச் சிறப்பைக் கண்டு மகிழ்வதற்காக கழனிமலையில் வந்தார். உடனே வடபால் தாழ்ந்தது. அது கண்டு திருமணத்துக்காக வந்திருந்த அமரர் களும் இருஷிகளும் கணங்களும் அஞ்சினர். இதுகண்ட கண்ணுதல் அகத்தியரை அன்பு கனிய நோக்கி ''அன்பனே வடபால் தாழ்ந் துள்ளதால் இதைச் சமன் செய்ய உன்னால் தான் முடியும். நீ தென் திசை செல். அங்கே தென்கைலையாகிய கோணேஸ்வரத்தில் நம் திருமணக் கோலத்தைக் காண்பாய்'' என்று அருளினார். அதன் பிரகாரம் அகத்தியரும் லோபா முத்திரையும் ஈழம் வந்து தம்பலக மம் மேற்கு மலைத் தொடரிலுள்ள கழனிமலை யைத் தரிசித்து சிலகாலம் தவம் இயற்றிய பின் கோணேஸ்வரத்தில் இறைவியையும் இறைவனையும் கல்யாணக் கோலத்தில் கண்டு துதித்து ஆனந்த புழகாங்கித மடைந்து பின் மனைவியுடன் மகாவலி கங்கைக்குப் போய் கரைசையம்பதியில் லிங்கமமைத்து பூசித் தார் என்ற விபரங்களை புராண வாயிலாக அறிய முடிகிறது.

வடகைலைக்குத் தெற்கே முக்காத தூரத் தில் புனிதம் நிறைந்த கழனிமலை இருப்பது போல், தென் கைலையாகிய திருக்கோண மலைக்கு சரிநேர் தெற்கே முக்காத தூரத்தில் மகத்துவமிக்க கழனிமலை இருக்கிறது. ஆக வேதான் கலக காலத்தில் கோணேஸ்வரரின் திருஉருவை புனிதமிக்க கழனி மலையில் வைத்துப் பூசித்துப் பின் தம்பலகமத்தில் கோயில் கட்டி வழிபட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றார். சுவாமியை வைத்து வழிபட்ட தம்பலகமம் மேற்குமலைத் தொடரிலுள்ள இந்த மலை சுவாமி மலை. கழனிமலை என்றே அழைக்கப்படுகிறது இந்த மலை. வனத்தில் செல்பவர்கள் இந்த மலையை தூரத்தில் கண்டதும் பக்திசிரத்தையுடன் வணங்கிச் செல்லும் வழக்கமுள்ளது.

கோணேஸ்வரத்தின் ஸ்தலபுராணம் பறங்கியரால் கோணேஸ்வரம் அழிந்தபின் தம்பலகமத்தில் கோணேஸ்வரம் தோன்றிய வரலாற்றை பின் வருமாறு கூறுகின்றது,

''மானிலம் புகழும் வீரவரராஜ சிங்கனென்னும்
மேன்மைகொள் வேந்தன் றன்பால் விழி துயில்
கனவில் மேவி
வானவர் முனிவர்காணு மலரடி யுடை யோனுன்
கோணயம் பெருமான் சில இனியன கூறலானுன்''

(திருக்கோணேசலப் புராணம்-தம்பைநகர்ப்படலம்)

கி மு. 544ல் இலங்கைக்கு வந்த விஜய ராஜனின் வம்சத்தில் வந்த உக்கிரசேனசிங்க னுக்கும் திசையுக்கிர சோழன் புத்திரி மாரு தப்புரவீகவல்லிக்கும் மகனை வாலசிங்கன் மதுர நாட்டரசன் மகளான சமதூதியைப் பட்ட மகரிஷியாகக் கொண்டு கண்டியை அடுத்துள்ள மெங்கடகல நாட்டின் மன்னனை முடிசூடிக் கொண்டபின் ஜெயதுங்க வரரா ஜன் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றான்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் சைவ சமயப் பணி

— அருட்கவிஞர் திமிலைக்கண்ணன் —

மட்டக்களப்புப் பிரதேசத்தின் சைவ சமயப் பணியை ஆராயப்புகுமிடத்து அதன் தொன்மையைச் சிறப்பை வளர்ச்சியை விளக்குதல் வேண்டும். குறிப்பாக இதனிடத்து பிரசித்திவாய்ந்த சைவ ஆலயங்களை, ஐதிகங்களை, அற்புதங்களை, ஆச்சிரமங்களை, புலவர்களை மகான்களைப் பற்றிய குறிப்புக்களைத் தருவது அவசியமானது. இவற்றை விரிவான ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளக்கப்புகுமிடத்து பல நூறு பக்கங்களை நிரப்பக்கூடிய பெரிய நூலாக அது அமைந்துவிடும். குறைந்த பக்கங்களுள் அமைக்கப்புகும் இச்சிறிய கட்டுரையுள் சுருக்கமும் விளக்கமும் சுவையும் குன்றுவாறு ஆராய்ச்சியுண்மைகளை விளக்க முனைகிறேன்.

முதற்கண் மட்டக்களப்புத் தமிழகத்தின் அமைப்பை நோக்கும் போது சுமார் 2704.2 சதுர மைல்களைக் கொண்ட பரப்பளவினதாகத் தென்படுகிறது. இம்மானிலம் நால்வகை நிலங்களையும் தன்னகத்துக்கொண்ட சிறப்புடையது. இதன் எல்லையை நோக்குங்கால் சிவனொளிபாதமலையிடத்துதோன்றிக் கீழ்க்கடலையடையும் மகாவலி கங்கை வடக்கே திருகோணமலை என்றும் தென்பால் மட்டக்களப்புத் தமிழகமென்றும் எல்லைபிரித்துக் கடலுடன் சங்கமிக்கிறது. இம்மானிலம் வடபால் வெருகல் ஆறுமுதல் தென்பால் குமுக்கன் ஆறு வரை 135 மைல் நீளமுடையது. கிழக்கே கடலையும் மேற்கே மகா ஓயாவையும் கொண்டு எழுபது மைல் அகலமுடையதாய் அமைந்துள்ளது.

இதன் தோற்றத்தையும் குடியிருப்பையும் கால அளவிட்டுக் கூறமுடியாதவாறு பழமை வாய்ந்ததாயுளது. இம்மானிலத்து கலியுகத்திற்கு மேற்பட்ட காலவரலாற்றுப் பெருமை வாய்ந்த சைவ ஆலயங்கள் பல உள. மகாபாரத வரலாறு துவாபரயுக இறுதிக் காலத்து தொடங்கி கலியுக ஆரம்பத்தில் முற்றுப்பெறுகிறது. இன்று நமது சமயப் பஞ்சாங்கக் கணிப்பின்படி கலிவருடம் 5083 எனகுறிப்பிடப்படுகிறது. மகாபாரத வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேதான் இராம இராவணர் ஆட்சிக்காலம் இடம் பெற்றதாகத் தெரிகிறது. இக்காலத்தைத் திட்டவட்டமாக அறியமுடியவில்லை.

மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள்கூட பலவேறு ஆண்டுகளையே குறிப்பிடுகிறார்கள். 'பர்கிறேர்' வம்சாவளித் தொடர்பு அடிப்படையில் இராமர்-இராவணர் காலம் கி.மு. 1600 எனக் குறிப்பிடுகிறார். எது எப்படி இருப்பினும் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஈழத்தை ஆண்ட இராவணன் ஓர் சைவத் தமிழன் என்பதையும், சிவனிடம் பெற்ற வரப்பிரசாதத்தால்; அருளாற்றலால் பல வகை ஆற்றல் அற்புதமுடையவனாக புட்பக விமானத்தில் பிரயாணம் செய்த புகழுடையவனாக விளங்கியதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த இராவணன் இம்மானிலத்தில் கோட்டை அமைத்து இலங்கை முழுவதையும் ஆண்டதாகப் பல்லாயிரம் ஆண்டுகளாக நம்பப்பட்டு வருகிறது. இவனது கோட்டை திருக்கோயிலுக்குத் தென்கிழக்கிலுள்ள கடலுள் மறைந்து சிதைந்து கிடப்பதாகத் தெரியவருகிறது. இது எந்த அளவு உண்மை என்பதை ஆராய்ச்சியாளர் முடிவு கட்ட வேண்டும். அவனது தம்பி விபீடணன் காலத்தும் இங்கு பல சைவ ஆலயங்கள் கட்டப்பட்டதாக 'தக்ஷிண கைலாய தெய்வீகம்' என்ற நூல் குறிப்பிடுகிறது. இவனது முக்கிய வழிபாட்டுத்தலங்களாக திருக்கோணேஸ்வரம், திருக்கோயில் என்னும் தலங்கள் இருந்ததாகவும், இக்காலம் சைவத்தின் பொற்காலமாகத் தமிழும் சைவமும் இலங்கை முழுவதும் தலைநிமிர்ந்து செழிப்புற்றிருந்ததாகவும் தெரியவருகிறது.

இராவணனது காலத்திற்குப் பின் யுகப் பிரளய இயற்கை அழிவுகளால், கடல்கோளினால் தமிழும் சைவமும் தாக்கமுற்றது. கி.மு. 545ல் விஜயனும், தோழர்களும் இலங்கை வந்தடைந்தனர். அவனது காலத்தின் பின் உருவானதே சிங்கள இனமும் மொழியும் என்று நம்பமுடிகிறது. 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் தமிழ் மொழியில் நின்று தோன்றிப் பிரிந்து வேறு பட்டதைப் போல தமிழுடன் சமஸ்கிருதம், பாளி, வேடர் குறவர் மொழிகளும் கலந்து கலப்பு மொழியாக சிங்களம் காணப்படுவதாலும் பழமை வாய்ந்த இலக்கியக்கருவூலங்கள் அற்ற மொழியாக இது இருத்தலாலும் இதை நாம் துணிந்து கூறமுடியும். இவ்வினம்

கூடச் சைவசமய விக்க வழிபாட்டைக் கைக் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. அதன்பின் புத்தசமயம் தேவநம்பியதீசன் காலத்தில் கி.மு. மூன்றும் நூற்றாண்டுக்கு (கி. மு. 207–247) உத்தியோகபூர்வமாகப் பரப்பப்பட்டது. இதன் பிற்பட்ட காலத்தே ஏற்பட்ட சமய, இன, மொழி ஆட்சிப்படையெடுப்புத் தாக்கங்களின் காரணங்கள் இலங்கை முழுவதையும் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் வடக்கையும் கிழக்கையும் தமதாக்கிக் கொண்டார்கள். சைவமும் தமிழும் தனித்துவம் பெற்றுச் செழித்தது. போர்த்துக்கேயர் டச்சுக்காரர் படையெடுப்புக்களால் சைவத் தமிழ் நூற்களுஞ்சியம் முதல் சைவ ஆலயங்களெல்லாம் தரைமட்டமாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டன. அதன்பின் பிரித்தானியர் ஆதிக்கத்தில் ஏற்பட்ட கிறிஸ்துமதத் தாக்கங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து தமிழும், சைவமும், சைவ ஆலயங்களும் இன்றுவரை தலைநிமிர்ந்து நிற்பதைக் காணமுடிகிறது.

இங்கு பழம் பெருமை மிக்க சைவ ஆலயங்கள் ஊரின் எண்ணிக்கையைவிட பல நூற்றுக் கணக்காகக் காணப்படுவது ஒன்றே சைவத்தின் வளர்ச்சியையும் அதன் பணியையும் உலகுக்கு எடுத்துக்காட்டப் போதுமானதாயுள்ளது. அவற்றைத் தரம்பிரித்து நோக்கும்போது, விநாயகர் கோயில் 200க்கு மேலும், முருகன் கோயில் 300க்கு மேலும், மாரியம்மன் கோயில் 30க்கு மேலும், கண்ணகை அம்மன் கோயில் 30க்கு மேலும், விஷ்ணு கோயில் 8க்கு மேலும், துர்க்கை – பேச்சி – துரோபதி - மீனாட்சி–கடலாச்சி, காளி, வயிரவர்–வீரபத்திரர் – பரமநயினார், நாகதம்பிரான் கோயில்கள் 15க்கு மேலும் சிவன் கோயில்கள் 6க்கு மேலும் அமைந்துள்ளதைக் காணலாம். இவற்றுள் உகந்தை முருகன் சங்கமாங்கண்டிப் பிள்ளையார் திருக்கோயில்ச் சித்திரவேலாயுதர், பட்டிமேடு கண்ணகை பனங்காடு சிவன், காரைதீவுக் கண்ணகை மடத்தடி மீனாட்சி, பாண்டிருப்பு திரௌபதி, பெரிய போரதீவு பத்திரகாளி, மண்டூர் முருகன், தாத்தாமலை முருகன், கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரன், பண்டாரியாவளை நாகதம்பிரான், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர், சித்தாண்டி வேலாயுதசுவாமி, கொத்துக்குளத்து மாரியம்மன், ஆனைப்பந்திப் பிள்ளையார், திமிலைதீவு விஷ்ணு கோயில்கள் தலை சிறந்த வரலாற்றுப்புகழ் உடையனவாகத் திகழ்கின்றன இவ்வாலயங்களின் வரலாற்று உண்மைகளை ஐதிகங்களாலும், கல்வெட்டுக்களாலும், செப்பேடு, பனை ஓலைச் சுவடிகள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

அடர்ந்த காடாகக் கிடந்ததாகவும் ஆதிக் குடிகளான வேடர் தேன் எடுக்க நாவல் மரத்தை தறிக்கும் போது கோடரி லிங்கத்தில் தவறி விழுந்ததாகவும், அவன் உறங்கிய சமயம் கனவில் இறைவன் தோன்றி ''உனது கோடரி பட்ட இடம் வலிக்கிறது சுடுநீர் வார்த்துக் குளிப்பாட்டு''எனக் கூறியதாகவும்; வேடன் பயபக்தியுடன் அவ்வாறு செய்து, பந்தலமைத்து வழிபட்டு வந்ததாகவும்; அதற்குப் பிற்பட்ட காலத்து சைவர்களால் கோயில் எடுக்கப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வருவதாகவும் அறிய முடிகிறது. இங்கு வருடாந்த உற்சவம் ஆடி அமாவாசைத் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறுகிறது. சிவன், சக்தி, பிள்ளையார் மூவர்க்கும் கிரியா முறைப்படி வழிபாடு நடைபெற்று வருகிறது. இப்போதுள்ள கொடித்தம்பமும் கோயிலும் 1888ல் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இங்குறையும் பெருமானருளால் கொடிய நோயாளர் பலர் வியத்தகு முறையில் குணமடைந்துள்ளனரென்று அறிகிறோம். உதாரணமாக, ஒரு பொறுக்க முடியாத நோயாளி பக்கத்தில் நின்ற தென்னையில் ஏறி சுவாமி வீதிவலம் வரும்போது குதித்து விழுந்து மயக்க நிலையில் மூலஸ்தானத்தில் கிடத்தப்பட்டபின், விழுந்த சுவடு, நோ தெரியாது விழித்தெழுந்து, நோயும் அகன்று, சுகதேகியாகியதாயும் அறிய முடிகிறது. முன்னொரு கால் இம்மாநிலத்தையாண்ட அரசி ஆடகசவுந்தரி என்பாள் இங்குள்ள தீர்த்தக் குளத்தில் நீராடி அவளிடத்துக் குடிகொண்டிருந்த ஆண் தன்மையும் மறுவும் மாறிப் பெண்ணியல்பை அடைந்ததாயும் கூறப்படுகிறது.

இரண்டாவதாக திருக்கோயில் முருகன் ஆலயத்தை நோக்கும்போது; அது பற்றிய பண்டைய வரலாற்றுச் சிறப்புக்கள் பளிச்சிடுகிறது. இத்தலம் மட்டுநகரின் தென்கோடியில் உளது. இத்தலமும் இராவணனது வழிபாட்டிற்குரியதாக இருந்ததெனத் தெரிகிறது. இத்தல வரலாற்றை மட்டக்களப்பு மான்மியத்தாலும் மூன்று கல்வெட்டுக்களாலும் பாடல் மூலமும் ஐதிகங்களாலும் அறியமுடிகிறது. இத்தலம் பல சிறப்புப் பெயர் தாங்கிய பெருமையுடையது.

முன்னேஸ்வர வரலாறு

— பா. சிவராம இருஷ்ண சர்மா B. Sc. Dip. in Ed. —

எங்கும் வியாபகமடைந்துள்ள பரம் பொருளே ஆன்ம கோடிகள் உணர்ந்துய்யும் வண்ணம் விசேட சான்னித்தியம் பெற்று மிளிரும் இஷ்டசித்திப்பிரசாத அனுக்கிரக ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னேநாதப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முன்னேஸ்வரம் என்னும் தலம், தென்னிலங்கையில் சிலாப நகரின் கீழ்த்திசையில் ஒரு மைல் தூரத்தில் அமையப் பெற்றுள்ளது.

பழம் பெருமைகள் மண்டிக்கிடக்கும் இப் புனித க்ஷேத்திரம் முதன் முதலாக இங்கு எப்போது தோன்றியது என்ற வினவுக்கு எளிதில் விடையளிப்பது மிகச்சிரமம். முன்பு, இங்கு மிகப் பிரம்மாண்டமான கோயில் இருந்ததென்பதற்கும், ஈழநாட்டு மன்னர்களும், பிறநாட்டு மன்னர்களும், இங்கு வந்து வழிபட்டன ரென்பதற்கும் போதிய சான்றுகள் உள்ளன. பின்னர் அந்நிய நாட்டுப் படையெடுப்பால் இவ்வாலயம் சின்னபின்னப் படுத்தப்பட்ட தென்பதற்கும் தகுந்த ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஸ்ரீ சிவபுராணத்து சனத்குமார சம்ஹிதையில் அழகேஸ்வரம் என்ற பெயரில் இச் சிவத்தலம் குறிப்பிடப்படுவதோடு, அறுபத்து நான்கு ஸ்ரீதேவி பீடங்களுள் இதுவும் ஒன்றாக குறிப்பிடப்படுவது நோக்கற்பாலது. முன்னிச்சுரம் என்னும் இப்பதிமற்றைய ஈசுவரியங்களை விடப் பழமையானது என்ற கூற்றையும் மறுக்க முடியாது.

ஈழநாட்டின் பிரதானமான இறைவனின் உறைவிடங்களைப் பற்றிக் கூறும் 'கோகில சர்தேசய' (குயில் விடுதூது) என்னும் சிங்கள மொழி இலக்கிய நூல். ஈழநாட்டின் தென் பகுதியிலமைந்த மாத்தறையிலிருந்து மேற்குக் கரையோரமாக யாழ்ப்பாணம் ஈறாகவுள்ள தேவஸ்தானங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, முன்னேஸ்வரத்தில் அமைந்த கோயிலைப் பற்றிச் சிறப்பாகச் சித்தரித்துக்காட்டுகின்றது.

இராமாயணம் என்ற இதிகாசத்தின் நாயகனை ஸ்ரீ ராமபிரான், இராவண சம்ஹாரத்தின் பின் இவ்வாலயத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்ததாகவும், பாரதம் எழுதிய வியாசர் இங்கு வந்து வழிபட்டதாகவும் தக்ஷிண கைலாசபுராணம் கூறுகின்றது.

குளக்கோட்டன் என்ற சோழ மன்னன் பழம் பெருமைகள் குன்றி நலிவுற்றிருந்த இவ்வாலயத்தை சீர்திருத்திப் புதுப்பிக்க தனியுண்ணுப்பூபாலன் என்ற அதிகாரியை நியமித்தான். குளக்கோட்டு மன்னனுடைய கட்டளையினால் இவ்வாலயத்தைச் சேர்ந்த பூமி அறுபத்து நான்கு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இடு குறிக் காரணப் பெயர்கள் அவ்விடத்தில் வாழும் தொழிலாளர்களின் தொழில்களுக்கேற்ப இடப்பட்டன. இம்மன்னனுடைய முயற்சியினால் இவ்வாலயம் பழைய பொலிவைப் பெற்றது.

இலங்கையை ஆண்ட ஸ்ரீ பராக்கிரமபாகு என்றழைக்கப்படும் ஆறுவது பராக்கிரமபாகு மன்னன் (கி. பி. 1410-1462) இம்முன்னேஸ்வரர் ஆலயத்துக்கு கி. பி. 1448ம் ஆண்டு ஒரு யாத்திரையை மேற்கொண்டான். இந்த ஆலயத்தின் இடிந்து பழுதடைந்த பகுதிகளைச் சீர்திருத்தி பல கிராமங்களை மானியமாக அளித்து இக்கட்டளையைக் கல்வெட்டுச் சாசனமாக அறிவித்தான். இன்றும் இக்கல்வெட்டுச் சாசனம் கர்ப்பக்கிருக வெளிச் சுவரில் இருப்பதைக் காணலாம். இக்கல்வெட்டுச் சாசனத்தை பௌலர் (Fowler) என்னும் அறிஞர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அதன் தமிழாக்கம் பின்வருமாறு:-

"நான் முன்னீசுரம் கல்வெட்டிலுள்ள வற்றைப் பலமுறைகள் ஆராய்ந்துள்ளேன். அக்கல்வெட்டில் உள்ள எழுத்துக்களில் பல வாசித்தறிய முடியாத நிலையில் உள்ளன. இக் கல்வெட்டு எழுத்துக்களைக் கொண்ட கருங்கற்கள் பழையதொரு கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு, பின் இப்பொழுதுள்ள கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளன என்பது என் அபிப்பிராயம். கல்வரிசைகள் சேர்ந்து இணையும் இணைப்புக்களில் உள்ள எழுத்துக்கள் சுண்ணாம்புக் கலவையால் மறைக்கப்பட்டுள்

ளன. இப்பொழுது உள்ள கட்டிடத்தின் கல்லில் இவ்வெழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தால் இவ்வாறு இருக்கமாட்டாது.

இக்கல்வரிசை நான்கு வரிகளைக் கொண்டதாகவும், முப்பது அல்லது நாற்பது அடிகள் வரை நீண்டும் நில மட்டத்திலிருந்து ஏறக்குறைய நான்கு அடிகள் உயரத்திலும் அமைந்துள்ளது.

கோயிலின் அருகாமையில் இருந்ததொரு குளத்தைத் தோண்டிய பொழுது, இரண்டு சிற்பத்துண்டுகள் கிடைத்தன. நந்தியொன்றின் தலையும், சுப்பிரமணியக் கடவுளின் சிலையுமே அவை. இவை மிகப் பழமை வாய்ந்தனவாகக் காணப்படவில்லை. சில சாசன மொழிபெயர்ப்பு எங்கும் ஆனந்தம் விளங்கட்டும்! ஸ்ரீ சங்கோதி மகாராஜாவின் வழித்தோன்றலிலே உதித்தவரும், புத்த பகவானின் பாதாரவிந்தங்களில் மலர்களைச் சமர்ப்பணம் செய்து வழிபடுபவரும், சூரிய குலத்துதித்தவரும், அரசர்களெல்லாம் அரசராக விளங்குபவரும், அரசபரம்பரைக்கும், வியாபாரவிருத்திக்கும் அதிபதியாக இருக்கின்றவரும், மூன்று உலகங்களுக்கும் சக்கரவர்த்தியாகத் திகழ்கின்றவருமான மாட்சிமை பொருந்திய ஸ்ரீ பராக்கிரமபாகு மன்னர் தம்முடைய ஆட்சியின் முப்பத்தெட்டாவது ஆண்டு, ஐப்பசி மாதம், வளர்பிறையின் பத்தாம் நாள், எல்லாக்கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து முன்னீஸ்வரத்திலுள்ள கோயிலில் பூஜைசெய்கின்ற குருமார்களை (நம்பிமார்களை) ஜெயவர்த்தன கோட்டைக்கு அழைப்பித்துக் கோயிலின் விருத்தாந்தங்களை விசாரித்தறிந்து, முன்பு கோயில் குருமாருக்கு முன்னீஸ்வரம் பகுதியில் சொந்தமாகவும் கோயிலின் பெயரிலும் இருந்த நிலங்களையெல்லாம் முன்பிருந்தவாறே மீண்டும் கையளிக்கின்றேன். இலுப்பதெனிய என்னும் இடத்தில் 22 அமண நெல்விளையும் வயல்களைப் பூஜைக்கு உரியதாகவும், கோட்டைப்பிட்டியா என்னும் இடத்தில் 30 அமண நெல் விளைநிலங்களையும், தித்தக்கட என்னும் இடத்தில் 8 அமண நெல் விளை நிலங்களையும், இத்துடன் சேர்ந்த குடியிருப்புப் பகுதிகளையும், அதனோடு சேர்ந்த காட்டுப்பாங்கான பகுதிகளையும் பிரதான குருக்களுக்குக் கையளிக்கிறேன்.

இத்துடன் முன்னழி அரிசி, காய்கறிவகைகீரை வகை, நறுமணம் கமழும் பொருட்கள் போன்றவற்றினை நித்தியப் பூஜைக்குப்பெறும் பொருட்டு, மாதமொன்றுக்கு முப்பது பணத்தை பூஜை செய்யும் குருமார்களுக்கும், பதினைந்து பணத்தை பூஜை செய்யும் பிரதான குருவுக்கும், சூரிய, சந்திரர் இருக்கும் வரை இவர்களுடைய பரம்பரையின் சந்ததியினரும் அனுபவிக்கும் வகையில் சர்வமானியமாக முன்னீஸ்வரருக்கு அளித்து, இதனை ஒருவரும் திருப்பி மீட்கக் கூடாதெனக் கட்டளையிடுகிறேன். இந்நிலங்களுக்குத் தீங்கு செய்பவர்கள் பஞ்சமகாபாதகங்கள் செய்த பாவிகளாகவும், இந்நிலத்தின் அபிவிருத்தியில் அக்கறையெடுப்பவர்கள் சுவர்க்கானந்தப் பேரின்பம் பெறுவார்களாக.

சுலோகம் : எல்லையில்லாத ஞானத்தையுடைய சைவ சமயத்தின் தலைவராகவும் கடவுள்களுக்கெல்லாம் கடவுளாகவும். விளங்குகின்ற, முன்னீஸ்வரருடைய அருளில் பராக்கிரமன் இக் கல்வெட்டினை எழுதியுள்ளான்.

கலிகால சர்வக்ஞ பண்டிதன் என்னும் பட்டத்தையுடைய ஒன்பதாம் பராக்கிரமபாகு (கி. பி. 1509 - 1528) என்ற மன்னன் இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து வழிபட்டு, பல கிராமங்களை இவ்வாலயத்துக்கு கி.பி. 1517ம் ஆண்டு சர்வமானியமாகத் தாமிர சாசனம் செய்தான். இந்நிலப்பரப்பு கிழக்கில் மல் எல என்னும் நீரோட்டத்தையும், தெற்கில் மாதம்பே என்னும் ஊரில் நிறுத்தப்பட்ட எல்லைக் கற்களையும், மேற்கில் திக்கில்மான்மான் தொட்ட என்ற நீர்த்துறையையும், வடக்கில் முன்னேஸ்வரத்துள் பாயும் நீரோட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது.

இச் செப்புப்பட்டயக் குறிப்பு வருமாறு: 'எங்களாடவராகிய வனசை நிரபுத்நெளக்கவாகு சக்கரவர்த்தியின் ஆளுகையின் பின் பன்னிரண்டாம் வருஷமாகிய சகவு ஆயிரத்து நானூற்று முப்பத்தைந்துக்குச் சரிவரச் செல்லா நின்ற பரிசுத்த கௌதம புத்தவு ஈராயிரத்தறுபது ஆனி மீ பூர்வபக்ஷ சப்தமி வெள்ளிக்கிழமை பராக்கிரமபாகு அரசனின் இளவரசனுக்கு மின்னலாலுண்டான வருத்தத்தைத் தீர்க்குமாறு தம்பதீவிலுள்ள கிம்புலவத் புரத்திலிருந்து வரவழைக்கப்பட்டவராகிய உஸ்ஷதிசகிஸ்கந்த சக்கரவர்த்தி ராஜகுருவென்னும் பிராமண பண்டித முதலியாருடன் பத்தொன்பது பேரில் பன்னிருவருக்கும் பொல்லத்தை குருண்ணைன்னைக்கும், திஸ்கத குருல குருண்ணைன்னைக்கும், தேவகுரு பண்டாரத்துக்கும், ராஜகுரு பண்டாரத்துக்கும், சமரக்கொன் பண்டாரத்துக்கும், தூத்துக்குடி அப்புறுளைக்கும் முன்னீச்சுரத்துடன் ஐந்து கிராமங்களுள் நூற்று நாற்பது அமுணங்கொடுக்கப்பட்டது.

அறுபத்து மூவர்

சிவஶ்ரீ க. லோகநாதக் குருக்கள்
(சைவ சித்தாந்த பண்டிதர்)

தத்து மூதெயில் மூன்றுந் தழலெழ
முத்து மூரல் முஞ்சித்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேர் அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

அறுபத்து மூவர் பல்வேறு காலங்களில், பல்வேறு பகுதிகளில், பல்வேறு குலங்களில் தோன்றி, சிவனிடத்திலும் சிவனடியார்களிடத்திலும் அளவு கடந்த அன்புடையவர்களாய் வாழ்ந்தவர்கள். இவர்களுட் பலர் இல்லறத்தினர்; சிலர் இளைஞர்; மூவர் பெண்மணிகள். இவர்கள் தாம் "பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்" ஈர அன்பினர். எத்துணைப்பெரிய இடர் வந்துற்ற போதும் கலங்கா மனமுடையவர்கள். நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், துயின்றாலும், விழித்தாலும் ஈசனை மறவாதவர்கள். இவர்களுடைய பெயர், குலம், நாடு, ஊர், தொண்டு விபரங்களை பெரிய புராணத்தில் உள்ளபடி சுருக்கமாக இங்கே காண்போம்.

அதிபத்த நாயனார்

நுளையர் (மீன்பிடிப்பவர்), சோழநாடு, நாகபட்டினம். நவரத்தினமிழைத்த பொன் தம் வலையிலகப்பட்டபோது அதை தாம் வைத்துக் கொள்ளாது சிவார்ப்பணமாக நீரினுள் விடல்.

அப்பூதியடிகள் நாயனார்

அந்தணர், சோழநாடு, திங்களூர் - தமது குமாரன் இறந்ததையும் மறைத்து திருநாவுக்கரசு சுவாமிகட்கு அமுதளித்து உபசரித்தல்.

அமர்நீதி நாயனார்

வணிகர், சோழநாடு, பழையாறை தொலைந்துபோன கோவணத்திற்கு நிறையாக மனைவி, மக்கள், சொத்துக்களுடன் தம்மையும் சிவனடியாருக்குத் தருதல்.

அரிவாட்டாய நாயனார்

வேளாளர், சோழநாடு, கணமங்கலம் சிவ நிவேதனப்பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தை அரிதல்.

ஆனாய நாயனார்

இடையர், மழநாடு, மங்கலவூர் - பசுக்களை மேய்த்து வரும் போது ஐந்தெழுத்தை புல்லாங்குழலில் அமைத்து வாசித்தல்.

இசைஞானியார்

ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் - சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்று வளர்த்த பெண்மணியார்.

இடங்கழி நாயனார்

அரசர், கொங்கு, கொடும்பாளூர் - சிவனடியார் வழிபாட்டிற்காக நெல் திருடியவர்க்கு மேலும் பொருளும் நெல்லும் தருதல்.

இயற்பகை நாயனார்

வணிகர், சோழநாடு, காவிரிப்பூம்பட்டினம் - சிவனடியாருக்குத் தமது மனைவியையே தானமாகக் கொடுத்தல்.

இளையான்குடிமாற நாயனார்

வேளாளர், இளையான்குடி - விதைத்த நெல்லை வடித்தெடுத்து, வீட்டின் கூரையிலுள்ள தடிகளை விறகாக எடுத்து திருவமுது செய்து அடியார்க்களித்தல்.

உருத்திரபசுபதி நாயனார்

அந்தணர், சோழநாடு, திருத்தலையூர் - இரவும் பகலும் திருக்குளத்தில் கழுத்தளவில் நின்று ஸ்ரீருத்ர மந்திரம் செபித்தல்.

எறிபத்த நாயனார்

சோழநாடு, கருவூர் - பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டுதல்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார்

வேளாளர், சோழநாடு, திருப்பெருமங்கலம் - சிவபெருமானைத் தூதாக விடுத்ததால் சுந்தரமூர்த்தி சுவாமிகளை இகழ்ந்து, பின் திருவருளால் அவருக்கு நண்பராகியது.

ஏனாதிநாத நாயனார்

சான்றார், சோழநாடு, எயினனூர்–போர்புரியும் பகைவனது நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவனைக் கொல்லாது, அவனாற் கொல்லப்படும்படி நடந்துகொண்டது.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

குறுநில மன்னர், தொண்டைநாடு, காஞ்சிபுரம் பதவியை வெறுத்துத் தலயாத்திரை செய்து க்ஷேத்திர வெண்பா பாடியது.

கணநாத நாயனார்

அந்தணர், சோழநாடு, சீகாழி திருஞானசம்பந்தரை வழிபட்டு, சரியைத் தொண்டர்க்கு பயிற்சி கொடுத்தது.

கணம்புல்ல நாயனார்

இருக்குவேளூர்-புல்விற்று நெய்கொண்டு திருவிளக் கெரித்தல், நெய்யின்மையால் தமது தலைமயிரையே எரித்தல்.

கண்ணப்ப நாயனார்

வேடர், தொண்டைநாடு, உடுப்பூர்-ஆறே நாளில் அளவுகடந்த பக்தி செய்து காளத்தியப்பருக்குக் கண் அப்பியது.

கலிக்கம்ப நாயனார்

வணிகர், நடுநாடு, பெண்ணாகடம், தமக்கு முன்பு வேலையாளாக இருந்தவர் சிவனடியாராக வந்தபோது தாம் அவரது கால் கழுவி வழிபட மறுத்த மனைவியின் கையை வெட்டியது.

கலிய நாயனார்

செக்கார், தொண்டை நாடு, திருவொற்றியூர்-திருவிளக்கெரிக்க எண்ணெய் இன்மையால் தமது இரத்தங் கொண்டு எரிக்க முயன்றது.

கழற்றறிவார் நாயனார்
(சேரமான் பெருமாள் நாயனார்)

அரசர், மலைநாடு, கொடுங்கோளூர்-நடராசர் பாதச் சிலம்பொலி கேட்கத் தாழ்த்தமையால், சுந்தரமூர்த்தி சுவாமிகளது தோழமை பெற்றது, சிவபிரானது திருமுகப்பாசுரம் பெற்றது, கயிலை சென்று ஞானவுலா பாடியது.

கழற்சிங்க நாயனார்

குறுநில மன்னர்–சிவபூசைக்குரிய பூவை மோந்ததற்காக தமது மனைவியின் மூக்கை ஒரு சிவனடியார் அரிந்தது போதாதென்று அவள் கையையும் வெட்டியது.

காரிநாயனார்

சோழநாடு, திருக்கடவூர் - கோவை பாடிப் பொருள் பெற்று ஆலயப்பணி செய்தது.

காரைக்காலம்மையார் (பேயார்)

வணிகர், சோழநாடு, காரைக்கால்-சிவபிரானே வேண்டி மாம்பழமும் பேய்வடிவும் பெற்றது, ஆலங்காட்டில் ஆடல் கண்டது.

குங்கிலியக்கலய நாயனார்

அந்தணர், சோழநாடு, திருக்கடவூர்–மனைவியின் தாலியை விற்றுக் குங்கிலியம் வாங்கியது,-சாய்ந்த சிவலிங்கத்தை பூமாலை கொண்டு நிமிர்த்தியது.

குலச்சிறை நாயனார்

பாண்டிய நாடு பணிமேற்குடி, அரசன் சமணனை போதும், தாம் சிவனடியாரை வழிபட்டது. ஞானசம்பந்தரை அழைத்து நாட்டையும், அரசனையும் சைவமாக்கியது.

கூற்றுவநாயனார்

குறுநிலமன்னர், களந்தை-தில்லைவாழந்தணர்கள் தமக்கு முடிசூட்ட மறுக்கவே, தில்லையம்பலவன் திருவடிகளையே முடியாகச் சூட்டப்பட்டது.

கோச்செங்கட்சோழ நாயனார்

அரசர், சோழநாடு - எழுபது சிவாலயங்கள் கட்டியது, முற்பிறவியில் சிலந்தியாக சிவபூசை செய்தது.

கோட்புலிநாயனார்

வேளாளர், சோழநாடு, திருநாட்டியத்தான் குடி-தமது புதல்வியர் இருவரையும் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அர்ப்பணம் செய்தது, சிவபூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரனைவரோடு சிறு குழந்தையையும் கொன்றது.

சடைய நாயனார்

ஆதி சைவர், நடுநாடு, திருநாவலூர்-சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளையாகப் பெற்றது.

WITH BEST COMPLIMENTS FROM



KALAIMAGAL
GOLD PALACE

201, Lower Street, BADULLA.

With best compliments

from

R. CHOKKALINGAM

DEALERS IN TEXTILES

211, LOWER STREET,
BADULLA.

With Best Compliments of

LAKSHMI FOTO

164, Lower Street,

Badulla.

With Best Compliments of

MOHAN'S

Dealers in Textiles

217, Lower Street,

Badulla.

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

PRIYA JEWELLERS

Jewellers and Diamond Merchants
Dealers in Gold & Ever Silver.

No. 1, Haputale Road – Bandarawela.



பிரியா ஜூவல்லர்ஸ்

நி. 1, ஹப்புத்தளை வீதி,
பண்டாரவளை.

With best compliments from

K. Kanapathippillai

General Merchants & Commission Agents.

103, Main Street - Bandarawela.

BRANCH:

45, MAIN STREET, BANDARAWELA.

With Best Compliments

from



Messrs.

N. A. VARNAKULASINGAM & SONS

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS.

No. 173, Keyzer Street,
COLOMBO–11.

With Best Compliments of



GAMI EXPORTERS



19, Grandpass Road

Colombo - 14.

Phone: 25063

With Best Compliments

from

A. M. P. S. Sellasamy Nadar & Company

GENERAL MERCHANTS & ESTATE SUPPLIERS

253, Lower Street,
BADULLA.

Telephone: BADULLA 332 ESTD: 1929 Telegrams: "SELLASAMY"

Branch :
139, 4th Cross Street,
Colombo-11.
Phone: 26447

★

எங்கள் தயாரிப்பு :

காளி சோப், ஆச்சி தேயிலை

★

டிரான்ஸ்போர்ட் ஏஜெண்ட்

WITH BEST COMPLIMENTS
FROM

AMBIGAI STORES

GENERAL MERCHANTS
&
PAWN BROKERS

No. 42, MAIN STREET
HAPUTALE.

WITH THE COMPLIMENTS FROM

SARAVANA STORES

GENERAL MERCHANTS

No. 18, Main Street, HAPUTALE.

Branch :
Venkateshwara Stores
97, Kasturiar Road,
Jaffna.

Phone: 263

WITH BEST COMPLIMENTS FROM

PUSPA TRADING COMPANY

Suppliers of Tea Chest Panels with Components
Hardware Merchants, Estate Suppliers & Transport Agents
Dealers in Electrical Goods,
Exporters & Importers.

No. 113, Main Street – Bandarawela.

T'phone: 230

T'grams: "PUSPAS"

HEAD OFFICE:

No. 386 1/1, Sri Sangaraja Mawatha,
Colombo - 10.
T'phone: 23931

BRANCH:

Maxic Enterprices
329, Old Moor Street,
Colombo - 12
T'phone: 548199

சண்டேசுவர நாயனார்

அந்தணர், சோழநாடு, திருச்சேய்ஞ்ஞலூர்-அபிஷேகப் பாற்குடத்தை இடறியவர், அந்தணர், தந்தை, குரு என்றும் பாராது காலை வெட்டியது.

சக்திநாயனார்

வேளாளர், சோழநாடு, வரிஞ்சியூர் - சிவனடியார்களைக் குறை கூறுபவர்களுடைய நாக்கை அறுத்தல்.

சாக்கிய நாயனார்

வேளாளர், திருச்சங்கமங்கை - நாடோறும் சிவலிங்கத்தின் மீது மலராக மதித்து கல்லெறிந்தது.

சிறப்புலிநாயனார்

அந்தணர், சோழநாடு, திருஆக்கூர்-அடியார்களுக்கு அமுதும் பொருளும் தருவது.

சிறுத்தொண்ட நாயனார்

அந்தணர், சோழநாடு, திருச்செங்கட்டங்குடி-சிவனடியார்க்கு தமது ஒரே பிள்ளையை கறியாகச் சமைத்து வைத்தது.

சுந்தரமூர்த்தி நாயனார்

ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர்—இறைவனோடு வாதுபேசியது, தூது போக்கியது முதலியன.

செருத்துணைநாயனார்

வேளாளர், சோழநாடு-(கழற்சிங்கநாயனுடைய) அரசனுடைய மனைவி யென்றும் பாராது, சிவபூசைக்குரிய பூவை மோந்ததால் அவள் மூக்கையரிந்தது.

சோமாசிமாறநாயனார்

அந்தணர், சோழநாடு, திருஅம்பர்-வேத வேள்வி செய்து வன்றொண்டரை வழிபட்டது.

தண்டியடிகள் நாயனார்

சோழநாடு, திருவாரூர் பிறவிக்குருடராயிருந்தும் திருக்குளப் பணி செய்து குருடுநீங்கிச் சமணரை வென்றது.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

ஏகாலியர் (வண்ணார்) தொண்டைநாடு, காஞ்சிபுரம் சிவனடியார்க்கு வாக்களித்தபடி துணியைத் தோய்த்துத் துலர்த்திக்தர முடியாதவிடத்து தமது தலையைக் கல்லின் மீது மோதியது.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

அந்தணர், சோழநாடு, கோழி ஞானப் பாலுண்டமை, தேவாரம் பாடி அற்புதங்களைச் செய்தமை

திருநாவுக்கரசு நாயனார்

வேளாளர், நடுநாடு, திருவாமூர் தேவாரம் பாடி அற்புதங்களைச் செய்தமை.

திருநாளைப்போவார் நாயனார்

(நந்தனார்) புலையர், சோழநாடு, ஆதனூர் சிதம்பரதரிசனம் விரும்பி திருவருளால் தீக்குழியிலிறங்கி முனிவடிவாய் முத்தியடைந்தது.

திருநீலகண்ட நாயனார்

குயவர், சோழநாடு, சிதம்பரம், ''திருநீலகண்டம் என்னும் திருநாமத்தின் மேல் ஆணையாக'' என்று மனைவி சொன்னவிடத்து அதற்குட்பட்டு தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் காத்து பின் இறையருளால் இளமை பெற்றது.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

பாணர், நடுநாடு, திருஎருக்கத்தம்புலியூர்-திருஞான சம்பந்தருடன் சென்று தேவாரங்களுக்கு யாழ் வாசித்தமை.

திருநீல நக்க நாயனார்

அந்தணர், சோழநாடு, திருச்சாத்தமங்கை அன்பினால் சிவலிங்கத்தை ஊதித் துமித்தது அனுசிதமன்றெனக் காட்டப்பெற்றது. திருஞானசம்பந்தருடைய திருமணத்தை நடத்தி முத்தி பெற்றது.

திருமூல நாயனார்

இடையர், சோழநாடு, சாத்தனூர் மூலன் உடலில் தாம் புகுந்து, திருமந்திரம் அருளிச் செய்தது.

நமிநந்தியடிகள் நாயனார்

அந்தணர், சோழநாடு, ஏமப்பேரூர்-தண்ணீரால் விளக்கெரித்தல், திருவாரூர்ப் பிறந்தாரையெல்லாம் சிவசாரூப்பியராகக் காணப் பெற்றது.

நரசிங்க முனையரைய நாயனார்

குறுநில மன்னர், நடுநாடு சுந்தர மூர்த்தி சுவாமிகளை வளர்த்தல், சிவ வேடம்பூண்ட தூர்த்தனையும் வழிபட்டமை;

நின்றசீர் நெடுமாற நாயனார்

அரசர், பாண்டிநாடு, மதுரை திருஞான சம்பந்தரால் சுரம் நீங்கி கூன் நிமிரப்பெற்று சைவராகியது.

நேசநாயனார்

சாலியர், காம்பீலி நகரம் - சிவனடியார்க்கு வஸ்திரதானம் செய்தமை.

புகழ்ச்சோழ நாயனார்

அரசர், சோழநாடு, உறையூர் - பகைவனது அறுபட்ட சிரசில் சிவ சின்னமாகிய சடை கண்டஞ்சி உயிர்விட்டது.

புகழ்த்துணை நாயனார்

ஆதி சைவர், செருவிலிபுத்தூர் - சிவபூசைக்குதவியாகப் பஞ்ச காலத்தில் இறைவனுல் காசு பெற்றமை.

பூசலார் நாயனார்

அந்தணர், தொண்டைநாடு, திருநின்றவூர் - மனதிலே கோயில்கட்டி சிவபூசை செய்தது.

பெருமிழலைக்குறும்ப நாயனார்

பெருமிழலையூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு, அவர் கயிலை செல்லுதலை அறிந்து யோகத்தால் தாமும் கயிலை சென்றது.

மங்கையர்க்கரசியார்

(மாணியார்) அரசியார், பாண்டிநாடு – திருஞானசம்பந்தரை வரவழைத்து தமது கணவரையும் நாட்டையும் சைவமாக்கியது.

மானக்கஞ்சார நாயனார்

வேளாளர், கஞ்சாறூர், சிவனடியார் - கேட்டபோது தமது மகளின் கூந்தலை அன்று மணநாளென்றும் பாராது அரிந்து கொடுத்தது.

முருக நாயனார்

அந்தணர், சோழநாடு, திருப்புகலூர் புஷ்பத் தொண்டு செய்து சம்பந்தர் திருமணத்தில் முத்திபெற்றது.

முனையடுவார் நாயனார்

வேளாளர், சோழநாடு, திருநீடூர் கூலிக்குப் போர் செய்து அக்கூலி கொண்டு சிவனடியாரை வழிபட்டமை.

மூர்க்க நாயனார்

வேளாளர், தொண்டைநாடு, திருவேற்காடு - சூதாடிக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சிவனடியாரை வழிபட்டது.

மூர்த்தி நாயனார்

வணிகர், பாண்டிநாடு மதுரை - சந்தனம் அரைத்துக் கொடுக்குந் திருப்பணிக்கு தடை வந்தபோது தமது முழங்கையை அரைத்தமை.

மெய்ப்பொருள் நாயனார்

குறுநில மன்னர், நடுநாடு, திருக்கோவலூர் - தம்மைக் கொல்லும் பகைவன் சிவவேடதாரியாய் இருந்ததால் அவனைக் கொல்லாது காப்பாற்றி தாம் உயிர்விட்டது.

வாயிலார் நாயனார்

வேளாளர், தொண்டைநாடு, மயிலாப்பூர் - மானசீகமான ஞானபூசை செய்தமை.

விறன்மிண்ட நாயனார்

வேளாளர், மலைநாடு, செங்குன்றூர் – சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணராயிருந்தமை.

வல்லிபுரக் கோயில்

சிங்கைநகர்: செங்கதிரோன்
புலோலி

மாயவமு ராந்தகநேர் வல்லிபுரக் கோயிலுறை
தூயவவெற் கேவதென்ரே தொல்வனத்து-பாயமுணர்ந்
தெய்வதுழைமா ரீசனேக்கொன் றிவ்வில்லங்கை யேகநெறி
செய்தவிறன் மாதவநின் சீர்.

—வல்லிபுரமாயவன் மும்மணிமாலை

யாழ்ப்பாணத்தின் புராதன விஷ்ணு தலங்களிலொன்றுதான் வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோயில். இங்கே க்ஷேத்திரியாயிருப்பவன் திருமால். கோவில் என்ரால் சிதம்பரம், ஸ்ரீரங்கம் இரண்டையுமே குறிக்கும். திருக்கோவில், நாகர்கோவில் இரண்டும் கிழக்குக் கரையோரமுள்ள ஊர்கள். இங்கே முறையே சித்திர வேலாயுதர் கோவிலும், நாகதம்பிரான் கோவிலுமுண்டு. ஆயின் வல்லிபுரக் கோயிலென்பது வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தையே குறிக்கும்.

வல்லி புரத்திலெழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு ஆழ்வார் சுவாமியென்ற திருநாமமே பண்டு தொட்டுப்பரவணியாய் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தின் பிரபாவம் தட்சிணகைலாசபுராணம் தட்சிணகைலாசமான்மியம் (வல்லிபுர வைபவம்) நகுலமலைக் குறவஞ்சி, திருக்கேதீஸ்வர புராணம் என்னும் நூல்களிற் பெரிதும் பேசப்பட்டுள்ளது. இன்னும் சிங்கள மொழியிலுள்ள ''கோகுலசந்தேச'' என்னும் பிரபந்தம் வல்லிபுரம், புன்னாலை என்னும் இரு ஸ்தானங்களையும் பற்றிவிசேஷமாகக் குறிப்பிட்டிருப்பதும் சிறப்பம்சமாகும். ''சுவர்ணாலயம் வல்லிபுரம் விஷ்ணுக்ஷேத்திரத்துவயந்தா'' எனப் போற்றுகிறது தட்சிண கைலாசமான்மியம்.

வல்லிபுரம் - சிங்கை நகர்

கோகுலம், ஆயர்பாடி என்ற பொருளோத்தன்னகத்தேஉடையது வல்லிபுரம். வல்லிபுரம் என்ற பெயர் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புடையது. நடராஜப் பெருமானின் பஞ்ச சபைகளில் ஒன்று தாமிர சபை இவ்வாலயம் ராஜவல்லிபுரத்திலிருக்கிறது. இஃது சிவதலமானது போல பண்டைய இராஜதானியாயிருந்த வல்லிபுரம் விஷ்ணு தலமாகும். தமிழ்ப்பெருங்குடிகளின் குடியேற்றம் ஈழத்துச்சரித்திரத்திலே ஓர் தனியத்தியாயமாகும். இன்று வல்லிபுரம் என்று அழைக்கப்படும் இடம்முன்னொருபோது வடமராட்சியில், தொண்டைமண்டலத்தில் இருந்து வந்து வல்லிய தேவன் குடியேறிய பகுதியாகும். அவர்தன் பெயரை இட்டாரெனவும் கூறுவர் வரலாற்றுசிரியர்கள். கரிகாலன் தன் நாட்டைக் கோட்டங்களாகவும் பிரிவுகளாகவும் வகுத்தபோது வல்லிபுரம் என்பதும் அக் கோட்டங்களிலொன்றாயிருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. தமிழ் நாட்டில் செங்கற்பட்டுக்கடலோரத்திலிருந்து 20 மைல்தொலைவிலுள்ள ஒரு விஷ்ணு ஆலயம் வல்லிபுரம் என அழைக்கப்படுகிறது. பூமாதேவி விஷ்ணுவைத் தரிசித்த இடம் (வல்லி புரம்) வல்லி புரம் ஆகும் என்பதும் ஈழமண்டல கதாசிரியர் முடிவு.

வல்லிபுரக் கோவிலைச் சூழவுள்ள மணற் பிரதேசம் ஒருகாலத்தில் மிகஉன்னத நிலையில் இருந்த ஓர் இராசதானி யென்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். வல்லிபுரம் ஓர் துறைமுகமாக இருந்ததுமட்டுமல்ல தலைநகராயுமிருந்த தென்பதற்கான புதை பொருட்சின்னங்கள் கவனத்துக் குரியதாகும். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கலிங்க அரசன் உக்கிர சிங்கன், கதிரமலையரசைப்பற்றி மாருதப்புரவீக வல்லியெனும் சோழகுமாரியைமணந்து பின்னர் கதிரமலையை விட்டு நீங்கி சிங்கைநகரை இராசதானியாக்கினான். பருத்தித்துறைக்கண்மையில் மணல்மேடுகள் உள்ள வல்லிபுரமே சிங்கைநகரமாகப் பண்டைக்காலத்தில் விளங்கியது எனக் குறிப்பிடுகிறார் குலசபாநாதன். சிங்கை நகரைப்பற்றிய சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்து வருமாறு:

வல்லிபுரம் மணற்கும்பிகளுள், காற்றுக் காலங்களிலகப்படும் பழம் பொருட்கள் அங்கு பலவிடங்களிற் குவிந்துகிடக்கும் பூர்வகாலக் கல்லோடுகள், கீச்சுக்கிட்டம் ஆதியனவும் அங்கிருந்து கரைமார்க்கமாகப் போன பெருவீதியினடையாளங்களும் ஓர்நாள் விஸ்தார நகராய் விளங்கியதெனக் கரதலா மலகமாகக் காட்டும். அப்பால் ஆரியச்சக்கரவர்த்திகள் தம் செல்வாக்கு நிரம்பிய காலங்களில் பெருங் கப்பற்படையுடையோராய் பிரக்யாதி பெற்றுள்ளமையினால் அம் மரக்கலங்கள் ஆழியிற் சென்று சுலபமாய்த் திரும்பு

வதற்த அநுகூலமான துறைமுகமுள்ளோராய் இருந்தமை அவசியம். கேகாலைப் பகுதியிலுள்ள நொக்கமத்திற் கண்டெடுத்த கல்வெட்டு மன்னைப் பொங்கொலிநீர்ச் சிங்கை நகர் ஆரியரெனச் சுரிப்பிக்கின்றது. பெருங்கடற் சமீபமும் சிறந்த துறைமுகப்பொலிவும் பொருந்தக் கொண்டதே வல்லிபுரம்! வல்லிபுரத்திற் கண்டெடுத்த முதுதாழிகள், செப்புக்காசுகள் என்பனவும் வல்லிபுரம் ஓர் புராதன துறைநகராயிருந்ததென்பதை நிரூபிக்கின்றன.

1906ல் மணற்குப்பியிலோர் அழகான புத்தர் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது அமராவதி சிற்பமுறையிற் செய்யப்பட்டிருந்தது. அக்காலத்தில் தேசாதிபதியாயிருந்த சேர். ஹென்றி பிளேக் இந்த அழகான புத்தர்சிலையை சீயதேச மன்னனுக்குப் பரிசாக அளித்தார். 1938ல் வல்லிபுரச்சாசனமான பொற்றகடொன்று எடுக்கப்பட்டது. இவ்வாறு வரலாற்றுச்சிறப்புக் கொண்ட வல்லிபுரம் இன்று ஈழத்தில் சிறந்த விஷ்ணு தலமாய்த் திகழ்கிறது.

கோவிலமைப்பு

மூர்த்தி, தல, தீர்த்தமாகிய முப்பெருங் கீர்த்தியும் சீர்த்தியுமுள்ள இத்திருப்பதி இயற்கை வனப்புமிக்க அமைதியான புனித சூழ்நிலையிலே அமைந்திருக்கிறது. வங்கக் கடல் ஓரம் விரிந்து பரந்து கிடக்கிறது வெண் மணற்பரப்பு. இடையிடையே செய்குன்றங்கள் போல மணல்மேடுகள் நீண்டு படுத்துக் கிடக்கின்றன. இங்குமங்குமாய்ச் சுனைநீர்த் துரவுகள். இந்த நெய்தல் நிலம் மேற்கே செல்லச் செல்ல மருதநிலமாய் மாறி செந் நெற்கழனிகள் நிறைந்த பொன்கொழிக்கும் பூமியாகிறது. நெய்தலும், மருதமும் சங்கமமாகும் மென்புலத்தில் திருமால் கோயில் கொண்டிருக்கின்றன. இத்தலத்தின் பெருமையை வல்லிபுரமாயன் போற்றிவிருத்தம் இப்படிப் பேசுகிறது,

வெங்கடா சலமேறந்தி விலங்கலோ டழகர் கோயி
ருந்தொன் னுலயஞ்சேர்த் தனிப்பெருமரங்கம் வெஃகா
வோங்குழு டகம் வைகுண்ட மொளிரட்ட புயமேயோதிப்
பாங்குயர் தலம்போல் வாழும்பதி வல்லிபுரத்தாய்
போற்றி;
—போற்றிவிருத்தம்

இந்து ஆலயங்களினடிப்படையிலே அமைந்த இக்கற்றளி வேதாகம முறைப்படி பூஜை நடக்கும் தேவஸ்தானமாகும். மூலக் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிர்த்தமண்டபம், தப்பமண்டபம் என்பன முறையாயமைந்தகிழக்குச்சந்நிதியை உடைய தெனினும் மேற்குவாயிலே பிரபல்யமானது. மூலக்கருவறையிலே மூலமூர்த்தி ஐம்பொன்னற் செய்யப்பட்ட சக்கரமேயாகும். மேலே திரிதளவிமானத்தோடு காட்சியளிக்கிறது. மகாமண்டபம் தெற்கு நோக்கி சந்நிதானத்தில் ஸ்ரீமந்நாராயணன் ருக்மணி சத்தியபாமையுடன் காட்சியளிக்கிறான். தென் வாசலின் மேலே ஸ்ரீரங்கநாதனின் அனந்த சயனக்காட்சியொன்று சிற்பிகளால் உருவாக்கப்பட்டிருக்கிறது. வழமையான நந்திக்குரிய இடத்திலே பெரிய திருவடி (பெரியாழ்வார்) ஸ்தாபிக்கப்பட்டிருப்பது விஷ்ணு ஆலய ஆகம அமைப்பாகும். உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் ஆகிய இரு வீதிகளைக் கொண்ட இவ்வாலயத்தின் தெற்கு வெளிப் பிரகாரத்தில் ஆதி அனந்தாழ்வார் (நாகதம்பிரான்) கோவிலும், நாச்சியார் கோவிலும் உண்டு.

உட்பிரகாரத்தில் வடமேல் பாரிசத்தில் தும்பிக்கையாழ்வார் (விஜயகர்) சந்நிதானமும், அடுத்து நாக தம்பிரான் சந்நிதானமும் கிழக்குவாயிற் கோயிலாயமைந்துள்ளன. வடமேற்கே, வடக்கையண்டி, தெற்குநோக்கிய வாயிலோடு திகழ்வது நாச்சிமார் சந்நிதியாகும். வழமையான இடங்களில் நவக்கிரகங்கட்கான கோயிலும், வசந்தமண்டபமும் அமைக்கப்பட்டிருக்கிறது. உற்சவகாலங்களில் எழுந்தருளும் சுதர்சனம் (சக்கரம்) கருடாழ்வார் மேலமைந்தபாணியில் காட்சிஅளிக்கிறது. மற்றைய சைவ ஆலயங்களில் வைரவ மூர்த்தியுள்ள ஸ்தானத்தில்—இவ்வாலயத்தில் சிறிய திருவடியென அழைக்கச்சொல்லின் செல்வனான ஆஞ்ஞனேய சுவாமிக்கான சந்நிதி. மேற்கு வாயிலோடு திகழ்கின்ற காட்சி இவ்வாலயத்தின் சிறந்த அமைப்பாகும். கிழக்கு வெளிவாயிலிலே 71 அடி உயரமான ஏழடுக்குஇராச கோபுரமமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. இவ்வாலயம் 1977ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நல்ல தர்மகர்த்தா சபையினால் நிர்வகிக்கப்பட்டும் வருகிறது.

வளர்ந்துவரும் கேதீச்சரம்

— நா. முத்தையா —

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் உலகினில்
உயிர் வாழ்க்கை
கண்டநாதனூர் கடலிடங் கைதொழக் காதலித் துறை
கோயில்
வண்டு பண்செய்யும் மாமலர்ப் பொழில் மஞ்ஞை
நடமிடுமாதோட்டம்
தொண்டர் நாள் தொறும் துதிசெய அருள்செய்
கேதிச்சர மதுதானே.
-சம்பந்தர்

புதிதாக அமைக்கப் பெற்ற கோயில்கள் வளர்ச்சி அடைவதையும் குறிக்கலாம். வளர்ந்து வந்த கோயில்கள் இடையில் தடைப்பட்டு பின்பு புதுமை பெறுவதையும் குறிக்கலாம். ஞானசம்பந்தப் பெருமானுடைய காலத்திலே திருக்கேதீச்சரம் இருந்த நிலைமைக்கு அவரது தேவாரங்களே அத்தாட்சி. சம்பந்தப் பெருமானுடைய காலத்திற்குப் பின்பும் ஆயிரம் ஆண்டுகள் வளர்ச்சி பெற்றிருந்த கேதீச்சரம் போர்த்துக்கேயருடைய வருகையால் கோயில்கள் இடிபாடுகள் அடைந்தன. கட்டிடங்கள் அழியலாம், ஆனால் கேதீச்சரநாதர், சம்பந்தர் பாடிய திருப்பதிக மூலமும் சுந்தரர் பாடிய திருப்பதிக மூலமும் தமது அடியார்களுக்கு அருள் செய்யத்தவறவில்லை.

''மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான் திருக்கேதிச்சரத்தானே''

என்று பாடிய பெருமை சுந்தரருக்குரியதாகும். சம்பந்தர் காலத்திலே வளமுற்றிருந்த கேதீச்சரம் அவருடைய காலத்திற்கும் எத்தனை ஆண்டுகள் முந்தியதோ யாரறிவார்.

இலங்கையில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகவும் புராதனமான கோயில்கள் பல இருந்திருக்கின்றன என்பதற்கு திருக்கேதீச்சரம் ஒரு அத்தாட்சியாகும்.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொடங்கினோர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''
என்பது தாயுமானுர்வாக்கு.

மூர்த்தியென்ன, தலங்களென்ன, தீர்த்தங்களென்ன இவைகளிலே விதிப்படி பக்தி பாராட்டிவருபவர்க்கு உண்மையான ஞானோபதேசஞ் செய்தருளுமாறு மெய்க்குரவர் கிடைப்பரென்பது மூன்றும் வாய்க்கப்பெற்றது கேதீச்சரம். அதனால்தான் கேதீச்சரநாதனை நாடி எங்கெங்கிருந்தோ மக்கள் ஓடிவருகிறார்கள். திருவருளோடுகுருவருளும் கிடைக்கப் பெறுகின்றார்கள்.

திருக்கேதீச்சரம் கோயில் கொண்டிருக்கும் மாதோட்டம் ஒருகாலத்தில்பெருந்துறைமுகமாகவும், தமிழ் மன்னர் ஆட்சிக்குத் தலைநகராகவும் விளங்கியது. மணிவாசகப் பெருமான் குதிரை வாங்க வந்த திருப்பெருந்துறை இதுதானோ என்று ஆராய்கின்றவர்களும் உண்டு.

ஈழத்திருநாட்டில் சைவப்பண்பும் தமிழ்ப் பண்பும் இவற்றின் தொன்மையும் சிறப்பும் ஒன்றுசேர விளங்கும் இடம் ஒன்று உள்ளதென்றால் அது திருக்கேதீச்சரமாகும். கேது தவஞ்செய்து தனது சாபத்தைப் போக்கிக் கொண்ட தலமாகையினால் கேதீச்சரம் எனும் பெயர் வாய்க்கப் பெற்றது. இத்தலத்தை ஜனன பூமியாகப்பெறும் அஃறிணை உயர்திணைச் சீவன்கள் அனைத்தையும் ஜீவன்முக்தர்களாக்கும் ஜீவபூமி யென தக்ஷிணகைலாசமான்மியம் கூறுகின்றது. துவட்டா என்பவர் கேதிச்சர லிங்கத்தைப் பூசித்து உத்தம தவத்தைச் செய்து விசுவகன்மாவெனும் புத்திரனைப் பெற்றமையால் இவ்விடம் மகாதுவட்டரபுரம், மாதோட்டம் எனப் பெயர்பெற்றது என்பர்.

இராவணன் காலத்தில் அவன் மனைவி மண்டோதரி பூசித்துப் பேரருளின்பம் பெற்ற ஸ்தலம் திருக்கேதீஸ்வரம் தான் என்பதற்கு மணிவாசகர் திருவாசகத்தில் சான்று கூறியுள்ளார்.

''ஆர்கலி சூழ்தென்னிலங்கை அழகமர்
வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை
மேயபிரானே''

என்று குயில்பத்தில் கூறுகிறார்.

''ஓங்கு மதிலிலங்கை யதனின்
பந்தணை மெல்விரலாட் கருளும்
பரிசறி வாரெம்பிரானுவாரே''

என்று திருவார்த்தைப் பதிகத்தில் கூறியிருக்கின்றார்.

சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டு. இவற்றுள் சமயகுரவர்களால் பாடல்பெற்றவை இருநூற்று எழுபத்து நான்கு. அவற்றுள் ஒன்று கேதீச்சரம். மற்றது கோணேஸ்வரம். இவ்விரண்டும் ஈழத்தின் இரு நேத்திரங்கள் என்று போற்றப் பெறுகின்றன. மூவேந்தர் இந்தியாவில் செங்கோலோச்சிய காலத்தும் ஈழத்தை ஆண்ட அரசன் விசயனுடைய காலத்திற்கு முன்னும் பின்னும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பெருமளவில் கடற்றொழில் வர்த்தகம் நடத்தி வந்த பழங்குடிப் பெருமக்கள் தம் ஏறுதுறையாகவும் இறங்குதுறையாகவும் பாவித்த துறை நகரம் இம் மாதோட்ட நகரமேயாகும். கி. மு. ஆறும் நூற்றாண்டில் ஈழத்து முதற் சிங்கள அரசன் பாண்டிய இளவரசியை மணஞ் செய்து வந்து இறங்கிய வழி இதுவென பண்டைய வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

பதினாறும் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் தமது கைவண்ணத்தைக் காட்டிய பின், கேதீச்சரநாதர் அருவமாக இருந்து அருள் செய்தார். 1872ல் நாவலர்பெருமான் யாழ்ப்பாணச் சைவர்களுக்கு அறைகூவல் ஒன்று விடுத்தார்.

ஞானசம்பந்தராலும், சுந்தரராலும் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம், இவ்வடமாகாணத்தின்கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து கடலாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாதென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந் தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லாரும் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்.

இந்த அருள்வாக்கின் பயனாக சைவமக்களனைவரதும் சிந்தனைபீடமாக திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபைதோன்றியது. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணச் சைவ மக்களால் கட்டப்பட்டிருந்த சிறு ஆலயத்தை 1952ம் ஆண்டு ஆவணித் திங்களில் பழுதுபார்த்துப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்து அடியார்களின் தரிசனத்திற்கு ஏற்றவிதமாகச் செய்தார்கள். திருக்கேதீச்சரம் தினமும் ஏதோ ஒருவிதத்தில் வளர்ச்சி பெற்றுக்கொண்டே வருகின்றது. ஒரு யாத்திரை ஸ்தலத்திற்கு வேண்டிய அத்தனை தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டு விட்டன. பொதுமக்களால் நிறைவேற்றப்பட்ட திருப்பணிகளுக்கு மேலாக அரசாங்கத்தாரால் குழாய்த்தண்ணீர், தபால் நிலையம், புகையிரத நிலையம், வைத்திய நிலையம் ஆதியனவும் நிறைவு பெற்றுள்ளன.

இத்தனை ஆண்டுகளாக இவ்வளவு வேலைகளும் இடைவிடாது நடைபெற்றும் திருக்கேதீச்சரத் திருப்பணிக்காரியதரிசி திரு. நமசிவாயம் அவர்களிடம் திருப்பணி எவ்வளவில் உள்ளது? என்று கேட்டால் இன்னும் இருபதுலட்சம் வேண்டும் என்பார் முழுச் சிவபுண்ணியத்தையும் தமக்காக்கிக்கொள்ள விரும்புவோருக்கு இத்தொகை பெரும் பணம் அல்ல.

''சிவவழிபாடுங் கொடையும்
அடிமைத்திறமும் எங்கள் கடமை'' நாவலர்

கரம்பனில் சைவ வளர்ச்சி

— குல. சபாநாதன் —

கரம்பன் வட இலங்கையினையடுத்துள்ள சப்ததீவுகளுள் ஒன்றுகிய ஈடன் தீவிலுள்ள ஒரு கிராமமாகும். இங்கு வாழ்பவர்களுள் பெரும்பாலார் சைவர்கள். ஆகவே மேற்குக் கடற்கரையோரத்தில் புராதனப் பெருமை வாய்ந்த கண்ணகி அம்மன் கோயிலும், கரம்பன் மேற்கில் அருள்பொழியும் முருகமூர்த்தி கோயிலும், கிழக்கில் முருகமூர்த்தி ஆலயமும், வயிரவர் கோயிலும், வடக்கில் சிவன் கோயிலும் கரம்பன் கிராமத்தை அணி செய்கின்றன.

சோமவார மடம்

இத்தீவிலுள்ள ஊர்காவற்றுறை எனும் துறைமுகம் பண்டைக்காலத்தில் தலைசிறந்த துறைமுகமாக விளங்கியது. ஏற்றுமதி இறக்குமதி காரணமாகப் பெருங் கப்பல்கள் வந்து செல்வது வழக்கம். இந்தியாவுக்கு யாத்திரை செய்யும் சைவர்கள் இத்துறைமுகத்திலிருந்து கப்பலேறிச் செல்வார்கள். சைவச் சிங்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இத் துறைமுகத்தில் கப்பலேறியே தென்னிந்தியாவுக்குச் செல்வது வழக்கம். கப்பல் ஏறுவதற்காகச் சிலசமயங்களில் யாத்ரீகர் இரண்டு மூன்றுநாள் ஊர்காவற்றுறையில் தங்க நேரிடும். நாவலர்பெருமான் போன்ற சைவ ஆசாரசீலர்கள் தங்கள் நித்திய நைமித்தியங்களை முட்டின்றிக்கடைப்பிடித்தொழுகும்பொருட்டு, ''செட்டியார் மடம் அல்லது சோமவார மடம்'' எனும் பெயருடன் ஒரு மடம் செட்டிமார்களால் நிறுவப்பட்டது. இம்மடத்தினைக் கொடைவள்ளல் திரு. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் அமைத்து உதவினர்கள். இது இப்பொழுது சிதைந்த நிலையில் உள்ளது. இங்கு தங்கிச் செல்பவர்கள் இப்பொழுது இல்லாமையே காரணமாகும். இது ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அண்மையில் உள்ளது.

முத்துக்குமாரச் சட்டம்பியார்

நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் இந்தியா சென்று, திருவாவடுதுறை ஆதீனத்தால் ''நாவலர்'' என்ற பட்டம் சூட்டப்பெற்று, 1848ம் ஆண்டு திரும்பி வந்த பொழுது, கரம்பன் சைவமக்களால் நாவலர் பெருமானுக்கு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டவர்களில் இளைஞன் முத்துக்குமாரரும் ஒருவராவர். ஆறுமுகநாவலர் முத்துக்குமாரரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டார். ஆகவே படிப்படியாக முத்துக்குமாரர் நாவலரின் மாணவராஞர். அப்பெருமானிடமே கற்க வேண்டிய சமயசாத்திர நூல்களையும் இலக்கண நூல்களையும் கற்றுத் தெளிந்தார். முத்துக்குமாரர் ஊருக்குத் திரும்பியதும் அவரை நாடி இளைஞரும் வளர்ந்தோரும் கல்விகற்கவிழைந்தனர். அக்காலத்தில் ஒழுங்கான பாடசாலைகள் இல்லை. ஆகவே தம்மிடம் கற்க வந்தவர்களுக்காக மூன்று நான்கு திண்ணைப்பள்ளிக் கூடங்களை ஆரம்பிக்கவேண்டியதாயிற்று.

முத்துக்குமாரச் சட்டம்பியார் தமது குருவைப் போலவே சைவ ஆசாரசீலராக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஆழங்காண முடியாத அறிவுக்கடலாக விளங்கினர்கள். புராணங்களுக்குப் பயன் சொல்லும் முறையினைச் சட்டம்பியாரிடமே பலர் கற்றுக்கொண்டனர்.

மகாதேவ சுவாமிகள்

மெய்ஞ்ஞான மென்னுஞ் சுடர்விளக் கேற்றி மிகக்களிப்பார்
அஞ்ஞான மென்னும் அகந்தையகற்றி அருள் பொழியும்
செஞ்ஞாயி றென்னத் திகழும் திருமுகத் தோடெனையாள்
மெய்ஞ்ஞான வள்ளல் மகாதேவ மாமணி மாதவனே.
—தவத்திரு. வடிவேற் சுவாமிகள்

இத்தகைய கல்விமானுகிய முத்துக்குமாரச் சட்டம்பியாரிடத்திலேதான் மகாதேவ சுவாமிகள் கல்வி கற்றுக்கொண்டார்கள். கரம்பன் கிராமத்தில் வாழ்ந்த சைவப் பெரியார் நாராயணர் இராமநாதன். அவர்களுக்கும் அவர் மனைவி அன்ன பூரணிக்கும் மூத்த புதல்வனாக 1874ம் ஆண்டு ஆவணித் திங்கள் 21ம் நாள் அவதரித்தவர் சுவாமி மகாதேவா அவர்கள் இவருடைய பிள்ளைத் திருநாமம் வைத்தியலிங்கம் என்பது. ஊரி

ஆள்ளவர்கள் இவரைத் தம்பையாச் சுவாமி யென்று அழைத்துவந்தார்கள். வைத்திய லிங்கம் மூத்த பிள்ளையாதலால்; குடும்பத் துக்காகஉழைக்க வேண்டியதாயிற்று எனவே அக்காலத்தில் மட்டக்களப்பிலே பெருந்தன வந்தராயிருந்த வைத்தியலிங்கம் அவர்களி டம் கணக்கப்பிள்ளையாகக் கடமை புரிந்தார். தனது குடும்பப் பொறுப்புகளை நிறைவேற் றிக் கொண்டபின்னர், துறவு மேற்கொள் ளும் பணியில் ஈடுபடத்தொடங்கினார்.

அக்காலத்தில் தாம் பிறந்த கிராமத்தி லுள்ள பிள்ளைகள் கல்வி கற்பதற்கேற்ற சை வத்தமிழ்ப் பாடசாலை ஒன்றுவது இல்லாதி ருந்த குறை தம்பையாச் சுவாமியாருக்குப் பெருங்கவலையைத் தந்தது. இக்குறைபாட் டினை நீக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங் கினார்கள். கரம்பன் மேற்கில் சுஞ்சரி என்னும் பெயருடைய மூதாட்டி தர்மசாதனஞ் செய்த வளவிலே 'சண்முகநாத வித்தியாசாலை' எனப் பெயருடன் ஒரு பாடசாலையைச் சுவாமியவர் கள் 1917ம் ஆண்டில் தொடக்கி வைத்தார் கள். இந்தப்பாடசாலையின் அத்திவாரக்கல்லை இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமிசர் வானந்தாநாட்டினார்கள். இந்தப் பாடசாலை மேலைக்கரம்பன் முருகமூர்த்தி கோயிலுக்கு அண்மையில் அமைந்திருப்பதால், இது 'சண் முகநாத வித்தியாசாலை' எனப் பெயரிடப்பட் டது. இப்பாடசாலையை உருவாக்குவதில் சுவாமியவர்கள் அல்லும் பகலும் அரும்பாடு பட்டு அயராது உழைத்தவர்கள் பிடியரிசி வீடு வீடாகச் சென்று சேர்க்கும் முறையில் ஈடுபட்டு ஆசிரியர்களுக்கு உதவி புரிந்து வந்தார்கள். ஆரம்பகாலத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் வேதனம் பெறுது தொண்டாற்றி வந்தார்கள்; சுவாமி அவர்க ளும் சிறிதுகாலம் படிப்பித்தார்கள். சுவா மியவர்கள்ஆரம்பித்துவைத்த சிறு பாடசாலை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனி யுமாக வளர்ச்சியடைந்தது. இப்பொழுது ''கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம்'' எனும் பாரிய ஆலமரமாகத் திகழ்கின்றது.

சிவகுருநாத வித்தியாசாலை

சுவாமியவர்களின் இனத்தவரான திரு. ஆ. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் சிறந்த கல்விமானாக விளங்கி நெடுந்தீவிலே தமிழா சிரியராகக் கடமையாற்றியபின், கரம்பனில் புராணபடனத் தொண்டில் ஈடுபட்டார்கள். மேலும் கரம்பன் சண்முகநாத வித்தியாசா லையிலும் வேதனமின்றிச் சிறிதுகாலம் படிப் பித்தார். இப்பெரியாருடைய முயற்சியினால் கரம்பன் கிழக்கில் 'சிவகுருநாத வித்தியாசாலை' எனும் சைவத்தமிழ்ப் பாடசாலை 1926ம் ஆண்டில் உருவாகி இப்பொழுது பல மாண வர்களைக் கொண்ட பாடசாலையாகத் திகழ் கின்றது. இவருடைய மூத்தமகன் சிவபாத சுந்தரம் அவர்களும் இரண்டாவது மகன் பண்டிதர் தியாகராசா அவர்களும் சைவ சமய விருத்திக்காகத் தொண்டாற்றி வரு வது குறிப்பிடத்தக்கது. திரு. சோ. சிவபாத சுந்தரம் அவர்கள் 'மாணிக்கவாசகர் அடிச் சுவட்டில்,' 'சேக்கிழார் அடிச்சுவட்டில்' ஆதி யாம் நூல்களை எழுதி உதவியுள்ளார். பண்டி தர் சோ. தியாகராசா அவர்கள் தமிழிலும் பாண்டித்யம் அடைந்து, சுந்தரமூர்த்தி சுவா மிகளின் தேவாரத்திருமுறைக்கு அரியதோர் ஆராய்ச்சியுரை எழுதியுள்ளார். மேலும் தம் முடைய தந்தையாரைப் போலவே புராண படனத் தொண்டில் ஈடுபட்டு உழைத்து வரு கிறார்கள்.

சுவாமிகள் துறவு

தம்பையாச் சுவாமியார் கரம்பனிலே சைவ சமய மறுமலர்ச்சிக்கும் தமிழ்க் கல்வி விருத்திக்கும், சைவ ஒழுக்கத்துக்கும், திரு முறைகளை முறையாக ஓதும் பழக்கத் துக்கும் புத்துயிர் அளித்துப்பேணிவந்தார்கள். சமயத் துறையில் ஈடுபட விரும்பி யாழ்ப்பாணம் கந்தர் மடத்திலுள்ள 'சிவகுருநாத குருபீடம்' எனும் வேதாந்த மடத்தில் சேர்ந்தார்கள்.

அதனை நடாத்திவந்த கனகரத்தின சுவா மியவர்களுக்குப் பக்கபலமாக இருந்து தொண்டாற்றி வந்தார்கள். கனகரத்தின சுவாமிகள் இவருக்குச் ''சுவாமி மகாதேவா'' எனும் தீட்சா நாமத்தைத் திருப்பெருந்துறை யிலே சூட்டிச் சந்நியாசத்துக்கறிகுறியான காவியுடையும் வழங்கினார்கள். சிவகுருநாத குருபீட வளர்ச்சிக்குச் சுவாமி மகாதேவா அவர்கள் பெரும்பணி புரிந்துவந்தார்கள். சுவாமி அவர்களிடம் சமயக்கல்விகற்பதற்குப் பெருந்தொகையான மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள். தவத்திரு. வடிவேற் சுவாமி கள், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் இவர்களுடைய சீடர்களாவர்.

ஓ
சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!



ஓமேகா டிரேடர்ஸ்

62 A பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.

தொலைபேசி: 34905

உ

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!

★ அழகு சாதனப் பொருட்கள்
★ அன்பளிப்புப் பொருட்கள்

★ உணவுப் பண்டங்கள்
★ சாய்ப்புச் சாமான்கள்

★ மின்சார உபகரணங்கள்
★ பாலிமா வகைகள்

★ "பாட்டா" சப்பாத்துக்கள்

மற்றும்பல ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
எமது
டிப்பாட்மென்ட்டல் ஸ்ரோஸிற்கு
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
ஒருமுறை விஜயம்செய்யுங்கள்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
யாழ்ப்பாணம்.
ஸ்தாபிதம்: 1918

தொலைபேசி: 438, 370 & 537

மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம்
விளங்க எமது அன்பான வாழ்த்துக்கள்!



M. N. SHANTHY & CO.

DEALERS IN PRINTERS REQUIESTS.

88, Maliban Street,
Colombo-11.

☎ 25683

எங்கள் நல் வாழ்த்துக்கள்!



நடராஜாஸ்

40, திருக்கோணமலை வீதி,

கண்டி.

தொலைபேசி; 08-2598



வாழ்த்துகிறோம்!



ஸ்ரீ லேகா ஜுவலர்ஸ்

55, யட்டிநுவர வீதி,

கண்டி.

ஹலோ! — 08-4226

WITH BEST COMPLIMENTS FROM

M. THANGAVEL PILLAI & Co.

GENERAL MERCHANTS & ESTATE SUPPLIERS.

35, 37, Nuwara Eliya Road,
GAMPOLA.

Phone: 463

Distributors for B. C. C. and BEREC CEYLON LTD.

அகில உலக இந்து மகாநாட்டிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்!



- பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான பாட நூல்கள்
- மருத்துவம் பொறியியல், விஞ்ஞான, கலை பிரிவுகளுக்கான பாடநூல்கள்
- சமயசம்பந்தமான புராண இதிகாச நூல்கள்
- வாழ்க்கைக்குத் தேவையான சகல நூல்களும்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை

4 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இவை:

214, 1ம் குறுக்குத் தெரு — யாழ்ப்பாணம்
ரயில்வே புத்தகசாலை — யாழ்ப்பாணம்
D. 27, பெரியகடை வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 763

With best compliments of



GEETHA TEX

No. 102 2/5, 3rd Cross Street,

COLOMBO–11.

நல் வாழ்த்து கூறுகிறேம்!



நார்ஜஹான் அன் கோ.



11, கண்டி வீதி,
கம்பளை.

தொலைபேசி இல: 543

இந்துக் கோயில்கள் நிறைந்த மாத்தளையின் வரலாறு

— மாத்தளை-அருணேசர் —

ஈழவள நாடாகிய இலங்கைத் தீவின் மத்திய பகுதியில் உள்ள வரலாற்றுப் புகழ் கொண்ட கண்டி மாநகரிலிருந்து 16 மைல் தொலைவில் மாத்தளை மாவட்டம் அமைந்துள்ளது. இம்மாவட்டத்துத் தலைநகரம் மாத்தளை மாநகரமாகும். இது சுமார் 6 மைலுக்கு மேற்பட்ட நீட்டுப்போக்குடையது.

இதன் கிழக்குப் பகுதியில் இறத்தோட்டையும், லக்கலை மலைத் தொடரும்; மேற்கில் அழகுமலை, அஸ்கிரி என்ற மலைத் தொடரும்; தெற்கில் பலக்கடுவை மலைக் கணவாயும்; வடக்கில் அலுவிகாரை என்ற பௌத்த தலமும் இதற்கு எல்லைகளாய் அமைந்துள்ளன.

பண்டைக் காலத்தில் மாத்தளை ஒரு சிற்றூராயிருந்து பிற்காலத்தில்தான் பெரும் நகரமாக வளர்ச்சியடைந்தது. போக்குவரத்துச் சாலைகளோ, வண்டிப் பாதைகளோ, இல்லாதிருந்த அக்காலத்தில், இலங்கையின் மலை நாட்டுக் கோப்பித் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு வேலையாட்களாக தென்னிந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களால் முதல் முதல் கொண்டு வரப்பட்ட தமிழ்த் தொழிலாளர்கள் மாத்தளையினூடாகத்தான் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் இந்தியாவிலிருந்து படகின் மூலமாக இக்கரைக்குக் கொண்டுவரப்பட்டு, அனுராதபுரத்துப் பெருங்காடுகளினூடாய் மாத்தளைக்கு அழைத்துவரப்பட்டனர். வரும் வழியில் ஆங்காங்கு காட்டு யானைக் கூட்டங்கள் இருந்தனவாதலால் அவற்றை நெருங்க விடாமல் இரவு நேரங்களில் தீப்பந்தங்களைப் பிடித்துக்கொண்டு வருவது வழக்கம். இப்படியாக இவர்கள் பயங்கர யானைக்காட்டினூடாகப் பல நாட்கள் நடந்துவரவேண்டியதாயிருந்தது.

இவர்கள் காடுகளில் சிற்சில இடங்களில் தங்கிச் சமைத்துச் சாப்பிடுவதற்கென இலைப் பாற்றி மண்டபங்கள் வழி நெடுகிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ்வித மண்டபத்தின் சிதைந்த சிமிந்தி அடித்தளப்பகுதி அலுவிகாரை அரசாங்க வைத்தியசாலையின் பின்புறத்தில் இன்றும் இருந்து வருவதைக் காணலாம்.

இந்தத் தொழிலாளர்களின் கூட்டம் காடுகளைக் கடந்து வந்தபின் முதல் முதல் நுழைவாயிலாக அவர்களுக்கு முன்னுக்கு எதிர்ப்பட்ட செழிப்பான ஊர் மாத்தளையே. இங்கு வந்தவர்களை கண்டிக்கு அனுப்பி அங்கிருந்து சென்று மலைநாடுகளுக்கு அனுப்புவது வழக்கம். மலைநாட்டுக்குப் போக விரும்பாத சிலர் மாத்தளையிலேயே தங்கிவிட்டனர். இங்கு அவர்கள் தோட்டப் பகுதிகளிலும் நாட்டுப் பகுதிகளிலும் தங்கினர்கள். இவர்களில் பலர் பிற்காலத்தில் ஆங்காங்கு சொந்த நிலம் வாங்கி வீடுகட்டிக் குடியமர்ந்தார்கள்.

பிற்காலத்தில் முஸ்லிம்களும் செட்டியார்களும் வந்து வர்த்தகம் செய்யலாயினர். இவ்விதம் இந்தியர்கள் பெருந்தொகையாகக் குடியேறியிருந்ததால் மாத்தளை ஒரு குட்டி இந்தியாவாகத் திகழ்ந்தது.

மாத்தளை நகரின் ஊடாகத்தான் திருக்கோணமலை, அநுராதபுரம், பொலன்னறுவை, சிகிரி, குருணைக்கல் முதலிய இடங்களுக்குப் போவார்கள்.

மாத்தளை வட்டாரச் சுற்றுப் புறங்கள் மிகச் செழிப்பு பொருந்தியவை. இங்கு தேயிலை, இறப்பர், தென்னை, கொக்கோ, கோப்பி, கிராம்பு, ஏலம், மிளகு, இலவம் பஞ்சு, பாக்கு சாதிக்காய் ஆகிய பல விளைபொருட்கள் பயிராகின்றன. நெல், மற்றும் மரக்கறி வகைகளும் பயிராகின்றன.

இராவணன் சம்பந்தப்பட்ட லக்கலை

மாத்தளை ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற பிரதேசமாகும். இங்கு இறத்தோட்டையை ஒட்டி லக்கலை என்ற மிக உயரமான மலை இருக்கிறது. இது 6248 அடி உயரமுடையது. இம்மலை உச்சியின் மீது தட்டையான பாறை உளது. இதில் இராவணன் தனது புட்பக விமானத்தில் வந்திறங்கி அங்கிருந்து திருக்கோணமலைக்கு நாள்தோறும் சென்று சிவபூசை செய்துவிட்டுத் திரும்பியதாகக் கூறப்படுகிறது. இதற்கேற்றபடி இராவணனைக் குறிக்கும் சின்னங்களும் பெயர்களும் இங்கு இருப்பதைக் குறிப்பிடுகிறார்கள்.

இம் மலையடிவாரத்திலுள்ள பள்ளத்தாக்கு வழியாகத்தான் முதல் முதல் அநுராதபுரத்துக்கு காட்டுப் பாதையில் தமிழ்த் தொழிலாளர்கள் மாத்தளைக்கு வந்தார்கள்.

இந்துக் கோயில்கள்

பழங் காலத்திலிருந்தே மாத்தளையில் தமிழ் மக்கள் வசித்துவந்தனராதலால் இங்கு பல கோயில்கள் எழுந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை – ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், ஸ்ரீ முத்து விநாயகர் கோயில், சுணங்காமம் ஸ்ரீவிநாயகர்கோயில் ஆகியன.

மற்றும் சுற்றுவட்டாரங்களில் இருப்பவற்றுள் முக்கியமானவை-பிரிதவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், வாரியப்பொலை மாரியம்மன் கோயில், சுதுகங்கை ஏழுமுகக் காளியம்மன் கோயில் முதலியன குறிப்பிடத் தக்கவை. மற்றும் தோட்டப் பகுதிகளிலும் பல கோயில்கள் இருக்கின்றன.

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

மாத்தளையில் உள்ள கோயில் எல்லாவற்றிலும் மிக முக்கியமானதும், சிறப்பானதும், பெரியதுமான கோயில் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் எனப்படும் திருத்தலமாகும்.

இத் திருக்கோயில் சிங்கள மன்னர்கள் காலத்திலேயே இங்கு தாபிக்கப்பட்டு இந்துக்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றதெனக் கூறப்படுகிறது. ஆனால் அதற்குரிய சான்றுகள் கிடைப்பனவாயில்லை.

ஆயினும் இக்கோயிலை முதல்முதல் நிறுவியவர் கருப்பண்ணன் என்ற ஒரு பக்திமான் என்பதுஅறியப்பட்டுள்ளது. அவருக்குப்பின்பு அவருக்குச் சீடராயிருந்த சுப்பாப்பிள்ளை என்பவர் கோயிலை தொடர்ந்து நடத்திவந்தார். குடிசை நிலையில் இருந்த இக்கோயிலை கட்டிடம் அமைத்துத் திருத்தினார் இவர். அத்துடன் கோயிலைச் சுற்றியுள்ள நிலத்தையும் வாங்கி 1852ம் ஆண்டில் இதற்கு மானியம் செய்து வைத்தார். இந்த விபரங்கள் அக்காலத்திய பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது.

மாரியம்மனுக்குத் தலைமையான இடம் தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள சமயபுரம் என்னும் ஊராகும்.

அங்கு அம்மனுக்கு ஆண்டு தோறும் பெரும்பூசை போட்டுத் தேரிழுத்துத் திருவிழா நடத்தி வருகிறார்கள். அவ்வம்மனின் மகிமை தமிழ்நாடெங்கும் பிரசித்தமானது.

இந்த சமயபுர மாரியம்மனை மனதில் வைத்தே மாத்தளையில் அக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறிய தமிழர்கள் முத்துமாரியம்மன் என்னும் பெயரால் சிறு கோயில்வைத்து வணங்கிவரலானார்கள்.

இவ்வம்மன் மூர்த்தி சிறிது, கீர்த்திபெரிது என்பதற்கிணங்க மிக மகிமை பொருந்தியதாக விளங்கியது. பக்தர்கள் தங்கள் குறைபாடுகளைத் தீர்த்துவைக்கும்படி இவ்வம்மனை வணங்கி நேர்ந்து கொண்டால் அவர்களுக்குத் தக்க நிவர்த்திகள் கிடைத்தன. நோயினால் வருந்துபவர்கள் அம்மனை பக்தியுடன் தொழுது வேண்டிக் கொண்டால் நோய் தீர்ந்துவிடும்.

ஏதாவது பொருளைத் திருட்டுக்கொடுத்தவர்கள் அம்மனிடம் போய் முறையிட்டுக் காணிக்கை கட்டி நேர்ந்து கொண்டால் போதும், திருடன் பிடிபடுவான்; அல்லது அவன் விபத்துக்குள்ளாகித் துன்பப்படுவான்.

இவ்வாறு பல நன்மைகளை அம்மன் அருளி வந்ததால் அவளின் மகிமை நாடெங்கும் பரவத் தொடங்கியது. அதனால் இலங்கையின் நாலா திசைகளிலிருந்தும் பக்தர்கள் வரத்தொடங்கினர்கள்.

சுப்பாப் பிள்ளையின் காலத்துக்குப்பின் நொத்தாரிஸ் முருகேசு என்ற பக்திமான் இக்கோயிலின் நிர்வாகத்தைக் கையேற்றார். இவர் பல ஆண்டுகள்வரை கோயிலைச் சிறப்புடன் நடத்திவந்தார். இவருக்கு உதவியாக அப்போதிருந்த தமிழ்ப் பொதுமக்களும் கோயில் நிர்வாகத்தில் ஒத்துழைத்துவந்தனர்.

அதன் பின் இக்கோயில் பல பல நிர்வாகங்களின் கீழ் இருந்தது. பிறகு நிர்வாகத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டு ஒரு பொதுச் சபையின் பொறுப்பில் விடப்பட்டது. இச் சபையினர் பொறுப்பேற்றபின்பு கோயிலுக்கு பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. கட்டிடம் புதிப்பிக்கப்பட்டு விசாலிக்கப்பட்டது. மூல கோபுரமும் அமைக்கப்பட்டு 1958 இல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

சைவம் வளர்த்த சுன்னாகம்

— ச. அம்பிகைபாகன் —

சுன்னாகம் என்னும் கிராமத்தின் பேரைக் கேள்விப்பட்டவுடன் இக்காலத்தில் மக்கள் மனத்தில் நினைவு வருவன அதிகுள்ள சந்தையும், புகையிரத நிலையமும், மின்சார நிலையமும் ஆவனவே. ஆனல் இக்கிராமம் புராதனப் பெருமை வாய்ந்தது என்பதையும், சைவத்தையும் தமிழையும் சிறப்புடன் வளர்த்து வந்ததென்பதையும் பலர் அறியார். 1920ம் ஆண்டளவில் போல் பீரிஸ் என்னும் பிரசித்தி பெற்ற சரித்திர ஆசிரியர் யாழ்ப்பாணத்தின் உயர்கோட்டு நீதிபதியாக இருந்தபொழுது கந்தரோடையிலும் அதற்கருகிலுள்ள இடங்களிலும் அகழ்வு ஆராய்ச்சி நடத்தினர்; அப்பொழுது ஒரு புத்தர் சிலையைக் கண்டெடுத்தார்; அப்புத்தர்சிலை சுன்னாகம் தபாற் கந்தோருக்கு அருகிற் கண்டெடுக்கப்பட்டது; சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலுக்கு முன்பாக புகையிரதப் பாதைக்கருகில் ஒரு பிட்டி காணப்படுகிறது. அதில் அகழ்வு ஆராய்ச்சி செய்தால் பல புராதனப் பொருட்கள் காணப்படலாம்;

சைவத்தை வளர்ப்பதற்கு கோயில்களே முக்கிய சாதனங்களாக இருந்து வந்துள்ளன. சுன்னாகத்திற் பல கோயில்களுள்ளன. இவற்றிற் சில மிகவும் புகழ் பெற்றவை. காங்கேயன்துறை வீதிக்கு மேற்குப்பக்கம் இருக்கும் பிள்ளையார் கோயிலும் ஐயனர் கோயிலும் பிரசித்தி பெற்றவை. இக்கோயில்கள் பற்றி முத்துக் குமார கவிராயர் ஒரு தனிப்பாடல் இயற்றியுள்ளார்; அது பின்வருமாறு:

புன்னாக நீழலும் பொய்கை நடுவிற் பொருந்தியதும்
என்னாக ரோமஞ் சிலிர்ப்பெய்த ஐங்கரன் எய்தியதும்
முன்னாக நாடி அரி அரன் ஈன்ற முதல்வன் புரம்
சுன்னாகம் ஆம்இத்தினமேது சொல்லித் துதிப்பதுவே.

கவிராயர் பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் புன்னை மரங்கள் நின்றதாக கூறுகிறார்; ஆனல் இப் பொழுது அங்கே புன்னை மரங்களைக் காணவில்லை; ஐயனர் கோயிலுக்குப் பிற்பக்கத்தில் மருதமரமும் தாழைகளும் காணப்படுகின்றன. இக்கோயில் இருக்கும் இடம் வயல் சூழ்ந்த மருதநிலமாக இருந்தும் தாழைகள் காணப்படுவதைத் திணைமயக்கமாகக் கொள்ளலாம்;

மேலே குறிப்பிட்ட பிள்ளையார் கோயில் இப் பொழுது சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் என்று அழைக்கப்படுகின்றது; இக்கோயிலில் பூசை செய்யும் அந்தணர்கள் காரைநகர் ஐயனர் கோயிலுக்குப் பூசை செய்வதற்காக திருவுத்தரகோச மங்கைச் சிவாலயத்திற் பரம்பரையாகப் பூசைசெய்துவந்த ஆதி சைவ சிவாச்சார்ய வம்சத்தவராவர். இவர்கள் பற்றிய வரலாற்றை இளமுருகனர் இயற்றிய ஈழத்துச் சிதம்பரபுராணம் அந்தணர் பூசைபுரி சருக்கத்துட் காணலாம்;

இக்கோயிற் புராணபடனம் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. புராண படனத்தில் மிகப்புகழ் படைத்திருந்த நாவலரின் மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையும் இங்குப் புராணபடனத்திற் பங்குபற்றியுள்ளார்; அவரைத் தொடர்ந்து சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரும் இக்கைங்கரியத்தில் ஈடுபட்டனர். சமீப காலத்தில் குமாரகவாமிப் புலவரின் மகன் கு. அம்பலவாணபிள்ளை, ஊரெழு முருகேசையர், பண்டிதர் கா. நமசிவாயம் ஆசிரியர் முதலியோரின் நன்முயற்சியால் விநாயகபுராணம், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆதியன ஒழுங்காக படனஞ் செய்யப்பெற்று வந்தன.

நெடுங்காலமாக இக்கோயிலின் திருவிழா பக்கத்திலுள்ள ஐயனர் கோயிலோடு சேர்ந்து நடைபெற்று வந்தது. காலஞ்சென்ற சபாரத்தின ஐயரினதும் அவரின் மகன் சோமாஸ்கந்த குருக்களினதும் பெருமுயற்சியால் இப்பொழுது சித்திரை மாதத்திற் கொடியேறித் திருவிழா நடைபெற்று வருகிறது; சுன்னாகம் செல்லாச்சியம்மையாரின் ரதபூசையும் இங்கு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஐயனர் கோயில்

சுன்னாகம் ஐயனர் கோயில் இலங்கையில் புகழ் பெற்ற கோயில்களில் ஒன்றாகும். இங்கு சில காலத்துக்கு முன் பங்குனி மாதத்தில் வெகு விமரிசையாக நடந்த திருவிழாவும் அதனை அடுத்து வந்த வேள்வியும் பிரசித்தி பெற்றவை; இக்கோயில் வெளிவீதி வயல்களாக இருப்பதால் எவ்வளவு சனக்கூட்டத்தையும்கொள்ளும். தூரத்தில் இருந்தும் காற்றில் மிதந்து வரும் நாதசுர ஓசையைக் கேட்டும் வானவேடிக்கைகளைப் பார்த்தும் இன்புறலாம்;

இக்கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும் தனித்தன்மை வாய்ந்தவை; இக்கோயிலில் ஆதியிற் பிரதிட்டை செய்யப்பட்ட விக்கிரகம் கோயிலுக்கு அருகிலுள்ள வயலை உழுதபொழுது கண்டெடுக்கப்பட்டது; இக்கோயில் ஆதியில் ஒரு கொட்டிலாக

இருந்ததாகவும், அக்காலத்தில் பூசாரிகள் விளக்கு வைத்துப் பூசித்து வந்ததாகவும் அறியக்கிடக்கிறது. இக்கோயில் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தவர் பூசாரி கதிரவேலு என்பவர். இவர் ஆஜானுபாகுவான தோற்றத்தை உடையவர். அவர்காலத்தில் தான் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வெள்ளைக்கற்றிருப்பணியாக நிறைவேறியது. இவர் காலத்திலேயே கொடியேறித் திருவிழா நடக்க ஆரம்பித்தது.

இக்கோயிலைச் சார்ந்து 'படிமாத்தான்' என்பவர் ஒருவர் இருந்து வந்தார். (படிமாத்தான் என்பது படிமத்தன் என்பதன் திரிவு) இவர்மீது சுவாமி வந்த நிலையில் அன்பர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு ஆசீர்வதித்து வழிவகைகள் கூறுவர்.

நெடுங்காலமாக இருந்து வந்த பலியிடும் வழக்கம் சில காலத்திற்கு முன்பு நிறுத்தப்பட்டது. இவ்வாலயத்தில் சனிக்கிழமை விசேட தினமாகும். இத்தினத்தில் யாழ்ப்பாணத்தின் பல பாகத்திலுமிருந்து அடியார்கள் வந்து தங்கள் நேர்த்திக்கடன்களை முடித்துக் கொள்வர். அந்நாட்களில் பஜனை. விசேட அபிடேக ஆராதனை நடைபெற்று அன்னதானமும் நடைபெறுகிறது. இக்கைங்கரியங்களிற் பல அடியார்கள் பங்குபற்றுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இக்கோயிலுக்கு முத்துக்குமார கவிராயர் இயற்றிய ஊஞ்சல் ஒன்று உண்டு.

மயிலணி

சுன்னாகத்தின் ஒரு பகுதியான மயிலணி அங்குள்ள கோயில்கள், அவற்றிற் பணியாற்றும் அந்தணர்கள்; அங்கு சைவமக்களால் ஸ்தாபிக்கப்பட்ட சைவவித்தியாசாலை முதலியவற்றின் மூலம் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்துள்ளது. மயிலணியில் ஆதியில் ஒரு விஷ்ணு கோயில் இருந்து வந்தது. பின்னர் அதற்கருகில் ஒரு முருகமூர்த்தி கோயில் கட்டப்பட்டது. இக்கோயில் வீதியில் சைவக் குருக்களுக்கென ஒரு மடம் கட்டப்பட்டது.

முருகமூர்த்தி கோயில் தாபிக்கப்பெற்ற சிறிது காலத்துக்குப் பின் அதற்கண்மையில் ஒரு சிவன் கோயில் கட்டப்பட்டது. இச்சிவன்கோயில் தாபிக்கப்பெற்ற இடத்தில் சிவசங்கர பண்டிதர் முன்பு வாழ்ந்து சிவபூசை செய்தனர். இக்கோயில் மேற்குப் பார்த்த சந்நிதியை உடையது. சிவலிங்கமும் நடேசரும் மூலமூர்த்திகளாக இவ்விடத்திற் காணப்படுகின்றன. செல்லாச்சியம்மையார் வழிபாடு செய்த சிவலிங்கம் இக்கோயிலில் உள்ளது என்பர்.

மேலே குறிப்பிடப்பட்ட கோயில்களில் கடமையாற்றிய அந்தணர்கள் தங்கள் ஆசாரத்தினாலும், ஆத்மார்த்தமாகச்செய்யும்சிவபூசைக்கிரமத்தினாலும் மக்களால் யாழ்ப்பாணத்தில் மிகவும் மதிக்கப்பட்டனர். இவர்களிற் சதாசிவக்குருக்களை விசேடமாகக் குறிப்பிடவேண்டும். கொச்சிக்கடையில் இராமனாதன் அவர்களாற் கட்டப்பட்ட சிவன் கோயிலுக்கு இப்பொழுது பிரதம குருக்களாய் இருக்கும் சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்களும் மயிலணியைச் சேர்ந்தவரே.

முருகமூர்த்தி கோயிலுக்கு அருகில் உள்ள மடத்தில் வசித்து வந்த சைவக்குருமார் சைவசமய அறிவிலும் கிரியைகளைச் செய்வதிலும் மிகவும் ஆற்றல் படைத்திருந்தனர். இம்மடத்தில் வாழ்ந்து வந்த நமசிவாய தேசிகரிடமே குமாரசுவாமிப்புலவர் சமய சாத்திரங்களைக் கற்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட இரு கோயில்களுக்கும் மத்தியில் தாபிக்கப்பட்ட சைவவித்தியாசாலை சமயக் கல்வியையும் ஒழுக்கத்தையும் நன்கு போதித்து வந்தது. இச்சைவச் சூழலில் கல்விகற்ற மாணவர்கள் சிறந்த சைவாபிமானிகளாகப் பிற்காலத்தில் விளங்கினர். இப்பொழுது சைவப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுவரும் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா, ஏழாலை பண்டிதர் திரு. மு. கந்தையா, இவ்வித்தியாசாலைமுன்னாளதிபர் திரு. மா. குமாரசுவாமி முதலியோர் இவ்வித்தியாசாலையின் பழைய மாணவராவர். எனது சமயப்பற்றிற்கும் வித்திட்டது இவ்வித்தியாசாலையே.

கதிரமலைச் சிவன்கோயிலும் பிராசீன பாடசாலையும்

கதிரமலைச் சிவன் கோயில் சுன்னாகம் புகையிரத நிலையத்திற்குச் செல்லும் வீதியில் தபால் நிலையத்துக்கு கருகில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வளங்கும் நிலையமும் அருகே உண்டு. இப்படி அரசாங்க அலுவலகங்கள் மத்தியிலும் சுன்னாகச் சந்தைக் கருகிலும் இருப்பதால் அரசாங்க உத்தியோகத்தர்கள் வர்த்தகர் முதலியோர்களின் ஆதரவு இக்கோயிலுக்குண்டு. இங்கு சுவாமிக்கும் அம்பாளுக்கும் வெவ்வேறு காலங்களிற் கொடியேறி திருவிழா நடைபெறும். சமயப் பிரசங்கங்களும் கூட்டு வழிபாடு புராணபடனம் முதலியன இங்கு ஒழுங்காக நடைபெறும். இப்பொழுது சிவ ஸ்ரீ. நா. சோமாஸ்கந்தக் குருக்கள் மேற்பார்வையில் இக்கோயில் நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது.

இக்கோயிலுக்குக் கிழக்கெல்லையில் வித்தியாதரிசி திரு. சதாசிவ ஐயர் முயற்சியால் ஒரு பிராசீன பாடசாலை தாபிக்கப்பட்டுப் பத்து வருடங்கட்கு மேலாக வளர்ச்சியடைந்து கல்விப்பணி ஆற்றி உள்ளது. இங்கு தமிழும் சமஸ்கிருதமும் உயர் நிலையிற்

போதிக்கப்பட்டன. தமிழை வித்துவசிரோமணி சி. கணேசையரும் சமஸ்கிருதத்தை பாலக்காடு சிதம்பர சாஸ்திரிகளும் போதித்து வந்தனர். இதிற்பல பிராமணப்பிள்ளைகளும் சைவப்பிள்ளைகளும் குருகுல முறையிற் கல்வி கற்று வந்தனர். இவர்களுட் சிலர் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் நடாத்திய பால பண்டித பண்டித பரீட்சையிற் சித்தியெய்தனர்.

இக்கோயிலுக்குத் தெற்கே பழம் பெருமை வாய்ந்த சிவபூதராயர் கோயில் ஒன்று உண்டு. இக் கோயிலில் யோக சுவாமிகளின் பேரன் சில காலம் பூசை செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. முருகேச பண்டிதர் இயற்றிய ஊஞ்சல் இக்கோயிலுக்குண்டு.

சைவம் வளர்த்த புலவர்கள்

சுன்னாகத்திற் காலத்துக்காலம் சைவ அபிமான முள்ள புலவர்கள் தோன்றி சமயத்தை வளர்த்துள் ளனர். இவர்களுக்குட் காலத்தால் முந்தியவர் வரத பண்டிதர். (1681–1716) இவர் ஒல்லாந்தர் காலத் தில் வாழ்ந்தவர். ஒல்லாந்தர் சமய சுவாதீனத்தை ஓரளவில் வழங்கியபடியால் கோயில்கள் வளர்ச்சி யடைந்தன. இக்கோயில்களிற் படிக்கப்படுவதற்கு ஏற்றதாகவரதபண்டிதர் சிவராத்திரி புராணம், ஏகா தசிபுராணம், பிள்ளையார் கதை முதலியவற்றை இய ற்றினார்.

இவற்றுள் பிள்ளையார் கதையே மிகவும் பிரசித் திபெற்றது. திருவெம்பாப் பாடலுக்கடுத்தபடியாக யாழ்ப்பாணக் கோயில்களில் அதிகம் படிக்கப்படும் பாடல் இதுவேயாகும். இது எப்படிப் பாடப்பட்ட தென்பதை இதற்கு எழுதப்பட்ட சிறப்புப் பாயிரத்தி லிருந்து நன்கு அறியலாம்.

சிறப்புப்பாயிரம்

செந்தமிழ் முனிவன் செப்பியகாதையும்
கந்த புராணக் கதையிலுள் ளதுவும்
இலிங்க புராணத் திருந்தநற் கதையும்
உபதேச காண்டத் துரைத்தநற் கதையுந்
தேர்ந்தெடுத் தொன்றுபத் திரட்டியையகாற்கு
வாய்ந்த நல்விரத மான்மிய மூரைத்தான்
கன்னியங் கழுநிற் கயலினங் குதிக்குந்
துன்னிய வளவயற் சுன்னகத்தோன்
அரங்க நாத ளளித்தருள் புதல்வன்
திரம்பெறு முருகனைத் தினந்தொறும்
வரம்பெற வணங்கும் வரதபண்டிதனே.

மேற்படி கதை பிள்ளையார் விரத காலத்தில் கார்த்திகை மாதம் அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாதத்துப் பூர்வபக்கச் சட்டிவரையுமுள்ள காலத்தில், மிகுதியாகப் பிள்ளையார் கோயில்களிற் படிக்கப்படும். இவ்விரதம் வரதபண்டிதர் வாழ்ந்த தோப்பு வளவு என்னும் இடத்திற்கருகாமையில் உள்ள சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலில் விசேட மாக நெடுங்காலமாக சிறப்பாக அநுட்டிக்கப்பட்டு வருகிறது. பெருந்தொகையான பெண்களும் ஆண்க ளும் காப்புக்கட்டிவிரதம் அநுட்டிப்பர். பெருங்கதை பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

முத்துக்குமாரக் கவிராயர் (1780–1851) சுன்ன கம் குமாரசுவாமிப்புலவரின் தந்தையாரின் சகோதர ராவர். இவரியற்றிய ஊஞ்சல் முதலியவற்றைப்பற்றி முன்பு குறிப்பிட்டுள்ளோம். இவர் காலத்தில் கிறிஸ்த வர்களின் மதப்பிரசாரம் மிகவும் கடுமையாக இருந்த தது. சைவர்களை அஞ்ஞானிகளென்றும் அவர்கள் வணங்குந் தெய்வங்களைப் பசாசுகள் என்றுங் கூறிவந் தனர். இவர்களை எதிர்த்து முதன் முதலில் நூல்கள் வெளியிட்டவர் முத்துக்குமாரக் கவிராயரே. இத் துறையில் இவர்கள் ஆறுமுகநாவலருக்கு வழிகாட்டி யாக இருந்தார். கவிராயர் எழுதிய ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம் என்னும் நூல்களை இருமுறை நாவ லர் மறுபிரசுரஞ் செய்வித்தார். இந்நூல்களில் இருந்து கவிராயர் பைபிளை நன்கு கற்றிருந்தார் என் பது தெரிகிறது. கிறிஸ்தவர்களை இவர் கண்டித்த முறையை ஞானக்கும்மியிற் காணப்படும் பின்வரும் செய்யுள் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மிக்கபல பொய்மலிந்த விரோதமோங்கும்
விவிலியபுத் தகமதனை மெய்யென்றெண்ணி
தக்கபல வாக்கியமுஞ் சேர்த்துப் பின்னுந்
தமக்கிசைய உரைகளுஞ்செய் தெழுதிக்கொண்டு
புக்கபல விடத்துமதைப் பிதற்றித் தாமே
புகிப்பதற்குப் பொருள்கவரும் இடம்பராங்கிழ்
மக்களெனுங் கிறீஸ்தவர்தம் இயல்பின் யானும்
மதித்தறிந்த வகைசிறிது வகுக்குவேனே.

சிவசங்கரபண்டிதர் (1821-1871) பற்றி முன்பு குறிப்பிட்டுள்ளோம். இவர் சுன்னகம் சிவகுருநாதன் மகனைத் தோன்றி அங்கு வளர்ந்து வந்தார். நீர் வெளியில் விவாகஞ் செய்த பின்பு அவ்விடத்தில் நிரந்தரமாக வசித்து வந்தார். இதனாலேயே இவ ருக்கு நீர்வேலிச் சங்கரபண்டிதர் என்ற பேர் ஏற்பட் டது. இவர் முத்துக்குமார கவிராயரி ஆறுமுகநாவ லர் போன்று கிறீஸ்தமத கண்டனத்தில் ஈடுபட்டவர். இவர் ஏன் தாம் கிறீஸ்து மத கண்டனத்தில் ஈடுபட் டார் என்பதை தாம் இயற்றிய கிறீஸ்துமத கண்ட னம் என்னும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்:

"அசற் சமயிகளாகிய கிறிஸ்தவர்கள் இக்காலத் திலே நமது சைவசமயிகளைத் தம்மதத்திற் புகுவிக்க முயன்று கோட்டங்கள் தோறும் பள்ளிக்கூடங் களைத் தாபித்துத் தம்முடைய துன்மார்க்க நூலாகிய பரி

விய நூலையே சிறுவர்களுக்குப் பெரும்பாலும் கற்பித்துச் சிவதீக்ஷை, சிவசாத்திரதீக்ஷை, திருநீறணியாமை, எச்சிற்கலப்பு முதலிய துராசாரங்களையே அவர்களுக்குப் பயிற்றலானும், அவர்களும் பிறர்க்கும் அடிக்கடி தூற்போதனை செய்து திரிதலானும், அநியாயமாகிய தூஷணைகளை வெளிப்படுத்தலானும் பிறவாற்றானும் பெருங்கேடு செய்வார் ஆயினர்கள்.

ஆதலால் நமது சைவசமயிகள் அவர்களுடைய துன்மார்க்கத்திற் பிரவேசியாது விலகி உய்யும் பொருட்டு அவர்களுடைய கொள்கையைக் கண்டிக்கிற பிரபல நியாயங்களை ஒரு நூலாகச் செய்துகாட்டுகின்றேம்.''

சங்கரபண்டிதர் கண்டன நூல்களைத் தவிர சைவப்பிரகாசனம், அநுட்டானவிதி, சத்தசங்கிரகம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். இவருடைய பிரசங்கச் சிறப்பை முருகேச பண்டிதர் பின்வருஞ் செய்யுளில் நன்கு காட்டியுள்ளார்:

''சைவத்தை நாட்டிப் பரமதம் ஓட்டத் தயங்குமொரு
தெய்வத்தைப் போல்வரு சங்கரபண்டித தேசிகர் தாம்
மெய்வைத்த கண்டிகை வெண்ணீற்றினெடு
விளங்கிடச்செய்
சைவப்பிரசங்க தெள்ளமு தென்றினிச் சார்குவமே''

முருகேச பண்டிதர் (1829-1900)

குமாரசுவாமிப் புலவரின் ஆசிரியர் இவர். தமது இளமைக்காலத்தில் சிவசங்கரபண்டிதரிடம் சித்தாந்த தருக்க சாத்திரங்களை முறையாகக் கற்றார்; பின்னர் சிவசம்புப்புலவரை அடைந்துபஞ்சலக்கணங்களையும், பாரதம், இராமாயணம் முதலிய நூல்களைச் செவ்வனே கற்றார். இவருடைய இலக்கணப் புலமையை நன்கறிந்த மக்கள் 'இலக்கணக்கொட்டர்' என இவரை அழைத்தனர்; இவர் இயற்றிய சில நூல்கள் பின்வருமாறு:-

சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், பூதராயர் ஊஞ்சல், மயிலணி விசாலாட்சியம்மைப் பதிகம், குடந்தை வெண்பா, மயிலணிச்சிலேடை வெண்பா, பதார்த்ததீபிகை, நீதிநூறு, மயிலணி மகாவிஷ்ணு ஊஞ்சல், மேற்படி நூல்களில் புராண வரலாறுகள் சாத்திர உண்மைகள் காணப்படுகின்றன.

இவர் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் பல இடங்களில் ஆசிரியராக இருந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்; யாழ்ப்பாணத்தில் அவர் படிப்பித்த இடங்களைப் பின்வருஞ் செய்யுளிலிருந்து அறியலாம்:

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னு சிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம்
துன்னியகல் வளமுதலாம் தொன்னகர்வாழ் மாண
-வர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

சுன்னாகம் அ குமாரசுவாமிப்புலவர் (1855-1922)

தமிழை முருகேச பண்டிதர் இடத்தும், சமஸ்கிருதத்தை நாகநாத பண்டிதரிடத்தும் சமய சாஸ்திரங்களை நமசிவாயதேசிகரிடத்தும் கற்றார்; இதனை குருவணக்கமாக இவரியற்றிய பின்வருஞ் செய்யுளிலிருந்து அறியலாம்:

தூய மயிலணிச் சுப்ர மணியனைத் தூநமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர்நாக நாத சபாமணியைக்
காய மொழிமனஞ் சேர்த்துதும் நங்கண் மணிகளென்றே

இவர் ஆறுமுக நாவலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்; இவருடைய சமய மொழித் தொண்டுகளை நாவலர் பாராட்டி உள்ளார். ஆரம்பத்தில் நாவலரின் முன்மாதிரியைப் பின்பற்றி கிறீஸ்த மத கண்டனத்தில் ஈடுபட்டிருந்தார். பின்னர்ச் சூழ்நிலைமாறின படியால் அதனைக் குறைத்துக் கொண்டு புராணபடனத்திலும் சைவப் பிரசங்கஞ் செய்வதிலும் தமிழ் நூல்களை ஆராய்வதிலும் ஈடுபட்டிருந்தார்.

புராணங்களுக்குரை சொல்வோர் 'சாதாரண மக்கள் கூடியிருக்குஞ் சபைகளில் கடின பதங்களையும் அநவசிய மேற்கோள்களையுங் காட்டி வந்தனர். இவர்கள் போக்கைக் கண்டித்து பின்வருங் கருத்துக்களைப் புலவர் வெளியிட்டார்.

''நீங்கள் எத்தனையோ ஆண் சனங்களும் பெண் சனங்களும் புராணங்கேட்டற்கண் நம்பிக்கையோடும் வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற்சொற்களை எல்லாம் திரிசொற்களாக மாற்றிச் சொல்லுகிறீர்கள், 'பூ' என்பதற்கு 'வீ' என்கிறீர்கள். மறைந்து போனார் என்பதற்கு அந்தாத்தானமாயினர் என்கிறீர்கள். சித்தியாரிற் சில செய்யுட்களையும் அவற்றின் கடின வாக்கிய மமைந்த வியாக்கியானங்களையும் எடுத்துப் படிக்கிறீர்கள். சில கவிகளுக்கு வேதாந்த சித்தாந்தப் பிரசங்கஞ் செய்கிறீர்கள்.''

காரைநகரில் சமய வளர்ச்சி

— க. வைத்திகவரக்குருக்கள்-தமிழ்வளர்ச்சிக்கழகம்-காரைநகர் —

காரைதீவும் காரைநகரும்

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்து மப் பெற்றியனுய் விளங்குபவன் இறைவன். அவனே யொப்பப் பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும் தோற்றமளிப்பது காரைநகராகும்; இப்பதி, யாழ்ப்பாண பட்டினத்திற்கு வடமேற்கே பதின்மூன்று மைல்தொலைவிலிருக்கின்றது. காரைதீவு என்று அழைக்கப்பட்டுவந்த பழைமை சான்ற இப் பெருமதி (1) 1869ம் ஆண்டு துவைனந்துரையால் பாலங்கள் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைக்கப்பட்டது; அதன் பின்னரே காரைநகர் என்ற பெயரைப் பெறலாயிற்று.

காரைநகரின் பழமை

காரைநகர் வரலாற்றுப் பெருமை சான்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே துர்வாசமுனிவர் என்னும் பெரியார் பாரத நாட்டிலிருந்து வந்து காரை நகரில் ஈழத்துச் சிதம்பரத்துக்கு அண்மையில், 'துர் வாசகிரி' என்னும் இடத்தில் அமர்ந்து தவஞ்செய்து வீடுபெற்றாரென்று (2) ஈழத்துச்சிதம்பர புராணம் கூறுகின்றது. அன்றியும், துளுவ நாட்டைச் சேர்ந்த 'தினகரன்' என்னும் பேரறிஞர் பல ஆண்டுகளின் முன் காரைநகரிலுள்ள திண்ணபுரத்தே வந்திருந்து சைவத்தையும் தமிழையும் விளங்கச் செய்தாரென்றும் (3) அப்புராணம் கூறுகின்றது.

இன்னும், அகத்தியர் என்னும் பேரறிஞர் ஒருவர் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னர் கன்னெடி நாட்டி லிருந்து வந்து காரைநகரில் வாழ்ந்தாரென்றும், அவர் வடமொழி, தென்மொழிகளில் வல்லுநரென்றும், தம்பெயரால் ஒரு நூல் செய்தாரென்றும் (4) அகத்தியம் என்னும் நூலில் காணப்படுகின்றது.

காரைநகர், பல்தேயசுபோதகர், மயில்வாகனப் புலவர் முதலியோரால் விதந்தோதப்பட்ட பல வர லாறுகளையுடையதென்றும், (5) சாதகக் கதைகளில் காரைநகரைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறதென்றும், மணிமேகலையிற் பேசப்படும் மணிபல்லவம் காரை நகரே என்பதற்கு ஆதாரங்கள் உண்டென்றும், இங்கி ருந்த புத்த பீடிகையின் தரிசனத்தால் மணிமேகலை பூர்வ ஞானம் பெற்றாளென்றும் (6) 'காரைநகர் மான்மியம்' என்னும் நூல் கூறுகின்றது.

காரைநகரில், களபூமி என்றொரு குறிச்சி உண்டு; ஈழமண்டலத்துத் தமிழருக்கும் பாண்டி நாட்டாருக் குமிடையிற் பகை மூண்ட காலங்களில் இங்கேயே போர் நிகழ்ந்ததென்றும், இதனாலேயே போர் நிகழ்ந்த இடத்துக்கு அப்பெயர் வந்ததென்றும் சரித் திர ஆராய்ச்சியில் வல்லுநராகிய திரு. ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை அவர்கள் தமது (7) 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலிற் கூறியுள்ளார்கள்.

அம்பலாங்கொடை, இரத்தினபுரி முதலிய இடங் களில் வாழும் சிங்கள வைத்தியர்களிடமுள்ள மிகப் பழைமை வாய்ந்த ஏடுகளில், காரைநகர் பற்றிய குறிப்புகள் வருவதாக அறிஞர்கள் கூறுவர். அக்குறிப் புகளில், காரைச்செடிகள் மிக்கிருந்தமையின் காரை நகர் என்னும் பெயர் உண்டாயிற்று என்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், 1980ம் ஆண்டு, காரைநகரிலுள்ள கள பூமி என்னும் இடத்தில், யாழ்ப்பாணம் பல்கலைக் கழ கத்தினர் தோண்டியெடுத்த மனிதருடைய எலும்புக் கூடுகளும் வேறு பொருள்களும் மிகப்பழைய காலந் தொட்டு இங்கே மக்கள் வாழ்ந்து வருகிறார்களென் பதை நிரூபிக்கின்றன.

இன்னும் காரைநகர் தொடர்பான பழைமை வாய்ந்த சமய வரலாறுகள் பலவற்றைக் காலங் கண்ட முதியோர் சொல்ல நாம் கேட்டிருக்கின் றோம்.

எவ்வளவாயினும் காரைநகர் மிகப் பழங்காலந் தொட்டே சீரும் சிறப்பும் மிக்கிருந்ததென்பதனையும் வடமொழி தென் மொழிகளில் வல்ல அறிஞர்களும் வான சாஸ்திரம், வைத்தியம் முதலிய கலைகள் தேர்ந்த அறிஞர்களும் வாழ்ந்துள்ளார்களென்பதை யும் நன்கு ஊகித்துக்கொள்ளலாம்.

குளக்கோட்டு மன்னனும் ஐயனார் கோயிலும்

காலம் உருண்டோடிற்று. பல வருடங்களாகச் சைவசமயத்தை அனுஷ்டித்து வந்த மக்கள் மத்தியில் குளக்கோட்டு மன்னனது வருகையின் பின்னர் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படலாயிற்று.

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வந்து காரை நகரிலிருந்த குளக்கோட்டு மன்னன், வியாவில் என் னும் இடத்தில் ஓர் ஐயனார் கோயிலைக் கட்டுவித் தான். இதுவே காரைநகரில் முதன்முதற் கட்டப்

பட்ட பெரிய கோயிலாகும்; இக்கோயில் மிகப் பிரமாண்டமானது; வானளாவிய கோபுரங்களுடன் கூடியது; நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கோயிற் கோபுர உச்சியில் வைக்கும் வெளிச்சம் வியாவில் ஐயனார் கோயிலுக்கும், ஐயனார் கோயிற் கோபுர உச்சியில் வைக்கும் வெளிச்சம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலுக்கும், இக் கோபுர உச்சியில் வைக்கும் வெளிச்சம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் தெரியுமென்று முன்னோர் சொல்லியதாக வயது முதிர்ந்தோர் கூறுவர். குளக்கோட்டு மன்னன் திருவுத்தரகோச மங்கையிலிருந்து ஆதிசைவ அந்தணர்களை அழைப்பித்து அவர்களைக் கொண்டு 1661ஆம் ஆண்டில் ஐயனார் கோயிற் கும்பாபிஷேகத்தைச் செய்வித்தான் என்பதும், அவ்வந்தணர்களையே அர்ச்சகர்களாக நியமித்தான் என்பதும் வரலாறு. மேலும், மன்னன் இந்தியாவிலிருந்து வேதம் வல்ல அந்தணர்களையும், ஓதுவார்களையும், சித்தாந்த அறிஞர்களையும் அழைப்பித்தான்.

வேதநெறி தழைத்தது; சிவசைவத்துறை விளங்கியது. திருமுறைகள் எங்கும் ஒலித்தன. சைவசித்தாந்த அறிவும் மக்களிடையே பரவியது; கந்தபுராணம், பெரியபுராணம் முதலிய புராணங்கள் படிக்கப்பட்டன. எங்கும் சைவமணம் வீசிக்கொண்டிருந்தது; சைவசமயம் கொடிகட்டிப் பறந்தது என்று சொல்லலாம்; இக்காரணங்களால் மற்றைய எந்தச் சமயமும் காரைநகருக்குள் நுழைய முடியவில்லை.

ஐயனார் கோயிலைத் தொடர்ந்து மணற்காடு என்னும் இடத்தில் முத்துமாரியம்மன் கோயிலொன்று கட்டப்பட்டது. இங்கேயும் நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெற்றன. மக்கள் சமயத்தில் அதிக ஈடுபாடு கொண்டனர். கோயிலுக்குச் செல்லும் வழக்கமும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

போர்த்துக்கேயர் வருகையும் ஒல்லாந்தர் ஆட்சியும்

இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருக்குங் காலத்தில், போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றினர். அவர்கள் சைவர்களுக்குப் பல துன்பங்களைச் செய்துவந்தனர். கோயில்கள் பலவற்றை இடித்தனர். பலரைக் கிறிஸ்தவராக்கினர்; காரைநகர் மக்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. பின்னர், ஒல்லாந்தர் ஆட்சி தொடங்கிற்று; அவர்களும் சைவர்களுக்குப் பல இன்னல்களைச் செய்துவந்தார்கள். அக்காலத்தில் காரைநகர் மக்கள் பட்ட இன்னல்களை ஈழத்துச் சிதம்பர புராணம் பின்வருமாறு கூறுகின்றது:

"திருநீறு பூசுவதுங் குற்றங் குற்றஞ்
சிவபூசை காணுமற் செய்தல் குற்றம்
அருமைந்தர் தமக்கரனு ரருளி னுமம்
அமைப்பதுவும் வழங்குவது மந்தோ குற்றம்
திருக்கோயிற் பூசனைகள் செய்தல் குற்றம்
சிர்விரதங் கொள்ளுவதுந் நிராக் குற்றம்
பொருவறுசிர்ச் சைவருக்கொல் லாந்தர் செய்த
புன்மைகளே யம்மம்மா சொல்லப் போமோ"

(ஈழத்துச் சிதம்பர புராணம், ஐயனார் கோயில்காண் சருக்கம், செய்யுள் 12)

ஒல்லாந்தரும் கோயில்களை இடித்தனர். ஐயனார் கோயிலும் இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது. அவர்கள், கோயிற் கற்களைக் கொண்டு 'ஹம் மன்ஹில்' என்னும் பெயருடைய கோட்டையொன்றை அயலேயுள்ள கடலுட் கட்டினர். அவர்களுடைய இன்னல்களைத் தாங்க முடியாது சிலர் கிறிஸ்தவராயினர். ஆனால், பெரும்பான்மையான காரைநகர் மக்களது சமய அனுஷ்டானத்தையும், சமய நம்பிக்கையையும் அவர்களாற் குறைக்க முடியவில்லை. ஒல்லாந்தர் ஓர் ஐயனார் கோயிலை இடித்தது; மக்களுடைய வீடுகள் தோறும் கோயில்கள் தோன்றலாயின. அவர்கள், தத்தம் வீடுகளில் வைரவசூலம் முதலியனவற்றை வைத்து இரவிலே இரகசியமாக வழிபட்டு வந்தனர் இக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்து காரைநகரிலிருந்த சுப்பையர் என்னும் பேரறிஞர், மாணவர்களுக்கு இரகசியமாகச் சைவசமய நூல்களைக் கற்பித்துவந்தார். திருமுறைகளையும் பண்ணோடு ஓதப் பழக்கினர். இவரால் இயற்றப்பட்ட காரைக் குறவஞ்சி, நல்ல நாயகர் நான்மணி மாலை என்னும் நூல்களில் சைவசைவசித்தாந்தக் கருத்துக்கள் நிரம்ப உண்டு.

ஈழத்துச் சிதம்பரம்

1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையை ஆளத்தொடங்கினர்; அப்போது சைவத்தை வளர்ப்பதற்குக் கோயில்களே மிகச் சிறந்த கருவிகள் என்ற முடிபுக்குக் காரைநகர் மக்கள் வந்தனர்; எனவே, ஆங்காங்கு பல கோயில்கள் அமைக்கப்பட்டன; அவைகளுள் மிக முக்கியமானது ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் சிவன் கோயிலாகும். (ஆண்டி கேணி ஐயனார் கோயில் 1770 க்கு முன்னர்க் கட்டப்பட்டது.) இக்கோயில் காரைநகரிலுள்ள கோயில்களுக்கெல்லாம் ஒரு தாய்க்கோயில் போல் இருந்து வருகிறது. இக்கோயில் சைவத்தை வளர்க்கும் பணியில் மூன்னிற்கிறதென்றால் மிகையாகாது. காரைநகர் மக்கள் ஒவ்வொருவரும் இக்கோயிலைத் தத்தம் சொந்தக்கோயிலாகவே கருதி தொண்டாற்றி வருகின்றனர்.

WITH
THE BEST COMPLIMENTS
FROM

Mercantile Corporation Ltd.

★

SUPPLIERS OF:

Concentrated Latex
Manufacturers of SLEEP-EZE
Rubberrised Fibre Mattresses
and Cushions.

★

263, Sea Street,
P. O. Box 440,
COLOMBO - 11.

Telephone: 31913 - 5
Telegrams: PRODUCE

வாழ்த்துகிறேம்!



வே. ஆ. சிதம்பரப்பிள்ளை சன்ஸ்

புத்தகம் - பத்திரிகை விற்பனையாளர்.

V. A. Sithambarapillai Sons

Book Sellers, Stationers and News Agents,

43, MAIN STREET - - TRINCOMALEE.

Phone: 473

வாழ்த்துகின்றேம்!



ஆங்கில — ஆயுர்வேத மருந்துகள்
இங்கே கிடைக்கும்.

(வைத்திய கலாநிதி, வே. சிவபாலன்)

TRINCO MEDICALS

55, MAIN STREET — TRINCOMALEE.

With best compliments from



SRI LATHA TRADERS

GENERAL MERCHANTS, IMPORTERS & WHOLESALERS

124, Maliban Street

COLOMBO - 11.

T'phone: 23920

T'grams: 'DIGNITY'

உலக இந்து மகாநாடு சிறப்புற
எமது நல்வாழ்த்துக்கள்!

எம்மிடம் மலிவான விலையில்

★ மீன்பிடி உபகரணங்கள்
★ சயிக்கிள் உதிரிப்பாகங்கள்
★ கடிகாரங்கள்
★ கலர் பிலிம் ரேல்கள்
★ கசெற் வகைகள்
பெற்றுக்கொள்ளலாம்.

உத்தரவு பெற்ற வெடி மருந்து, தோட்டா விற்பனையாளர்கள்.

கணேஸ் டிறேடிங்ஸ்

190, ஏகாம்பரம் வீதி—திருக்கோணமலை.

போன்: 374

நல் வாழ்த்துக்கள்!

★ விரும்பிய டிசைன்களில்
★ தரமான முறையில்
★ குறிப்பிட்ட திகதியில்
ஆடர்கள் கொடுத்து நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
விரும்பியபடி அழகிய முறையில் மாற்றியும் அமைத்துக் கொள்ளலாம்.

அஜந்தா ஜுவலர்ஸ்

AJANTHA JEWELLERS

190/N. AHAMBARAM (N. C.) ROAD,
TRINCOMALEE.

எல்லாம் வல்ல இறைவன் அருளால்
உலக இந்து மகாநாடு இனிதே நடைபெற
எங்கள் வாழ்த்துக்கள்!



சுத்தமான யாழ்ப்பாணம் நல்லெண்ணெய்
சுத்தமான யாழ்ப்பாணம் புகையிலை, சுருட்டு
மரக்கறிவகைகள், காங்கேசன் சீமெந்து வகைகளுக்கு

செல்வக்குமரன் பழக்கடை

47, மத்திய வீதி — திருக்கோணமலை.

வாழ்த்துகிறோம்!



சிறந்த சில்லறைச் சாமான்கள்
மொத்தமாகவும் - சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
★ சிறந்த சேவை ★

கிருஷ்ணன் அன் கோ.

133, 135, மத்திய வீதி - திருக்கோணமலை.
தொலைபேசி: 493

With Best Compliments of

Lanka Vinyl Limited

(Incorp. in the Republic of Sri Lanka)

Manufacturers & Exporters of:
PVC LEATHERCLOTH, PVC SPONCE LEATHER, PVC SHEETING / FILM
AND PVC COMPOUND.

P. O Box 1846
208, See Street,
COLOMBO - 11.
Sri Lanka (Ceylon)

Telephone: 35006
Cable Add: ZEEBRAS
Telex : 21507 - THAYA CE, ATTN

ஓ

சிவமயம்

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற்று
இன்புற எமது உள்ள முருகும் வாழ்த்துக்கள்!

சிறி சத்தியா குரூப்

உரிமையாளர்:
க. செல்வரத்தினம்

★

எம்மிடம் — — —

* கட்டடப் பொருட்கள்
* பெயின்ட் வகைகள்
* மின் இணைப்புகள்

மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீ சத்யா ஸ்டோர்ஸ்

SRI SATHIYA STORES

HARDWARE MERCHANTS.

SIVANKOVILADI - TRINCOMALEE.

★

சுவையான – சுத்தமான சைவ உணவிற்கும்
அன்பான உபசரிப்புக்கும்

திருக்கோணமலையில் இன்றைய சிறந்த ஸ்தாபனம்

சிறி சத்திய பவான் சைவ ஹோட்டல்

25, கடல் முக வீதி - திருக்கோணமலை.

உலக இந்து மகாநாடு இனிது நடைபெற
எங்களது
உளம் கனிந்த நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்!



கே. எம்.
காளியப்பபிள்ளை அன் கம்பெனி லிமிடெட்

263, செட்டியார் தெரு,
த. பெ. இல. 440,
கொழும்பு - 11.

தொலைபேசி இல: *31913-5*

வேலணையில் சைவம் வளர்ந்த வரலாறு

— பே. சந்திரசேகரம் —

ஈழத்தில் வடபிராந்தியத்தே யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த வேலணை மேற்கை சைவசித்தாந்த இராஜதானி என்பர். சிவனே மாத்திரம் தலைவராகக் கொண்டு வாழ்க்கை நடாத்தும் வைதீக சைவர் - சிவபூசாதுரந் தரர் பலர் வாழ்ந்து வந்த இடம் வேலணை மேற்கு. நாயன்மார்களே சமயகுரவர்களாகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் இச் சைவர்கள். வேதத்திலும் உபநிடதங்களிலும் பொதிந்துள்ள அனைத்தையும் சாரமாகக் கொண்டது தேவாரத் திருமுறைகள். வட மொழி வேதமும் திருமுறைகளாம் தென் மொழி வேதமும் சமரீதியிலானது. அவை அனைத்தும் ஒரே கருத்தையே பேசுகிறது. அப் பேர்ப்பட்ட சைவசித்தாந்த சமயத்தின் மேன்மையை உணர்ந்து, அதன் தனிச் சிறப் புக்களாக விளங்கும் நாயன்மார் அருளிய செயல்களைப் பரப்பியவர்கள் தாம் வேலணைச் சைவர்கள்.

சம்பந்தர் மதுரை சென்று சைவசமயத் தை நிலை நிறுத்தினர். நாயன்மார் தென்னிந் திய தேவஸ்தானங்கள்தோறும் பாடல் பாடி (பாடல் பெற்ற)ப் போற்றிய ஸ்தலங்களே சைவசமயத்தின் பெருமைக்குரிய ஸ்தலங்க ளாகப் போற்றப் படுகிறது. அதேபோல ஈழத்தில் யாழ்ப்பாணத்து "வேலணைச்சைவர் வாழ்ந்த "வேலணைமேற்கு" என்ற ஊர் மிக மிகப்புனிதமானது. சைவம் பரப்பும் ஒரேஒரு இடமாக இருப்பது. சிதப்பரம் நடேசர்கோயி லைச் சுற்றி நாலுவீதிகளிலும் தில்லை வாழந்த ணர் வாழ்ந்துவந்தனர். வாழ்ந்துதில்லை நடே சரை அன்றும் இன்றும் பூஜித்துக் கொண்டு வருகிறார்கள். அதேரீதியில் வேலணைமேற்குப் பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) சுற்றிச் சூழ்ந்து, விநாயகர் ஆல யமே தங்கள் நிலைக்களனாகத் (தாங்களே ஸ்தாபித்த) அக்கோயில் தினசரி நித்தியநை மித்தியங்களையும், அந்தவைதீக சைவசான் றோர்களே செய்துவந்தனர். இவ் வைதீகசை வர்கள் அனைவரும் பிள்ளையார் கோயிலையே சுற்றி அக்கோயில் நாலு வீதிகளிலு முள்ள தத்தம் சொந்த வீடுகளிலிருந்து தினமும் விடி யற்காலை 5½ மணிக்கு முன்பே எழுந்து காலை நித்தியகடன்களை முடித்து, ஸ்நானம் செய்து சிவபூசை செய்யும் வழக்கம் உடையர். அச் சிவபூசை வழிபாட்டு மணி ஓசையைக் கேட் டவர்கள் வேலணையம்பதியை 'சிவலோகம்' என்றே கண்டனர், "பூலோக கைலாசமாக" அதைக் கொண்டனர்.

தேவாரத் திருமுறைகளையே பாடிப் பாடி ஜெபித்தருச்சித்து இறைவனது அருளுக்குப் பாத்திரமாக இருந்து சம்பந்தர், நாவுக்கர சர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் பெற்ற அருள்நிதிக்குவை போன்று, வேலணைச் சைவர்களும் தமக்குவேண்டிய சகல செல்வங் களையும் பெற்றிருந்தனர். புற்றில் வாழரவு, பொய்யர்தம் மெய் ஒன்றற்கும் அஞ்சாது பிள்ளையாரையே நினைந்து ஆனந்த பரவச நிலையில் வாழ்ந்துவந்தனர். மாணிக்கவாச கர் திருப்பெருந்துறையையும், நாவுக்கரசர் திருவீரட்டானத் துறையையும், சுந்தரர் நல்லூர் அருட்டுறையையும் போய்ச் சூழ்ந்து இறைவனுருக்குகோயில் கொண்டெழுந்தருளி யிருப்பதைக் கண்டுகளித்தனர். வேலணைச் சைவர் "வேலணைத்துறையில்" பெரிய புலத் தை விநாயகர் தமக்கு இருப்பிடமாகக் கோ யில் சமைத்துப் பெரும் பேறு பெற்று வாழ்ந் தனர். இச்சைவர்கள் சமய தீக்கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை பெற்று ஞானநிஷ் டைநிலையை அடைந்தார்கள். தினமும் காலை, உச்சி, மாலை நேரங்களில் தியானம் அநுஷ் டானம், தேவார திருவாசகங்களை ஓதல், ஓதித் தாம் உண்ணும் உணவுகளை இறை வனுக்கு—தங்கோயில் பிள்ளையாருக்கு நிவே தித்தல் ஆதியவற்றையே தங்கள் தொழிலா லாகக் கொண்டவர்கள். ஓய்வு நேரங்களில் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப் புராணம், வாதவூரர் புரா ணம், கந்தபுராணம் ஆகிய புராணங்களை கோயிலில் படித்து விரிவுரைகள் செய்து வரு வது வழக்கம்.

திருவாரூரில் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்றார் சுந்தரர்! காசியில் இறக்க முத்தி, சிதம்பரம்தரிசிக்க முத்தி, திருவண்ணா மலை நினைத்தளவில்முத்தி என்பர். அதேபோல ஈழத்தில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணமலை மாவிட்டபுரம், நல்லூர்போன்ற பலதலங்கள் அருள் மிக்கவை. இத்தனை சிறப்பைப்போன்று "வேலணையம்பதி" எனச் சித்தாந்த நெறிக் குப் பேர்போன இடமாகும்.

வேலணையில் பல நூற்றாண்டுகட்கு முன்பே, நாவலர், ஞானப்பிரகாசருக்கு முன்பிருந்தே, சைவ வளர்ச்சி அதியுன்னத நிலையிலிருந்துவந்துள்ளது. இச்சைவர்களும் தமிழகச் சைவர்களும், மிகமிக நெருங்கிய உறவினர்கள். வேலணை - ஊர்காவற்றுறையிலும், நெடுந்தீவிலிருந்தும் 'கட்டுமரம்' தோணி மூலம் தென்னிந்திய கோடிக்கரை - வேதாரணியம் ஆகிய இடங்கட்கு ஒரு சில மணி நேரத்துள் இச்சைவர்கள் அங்குமிங்குமாகப் போக்குவரத்துச் செய்துவந்தனர். தென்னிந்திய சிதம்பரம், சிதம்பரச்சிவபுரிக்கிராமம், திருத்தலைப்பூண்டி, திருநெல்வேலி (சிவசைலம்) வேதாரணியம் ஆகிய இடங்களில் வேலணைச் சைவர்களும், தென்னிந்திய சைவர்களும் அன்னியோன்னியமாகக் கலந்து, கல்யாண உறவுகள் கொண்டு, நெருங்கிப்பழகி வந்துள்ளனர். சிதம்பரம் ஞானப்பிரகாசர் திருக்குளத்தைச்சுற்றி நாலாபக்கமும் இருக்கும் மடங்கள் அனைத்தும் வேலணை, சங்கானை, வட்டுக்கோட்டை (கோட்டைக்காடு), கள்ளியங்காடு ஆகிய இடத்து மக்களது உரிமைச் சொத்துக்களாகும். சிதம்பரம் றயில்வே ஸ்டேசன் தொடக்கம் சிதம்பரம் பச்சையப்பன் கல்லூரிவரை போகும் தெரு (சிதம்பரம் வேடன் பிள்ளையார் கோவில் தெரு) முழுதிலும் குடியிருப்பவர்கள் யாழ்ப்பாணத்தவர்களாவர்.

தென்னிந்திய தேவார ஓதுவார்கள் கூடப் பலர் வேலணைச் சைவர்களோடு நெருங்கி உறவாடியவர்கள். வேதாரணியத்து ஓதுவார்களும், வேலணைச் சைவர்களும் நெருக்கமாக கல்யாண உறவுகள் வைத்திருந்தனர். வேதாரணியத்திலிருந்து ஓதுவார்கள் (சிவபூஜாதுரந்தரர்கள்) பலர் யாழ்ப்பாணம் வேலணைக்கு வந்தால், வேலணை மேற்கில் அக்காலம் இருந்த சைவசித்தாந்த பண்டிதர் கா. நமசிவாயம் (நாகலிங்க உபாத்தியார்) இடம், அவர் வீட்டு சிவபூஜாவேதிகையில் தான் தினப்தினம் சிவபூஜை செய்து போவது வழக்கம். அவ்வண்ணம், இங்கு யாழ்ப்பாணம், வேலணை வந்து திரும்பியவருள் ஒருவர் தேவாரப்பண்ணிசைஸ்வர அமைப்பு பண்ணடைவு அமைத்த அமரர் அப்பாசாமி ஓதுவாராகும். இப்படியாக தென்னிந்திய சைவர்கள் - ஓதுவார்கள் வேலணைச் சைவர்களோடு நெருங்கி, பந்திபோசனஞ் செய்து உறவாடி வந்துள்ளனர். இதுமாத்திரமல்ல, தென்னிந்திய பல சைவ தேசிகர்கள் பலர் இங்கு யாழ்ப்பாணத்தே — சைவக்குடும்ப மக்கள் அனைவருக்கும் அவர்கள் தம் அந்திய கிரிகைகள், சமயச் சடங்குகள் யாவற்றையும் நிரந்தரமாகச் செய்ய இங்கு வந்து யாழ்ப்பாணத்தே குடியேறினர்.

நம்மவருள் வேலணைச் சைவர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களான வேலணை, வரணி, வேதாரண்ய சைவாதீனகர்த்தர்கள் குடும்பங்கள் (சைவகுருமார் குடும்பங்கள்) கரணவாயிலிருந்துவந்தனர். அக்குடும்ப வாரிசாக தற்காலம் மிகவும் பிரபல்யம் வாய்ந்திருப்பவர் ஸ்ரீலஸ்ரீ கைதிருஞான சம்பந்த தேசிகராவர். இவர் குடும்பங்களைச் சேர்ந்த (ஏழு குடும்பங்கட்குப் பங்கு உரிமையாக) ஒரு பிரதிநிதி ஸ்ரீ சுகதாச தேசிகர் இன்றும் தென்னிந்திய வேதாரணியதேவஸ்தான தலைமைப் பண்டாரச் சந்நிதிகளாக ஆங்கு வேதாரணியத்தில் அத்தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவராக, அவருக்குரிய சொந்த சொத்துக்கள், வீடு, காரியாலயம், இன்னும் அவற்றிற்குரிய சிப்பந்திகளோடும், சகல வசதிகளுடனும், (வரிசைகள் - உரிமைகளோடு) ஆங்கு வேதாரணிய தேவஸ்தான அறங்காவல் கட்டளைகளைச் சரிவர மேற்பார்வை செய்துவரும் அறங்காவல்குழு தலைவராகப் (பெரும் போஷகராக) இருந்து வருகிறார். வேலணைச் சைவம் இத்தகைய பெருமையும் அந்தஸ்தும் உடைய பெரும் சைவாதீனத் தொடர்புடையது. நாவலர் காலத்திற்கும், ஞானப்பிரகாசர் காலத்திற்கும் முன்பிருந்தே வேலணையில் சைவம், சைவசித்தாந்த நெறிச்சிவபூஜா துரந்தரர்கள் பலர் வாழ்ந்துவந்தனர். வைதீக சைவசித்தாந்த நெறிக்கு சைவ இராஜதானியாக விளங்கியது வேலணை.

புராணங்களையே கோவில்களில் வருடாவருடம் படித்துப் பயன் (விரிவுரைகள்) சொல்வதே வேலணைச்சைவர்கள் வாழ்வாக இருந்தது. இந்த நெறியையே வளம்படுத்தப் பிறந்தவர் நாவலர். நாவலரது நன்மாணாக்கர்கள் பலர். அவர்களுள் வேலணை மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகர் (அமரர்) கந்தப்பர் நாவலரது பிரதம மாணாக்கர். நாவலர் மருகர் வித்வசிரோமணி பொன்னையா பிள்ளையினது நேரடி மாணாக்கர் வேலணை மேற்கு நடராஜவித்தியாசாலைஸ்தாபகர் கா. நமசிவாயம் (நாகலிங்கஉபாத்தியார்) நாகலிங்க உபாத்தியார் மருகர் செ. கனகசபாபதிப்பிள்ளை (இராசா உபாத்தியார்) பெருமை சொல்லவும் வேண்டுமோ! அவர்

தம் பெயராலேயே நடராஜ வித்தியாசாலை (இராசா உபாத்தியார் பாடசாலை) என இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. இராசா உபாத்தியார் யாழ்ப்பாணத்தில் வேலணை மேற்கில் தமது சொந்த அச்சகத்தில் முதல் சைவப் பத்திரிகையான "சைவசூக்குமார்த்த போதினி" என்ற பத்திரிகை ஒன்றை அச்சாக்கி வெளியாக்கி வந்தவர்.

வேலணையில் சைவவளர்ச்சி, தமிழ்வளர்ச்சி பண்ணிசைவளர்ச்சி மேலோங்கி இருந்ததற்கு காரணமாக வேலணைச்சைவர்களுட்பலர்பண்டிதர்களாக, ஆசிரியர்களாக, சங்கீதவிற்பன்னர்களாக இருந்து வந்துள்ளனர். வேலணை மேற்கு கா.நாகலிங்க உபாத்தியார் (சைவசித்தாந்தபண்டிதரே)அக்காலம்திருவாவடுதுறை ஆதினதேவார பாடசாலையில் தேவாரப்பண்ணிசைப் பயிற்சி பெற்றவர். முறையான தேவாரப்பண்ணிசை தீவகத்தில் மிளிர வழிவகுத்தவர். இவர் வேலணையில் பண்டிதர்கள் பலர். வேலணைப்பண்டிதர் இ. மருதையனார் பண்டிதருக்குப் பண்டிதராவார். தமிழாசிரியர் உலகில் முதலாசிரியர். மதுரைத் தமிழ்சங்க பண்டிதபரீட்சையில் ஈழத்தில் முதலில் தேறியவர் வேலணை மேற்கு பண்டிதர். த. வேதநாயகி ஆவர். பண்டிதை வேத நாயகியின் தந்தையார் (சிவபூஜா துரந்தரர்) ஸ்ரீ தம்பு உபாத்தியார் பெரும் புலவர். ஒட்டக கூத்தர், கம்பர், காளமேகத்திற் கிணையாகப் பாட்டுக்கள் புனைவதில் சமர்த்தர்.

ஈழத்து முதல் சங்கித பூஷணம்கூட திரு. பேரம்பலம் சந்திரசேகரம் அவர்கள் வேலணையில் பிறந்தவர். (நாகலிங்க உபாத்தியார் பேரன் இவர்) தில்லைநாதப் புலவர் நாகலிங்க உபாத்தியார் மாணாக்கர். இவ்வாறுக தமிழ், சைவம், தமிழிசை, புராணபடனம், சைவசித்தாந்த சாஸ்திரம் ஆகியவற்றிற்கிருப்பிடமாக, மூலவேர் ஊற்றுக இருந்துவந்த இடம் வேலணையாகும்.

வேலணைச் சைவர்கள் ஆதிசைவ இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஆசிரியப் பிராமணர்கள்(ஸ்மார்த்தப் பிராமணர்)இவர்கட்கு முன்புவந்த தமிழ் மூத்த குடியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஓதல், ஓதுவித்தல், திருக்கோயில்களில் கடவுளுக்கு வழிபாடு, கோவில் பிரதிஷ்டைகள் செய்தும் செய்வித்தும்வந்தபரம்பரையினர்.அரசர்கட்குமுடிசூட்டும் பெருமை அரசாளுமுரிமைபெற்றவர்கள். ஆதிசைவ வேளாண்குடிப் பெருமக்களினம்கள். இச் சைவர் புலால் உண்ணும் எவர்களிடமும் உடன் உண்ணுதல், உடன் கழித்தல் ஆதியன செய்யாமலேவாழ்ந்துவந்தனர். இன்னும் இப்படி வாழும் சைவினம் வேலணை மேற்கில் உள்ளனர். எல்லா இனத்தவரும் இச்சைவர்களிடம் உணவெடுப்பர். ஆயின் வேலணைச் சைவர் தீக்கைகளில் தமக்குச் சமமானவர்கள் அல்லாத வேறெவரிடத்தும் உணவெடார். சிவதீட்சைகள் பெற்ற இச் சைவர்கள் ஆரியப்பார்ப்பனர் வீடுகளில் உணவெடாமல் இருந்தகாலம் ஒன்று முன் பிருந்துவந்துளது.

வேலணைச் சைவர்கள் தத்தம் வீடுகளில் வருடாவருடம் தங்கள் தந்தை தாயார் பாட்டன் பாட்டிமார்கட்கும் மற்றும் அமரர்கட்கும் கொடுக்கும் சிரார்த்தபூஜைகளை - பிண்டம் போடுவதற்கும் கூட தாங்கள் சிவபூஜாதுரந்தரர்களாகவே, தாங்களே தெற்பை, கூர்ச்சங்கள் முடிந்து, தாங்களே தங்கட்குரிய பூஜைப்பத்ததி முறையில் இன்றும் செய்துவருகிறார்கள். பிராமணர்களுக்கு இவர்கள் வீட்டில் தானமாக மாத்திரம் அரிசி காய் பிஞ்சு முதலியன வழங்குவார்கள். அப்பிராமணர்கள் இச் சைவர்கள் வீடுகளில் எதுவித புரோகிதக் கிரிகைகளோ, பூஜைகளோ செய்வது அறவே கிடையாது. இன்றும் வேலணை மேற்கில் இந்த நிலை நடைமுறையில் உளது. இப்போர்ப்பட்ட மரபு - சைவ வைதீக நெறியில் வாழ்பவர்கள் வேலணைச் சைவர்.

இற்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்து அமரரான பிரபல ஐ. கைலாயநாதக் குருக்களின் தந்தையார் ஐயாத்துரைக் குருக்கள், சிறிய தந்தையார் சின்னத்துரைக் குருக்கள் மற்றும் அவர்களது அக்காலத்தைய பிராமணர் பலர் வேலணை மேற்கு ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க உபாத்தியாரது மாணாக்கர்களாவர். இக்குருமார் நயினாதீவு நாகபூசணி அம்மன் தேவஸ்தான பரம்பரை அர்ச்சகர்கள். இவர்கள் தங்களது குருவாகிய வேலணை மேற்கு நாகலிங்க உபாத்தியாயர் அவர்கட்கு தங்கள் கையால் நயினை நாகபூஷணி ஆலய நித்திய நைமித்திய பூஜைகளின் பின் விபூதி கொடுப்பதில்லை. விபூதிசங்கை பேழையை மாத்திரம் கொண்டுவந்து தங்கள் குருவிடம், மண்டியிட்டு நிற்க, உபாத்தியார் தாமே விபூதியை எடுத்து உத்தூளனமாக அணிந்துகொள்வது வழக்கம்.

ஏழாலைக்கிராமத்தின் சைவத்தமிழ் கலாச்சாரமகிமை

— வித்துவான் மு. கந்தையா B.A. —

''தாமோ தரேந்திரனுர் செய்யுந் தருமமென
ஏனீவிர் செய்யா திருக்கின்றீர்–ஓமகிமை
பெற்றபெரி யோரே பெரிதோ நுமதுபொருள்
மற்றவருக் கீந்து வரல் ''

இப்பழம் பாட்டுக்கு வயசு மனித ஆண்டுக்கணக்கில் இரு நூற்றுப் பதினைன்று. இலங்கேசன் என்ற பழந்தமிழ்ச் சஞ்சிகையில் 24.10.1877ந் திகதியிடப்பட்ட இதழில் இப்பாடல் மிளிர்கின்றது. இதற்குறித்த தாமோதரேந்திரனுர் யாவர்? செய்யுந் தருமம் என்றது எது? இப்பாடலுக்கு முன் விருத்தாந்தமாக அவ்விதழிலேயே பின்வரும் பந்தி திகழுகின்றது.

ஏழாலைச் சைவப் பிரகாச வித்தியாசாலைப் பரீட்சை

இது சென்னபட்டினத்தில் B.A; B L. பட்டம் பெற்று'ஜெனரல் அக்கௌண்டன்ற்' என்னும் உத்தியோகம் உடையவராய் இருக்கும் ஸ்ரீ.சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் தாபிக்கப்பட்டு இப்போது ஒருவருட காலமாக நடைபெறுகின்றது. இவ்வித்தியாசாலையில் முதற் பரீட்சை சென்ற வருடத்து மார்கழி மாதக் கடைசியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களாலும் இரண்டாம் பரீட்சை இம்மாதம் 2 ஆம் திகதி எம்மாலும் நடத்தப்பட்டன. முதற் பரீட்சையிற் காணப்பட்ட பிள்ளைகளின் தொகை நூறு. நோயின் கலக்கத்தாலும் பஞ்சத்தின் வருத்தத்தாலும் பிள்ளைகள் முந்திய தொகையிற் சுருங்கி இருந்தாராயினும் இரண்டாம் பரீட்சையில் அறுபதிற்கு குறையாதிருந்தார்கள். இவ்வளவு பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர் ஒருவரே ஆகவும் இலக்கணம் முதலிய பாடங்களில் வினவிய குறுக்குக் கேள்விகள் எல்லாவற்றுக்கும் பிள்ளைகள் தவறுமல் விடை சொன்னார்கள். தமது ஊரிலேபிரபுவாகிய பிள்ளையவர்கள்இவ்வித்தியாசாலையை தாபித்து நடத்திவருவது போல அந்தந்த ஊரிலே இருக்கும் ஒவ்வொரு சைவப்பிரபுக்களும் செய்து வருவார்களாயின் சைவசமயம் தாழ்ச்சி அடைதற்கு இடமுண்டாகுமா?

இவ்வாறு நீங்களும் செய்தால் என்ன? குறிக்கப்பட்டகாலம் ஆங்கில ஆட்சியின் ஆரம்பகாலம். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தருமாக தமிழ் சைவக்கலாசார அழிவு கருதி செய்த தகிடுதத்தங்களுக்குள்ளால் ஒருவாறு தப்பி சமுதாயம் தலைநிமிர்ந்து ஆரம்பித்த காலம், தமிழ்ச்சமய கலாச்சார விருத்திபற்றி அரசு எங்கும்எதுவுமே செய்யாதிருந்த காலம் போர்த்துக்கீசர்,ஒல்லாந்தர்கள் நிறுவி விட்ட மதமாற்ற இயந்திரங்கள் அவர்கள் போன பின்பும் தாங்கள் போகாமல் ஆங்கில அரசின் செட்டைக்குள் பாதுகாப்பாக ஒட்டியிருந்து கொண்டு குறைப்படுத்தி திரிக்க குட்டிக்கரணம் போட்டுக்கொண்டிருந்த காலம், ஊருக்கூர் திண்ணைப்பள்ளிகள் தவிர வித்தியாசாலை தரமான பள்ளிக்கூடங்கள் அரும்பாத காலம். அந்தக் கடும் கஷ்டகாலத்திலே மேற்கண்ட பண்புகளுக்கிணங்க அதுவும் ஒரு உயர்ந்த தமிழ்க்கலாசாலை இருந்ததென்றால், கட்டைவண்டிப் போக்குவரத்தே கஷ்டசாத்தியமாயிருந்த அக்காலத்தில் ஏழு மைல் தொலைவிலிருந்த நல்லூரிலிருந்து, அதுவும் எழும்ப இருக்கவே நேரம் போதாதென்னும்படி தாம் கைக்கொண்ட பல்வேறு பணிகளுள் சதாமுழுகிக்கிடக்கும் நாவலர், சைவத்தமிழ் உலகுக்கு ஏக ஜனாதிபதியாய் இருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சிரமம் நோக்காது நேரங்கண்டுவந்து பரீட்சித்துப்போன மகத்துவப் புனிதம் பெற்ற ஒரு வித்தியாசாலை இங்கு இருந்ததென்றால்,

தமிழகத்து வித்துவ மேதைகள் அனைவரும் பயபக்தி காரணமாக மெய்ச்சும் தரம் பெற்ற சுன்னாகம் முருகேச பண்டிதர் தொடக்கிவைக்க அவரிலும் பார்க்க வீறும் விறலும் கொண்டு தமிழகம் முழுவதும் தனித்துவப் புகழ்பெற்ற சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் தொடர்ந்து இருபத்திரண்டு ஆண்டுகள் நடத்திய ஒரு வித்தியாசாலை இங்கு இருந்ததென்றால்,

மேற்கண்டவாறு ''அக்கௌண்டன்ற்'' ஜெனரலாக மட்டுமன்றி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகவும் இருந்ததுடன் சென்னைச் சர்வகலாசாலையின் நிர்வாக உரிமையோடு அதற்குப் பரீட்சகராயும் இருந்தளவிலுமன்றி ஏட்டிலவில் மூர்ச்சிக்கும் நிலையிலிருந்த பண்டை பழம் தமிழ்நூல்களை ஆராய்ந்து அச்சேற்றி புத்துயிர் வழங்கிய மேன்மையுமன்றி, அன்றைய தென்னகத்து வித்துவசிகாமணிக

ளாகிய சூரிய நாராயண சாஸ்திரியார் முதல் இன்றைய வையாபுரிப்பிள்ளை ஈறாக ஒவ்வொருவராலும் அருமை உணர்ச்சியோடு மனங் குளிர்ந்து பாராட்டப்பெற்ற மகிமைமட்டிலும் அன்றி, கும்பகோணம் உயர்நீதிமன்ற வக்கீலாகவும் புதுச்சேரி உயர்நீதிமன்ற நீதிபரசராகவும் இருந்து சிறந்து, இத்தனை பராக்குகளுக்கிடையிலும் அன்னையின் ஊர், தாம் பிறந்த ஊர் என்ற அபிமானப் பேரன்பினால் இருபத்திரண்டு வருடகாலம் தொடர்ந்து குமாரசுவாமிப்புலவருக்கு மாசவேதனம் தவறாது கொடுத்து இந்த வித்தியாசாலையை நடத்திவைத்த தர்மப்பெருவள்ளல் ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளையை தன்னவனுக்கக் கொண்டிருந்ததென்றால்,

ஏழாலைக்கிராமத்தின் சைவக் கலாசார வீறும் விறலும் இத்துணைத்தென அறிதற்கு வேறென்ன வேண்டும்? குறித்த அவ்வித்தியாசாலை இடம்பெற்றிருந்த அச்சூழல் தற்பொழுதும் சப்தாலய வட்டாரம் என்றே வழங்குகின்றது. ஊர்ப்பெயர்க் காரணமாயிருந்ததும், குறித்த சப்தாலயம் என்ற தொடரின் பொருளாவதுமான ஏழுகோயில் இருந்த சூழலும் இதுவே. பதினைந்து சதுரமைல் விஸ்தீரணம் உடையதென மதிக்கப்படும் ஏழாலைக் கிராமத்தின் நிலப்பரப்பு கலாச்சார மையமும் இச்சூழலேயாம்.

குறித்த ஏழு கோயில்களில் ஒன்றுகிய பெரிய தம்பிரான் கோயிலும் அவரிடங் கொண்ட மகாமருதச் சோலையும் அதற்கிடமான நீராழிப் பெருங்குளமும் இன்றும் புதுமை மங்காது ஒளிரக்காணலாம். வரலாற்றின்படி யாழ்க்குடாநாடு முழுவதிலும் தன் பிரபாவம் விளங்கத் திகழ்ந்த இப்பெரியதம்பிரான் மகிமையினால் அச்சூழலின் சுற்றுடலாகிய நாற்புறங்களிலும் சைவத்தமிழ் பண்பாடு விருத்தியுற்றதுடன் அச்சூழலிலேயே சிவன், அம்மன் விநாயகர், சுப்பிரமணியர் நால்வருக்கும் அடுக்கடுக்காய் அமைந்த நான்கு தனிப்பெரும் கோயில்கள் ஒரேபுற வீதிக்குள் உருத்தெழும் நிலையும் உளதாயிற்று.

இச்சூழலின் கிழக்குப்புறமாய் அமைந்த ஊர்ப்பகுதியில் ஐயம்பிள்ளை வைத்தியர் என்பவரின் மூத்தமகனுய்த் தோன்றி ஆத்மஞான விசாரம் மிக்குத் திகழ்ந்தவர் திரு. ஐ. பொன்னையா என்பவர். அவரது ஆன்மீக விசாரதாகம் அச்சுவேலியில் வாழ்ந்த வரும் கடையிற் சுவாமிகள் குருபரம்பரையில் வந்த அருள்ஞானச்செல்வருமாகிய ஸ்ரீ சடைவரத சுவாமிகளை இங்கு வரவழைக்க ஐ. பொன்னையாவும் அவரால் ஆத்மஞான விளக்கம் பெற்றுஅருளானந்த சிவமெனத்திகழ்ந்தனர்.

குறித்த சடைவரத சுவாமிகள், அருளானந்த சிவம் என்போர் சார்பில், குறித்த சூழலுக்குத் தென்மேற்கே அமைந்த பகுதியில் பெருந் தொகையான சிவனடியார்களைக் கொண்ட சாது சங்கம் ஒன்று உருவாகி அவர்கள் கூடும் இடமாக சாதுசங்க மடாலயம் என ஓர் ஸ்தாபனம் தோன்றி சிவனடியார் சேவையிற் சிறந்தோங்கி விருத்தியுற்று தற்போது விஜயகர் சந்நிதி, நால்வர் சந்நிதி நடேசர் சந்நிதி மூன்றும் கொண்டதாய் மடாலய, சிவாலயப் பண்புகள் இரண்டிற்கும் ஓரிடமாய் அகில இலங்கைக்குமே ஒரு தனித்துவக் கோயில் இது என்று கருதப்படும் நடைமுறை வைபவங்களோடு கூடியதாய்த் திகழ்கின்றது. இப்பகுதியிலேயே பூசாரியார் என புனைபெயர் பெற்ற ஆறுமுகம் என்ற ஒரு நைஷ்டிகர் சுன்னுகம் செல்லாச்சி அம்மையார் சகவாசத்திற் சிறந்தவராய் வாழ்ந்துள்ளார்.

குறித்த அருளானந்த சிவம் அநுபவம் மிக்க ஒரு ஆயுள்வேத வைத்தியர். தமிழ் சைவ நூல்களில் அத்தியந்த பக்தி உள்ளவர். சைவ சித்தாந்த சண்டமாருதம் எனும்படி திகழ்ந்தவர். புகழ்பெற்ற வைத்திய நூலாகிய பரராஜசேகரம் முழுவதையும் ஏடுதேடி ஆராய்ந்து பதிப்பித்தவர், தாமே தனி அச்சுக்கூடமொன்று நிறுவி அவசியமான மற்றும் வைத்தியநூல்களையும் வைத்தியக்களஞ்சியம், கலாவல்லி என்னும் சஞ்சிகைகளையும் மற்றும் பல்வேறு தமிழ் நூல்களையும் அச்சேற்றி வெளியிட்டவர். யாழ்ப்பாணத்து தனி முதுசொமாகிய பரராஜசேகரத்தை உயிர் பிழைக்கவைத்த பெருமை மூற்று முழுதாக அவரையே சார்வதாகும். அவருடைய பக்தி ஓழுக்கப்பண்பாடும், அடியார் வழிபாட்டுச் சிறப்பும், புராணபயன் விரிக்கும் பண்பும், சித்தாந்தச் சைவப்பிரசங்கச் செழிப்பும் இவ்வூர் சைவக்கலாச்சார விருத்தியில் முக்கிய இடம்வகிப்பனவாம். முதலிற்குறித்த சைவப் பிரகாச வித்தியாசாலையின் பிற்கால மாணவனுய் பயின்றிருக்கும் அவர் அவ்வித்தியாசாலை 1898 உடன் நின்றுவிட்டதால் ஏற்பட்ட இழப்பை சரிசெய்யும் நோக்குடன் ஏழாலை மேற்கில் அமைத்த சைவசன்மார்க்க வித்தியாசாலையும் (1919) தற்காலிகமாக எழுந்த சமயப்பூசலொன்றில் சைவ மகிமையை நிலைநாட்ட வேண்டி தாமே ஊக்குவித்து தோற்றுவித்த ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலையும் இன்று நன்நிலையிலுள்ளன.

இன்று திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவராகவும் அகிலமும் மதிக்கும் சைவப்பிரசாரகருமாய்த் திகழும் திரு. மு. ஞானப்பிரகாசம் B A., Bsc யாழ் சர்வகலா சாலையால் சித்தாந்த வித்தகர் என கௌரவ விக்கப்பெற்றவர், இதே அருளானந்த சிவத் தின் மைத்துனரும்அவர்தம்ஞானவாரிசுவும், அவர்தம்வழித்தொண்டருமாவர்என்கைகுறி ட்பிடற்பா லதாகும். அன்றியும் குரு சிஷ்யத் துவ முறையில் அவரிடம் அடங்கி ஒழுகி அடியவராம் நிலைபெற்றிருந்த முருகபக்தரா கிய அழகர்சாமி என்பவர் அவருடைய வழி நடாத்தலின் பேரில் அமைத்த சாளம்பை முருகன் கோயில், ஏழாலை மேற்கு விளிம்பில் இன்று நன்நிலையில் விளங்கித் திகழ்தலும் ஒன்று. இவ்வாற்றுல் ஏழாலை சைவக்கலாச் சார வளர்ச்சியில் சிறப்பிடம் பெறுதற்குரிய வர் அவராவர்.

குறித்த கிழக்கு, மேற்குப் பகுதிகள் தவிர வும்; தெற்கு, வடக்குப் பகுதிகளிலும் ஆங் காங்கு சைவக்கோயில்களும், சைவச் சபை களும் காலா காலங்களிற் தோன்றி நன்நிலை யெய்தி வருதல் கண்கூடு. இன்றைய நிலையில் ஏழாலை அடங்கலும் பதினெறு சைவாலயங் களும் ஏழு வித்தியாலயங்களும், ஒரு மகா வித்தியாலயம், தமிழ் சைவ கலாச்சார ஒளி விளக்காய்த் திகழ்தலும் கண்கூடு.

இன்று சமய உலகில் பிரசித்திபெற்று விளங்கும் ஆத்மஜோதி திரு நா. முத்தையா விசேஷமாக இலங்கையின் மத்திய மலை நாட்டு சமய வளர்ச்சிக்கு சுமார் நாற்பது வருடங்களாக உழைத்துவரும் அருமை நாட டறியும். அவர் தனி அச்சுக்கூடமொன்று அமைத்து ஆத்மஜோதி என்ற மாத சஞ்சிகை யும் அளவிறந்த சமயஞான நூல்களும் அச் சேற்றி வெளியிட்டுக் கொண்டிருப்பதனை உல கறியும், கொழும்பு விவேகானந்தசபைசமயக் காரியதரிசியாகப் பல்லாண்டுகள் தொடர்ந்து சேவையாற்றி இலங்கையின் பட்டி, தொட்டி மூலைமுடுக்குகள் எங்குமுள்ள பல லட்சக் கணக்கான பிள்ளைகள் சைவசமய பாடப் பரீட்சையில் தேறவும், அவருட் கணிசமான ஒருதொகையினர் பதக்கமும் பரிசும்பெற்றுச் சிறக்கவும் வகை செய்தவரும் திரு. சி. கந்த சாமி கணக்குப்பரிசோதகர்பகுதி உத்தியோ கத்தர் அவர்களின் சேவைநலனும் நாடறிந்த தே.

இவ்விருவரும் ஏழாலை சைவக்கலாச்சார விறல் இருந்தவாற்றை அகில இலங்கையும், ஏன் அகில உலகும்கூட நினைவுகூரச் செய்து வரும் பாங்கு போற்றும் தகையதாம்.

குறிப்பு: இக்கட்டுரையில் சம்பந்தப் படும் கருத்தம்சங்கள் சில கட்டுரைச் சிக் கனம் கருதி சுருக்கியும் தொகுத் தும் அமைக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விரிவு விளக்கங்கள் 1977ல் வெளியான ''ஏழாலை'' – ஆசிரியர் நா. முத்தையா, அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப் பிட்டி என்ற நூலில் கண்டறிதற் பாலனவாம்.

ஆத்மஜோதி சந்தா விபரம்

(ஓர் ஆத்மீக மாத சஞ்சிகை)

இலங்கைக்கு ஆண்டுச் சந்தா	ரூபா. 20-00
ஆயுள் சந்தா	ரூபா. 400-00
தனிப் பிரதி	ரூபா. 2-00
இந்தியாவுக்கு ஆண்டுச் சந்தா	ரூபா. 25-00
இதர நாடுகள்	6 வெள்ளி
ஆயுள் சந்தா	ரூபா. 500-00

ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி (ஸ்ரீ லங்கா)

காலி மாநகரில் இரு கோயில்கள்

— ஏ. பி. சேதுராமன்–காலி —

ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலம். ஒல்லாந்தருடைய கப்பல் ஒன்று இரவு நேரத்தில் திசை தவறிக்கொண்டிருந்த நேரம். கப்பலில் உள்ளவர்கள் எல்லோரும் ஒரே மனதுடன் இறைவனிடம் தம்மை ஒப்புக் கொடுத்து பிரார்த்தனை செய்த நேரம். எங்கிருந்தோ கோழி கூவுகிற சத்தம் கேட்டுக் கப்பலில் உள்ளவர்கள் நம்பிக்கையுடன் தொழில் பட்டனர். கோழி கூவிய திசை நோக்கிக் கப்பலைச் செலுத்தினர். கப்பல் இயற்கையாய மைந்த துறைமுகம் ஒன்றை அண்மியது. ஒல்லாந்த மொழியில் கோழி கூவுவதற்கு ''கோல்'' என்று அழைப்பார்கள். கோழி கூவி அவர்களுக்கு ஆறுதல் கொடுத்த இடம் கோல் (Galle) என்று அழைக்கப்பட்டுத் தமிழில் காலி என்று ஆயிற்று.

ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்திலேயே அதாவது 1790ம் ஆண்டு இந்த நகரத்தில் 'கஞுவெல்லை'யில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் முருகனுக்கு ஓர் ஆலயம் எழுப்பப்பட்டு கதிரேசன் கோயில் என்ற பெயருடன் விளங்கி வருகின்றது. 1952ம், 1977ம் ஆண்டு இராஜகோபுரம் புதுப்பிக்கப்பட்டு கும்டாபிஷேகங்கள் நடைபெற்றன.

காலியிலிருந்து 2 மைல் தூரத்தில் காட்டுச் சுப்பிரமணியர் கோயில் உள்ளது. செட்டியார்கள் முதன்முதல் இங்கு தான் வந்து ஒரு கோயிலை ஆரம்பித்தார்கள். இதுவே காட்டுச் சுப்பிரமணியர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகைத் தீபவிழா அன்று இங்கு முதலில் தீபம் ஏற்றியபின்தான் காலிக்கதிரேசன் கோயிலில் ஏற்றும்முறை இன்றும் இருந்து வருகின்றது.

கதிர்காமம் போகும் வழியில் உணவட்டுணை என்ற இடத்தில் மாணிக்கவிநாயகர் கோயில் ஒன்று உண்டு. காலியில் இருந்து சுவாமி அங்கு சென்று மூன்று நாட்கள் தங்கி இருந்து தேரில் திரும்பும். கொழும்பில் நடைபெறும் வேல்விழாவைப் போலவே இங்கும் நடைபெறும்.

கதிரேசன் கோயில் கட்டப்பட்டு சரியாக நூறுண்டுகளுக்குப்பின் மீளட்சி சுந்தரேஸ்வரர் கோயில் நல்ல முறையில் கட்டப்பட்டு பொதுமக்களால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. கோயில் அசையாமணியில் 1897ம் ஆண்டு என்று பொறிக்கப்பட்டுள்ளது. முதலில் வேலாயுதம் வைத்து ஸ்தாபிக்கப்பட்ட கோயிலை அங்கிருந்த யாழ்ப்பாண வாசிகள் சிவன் கோயிலாக ஆக்கினர்கள். முதலில் பாணலிங்கம் வைத்துப் பூசிக்கப்பட்ட கோயில் தற்போது மகாலிங்கம் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றது. பழைய பாண லிங்கம் பக்கத்தே வைத்துப் பூஜை நடைபெற்று வருகின்றது. பங்குனி உத்தரத்தை ஒட்டி பத்துநாள் உற்சவம் நடைபெறும். சிங்கள மக்களும் பாடசாலைப் பிள்ளைகளும் பக்திசிரத்தையோடு வந்து வணங்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஸ்ரீலஸ்ரீ மயான யோகியார் ஓர் இல்லற ஞானி. ஆன்மிக ஆற்றல் பெற்றவர். இந்த மகான் இன்று சாதாரண மனித வடிவத்தில் நம்மிடையே வசித்து வருகிறார். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எமனேசுவரத்தில் தாது வருடம் ஆனி மாதம் 25ம் நாள் சதயம் நட்சத்திரத்தில் கோவிந்தசாமி நாயுடு மருதவல்லியம்மாள் தம்பதியர்க்கு மகனைத் தோன்றிய இவர், இன்று ஓர் அற்புதமாய் விளங்கி வருகிறார். உண்மை குருவின் இலக்கணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற ஈசுவர ஆற்றலைப் பெற்ற சித்தர் இவர். யோகியார் யோக மார்க்கத்தைக் கையாண்டு வரும் தவயோகி.

—ஸ்ரீலஸ்ரீ மயான யோகியார் பக்த சபை – மதுரை.

இந்துசமயவளர்ச்சியில் புங்குடுதீவு

— வித்துவான் பொன். அ. கனகசபை —

புங்குடுதீவு தெய்வமணங் கமழுந் திருநாடு; திசை மணக்கும் புகழ் பூத்த பொன்நாடு; வல்லி புரம் பொன்னேட்டில் இந்நாட்டின் புகழ் பொறிக் கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு தெய்வப்பேரவைத் தலைவரால்; 'சித்தாந்தச் சிவபூமி' எனவருணிக்கப் பட்ட பெருமை உடையது இந்நாடு. 'இந்நாட்டில் வைதிகம் மணக்கின்றது.' எனப்பாராட்டினர் சிலம் புச் செல்வர் ம. பொ. சிவஞானகிராமணியார். இரத்தின துவீபம் எனப் பெயர் பெற்ற இந்நாட் டில் வேதாந்தம் சித்தாந்தம் என்ற வேறுபாடின்றி இந்து சமயத்தவர் எல்லோரும் இன்புற்று வாழ்கின் றனர்; எக்காலமும் இறைவன் திருவுளத்திற்கு ஏற் புடைத்தாயிருப்பதும் இந்நாடே. இலங்கைத் தமி ழர், சிலப்பதிகாரவிழா எடுப்பதற்காகப் போட் டுப்பார்த்த திருவுளச்சீட்டு இந்தநாட்டையே தேர்ந் தெடுத்தது; இலங்கைத் தமிழரசுக்கட்சி, மகாயா கஞ் செய்வதற்குத் திருவுளச் சீட்டின் மூலந் தெரிந் தெடுத்த நாடும் இதுவே.

நிலத்தியல்பால் நீர் திரியும் என்பர் சான்றோர். புங்குடு தீவின் நீர்வாசி நிலவாசியால் இந்நாட்டில் இடம்பெயர்ந்து வந்துறையும் மக்கள்கூட மனந்தி ரிந்து மாண்புற்று வாழ்கின்றனர். 'சந்தொடுதர ளந் திரைகொழித்து ஒதுக்குஞ்' சமுத்திரத்தாற் சூழப்பட்டிருக்கின்றது புங்குடுதீவு. சமுத்திராதேவி நான்றோறும் நாற்புறமும் வலம் வந்து, நாவாரப் பிரணவ நாதகீதம் பாடி, அலைக்கரத்தால் அஞ்சலி செய்கின்றாள். புங்குடுதீபக மக்கள் அடுதீ அல்லது கடுதீ அறியார்; கார்த்திகைத் தீபத்திலுங் கண்ணு தற் பெருமானின் சோதிசொரூபத்தையே காண் பார்கள். இன்னும் இந்து சமயக் கிரியை நெறி நின்று அக்கினி காரியஞ் செய்து அருள்நெறி வளர்க் கின்றனர். புங்குடுதீவில் வீசுந் தென்றற் காற்றிலே, சேதுலிங்கப்பெருமானின் திருப்பாததூளி பரிமளிக் கும். இங்கு வீசும் வாடைக்காற்றிலே, சிவபெருமான் திருமுடியிற் சூடுந் திருக்கொன்றை மலர்மணஞ் செறிந்திருக்கும். புங்குடுதீவின் மேலேயுள்ள அருள் வான வெளியிலே, நிலம், நீர், நெருப்பு, காற்று என்பவற்றின் காரண பூதங்கள் கலந்து, அருவடி வாக அடங்கியிருக்கின்றன. ஆகாய மார்க்கமாக அசைந்து செல்லுஞ் சூரிய சந்திரர்கூட இங்குள்ள இந்துமக்களின் வணக்கத்திற்குரிய தெய்வ வடிவங் களே. சிவனடியாரையுஞ் சிவனெனப் போற்றுஞ் செம்மையுள்ளவர் இந்நாட்டினர். அடியார் வழிபாடு இத்தீவகத்தாருக்குக் கைவந்தகாரியமாகும்.

''கொண்டுவந்து மனைப்புகுந்து குலவுபாதம் விளக்கியே
மண்டுகாதலின் ஆசனத்திடை வைத்தருச்சனை செய்த பின்
உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையின் அமுதுசெய்ய அளித்துளார்''

என்ற சேக்கிழார் வாக்கு,

இங்கு செயற்பாட்டில் இருக்கின்றது. ஐம் பெரும் பூதமும் ஆகித்தனுஞ் சந்திரனும் ஆன்மாவும் ஆகிய எண்பெருவடிவங் கொண்ட இறைவனை, இங் குள்ள இந்துக்கள் இடையறாது வணங்குகின்றனர்.

''எட்டுக் கொண்டார்தமைத் தொட்டுக்கொண்டே
விட்டார் உலகமென் றுந்தீபற [நின்றார்
வீடே வீடாகுமென் றுந்தீபற''

என்ற உய்யவந்தார் கூற்றுக்கிணங்க எட்டுருவங் கொண்ட எம்பெருமானை மனத்தாலே தொட்டுக் கொண்டே வாழ்வாங்கு வாழ்ந்து இம்மையிலேயே இன்பங் காணுகின்றனர் இத்தீவக இந்துமக்கள்.

சமயநிலை

சரித்திர ஆராய்ச்சிக்கு முற்பட்ட காலத்திலிருந் தே புங்குடுதீவு இந்துசமயத்திற்கு ஓர் உறைவிடமாக இருந்ததென ஊகிக்க முடிகின்றது. நிலமும், நீர்நிலை யும், நிலம்பெயராதுறையும் மக்கள் உள்ளப்பண் பாடும், பேச்சுமொழியும் இதற்குச் சான்றுபகருகின் றன. இடப்பெயர்களும், காணித் தோப்புகளும், மூதாதையர் பெயர்களும் தமிழர்தம் பொற்காலம் எனப்படும் சங்ககாலத்தைச் சார்ந்த இந்து சமயப் பெயர்களாகவே காணப்படுகின்றன. புறநானூற்றிற் காணப்படும் புறத்திணைச் செய்திகளை வெட்சியா முனை, வியப்புலி கரந்தலி, பாணர்விடை போன்ற இடப்பெயர்கள் இன்றும் எடுத்து விளக்கிக் கொண் டிருக்கின்றன. இங்கு வாழ்ந்த ஆதிகுடிகள் நாகர் கள். அவர்கள் வழிபட்ட நாகதம்பிரான் கோயிலும் நாகேஸ்வரர் கோயிலும் இடைக்காலத்தில் அழிக்கப் பட்டன. ஆயினும் இன்றுபுதுப்பிக்கப்பெற்றுவழிபாட் டுத்தலங்களாகவளர்ச்சியடைந்து வருகின்றன. இந்து சமயப் பழம்பெயர்கள் இன்று வழக்கிழந்து வருகின் றன; நாகன், மாதன், கந்தன், மூலன் போன்ற பெயர்கள் வழக்கிலிருக்கின்றன.

With Best Compliments of

Commercial Company

HARDWARE MERCHANTS, ESTATE SUPPLIERS
AND FORWARDING AGENTS.

127, Main Street,
BANDARAWELA.
Phone: 308

COLOMBO OFFICE:

364, Old Moor Street - Colombo-12.

AUTHORISED DISTRIBUTORS FOR:

Chemical Industries (Colombo) Ltd. & Explosives

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

அன்பர்களே! வாடிக்கையாளர்களே!!

இலங்கை முழுவதும்

உமா சுப்பர் சவுண்ட்

உங்கள் சகலவிதமான ஒலிபெருக்கி, மின்சார உபகரணங்களை வாடகைக்கு தந்து
சேவையாற்ற முன்வந்துள்ளது என்பதை
மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எம்மிடம்:

- சிறந்த ஜெனரேட்டர் வசதிகள்
- பல்ப்புகள்
- டியூப்லைட்டுகள்
- வயர்
- ஒலிபெருக்கி உட்பட - கோவில் முத்துரதம்
- முத்துச்சப்பரம்
- சுவாமி
- சுவாமி அலங்காரம்
- புஷ்பத்தால்
- வீட்டு அலங்காரம்
- திருமண நகைகள்
- மணவறை
- திருமண மாலைகள்
- வரவேற்பு மாலைகள்
- பாய் விரிப்பு வகை

ஆகிய குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்கு கொண்டுவந்து தர வாகன வசதிகளும் உண்டு.

சிவா டிரான்ஸ்போர்ட்

மூலம் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

A. சுப்பிரமணியம் (உரிமையாளர்)
உமா சுப்பர் சவுண்ட்
இல. 33, கொத்மலை வீதி - நாவலப்பிட்டி.

UMA SUPER SOUND

No. 33, KOTMALE ROAD,
NAWALAPITIYA.

Phone: 337

With best compliments of

NATIONAL CORPORATION

GENERAL MERCHANT.

Main Street – Bandarawela.

With best compliments of

KUGAN STORES

Dealers in Oilment Stores, Cigars and Tobacco etc.

56, Main Street - Bandarawela.

With best compliments of

KINGS FORAGE

AGENTS FOR:
Ceylon Fertilizer Corporation
Lanka Pohora

STOCKIST IN:
Fertilizers
Vegetable Seeds
Agro Chemicals
Forage Foods
Agriculture Lime
Agriculture Sprayers

No. 95, Main Street - Bandarawela.

Phone: 347

★ ★

KINGS FORAGE HELP YOU TO GROW MORE FOOD & DEVELOP OUR COUNTRY

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்!

RUPEE STORES

Bandarawala.

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

அ.மூக்கையா அன் கோ.

60, மெயின் வீதி - பண்டாரவளை.

With Best Compliments of

KAMALA JEWELLERS



109, Colombo Road,
Kaluwella,
GALLE.

WITH BEST COMPLIMENTS FROM

N. A. VARNAKULASINGAM

General Merchants & Commission Agents and Transporters.
159, AHAMBARAM ROAD, TRINCOMALEE.
Phone: 509

Head Office: N. A. WARNAKULASINGAM, 173, KEYZER STREET, COLOMBO. *Phone: 25577*

லக்ஷபான பெட்டரி
மலர் என் பிலிப்ஸ்

யானே மார்க் திப்பெட்டி
டாலிபட்ற அன் கொம்பனி

இங்த இவ்வகளும்
பலசரக்த சாமான்களும் மிக மலிவான விலைக்கு கிடைக்கும்.
சகாய விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்:

ந. அ. வர்ணகுலசிங்கம்

159, ஏகாம்பரம் வீதி, திருக்கோணமலை.

அதிதுடன் ரான்ஸ்போட் கொழும்புக்கும் திருக்கோணமலைக்கும் பாதுகாப்பாகவும் சிக்கனமாகவும் வினியோகிக்கப்படும்.

தலைமையலுவலகம்:

N. A. வர்ணகுலசிங்கம், 173, கெய்சர் வீதி - கொழும்பு 11.

அகில உலக இந்து மகாநாடு
எல்லா வகையிலும் சிறந்து விளங்க
எமது நல் வாழ்த்துக்கள்!



தரமான ரெடிமேட் ஆடை தயாரித்து விநியோகிப்பவர்கள்

சிவா இன்டஸ்ட்ரீஸ்

நாவலப்பிட்டி.

For

Quality Readymade Garments

SIVA INDUSTRIES

No. 101, Kotmale Road,
NAWALAPITIYA.
SRI LANKA.

With best compliments from

KRISHNA TEXTILE

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILE.

35, Main Street,
BANDARAWELA.

Phone: 573

நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்ட பொழுது இந்து சமய ஒளிமங்கியது. புராதன இந்து சமயத் திருக்கோயில்கள் இடித்தழிக்கப்பட்டன. கோயிலிருந்த இடங்கள் அடவிகாடாயின; அக்காடுகளை மக்கள் கோயிற்காடென்றே அன்றும் அழைத்தனர். இன்றும் அழைக்கின்றனர். திருக்கோயில்களை அழித்தவர்கள் புங்குடுதீவின் மத்தியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றைக் கட்டினார்கள். இந்துக்கள் அத்தேவாலயத்தை வெள்ளைக்காரன் கோயில் என அழைத்தனர். ஊர் மக்கள் அனைவரும் கிறிஸ்தவ தேவாலயத்திற்குத் தினந்தோறுஞ் செல்லத்தக்கதாகக் கட்டாய விதிகளை ஆக்கினர். தேவாலயத்திற்குச் செல்லாதோரை நிர்ப்பந்தப்படுத்தினர். இந்துசமய அபிமானிகள் மனம் நொந்தனர். தத்தம் அகக்கோயிலில் வைத்துத் தெய்வத்தைத் தியானித்தனர். திண்ணைப் பள்ளிக்கூடங்களும், புராண படனமும், தென்னிந்தியத் தலயாத்திரையுமே இந்து சமயத்திற்குப் புகலிடமளித்தன. ஏழு தலைமுறைக்கு முன்னர் வாழ்ந்த சேது நாதர் என்பவர், பாத யாத்திரையாக காசிக்குச் சென்று மீண்டார். மீண்டவர் குளந்தொட்டு நிழல் மரம் நாட்டினார். திண்ணைப் பள்ளிக்கூடமும், புராண வகுப்பும் நடத்தி இந்துசமயத்தை மறைந்து விடாமற் பாதுகாத்தார்.

பிற்காலத்தவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களை அணுகிக் கருவி நூல் முதனூல்களைப் பாடங் கேட்டனர். அவர் மாணவரும் மருகருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் புராண இதிகாசங்களைப் பயின்றனர். அங்ஙனம் பயின்ற அன்பர் பலர் புங்குடுதீவின் பல இடங்களிலும் புராணப்படிப்பை விரிவான முறையில் நடத்தினர். இந்து சமயத்தவர் நூற்றுக் கணக்கானோர், காப்புக் கட்டி விரதமிருந்து புராணப்படிப்பைக்கேட்டனர். புராணப் படிப்பால் உண்டாகிய இந்து சமய ஆர்வமே புங்குடுதீவிற் பல புதிய கோயில்கள் தோன்றுவதற்குக் காலாயிற்று.

திருக்கோயில்கள்

ஆதிசங்கரர் காலத்திலிருந்த அத்தனை சமயங்களும் இந்நிலத்திலிருந்தன. அவற்றையெல்லவம் வகுத்துச் சண்மத தாபனஞ் செய்தார் சங்கரர். சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற ஆறுமே சங்கரர் வகுத்த சண்மதங்கள். இவையே இந்துசமயம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற்றிற்குரிய தனித்தனி ஆலயங்கள் இத்தீவகத்தில் இருக்கின்றன. இருப்பினும் அவையாவும்,

''தெய்வ சிவமே; சிவனருள் சமயம்
சைவம்; சிவத்தொடு சம்பந்தம்''

என்னுஞ் சைவசமயச் சார்புடையன வாகவே காணப்படுகின்றன. அவையாவற்றிலும் சைவாகம விதிப்படியே தினப் பூசைகளும், திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன; இங்குள்ள இந்துக்களுட் பெரும்பாலோர் சுத்தாதுவித சைவ சித்தாந்திகளே யாவர்.

சிவன், சக்தி, கணபதி, குமரன் என்னும் நான்கு கடவுளுக்குந் தனித்தனியே திருக்கோயிலமைத்துப் பிரதிட்டை செய்து வழிபட்டு வருகின்றனர். திருமாலையுஞ் சூரியனையும் பரிவார மூர்த்திகளாகவே வைத்து வணங்குகிறார்கள்; புங்குடுதீவில் வழிபாட்டுத் தலங்களாகச் சிவன் கோயில்கள் நான்கு, அம்மன் கோயில்கள் ஐந்து, பிள்ளையார் கோயில்கள் ஐந்து, முருகன் கோயில்கள் மூன்று ஆகப்பதினேழு திருக்கோயில்கள் உண்டு. இப்பதினேழு திருக்கோயில்களிலும், தினப்பூசையும் ஆண்டுதோறும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. இருபத்தைந்து சதுரமைல் பரப்புக்கொண்ட புங்குடுதீவில், பதினேழு திருவிழாக் கோயில்கள் அமைந்துள்ளன. இலங்கையின் எப்பகுதியிலும் இவ்வாறமைந்துள்ள திருக்கோயிற் காட்சியைக் காண்பதரிது. கிழக்குத் திசையில் இராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலும், மேற்குத் திசையில் மீனாட்சி சுந்தரேசர் கோயிலும் இராஜகோபுரங்களோடு கூடிச், சிவசக்தி பீடங்களாக அமைந்தது. ஊருக்கு அழகையும் அருட்பிரகாசத்தையும் அள்ளிச் சொரிகின்றன. அடியார்கள் அனைவரும் ஆலயங்கள் அனைத்திலும் உள்ளே பிரவேசித்துக் காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி வழிபட்டு வருகின்றனர். புங்குடுதீவின் இந்து சமய வளர்ச்சிப் பாதையில் சமாதிக் கோயில்கள் மூன்று, தரிசனந்தருகின்றன.

கிராம தேவதையான வைரவருக்குத் திருக்கோயில்களிலே சுற்றுப்பிரகாரத்திலும் குடியிருக்கும் வளவுகளிலே கிணறுகளின் பக்கத்திலும் சிற்றாலயம் அமைத்து பொங்கலிட்டு வழிபாடாற்றுகின்றனர்; வேள்விக் கோயில்களாகவே அவை விளங்குகின்றன; ஆதிகாலந் தொட்டு இவ்வூர்க் கோயில்களில் உயிர்ப் பலியிடப்படுவதில்லை. நேத்திக் கடனாகக் கூட பசுமாடு, ஆட்டுக்கடா, சேவற் கோழி போன்ற சீவராசிகளைக் கோயிற்காரர் ஏற்றுக்கொள்வதில்லை. சொந்தக்காரர் அவற்றின் பெறுமதியைத் திருப்பணி உண்டியலிற் சேர்க்கலாம். ஊர்ப்புறங்காக்கும் தெய்வமான ஐயனார் கோயில்கள் கிழக்கு, வடக்கு, தெற்குக் கடற்கரை யோரங்களில் அமைந்துள்ளன. குளக்கரை, தெருக்கரை, மரத்தடிகளில் ஆயுததேவர்களை வழிபாட்டுக் குறிகளாக வைத்து, விளக்கேற்றி வணங்குகின்றார்கள். சிறிய கோயில்கள் கருப்பக் கிருகமும் முன்மண்டபமுங் கொண்டவைகளே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன.



உலக இந்து சமய மாநாடு
உலக இந்துக்களின் ஒற்றுமைக்கு வழிகோலட்டும்!

அருள் அன்பர் திரு. நா. முத்தையா அவர்களின்
'ஆத்மஜோதி', மாநாட்டின் சிறப்பு மலராக, இந்துமணம்
கமழ்ந்து சிறக்கட்டும்!

இந்துவாழ் சடையானின் இன்னருளால்
இந்து சமய மாநாடு வெற்றி முழக்கமிடப்
பிரார்த்திக்கிறேன்.

அன்பன்,

பி. வெங்கடேசன்
ஆசிரியர் 'மறுவாழ்வு'
இந்து சமயப் பிரச்சாரகர்.

எண் 20, மேற்கு சிமிட்டரிசாலை
வண்ணையம்பதி
சென்னை 600 021.

With Best Compliments

from



Pattakannu Subbiah Achary & Sons

102, New Chetty Street,

Colombo-13.

Phone: 22304/23818

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

ஜெமினி ஸ்டோர்ஸ் (பிரைவட்) லிமிடட்

36, திருமலை வீதி,
கண்டி

தந்தி: "Gemintrade"
Phone: 4119

63, பேங்சால் வீதி,
கொழும்பு-11

தந்தி: "Gemnation"
Phone: 21938

With best compliments from



K. K. KRISHNAPILLAI & CO.

IMPORTERS, EXPORTERS
&
GENERAL MERCHANTS.

171, Fourth Cross Street,
COLOMBO-11.

Telegrams: BAKHAN

Telephone: 29325

இந்து மாநாடு சிறப்புற நடைபெற
எமது வாழ்த்துக்கள்!



SUBRAMANIAM STORES

GENERAL MERCHANTS

Agents for:

- *LEVER BROTHERS PRODUCTS*
- *UNION CARBIDE CEYLON LTD. PRODUCTS*
- *ELEPHANT BRAND SAFETY MATCHES AND*
- *INDEPENDENT NEWSPAPERS LTD,*

No. 5, MAIN STREET,
HAPUTALE.

Phone: 219

●

BRANCH:

A. SUBRAMANIAM & SONS
No. 3, Main Street,
HAPUTALE.

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்!

ஹோம் நீட்ஸ் இன்டஸ்ட்ரீஸ்

33, 35, லோவர் வீதி - பதுளை.

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

DAILY NEEDS

GENERAL MERCHANTS

No. 55, Bazaar Street - Badulla.

Tphone. 294

With the Best Compliments of

THANALETCHIMI TEXTILES

113 & 115, Second Cross Street
COLOMBO - 11.

T'phone: 29999

அகில உலக இந்து மகாநாட்டுக்கு

எங்கள் மனமுவந்த வாழ்த்துக்கள்



THE
IMPERIAL TEXTILES

DEALERS IN TEXTILES

103, BANKSHALL STREET,
COLOMBO-11.

TELEPHONE 24721

For:

★ PAPER MERCHANTS & STATIONERY

★ WEDDING CARDS

★ CAKE WRAPPERS

★ SPECIALIST FOR PHOTO COPY PAPER

★ SCHOOL REQUISITES & OFFICE SUPPLIERS

VISIT

Y. P. M. Manickavasaga Nadar & Co.,

P. O. BOX 1400

No. 58, Maliban Street,
COLOMBO-11.

Dial: 24114 - 27002

Cable: "PERINBAM"

With Best Compliments

from

WS

WELIGAMA STORES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
FOR LOCAL PRODUCE

139, Fourth Cross Street,
COLOMBO–11.

Phone: 23271

அகில உலக இந்து மகாநாடு சிறப்பாக
அமைய எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!



NALLUR TRADERS

IMPORTERS
GENERAL MERCHANTS
&
COMMISSION AGENTS

●

49, 4th Cross Street,
Colombo-11

Phone: 33991

With best compliments of

GEORGE & COMPANY

GENERAL MERCHANTS & AGENTS.

76, Fourth Cross Street,

COLOMBO - 11.

Tele: 25973

With best compliments of



A. M. K. AGENCY

General Merchants & Commission Agents
For Local Produce.

ஏ. எம். கே. ஏஜன்ஸி

122, 4th Cross Street,
COLOMBO - 11.
T'phone: 20772.

A. M. K. TRAVELS & TOURS

With the Best Compliments of

N. K. MYLVAGANAM & CO.

Importers
Exporters
General Merchants
and
Commission Agents.

68, 4th Cross Street,
Colombo - 11

Grams: "VAAGANAMCO"

Phone: 22250

With Best Compliments

of

RENUKA MEDICALS

- DISPENSING CHEMISTS
- DRUGGISTS
- GROCERS
- ESTATE SUPPLIERS

AND

AUTHORISED DEALERS FOR

ELEPHANT HOUSE PRODUCTS

45 B, Kotmale Road,
Nawalapitiya.

Phone: 0542 - 407

★

மக்களுடைய நலனே முன்னிட்டு 24 மணி நேரமும்
சேவை செய்கின்றது என்ற நற் செய்தியை
உங்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

With Best Compliments of



S. S. WILSON & CO.

IMPORTERS AND EXPORTERS.

176, Fourth Cross Street,
COLOMBO - 11.

Telegrams: GRATITUDE

Telephone: 27662

With Best Compliments

of

RAJAH STORES

(ESTD: 1945)

- GENERAL MERCHANTS
- COMMISSION AGENTS
- IMPORTERS & EXPORTERS

★

Wholesale & Retail Dealers

★

No. 54, Fourth Cross Street,
COLOMBO - 11.

T'hone: 26722
25176

T'grams: BARGAIN

உ

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''



இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, இந்து கலாச்சார, தமிழ் அலுவல்கள் அமைச்சு அதன் அமைச்சர் கௌரவ செ. இராசதுரை அவர்களின் ஆலோசனைப்படி நடாத்தும் அகில உலக இந்து மாநாடு நிகழ்ச்சிகள் சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

பதுளை, இந்து இளைஞர் பேரவை
16 C, ஸ்டேசன் ரோட்,
பதுளை.

கலையகம்:

38/4, கீழ் ராஜ வீதி,
பதுளை.

With best Compliments from

O. A. Paramasivan Pillai & Son

General Merchants & Commission Agents

128, 4th Cross Street,

COLOMBO-11.

Telegrams: OYAPEE

Telephone No: 25932

அகில உலக இந்து மகாநாடு சிறப்புற நடைபெற
எமது நல் வாழ்த்துக்கள்!

VISNU TRADING CO.

174, 4th Cross Street
COLOMBO–11.

விஷ்ணு ரேடிங் கோ.,

சகல உள்ளூர் வெளிபொருள் விநியோகஸ்தர்.

நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11

T'phone: 24364

With Best Compliments

of

LUXURY TRADING COMPANY

GENERAL MERCHANTS
&
COMMISSION AGENTS

178, 4th Cross Street,
Colombo-11.

T'phones: 22971 22354 26148

T'grams:

உ

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

— திருமந்திரம்

ஆர். வைத்தியலிங்கம் லிமிடெட்

38-40-42, பஜார் வீதி,
பதுளை.

R. VYTHIALINGAM LTD.

TEXTILE & HARDWARE MERCHANTS

Nos. 38, 40, 42 Bazaar Street,
BADULLA.
(SRI LANKA)

Telephone: 303

Telegrams: 'TEXTHARD'

Estd: 1920

With Best Compliments of

AMBIKA STORES

STATIONERY PAPER SUPPLIERS & AGENCY

★

No. 1, Bazaar Street,
Badulla.

Phone: 369

★

அம்பிகா ஸ்டோர்ஸ்

ஒயில்மன் குட்ஸ், பேப்பர் கோர்ப்பரேசன்
மொத்த சில்லறை விற்பனையாளர்.

அகில உலக இந்து மகாநாடு சிறப்புடன் நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்!

மதுரையில்

எவர்சில்வர்
அலுமினிய
பாத்திரங்கள்
பிரஷர் குக்கர்
வாங்குவதற்கு

போன்: 26365

ஆனந்தா
ஸ்டோர்ஸ்

42, தெற்காவணி மூல வீதி, மதுரை-1

நகைக்கடை பஜார்

77



ஸ்ரீ காயத்ரி தேவ்யை நம:

அகில உலக இந்து மகாநாடு
விழாக்கோலம் பூண்டிருக்கும்
இந்நன்னாளில் சிறப்பு மலர் வெளியிட
விளைந்திருக்கும்

ஆத்மஜோதி
நிலையத்தினருக்கு

எமது உளங்கனிந்த நல்லாசிகள்!

— ஸ்ரீ காயத்ரி சுவாமிகள்

ஸ்ரீ காயத்ரி

அருள்சித்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளை தரிசிக்கும் இடங்கள்:

1. 34, வெங்கட மேஸ்திரி தெரு, மண்ணடி, சென்னை - 1.
   தொலைபேசி: 29475
2. சேலம் ஸ்ரீ வேங்கடேஸ்வர பவனம், 15, மேட்டுத் தெரு, சேலம்.
   தொலைபேசி: 3215
3. 2, மெயின் ரோடு திலலைநகர் - சேலம்.
4. சேரன் பாலஸ், கோயம்புத்தூர்.
5. 48, கல்லத் தெரு, திருச்சி.
6. 1, சப்பாணித் தெரு, மதுரை.
7. 212-7, 3வது பிளாக், இராஜாஜி நகர், பாஷ்யம் சர்க்கிள் அருகில், பெங்களூர் - 10.
8. இறைபணி மன்றம், தாம்பரம் (நவீன் ஸ்டுடியோ)
9. ஸ்ரீலஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி செட்டியார், No. 2, பாலாஜி ரோட், வேலூர்.
10. 19/496-B, சாலப்புரம் - காலிகட்.
11. L. I. G., 665, சிவசக்தி பனம்பள்ளி நகர், எர்ணாகுளம், கொச்சி.
    தொலைபேசி: 32291

இறைபணி மன்றம் – நவீன் இல்லம் – தாம்பரம் – சென்னை 59. தொலைபேசி: 48463

அச்சுப்பதிவு:- ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி, ஸ்ரீ லங்கா.